உங்கள் குழந்தை

மக்களின் வளர்ப்பும் உளநூலும்

(சென்னைப் பல்கலைக்கழகப் பரிசு பெற்றது)

ஸ்ரீமதி ஆர். எஸ். ருக்மிணி, எம். ஏ.

புத்தக நிலையம்

ராயவரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்

பதிப்புரிமை 1947.

விலை ரூ. 6-14-0

இவர் எழுதிய பிற நூல்கள்

★

1 மனிதனும் சூழ்நிலையும் ரூ. 2-0-0

2 இந்தியச் சிற்பங்கள் ரூ. 2-0-0

Printed at the B. N. K. Press, Madras. Q. H. No. MS. 100/B.
Paper Supplyed by Party.

நூல்முகம்

"மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்;" திருவள்ளுவர் இம்முதலடியோடு தமது உள்ளக் கிடக்கையை நிறுத்திவிடவில்லை; "மற்று அவர் சொல் கேட்டல் இன்பம் செவிக்கு" எனக் கூறித் தமது கருத்தினை விரித்துக் காட்டியுள்ளார். சிற்றின்பத்தின் குறிக்கோளாகவும், பேரின்ப நிலைக்கு ஊன்று கோலாகவும் பிறக்கின்ற குழந்தை, "உனது," "எனது" என வழக்கிடுவதற்கு உரிய பண்டமாக இராமல், எதிர்கால மானிட வாழ்வை மாண்புறச் செய்கின்ற இன்ப நிலையமாக விளங்குகிறது. ஆதலால், "உங்கள் குழந்தை" என் குழந்தையாக, எனக்கும் இன்பம் தருவது என்னும் உறுதியால் இந்நூலை ஆர்வங்கொண்டு எழுதலானேன். ஐம்புலன்களின் நுகர்ச்சி ஒன்றையே கருதிக் குழந்தையின் மெய் தொட்டு, இன்புறல் என் அவா அன்று. குழந்தையின் உளத்தோடு உளமாய் ஒன்றுபட்டு, ஒப்பற்ற அன்பு நிலையில் விளைகின்ற இன்பத்தையே என் உள்ளம் அவாவுகின்றது. இந்த அவாவே இந்நூலை எழுதற்கு என்னைத் தூண்டியது.

மக்களை வளர்த்தலும், அவர் தம் மன ஆற்றல்களைப் பெருக்குதலும் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் அமைந்த முதற் கடனே. இக்கடனை அவர் நன்கு செய்தற்பொருட்டு உளநூல் வல்லார் மக்களின் மனத்தைப் பலவாறாக ஆராய்ந்து அரிய பெரிய உண்மைகளை அறிந்து, உலகினர்க்கு உதவியுள்ளனர். உடல் நூல் வல்லாரும் அன்னவரது உடலைச் சீரிய முறையில் வளர்ப்பதற்காகப் பல நெறிகளை வகுத்துள்ளனர். இவ்விரு திறத்தினரும் ஆய்ந்துரைத்த உண்மைகளில் தலைசிறந்தவற்றைத் தமிழுலகத்திற்குப் பயன்படுமாறு இந்நூலில் தெளிவாக விளக்க முயன்றுள்ளேன். உளநூல் உண்மைகள் அனைத்தையும் இந்நூலின்கண் உரைத்துவிட்டதாக எவரும் கருதற்க. அவ்வுண்மைகளை எல்லாம் சுருக்கமாகவே இந்நூலின்கட் காணலாம்.

இந்நூலை எழுதுவதற்கு எனக்கு ஊக்கமளித்து உதவி செய்தவர்களான திரு. ஆர். ஆர். சூடாமணி, எனது ஆசிரியரும், சென்னை கிறித்தவக் கல்லூரி அறிவுநூல் விரிவுரையாளருமான திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரியார், காப்டன் என். சேஷாத்திரிநாதன், இன்னும் என் நண்பர்கள் - முதலானோர்க்கு என் நன்றி உரித்தாகுக. இதனை ஊக்கத்துடன் வெளியிட்டுதவிய புத்தக நிலையத்தார்க்கும், அச்சிட்டுதவிய பி. என். கே. அச்சகத்தார்க்கும், என் நன்றி என்றும் உரியது.

குணத்தையே மேற்கொண்டு போற்றும் தமிழுலகத்தின் பார்வைக்கும் பாராட்டுக்கும் இந்நூலை உரிமை செய்கின்றேன்.

'ஈஸ்டு லான்'
அயோவா ஸிட்டி
அமெரிக்கா

ஆர். எஸ். ருக்மிணி

பொருள் அடக்கம்

பக்கம்

1. மக்களை வளர்த்தலும் மானஸ சாஸ்திரமும் 1—39

2. குழந்தையை உருவாக்கும் நியதிகள் 40—90

I. வாழை அடி வாழை

குலப்பெருமை—நூலைப்போல் சேலை—மங்கை ஒரு பாகம்—மெண்டலின் நியதி—இனக்கலப்பு—கர்ப்பாதான விஞ்ஞானம் — மிட்டோஸிஸ் முறைப்படி ஜீவாணுவின் வளர்ச்சி—மியோஸிஸ் முறைப்படி ஜீவாணுவின் வளர்ச்சி—குலத்தளவே ஆகுமாம் குணம். 40— 73

II. நீரளவே ஆகுமாம் நீராம்பல்.

நீராம்பலின் சூழ்நிலை—குழந்தையின் சூழ்நிலை—இடம் அகப்படாத குறை—குலாசாரம் வயிற்று ஆசாரம்—பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை—சூழ்நிலை ஏவல்கள்—கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்—ஆண்டி மகன் ஆண்டி—சூழ்நிலைத் தத்துவ ஆராய்ச்சி—புத்தித்வம், திறமை திராணிகளை அளக்கும் அளவு திட்டங்கள்—தலையிலெழுத்து. 73— 90

3. ஐந்திலே வளைத்தல் 91—160

I. வாய்வழியே.

முதல் பிள்ளை—சுவை இன்பம்—வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்—ஆரம்ப உணர்ச்சிகள்—பாலூட்டிப் பண்பூட்டும் தாய்—செல்லம் கொடுத்துத் துன்புறல்—முதல்மூத்திரி வேண்டாத பிள்ளை—பாலோ பால்! தபால்!—உண்டி சுருங்கு

நல் பெண்டிர்க்கு அழகு—பாலூட்டலால் விளையும் சிக்கல்கள்—ஊட்டற் பழக்கமே கோட்டை கட்டி அரசாள வைக்கும்—அளவறிந்து ஊட்டல்—சோற்றுத் துருத்திகள்—பழையன கழிதலும் புதியன புகுதலும்—பல்லூரல் கடிக்கத் தீரும்—பால் மறந்த பிள்ளை. 91—140

II தொட்டில் பழக்கங்கள்

ஓயாத தொல்லை—தொல்லையை ஒழிக்கக் குறுக்கு வழி—முற்று இளம் பிறை—எதிலே மனிதனின் இன்ப நிலை. 140—153

III நித்திரை

தூங்காமல் தூங்கி இருப்பது எக்காலம்—குழந்தைகளின் உறக்க இயல்புகள்—உறக்கத்திற்குச் சூழ்நிலை வசதிகள்—உறக்கத்திற்கு ஆயத்தம்—விஞ்சிய சீராட்டு—உறக்கத்தை உலைப்பன—கதை சொல்ல நல்ல நேரம். 153—160

4 குழந்தையின் மனோவிகாரங்கள் 161—184

மனோவிகாரங்கள்—குறுஞ்செயல்கள்—மனோவிகாரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளும் அறிந்த உண்மைகளும்—பயம் என்னும் மனோவிகாரம்—ஆதாரச் சிதைவுணர்ச்சி, உரத்த சத்தம் முதலியன சூழ்நிலையோடு மயங்குதல்—சினந்துரைத்தேன்; பிழைகள் எல்லாம் பொறுத்தருளல்வேண்டும்—இயற்கை உணர்வு—வாழ்க்கையில் தோன்றும் சீலங்கள் அல்லது மனோபாவங்கள்—மனோவிகாரமும் மன அயர்வுப் புலமும்.

5 குழந்தையும் குடும்பமும் 185—231

தாயின் மார்போடு ஒட்டிக்கிடக்கும் குட்டிக் குரங்கு—ஈடிப்பஸின் சரிதை—குழந்தையின் முதற் காதல்—மன அயர்வுப் புலத்தில் நிகழும் நாடகம்—எலக்டிராவின் சரிதை—ஈடிப்பஸ் மனச்

சிக்கலுக்கு ஓர் உதாரணம்—எலக்டிரா மனச் சிக்கலுக்கு ஓர் உதாரணம்—அதட்டலும் அடித்தலும்—குழந்தையின் நீதி உணர்ச்சி—குரங்கு மனப்பான்மை—பெற்ருேர்க்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பு இரகசியம்—கற்பனைக் காதலனும் காதலியும்—குழந்தைக்கும் பெற்ருேருக்கும் உள்ள அன்புத் தொடர்பைப் பற்றி மேல் நாட்டு ஆராய்ச்சிகள்.

6 குழந்தையும் பண்புச் சிக்கல்களும் 232—282

நிறைகுடம் நீர் தளும்பாது—சிறுமை உணர்ச்சி—ஓர் ஆளின் மாற்றுருத் தோற்றமும் நேருருத் தோற்றமும்—பலவகைச் சிறுமை உணர்ச்சிகள்—ஒருவர்க்கு ஒன்றே திறமையாகும்—வினைமாட்சித் திறன்—குடும்ப சக்கரம்—உலகம் பலவகைப் படும்—கணந்தோறும் மாறுதல் அடைதல்—குழந்தையின் வாழ்க்கைச் சித்திரம்—முதல் குழந்தை—இரண்டாவது குழந்தை அல்லது நடுக்குழந்தை—குழந்தைகளின் வயது நிலைகள்—கடைசிக் குழந்தை—ஒரே குழந்தை—குழந்தை மனப்பான்மையின் ஒழிபியல்—வேண்டாத பிள்ளை—வேண்டாத பிள்ளைகள் தோன்றும் காரணங்கள்—களவொழுக்கத்தாலும் காம ஒழுக்கத்தாலும் பிறக்கும் வேண்டாப் பிள்ளைகள்—மனைமாட்சிக்கு நன்கலன்—இல் வாழ்க்கையில் வேண்டாப் பிள்ளைகள்—நீராழம் பெரிதா நெஞ்சாழம் பெரிதா.

7 குழந்தையும் அதன் மனமும் 283—314

I குழந்தை மனம்

மனம் என்ருல் என்ன—மனம் உலகத்தோடு எங்ஙனம் உறவு பெறுகின்றது—மூளையின் சிப்பந்திகள்—குழந்தை மனத்தின் ஆரம்பம்—புலப்பாடு. 283—293

II குழந்தையின் சிந்தனைப்போக்கு

உருத்தெளிவு என்றால் என்ன—உருத்தெளிவின் பிறப்பு—குழந்தையின் உருத்தெளிவுகள் பெறுகிற அபிவிருத்தி—உருத்தெளிவின் வளர்ச்சி முன்னேற்றங்கள்—அகங்காரி நிலையில் உருத்தெளிவுகளும் பிரத்தியக்ஷ உருத்தெளிவுகளும்—கருத்துக்களின் புணர்ப்பு. 293—314

8 குழந்தையும் அதன் கற்பனைத் திறமும் 315—339

கற்பனை—கற்பனை விளையாட்டு—குழந்தைக் கற்பனைத் திறத்தின் தொடக்கம்—குழந்தையின் விளையாட்டுப் பொருள்கள்—விளையாட்டில் பிரதிச் செயல்கள்—விளையாட்டின் அடிப்படை நோக்கு—இரண்டறு மனநிலை றாகர்ச்சி—நிமித்த காரணச் செயல்களும் விளையாட்டும்.

9 குழந்தையும் விளையாட்டும் 340—354

திருவிளையாடல்—பிள்ளை என்றால் எல்லார்க்கும் பிள்ளை—குழந்தை—குமரன்—கண்ணன்—நவீன நாகரிகமும் விளையாட்டும்—குழந்தை விளையாட்டைப் பற்றிய நவீன ஆராய்ச்சிகள்.

10 கனவு 355—373

I பகற்கனவு

வெற்றி உணர்ச்சியில் முடிவுறும் பகற்கனவுகள்—பகற்கனவுக்குரிய பிற நிமித்தங்கள்—நகைச் சுவைப் பகற்கனவு. 355—365

II நித்திரைக் கனவு

கனவின் தன்மை—கனவு எங்கே உதயமாகிறது—கனவைப் பற்றிய அபிப்பிராயங்கள்—புதிய ஆராய்ச்சி நெறிகள். 365—373

11 திறமை, திராணி, புத்தித்வம் 374—390

'திறமை', 'திராணி' என்ற மொழிகளின் பொருள் விளக்கம்—திராணி, திறமையாவது எங்ஙனம்—திறமை திராணிகளை மதிப்பிடுதல்—பால்—மயவேற்றுமைகளால் திறமை திராணிகளில் தோன்றும் வேற்றுமைகள்—பிற காரணங்கள்—திறமை திராணிகளை மதிப்பிடப் புதுமுறைகள்—புத்தித்வம் என்றால் என்ன?—பினே—ஸைமன் பரீக்ஷைத் திட்டங்கள்—புத்தித்வ ஈவு அல்லது பு. ஈ.—பு. ஈ. குறைந்த வகுப்பினர் வரலாறு: 1. முழு மூடர், 2. முட்டாள், 3. அசமஞ்சர்—பு. ஈ. பரீக்ஷைகளின் இயல்பு—புத்தித்வத்தின் தன்மை.

12 காயமே கோயில் 391—395

கோயில் இல்லாத ஊர்—"இலங்கும் உயிர் உடல் எல்லாம் ஈசன் கோயில்"—ஊன் உடம்பு ஆலயம்.

உங்கள் குழந்தை

1. மக்களை வளர்த்தலும் மானஸ சாஸ்திரமும்

குழந்தை மன்னுயிர்க்கெல்லாம் இன்பம் தருவது. உலகில் வாழும் உயிர்கள் யாவும் ஆதிகாலத்திலே தம்மிடத்தில் தொடங்கிய உயிர்ப்பிரவாகம் தம்மோடு நின்றுவிடாமல், தமது மக்களோடும், மக்களின் மக்களோடும் இடையறாது பெருகிச் செல்லவேண்டும் என்பதனையே வாழ்க்கையின் தலையான குறிக்கோளாகக் கொண்டுள்ளன. முட்டை இட்ட பெட்டைக் கோழி பிறவி நோக்கம் முடிந்துவிட்டது போலப் பெருமகிழ்ச்சியால் கொக்கரிக்கிறது. குட்டி போட்ட நாயும் மகிழ்ச்சியினால் வாலைக் குழைக்கிறது. எந்த உயிருக்குத்தான் தன் சந்தானத்தைக் கண்டு மகிழும் இயல்பில்லை? உயிர்கள் யாவும் மக்களைக் கண்டு மகிழும் மகிழ்ச்சியின் பொருட்டே உலகில் வாழ்கின்றன.

இறைவன் தன்னைக் கொண்டாடும் அன்பரது உள்ளந்தோறும் உறைபவன். கடவுள் மட்டுமன்று; குழந்தைகளும், கொண்டாடும் மனப்பான்மை உடையவர்க்கே உரியவராவர். குழந்தைகளைக் கொண்டாடும் இயல்புடையாருக்குச் சொந்த மக்கள் இல்லாவிடினும், அவர் பிறருடைய மக்களைச் சொந்தம் பாராட்டி மகிழ்வர். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்ற முதுமொழியும் இக்கருத்தையே வெளியிடுகிறது. தெய்வத்திற்கு அடுத்தபடியாக மனிதன் கருதும் அருட் செல்வம் குழந்தையே. மக்களால் மோட்ச இன்பங்களை அடையலாம் என மனிதன் கருதுகிறான். மக்கட்பேறு ஒன்றே உலகத்தில் ஒருவன் பெறக்கூடிய பேறுகள் அனைத்திலும் தலை சிறந்து விளங்குவது.

குழந்தை என்றாலே உள்ளம் குழைகிறது. குழந்தை முகத்தை நோக்குமளவிலே எண்ணிறந்த சிந்தனைகள்

நமது உள்ளத்தில் பீறிட்டெழுகின்றன. குழந்தையின் சின்னஞ்சிறு வடிவத்தில் எண்ணிறந்த ஆற்றல்களும், மாண்புமிக்க தன்மைகளும், யாவும் அடங்கிக் கிடக்கின்றன. இந்தச் சிந்தனையே நமது முன்னோரைத் தொட்டசைத்து, மிகவும் விந்தையான கற்பனைச் சித்திரம் ஒன்றைக் காணுமாறு செய்துவிட்டது. திகாந்தமெங்கும் ஒரே வெள்ளக் காடாய்ப் பரவிக்கிடக்கும் மகாப் பிரளய காலத்தில், நீர்ப்பரப்பின்மீது சின்னஞ்சிறு ஆலிலை ஒன்று மிதக்கிறது. அந்த ஆல் இலைமீது மூலப் பரம்பொருள் குழந்தை வடிவத்திலே யோகு துயில் செய்கிறன். அந்தக் குழந்தை வடிவத்திற்குள் புதிய சிருஷ்டி முழுவதும் புதைந்து கிடக்கிறது. இது மிகவும் அழகிய அலங்காரமேயாம். எதிர்காலத்தில் தோன்றப் போகிற எத்தனையோ மனித சமூகங்கள் இன்று நம்முன்னே தோன்றும் குழந்தை - உலகத்திற்குள் அடக்கமாக இருக்கின்றன. வருங்கால மாட்சிமை முழுவதும் நிகழ்காலக் குழந்தை-உலகத்திற்குள்ளே அடக்கமன்றோ? இத்தகைய குழந்தை-யுலகம் முதியவரது பராமரிப்பிலும், இன்பச் சுழலிலே ஆடிக் களிக்கும் வாலிபரது பராமரிப்பிலும் இருக்கிறது. முதியவரும் வாலிபரும் தமது பொறுப்பில் இருக்கிற குழந்தை யுலகத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளில் தவறினல், வருங்கால மானிட வாழ்வின் மாண்பையும், மிகவும் சிறந்த பண்புநிலையையும் பாழாக்கிய பழி அவர்களையே சாரும். ஆகையால், மக்களைப் பெற்று வளர்க்கும் பொறுப்பு உடையவர்கள் யாவரும் தமது கடமையின் ஏற்றத்தை உணரவேண்டும்; சிறந்த முறையிலே அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கமைந்த வழி வகைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். அறியாமையைக் காரணமாக்கிக் கடமைகளைத் தாறுமாறுகச் செய்வது தகாது. கடமைகளை நிறைவேற்றுமல் தப்பி ஓடுதல் பொருந்தாது.

கொல்லும் வேங்கைப் புலியே ஆயினும் தன் குட்டிக்குத் தாயாகவே இருக்கிறது. அஞ்சாத சிங்கமே ஆயினும், அது தன் குட்டிக்கு அன்னையன்றோ? கொடிய விலங்குகளாயினும் தம் குட்டிகளிடத்தில் மூர்க்கத்தையும்

வீரத்தையும் காட்டாவாம். புலிக்குட்டி சிறு பிராணி ஒன்றைக் கொன்று கிழித்துத் தின்பதைப் பார்க்கிற தாய்ப் புலியின் உள்ளம் மகிழ்கிறது. புலிக்குட்டி எதிர் காலத்தில் செய்யப்போகிற சாகசச் செயலையே தாய்ப் புலியின் உள்ளம் அச்சிறு செயலில் கண்டு களிக்கிறது. "என்னிலும் என் குட்டிக்குத்திறமை அதிகம்" என்ற சிந்தனையே அந்தத் தாய்-உள்ளத்தின் மகிழ்ச்சிக்குக் காரணமாகும்.

> "தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
> மன்னுயிர்க்கெல்லாம் இனிது."

(குறள் : மக்களைப் பெறுதல்; 8.)

இந்த இன்பத்தை அடைய ஒரே வழி, பெற்றோர் தம் மக்களைச் சான்றோராகும்படி இளமை முதல் வளர்ப்பதேயாம்.

யானைகளின் தன்மை அறியாதவன் யானைப்பாகன் ஆவதும் இல்லை; குதிரைகளின் தன்மை அறியாதவன் தேர்ப்பாகனுவதும் இல்லை. குழந்தைகளின் தன்மை அறியாதவர் எங்ஙனம் அவர்களைச் சீரிய முறையில் வளர்த்துப் பாதுகாக்க முடியும்? ஒரு குழந்தையின் பெற்றோரிடம் "உங்கள் பிள்ளையின் தன்மைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டுப் பாருங்கள். உடனே அவர்கள் "எங்கள் பிள்ளையைப்பற்றி உங்களுக்குத்தான் தெரியுமோ? நீங்களா எங்கள் பிள்ளையைப் பெற்றுவளர்த்தீர்கள்?" என்று சீறி விழுவர். தம் மக்களைப்பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாதென்று எந்தப் பெற்றோராயினும் ஒப்புக்கொள்வரோ? 'குழந்தையின் கல்வி எப்பொழுது ஆரம்பமாகிறது?' என்று பெற்றோரிடம் கேட்டுப் பாருங்கள்.

இந்தக் கேள்விக்கு, "ஐந்து வயதிலே" என்று பெற்றோர் பலரும் தவருது பதில் அளிப்பர். பள்ளிக்கூடப் படிப்பு ஒன்றே குழந்தையின் கல்வியாக அமைவதில்லை; பள்ளிக்கூடத்திற்கு வெளியே வீட்டிலும், ஜனசமூகத்திலும் ஒரு குழந்தை படிக்கிற பாடங்கள் பல. மனவளர்ச்சியைத் தருகிற பாடங்கள் யாவும் கல்வியே.

ஒரு மூளையின் வளர்ச்சிக்காலம் பதினாறு ஆண்டுகள் நிரம்பும் வரைக்குந்தான் என வைத்தியக் கலையில் தேர்ந்தவர் கூறுவர். இதன் பின்னர் அனுபவ வளர்ச்சிதான் ஒருவரது வாழ்வில் ஏற்படுகிறது. இப்பதினாறு ஆண்டுகளில், முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் மூளை பாதி வளர்ச்சி அடைந்து விடுகிறது. ஆகையால், ஐந்து வயதிற்குள் குழந்தைகள் படிக்கிற பாடங்கள் பல அவர்கள் அந்த வயதிற்குள் எண்ணிறந்த விஷயங்களைத் தெரிந்து கொள்கிறார்கள் அங்ஙனமாயின், குழந்தைக் கல்வி எப்பொழுது தொடங்குகிறது ?

உடல் வளர்ச்சி மனவளர்ச்சியோடு தொடர்புற்றிருப்பது. குழந்தையின் மனவியூகனம்[1] தாயின் கருப்பையிலேயே ஓரளவு திட்டம் பெறுகிறது. தாய் பல நோய்களுக்கு ஆளானால், வயிற்றிலிருக்கும் குழந்தையின் வளர்ச்சியும் குறைவுபடும். கரை கடந்த கோபம், துயரம், துன்பம் முதலிய மனோவிகாரங்களுக்கு[2] ஒரு தாய் ஆளானால், அவளுடைய வயிற்றில் இருக்கின்ற கருவை அதே மனோ விகாரங்கள் தாக்குகின்றன. பிறக்கிற குழந்தையின் சுகநிலை, தாயின் மனநிலை, உடல் நிலைகளைப் பொறுத்திருக்கிறது. தாய் தன் பிள்ளைக்கு ஏராளமான செல்வத்தைத் தேடிவைக்க முடியாமற் போனாலும், நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்தே தேடி வைக்க முடியும். தாய் தன் பழக்க வழக்கங்களைத் திருத்திக் கொள்ளலாம்; தன் மனோபாவனைகளை மேலான குறிக்கோள்களுக்குத் திருப்பலாம்; மனத்தின் பண்பைக் காக்கலாம்; உடலின் சுகத்தைப் பேணலாம். இவ்வாறு செய்கிற தாய் கருவுயிர்க்கும் நாளினின்றே முழு வளர்ச்சியோடும், சுகநிலை பெற்ற உடலோடும், குழந்தை தன் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு உதவி செய்ய முடியும். சுகநிலையிலிருக்கிற குழந்தைக்குத்தான் பிறப்பு முதல் மன வளர்ச்சி

1. *Mental Structure*: மனத்தை வடிவாக்குகிற இயல்பான தன்மைகளின் கட்டுக் கோப்பு.

2. *Emotions*.

அடைவதற்குப் பல வசதிகள் அமைகின்றன. பிணி வாய்ப்பட்டு உடல் வலி குன்றிய குழந்தைக்கு வளர்ச்சித் தடைகள் பல. இவை அனைத்தையும் சிந்திக்கும்பொழுது, ஒரு குழந்தையின் கல்விக்குரிய ஆயத்தம் வயிற்றில் இருக்கிற காலத்திலேயே தொடங்குகிறது எனலாம்.

உலகத்தில் பிறக்கிற எந்தக் குழந்தையும் ஒன்று மற்ற சூனியத்தில் பிறப்பதில்லை. குழந்தை பிறந்தவுடனே, எந்தச் சமூகத்தின் நடுவில் தோன்றுகிறதோ அந்தச் சமூகத்தின் அங்கமாகிறது. இக்கருத்து, குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படுகிற பெற்றோருக்கும், பிறருக்கும் மிகவும் முக்கியமானது. பிறந்தவுடனேயே சமூகத்தின் எல்லா அங்கத்தினரையும் குழந்தை அறிந்து கொள்வதில்லை; நாட்கள் செல்லச் செல்லப் பலரோடு பழகுகிறது; சிலரை நன்றாய் அறிந்து கொள்கிறது; வேறு சிலரோடு ஒட்டி உறவாடுகிறது. ஆரம்ப உறவுகளும் தொடர்புகளும் குழந்தையின் மனப்பான்மை, மனப்பண்பு, மனப்போக்குமுதலியவற்றைத் திட்டம் செய்கின்றன; முதல் அனுபவங்கள் வாழ்க்கையின் முடிவில் ஏற்படும் வெற்றி தோல்விகளைத் திட்டம் செய்கின்றன.

பிறந்த நாளினின்று குழந்தையின் அனுபவங்கள் ஒன்று பத்து நூறாகப் பெருகி வளர்கின்றன. ஒவ்வொரு அனுபவமும் குழந்தைக்கு ஒரு புதுப் பாடமாக அமைகிறது. படிக்கிற பாடம் ஒவ்வொன்றும் அனுபவ முத்திரையாக மனத்தில் பதிகிறது. அனுபவ முத்திரைகள் நல்லவையானாலும், தீயவையானாலும், மாற்ற முடியாதவை என்றாவது அகற்ற முடியாதவை என்றாவது கருதலாகாது. பருவம் அடைந்தவர்களைப் போலவே குழந்தைகளும் தகுதியையும் தகுதியின்மையையும் ஆராய்ந்து, தவறு என்று உணர்ந்ததைத் திருத்திக்கொள்ள முயலுகின்றனர்.

பிறப்புமுதல் நாள்தோறும்,பருவந்தோறும் வளர்ந்து வரும் குழந்தைகளின் வாழ்க்கைச் சம்பவங்களையும், மனப்போக்குகளையும் அவை நிகழ்கிற முறைப்படி விளக்கு

வதே இந்தப் புத்தகத்தின் குறிக்கோளாகும். பிறந்தது முதல் பருவம் அடைகிறவரைக்கும் குழந்தைகளின் உடல் வளர்ச்சி நிலைகள், மன வளர்ச்சி நிலைகள், அவர்களுடைய விருப்பு வெறுப்புக்கள், தேவைகள், தினசரிப் பழக்கங்கள் முதலியவனைத்தையும் மானஸ சாஸ்திர முறையிலும், ஓரளவு சரீர சாஸ்திர முறையிலும் விரிவாகத் தெரிந்து கொள்ள முயலுவோம். இவற்றோடு, குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்களுக்கு ஏற்படும் தேவைகள், குழந்தைகளிடத்தில் அவர்கள் காட்டவேண்டிய மனநிலைகள், தினசரிப் பழக்கங்கள் முதலியவற்றைக் குழந்தை வளர்ப்போடு தொடர்புற்ற அளவில் விளக்கிக் காட்டுவதும் இந்நூலின் நோக்கமாம்.

நாள்தோறும் குழந்தைகளின் வளர்ச்சியைப் பற்றிப் பல பிரச்னைகள் எழுகின்றன. இந்தப் பிரச்னைகளுக்கு விடை காணப் பேரவா உடையவர்கள் பெற்றோர்களே. பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு உடையவர்கள், உபாத்தியாயர்கள், ஜனசமூகத் தலைவர்கள் யாவரும், குறிப்பிட்ட ஒரு பிரச்னையைச் சுட்டிக் காட்டி "இந்தப் பிரச்னைக்கு இந்நூலாசிரியை என்ன வழி சொல்லுகிறாள்?" என்று பக்கங்களைத் திருப்பலாகாது. குழந்தைகளைப் பற்றிய பிரச்னைகள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கிடப்பவை. ஆகையால், புத்தகம் முழுவதையும் தொடர்ச்சியாகப் படித்து உண்மைகளை உணர்வதே தகுதி. "என் பிள்ளைக்கு பன்னிரண்டு வயது ஆயிற்றே. பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த குழந்தைகளைப் பற்றி எழுதியிருக்கிறவை எனக்கு எதற்காக? பன்னிரண்டு வயதுப் பிள்ளைகளைப் பற்றித் தெரிந்தால் போதும்" என்று பக்கங்களைத் திருப்புவதும் பொருந்தாது. இந்த வயது வரைக்கும் உங்கள் பிள்ளை வளர்ந்த வளர்ப்பிலே தோன்றிய குறைகள், தவறுகள், மனக்கோணல்கள், சிக்கல்கள் முதலியவற்றைத் தெரிந்து கொண்டால், பன்னிரண்டு வயதுக்குப் பிறகாவது குழந்தையை எந்தெந்தத் துறைகளில் எப்படி எப்படித் திருத்தி அமைக்கலாம் என்று சிந்திக்கவும், முயற்சி செய்யவும் முடியும். ஆகையால்,

இந்தப் புத்தகத்தில் விளக்கிக் காட்ட முயன்றிருக்கும் பல உண்மைகளை ஆதியோடு அந்தமாகச் சிந்தித்தலே பொருத்தமானது.

ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியும் தனித்தனி மாதிரியில் அமைவது. ஒரு குழந்தையின் வளர்ச்சிப் போக்கு மற்றொரு குழந்தையின் வளர்ச்சிப் போக்கைப் போலிராது. குழந்தைகளின் வளர்ச்சிமாதிரிகளையெல்லாம் நவீன மானஸ சாஸ்திரம் ஆராய்ந்துவிட்டதாகக் கருதவேண்டாம். மானஸ விஞ்ஞானத்திற்கு இன்னும் புலப்படாதவை பல. குழந்தைகளின் மன வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் ஜன சமூக நியதிகளோடு எம்மட்டும் தொடர்புற்றவை என்பதைப் பற்றியாவது, குழந்தையின் [1] புத்தித்வ வளர்ச்சியைப் பற்றியாவது, மனோவிகார வளர்ச்சிகளைப் பற்றியாவது முடிவான விடைகள் கண்டதாக மானஸ சாஸ்திரம் இன்றளவும் ஒப்புக் கொள்ளவில்லை. எனினும், நவீன மானஸ சாஸ்திரம் முப்பது வருஷங்களுக்கு முந்தி அறிந்திருந்ததைவிட இன்று அதிகமாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. குழந்தைகளின் மன வளர்ச்சியைப் பற்றி மானஸ சாஸ்திரம் ஆராய்ந்து வெளியிட்டவைகளை விளக்கிக் காட்டுவதே இந்நூலின் கருத்து.

வைத்திய சாஸ்திரத்தில் பிணிகளின் காரணங்களையும் போக்குகளையும் ஆராய்வதற்காக வெள்ளை எலிகளையும் முயல்களையும் கூண்டுகளில் அடைத்து வைக்கிறார்கள். அந்த முறைப்படிப் பெற்றோர்களை ஆராய்ச்சிக் கூண்டுகளில் அடைத்துப் பரிசோதனை செய்வது இந்நூலின் நோக்கமன்று. மானஸ சாஸ்திர உண்மைகளை விளக்குகிற நூல்களை எழுதும் ஆசிரியர்களும், மானஸ சாஸ்திரிகளும், பெற்றோர்களைவிடத் தாங்களே தேர்ந்தவர்கள் எனக் கருதி, 'இன்னவை செய்க! இன்னவை செய்யேல்!'

1. **புத்தித்வம்:** புத்தியின் இயல்பான அமைப்பும் தன்மையுமாம். நவீன மானஸ சாஸ்திரத்தில் வழங்கிவரும் (*Intelligence*) என்னும் ஆங்கில மொழிக்கு மிகவும் அகன்ற பொருள்-நுணுக்கங்கள் உள்ளன. ஆகையால், புதிய சொல் ஒன்றைச் சிருஷ்டிக்க வேண்டியதாயிற்று.

என்று எழுதுவதும் நன்றன்று. உள நூல் ஆய்ந்த பேரறிவாளரும், உள நூல் எழுதுவோரும் தவறுதல்களுக்கு ஆளாகிற மனிதர்களே. இவர்களுக்கும் விருப்பு வெறுப்பு முதலிய மனக் கோணல்கள் உள்ளன. இவர்களும் இளமை முதல் பல்வகைப் பழக்க வழக்கங்களுக்கு ஆளானவர்களே; தாம் வாழும் சூழ்நிலைகளாலும், சமூகக் கட்டுப்பாடுகளாலும், நாட்டுநிலை காலநிலைகளாலும் உருப்பெற்ற தனித்தனி வாழ்க்கைப் போக்குடையவர்களே. ஆதலால், மக்களை வளர்ப்பதுபற்றி மானஸ சாஸ்திர நூல் ஒன்றை எழுதும் பொழுது, கண்டிப்பான சட்டங்களை வகுத்தல் பொருந்தாது. ஒரு சட்டைக்குள் யாவரையும் புகுத்தவேண்டும் என்ற சிந்தனையோடு மானஸ சாஸ்திரப் பொருள்களை வரையறுப்பதும் தகாது. ஆகையால், யாவருக்கும் பொருந்துகிற அளவிலே விஷயங்களைத் தெளிவாக விளக்கிக் காட்டவேண்டும் என்பதே இந்நூலின் நோக்கம்.

குழந்தையை வளர்ப்பவர்களின் இயல்பான ஆசை என்ன? குழந்தையின் [1]திராணிகள் யாவும் பூரண வளர்ச்சி அடைய வேண்டும். அவன் தன் [2]திறமைகளை மிகவும் பயனுறும் முறையிலே உபயோகித்து, வாழ்க்கையில் வெற்றிமாலை சூடுகிறவனாக விளங்கவேண்டும்— என்பதுதானே அவர்களுடைய அவா? தவறான [3]பாரித்த ஆசைகளே இத்தகைய சிறந்த குறிக்கோள்களினின்று வழுவச் செய்வன. மக்களுக்குச் செய்யத் தவறிய கடமைகளை நினைத்தும், அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாகத் தம்மிடத்திலே கண்ட தவறான பழக்க வழக்கங்கள், பலவீனங்கள், வளர்ப்பு முறையில் தோன்றியகுறைகள் முதலியவற்றை நினைத்தும் துயரப்படுகிற பெற்றோர் பலரைப் பார்க்கிறோம். இன்று நாம் வளர்க்கும் பிள்

1. திராணி - *Capacity* - பழக்கத்தினாலும் பயிற்சியினாலும் வினை செய்யும் ஆற்றலாக மாறாத இயல்பான சக்தி.
2. திறமை - *Ability* - பழக்கத்தாலும் பயிற்சியாலும் வினை செய்யும் ஆற்றலாக மாறுகிற இயல்பான சக்தி.
3. *Ambitions.*

ளைகள் பெரியவர்களாகிற பொழுது, நம்முடைய வளர்ப்பு முறைகளைச் சுட்டிக் காட்டிக் குறைகூறத் தொடங்குவர். அப்பொழுது, பெற்றவர் தம்மைத்தாமே நொந்து கொள்வர். இங்ஙனம் தம்மைத் தாமே நொந்து கொண்டு துயருறும் பெற்றோர்-குழுவின் அங்கத்தினராக நாம் நமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளப் போகிறோமா? இன்றேல், மக்களின் குற்றச் சாட்டுக்கு ஆளாகாதவாறு மக்கள் வளர்ப்பில் கண்ணுங் கருத்துமாக இருக்கப் போகிறோமா?

"வீட்டைக் கட்டிப் பார்! கல்யாணத்தைப் பண்ணிப் பார்!" என்பார்கள். இரண்டு காரியத்திற்கும் நாம் போடுகிற செலவுத் திட்டத்திற்கும் அதிகமாகப் பணம் செலவாகும். அதைப் போலவே, பிள்ளையை வளர்ப்பவளுக்கல்லவா தெரியும் அதிலுள்ள சிரமங்கள்? மானஸ சாஸ்திரம் முழுவதையும் கரைத்துக் குடித்து எவ்வளவு ஜாக்கிரதையாக மக்களை வளர்த்தாலும், வளர்ப்புமுறைகளில் தவறுதல்கள் இல்லாமற் போகுமா? ஒன்றினைப் பற்றி நன்றாய்த் தெரிந்துகொண்டபிறகு தவறு செய்தால், செய்த தவறுகள் நமது மனச்சாட்சியை ஓயாமல் சுடுமே; நம்மைச் சுடுகிற அதே தவறுதல்களை நம் மக்களும் பெரியவர்களாகிறபொழுது சுட்டிக் காட்டுவார்களே—என்று சிலர் கருதலாம். தவறுதல்கள் ஏற்படுவது இயல்பே. தம்மைப் பெற்று வளர்த்தவர்கள் தேவர்களாகத் தோன்றவில்லை எனவும், தங்களைப் போலவே மாணிட வகுப்பைச் சார்ந்தவர்களே எனவும், எந்த முயற்சியிலும் தவறுதல்களுக்கு இடம் உண்டு எனவும் குழந்தைகள் வளர வளரத் தெரிந்துகொள்வார்கள்; அதோடு, மக்களின் வளர்ப்பைப் பற்றித் தமது பெற்றோருக்கு இருந்த அக்கரையையும், தியாகபுத்தியையும், முயற்சிகளையும் பெரிதும் பாராட்டி மதிக்கத் தொடங்குவார்கள். ஆகையால், மக்களை வளர்க்கும் பெற்றோரும், அந்தப் பொறுப்புடைய பிறரும் தவறுகள் ஏற்படுமே என்று மனஞ்சோர வேண்டாம். தவறுகளைச் சரிப்படுத்தித் திரும்பவும் புது ஊக்கத்தோடு மக்களைச் சீரிய முறையில் வளர்ப்பதிலே

மனத்தைச் செலுத்துவதுமே தகுதி. மக்களை வளர்க்கும் பொறுப்புடையவர்கள் இரண்டு சிந்தனைகளை மறவாதிருத்தல் வேண்டும். 1. பிள்ளைகளை வளர்க்க நான் கையாளும் வளர்ப்பு முறையில் தவறுதல்களுக்கே இடம் இல்லை. நான் ஒரு பொழுதும் தப்பிதங்கள் செய்வதும் இல்லை; இதுவரை நான் செய்தவை யாவும் சரி; இனி செய்யப் போகிறவைகளும் சரியாகவே இருக்கும்—என்ற மனப்பான்மையை முற்றிலும் அகற்றவேண்டும். நானும் தவறக் கூடியவன்; இதுவரை நான் என் மக்களை வளர்த்த வளர்ப்பில் தவறுதல்கள் இருக்கலாம் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். 2. தவறுதலே செய்யாத திறமை உடையவர்களாக நாம் விளங்கவேண்டும் என்று பிள்ளைகள் நம்மிடத்திலே எதிர்பார்ப்பதாக ஒருபொழுதும் கருதலாகாது. இவ்விரண்டு சிந்தனைகளும் மக்களை வளர்க்கிறவர்களின் உள்ளத்தில் ஊன்றிக்கிடந்தால், பிற்காலத்தில் நேரிடக்கூடிய பல சிக்கல்களை அவர்கள் தவிர்க்கமுடியும்.

"என் பிள்ளை வகுப்பிலே தலையான நிலையில் இருக்கவேண்டும்; வகுப்புப் பரீக்ஷைகளில் நூற்றுக்கு நூறு மாற்கு வாங்கவேண்டும்; வருஷாந்திரப் பரீக்ஷைகளில் முதலாவதாகத் தேறவேண்டும்; பி.ஏ., எம்.ஏ., பட்டப் பரீக்ஷைகளில் மாகாண முதன்மைத் தானம் பெறவேண்டும்" எனக் கருதுபவரின் அவா மக்களை வளர்ப்பவர்களுக்குச் சிறந்த நோக்கமாக இராது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு பொருந்துகிறவர்களாகவும், வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுகிறவர்களாகவும், நாட்டுரிமையாளர்க்குத் தலைவர்களாகவும் விளங்கத் தகுந்த முறையிலே குழந்தைகளை வளர்ப்பதுதான் முக்கிய நோக்கமாக அமையவேண்டும். வாழ்க்கையில் எத்தனையோ பிரச்னைகள் எழும். வளர்ப்புக் காலத்தில் எதிர்ப்படாத எத்தனையோ வாழ்க்கைத் தத்துவங்களும் சிக்கலான இடையூறுகளும் எதிர்ப்படும். இவற்றை எல்லாம் சமாளிக்கக்கூடிய புத்தித்வமும், திறமையும், திராணியும் உடையவர்களாக மக்களை வளர்ப்பதே சிறப்பாகும். இப்

படி வளர்க்கிற மக்கள் காரணமின்றி எழும் மனோவிகாரங்களால் அலைசடி படமாட்டார்கள்; நாள்தோறும் ஏற்படுகிற கஷ்டங்களை மேற்கொள்வார்கள்; தமது பங்காக அமையும் பொறுப்புக்களை மனத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்வார்கள்; தமதாக அமைந்த கடமைகளைச் செம்மையாக நிறைவேற்றுவார்கள்; தோல்விகளைக் கண்டு அஞ்சாத மனப்பான்மையோடு இருப்பார்கள். ஆசாபங்கத்தால் சோர்வடையாமல் கருமத்திலேயே கண்ணாயிருப்பார்கள்.

"இவை யாவும் கைகூடுமா? சொல்வது எளிது; செய்வதோ அரிது" என்கிறீர்களா? அப்படி இல்லை. நாம் வளர்க்கும் ஒவ்வொரு குழந்தையும்—அவன் அல்லது அவள்—அடைய வேண்டிய முடிவான இலக்கு இன்னதென்று தொடக்கத்திலேயே விவேகமாகத் திட்டம் செய்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்யக் கூடுமானால், அவ்வப்போது நேரிடக்கூடிய தவறுதல்களைத் திருத்தத் தயங்கமாட்டோம். நமது மக்களின்மீது நாம் பாராட்டும் அன்பும் இந்த முயற்சியில் நமக்கு உதவிபுரியத் துணையாக இருக்கிறது. நாம் நம் மக்களின்மீது கொண்டுள்ள அன்பு குன்றாமலும் தளராமலும் இருத்தல் ஒன்றே போதும். நமது மக்களைத் தன்னிகரில்லாத செல்வமாக நாம் கருதுவது உண்மை எனில், மக்களின் வளர்ப்பு முறையிலே இவ்வுண்மை விளங்கவேண்டும். அவர்களை நமது முதுமைக்குப் பயன்படும் பொக்கிஷங்களாக அமைக்கவேண்டும். பொருட்செல்வத்தைத் தேடுகிறபண வேட்கைஉடைய மக்களாக வளர்க்காமல், இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படக்கூடிய ஞானப் பொக்கிஷங்களாக அமையுமாறு வளர்க்கவேண்டும். இந்த மாட்சிமையான நோக்கத்திற்குத் துணைக்கருவியாக இருப்பது அன்பேயாம். அன்பினால் ஆகாததும் உண்டோ?

> அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்; ஆர்வலர்
> புல் கண் நீர் பூசல் தரும்.

இது பொய்யா மொழியானால், அன்பினால் எதுவும் ஆகும்.

இப்படிச் சொன்னவுடனே, அலாவுதீன் மாய விளக்கைப்போல் ஒரே இராவிற்குள் நமது மக்களைப் புதுச் சிருஷ்டிகளாக மாற்றி அமைக்க முடியும் என்று கருத வேண்டாம். கற்கக் கற்கக் கசடு அறுவதுதான் கல்வி. எந்தக் கல்வியையும் ஒரே நாளில் பரிபூரணமாகப் புகட்டி விட முடியாது. எந்த வித்தையையும் ஒரே நாளில் புகுத்தலும் அரிது. பயிற்றுவிப்பவனிடத்தில் அமைய வேண்டிய சிறந்த இலக்கணங்களைப் பவணந்தி முனிவரே வகுத்துக் காட்டுகிறார் :—

விரையான் ; வெகுளான் ; விரும்பி முகம் மலர்ந்து
கொள்வோன் கொள்கை அறிந்து, அவன் உளம் கொளக்
கோட்டம் இல் மனத்தில் நூல் கொடுத்தல் என்ப.

[விரையான் - அவசரப்பட மாட்டான் ; வெகுளான் - கோபம் கொள்ளமாட்டான். கொள்வோன் - கற்றுக்கொள்ளும் மாணுக்கன். கொள்கை - கற்றுக்கொள்ளும் தன்மை. உளம் கொள - மனத்திற் படும் படி. கோட்டம் - கோணல். இல் - இல்லாத. மனத்தில் - மனத்தோடு. நூல் கொடுத்தல் - கற்றுக் கொடுத்தல். என்ப - என்று சொல்லுவார்கள்.]

இவை உபாத்தியாயர்களுக்கு மட்டுமன்று, குழந்தைகளை வளர்க்கும் பொறுப்புடைய யாவர்க்கும் உரிய இலக்கணங்களேயாம். குழந்தையின் முதல் ஆசிரியர் பெற்றவரே ஆவர். அவர்களுக்கு அடுத்தபடியிலே நிற்பவர்கள் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர்களே. ஆகையால், பெற்றோரிடத்தில் அமையவேண்டிய முதல் இலக்கணம் அவசரப்படாமல் கற்றுக்கொடுக்கும் தன்மையே. இன்றைக்கு ஒரு பாடம், நாளைக்கு மற்றொருபாடம் எனக் குழந்தை பிறந்த நாளிலிருந்து இளமைப் பருவம் கடந்து பாலியப் பருவம் அடைகிறவரைக்கும், அதற்கப்பாலும் கற்றுக்கொடுத்து வருவதே சிறப்பு. இப்படி நாளுக்கு ஒரு பாடமாகக் கற்றுக் கொடுப்பதற்கு ஏற்றவாறு குழந்தைகளின் மனவியூகனமும் அமைந்துள்ளது. உதாரணமாகப் பிறந்த குழந்தையின் இயல்பைப் பாருங்கள். குழந்தை-மனத்தின் முதல் நிலையைப் பார்க்கும் பொழுது, மக்களை வளர்த்தல் மாயவித்தையாகத் தோன்றாது. மாயமற்ற குழந்தைகளை வளர்க்க மாய மந்திரங்கள் ஒன்றும் தேவை இல்லை. மக்களை வளர்க்கும் விஞ்ஞானம்,

குழந்தையின் ஆரம்ப வாழ்க்கையில் தோன்றுகிற மன நிலைமையைப் போலவே மிகவும் எளியது. ஆள்தோறும் வாழ்க்கைப் போக்கு வேற்றுமைப் படலாம்; வாழ்க்கைப் பிரச்னைகளிற் பலவாருன சிக்கல்கள் தோன்றலாம். வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பெரியவர் களின் ஜீவியத்தில் தோன்றுகிற அளவு சிக்கல்கள் வாழ்க்கையைத் தொடங்குகிற குழந்தையிடத்தில் தோன்ருவாம். ஆள்தோறும் காண்கிற வேற்றுமைப் பாடுகளும் குழந்தையின் ஆரம்ப வாழ்க்கையில் இல்லை. ஆகையால், உடல் வளர்ச்சியிலும் மன வளர்ச்சியிலும் கோளாறுகள் இல்லாமல் சீராக வளர்ப்பது அவ்வளவு சிரம சாத்தியமன்று. இந்த உண்மையைத் தெளிவாக உணரும் பொருட்டு வாழ்க்கைத் தொடக்கத்தில் குழந்தை யின் மன இயல்புகளைச் சுருக்கமாகப் பார்க்கலாம். குறித்த பிரதிச் செயல்[1] ஒன்று எப்படிப் பல கால்வாய் களாகப் பிரிந்து, பல குணங்களாகப் பரிணமிக்கிறது என்று பார்ப்போம்.

தாயின் உடலுக்குள் கையும் காலும் அடக்கமாகக் கிடந்த குழந்தை பிறந்த நேரத்திலிருந்து [2]சூழ்நிலைகளி லிருந்து எழுகிற [3]அருட்டிகளுக்கு ஆளாகிறது. தாயின் வயிற்றிற்குள் தனக்கிருந்த ஆதாரமான நிலைக்கு ஏதோ ஒரு சம்பவத்தால் மாறுதல் வந்துற்றது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. இந்த உணர்ச்சியால் குழந்தை அழுகிறது. ஆதார நிலையில் ஒரு மாறுதல்; அதனால், 'விழுந்துவிடுவேனே?' என்ற பயம்; பயம் என்னும் [4]அக அருட்டிக்குப் பிரதிச் செயலாக அழுகை தோன்றுகிறது. சற்று நேரத்தில் குழந்தையின் வயிற் றுக்குள் பசிப்பிணி தோன்றுகிறது. பசி குழந்தையின்

1. பிரதிச் செயல் - ஒரு செயலுக்குக் காரணமாக விளையும் எதிர்ச் செயல். இதனைப் **பிரதி இயக்கம்** எனவும் கூறலாம்.
2. சூழ்நிலை - (*Environment*) சூழல்.
3. அருட்டி - (அருட்டல் - தூண்டுதலும் எழுப்புதலும்) தூண்டுவதற்குக் காரணமாயிருப்பது-(*Stimulus*).
4. அக - அருட்டி - உள்ளே இருந்து ஏற்படும் தூண்டுதல்.

உடலுக்குள் இருந்து எழுகிற அக-அருட்டியாக அமைகிறது. இந்த அக-அருட்டிக்குப் பிரதிச் செயலாகத் தோன்றுவதும் அழுகையே. குழந்தை பிறந்திருக்கும் இடத்தில் யாரேனும் உரத்த சத்தமாகப் பேசினுல் குழந்தை திடுக்கிடுகிறது. உரத்த சத்தம் புற உலகத்திலிருந்து வருகிற அருட்டி. ஆகையால், இதனைப் [1]புற-அருட்டி எனலாம். இந்தப் புற-அருட்டியும் பயத்தை உண்டுபண்ணுகிறது. இதுகாறும் காற்றுப்படாத உடம்பில் குளிர்ந்த காற்றுப்படுகிறது. இதுவும் சூழ்நிலையிலிருந்து எழும் அருட்டிதான். இந்த அருட்டிக்குப் பிரதிச் செயலாக அழுகை தோன்றுகிறது. இப்படியே பிறந்த நிமிஷம் முதல் குழந்தைக்குள்ளிருந்தும் சூழ்நிலைகளிலிருந்தும் அருட்டிகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இந்த அருட்டிகளுக்குப் பிரதிச் செயல்களும் எழுந்தவண்ணமாக இருக்கின்றன.

பிறந்த இடமும், இடத்தில் உள்ள பொருள்களும், இடத்தில் இருப்பவர்களும், சூரியனும், வெளிச்சமும், காற்றும், சீதோஷ்ண நிலைகளும், சுருங்கச் சொன்னுல் இந்த உலகமும், இதில் உள்ள பொருள்கள் யாவும் பிறந்த குழந்தையின் சூழ்நிலைகளாக அமைகின்றன. பிறந்த குழந்தைக்குப் பசியும், பரிச உணர்ச்சியால் விளையும் வேதனையுமே முதன் முதலில் அருட்டிகளாக எழுகின்றன. குழந்தையிடத்தில் தோன்றுகிற ஆரம்ப மனேவிகாரங்கள், பயம், திருப்தி என இரண்டாம். ஆதார நிலைக்கு மாறுதல் ஏற்படுவதால், 'விழுந்துவிடுவேனே?' என்ற அச்சமும், உரத்த சத்தத்தால் எழுகிற அச்சமும், பயமென்னும் மனேவிகாரத்திற் குரியவை. முகமலர்ச்சியும், நெற்றிச் சுளிப்பும், உடல் நடுக்கமும், அழுகையும் குழந்தையின் வாழ்க்கைத் தொடக்கத்தில் தோன்றும் மனேவிகாரங்களால் வெளிப்படும் பிரதிச்செயல்களாகத் தோன்றுகின்றன.

குழந்தை வாழ்க்கையைத் தொடங்குகிற நாட்களில், சில இயற்கை உணர்வுகளே வெளிப்படுகின்றன; மிகச்

1. புற - அருட்டி - வெளியிலே இருந்து ஏற்படும் தூண்டுதல்.

சில அருட்டிகளே தோன்றுகின்றன; சில மனோவிகாரங்களே எழுகின்றன. பிரதிச் செயல்களும் மிகுதியாக இல்லை. இத்தகைய நிலையிலிருக்கிற குழந்தை சில ஆண்டுகளுக்குள் எண்ணிறந்த உணர்ச்சிகளுக்கு ஆளாகி, எண்ணிறந்த பிரதிச் செயல்களை விளைக்கிற மானிட [1] உயிர்நிலையாகிறது. இது இயற்கைச் சம்பவங்களில் பெரிய அதிசயமேயாம். பிறப்பு முதல் குழந்தை தனக்கு நேரிடுகிறவை அனைத்தையும் உணரக் கூடிய நிலையில் இருப்பதனாலேதான், பிறந்த நேரத்திலிருந்தே அதன் கல்வியும் தொடங்குகிறது. சூழ் நிலைகளோடு நெருங்கிய உறவு ஏற்படும்பொழுது, பயன்படக்கூடிய முறையிலே பிரதிச் செயல்களை எழுப்புவதற்கு ஏற்ற வகையில் குழந்தையின் உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும், மனோவிகாரப் போக்குகளும், சமூக இலக்கணங்களும் அமைகின்றன.

ஸர்க்கஸில் பழக்கப்படும் மிருகங்களைப் போலவே குழந்தைகளும் தமக்குச் சுக நிலையையும் திருப்தியையும் அளிக்கிற செயல்களைத் திரும்பத் திரும்பச் செய்வதைப் பார்க்கலாம். சுக நிலையைக் குலைக்கிறவைகளையும், வேதனைகளை உண்டுபண்ணுகிறவைகளையும் குழந்தைகள் தவிர்க்க முயலுவார்கள்; தவிர்க்க முடியாவிட்டால் அவற்றைக் கண்டு அஞ்சி விலகுவர். ஒரு குழந்தைக்குச் சிறிது பசி தோன்றுகிறது. இது கள்ளப் பசியாக இருக்கலாம். கள்ளப் பசி என்பதனால், குழந்தை ஆரம்பத்திலேயே கள்ளம் கற்றதாகப் பொருள் செய்துவிடலாகாது. கள்ளம் என்ற சொல்லுக்குப் பரந்த பொருளிலே, தெளிவற்ற அல்லது மறைந்த என்ற பொருளைத்தான் கொள்ள வேண்டும். பால் ஊட்டக் குறித்த காலம் இன்னும் அணுகவில்லையாயினும், கள்ளப் பசி தேன்றியவுடனேயே குழந்தை அழுகிறது. இது கள்ள அழுகை. தாய் இந்த அழுகையைப் பொருட்படுத்தாமல் தன் அலுவலைக் கவ

1. **உயிர்நிலை** - சடமாகிய உடலுறுப்புக்களைப் பெற்று இயங்கும் உயிருக்கு ஆங்கிலத்தில் (*Organism*) என்னும் சொல்லை வழங்குவர். இச்சொல் மிகவும் அகன்ற பொருளைத் தருவது; ஆதலால், புதிய தமிழ்ச் சொல்லைப் புகுத்த நேர்ந்தது.

னிந்துக்கொண்டிருக்கிறாள். கள்ள அழுகை ஆசாபங்கத்தால் மெய்-அழுகையாகிறது. அழுகை சுகநிலையைக் குலைத்து விடுகிறது. ஆகையால், குழந்தை முன்னிலும் அதிகமாக வீறிட்டு அழுகிறது. தாய் ஓடிவந்து எடுத்துப் பால் ஊட்டிவிட்டால், குழந்தை ஒருவகையான பாடத்தைக் கற்றுக்கொள்கிறது. "அழுதாலும் அழட்டும்; குறித்த காலத்திலன்றிப் பால் ஊட்டுவதில்லை" என்றிருந்தால் குழந்தை மற்றொரு வகையான பாடத்தைக் கற்றுக் கொள்கிறது. அழுது பால் உண்ட பிள்ளை, "கள்ளப் பசி தோன்றும் பொழுதெல்லாம் கள்ள அழுகை அழுவேன்; அழுதால் தாய் வந்து பால் ஊட்டுவாள்" என்னும் பாடம் படித்து விட்டது; அழுகை விரும்பியதைப் பெறுவதற்குத் தகுந்த உபாயம் என்று உணர்ந்துகொண்டது. சுகநிலையைப் பெறுவதற்கு உபாயமாகிய அழுகையை மறுமுறையும் பரீக்ஷை செய்து பார்க்கிறது. அழுகையைச் சமனம் செய்கிறதற்காகத் தாய் திரும்பவும் பால் ஊட்டினால், குழந்தை முந்திப் படித்த பாடத்தை உறுதியாகப் பற்றிக்கொள்கிறது; தன் சுக நிலையைத் தேடுவதற்கு அழுகையே சிறந்த உபாயம் என்னும் பாடத்தைப் படித்தாயிற்று; தான் கற்ற பாடத்தைத் தன் தாய்க்கும் கற்றுக் கொடுக்கிறது. அழும்போதெல்லாம் வந்தெடுக்குமாறு தாயின் உள்ளத்தைப் பழக்கி விடுகிறது. இந்தப் பாடத்தினால் விளையும் பிற குணங்கள் மேலும் ஆராயவேண்டியவை.

தாய் குழந்தையின் அழுகையைப் பொருட்படுத்தாமல் இருந்துவிட்டால், பாலூட்டக் குறித்திருக்கும் நேரம் வருந்தனையும் காத்திருக்கக் குழந்தை வெகு விரைவில் பழகி விடுகிறது. தற்காலிகமாக ஏற்படும் சுகநிலைக் கேடுகளைச் சரிப்படுத்துவதற்காகக் குழந்தைகள் கையாளும் அழுகையின் முதல் பாடங்களாவன:—அற்பச் சிறு சுகநிலைச் சிதைவுக்குக் காரணம் சிறு கள்ளப் பசி; அந்தக் கள்ளப் பசி தீர ஒரு கள்ள அழுகை. கள்ள அழுகையைத் தொடர்வதுதான் மூரண்டாக முதிர்கிறது. மூரண்டு சுக நிலையை நிஜமாகவே சிதைப்பது. இப்படித்

தானாகவே விளைத்துக்கொண்ட சுகநிலைச்சிதைவைச் சரிப்படுத்தும் வரைக்கும் அழுகையை உபாயமாகக் கையாளுகிறது. இதைத் தொடர்ந்து, நினைத்தது நிறைவேறவில்லையே என்னும் ஆசாபங்கத்தால் கோபத்திற்கு ஆளாகிறது. இந்நிலையில் மனவமைதி குலைகிறது. அழுகையால் முதன் முதலில் காரிய சித்தியைப் பெற்ற குழந்தை இப்படியே பல பாடங்களைக் கற்றுக் கொள்கிறது.

இதற்கு மாறாக, மற்றக் குழந்தையைப் பார்ப்போம். கள்ளப் பசி தோன்றியது. இந்தக் குழந்தையும் ஒரு கள்ள அழுகை அழுது பார்க்கிறது. தாய் பொருட்படுத்தவில்லை. இக்குழந்தையும் முதலில் அதிகமாக அழுது பார்க்கிறது. என்றாலும், தாய் வரவில்லை. அதிகமாக அழுததனால் சுகநிலைச் சிதைவு ஏற்படுகிறது. இந்த முறையை இரண்டு மூன்று தடவைகளில் கையாண்டும் விரும்பியது கிடைக்கவில்லை. ஆகையால், இக் குழந்தை, கள்ளப் பசி நேரிட்டாலும் அதைப் பொருட்படுத்தலாகாது எனவும், அப்படிப் பொருட்படுத்தி அழுதாலும் சற்றே சிதைந்த சுகநிலை முற்றிலும் கெடுமெனவும், இப்படி அழுவதனால் அடையக்கூடிய நன்மை ஒன்றும் இல்லை எனவும், முடிவில் சுகநிலைக்குக் கேடுதான் நேரிடும் எனவும் கற்றுக்கொள்கிறது. கள்ளப் பசியைச் சகித்தலும், ஆசாபங்கத்தை எதிர்பார்த்து வாழ்தலும், தன் சுகநிலைக்குக் கேடுவராமல் காக்கும் திறனுமாகிய குணங்கள் படிப்படியாகத் தோன்றுகின்றன. முந்திய குழந்தையிடத்திலோ பொறுமையின்மையும், ஆசாபங்கத்தைச் சகிக்க முடியாத மன இயல்பும், தன் சுகநிலையைப் பற்றிய கவலையின்மையுமாகிய குணங்கள் படிப்படியாகத் தோன்றுகின்றன. பசியைச் சார்ந்த அளவிலே அழுகை என்ற ஒரே பிரதிச் செயலை எல்லைத் திட்டத்தில் அமைத்துக் காட்டிய சிறு உதாரணமே இதுகாறும் விளக்கியவை அனைத்துமாம் என்பதனை வாசகர்கள் மறக்கலாகாது. இந்த உதாரணத்தில் அழுகைக்குப் பசி காரணம் என்று கூறியதாகக் கருதவேண்டாம். பசியைச் சார்ந்து முதலில் எழுகிற அழுகையையும், தாயின் பிரதிச் செய

னுக்கு ஏற்பக் குழந்தையின் மனத்தில் ஏற்படும் விகாரங்களையும், கற்கிற பாடங்களையும் சிறிதளவு காட்டும் பொருட்டே இந்த உதாரணத்தைக் கூறினேம். இந்தக் குணங்கள் யாவும் எண்ணிறந்த அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டவை. அனுபவங்கள் யாவற்றையும் ஒரே நாளிலாவது ஒரே மாதத்திலாவது ஒரே ஆண்டிலாவது குழந்தை அடைவதாகக் கருதலாகாது. குழந்தை ஒரு பாடத்தைப் படிக்கப் பல நாட்கள் ஆகும். படித்த பாடத்தை ஒட்டிவரும் அனுபவம் மனத்தில் முத்திரையாகப் பதியப் பின்னும் பல நாட்களாகும். இந்த விஷயங்களை எல்லாம் விளக்குவதற்கு முன்னுரை தகுந்த இடம் அன்று. இந்த முன்னுரையில் குழந்தையை வளர்ப்பவர்களுக்கு எழக்கூடிய பிரச்னைகளின் பெருங்கத்தை ஓரளவு காட்டி, அதன் மூலமாகப் பிள்ளைகளைப்பற்றி ஆராயும் மானஸ சாஸ்திரத்தின் ஏற்றத்தையும் உணர்த்த வேண்டுமென்பதே நோக்கம்; ஆகையால் எடுத்துக் கொண்ட விஷயத்தை இங்கே முடித்துவிட்டதாகக் கருத வேண்டாம்.

குழந்தைகளை ஓரளவு ஆசாபங்கத்திற்கு ஆளாக்காமல் வாழ்க்கையில் பயன்தரக்கூடிய இன்றியமையாத சிறந்த பாடங்களைக் கற்றுக்கொடுப்பது அரிது. விரும்புவதையெல்லாம் பெறவேண்டும்; எடுத்ததையெல்லாம் வாயால் ஆராயவேண்டும் என்பதே குழந்தைகளின் இயற்கை உணர்வு. இந்த ஆசையைத் திருப்திபண்ணும் பொருட்டுக் குழந்தைகள் அழுகை என்னும் உபாயத்தைக் கையாளுகின்றன. விரும்பியது கிட்டாவிட்டாலும், அதை எடுக்க முடியாவிட்டாலும் கோபம் என்னும் மனோவிகாரம் தோன்றுகிறது; விரும்பியது தனக்குக் கிடைக்காமல் போகுமோ என்ற அச்சம் எழுகிறது. கோபமும் அச்சமும் அமைதியைக் குலைக்கிற மனோ விகாரங்களாம். வாழ்க்கையில் விரும்புகிறவைகள் யாவும் அகப்படுவன அல்ல; விரும்புகிறவைகளை எல்லாம் ஜன சமூகத்தார் தரமாட்டார்கள்என்னும் பாடத்தைப் படிக்கும் வரைக்கும் கோபமும் அச்சமும் மனத்தை அருட்டிக்

கொண்டிருக்கும். இவ்விரு மனோவிகாரங்களும் விரும்பியவற்றை அடையும் உபாயங்களை நாடவும் முயற்சி செய்யவும் தூண்டிவிடும். ஆசாபங்கமும், செயல் தடைகளும், ஆர அமர்ந்து சிந்திக்கும் மனப்பான்மையை உண்டுபண்ணும்; ஆக்கும் மனப்பான்மைக்குக் காரணமாகும்; ஆக்குவதற்கு ஏற்ற சிந்தனைகளை எழுப்பிவிடும். குழந்தைக்கு எட்டாத இடத்திலே ஒரு பொம்மை இருந்தால், அதைப் பெறுவதற்காக அழுது பார்க்கும்; அழுகையினால் விரும்பியது கிட்டாவிட்டால், தானே எடுக்க வேண்டுமெனக் கையை நீட்டும். நடக்கும் பருவம் அடைந்த குழந்தையானால், பெட்டியின் மீதாயினும், நாற்காலியின் மீதாயினும் ஏறி அதை எடுக்க முயலும். அழுது காரியத்தைச் சாதிக்கும் குழந்தையோ, அழுது பார்க்கும். முடியாவிட்டால் கோபத்திற்கு ஆளாகும். நடக்கும் பருவம் அடைந்திருந்தால், சற்றே முயன்று பார்க்கும். சிறிது முயற்சியால் முடியாவிட்டால் முரண்டடித்துக் கிடக்கும்.

ஒரு குழந்தை விரும்புவதைப் பெறுவதற்கான வழிகளை நாடுகிறது. மற்றொரு குழந்தையோ, முந்திய குழந்தையின் உடல் வளர்ச்சியையும் வயதையும் பெற்றிருந்தாலும், காரியசித்திக்கான வழிகளை நாடாமல், அழுகையாலும் முரண்டடிப்பதாலும் விரும்பியதைப் பெறலாம் என்று நினைக்கிறது. முந்திய குழந்தையோ, ஆசாபங்கத்தினால் ஆர அமர்ந்து சிந்தித்துக் காரிய சித்திக்கு ஏற்ற உபாயத்தை நாடுகிறது. புதிதாக ஒரு காரியத்தைச் செய்வதற்கு உதவுகிற ஆக்கும் திறன் ஏற்படுகிறது. முதன் முதலில் அழுகையால் தன் விருப்பத்தை அடையப் பழகிய குழந்தையிடத்தில் இத்தகைய மன வளர்ச்சிக்கு இடம் இல்லை. முந்திய குழந்தையிடத்தில் தனக்குத் தானே உதவி செய்துகொள்ளும் குணம் ஏற்படுகிறது. பிந்திய குழந்தையிடத்திலோ பிறர் உதவியை நாடும் குணம் ஏற்படுகிறது. இரண்டு குழந்தைகளிடத்திலும் ஆரம்ப நாட்களில் ஒரே விதமாகத் தோன்றிய பிரதிச் செயல் அழுகையே. அழுகை பிந்திய நாட்களில் ஒரு

குழந்தைக்கு வளர்ச்சியைத் தடுக்கும் குணமாகிறது; மற்ருெரு குழந்தைக்கு, புது வழிவகைகளைத் தேடவும், காரிய சித்தி பெறும் ஆற்றலை அடையவும் தூண்டுகோலாகிறது. பிறரைச் சார்ந்து பிழைக்கிற நிலையைக் கடந்து, தமக்கு வேண்டியவற்றைத் தாமே செய்துகொள்ளக் கூடிய நிலையை அடைவதற்கு உகந்த பாடங்களைக் குழந்தைகள் படிக்கிற விரைவுக்கு ஏற்ப மனத்தின் வளர்ச்சியும் இருக்கும்.

அழுகையினுல் காரியங்களைச் சாதிக்கிற குழந்தைகளை நாம் பார்க்கும்பொழுது, "அந்தோ! பெற்ருேர் கெடுத்து விட்டார்களே!" என்று துயருறுவோம். வாழ்க்கையில் எத்தனையோ விதமான முட்டுக்கள் ஏற்பட இருக்கின்றன. வாழ்க்கைத் தொடக்கத்தில் முதல் முட்டு ஏற்படும் பொழுது சீர்கெடுவது செல்லக் குழந்தையே. இந்தக் குழந்தை வாழ்நாளில் ஏற்படுகிற பல முட்டுக்களால் மன முடைந்து சங்கடப்படும். முதல் அழுகையினுல் விரும்பியது நிறைவேருமல் ஆசாபங்கம் அடைந்த குழந்தையோ எனில், தாய் பாலூட்டும் நேரத்தில் கிடைக்கக்கூடிய இன்பம் அனைத்தும் தனக்கே உரியது என்று உணர்ந்து அந்த நேரம் வருந்தனையும் காத்திருக்கப் பழகுகிறது; நாளுக்குநாள் காத்திருக்கும் மனப்பான்மையும் வளருகிறது; தனக்கு வெகு பிரியமான சந்தோஷத்திற்காக ஏனைய இன்பங்களையும் விலக்கிவிடுகிற தியாக புத்தியைப் பெறுகிறது; இத்தகைய அனுபவங்கள் ஏற ஏற, "எதற்கும் ஒரு காலம் உண்டு; எதற்கும் ஒரு தவணை உண்டு; இவ்வுலகத்தில் அனுபவிக்கவேண்டிய எந்த இன்பத்தையும் கிட்டாதது என்று மறக்கத் தேவை இல்லை; எல்லாவற்றிற்கும் பொறுமையும் தளராத முயற்சியும் தான் தேவை"—என்ற பாடங்களைக் கற்றுக்கொள்கிறது. இந்தப் பாடங்களுக்கெல்லாம் முந்திய பாடம் எது? கள்ளப் பசி கண்டபோது, கள்ள அழுகை அழுது தாய் வருவாளா என்று பரீக்ஷை பார்த்த காலத்திலே படித்த பாடந்தான் பல கால்களாகப் பிரிந்து பல்வகைக் குணங்களாகிற பைங்கூழ்களை வளர்த்து விட்டது. எனினும்,

இந்தப் பாடங்களையெல்லாம் ஆரம்ப அனுபவங்கள் தோன்றத் தொடங்கிய நாளிலேயே குழந்தை கற்றுக் கொள்ளவில்லை. இவை, முதல் ஆசாபங்கத்தை அடுத்து வரிசையாக வந்த பாடங்களும் அல்ல. பெற்றோர் அவ்வப்போது சில்லறைச் செலவிற்குத் தந்த பணத்தையெல்லாம் கொலுப் பொம்மை வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சேர்த்து வைக்கிற ஐந்து வயதுச் சிறுமி, தன்னை அடிக்கடி தாக்கிக்கொண்டிருந்த பல்வகை அருட்டிகளுக்கு இடம் கொடாமல் அவற்றை மேற்கொள்வதற்குக் கையாண்ட ஆற்றலைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள். இந்த ஆற்றலின் முளை எங்கே ஆரம்பம் ஆகிறது? முதல் கள்ள அழுகை பலிக்காதபோது காத்திருக்கப் படித்த முதல் பாடத்திலன்றோ?

வயிற்றில் இருந்த கருவுக்குத் தாயே உலகம். அவளே சூழ்நிலை. பிறந்தவுடனே அந்தச் சூழ்நிலை மாறி விடுகிறது. பிறந்த நேரம் முதல் அமைகிற சூழ்நிலையை முந்தியே விளக்கிவிட்டோம். பிறந்தது முதல் சூழ்நிலைகள் குழந்தையோடு இருவகைத் தொடர்பு பெறலாம். 1. நட்புத் தொடர்பு. 2. பகைத் தொடர்பு. வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே சூழ்நிலைகளிற் சில நட்பு முறையிலும், மற்றும் சில பகை முறையிலும் சம்பந்தப்பட்டிருக்கும் என்று அறிந்திருப்பது நலமா? இன்றேல், சூழ்நிலைகளின் உறவில் நட்புத் தொடர்பேயன்றிப் பகைத் தொடர்பொன்றுமில்லை; சூழ்நிலைப் பொருள்கள் யாவும் நன்மைக்கென்றே அமைந்தவை என்ற உணர்ச்சியோடு வாழ்வை ஆரம்பிப்பது நலமா? இவ்விரண்டும் இன்றி, சூழ்நிலைப் பொருள்கள் யாவும் பகைத்து நிற்பவை; வாழ்க்கையில் மகிழ்ச்சி அளிக்கிற சூழ்நிலைகளோடு வலியச் சென்று நட்போடு உறவாடவேண்டும்; பயன் படாத சூழ்நிலைகள் எந்தத் தொடர்பிலிருந்தாலும் அக்கறை இல்லை; அவற்றை ஒழிக்கவேண்டும் என்ற மனப்பான்மையோடு வாழ்வை ஆரம்பிப்பது நலமா? இதுவும் மிகப்பெரிய பிரச்னை தான். எதிர்காலத்தில் கூடிவாழவேண்டிய ஜன சமூகத்தோடும், உலகத்தாரோடும், உலகத்திலுள்ள எல்லாப்

பொருள்களோடும் உறவாடப் போகிற குழந்தையின் மனப்பான்மை முழுவதும் இந்தப் பிரச்னைக்குச் சரியான விடை காண்பதை ஆதாரமாகக் கொண்டுள்ளது. குழந்தை தனக்கு இன்பம் தருகிற சூழ்நிலைப் பொருள்களை எல்லாம் நட்பாகக் கருதும் மனப்பான்மை உடையது. தனக்கு வேதனை விளைப்பவைகளைப் பகையாகக் கருதுவதும் குழந்தையிடத்தில் இயற்கை உணர்வாகவே அமைகிறது. சூழ்நிலைப் பொருள்கள் யாவும் நன்மை செய்யும் பொருட்டு எப்பொழுதும் நட்பு - முறையிலே இருப்பவை; சூழ்நிலைப் பொருள்களில் ஏதேனும் ஒன்று எப்பொழுதாயினும் வேதனை விளைத்தாலும், வேணுமென்று செய்ததாகக் கருதலாகாதென வாழ்க்கைத் தொடக்கத்திலேயே குழந்தைக்கு உணர்த்துவதனால் விளையும் நன்மைகளை எண்ணிப் பாருங்கள்.

ராமமூர்த்தி மூன்று வயது நிரம்பாத சிறுவன். அவனுக்கு எந்த மிருகத்தைக் கண்டாலும் பயமில்லை. அவன் பூனையின் வாலைப் பிடித்து இழுப்பான். 'டாமி' என்னும் நாயோடு விளையாடுவான்; விளையாடும் பொழுது டாமி தன் கையைக் கடித்தால் பார்த்துக் கொண்டிருப்பான்; காக்கையைப் பிடிக்க ஓடுவான்; கன்றுக்குட்டியைக் கட்டி இழுத்துக்கொண்டு வருவான். ஒரு நாள் பக்கத்தில் இருந்து அவனுடைய விளையாட்டைக் கவனித்துக்கொண்டிருந்த டாமி எதிரே வந்த வேறொரு நாயைத் துரத்துவதற்காகப் பாய்ந்தபோது, ராமுவைக் கீழே தள்ளிவிட்டது. ராமு பயந்து அலறி அழுதான். தாய் ஓடி வந்தாள். டாமியும் திரும்பி வந்து ராமுவைத் துக்கத்தோடு பார்த்தது. டாமி தனக்கு விளைத்த வேதனையைத் தாயிடம், ராமு முறையிட்டான். அதற்குத் தாய் "ராமு, டாமி தெரியாமல் செய்துவிட்டது. டாமிக்கு ராமுவிடம் வெகு பிரியம்; அதைப் பார்! ஐயோ! துக்கத்தோடு பார்க்கிறதே! பாவம் டாமி! ராமுவைத் தள்ளிவிட்டேனே என்று மிகவும் துக்கப்படுகிறதே! பார்!" என்று ராமுவிடம் கூறினாள். ராமுவின் அழுகை ஓய்ந்தது. ராமு டாமியை உற்று நோக்கினான். உண்மையில் அது துக்கப்

படுவதாகவே அவனுக்குத் தோன்றியது. எனினும், அதன் அருகில் செல்ல அவனுக்கு அச்சமாகவே இருந்தது. இந்த அச்சம் இரண்டு மூன்று நாட்களில் தெளிந்தது. டாமி இழைத்த வேதனையை ராமு மறந்துவிட்டான். முன்போலவே அந்த நாயோடு விளையாடத் தொடங்கினான்.

சூழ்நிலைப் பொருள்கள் யாவும் நட்பு முறையிலே இருக்கின்றன என்று ஆரம்பத்திலிருந்து ஒரு குழந்தைக்கு உணர்த்தி வந்தால் வேதனையை உண்டுபண்ணுகிறவைகளை மன்னித்து முன்போலவே நேசிக்கும் மனப்பான்மை ஏற்படும்; பழைய நட்பு முறை தொடரும். குழந்தையிடம் இந்த மனப்பான்மை வளருந்தோறும், வாழ்க்கையில் எதிர்பாராதவை நிகழினும், அவற்றை இயல்பான சம்பவங்களாகக் கருதுகிற அனுபவ ஞானம் ஏற்படுகிறது. தோழர்களில் ஒருவன் வஞ்சித்தாலும், மற்றொருவன் உதவி புரிந்தாலும், இரண்டையும் அளவு கடந்த மனவெழுச்சிகளுக்கு இடமில்லாதவாறு அனுபவிக்கும் மனநிலை ஏற்படுகிறது. எந்தக் குழந்தையும் தன் இன்பத்தையே தேடும்; தனக்குப் பிரியமானவைகளையே நாடும். குழந்தைகளின் இயற்கை உணர்வுகளிலே இதுவும் ஒன்று. எனினும், சூழ்நிலைப் பொருள்களின் நட்புத் தொடர்பை நன்றாய் உணர்கிற குழந்தை பிற்காலத்தில் சூழ்நிலைப் பொருள்கள் அனைத்தினோடும் நட்புறவு கொண்டாடி, அவற்றைத் தன் இன்பத்திற்காகப் பயன் படுத்திக் கொள்ளும் ஆற்றலைப் பெறுகிறது; எந்தச் சூழ்நிலைப் பொருளாவது தன்னை எதிர்பாராத வேதனைக்கு ஆளாக்கி விட்டால், அந்தப் பொருளைப் பகைத்து வெறுத்துத் தள்ளாமல், பின்பு ஒரு தருணத்தில் இன்பத்திற்காகப் பயன்படுத்தக் கூடிய நிலையில் வைத்துக்கொள்ளும் ஆற்றலையும் அடைகிறது. இக்குணச் சிறப்புக்கள் அனைத்திற்கும் தொடக்கம் எங்கே? இவை, சூழ்நிலைப் பொருள்களோடு குழந்தையை, உறவு படுத்துகிற ஆதி உறவிலேதான் தொடங்குகின்றன. விரும்பியவாறெல்லாம் விரும்பிய பொருள்கள் தனக்கு மகிழ்ச்சி அளிக்காத

போது, படிப்பிலும் பல அலுவல்களிலும், புதியவைகளை ஆக்கும் திறமையை வெளிப்படுத்துவதிலும் மனத்தைத் திருப்பி ஆறுதல் அடையச் செய்கிற மனநிலைகூட சூழ்நிலைப் பொருள்களோடு ஏற்படுகிற ஆதி உறவையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஆசாபங்கம் ஏற்படும் பொழுதெல்லாம் சூழ்நிலைப் பொருள்களைப் பகையாகக் கருதாமல் மனத்தைப் பல்வேறு கால்வாய்களில் திருப்பி விடப் பழகிய சிறுவன் நாளுக்கு நாள் மனோவிகாரங்களை அடக்கிக் காலந்தோறும் எழுகிற சிக்கலான பிரச்னைகளை விடுக்கவல்ல ஞானியாக மாறுகிறான். இவையாவற்றையும் சிந்திக்கும்பொழுது குழந்தை வளர்ப்பில், சூழ்நிலை ஆராய்ச்சி மிகவும் இன்றியமையாததெனப் புலப்படும். இவ்வாராய்ச்சி உண்மைகளையும் இந்நூல் வாயிலாகச் சிறிது அறியலாம்.

ஒரு சிறுவனுக்கு பாட்டு என்றால் வெகு பிரியம். மூன்று மாதக் குழந்தையாக இருந்தபோதே பாடல்களுக்கு இசைந்த கைகால் அசைவுகள் தோன்றின. மாதங்கள் செல்லச் செல்ல பாட்டில் தனி ஆர்வத்தை அவன் காட்டினான்; பாட்டுக் கேட்டபொழுதெல்லாம் அழுகையை நிறுத்தினான். வீணகானம் கேட்டபொழுதெல்லாம் தூங்காமல் அதனையே உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான். இன்னிசையிலே மகிழ்கிற தன்மை இவனிடத்தில் இயற்கை உணர்வாக அமைந்திருந்தது. குழந்தையை இசைக்கலைக்கே உரியவனாக்கிவிட வேண்டும் என உறவினரும் நண்பர்களும் கருதினார்கள். இந்தக் குழந்தையின் இயற்கை-ஆற்றலை எல்லாம் ஆரம்பத்திலிருந்தே இசைக் கலைக்குத் திருப்பி விடுவதா? அல்லது, இதரப் பாடங்களோடு இசைப் பயிற்சியையும் ஒரு பாடமாக்கிக் கல்வியை அளிப்பதா?—என்ற பிரச்னை எழுந்தது.

குழந்தையின் கல்வியைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது இத்தகைய பிரச்னைகள் எழுதல் இயல்பன்றோ? மூன்று வயதுச் சிறுவன் மரக்கட்டைகளை வைத்து நேர்த்தியாக வீடுகட்டுவதைப் பார்ப்பவர்கள் 'இவன் பெரியவனாகும் பொழுது என்ஜினியர் ஆவான்' என்பார்கள். குழந்தைகள்

இளம்பிராயத்தில் வெளியிடுகிற திராணிகளைக் கண்டு, இவன் இந்தத் துறையிலும் அவன் அந்தத் துறையிலும் தேர்ச்சி பெறுவான் என்று பலரும் நிமித்திகம் உரைப் பதைக் கேள்விப்படுகிறோம். இவனிடத்தில் இசைக் கலை யிலே சிறந்த நாட்டம் இருக்கிறது. அவனிடத்தில் சித்தி ரக் கலையில் சிறந்த திராணிகள் புலப்படுகின்றன என்றெல் லாம் கூறுகிறார்கள். குழந்தையின் இயற்கை விருப்பங் களைக் கவனித்து அதற்குரிய கல்வித்திட்டத்தை வகுப் பது அவசியந்தான். எனினும், குழந்தையின் இயற்கை விருப்பங்களை எல்லாம், வாழ்க்கை ஆரம்பமாகிற காலத் தில் தோன்றுகிற வடிவங்களிலே நிறைவேற்றி வைப்பது குழந்தைக்கும் நன்மையாக இராது; குடும்பத்திற்கும் நன்மை விளைக்காது. குழந்தையின் விருப்பங்களை இடம் பொருள்களுக்கு ஏற்றவாறு காலப் போக்கு, நாக ரிகப் போக்கு, சமூகப் பண்பு முதலியவற்றிற்குப் பொருந்துகிறவாறு மாற்றி அமைப்பது அவசியம். குழந்தை இயல்பாக ஆசைப்படுகிற துறைகளில் சமூகம் இடங்கொடுக்கிற அளவிற்குக் கல்வியைத் திருப்பிவிட வேண்டும். அப்பொழுது தான் கல்வி கசப்பாயிராது; தித்திக்கும் சுவைக் கரும்பாய் இருக்கும்.

குழந்தை கரியை எடுத்துத் தரையில் கிறுக்குகிறது; சுண்ணம்புக் கட்டியை எடுத்துத் தரையில் எழுதுகிறது. எழுதிய படத்தைச் சுட்டிக்காட்டி, "பாப்பா, இது என்ன?" என்று ஒருவன் கேட்டால், "வீடு! யானை,! பூனை!" என்றெல்லாம் எழுதிய கீறல்களைக் குழந்தை சுட்டிக் காட்டிக் குறிப்பிடுகிறது. கரியாலும் சுண்ணம்புக் கட்டியாலும் தரையில் கிறுக்குதல் தவறென்று குழந்தைக்குத் தெரியாது. கண்ணால் பார்க்கிற பொருள் களைத் தரையில் எழுதவேண்டும் என்பது குழந்தையிடத் தில் அமைந்த இயல்பான விருப்பம். இந்த இயல்பான விருப்பத்தின் ஆரம்ப முயற்சி, கரியாலும் சுண்ணம்புக் கட்டியாலும் தரையில் கிறுக்கும் செயலாக வெளிப்படு கிறது. இதைப் பார்க்கிற பெற்றோர், "ஆ ஆ! நமது மைந்தன் இப்பொழுதே படம் எழுதத் தொடங்கி

விட்டானே!'' என்று குழந்தையைப் புகழ்ந்து கொண்டாடி அதன் இயற்கை விருப்பப்படியே தரையில் கிறுக்க விட்டு விட வேண்டுமா? இன்றேல், ''ஏன் இப்படி எல்லாம் தரையைப் பாழாக்குகிறாய்?'' என்று கடிந்து அதன் முயற்சியைத் தடுக்க வேண்டுமா? இவ்விரண்டும் இன்றேல், ''பைத்தியமே, உனக்குப் படம் எழுதத் தெரியவில்லையே!'' என்று சொல்லிக் குழந்தையின் கையில் இருக்கும் கரி, சுண்ணாம்புக்கட்டியை வெடுக்கென்று பறித்து, அதை அழ வைக்க வேண்டுமா?

'' அறையும் ஆடு அரங்கும் மடப் பிள்ளைகள்
தரையில் கீறிடில் தச்சரும் காய்வரே?'' (கம்பர்)

[ஆடு அரங்கு - நடன சாலை. மடப்பிள்ளைகள் - அறிவில்லாத பிள்ளைகள், தச்சர் - சிற்ப நூலில் தேர்ந்தவர்கள். காய்வரோ - கோபப்படுவார்களா.]

சிற்பக் கலையில் தேர்ந்தவர்கள் கோபித்துக் கொள்ளாவிட்டாலும், வீட்டிலிருக்கும் பெரியவர்கள் கோபித்துக் கொள்வார்கள். குழந்தையின் இயற்கை விருப்பம் கரிக்கோடுகளாகவும் சுண்ணாம்புக் கிறுக்கல்களாகவும் வெளிப்படுவதை ஜனசமூகம் ஒப்புக்கொள்வதில்லை. ஆகையால், குழந்தையிடம் காணப்படும் இந்த இயற்கை விருப்பத்தைக் காகிதங்களிலே பென்ஸிலால் எழுதவும், சிலேட்டில் பலப்பத்தால் வரையவும், வர்ணங்களால் காகிதத்தில் படங்களாக வரையவும் பெற்றோர் திருப்பி விடலாமல்லவா? குழந்தையின் செயல் போக்குகளுக்குத் தேவையான ஆற்றலை உண்டுபண்ணுகிற இயற்கைத் திராணிகளை அடக்கி அழிப்பது கல்வியாகாது. அந்தத் திராணிகள் வெளிப்படுமாறு வழிவகைகளை வகுப்பதே கல்வி. இத்தகைய இயற்கைத் திராணிகள் குழந்தைதோறும் வேற்றுமைப்படுவன; காலந்தோறும் மாறி வருவன; கல்வியின் குறிக்கோள் முழுவதும் இந்த இயற்கைத் திராணிகளைச் சீரான நெறியில் பயன்படத் திருப்புவதிலே அமையவேண்டும்.

விரும்புவன அனைத்தையும் அளிக்கிற அருள், அன்பின் உபலக்ஷணமாகாது. விளைவின் நன்மை தீமைகளை

உணராத விருப்பங்களும் உள்ளன. விளைவின் நன்மை தீமைகளை உணர்கிற விருப்பங்களும் உள்ளன. அறியாமையால் ஏற்படுகிற விருப்பங்கள் விளைவைக் கருதாவாம். அன்பு வடிவினராகிய கடவுள் தமது அன்பரின் விருப்பங்களை அவரவர்க்கமைந்த பரிபாக நிலைக்கு ஏற்றவாறே அளிப்பவர். நஞ்சுடைய நாகத்தைப் பிடித்துத் தன் கையில் தரவேண்டும் என்று குழந்தை விரும்புமாயின், பெற்றோர் இந்த விருப்பத்திற்கு உடன்படுவரோ? மெழுகால் அல்லது மண்ணால் செய்த நாகத்தை விலைக்கு வாங்கி அளித்துத் தம் குழந்தையின் தற்காலிகமான விருப்பத்தை நியைவேற்றப் பெற்றோர் முயலுவர். விருப்பங்களிற் பல தற்காலிகமான திருப்தியை அளிப்பவை. நெடுங்காலம் நிலைத்திருக்கும் திருப்தியை விளைக்கிற விருப்பங்களும் உள்ளன. பெற்றோரைப் போல் மக்களிடத்தில் அன்பு பாராட்டுபவர் எவரேனும் மண்ணுலகத்தில் உண்டோ? பெற்றோரின் அன்பு, நிலையான திருப்தியை விளைக்கிற விருப்பங்களை மக்களிடத்தில் கண்டால் அவற்றையே நிறைவேற்றி வைக்க முயலும்; தற்காலிகமான திருப்தியைத் தருகிற விருப்பங்களாக இருந்தால், பெற்றோரின் அன்பு அவற்றை நிறைவேற்ற உடன்படாது.

பெற்றோரின் அன்பு அறியாமையால் களங்கம் அடையலாம். பரம்பரையாக வரும் நம்பிக்கைகள் பெற்றோரின் அன்பைக் கறைப்படுத்தலாம். இரவில் குழந்தை பசிதீர உண்டபிறகு 'வாழைப்பழம் வேண்டும்' என்று அழுகிறது. குழந்தையின் விருப்பம் தற்காலிகமான திருப்தியை நாடுகிறது. இந்த விருப்பத்தால் விளையும் தீமையைக் கருதித் தாய் குழந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற மறுக்கிறாள். குழந்தையின் பாட்டி தன் மகளிடம், "இரவிலே கேட்கிறான் குழந்தை; இல்லை என்றுசொல்லாதே. கொடு," என்று பரிந்து பேசுகிறாள். பேரனுக்காகப் பரிந்து பேசிய பாட்டி எடுத்துக்காட்டிய காரணம், "இரவிலே கேட்கிறான் குழந்தை" என்பதன்றோ? இதன் மறைவில் புதைந்து கிடக்கும் உண்மை யாது? 'இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பர் என்று

எண்ண இடமில்லையே; இரவில் உறங்கி மறுநாள் எழுகிறவர் யமனிடம் உயிர்ப்பிச்சை வாங்கி வருகிற பிச்சைக்காரர் அல்லரோ? நிலையில்லா வாழ்விலே இரவில் படுத்து உறங்கியவன் மறுநாள் உயிரோடு எழுந்திருப்பான் என்று உறுதியாகச் சொல்லமுடியுமா? படுத்து உறங்குமுன் குழந்தைக்கு ஒரு சிறு விருப்பம். இந்த விருப்பம் நிறைவேருமல் குழந்தை இறந்து விட்டால், இதைச் சொல்லிப் புலம்ப நேருமே? மேலும் நிறைவேருத ஆசைகள் பிறவிகளுக்குக் காரணமாகுமே'—என்றிவ்வாருன சிந்தனைகள் பல "இரவிலே கேட்கிருன் குழந்தை" என்ற பரிந்துரையின்கண் அடக்கம். இவ்வளவு பெரிய நியாயத்தை எதிர்த்து யாரால் பேசமுடியும்? தாய் குழந்தை வளர்ப்பில் கைக்கொண்ட விதிகளை மீறிக் குழந்தைக்கு வாழைப்பழம் கொடுக்கிருள். ஆசாபங்கத்தால் குழந்தை இறந்துவிட்டால்? பரம்பரையாக வரும் நம்பிக்கை குறுக்கிட்டது. தாயின் அன்பும் களங்கமுற்றது. தற்காலிகமான திருப்தியைத்தான் கறைப்பட்ட அன்பு தேடலாயிற்று.

மரபாக வருகிற நம்பிக்கையைப் போல் பெற்ருேரின் அன்பை மலினமாக்குகிற பிற ஏதுக்கள் எவை? குழந்தையின் விருப்பங்களில் எவற்றிற்கு உடன்படலாம்? எவற்றிற்கு உடன்படலாகாது? இக்கேள்விகளுக்கு எப்பொழுதாவது விடை காண முடியுமா? குழந்தைகளின் விருப்பங்களுக்கு விதிவிலக்குகளை அமைக்கும் வழிகாட்டி ஏதேனும் உண்டா?—என்ற பிரச்னையும் எழுகிறது. இந்தப் பிரச்னை முக்கியமானது. முதன்முதலில் எந்த முறையில் குழந்தையை வளர்க்க வேண்டும் என்பதைத் திட்டம் செய்துகொள்ளவேண்டும். கையாளப்போகிற முறையில் பூரண நம்பிக்கை வேண்டும். இவ்விரண்டும் இருந்தால் எத்தகைய பிரச்னையும் சிக்கலாகத் தோன்ருது. பிரச்னைகளுக்கு விடை காண நமது பகுத்தறிவும் துணையாக இருக்கிறது. சிந்திக்கவல்ல புத்தியும் நமக்கு உண்டு. கையாளப்போகிற முறையைத் திட்டம் செய்துகொண்டு, அந்தத் திட்டத்தில் முழு நம்பிக்கையோடு மக்களை வளர்ப்பதில்

கவனத்தைச் செலுத்துகிற பெற்றோர்களுக்குக் குழந்தைகளைப் பாரபக்ஷமின்றி ஆராயும் மனப்பான்மையும் தேவை. மக்களின் மனப்போக்குகளையும் செயல்போக்குகளையும் ஆராய்கிற மனப்பான்மையில், மரபாக வரும் நம்பிக்கைகளுக்கும், ஆள்தோறும் வேற்றுமைப்படும் மனக் கோணல்களுக்கும், ஏற்கெனவே பற்றிக்கொண்டிருக்கும் அபிப்பிராயங்களுக்கும் இடமிராது. குழந்தையிடம் "நீ இதைச் செய்யவேண்டும்" என்று சொல்லுமுன், "ஏன் செய்யவேண்டும்?" என்று ஒரு கேள்வியை எழுப்பி, நாமே இதற்கு விடைகாண முதலில் முயற்சி செய்யவேண்டும். "எல்லாரும் செய்கிறார்கள்; இது தான் வழக்கம்; இதுதான் பழக்கம்; இதுதான் குலாசாரம்; இதுதான் மதக்கோட்பாடு" என்றிவ்வாறே நாம் எழுப்பிய கேள்விக்குக் காரணங்களைக் காட்டுதல் தகாது. இந்தக் காரணங்களைக் காட்டி ஒரு குழந்தையை வற்புறுத்துவதும் தவறு. நமக்குச் சிறப்பாகத் தோன்றுகிற மதாசாரங்களும், குலாசாரங்களும், பழக்க வழக்கங்களும் நாம் வளர்க்கும் பிள்ளைகளுக்கும் சிறப்பாகத் தோன்ற வேண்டுமாயின், சிறந்தவைகளாக நமக்குத் தெரிந்த நியாயங்களை நாம் வளர்க்கும் மக்களும் உணருமாறு தெளிவாக்கவேண்டும். இதற்குப் பொறுமை வேண்டும். வகுக்கும் விதி விலக்குகளைப்பற்றித் தாமே ஆர அமரச் சிந்தித்து, அந்த விதிவிலக்குகளின்படியே தம்முடைய வாழ்க்கையையும் திருத்தி அமைத்துக்கொண்ட பின்னர், விதி விலக்குகளைக் காரணங்களோடு விளக்கிக் காட்டுகிற பெற்றோர்களிடம் குழந்தைகள் பாராட்டுகிற மதிப்புக்கு அளவே இராது.

குழந்தையின் வாயில் முதன்முதலில் 'அம்மா' என்ற சொல் பிறக்கிறது. இவ்வொரு சொல் குழந்தையின் வாயில் பிறக்குமுன், இதை எத்தனை தடவை பிறர் சொல்லக் கேட்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள். குழந்தைகளுக்குக் கல்வி புகட்டப் பொறுமையும் நீண்ட காலமும் தேவை. கல்வி மிகவும் மந்த கதி உடையது. கலைமகள் அன்ன நடை நடப்பவள்; பதறமாட்டாள்; பரபரப்பும்

படபடப்பும் அவளுடைய நடையின் இலக்கணம் அன்று. அவள் தன்னை நாடி வருகிறவரின் மனப்பாங்கு அறிந்து நடப்பவள்; என்றாலும், தன் அடியவருக்கு ஏற்றவாறு நடையை மாற்றி நடப்பவள்; விரைவாக நடக்கும் சிறுவனோடு விரைந்து நடப்பாள்; தயங்கி நடக்கும் சிறுவனிடம் தளர் நடையிட்டு வருவாள். கல்விக்கெல்லாம் இறைவியாகிய கலாதேவியின் நடைப்போக்கே இவ்வாறாக, குழந்தைகள் யாவரிடத்திலும் ஒரே அளவான வேகத்தில் கல்வியை எதிர்பார்ப்பது தகுமா? குழந்தைகள் கற்கும் முறைகளே வேற்றுமை உடையன. தவறுதல் என்பதே கல்வியின் உபலக்ஷணம். கற்கும்பொழுதும், கற்பதிலும், கற்றதிலும் தவறுதல்கள் ஏற்படலாம் தவறுதல்களின் மூலமாகவே கல்வி வளருகிறது. ஆரம்பத்திலேயே தவறுதல்களை எதிர்பார்க்கப் பழகிய குழந்தை தவறியதைச் சரிப்படுத்தப் பார்க்கும்; மேலும் தவறு நேரிடாமல் தடுக்கும் உபாயங்களை நாடும்; தவறுதல்களுக்கு இடமில்லாதவாறு செய்யத் திரும்பத் திரும்ப முயலும். தவறுதல்களுக்குப் பரிகார மார்க்கங்கள் உள்ளன. தவறுதல்களை எதிர்பார்க்கும் குணமும் அவற்றைச் சமாளிக்கும் அறிவும் ஏற்படும்பொழுது குழந்தை தன் வாழ்வில் தோல்வி கண்ட இடங்களை வெற்றிக்கொடி நாட்டும் இடங்களாக மாற்ற முயலும்; வெற்றிக்கொடி நாட்டும் இடந்தோறும் குழந்தைக்கு ஆக்கும் திறமையும் பெருகி வளரும்.

கற்பகம் ஒரு வயதும் மூன்று மாதமும் நிரம்பிய குழந்தை. அவள் நடக்கப் பழகியபொழுது அடிக்கடி விழுந்தாள். விழுந்தபொழுதெல்லாம் தலை நிமிர்ந்து எதிரில் இருக்கும் தாயைப் பார்த்தாள். தாயும் குறுஞ்சிரிப்போடு, "எழுந்திரு! திரும்பவும் நட! விழாமலே நடந்து விடுவாய்" என்பதைப் பலவிதமாக உணர்த்தி வந்தாள். கற்பகம் கீழே விழாமல் நடக்கப் பழகினாள். நடப்பதில் தனி உத்ஸாகம் தோன்றியது. எப்பொழுதாயினும் கீழே விழ நேர்ந்தால் தன்னைத் தூக்கிவிடச் சம்மதிக்க மாட்டாள். வாசலில் இருந்து வீட்டுக்குள் வரும் வழியில்

கால் துடைப்பதற்காக இட்டிருந்த நார் மெத்தையில் இடறி விழுந்தாள். "ஐயோ! குழந்தை விழுந்து விட்டதே" என்று வேலைக்காரன் ஓடிவந்து எடுத்தான். கற்பகத்திற்கு கோபம் பொங்கிவிட்டது. அவள் வேலைக் காரன் முகத்தைக் கிள்ளினுள்; அவன் கையிலிருந்து நழுவித் திரும்பவும் தெருவாசல் பக்கமாகச் சென்ருள்; வீட்டிற்குள் ஓட்டமாகத் திரும்பி வந்தாள்; நார்மெத்தை யில் இடறி விழுந்தாள். இந்த முறையும் வேலைக்காரன் கற்பகத்தை எடுத்தான்; கிள்ளுப்பட்டான். கற்பகம் அவனிடமிருந்து விடுதலை அடைந்து, முந்திச் செய்த வண்ணமே செய்தாள். மூன்ருவது முயற்சியிலும் விழுந் தாள். வேலைக்காரன் அவளைத் தூக்கி எடுத்தபொழுது அவளுக்கு அதைத் தாங்க முடியவில்லை. கோபம் பொங்கி விட்டது; கதறி அழுதாள். தாய் வந்தபொழுது, வேலைக் காரனைச் சுட்டிக்காட்டி அவளுக்குத் தெரிந்த பாஷை யிலே முறையிட்டாள். தாயார் "கற்பகத்தை எடுக்காதே" என்று கட்டளை இட்டபிறகுதான் அவளுடைய அழுகை நின்றது. திரும்பவும் முயற்சியைத் தொடர்ந்தாள். தன்னை இடறி விழச் செய்த நார்மெத்தையில் விழாமல் கால் வைத்து நடக்கப் பழகும் வரைக்கும் முயற்சியை விட வில்லை. விழாமல் முதல் தடவை வீட்டிற்குள் சென்றதும், திரும்பத் திரும்ப அப்படியே நடக்க முடியுமா என்று பத்துப் பதினைந்து முறை பரீக்ஷை பார்த்தாள். நார்மெத் தையில் இடறி விழாமல் நடக்கமுடியும் என்ற மன உறுதி ஏற்பட்ட பிறகுதான் அந்த முயற்சியை விடுத்துக் கவ னத்தை வேறு முகமாகத் திருப்பினுள். நடக்கத் தொடங் கியபொழுது வீழ்ச்சிகளை எதிர்பார்க்க வேண்டுமெனத் தாய் கற்பகத்தைப் பழக்கியிருந்தாள்; ஆகையால், நடக்கத் தொடங்கிய கற்பகம் தனக்கு நேர்ந்த தோல்வி களை வெற்றிக்கு ஆற்றலாக மாற்றிக் கொண்டாள்; தோல்வி நேர்ந்த பொழுதெல்லாம் வெற்றியை விரும் பினுள்; வெற்றி கிடைக்கும் என்று நம்பினுள்; முடிவு மட்டும் முயன்ருள்; வெற்றி பெற்ருள். கற்பகத்தைப் போன்ற குழந்தைகள் தாமாகவே தமது பிரச்னைகளுக்கு விடைகாண முயல்வார்கள். தம்முடைய பிரச்னைகளுக்கு

விடை காணப் பிறர் உதவியை நாடமாட்டார்கள். "விழுந்தாலும் விழுவேன்; பிறர் உதவி இல்லாமலே வெற்றியைப் பெறும் வரைக்கும் முயல்வேன்," என்பதே இத்தகைய குழந்தைகளில் வெளிப்படுகிற மனப்பான்மை

கல்வியை அவரவர்க்குப் பொருந்திய நடைப்போக்கிலே அளிக்க உதவி புரியவேண்டும் குழந்தைகளின் திராணிக்கு அதிகமாகக் கல்வியைச் சுமத்தலாகாது. கல்வி என்பது அவசரப்படவேண்டியதன்று; படிப்படியாகப் பயில்வதனால் வருவது; கல்வி என்னும் வாணிபத்தில் மூலதனமாக அமைவது திராணியே! திராணிகளை வாரி வாரிக் கல்வித்துறைகளில் கொட்டி வாணிபம் செய்தால், திறமைத் திரவியத்தை மலை அளவாகக் குவிக்க முடியும். தோல்வி அளிக்கும் துறைகளையெல்லாம் வெற்றி மாலை சூட்டும் பட்டணங்களாக மாற்றிவிடலாம். இவ்வுண்மையை அனுபவத்தில் உணர்கிற சிறுவர்களே வாழ்க்கையின் இன்ப நிலையங்களை ஆராயும் அவா உடையவர்கள். புதுப்புது வெற்றிமாலைகளைச் சூடிச்சூடி வீர ஸௌந்தரியத்திலே மகிழ்கிற மனத்திற்கே புதுப் புதுச் சாகசச் செயல்களைத் தேடிச்செல்லுகிற துணிவு பிறக்கும். மெச்சுகிற உரையையும், புகழ்கிற விழியின் நோக்கையும் விரும்பாதவர் உளரோ? வெற்றிமாலைகளைச் சூடி வெற்றித் திருமகட்கு உறைவிடமாய் விளங்கும் கலைவீரருக்கு மெச்சுகிற வாயுரையினும் இன்பம் தருவது எது? புகழ்கிற விழி நோக்கினும் இனியது எது? மற்றெதுவும் இல்லை எனலாம்.

கற்பது எதுவாயினும் என்ன? கல்வித் துறைகளில் இறங்குகிறவர்கள் செல்லுகிற பாதைகளின் லக்ஷணங்கள் ஒரே இயல்புடையவை; முடிவில் விளையும் இன்பங்களும் ஒரே தன்மையானவை. கானகத்திலே திரியும் வேடனாயினும், தலைநகரிலே கொலுவமரும் மன்னனாயினும், யாவருக்கும் கல்வித்துறைகள் பாரபக்ஷமில்லாத பொது இடங்களாக அமைவன. எனினும், ஏற்றத்தாழ்வுகள் ஒவ்வொருவரது வேற்றுமையான மனக் கட்டுக்கோப்புக்குத்தக்கவாறு அவரவர் பெறும் கல்வியில் தோன்றும்.

கிருஷ்ண மூர்த்தி, ராம மூர்த்தி என்னும் பெயர்களை உடையவர் பலர். கிருஷ்ணன், ராமன் என்ற பெயர்களின் முடிவிலே விளங்கும் "மூர்த்தி" என்ற சொல்லின் பொருளை சிந்தித்துப் பாருங்கள். 'மூர்த்தி - விசேஷம் பெரிதா? கீர்த்தி - விசேஷம் பெரிதா?' என்றொரு பழமொழியும் உண்டு. கீர்த்தி என்ற பதத்திற்குப் புகழ் என்பது பொருள் என்று யாவருக்கும் தெரியும். மூர்த்தி என்பதன் பொருள் என்ன? ஒருவனுடைய முகத்தில் கோபகுணம் தாண்டவமாடுவதைக் கண்டால், "இவன் உருத்திர மூர்த்தியின் அவதாரம்" என்கிறோம். "உருத்திர மூர்த்தியின் தலைமையான லக்ஷணம் கோபம். அந்தக் குணம் இவனிடத்திலே பரிபூரணமாக விளங்குகிறது; ஆகையால், இவன் அந்த மூர்த்தி - விசேஷத்தோடு தோன்றுகிறான்" என்பது தானே நமது கருத்து? ஜன நடமாட்டம் மிகுந்த ஒரு தெருவில் ஒரு பக்கமாக விலகி நின்று, போகிறவர்களையும் வருகிறவர்களையும் கவனித்துப் பாருங்கள். அணிந்துள்ள அணிகலன்களிலே, உடுத்த உடையிலே, நடக்கிற நடையிலே, முகபாவனையிலே, பேச்சிலே, சிரிப்பிலே, குரலிலே, தத்தம் தனி அமைப்பிலே தெருவில் நடக்கிறவர்கள் சுமந்து செல்லும் மூர்த்தி - விசேஷங்களைப் பார்க்கலாம். ஆளுக்கொரு மூர்த்தி - விசேஷம்! ஒருவனுடைய மூர்த்தி - விசேஷம் மற்றொருவனுடைய மூர்த்தி - விசேஷத்தைப் போன்றதன்று. ஆளுக்கு ஆள் மூர்த்தி - விசேஷம் வேற்றுமைப் படுகிறது. ஒரே குடும்பத்தில் பிறந்த இரட்டைப் பிள்ளைகளாயினும், இருவரிடத்திலும் தனித்தனி மூர்த்தி - விசேஷங்கள் காணப்படுகின்றன. உலகத்தில் பிறக்கிற குழந்தைகள் யாவரும் தனித்தனி மூர்த்தி - விசேஷங்களோடு தோன்றுகிறார்கள். ஆள்தோறும் மூர்த்தி விசேஷங்கள் வேற்றுமைப்படக் காரணம் என்ன? உலகில் பிறக்கிற எந்த உயிர்நிலையும் அதற்குரிய கடமையைச் செய்வதற்கே தோன்றுகிறது. உலகில் செய்துமுடிக்க வேண்டிய கடமைக்கு ஏற்றவாறு ஆள் தோறும் மூர்த்தி - விசேஷம் வேற்றுமைப்பட்டு அமைகிறது. ஆகையால், ஒருவனிடத்தில் இயல்பாக அமைந்

துள்ள மூர்த்தி - விசேஷத்திற்குக் குறிப்பிட்ட ஒரு நோக்கம் இருப்பதைப் பார்க்கிறோம். புறம்பான மூர்த்தி-விசேஷத்தின் சாயலாகவே ஒரு ஆளின் [1] தன்மயங்கள் அமைகின்றன. ஒருவனது இயல்பான மூர்த்தி-விசேஷம் பல ஏதுக்களால் வெளிப்படாமல் மறைந்து நிற்கலாம். ஒருவனிடத்தில் பல தன்மயங்கள் உருக்கொண்டும் இருக்கலாம். பல ஏதுக்களால் எல்லாத் தன்மயங்களும் மூர்த்தி - விசேஷம் பெறுமல் உள்ளே பதுங்கி உறங்கிக் கிடக்கும். சில தருணங்களில், ஒன்று அல்லது இரண்டு தன்மயங்கள் மூர்த்தி - விசேஷம் பெறலாம். ஒருவனது கடமைகள் சரிவர நிறைவேறுமல் தடைப்படலாம். கல்வியின் நோக்கங்கள் தாறுமாருகச் செல்லும் பொழுது, குழந்தையின் மூர்த்தி - விசேஷங்களும் தன்மயங்களும் வெளிப்படாமல் தடைப்படும். அடிமைப் படுத்துகிற சமூகக் கட்டுப்பாடுகளாலும் மதக்கொள்கைகளாலும் ஒருவனுடைய மனப்போக்கிற்கு அடிமைத்தனம் ஏற்படும் பொழுது, அவனுடைய தன்மயத்திக்குக் கேடு சம்பவிக்கலாம். ஆகையால், குழந்தைகளுக்கு அளிக்கிற கல்வி தன்மயத்தைத் தெளிவாக்கக்கூடிய முறையிலே அமைய வேண்டும். ஒரு ஜனசமூகம் அதன் ஒவ்வொரு அங்கத்தினனிடத்திலும் தனக்கு வரவேண்டிய கடனை எதிர்பார்க்கிறது. அதே சமூகம் ஒருவரிடத்தில் தனக்குள்ள உரிமையை வற்புறுத்துகிறது. இங்ஙனம் சமூகம் ஒரு புறம் நட்க்ஷத்திர ஐயனைப்போல் நின்று நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஒருவனுடைய மூர்த்தி - விசேஷமும் அதற்குரிய தன்மயமும் தனக்கு அமைந்த இயல்பிலே வெளிப்பட விரும்புகிறது. ஜன சமூகத்திற்கும் மூர்த்தி-விசேஷத்திற்கும் இடையிலே இருதலைக் கொள்ளி எறும்புபோல் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கிற ஒருவனுக்குக் கல்வி செய்யவேண்டிய உதவி யாதெனில், சமூகத்திற்குச் செலுத்த வேண்டிய கடமை உரிமை

1. **தன்மயம்**—வெளித்தோற்றத்தில் காண்கிற மூர்த்தி - விசேஷத்திற்குப் பொருத்தமாக ஒருவருக்குள் அமைகிற குணத்தொகுதியை, தன்மயம் என்னும் மொழியால் குறிப்பிடுகிறோம். இதனை உளநூல் வல்லார் **ஆங்கிலத்தில்** (*Personality*) என்பர்.

களையும், தன் மூர்த்தி - விசேஷம் விரும்புகிற விருப்பத்தையும், துலாக்கோல் போல நடுநிலையாக மதிப்பிட்டு, இரு கக்ஷிக்கும் திருப்தி ஏற்படக்கூடிய முறையிலே வினைகளை ஆற்றவல்ல விவேகத்தை அளிப்பதேயாகும். இந்த விவேகம் எவனிடத்தில் விளங்குகிறதோ அவனே முழு மனவளர்ச்சி அடைந்தவன்.

ஒருவனிடத்தில் சமூகம் விரும்புவது ஒருவிதமாக இருக்கும். அவனுடைய மூர்த்தி - விசேஷம் விரும்புவது மற்றொரு விதமாக இருக்கும். சமூகத்தின் விருப்பமும், ஒரு ஆளின் சுயவிருப்பமும் எப்பொழுதுமே முரணின்றிப் பொருந்தா. பொருந்தாவிடத்துப் போராட்டம் தோன்றும். குழந்தையின் இயல்பான அமைப்பு ஒரு விதமாக இருக்கும்; அவன் செய்யவேண்டியதோ மற்றொரு விதமாக இருக்கும். சுய விருப்பம், இயல்பான அமைப்பு ஆகிய இரண்டும் ஒன்றை ஒன்று எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும். இதனால், குழந்தையின் உள்ளத்தில் செயல்-தெளிவு தோன்றாது. குழந்தையின் பெற்றோர் அவனிடம் ஒன்றை எதிர்பார்ப்பார்கள். அவன் பிறக்க இடந்தந்த சமூகமோ மற்றொன்றை அவனிடம் எதிர்பார்க்கும். பெற்றோர் எதிர்பார்ப்பதைச் செய்வதா? சமூகம் எதிர்பார்ப்பதைச் செய்வதா?—என்று அவன் தெளியமுடியாமல் மயங்குவான். ஒரு குழந்தைக்கு இத்தகைய போராட்டங்கள் சின்னஞ் சிறு வயதிலேயே ஏற்படுகின்றன. இங்ஙனம் போராட்டம் ஏற்படும் பொழுது குழந்தை தெரிந்துகொள்ளும் கல்விக்கும் செயல்-போக்கிற்கும் ஏற்றவிதமாக அவனுடைய மூர்த்தி-விசேஷமும், தன்மயமும் உருவாகின்றன.

ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனித் திராணி எல்லைத் திட்டம் உண்டு. இந்தத் திராணி எல்லைத் திட்டம் வயதுக்கு வயது வேற்றுமைப்படும். குழந்தையின் திராணிக்கு மிஞ்சி அவனிடம் எதிர்பார்த்தால், அவன் தைரியத்தைக் கைசோர விட்டு முயற்சியையும் தவிர்ப்பான். இந்நிலையில் மேலும் வற்புறுத்தினால், அவனுடைய மகிழ்ச்சி கெடும்; வாழ்க்கையும் கசப்பாகும். அவன்

முழுத்தோல்விக்கே தலைவாயிலைத் திறப்பான். இங்ஙனம் செய்யாவிட்டால், சமூகத்தின் சட்டங்கள் அனைத்தையும் மீறி நடப்பான். குழந்தையின் திராணிகளை மதிப்பிட்டு அளந்த அளவுப்படியே கல்வியை வகுத்துத் திராணிகளை உபயோகிக்க வசதிகளையும் அளித்தால், மகிழ்ச்சி அடைவான். அப்பொழுது திருப்தி ஏற்படும்; முயற்சி பெருகும்; வெற்றி சிறக்கும்; குழந்தையும் தன் வளர்ச்சியை உணர்வான்; அப்பொழுது தைரியம் பிறக்கும்; திராணிகள் யாவும் திறமைகளாக வெளிப் படும். அவன் மேலும் மேலும் பெரிய காரியங்களைச் செய்ய முயலுவான். வாழ்க்கை இன்பநிலையமாகும். ஆகையால், குழந்தைகளுக்குப் பொருத்தமான கல்வித் திட்டங்களை வகுத்தல் என்பது மிகப்பெரிய பிரச்னைகளை உடையது.

செல்லுகிற ரூபாய்க்குப் பதினாறு அணா மதிப்பு. ஆகையால், செல்லாத ரூபாயை விட மிகவும் விலை உயர்ந் தது என்று முந்தானையில் முடிந்து இடுப்பில் சொருகுவது போல், குழந்தைகளிடம் அன்பு பாராட்டுதல் தவறாகும். குழந்தைகளைக் குழந்தைகளாகவே கருதி அன்பு செலுத்த வேண்டும். “என் குழந்தையின் திறமையே திறமை! என் பேரனின் விவேகமே விவேகம்! இவன் புத்தியே புத்தி” எனவும், குழந்தைகளிடம் வெளிப் படுகிற திறமை திராணி புத்தித்வங்களைக் கண்டு பூரித்து “என் கண்ணே! கட்டிக் கரும்பே! சொக்கத் தங்கமே!” எனப் புகழ்ந்து கொண்டாடி அன்பு பாராட்டுவதும் வழுவாகும். “வகுப்பிலே முதன்மையாகத் தேறிவிட்டான் என் குழந்தை! இவனை ஒப்பார் யாரும் இல்லை!” என்று சொல்லிக் குழந்தைகளிடத்தில் அன்பு பாராட்டுகிற பல பெற்றோர், நாளடைவில் தம் குழந்தை பெரியவனாகி இவ்வளவு ரூபாய் சம்பாதிப்பான் எனவும், தமது பாரத் தைத் தாங்குவான் எனவும், தமது கவலைகளைத் தீர்ப் பான் எனவும் சிந்தித்துக் குழந்தையின் செவிகளிற் படுமாறு பேசவும் தலைப்படுவார்கள். “என் மகன் எம்.ஏ. பட்டத்திற்குப் படிக்கிறான்; முதன்மையாகத் தேறு

வான். நானும் என் வேலையிலிருந்து நீங்கிவிடுவேன். என் குடும்பத்தை இவன் தாங்குவான்'' என்பன போன்ற சிந்தனைகள் தந்தையின் உள்ளத்தில் குடிபுகும். "என் கணவரால் அகப்படாத வாழ்க்கை வசதிகளை எல்லாம் என் பிள்ளை தருவான்'' என்று தாயும் சிந்தனை செய்வாள். பெற்றோர் இத்தகைய சிந்தனை களுக்கு இடங்கொடுப்பது தகுதி அன்று. தம்மிடம் இத்தகைய சிந்தனை இருப்பதாகப் பெற்றோர் எவரும் ஒப்புக்கொள்ளார். என்றாலும், மக்களைப் பற்றிப் பேசத் தருணம் வாய்க்கும் பொழுதெல்லாம் தங்கள் வருங்கால நம்பிக்கையைச் சுட்டி உணர்த்திக்கொண்டே இருப்பார் கள். பெற்றோர் குழந்தைகளிடத்தில் பாராட்டுகிற அன்பு தவறான நெறிகளிற் செல்லமுடியும்; பல தீமைகளையும் விளைக்க முடியும். சரியான முறையில் பாராட்டுகிற அன்பு ஒன்றுதான் மகனைச் சான்றோனாகச் செய்யும். மக்களி டத்திலிருந்து எவ்விதப் பிரதி உபகாரத்தையும் எதிர் பாராமல், "என் மகன்—அல்லது என் மகள்—உலகத் திற்குப் பயன்படுகிற உத்தம நகரத்தானாய்—அல்லது நகரத்தினளாய்—விளங்க வேண்டும்'' எனக் கருதி நேசிக் கிற அன்பு ஒன்றுதான் களங்கமற்றுத் தலைசிறந்து விளங்கும். எப்பொழுதாயினும் பெற்றோர் "என் பிள்ளை இவ்வளவு சம்பாதிக்கிறான்; எனக்கு உதவி ஒன்றும் செய்கிறானில்லை'' என்று பேசக்கேட்டால், அன்னவர் தம் மக்களை மிகவும் தவறான முறையிலே வளர்த்தனர் என்றே கருதவேண்டும். அவர்களுடைய அன்புக்குக் காரணம்: ரூபாய்க்குப் பதினாறு அணா!

இவ்விஷயமாகச் சிந்திக்கும் பொழுது எழுகிற பிரச்னைகளைப் பாருங்கள். தந்தை தன் மகனை எப்படி நேசிக்கவேண்டும்? மகளை எப்படி நேசிக்க வேண்டும்? தாய் தன்மகளை எப்படி நேசிக்க வேண்டும்? மகனை எப்படி நேசிக்க வேண்டும்? சகோதர சகோதரிகளுக்குள்ளே களங்கமற்ற அன்பு பெருகி வருவதற்குப் பெற்றோர் கையாளவேண்டிய முறைகள் எவை? பாட்டன் பாட்டியார், மாமன் மாமியார், சிற்றப்பன் பெரியப்பன் முதலிய

உறவினருக்குக் குழந்தைகளோடு எத்தகைய தொடர்பு எவ்வளவிலே இருக்கவேண்டும்? குழந்தைகளுக்குப் பிறரோடு அமையவேண்டிய உறவின் எல்லைகள் எவை?— என்பன போன்ற எண்ணிறந்த பிரச்னைகள் உள்ளன. இவை அனைத்திற்கும் தெளிவான விடை காணவேண்டும்.

எல்லாப் பிரச்னைகளுக்கும் தலையானது ஒன்றுஉண்டு. பெற்றோர் குழந்தை வேண்டும் என்று விரும்புகிறார்களா? எத்தனை குழந்தைகள் வேண்டும் என்று விரும்புகிறார்கள்? எப்பொழுது வேண்டும் என்று விரும்புகிறார்கள்? எத்தனை பிள்ளைகள் வேண்டும் என்று விரும்புகிறார்கள்? பிள்ளை வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எம்மட்டும் அதற்காகத் தங்களை ஆயத்தம் செய்து கொள்கிறார்கள்? தாய் தந்தையர் பிறக்கப் போகிற குழந்தைக்காக எம்மட்டும் தம்மைத் தியாகம் செய்யக்கூடியவர்கள்? இந்தப் பிரச்னைகளின் விடைகள் பெற்றோருக்கும் பிறருக்கும், பிற்காலத்தில் மக்களுக்கும் அவர்களோடு தொடர்புற இருப்பவர்களுக்கும் ஏற்படப்போகிற நட்பு-இயல்புகளை விளக்கப் பெரிதும் பயன்படுவன. இவை, மக்களை வளர்க்கவேண்டிய முறைகளையும் தெளிவாக்கும்.

வெளியே பார்ப்பதற்கு வெள்ளி போலத் தோன்றுகிறது; ஆகையால் ரூபா. வெளிப் பார்வைக்குத் தங்கம் போலத் துலங்குகிறது; ஆகையால் (பவுன்) ஸவரன்; உரைத்துப் பார்த்தால் மாற்றுத் தெரியும். பிள்ளை வளர்ப்பு முறையில், வெளியே தோன்றும் குழந்தைக்குள்ளே ஒரு ஆள் உருவாகி வருகிறது. பெற்றோர்க்கும் மற்றோர்க்கும்—ஏன், அந்தக் குழந்தைக்கே தெரியாமல் உண்மைவடிவம் உள்ளே மறைந்து கிடக்கிறது இதுவே உண்மைக் குழந்தை. மன அயர்வு நிலையில் பதுங்கிக் கிடக்கும் இந்தக் குழந்தையை அறிவது எப்படி? வளர்ப்பது எப்படி? எத்தனை பெற்றோருக்கு இந்தக் குழந்தையைப் பற்றித் தெரியும்? உரைத்துப்பார்த்தாலன்றோ மாற்றுத் தெரியும்? மாற்றுத் தெரிந்து குழந்தையை மதிப்பிடப் பெற்றோருக்கு ஆசை உண்டா? பொறுமைதான் உண்டா?

இந்த முன்னுரையில் நாம் சிந்திக்கப் போகும் விஷயங்களை எல்லாம் தொட்டுவிட்டதாகக் கருதலாகாது. தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் எவ்வளவு பெரியது என்று இதுவரைக்கும் கூறியதைப்பார்க்கும் பொழுதே விளங்க வில்லையா? இதை உணர்த்துவதுதான் இந்த முன்னுரையின் நோக்கம். நோக்கம் நிறைவேறியது என்ற கருத்தால், இனி நூலிற் புகுவதே தகுதி.

2. குழந்தையை உருவாக்கும் நியதிகள்

I. வாழை அடி வாழை

கருதரிய பெருங் குணத்தோர் இவர் முதல்வோர்
கணக்கு இறந்தோர் ... ...

(கம்பர் - குலமுறை.)

குலப்பெருமை

விசுவாமித்திரர் இராம லக்ஷ்மணர்களோடு மிதிலா நகரை அடைந்தார். ஜனகன் இயற்றி வந்த வேள்வியும் முடிவுற்றது. அவன் தன் கொலு மண்டபத்தை அடைந்தான். முனிவரும் அரசிளம் குமரரோடு கொலு மண்டபத்தில் பிரவேசித்தார். ஜனகன் அவர்களை வரவேற்று உபசரித்துத் தக்க ஆசனங்களில் அமரச் செய்தான். இராம லக்ஷ்மணர்கள் இருவரும் முனிவரின் இரு பக்கங்களிலும் அமர்ந்தார்கள். தசரத மைந்தரின் வீரத் திருவழகு ஜனகனைக் கவர்ந்தது. உடனே ஜனகன் முனிவரிடம், "யார் இவர்கள்? அடிகளே உரைத்தருள்க!" என்று கேட்டான். அதற்கு விசுவாமித்திரர், "மாட்சிமை தங்கிய தசரத சக்கரவர்த்தியின் புதல்வர்கள்!" என்று பெருமையுடன் இளைஞர் இருவரையும் அறிமுகம் செய்து வைத்தார். தம்மோடு அழைத்து வந்திருந்த இளைஞர்கள் ஜனகனுக்கு விருந்தினராகக் கூடிய மாட்சிமை உடையவர்கள் எனவும், தாம் சீரும் சிறப்புமில்லாத அற்பரை அழைத்துவரவில்லை எனவும் சுட்டி உணர்த்தக் கருதியவர் போல, இளைஞர்களின் குலப் பெருமையைச் சொல்லத் தொடங்கினர்: "இவர்கள் குலம், 'ஆதித்தன் குலம்!' என்று மேலும் தம் பெருமைக் குரலை உயர்த்தினர். 'இந்தக் குலத்தின் முதல்வனாகிய மனுவினை அறியாதவர் யார்?' என்னும் கேள்வியோடு தொடங்கிய விசுவாமித்திரர் எடுத்துக் காட்டிய வமிசாவளி படிப் படியாக வளர்ந்து ஓங்கியது. வாழை அடி வாழையாக வந்த மரபினர்தாம் இவர்கள் என்று முனிவர் எடுத்துக்

காட்டினார்; "இவர் தம் முன்னோர் மதிப்பிடுவதற்கரிய நற்குணத்தினர்: அவர்கள் எண்ணிக்கையிலும் கணக் கிறந்தவர்கள்" என்று பொதுப்படச் சொல்லிய பின்பு, தனிப் பெருமை வாய்ந்த சிலரைச் சுட்டிக் கடைசியில் தசரதன் பெருமையைச் சொல்லி முடித்தார்.

"நான் யார் என்று தெரியுமா? பார்த்துப் பேசு! மாயாண்டித் தேவன் குலத்திலே பிறந்தவன் என்பது ஞாபகம் இருக்கட்டும்!" என்று சொல்பவனும் தன் குலப் பெருமையைத்தான் பேசுகிறான். ஆனால், தன் குலத்தவரது மற்றொரு வகையான பெருமையை அன்றோ இவன் குறிப்பிடுகிறான்? "உலகம் புகழும் மரகதவல்லின் பேரகத்தி நான்!" எனப் பொது மகளிர் குலத்தில் பிறந்த ஒருத்தி தன் குலப் பெருமையைப் பேசலாம். உலகில் மனிதர் தம் குலப் பெருமையைப் பேசும் முறையே தனிச் சுவை பொருந்தியது. குலப் பெருமை பேசுவோர் தமது முன்னோரை நமக்குப் படம் பிடித்துக் காட்டுபவராவர். உலகில் தோன்றும் உயிர்கள் யாவும் வாழை அடி வாழையாக வருகிற மரபை உடையன. உயிர்களின் உடலமைப்பும் தன்மைகளும் இந்த மரபு - நியதிகளைப் பெரும்பாலும் ஆதாரமாகக் கொண்டவை.

நூலைப்போல் சேலை

நாம் நன்கு பழகிய ஒருத்தியின் மகளோடு பின்பு ஒரு தருணம் நெருங்கிப் பழகுவோமாயின், தாயின் பல குணங்களை மகளிடத்திலும் காண்போம். அப்பொழுது, "தாயைப் போல் பிள்ளை: நூலைப் போல் சேலை" என்னும் பழமொழியைச் சொல்லி, மகளின் தன்மை இயல்புகளைச் சுட்டிப் பாராட்டுகிறோம். கோமதிக்கு மைந்தர் இருவர்; மகளிர் இருவர். மைந்தர் இருவரும் தந்தையின் சாயல் எனினும் ஒருவனது முகத் தோற்றத்தில் தாயின் மூக்கும் விழியும் இதழும் சிரிப்பும் நெற்றியும் தெளிவாக இருந்தன; கை கால் முதலிய உறுப்புக்களின் அமைப்பிலே இவன் தகப்பனைப்

போன்றவன். தந்தையின் குணங்கள் பல இவனிடத்திலே தோன்றின ; தாயின் குணங்களிலும் சில காணலாயின. பெண்கள் இருவருள் ஒருத்தி தாய் தந்தையரைப் போன்றிராமல், தன் பாட்டனாரின் நிறத்தைக் கொண்டிருந்தாள் ; உயரத்திலும் தன் பாட்டியாரைப் போன்றவள். இவளுடைய பேச்சிலும் குணத்திலும் தந்தையின் சாயல் பெரிதும் விளங்கியது. இவளது திறமை பெரிதும் தாய்க்கு ஒப்பாகவே இருந்தது. கணவன் இறந்த பிறகு கோமதி உணவு - விடுதிகளில் தோசைக்கும் இட்டலிக்கும் மாவு அரைத்து வாழ்க்கை நடத்தியவள். மங்கைப் பருவத்தில் தன் கற்பு ஒழுக்கத்தில் தவறியவள். இவளுடைய தாயும் கற்பு ஒழுக்கத்தைக் காக்கவில்லை என்றே ஊரார் கூறிவந்தனர். தாயிடத்தில் இருந்த இக்குறைகள் கோமதியிடத்திலும் இருந்தன. தாய்க்கு இனிய குரல் உண்டு. கேள்வி ஞானத்தால் இவள் பாடுவதைக் கேட்பவர்கள் வியந்து போற்றுவார்கள். கோமதி இடத்திலும் இந்தத் திறமை சிறந்து விளங்கியது.

கோமதியின் பெண்கள் இருவருள் மூத்தவள் இசைக் கலை பயின்று பரீக்ஷைகளில் தேறிப் பல வீடுகளில் பாட்டுக் கற்பித்துத் தன் கணவனுடைய தாறுமாறான பழக்க வழக்கத்தால் செலவான பொருள் நஷ்டத்தை ஈடு செய்துவந்தாள். துணிச்சலாகச் சோரம் போகும் குணம் தாயிடத்தில் இருந்தது. இது மூத்த மகளிடம் வெளிப்படையாகத் தோன்றவில்லை. கோமதியின் இரண்டாவது மகளுக்குக் கற்பு என்பதன் பொருளே தெரியாது. பருத்த உடலுடைய இந்தப் பெண் தாயின் வடிவாகவே இருந்தாள். இவளுக்கும் கேள்வி ஞானத்தால் இசைபாடும் திறமை ஏற்றமாகவே இருந்தது.

கோமதியின் கணவர் பல நூல்களைப் படிப்பதில் அவா உடையவர். இவர் நவீன முறையில் புனைக் கதை நூல் ஒன்றை எழுதினர். அதனை வெளியிட எவரும் உதவி புரியவில்லை. கோமதியின் கணவர் கவர்ச்சியாகப் பேசும் திறமை உடையவர்; வியாபாரத் திறமையும் பெற்றவர் ; ஒரு மருந்துக் கடையில் இவர் வேலை பார்த்து

வந்தார். பெரும் பொருளைக் கொள்ளை இட்ட குற்றம் தம்மீது வரும் என்று அஞ்சிய காலத்தில் நஞ்சு தின்று இறந்ததாக ஊரில் ஒரு வதந்தியும் உண்டு. கோமதியின் இரண்டாவது மகளிடம் கதை எழுதும் ஆற்றல் ஓரளவு வெளிப்பட்டது. பாட்டு இயற்றும் திறமை கோமதியின் தந்தையிடம் ஓரளவுக்கு விளங்கியது. இத்திறன் இரண்டாவது பெண்ணிடமும் தெளிவாகத் தோன்றியது. இவள் எழுதிய சில நூல்களும் பாடல்களும் வெளி வந்துள்ளன. கோமதிக்குச் சமையல் செய்வதிலே திறமை அதிகம் உண்டு. அதிகாலையிலிருந்து இரவு பதினோரு மணி வரைக்கும் சலிப்பில்லாமல் சமைத்துப் போடுவாள். இந்தக் குணம் மைந்தர் இருவரிடத்திலும் தோன்றின. மைந்தர் இருவரும் சிற்றுண்டிச்சாலைகளில் வேலை செய்தனர். தந்தையிடமிருந்த உடை நடைத் தளுக்கு முதலான குணங்கள் இவர்களிடத்தில் விளங்கின. இவற்றையெல்லாம் ஆராயும் பொழுது கோமதியின் மக்கள் நால்வரும் தாய் ஒரு பாதியும் தந்தை ஒரு பாதியுமாக விளங்குவதைக் காணலாம். எனினும், "தாயைப் போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" என்னும் பழமொழிக்கிணங்கத் தாயின் சிறப்புக்களையும், உடல் - கூறுகளையும் மக்கள் அதிகமாக வெளிப்படுத்து கின்றனர்.

மங்கை ஒரு பாகம்

சிவபெருமானுக்கு அர்த்தநாரீச்வரன் என்றொரு பெயர் உண்டு. இறைவனை 'மங்கை ஒரு பாகன்' எனவும் 'உமை ஒரு பங்கன்' எனவும் சைவசமய நூல்கள் கூறு கின்றன. படைப்பு முதலிய ஐந்தொழிலுக்கும் தலைவனாகிய இறைவனை இங்ஙனம் சித்திரித்துக் காட்டுவதில் படைப் பின் மிகப் பெரிய இரகசியம் ஒன்று புதைந்திருக்கிறது.

உலகில் குழந்தை ஒன்று பிறந்தது. குழந்தை பிறந்த தென்றால்,

"ஓடுவார் ; விழுவார் ; உகந்து ஆலிப்பார் ;
நாடுவார் ; 'நம் பிரான் எங்கு உற்றான் ?' என்பார் ;

பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே,"

[உகந்து - மகிழ்ந்து. ஆலிப்பார் - ஆரவாரம் செய்வார்கள். நம்பிரான் - நமது தலைவன். உற்ருன் - சென்ருன். பல் - பல. பறை கொட்டுமேளங்கள். ஆய்ப்பாடி - இடைச் சேரி.]

எனப் பெரியாழ்வார் கண்ணன் பிறந்தபொழுது, ஆய்ப்பாடியில் தோன்றிய காட்சியை மனக்கண்ணால் பார்த்துச் சித்திரித்திருக்கிறபடியே, குழந்தை பிறக்க இடந்தந்த மனைதோறும் விழாக் கொண்டாடுதல் இயல்பன்றோ? குழந்தையின் தாயைப்பெற்ற பாட்டனும் பாட்டியும் பேரனைப் பார்க்க ஓடி வருவார்கள்; குழந்தையின் அங்க அழகுகளையெல்லாம் உற்றுப் பார்ப்பார்கள்; "இவன் தன் தந்தை வழியில் தாத்தாவின் சாயலைக் கொண்டிருக்கிருன்," என்பார்கள். தாயைப் பெற்றவள், இன்னும் நன்ருய்க் குழந்தையை உற்றுப் பார்த்து, "நமது மகளுடைய உதடும் காதும் பேரப்பிள்ளையிடத்திலும் அப்படியே உருவாயிருக்கின்றன. அவளுடைய சாயலும் இல்லாமல் போகவில்லை," என்பாள். தாய் வழிப் பாட்டனர் குழந்தையை உற்றுப் பார்த்து, "நமது மாப்பிள்ளையின் நெற்றியும் மூக்குங்கூட அப்படியே அமைந்திருக்கின்றன," என்பார். இவ்வாருகத் தாயின் பெற்ருேர் பிறந்த குழந்தையின் உடற்கூறுகளையும் முகச் சாயலையும் பார்த்துக் கூறுகிற அபிப்பிராயங்கள், பக்கத்தில் குழந்தையைப் பார்த்துக் கொண்டு நிற்கும் தந்தை வழிப் பாட்டனருக்கும் பாட்டியாருக்கும் அளவற்ற மகிழ்ச்சியை அளிக்கும். அக்குழந்தையைக் குலவிளக்கென்று இருவரும் கொண்டாடி மகிழ்வார்கள். குழந்தையின் தாய் வழிப் பாட்டி தன் மகளின் சாயலில் ஒரு பாதியைக் குழந்தையிடத்தில் காண்பாள்; அவனைத்தன் குலச்சுடரெனப் போற்றி மகிழ்வாள். பெற்ருேர் மக்களிடத்தில் தம் அம்சங்கள் விளங்குவதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து, "விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?" என்று சொல்லிக் களிப்படைவது இயல்பேயாம்.

பத்துத் திங்களும் சுமந்து பெற்ற அன்னையே, புவியில் பிறந்த புதுக்குழந்தையைப் பார்க்க விரும்பு கிறவர் அனைவரிலும் ஏற்றமான விருப்பம் உடையவள் என்பதற்கும் ஐயம் உண்டோ? "குழந்தை சுகமாக இருக் கிறதா? உயிரோடு இருக்கிறதா? கிரமப்படி வளர்ந்து முற்றிய மகவா? ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? அது தன் கணவனது சாயலைப் பெற்றதோ அன்றித் தன் சாயலைக் கொண்டதோ?" என்றிவ்வாறான கேள்வி கள் அவளுடைய உள்ளத்தில் எழுகின்றன. அவற்றைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஈன்றவள் குழந்தையை ஆர்வத்தோடு பார்க்கிறாள். பெற்றது முதல் - குழந்தை என்றால், அந்தக் குழந்தையைக் கருக்கொண்ட காலத்தில் அவளுடைய உள்ளத்தில் எழுந்த அச்சங்களுக்கும் ஐயங் களுக்கும் அளவே இராது. "போதிய வளர்ச்சி பெற்ற திண்ணிய குழந்தை ஒன்றை நான் பெறுவேனோ?" என்ற ஐயம் பல தடவைகளில் அவளது உள்ளத்தில் தோன்றி யிருக்கலாம். இத்தகைய சிந்தனைகளுக்கு ஆளான அன்னைக்குத் தன் பெற்றோரும், கணவரின் பெற்றோரும் குழந்தையின் முகச் சாயலைப் பற்றிப் பேசிக் கொள்வது அளவற்ற மகிழ்ச்சியை அளிக்குமன்றோ?

அரிஹர சாஸ்திரியாருக்கு மூன்று மைந்தர்கள். சாஸ்திரியாரின் மனைவி நடுத்தரமான மேனி வண்ணம் உடையவள். அவரோ தவிட்டு நிறத்திலும் மேம்பட்ட நிறம் உடையவர்; அவரது மூத்த மகனும், கடைசி மகனும், அவருடைய நிறத்தையே பெற்றனர். மூத்தவன் பருத்த உடலும் நல்ல உயரமும் உடையவன். இரண்டாவது மைந்தன் மட்டும் நடுத்தரமான மேனி வண்ணம் பெற்றான். சாஸ்திரியாரது பரம்பரையிலே கரு நிறமாக மைந்தர் தோன்றினர். இதனைக் கண்டதும் அவர் கவலை கொண்டார். மூத்த மகனுக்குச் சண்பக மலரின் நிறம் வாய்ந்த பெண் ஒருத்தியைத் தேடிக் கல்யாணம் பண்ணி வைத்தார். இந்தப் பெண்ணுக்கு இரட்டையாக இரு மைந்தர்கள் தோன்றினர். இரட்டையர் பிறந்த சில தினங்களுக்குள் தாய் இறந்து விட்டாள். இரட்டைப்

பிள்ளைகளின் மாமன்மார்கள், பொதுவாக யாவரும் அடைகிற உயரத்திற்கும் அதிகமாக வளர்ந்தவர்கள். இரட்டையரின் தாயும் தன் பெற்றோர் உடன்பிறந்தாரின் உயரத்திற்கு இசைந்த உயரம் உடையவள். இரட்டைப் பிள்ளைகள் தாய் வழியின் இயல்புப்படி அதிக உயரம் பெற்றிருந்தனர். இருவரும் தாயின் சாயலைப் பெரிதும் பெற்றிருந்தனர். இவ்விருவர்தம் நடையும் தாய்-மாமன் மார்களின் நடையைப் போன்றிருந்தது.

மூத்த மைந்தனது முதல் மனைவி இறந்தவுடனே, சாஸ்திரியார் தங்கப் பதுமைபோன்ற கட்டழகி ஒருத்தியைத் தேடித் தம் மகனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்தார். இந்தப் பெண் நான்கு ஆண் குழந்தைகளையும் மூன்று பெண் குழந்தைகளையும் ஈன்றாள். ஆண்களுள் மூத்தவன் தாயின் நிறத்தைப் பெரும்பாலும் பெற்றிருந்தான். நெற்றியும் மூக்கும் விழியும் தாயின் சாயலைப் பெற்றன. இரண்டாவது சிறுவன் நான்கு வயதில் இறந்து விட்டான். இவனிடத்திலும் தாயின் சாயலே பெரிதும் தோன்றியது. மூன்றாவது சிறுவன் தகப்பனின் அவதாரமே எனும்படித் தோன்றினான். உடல் உறுப்புக்களின் கூறுபாடுகளும் தந்தையின் சாயலாகவே அமைந்தன. எனினும், அவனது உயரம் தந்தையைப் போன்றிருக்கவில்லை. தாயின் உயரத்தையும் எட்டவில்லை. பருமனிலும் தந்தையின் சாயலையே கொண்டிருந்தான். நான்காவது பையனும் தகப்பனின் சாயலைப் பெரிதும் பெற்றிருந்தான். இவன் கலப்பு நிறம் உடையவன்; முந்தியவனை விடச் சற்று உயர்ந்த வளர்ச்சி பெற்றவன். பெண்கள் மூவருள் மூத்த மகளிடம் தந்தையின் சாயல் அதிகமாக விளங்கியது. இவளுடைய மேனி கறுப்பு நிறம் பெற்றது. இவள் உயரத்தில் குட்டை என்றே கூறவேண்டும். இரண்டாவது மகள் தாயின் நிறமும் அழகும் பெற்றாள்; ஆயினும், தாயளவு உயரம் பெறவில்லை. கடைசி மகளின் மேனியில் தந்தையின் நிறக் கலப்புச் சற்றே தோன்றிய போதிலும், இவள் தாயின் உயரத்தைச் சற்றேறக்குறைய பெற்றனள்

என்றே கூறலாம்; முகச் சாயல் பெரும்பாலும் தாயைப் போன்றே இருந்தது.

அரிஹர சாஸ்திரியாரின் வழியில் புறம்பான உடல் தோற்றத்தில் மட்டும் அவருடைய மக்களிலும் மக்களின் மக்களிலும் ஆண் ஒரு பாதி, பெண் ஒரு பாதித் தத்துவங்கள் வெகு தெளிவாக அமைந்துள்ளன. இப்படியே குடும்பம் குடும்பமாகப் பார்ப்போமாயின், மங்கை ஒரு பாகம் என்னும் [1] நியதியை வெகு தெளிவாகக் காணலாம். அரிஹர சாஸ்திரியாரின் மரபில் பேரப்பிள்ளைகளிடத்தில் மங்கை ஒரு பங்கு என்னும் நியதியை உடல் அமைப்பில் மட்டுமன்று, [2] திறமை, [3] திராணிகளிலும், [4] புத்தித்வத்திலும், குணச் சிறப்புக்களிலும், [5] மனப் போக்கிலும், [6] செயல் - போக்கிலும் பார்க்கலாம். ஓவியக் கலைஞனாகிய இரவி வர்மாவின் குலத்தில் இன்றும் பலர் சித்திரக் கலையில் திராணி உடையவர்களாய் இருக்கிறார்கள். சமுத்திர குப்த விக்கிரமாதித்தன் பரத கண்டத்தின் பெரும் பகுதியையும் வென்றடக்கி வெற்றி வீரனாக விளங்கியவன். இவன் இலக்கியப் பயிற்சியில் பேரவா உடையவன். இவனுடைய மைந்தனாகிய சந்திர குப்த விக்கிரமாதித்தன் தந்தை பால் விளங்கிய தன்மை இயல்புகளை வெகு தெளிவாகப் பெற்றிருந்தான். விக்கிரமாதித்தனுடைய சபையிலே காளிதாஸன், தண்டி முதலான கவிவாணர்கள் தனியிடம் பெற்றிருந்தனர். இவனும் தந்தையைப் போன்ற வீரனாக விளங்கினான். இவ்வாறே மனிதரின் குலங்களை ஆராயும்பொழுது,

---

1. நியதி - சட்டம் (*law.*)

2. திறமை - *ability*
3. திராணி - *capacity*
(2, 3) நவீன மானஸ சாஸ்திரத்தில் இவ்விரு மொழிகளுக்கும் தனிப் பொருள்- எல்லைகள் உள்ளன.

4. **புத்தித்வம்**—புத்தியின் இயல்பான அமைப்பும் தன்மையுமாம். நவீன மானஸ சாஸ்திரத்தில் வழங்கிவரும் Intelligence என்னும் ஆங்கில மொழிக்கு மிகவும் அகன்ற பொருள் - நுணுக்கங்கள் உள்ளன. ஆகையால் புதிய சொல் ஒன்றைச்சிருஷ்டிக்க வேண்டியதாயிற்று.

5. **மனப்போக்கு**—*Mental activity.*

6. **செயல்போக்கு**—*Activity in Progress or Behaviour.*

குழந்தையின் தன்மை வேற்றுமைகளுக்கு அடிப்படையான காரணங்கள் ‘மங்கை ஒரு பங்கு’ என்னும் நியதியை விளக்குகிற தத்துவங்களில் புதைந்து கிடக்கின்றன என்று கருத இடம் உண்டல்லவா?

[1] ‘மெண்டலின்’ நியதி

பட்டாணிப் பயிர் என்பது பயற்றினத்தைச் சார்ந்தது; தனி வகுப்பாக அமைவது. பட்டாணிப் பயற்று மூட்டையிலிருந்து ஒரு பிடிப் பட்டாணியை எடுத்துப் பாருங்கள். ஒரு பட்டாணி விதையின் மேல்-தோடு பச்சையாய் இருக்கிறது; மற்றொன்று மஞ்சள் நிறமாக இருக்கிறது; வேறொன்று கடும்பச்சை நிறமாக இருக்கிறது. பட்டாணிப் பயற்றை வறுத்தால், சில பட்டாணிகள் தோடு பிளக்க வறுபடுகின்றன. வேறு சில பட்டாணிகள் வறுபட்டாலும் தோடு கழலாமல் இருக்கும். மற்றும் சில பட்டாணிகள் வறுபட்டாலும் கல்லைப் போல் கடினமாக இருந்து நமது பல்லை உடைக்கின்றன. பட்டாணிப் பயற்றில் இத்தனை வேறுபாடுகள் தோன்றக் காரணம் என்ன? பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி தொடங்கியபொழுது, ஒருவர் இதன் காரணத்தை ஆராயப் புகுந்தார்.

அக்காலத்தில் இருந்த ஆஸ்திரியா இராஜ்யம் இன்று எங்கே இருக்கிறதென்று தெரியவில்லை. அந்த ஆஸ்திரியா தேசத்தில் ப்ரனே நகரத்தில் கிறிஸ்தவச் சன்னியாசிகள் வாழ்ந்துவந்த ஒரு மடாலயத்தைச் சூழப் பயிர் செய்திருந்த தோட்டத்தில் துறவி ஒருவர் தோட்டக்கலையில் அவாக் கொண்டவராகி, அங்கிருந்த செடிகளை எல்லாம் தமது குழந்தைகளைப்போல் கருதி வளர்த்து வந்தார். அவரது பெயரே **கிரேகோர் ஜோஹான் மெண்டல்** என்பது. மெண்டல் சந்நியாசிக்குப் பட்டாணிப் பயற்றின் மாயம் விளங்கவில்லை. நாம் முன்னே குறித்த குணவேற்றுமைகளோடு பட்டாணிப் பயறுகள் விளைவதைக் கண்ட சந்நியாசி, தாம் செடிகளுக்கு இட்ட எருவே அந்த

1. மெண்டலின் நியதி—*Mendelian law.*

வேற்றுமைகளுக்குக் காரணமாயிற்றே என்று சிந்தனை செய்தார். செடிகளுக்கு இட்ட எருவை மாற்றியும், பட்டாணிப் பயறு திருந்தவில்லை. அவர் பட்டாணிப் பயற்றைத் திருத்தும் பொருட்டு நெடுநாட்களாகப் பலவாறு ஆராய்ந்தார்; முடிவிலே பட்டாணி மலர்களின் பூந்தாது [1] கர்ப்பாதானமாகிற முறையிலே தான் இந்த வேற்றுமைகள் தோன்றுகின்றன என்று கருதினார்; பட்டாணிகளை, அவற்றின் தன்மை வரிசையிலே பிரித்தார்; பெரிய செடிகளாக வளரும் இயல்புடையவை, குறுஞ்செடிகளாக வளரும் இயல்புடையவை என்றிவ்வாறே பல இனங்களாகப் பட்டாணிச் செடிகளைப் பாகுபாடு செய்தார்; ஒவ்வொரு வகுப்பிலும் தோன்றிய பட்டாணிச் செடிகளின் தன்மை இயல்புகளை ஆராய்ந்து குறித்துக் கொண்டார்; பின்பு, தேனீக்கள் இயற்றி வந்த கர்ப்பாதானத் தொழிலைத் தாமே இயற்றக் கருதினார்; [2] பூந்தாதுக்களைத் தாமே மலர்களின் [3] ஜனனேந்திரியங்களில் புகுத்தத் தொடங்கினார்; தேனீயின் நாவுபோன்ற கருவிகள் செய்து, அவற்றின் மூலமாக ஆண்மலர்களினின்று பூந்தாதுக்களை எடுத்துப் பெண்மலர்களின் ஜனனேந்திரியங்களில் புகுத்தத் தொடங்கினார். ஒரே வகுப்பைச் சார்ந்த பட்டாணி மலரின் பூந்தாதை எடுத்து மற்றொரு வகுப்பைச் சார்ந்த பட்டாணி மலருக்குள் புகுத்துவதனால் விளையும் காய்களைப் பார்வையிட்டார். கலப்பு முறையால் விளைந்த விதைகளைத் திரும்பவும் விதைத்துப் பயிரிட்டார். முதல் கலப்பிலேயே [4] பாரம்பரிய இயல்பு அவ்வளவு அதிகமாக மாறவில்லை. கலப்பு முறையில் கிடைத்த விதைகளிலிருந்து முளைத்த செடி

1. **கர்ப்பாதானம்**—தாதுவைச் சினைப்பைக்குள் செலுத்துதல் என்னும் பொருளைத்தரினும், ஆழ்ந்த கருத்து உடையது. பின்னால் விரிவாக விளக்கம் பெறும். *Fertilization.*

2. **பூந்தாது**—மகரந்தம். *Pollen of Flowers.*

3. **ஜனனேந்திரியம்**—பிறப்புக்குக் காரணமாகிய உறுப்பு. *Genitals.*

4. **பாரம்பரிய இயல்பு**—தலைமுறைதோறும் வழிவழியாக வருகிற இயல்பு. *Hereditary Nature.*

களில் மலர்கள் தோன்றின. இம்மலர்களிலும் கலப்பு முறையிலே கர்ப்பாதானம் செய்து பார்த்தார். இதனால் விளைந்த பட்டாணிப் பயறுகளின் குணபேதங்களை மேலும் ஆராய்ந்தார். இவ்வாறு பல ஆண்டுகள் சென்றன. முடிவில் 1865-ஆம் ஆண்டிலே தமது ஊரில் வெளியான பத்திரிகை ஒன்றில் அவர் தமது ஆராய்ச்சி விளைவுகளை வெளியிட்டார்.

மெண்டல் சந்நியாசி வெளியிட்ட ஆராய்ச்சி - நுணுக்கங்களுக்குள்ளே நாம் புகத் தேவை இல்லை. பரந்த அளவிலே பார்க்கிற வண்ணமாக அவருடைய ஆராய்ச்சித் தெளிவுகளை அறிந்து கொள்வோம். தாய் தந்தை ஆகிய இருவரிடத்திலும் காண்கிற குறிப்பிட்ட குணம் ஒன்று பெற்றோருக்குப் பிறக்கும் மக்களிடத்திலே பெரும்பாலும் தோன்றும். குறிப்பிட்ட ஒரு தன்மை பெற்றோர் இருவரிடத்திலும் தோன்றாமல் தாயிடத்திலாவது தந்தையிடத்திலாவது தோன்றுமாயின், அந்தத் தன்மை அப்பெற்றோருக்குப் பிறக்கிற மக்களின் மொத்தத் தொகையில் ஒரு பாதி மக்களிடத்திலே தான் வெளிப்படும்; மற்றொரு பாதி மக்களிடத்தில் வெளிப்படாது. மெண்டல் தமது ஆராய்ச்சியில் [1] தனித் தன்மை இயல்புகளைப் பார்வை இட்டார். பலவகையான குணங்களை ஆராய்ந்த போது, [2] தொகுத்தன்மை இயல்புகளைப் பார்வை இட்டார். குறிப்பிட்ட ஒரு தன்மை பெற்றோர் இடத்தில் அமையாவிட்டாலும், அதே தன்மை அன்னவரது மக்களில் யாரேனும் ஒருவரிடத்திலே தோன்றலாம். பெற்றோர் இருவரும் எலுமிச்சம் பழத்திற்கு ஒப்பான மேனி நிறம் உடையவர்களாக இருந்தால், குழந்தைகள் யாவரும் அதே நிறத்தோடு பிறப்பார்கள். தாயாவது தந்தையாவது சற்றுக் கருமையாக இருந்தால், குழந்தைகளில் ஒரு பாதிக்குமேல் கறுப்பாகவும், ஒரு பாதிக்குக் குறைவானவர்கள் அழகிய மேனி நிறம் பெற்றவர்களாகவும் தோன்றுவார்கள். இந்த ஆராய்ச்சித் துணிபுகளுக்கு

1. தனித்தன்மை இயல்பு—*Genotype.*
2. தொகுதிந் தன்மை இயல்பு—*Phenotype.*

ஒழிபுகள் பல. ஏன் என்றால், பாரம்பரிய நியதி வெகு விசித்திரமான போக்குடையது. இந்நூலில் பாரம்பரிய நியதி முழுவதையும் வரையறுத்துத் தெளிவுபடுத்தியதாக எவரும் கருதலாகாது. மெண்டலின் ஆராய்ச்சியைப் படம் 2 ஐப் பார்த்து ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.



படம் 2.

இந்தப் படத்தில் 'கினிப்பிக்' என்னும் ஒருவகை எலிகளின் பாரம்பரிய நியதியை விளக்கியிருப்பதைக் காணலாம். முற்றிலும் கரிய நிறமும் மழ மழப்பான உரோமமும் உடைய எலியோடு முற்றிலும் வெண்மை நிறமும் அடர்ந்த முரட்டு உரோமம் உடைய எலியைச் சேர்த்ததனால் தோன்றிய பரம்பரையைப் பாருங்கள். 'பெ' என்னும் எழுத்துப் பெற்றோரைக் குறிக்கும். 'முதல் ஈனுதல்' என்பதனை 'ஈ^{1}' எனவும், இரண்டாவது ஈனுதல் என்பதனை 'ஈ^{2} எனவும் படத்தில் காட்டியிருக்கிறது. முதல் குட்டி என்பதனை மு^{1} என்பதனால் குறித்திருக்கக் காணலாம். ஈ^{1}ல் மு^{9} என்பதும் ஈ^{1}ல் மு^{3} என்பதும் முதல் ஈற்றில் 9 ஆவது குட்டியையும், 3 ஆவது குட்டியையும் குறிக்கும். ஈ^{2}ல் மு^{3}உம் மு^{1}உம் படத்தில் தோன்றுவன.

இதுவே பாரம்பரிய நியதியைப் பற்றிச் சந்நியாசி மடத்திலிருந்து வெளிப் போந்த ஆராய்ச்சியின் சுருக்கம்

எனலாம். சந்நியாசி மடங்களிலிருந்து பல இரகசியங்கள் தோன்றலாம். இவற்றைப் பொதுமக்கள் சிந்திக்க முடியுமா? அதற்கு நேரந்தான் உண்டா? ஆகையால் மெண்டலின் ஞானம் அவர் வாழ்ந்திருந்த மடத்திற் குள்ளே ஒடுங்கிவிட்டது. அவருடைய ஆராய்ச்சி முடிபுகள் அடங்கிய பத்திரிகைகளும் அங்கேயே பதுங்கிவிட்டன. ஆயினும், பத்தொன்பதாம் நூற்றாண்டு பல நூதன விஞ் ஞானங்கள் தோன்றுவதற்கு இடந்தந்த காலம் அன்றோ? அழியாப் புகழ்பெற்ற சார்ல்ஸ் டார்வின் சாஸ்திரியாரைத் தந்த நூற்றாண்டில் பாரம்பரிய நியதியைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இருபதாம் நூற்றாண்டு தொடங்கிய பொழுது, ஆராய்ச்சியாளர்கள் தாம் ஆராய்ந்து திரட்டிய செய்திகளைப்பற்றி முன்னோர் எவரேனும் ஆராய்ந்ததுண்டா என்று ஏட்டுக்குப்பைகளைப் புரட்டிப் பார்த்தார்கள். மெண்டல் சந்நியாசியின் ஆராய்ச்சிகளைப் பற்றிய கட்டுரைகள் அடங்கிய பத்தி ரிகைகள் அகப்பட்டன. பாரம்பரிய நியதிகளைப் பற்றித் தாமே முதலில் எண்ணிப் பலவாறாக ஆராய்ந்து பல உண்மைகளைத் திரட்டிவிட்டதாகக் கருதிப் பெருமை பாராட்டிய ஆராய்ச்சியாளர்கள் பழங்குப்பைகளைப் புரட்டியபொழுது, தோட்ட வேலையில் தேர்ந்த சந்நியாசி யின் ஆராய்ச்சிகள் அவர்களுக்கு வியப்பை விளைத்தன. முன்னோர் உரையைப் பொன்னேபோல் போற்ற வேண்டும் என்னும் கருத்தால் தாம் ஆராய்ந்து தெளிந்த விஞ்ஞானம்அனைத்திற்கும் 'மெண்டலின் நியதி' என்று பெயர் வழங்கலாயினர்.

இனக்கலப்பு

மெண்டல் சந்நியாசி ஆராய்வதற்கு முந்தியே இனக் கலப்பைப் பற்றி உலகத்தாருக்கு ஒரு சிறிது தெரிந் திருந்தது. பலப்பல நூற்றாண்டுகட்கு முன் பலஸ்தீன நாட்டில் யாக்கூப் என்றொரு இளைஞன் தாய்மாமன் வாழ்ந்த ஊரில் தனக்குப் பொருத்தமான கன்னிகையைத் தேடச் சென்றான்; ஊர்ப்புறத்தை அணுகியபொழுது, மாம னுடைய இரண்டாவது மகளாகிய ராகேலைச் சந்தித்தான்.

அழகே வடிவெடுத்தவள் போல எதிரிலே தோன்றிய அக்கன்னியைக் கண்டு காதல் கொண்டான்; அவளையே தனக்கு மனையாளாக மணம் செய்து கொடுக்குமாறு மாமனை வேண்டினன். அதற்கு மாதுலனாகிய லாபான், "என் ஆடுகளை ஏழு ஆண்டுகள் வரைக்கும் மேய்த்து வந்தால், நீ விரும்பிய பெண்ணைத் தருவேன்," என்றான். யாக்கூப் லாபானுடைய ஆடுகளை ஏழாண்டுகள் முடிவுறுந்தனையும் மேய்த்து வந்தான். தொண்டாற்றுவதற்குக் குறித்திருந்த காலம் முடிவுற்ற பொழுது, மருமகன் மாமனை அணுகி, ராகேலை மனையாளாகத் தருமாறு வேண்டினன். அதற்கு லாபான், "தமக்கை மணமில்லாமல் இருக்க, தங்கைக்கு மணம் புரிவிக்கும் மரபு எங்கள் நாட்டில் இல்லை. ஆகையால், மூத்தவளையே அளிப்பேன். இவளை மணந்துகொள். மண விழா முடிந்த பிறகு திரும்பவும் ஏழு ஆண்டுகள் எனக்குத் தொண்டாற்றினல், ராகேலையும் மணம் செய்து கொடுப்பேன்," என்றான். மாமன் விரும்பியபடியே யாக்கூப் லேயாளை மணந்து, பின்னும் ஏழாண்டுகள் லாபானுடைய ஆடுகளை மேய்த்துத் தான் காதலித்த ராகேலையும் மணந்து கொண்டான். பின்பு, மாமன் வீட்டிலே சிறிது காலம் தங்கினன். முடிவில், யாக்கூப் மாமனை நோக்கி, "மனைவியரையும், பணிப் பெண்களையும், மக்களையும் அழைத்துக்கொண்டு என் பெற்றோர் வாழும் நாட்டுக்குச் செல்லக் கருதியுள்ளேன். உன் பெண்களுக்குரிய சீதன வரிசைகளைத் தந்து அவர்களை என்னோடு அனுப்பி வைக்கவேண்டும்," என்று கேட்டுக்கொண்டான். அதற்கு லாபான் "பதினன்கு ஆண்டுகள் எனக்குத் தொண்டாற்றிய உனக்கு என்ன சம்பளம் வேண்டும்" என்று கேட்டான். அப்பொழுது, 'நான் இன்று உமது மந்தையைப் பார்வை இடுகிறேன். செம்மறி ஆடுகளில் புள்ளிகள் உடையவைகளையும் வரிகள் உடையவைகளையும் கருநிறம் உடையவைகளையும் என் கூலியாகக் கொள்வேன். வெள்ளாடுகளில் வரியும் புள்ளியும் உடையவைகளையும் கொள்வேன். இன்னும் சில ஆண்டுகள் பணி செய்து, ஆடுகளை மேய்த்து வருவேன். ஆடுகள் குட்டி

போடும்பொழுது, எனக்குச் சம்பளமாகக் குறித்த நிறங்களும் புள்ளிகளும் வரியும் உடைய குட்டிகள் தோன்றினால் அவற்றை என் பங்காகக் கொள்வேன்; இது உமக்குச் சம்மதமா?'' என்று கேட்டான்.

லாபான் ஒப்புக்கொண்டான். அன்று லாபான் கலப்புநிறமும் வரியும்உள்ள வெள்ளாட்டுக் கடாக்களையும், புள்ளியும் வரியும் உள்ள வெள்ளாடுகளையும், சற்றே வெண்மையும் கருமையுமான செம்மறி ஆடுகளையும் வேருகப் பிரித்துத் தன் மைந்தரிடம் ஒப்படைத்து, அவற்றை மூன்று நாள் பயணத்திற்கு அப்பால் இருந்த மேய்ச்சல் நிலங்களில் பாதுகாத்து வரும்படிக் கட்டளை இட்டான். யாக்கூப் விரும்பிய குட்டிகள் மந்தையில் தோன்ருதிருப்பதற்கு இச்சூழ்ச்சி செய்தான். யாக்கூப் தன் வசம் ஒப்படைத்திருந்த ஆடுகளை மேய்த்து வரலானான். புன்னை, வாதுமை, ஆர்மோன் முதலிய மரங்களின் கொம்புகளை வெட்டி இடையிடையே வெண்மை தோன்றும்படி அந்தக் கொம்புகளில், பட்டைகளை உரித்து அவற்றை நாள்தோறும் ஆடுகள் நீர் அருந்திய கால்வாய்களில் போட்டு வைத்தான். நீரின் ஆழத்தில் வெள்ளைக் கோடும் கருங்கோடுமாக அந்தக் கொம்புகள் தோன்றின. ஆடுகள் இந்தக் காட்சியைப் பார்த்த வண்ணமே புணர்ந்தபொழுது, பெண்ணாடுகள் புள்ளியும் வரியும் உடைய குட்டிகளைப் பெற்றனவாம். இந்தக் குட்டிகளை அவன் கூலியாகப் பெற்ருன். ஆகையால், உடல் வலிமையும் சுழி இலக்கணங்களும் உடைய கடாக்களையே பொலிதலுக்கு உபயோகித்தான். தன் எஜமானுடைய பங்காகவேண்டிய குட்டிகளைப் பெறுவதற்கு வலி குன்றிய அழகற்ற கடாக்களை பொலிதலுக்கு உபயோகித்தான்.

அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் கலப்புப்பொலிதலினால் பலவகையான குட்டிகளைப் பெறலாம் என்னும் உண்மையை அறிந்திருந்தனர். நமது நாட்டிலும் ஆரியர்களிடையே ஒரே கோத்திரத்தில் பெண் கொள்ளலாகாது என்னும் நியதி இருந்தது. அவ்வாறு பெண் கொள்வ

தனால், மக்களின் திறமை திராணிகளும், புத்தித்வமும், தன்மைகளும், மனப்போக்கும் தாறுமாறாகி நலன் அற்றுப்போகும் என்று ஆரியர் கருதினர். சிறந்த உடற்கூறும் சுழிபிலக்கணங்களும் பெற்ற குதிரைகளை அடையும் பொருட்டுச் சிறந்த ஜாதிக் குதிரைகளைப் புணரச் செய்வது எங்ஙனம் என்று ஆரியர் நன்றாய் உணர்ந்திருந்தனர். அசுவமேத யாகத்திற்கு உரிய குதிரையின் இலக்கணங்களை விளக்கிக்கூறும் வேத பாசுரங்கள் இருக் வேதத்தில் உள்ளன. இவ்வாறே ஆராயுங்கால், கர்ப்பாதான விஞ்ஞானம் மிகப் பழமையானது என விளங்கும்.

கர்ப்பாதான விஞ்ஞானம்

இந்த விஞ்ஞானத்தைப் பற்றி ஆராய்ச்சியாளர் பலர் பல உண்மைகளை புதிய ஆராய்ச்சி முறைப்படி அறிந்து வெளியிட்டிருக்கின்றனர். இவ்வாராய்ச்சிகளுக்கெல்லாம் துணைக்கருவியாக விளங்குவது [1] அணுதரிசினி என்னும் கருவியாம். இது கண்ணுக்குப் புலப்படாத அணுவுலகத்திலுள்ள அதிசயங்களையெல்லாம் ஆராய உதவிபுரிகிறது. இவ்வற்புதக் கருவியின் சரித்திரமும், இதன் உதவியால் மனிதன் ஆராய்ந்து அறிந்த செய்திகளும் தனி நூலாகிப் பாரதத்திலும் பெரிதாக விரிந்துவிடும்.

அணுதரிசினி கர்ப்பாதான விஞ்ஞான வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தது. மிகவும் சக்தி வாய்ந்த அணுதரிசினிகளின் மூலமாக உயிர்களின் உடலை ஆக்கி அமைக்கிற [2] ஜீவாணுக்களை ஆராய்ந்தார்கள். அப்பொழுது, ஜீவாணுவின் [3] ஆக்கமும், [4] உறுப்பும், [5] கூறுபாடுகளும் புலப்பட்டன. ஜீவாணுவில் தனிப்பட்ட [6] வியூகனக்கட்டுமானம் இருப்பதாகத் தெரியவந்தது.

---

1. அணுதரிசினி—(*Microscope*)
2. ஜீவாணு—உயிர் அணு - *cell.*
3. ஆக்கம்—*make-up.*
4. உறுப்பு—*limbs.*
5. கூறுபாடு—*parts.*
6. வியூகனக் கட்டுமானம்—*Mechanical structure.*

இந்தக் கட்டுமானங்களுக்கு [1] குரோமஸோம்ஸ் என்று பெயர். குரோமா என்பது கிரேக்க பதம். இதற்கு வர்ணம் அல்லது நிறம் என்று பொருள். ஜாதி என்று பொருள்பட வர்ணம் என்ற மொழியை வழங்குகிறோம். ஆங்கில மொழியான குரோமஸோம்ஸ் என்பதற்குப் பதிலாக, வர்ணதாது என்னும் புதிய மொழியைப் பின்வரும் இடந்தோறும் உபயோகிக்கலாம். குரோமஸோம்ஸ் என்று கூறினாலும் வர்ணதாதுவையே குறிப்பதாகத் தெரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு உயிரினத்திலும் ஜாதித் தன்மைகளை வர்ணதாதுக்களே திட்டம் செய்கின்றன.

ஜீவாணுவை அணுதரிசினியின் மூலமாக ஆராய்ந்தவர்கள், மனித உடல் ஒரு [2] ஐக்கிய ஜீவாணுவிலிருந்து தொடங்குகிறது என்று வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு சிசுவின் முதல் தோற்ற நிலையும், வடிவமும் ஐக்கிய ஜீவாணு நிலையாக இருக்கும். தாயிடத்தில் ஜனனத்திற்குக் காரணமாகிய ஜீவாணுவுக்கு [3] தாய்-வர்க்கதாது என்று பெயர். தந்தைபால் சிசுவின் ஜனனத்திற்குக் காரணமாக இருக்கும் ஜீவாணுவுக்கு [4] தந்தை-வர்க்கதாது என்று பெயர். தாய்-வர்க்க தாதுவும், தந்தை-வர்க்க தாதுவும் ஒன்றாய்க் கலக்கிறபொழுது, ஐக்கிய ஜீவாணு தோன்றுகிறது. தாய்-வர்க்க தாதுவும், தந்தைவர்க்க தாதுவும் இரண்டு தனித்தனி ஜீவாணுக்கள் எனினும், இவை பிறப்பிற்குக் காரணமானவை என்பதனால் தனி இனமாகின்றன. ஆகையால் இவற்றை, வர்க்கதாதுக்கள் என்னும் பெயரால் குறிப்பிடலானோம். தாயின் வர்க்க தாதுவுக்கு [5] அண்டதாது அல்லது ஓவம் என்று பெயர்.

1. **குரோமஸோம்ஸ்**—வர்ணதாது என மொழிபெயர்த்திருக்கிறோம். *chromosomes.*

2. **ஐக்கிய ஜீவாணு**—ஓர் உயிர்நிலை தோன்றுவதற்குக் காரணமாக ஆண்பெண் இருபாலாரது தாதுவிலும் உள்ள இரண்டு வர்க்கதாது அணுக்கள் ஒன்றாய்ச் சேர்வதன் மூலமாக அமைகிற முதல் கூட்டுறவு வடிவம்.

3. **தாய்-வர்க்கதாது**—*Female Gamete.*
4. **தந்தை-வர்க்கதாது**—*Male Gamete*
5. **அண்டதாது**—*Egg-cell (Ovum* ஓவம்*)*

} இதனை தாயினத்தாது எனவும் கூறலாம்.

தந்தையின் வர்க்க தாதுவுக்கு [1] லிங்கதாது என்று பெயர். பெற்றோரின் மரபிலே தாய் தந்தையருக்கு வாழையடி வாழையாகத் தோன்றுகிற சந்ததிக்கும் அந்தப் பெற்றோருக்கும் உள்ள தொடர்பு முழுவதும் வர்க்க தாதுக்களின் ஐக்கிய நிலையைச் சார்ந்திருக்கிறது. வேறு அணு ஜீவன்களோடு அவற்றிற்கு எவ்விதத் தொடர்பும் இல்லை அண்டதாதுவும் லிங்கதாதுவும் கலக்கிற கலப்பே கர்ப்பாதானம் எனப்படும். இதனைச் சினைப்படல் என்றும் ஒருவாறு கூறலாம்.

சினைப்பட்டவுடனே, தாயின் அண்டதாதுவும் தந்தையின் லிங்கதாதுவும் ஆகிய இரண்டு வர்க்கதாதுக்களும் கலந்து ஒரு ஐக்கிய ஜீவாணுவாகிறது. சினைப்படுவதால் தோன்றுகிற ஐக்கிய ஜீவாணுவையும், உடலை ஆக்கி அமைப்பதற்குக் காரணமான சட ஜீவாணுவையும் விஞ்ஞானிகள் அணுதரிசினி மூலமாக ஆராய்ந்து இவற்றின் அங்க அவயவ அமைப்பு இலக்கணங்களை வகுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஜீவாணுவை அணுதரிசினி மூலமாகப் பார்த்தால், அது கோழை அல்லது சளி போன்ற ஒரு வகைப் பொருளால் அமைந்திருப்பது தெரியவரும். ஜீவாணுவின் ஆக்கம் மிகவும் சிக்கலான விஷயம். ஜீவாணுவில் காண்கிற சளித்தன்மையான சாதனத்திற்கு [2]**புரோட்டோப்ளாஸம்** என்று பெயர். இந்தப் புரோட்டொப்ளாஸத்தை மெல்லிய [3] சவ்வாடை மூடிக்கொண்டிருக்கிறது. புரோட்டொப்ளாஸத்தின் மத்தியில் காண்கிற கனதியான பாகத்திற்கு [4] நடு-ஆணம் என்று பெயர். ஆணம் என்ற தமிழ் மொழிக்குக் குழம்பு என்று பொருள். நடு-ஆணத்தைச் சூழவுள்ள பாகத்திற்கு [5] ஸிட்டொப்ளாஸம் என்று

---

1. **லிங்கதாது**—*Spermatazoon* (ஸ்பெர்மெட்டஸூன்)
2. **புரோட்டாப்ளாஸம்**—*Protoplasm.*
3. **சவ்வாடை**—மிக மெல்லிய சவ்வினால் ஆன போர்வை. *membrane.*
4. **நடு-ஆணம்**—ஆங்கிலத்தில் இதனை **நியூக்ளியஸ்** (*Nucleus*) என்பர். சிலர் இம்மொழியை 'உட்கரு' என மொழி பெயர்க்கின்றனர்.
5. **ஸிட்டோப்ளாஸம்**—உயிர் அணுச்சத்து என மொழி பெயர்க்கலாம். பொருள் மயக்கம் எழாதிருக்கும் பொருட்டு ஆங்கில மொழியினையே வழங்குகிறோம். (*cytoplasm*)

பெயர். ஜீவாணுவின் நடுப்பாகமாகிய நடு-ஆணமே தலை சிறந்த உறுப்பு. ஜீவாணுவின் செயல்போக்கை எல்லாம் பெரும்பாலும் அடக்கி ஆள்வது நடு-ஆணந்தான். பாரம்பரிய நியதியைத் திட்டம் செய்கிற பல இரகசியங்களும் அடங்கிய பாகம் இதுவே. ஸிட்டோப்ளாஸத்தைப் பார்க்கிலும் முக்கியமான பாகம் இதுவேயாம்.

படம் 1ல் லிங்கதாதுவையும் அண்டதாதுவையும் சாராத சாதாரணமான ஜீவாணுவின் உறுப்புக்களைப் பார்க்கலாம். ஜீவாணுவைச் சூழ இருக்கிற சவ்வாடைக்கு [1] ஜீவாணுப் போர்வை என்று பெயர். அதற்குள் முழு வட்டவடிமான [2] நடு-ஆணப்போர்வை இருக்கிறது. இந்தப் போர்வைக்குள் ஸிட்டோப்ளாஸமும், அதற்குள் [3] வர்ண ஜாலங்களினால் ஆன [4] ஜாலமானமும் அமைந்துள்ளன. இவை அனைத்திற்கும் நடுவே நடு-ஆணத்தின் வர்ண நிலையும் தோன்றுகிறது.

தந்தையின் லிங்க தாதுவைவிடத் தாயின் அண்ட தாது உருவில் பெரியது. இவ்விரு தாதுக்களும் தத்தமக்குரிய மேம்பாடான இலக்ஷணங்களோடு ஒன்றை ஒன்று அணுகினாலும், சினைப்படுகிற நேரத்தில் ஒவ்வொன்றும் சரிசமமான அளவிலேதான் தமது அம்சங்களைக் கர்ப்பாதானம் செய்கின்றன. அண்ட தாதுவின் நடு ஆணத்தின் ஒரு பாதியும், லிங்க தாதுவின் நடு-ஆணத்தின் ஒரு பாதியும் சேர்ந்து ஐக்கிய ஜீவாணுவினுடைய நடு-ஆணத்தை அமைக்கின்றன. தாயின் அண்ட தாதுவும் தந்தையின் லிங்க தாதுவும் தம்மைத் தாமே பங்கிட்டுக் கொடுக்கும் பொழுது, அவை ஸிட்டோப்ளாஸத்தைப் பற்றிக் கருதாவாம். தலை போகிற திசைக்கே வாலும் செல்லும் என்ற நியதிப்படி, ஸிட்டோப்ளாஸம் இயல்பாகவே இரு

1. **ஜீவாணுப் போர்வை**—உயிரணுவின் மேற்போர்வை. *cell membrane.*

2. **நடு-ஆணப்போர்வை**—நடு-ஆணத்தின் மேற்போர்வை. *New clean Membrane.*

3. **வர்ணஜாலம்,**—நிறமேற்றக்கூடிய ஒருவகைப் பொருளால் ஆன வலைக்கட்டுக் கோப்பு.

4. **ஜாலமானம்**—*Reticulum.* வலைக்கட்டுக் கோப்பு.



படம் 3

1. ஜீவாணுப் போர்வை. 2. நடு-ஆணத்தின் சவ்வாடைப் போர்வை. 3. வர்ண ஜாலம். 4. நடு-ஆணத்தின் வர்ணநிலை.



படம் 4

1. ஜீவாணுப் போர்வை. 2. மத்திய ஜாலம். 3. ஸிட்டொப்ளாஸம். 4. நடு-ஆணம். 5. வாகியோல் என்னும் சிற்றறை.

கூறுகப் பிரிகிறது. நடு-ஆணத்தைச் சூழ ஒரு சவ்வாடை யும் தோன்றுகிறது. இந்தச் சவ்வாடைக்குள் முத்துப் போல் தெளிந்து தோன்றுகிற சளியே ஒரு ஐக்கிய ஜீவாணுவின் நடு-ஆணமாகிறது.

மிட்டோஸிஸ் முறைப்படி, ஜீவாணுவின் வளர்ச்சி

நடு-ஆணத்தின் மத்தியில் கனதிப் பொருளால் ஆன ஒரு வலை-அமைப்புக் காண்கிறது. இந்த வலை அமைப் பிற்கு[1] ஜாலமானம் என்று பெயர். இந்த ஜாலமானத்தை ஆக்குகிற பொருள் சில வர்ணங்களால் எளிதில் நிறம் பெறும் தன்மை உடையது. ஆகையால், இந்த ஜால மானத்தை ஆக்கும் பொருளுக்கு[2] வர்ண ஜாலம் என்று பெயர். ஜீவாணு பிரிவதற்குமுன் அதனுள் சில மாறுதல் கள் ஏற்படுகின்றன. அப்பொழுது, வர்ண ஜாலத்தில் நூல் போன்ற பொருள் ஒன்று தோன்றுகிறது. இந்த நூல் போன்ற பொருள் துண்டு துண்டாக அறுந்து விடுகிறது. இப்படி அறுந்துவிடுகிற துண்டுகளுக்குத் தான் வர்ண தாதுக்கள் (குரோமஸோம்ஸ்) என்று பெயர். வர்ண தாதுக்கள் நீளத்திலும் பருமனிலும் ஒன்றுக்கொன்று ஒரே அளவான ஒற்றுமை உடையவை. வர்ண தாதுக்கள் ஒவ்வொன்றும் மேலிருந்து கீழாக இரு கூறுகப் பிளக்கின்றன. உடனே நடு-ஆணத்தின் சவ்வாடையும் சிதறிவிடுகிறது. புரோட்டொப்ளாஸத்தில், நடு-ஆணம் இருந்த இடத்தில், நூல் நூற்கும் கதிர்க்கம்பி யின் வடிவம் போன்ற கயிறு ஒன்று தோன்றுகிறது. கதிர்க்கம்பி போன்ற இந்தக் கயிற்றின் எதிரெதிரான கடைசி இரு கோடிகளும் நட்ட நடுவிடத்தை நாடிக் குவிகின்றன. கயிற்றின் இரு நுனிகளையும் கடைக் கோடிகள் என்ற சொற்றொடரால் குறிப்பிடுவோம். கதிர்க் கம்பி போன்ற கயிற்றுக்கு[3] மத்தியரேகாந்தரமாக வரிசைக் கிரமத்திலே குரோமஸோங்கள் அடுக்கப்படு கின்றன. சரிபாதியாகப் பிளந்த குரோமஸோங்கள்

1. ஜாலமானம்—*Reticulum*
2. வர்ணஜாலம்—*Cromatin*
3. மத்தியரேகாந்தரம்—*Equatorialplane*

ஜோடியாக அமைகின்றன. வர்ணதாது - ஜோடிகளில் ஒவ்வொரு அங்கமும் பிரிந்து மத்தியரேகாந்தர நிலையிலிருந்து அகன்று செல்கின்றன; கதிர்க்கம்பி வடிவமாகத் தோன்றுகிற கயிற்றின் இருகடைக் கோடிகளையும் நாடிப் பற்றுகின்றன. ஒரு வர்ணதாது பிளப்பதனால் ஏற்படுகிற இரு கால்களில் ஒன்று கதிர்க் கம்பிபோன்ற கயிற்றின் ஒரு கோடியைப் பற்றுகிறது; மற்றொரு கால் மற்றொரு கோடியைப் பற்றுகிறது.

இப்படியே வர்ணதாதுக்களின் பிளப்பினால் விளைகிற கால்கள் முதலில் கயிற்றோடு நின்ற மத்தியரேகாந்தர நிலையை விட்டு, எதிரெதிர்முகமாகச் சென்று, கயிற்றின் இருகோடிகளையும் பற்றுகின்றன. புரோட்டொப்ளாஸத்தில் மாறுதல் ஏற்பட்டு, வர்ணஜாலத்தில் நூல் வடிவமாகத் தோன்றுகிற பொருள் அறுகிறபொழுது, எத்தனை குரோமஸோங்கள் இருந்தனவோ அத்தனை பிளப்புக்கால்கள் கயிற்றின் கடைக்கோடிகளைப் பற்றிக் கொள்கின்றன. வர்ணதாதுக்கள் (குரோமஸோங்கள்) இரு தொகுதிகளாகப் பிரிந்து, தமது நிலையை மாற்றி, கயிற்றின் இரு பக்கங்களிலும் கடைக்கோடிகளைப் பற்றிக்கொண்டு நடு-ஆணங்களாக மாறிவிடுகின்றன. முதன் முதலிலே தோன்றிய நடு-ஆணம் ஒன்றேயாம். அதில் இத்தகைய மாறுதல்கள் ஏற்படுகின்றன. இந்த மாறுதல்களால் வர்ணதாதுக்கள் இரு கூறாகப் பிரிகின்றன. இந்த முறைப்படி ஒரு நடு-ஆணத்திலிருந்து இரண்டு நடு-ஆணங்கள் தோன்றியவுடனே, இவை இரண்டிற்கும் தனித்தனி சவ்வுப் போர்வைகளும், சவ்வாடைகளும் அமைகின்றன. போர்வை அமைந்தவுடனே, ஸிட்டொப்ளாஸமும் இரண்டு கூறாகப் பிரிந்து இரண்டு நடு-ஆணங்களையும் சூழ்ந்துகொள்கிறது. ஒரு ஜீவாணு இரண்டு படுவதற்கு, இப்பொழுது விவரித்த முறையைக் கையாளுமானால், இந்தப் பிரிவு முறைக்கு [1] மிட்டோஸிஸ் முறை என்று பெயர்.

1. மிட்டோஸிஸ்—*Mitosis.*



படம் 5

A, அமைதி உற்ற ஜீவாணு; நடு-ஆணத்தின் வர்ண ஜாலம் வலைக் கட்டுக் கோப்பானது. *B*, வர்ணஜாலத்தில் கயிறு தோன்றுகிறது. *C*, வர்ணஜாலத்தில் தோன்றிய கயிறு வர்ண தாதுக்களாக (குரோமஸோங்களாக)ப் பிரிகின்றன. *D* வர்ண தாதுக்களில் ஒவ்வொன்றும் நட்ட நடுவில் பிளக்கின்றன. *E*, அறுந்துவிட்ட குரோமஸோங்கள் மத்தியரேகாந்தரத்தின் இரு பக்கங்களிலும் எதிரெதிராக வரிசைக் கிரமத்தில் அமைகின்றன; அவை பிரிந்து செல்கின்றன. *F*. பாதியாகப் பிளவுண்ட குரோமஸோங்களின் கால்கள் கடையாந்தரங்களை நாடுகின்றன; ஒவ்வொரு கடையாந்தரத்திற்கும் ஆறு ஜோடி வீதம் செல்கின்றன. *G*, வர்ணஜாலத்தின் கயிறுகளாக அமைந்து பிரிந்துபோன தனித்தனி ஜீவாணுக்களின் வாழ்க்கையைத் தொடங்குகின்றன; இரண்டு ஜீவாணுக்களுக்குமிடையிலே உயிரணுச் சுவரும் அமைந்துவிட்டது. *H*, என்னும் படத்தில் காட்டியிருப்பதுபோல் இரண்டு ஜீவாணுக்கள் தோன்றிவிட்டன.

மிட்டோஸிஸ் முறைப்படி இவ்வாறு அமைந்த இரு ஜீவாணுக்களும் ஒரே ஜோடியாகும். இவை இணை பிரிவன அல்ல. ஆனால், திரும்பவும் இவ்விரண்டும் தனித் தனியே இரண்டு ஜீவாணுக்களாகும். அப்பொழுது இரண்டு ஜோடிகள் ஒன்று சேர்ந்திருக்கும். இந்த இணைபிரியாத இரு ஜோடிகளில் உள்ள ஜீவாணுக்கள் ஒவ்வொன்றும் தத்தம் முறைபிலே இரண்டாகப் பிரியும். அப்பொழுது நான்கு ஜோடிகளாகும். இவ்வாறாக, ஒரே ஜீவாணு பலவாகப் பெருகிக் கொண்டே போகும். இங்ஙனம் கணக்கில்லாத ஜீவாணு ஜோடிகளாகப் பெருகிப் பெருகி ஒரு கூட்டமாகி, ஜீவாணு மண்டலம் ஒன்றை அமைக்கும். ஜீவாணு மண்டலங்கள் பெருகுங்

தோறும் உயிர்நிலைகளின் உருவங்களாகும்; முழுவடிவமும் முடிவிலே தோன்றும்.

நமது உடல் கோடானுகோடி ஜீவாணு மண்டலங்களால் ஆனது. கண்ணுக்குப் புலப்படாத [1]அணு-ஜீவனாக இருந்தாலும், அதிலும் [2]ஜீவாணு மண்டலங்கள் காணப்படும். வளர்ச்சி நிலையில் உடல் இருக்கிற காலமெல்லாம், மிட்டோஸிஸ் முறைப்படியே ஜீவாணுக்கள் ஓய்வின்றிப் பிரிந்து பிரிந்து ஜீவாணு மண்டலங்களை அமைத்துக் கொண்டே இருக்கும். வளர்ச்சி என்றால், மிட்டோஸிஸ் முறைப்படியே நிகழும் ஜீவாணுவின் பிரிவு முறை எனலாம். ஜீவாணுக்கள் பிரிந்து பெருகி வருகிற பெருக்கத்திற்கு ஏற்றவாறு, ஜீவாணுக்களின் பருமனும் அதிகமாகிவரும். இவ்வாறாக உருவையும், பருமனையும் பெற்று உடல் வளரும்.

[3] மியோஸிஸ் முறைப்படி ஜீவாணுவின் வளர்ச்சி

மிட்டோஸிஸ் முறையில் வர்ண தாதுக்கள் பிளவுண்டு பெருகுவதைப் பார்த்தோம். ஆனால், வர்க்கதாது என்னும் ஜீவாணுக்களின் வளர்ச்சி முறையைப் பார்த்தால், முற்றிலும் வேற்றுமையான ஒரு வளர்ச்சிப் போக்குப் புலப்படுகிறது. வர்க்கதாதுவின் வளர்ச்சி முறைக்கு மியோஸிஸ் வளர்ச்சி முறை என்று பெயர். இந்த வளர்ச்சி முறையில் வர்ண தாதுக்கள் நெடும் போக்கில் இரண்டாகப் பிளப்பதில்லை. இதற்கு மாறாக, வர்ண தாதுக்கள் [4]சமநிலைச் ஜோடிகளாகப் பிரிந்து, நடு ஆணத்தின் மத்தியில் தோன்றும் கதிர்க்கம்பி போன்ற கயிற்றின் மத்திய ரேகாந்தரத்தில் நிரல்பட அமைகின்றன. பின்பு, சமநிலை ஜோடிகளின் அங்கங்கள் பிரிந்து, நடு-ஆணத்தில் தோன்றும் கதிர்க்கம்பி போன்ற கயிற்றின் எதிரெதிரான கடைக்கோடிகளைப் பற்றிக்கொள்கின்றன. வர்ண தாதுக்கள் பிளவுபடாமல் சமநிலை ஜோடிகளாகச்

1. ஜீவாணு மண்டலம் (*Cell Group*).
2. அணுஜீவன் - (*Bacteria*).
3 மியோஸிஸ் - (*Meiosis*)
4. சமநிலை ஜோடிகள் - (*Homologous Pair*)

சேர்ந்து கயிற்றின் கடைக்கோடிகளைப் பற்றுவதனால், மியோஸிஸ் வளர்ச்சி முறையில் வர்ணதாதுக்களின் எண்ணிக்கை இரட்டிக்காமல் குறைவுபடுகிறது. இருபத்திநான்கு வர்ண தாதுக்கள் சம நிலைச் ஜோடிகளாகும் பொழுது, பன்னிரண்டு ஜோடிகளாகிவிடும். பன்னிரண்டு சமநிலைச் ஜோடிகள் கயிற்றின் இருபக்கங்களிலும் ஆறு ஆறு ஜோடிகளாக வகுக்கப் பெற்றிருக்கும். கயிற்றின் ஒருபக்கத்தில் இருக்கும் ஆறு ஜோடிகளும், மறு பக்கத்தில் இருக்கும் ஆறு ஜோடிகளும் மத்திய ரேகாந்தர நிலைபெறும். பின்பு, இந்த ஜோடிகளின் அங்கங்கள் இணை பிரிந்து, எதிரெதிரான கடைக்கோடிகளைப் பற்றிக்கொள்ளும். இந்த முறையில் இரண்டு நடு-ஆணங்கள் அமையும். வர்ண தாதுக்களின் மொத்தத் தொகையில் சரிபாதிதான் இவ்விரு நடு-ஆணங்களில் தோன்றும். வர்க்க தாதுவின் முதல் ஜீவாணு மட்டுந்தான் மியோஸிஸ் முறையைக் கையாண்டு இரட்டை ஜீவாணுவாகும். இதனையே ஐக்ய ஜீவாணு என்று கூறுகிறோம். இவ்விரண்டு ஜீவாணுக்களில் ஒவ்வொன்றும் மிட்டோஸிஸ் வளர்ச்சி முறையைக் கையாண்டு பெருகத் தொடங்கும். மிட்டோஸிஸ் வளர்ச்சி முறையில் வர்ண தாதுக்களின் தொகை குறைவதில்லை. மியோஸிஸ் வளர்ச்சி முறைக்கும் மிட்டோஸிஸ் வளர்ச்சி முறைக்கும் உள்ள இந்த வேற்றுமையை நாம் மறக்கலாகாது. சம நிலை ஜோடியாக அமைகிற வர்ண தாதுக்கள் தம்மைப் பங்கீடு செய்யும் பொழுது, நான்கு ஜீவாணுக்கள் தோன்றுகின்றன. லிங்க தாது என்னும் ஜீவாணு பங்கீடாகும் பொழுது நான்கு ஜீவாணுக்கள் தோன்றுகின்றன. இவை நான்கும் வர்க்க தாதுக்களேயாம். **ஸ்பெர்மெட்டஸோவா** என்னும் ஜீவாணு ஒவ்வொன்றும் இரட்டை ஜோடியான வளர்ச்சிக்கிரமத்தில் தோன்றும். ஆனால், இதே முறைப்படி அண்ட தாது என்னும் ஜீவாணு பங்கீடு ஆனபோதிலும், விளைகிற நான்கு ஜீவாணுக்களில் ஒன்றே ஒன்று மட்டும் 'முதிர்ந்த அண்ட தாதுவாகிறது. மற்றவை முற்றும் சீரழிந்து சிறு ஜீவாணுக்களாக ஒடுங்கி

விடுகின்றன. ஒரு லிங்க தாது நான்காகப் பங்கீடு ஆனாலும், இத்தொகுதியில் ஒரே ஜீவாணு முதிர்ந்த அண்ட தாதுவின் ஜீவாணுவைவிடச் சிறியதாக இருக்கும். அண்ட தாதுவின் பருமன் லிங்க தாதுவின் எண் பெருக்கத்தைச் சரிக்கட்டிவிடுகிறது.

அண்ட தாதுவுக்குத் தானாய் இயங்கும் திறம் இல்லை. ஆயினும், அது உணவுச் சத்தை உடையது. இயங்கும் சக்தியைப் பெற்றிருக்கும் லிங்க தாதுவுக்கோ நடு-ஆணத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கிற ஒரு வாலும் உண்டு. வர்க்க தாதுவாகிய ஜீவாணுவுக்கு [1] ஒற்றைப் பங்கு பெறுபவை (ஹாப்லாய்டு) என்றொரு காரணப் பெயரும் உண்டு. சினைப்பட்ட பிறகு அமைகிற ஐக்கிய ஜீவாணுவுக்களுக்கும், அவ்விரண்டிலிருந்தும் உடலின் வளர்ச்சிக்குக் காரணமாக ஓயாமல் பெருகிக்கொண்டே இருக்கும் ஜீவாணுக்களுக்கும் [2] இரட்டைப்பங்கு பெறுபவை (டிப்லாய்டு) என்று பெயர். வர்ண தாதுக்கள் பாதியாகக் குறைந்துவிடுகிற மியோஸிஸ் வளர்ச்சி முறையிலும், வர்ணதாதுக்கள் பிளந்து இருபங்காகிப் பெருகும் மிட்டோஸிஸ் வளர்ச்சி முறையிலும் பாரம்பரிய நியதியின்படி இயங்குகிற இடையறாத தொடர்ச்சிப் போக்கு ஒன்று அமைந்திருக்கக் காணலாம். இத்தொடர்ச்சிப் போக்கு, பாரம்பரியமாகச் சுழலும் ஜீவ சக்கரம் போன்றது. ஓர் உயிர் மாலை எனவே அமைந்தது. இவ்விருவகையான வளர்ச்சி முறைகளில் வர்ண தாதுக்கள் பாதியாகக் குறைந்து பெருகும் மியோஸிஸ் வளர்ச்சியிலேதான் பாரம்பரிய நியதியை அமைக்கிற இரகசியங்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன. மியோஸிஸ் என்னும் வளர்ச்சி முறையிலே, பாரம்பரியமாக வருகிற லக்ஷணங்களிற் சில கழிந்துபடக்கூடிய இயற்கை விந்தை ஒன்று அமைந்திருக்கிறது. சில பரம்பரைக் குணங்கள் கழிந்துபட்டாலும், வேறு சில பரம்பரைக் குணங்கள் பெருகி நிற்கிற இயல்பும் காணப்படுகிறது. இவை யாவும் வர்ணதாதுக்களின்

1. ஒற்றைப் பங்கு பெறுபவை—ஹார்ப்லாய்டு (*Haploid*)
2. இரட்டைப் பங்கு பெறுபவை—டிப்லாய்டு (*Diploid*)

சமஜோடிகள். எதிரெதிராகப் பங்கீடு பெற்றுக் கயிற்றின் கடைக்கோடிகளைப் பற்றுகிறபொழுது நிகழ்வன. அவளும் தன் பரம்பரைக் குணங்கள் எல்லாம் அடங்கிய வர்ணதாதுக்களைக்கொண்டு வந்து வரிசையாக வைத்தாள்; இவனும் தன் பரம்பரைக் குணங்கள் எல்லாம் அடங்கிய வர்ணதாதுக்களை வரிசையாக வைத்தான்; அண்ட தாதுவும் லிங்கதாதுவும் கலந்த நேரத்திலே, அவளுடைய வர்ணதாதுக்களில் சில கழிந்துபட்டன. இவனுடைய வர்ணதாதுக்களில் சில கழிந்துபட்டன. கழிந்துபட்டவைகளோடு பரம்பரைக் குணங்களிற் சில இருகட்சியிலும் கழிந்துபட்டன. எஞ்சிய வர்ணதாதுக்கள் கூடின. ஆணின் பரம்பரைக் குணத்தில் ஒரு பாதியும் பெண்ணின் பரம்பரைக் குணத்தில் மற்றொரு பாதியும் சேர்ந்து ஐக்கிய ஜீவணுவில் உருக்கொண்டுவிட்டன. மங்கை ஒரு பங்கிலே புத்துயிர் உதயமாயிற்று.

பாரம்பரிய நியதிபற்றிக் கர்ப்பாதான விஞ்ஞானம் கூறுகிறவற்றை இதுவரை ஒருவாறு தெரிந்துகொண்டோம்.



படம்

அ என்பது மிட்டோஸிஸ் வளர்ச்சி முறையிலே வர்ணதாதுக்கள் மத்திய ரேகாந்தரமாகப் பிளவுபடுகின்றன, என்பதைக் காட்டுகிறது.

ஆ என்பது மியோஸிஸ் வளர்ச்சி முறையில் குரோமஸோம்கள் சமநிலை ஜோடிகளாகக் கூடியபிறகு அவை பிரிவுபடுகின்றன என்பதைக் காட்டுகிறது.

லிங்கதாதுவில் இருபத்துநான்கு வர்ணதாதுக்கள் உண்டு என்றும், அவ்வாறே அண்டதாதுவிலும் இருபத்து நான்கு வர்ணதாதுக்கள் உண்டு என்றும் கர்ப்பாதான விஞ்ஞானம் கூறுகிறது. இவை சரிபாதியாகக் குறைந்து இருஜோடி ஜீவாணுக்களைத் தோற்றுவிப்பதிலேதான் பெற்றோரின் பரம்பரை இயல்புகள் மக்களிடையே மாறி மாறி அமைகிற பாரம்பரிய நியதி உருவாகிறது. இன்னும் விரித்தால் இது பெருகும் என்று அஞ்சி இத்துடன் நிறுத்துவோம்.

குலத்தளவே ஆகுமாம் குணம்

கர்ப்பாதான விஞ்ஞானம் பரம்பரை நியதியைத் தெளிவாக்கும் என்பதை அறிந்தபொழுது, பலர் இந்தத் துறையில் ஆராயத் தொடங்கினார்கள். சினைப்படுவதற்கு முன், வர்க்கதாதுக்களின் வர்ண தாதுக்கள் அடைகிற மாறுதல்களை வெகு நுட்பமாக ஆராய்ந்தார்கள்; பரம்பரை நியதிகளை வெகு தெளிவாக வகுத்தார்கள். வேறு பல விஞ்ஞானிகள் மனிதர்களைத் தொகுதி தொகுதியாகப் பிரித்து ஆள் தோறும் பாரம்பரிய நியதியாகத் தோன்றுகிற குணவிசேஷங்களை ஆராயத் தொடங்கினார்கள். விஞ்ஞான முறைப்படி நிகழ்ந்த இவ்வகை ஆராய்ச்சிகளிலே பெரும் புகழ் பெற்றவரிடையே முந்தி நிற்பவர் ஸர் பிரான்சிஸ் கால்டன் என்னும் பேரறிவாளரே ஆவர்.

அவர் 1869-ம் ஆண்டில் [1] **பாரம்பரிய மேதா விலாசம்** என்னும் நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூலில் பாரம்பரிய நியதியைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் ஆராயவுமில்லை; முடிவு கட்டவுமில்லை மனித சரித்திரத்தில் பாரம்பரிய நியதி எப்படி ஓடிக்கொண்டிருக்கிறது என்பதைப் பொதுவாகக் கூறியபிறகு, ஆராய்ச்சிக்குத் தெரிந்து கொண்ட திறமை, திராணி, உயரம், சில நோய்கள் முதலியன் பாரம்பரிய நியதியின்படி எவ்வாறு மக்களிலும், மக்களின் மக்களிலும் தோன்றுகின்றன என்ப

1. *Hereditary Genius.*

தனை விரிவாக எழுதியுள்ளார். தாம் தெரிந்துகொண்ட விஷயங்கள் எந்தெந்தக் குடும்பங்களில் சிறந்து விளங்கு கின்றன என்று தேடிப்பார்த்தார். உலகம் போற்றத் தகுந்த மேதா விலாசம் திடீரென்று ஒரு குடும்பத்தில் குதித்துவிடுவதில்லை என்றும், உலகம் வியக்கத் தகுந்த ஏற்றமான திறமை திராணிகள் எந்தக் குடும்பத்திலும் எதிர்பாராத வண்ணம் உதயமாவன அல்ல என்றும் விளக்கிக் காட்டி உள்ளார்.

உலகம் புகழும் இரவீந்திரநாத் தாகூரும், ஓவியக் கலைஞரான கனேந்திரநாத் தாகூரும், மகா வேதாந்தி யான துவிஜேந்திரநாத் தாகூரும் சகோதரர்கள். இவர் களுடைய தந்தையாகிய தேவேந்திரநாதர் வங்காளத்தில் ஜமீந்தாராக இருந்தபோதிலும், ஜனகரைப்போல் இராஜ ரிஷியாக விளங்கியவர். இரவீந்திரநாத் தாகூருடைய பாட்டனர் அந்த நாட்களில் உலகியல் திறங்களில் புகழ் பெற்றவராக விளங்கினர். இவரது பெருமையை மாக்ஸ் முல்லர் பண்டிதரே எழுதியிருக்கிறர். தாகூர்களின் குலப் பொருமை சரித்திரப் புகழ் பெற்றது. ஆகையால், இரவீந் திரநாதர் எரி நட்சத்திரம் போலத் தோன்றியவரல்லர்.

நமது நாட்டில், இத்துறையில் ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு கால்டன் இன்னும் தோன்றவில்லை. ஆகையால், எண்ணிறந்த சான்ரேர்களின் மேதாவிலாசம் எங்கே தொடங்குகிறதென்று அறியக்கூடாமல் மறைந்து கிடைக்கிறது. கம்பனின் மேதா விலாசம் எங்கே தொடங்குகிறதென்று யாருக்காவது தெரியுமா? இறை வனின் திருவருளால் எல்லாச் சித்திகளும் கிடைத்து விடு கின்றன என்று காட்டுவதிலே நம்மவர்க்கு ஒரு தனி மகிழ்ச்சி. அதனுலேதான் மகாகவி காளிதாஸனுடைய மேதா விலாசத்திற்குக் காளியின் வரப்பிரசாதத்தைக் காரணமாக்கிக் கதை கட்டிவிட்டார்கள். காளிதாஸன் மகா காளியின் தாஸனுக இருக்கலாம். எல்லா உலகுக்கும் தாயாகிய பராசக்தி எத்தகைய மேதா விலாசங்களுக்கும் ஆதிகாரணமாக இருப்பவள்தான்; எனினும் காளிதாஸ னுடைய மேதா விலாசத்திற்கு ஒரு பாரம்பரிய நியதி

கட்டாயம் இருந்திருக்கவேண்டும். காளிதாஸனின் மேதா விலாசத்தின் வரலாறு எங்கே? சமீபத்தில் நமது நடுவில் வாழ்ந்து புகழுடம்பு பெற்றவராய் அகன்றுபோன கவி சுப்பிரமணிய பாரதியின் மேதா விலாசத்தைத்தான் ஆராய்ந்தவர்கள் உண்டா?

சார்ல்ஸ் டார்வின்

1809-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 12-ம் தேதி பிறந்தவர். 1882-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 19-ம் தேதி காலமானார். இவர் சிறுவயதிலேயே பிராணிகளை ஆராயும் அவாக் கொண்டார். பள்ளிக்கூடத்தில் மூடன் என்ற பெயரெடுத்தார். பின்பு, உலகம் புகழும் மேதாவியாகிப் பரிணாமக்கிரம விஞ்ஞானத்தை நிலைநாட்டினார்.

இன்று மேலை நாடுகளில் மேதா விலாசத்தின் பாரம்பரிய நியதியை ஆராய அநேகர் முனைந்து நிற்கிறார்கள். பெரும் புகழ்பெற்ற விஞ்ஞானிகளின் பரம்பரை, கவிவாணர்களின் பரம்பரை, வர்த்தக நிபுணர்களின் பரம்பரை, நிர்மாணிகளின் பரம்பரை என்றிப்படியே பல பரம்பரைகளை மேலைநாட்டு ஆராய்ச்சியாளர் பலர் ஆராய்ந்திருக்கிறார்கள். உலகப் புகழ்பெற்ற **சார்ல்ஸ் டார்வின்** என்னும் விஞ்ஞானியைப் பற்றிக் கேள்விப்படாதவர் மிகச் சிலரே. மனிதனுடைய தோற்றத்தைக் குரங்குக் கூட்டத்தினின்று தொடங்கிய புகழ் இவருக்கே உரியது.

இந்த உலகத்தின் [1] பரிணாமக்கிரமத்தை வெகுவிரிவாக எழுதிய பண்டித சிரோமணியின் வமிசாவளியைப் பாருங்கள்:

எராஸ்மஸ் டார்வின், * எஃப். ஆர். எஸ்.
1731—1802

- ராபர்ட் டார்வின், எஃப். ஆர். எஸ்.
  - ஸர் ஜி. எச். டார்வின் எஃப். ஆர். எஸ்.
    - ஸி. ஜி. டார்வின் எஃப். ஆர். எஸ்.
  - ஸர் பிரான்ஸிஸ் டார்வின் எஃப். ஆர். எஸ்.
  - மேஜர் லியோனார் டார்வின் எஃப். ஜி. எஸ்.
  - ஸர் ஹோரேஸ் டார்வின் எஃப். ஆர். எஸ்.
    - ஒரே மகன் எஃப். ஆர். எஸ்.
- சார்லஸ் டார்வின்
- எராஸ்மஸ் டார்வின்

இந்தப் பரம்பரையில் தோன்றியவர் அனைவரும் பல துறைகளில் மேதாவிகளாகி விளங்கினர். வேறு சில ஆராய்ச்சியாளர்கள் பல வம்ச பரம்பரைகளை ஆராய்ந்து பாரம்பரிய நியதி எவ்வாறு இயங்குகிறதெனக் கண்டு பல உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்கள். மற்றும் சிலர், பழி பாவங்களைச் செய்து துர்க்கீர்த்தி பெற்ற குற்றவாளிகளின் வம்ச பரம்பரைகளையும், பலவகை மனக்கோளாறுகளுக்கு ஆளாகிறவரது வம்ச பரம்பரைகளையும் ஆராய்ந்திருக்கிறார்கள். இந்தத் துறையில் ஆராய்ந்தவர் இருவர்.

டாக்டர் ஆர். எஸ். டக்டேல் என்பவர் "ஜூக்ஸ், பழி பாவம், பரம தரித்திரம், குலக்கேடு என்னும் பொருள்பற்றி ஓர் ஆராய்ச்சி" என்ற நூலை எழுதியுள்ளார். ஜூக்ஸ் பரம்பரையின் ஆதி

1. **பரிணாமக்கிரமம்**—சூழ்நிலை நியதிகளாலும், வாழ்க்கைப் போராட்டங்களாலும், பாரம்பரிய நியதிகளாலும், உயிர்கள் படிப்படியாக மாறி முன்னேற்றமடைந்ததை விரிவாகக் கூறுகிற விஞ்ஞானம். *The Science of Evolution.*

* ஆங்கில எழுத்தாகிய F என்பதனை எஃப் என்று எழுதியிருப்பதை வாசகர்கள் உணரவும்.

வரலாறு ஒரு டச்சுக் குடும்பத்திலிருந்து தொடங்குகிறது. தற்பொழுது தன்னிகரற்று விளங்குகிற நியூயார்க் நகரம் ஜூக்ஸ் குடும்பத்தினரது சரித்திரம் தொடங்கிய காலத்தில் மிகச் சிறிய நகராயிருந்தது. அச்சிறு நகரத்தைச் சார்ந்த ஒரு பாகத்தில் ஜூக்ஸ் குலத்தவரின் மூதாதையரான தலைவனும் தலைவியும் வாழ்ந்து வந்தனர். இருவரும் ஹாலந்து நாட்டினின்று குடியேறியவர்கள். இந்தக் குடும்பத்தின் தலைவன் காட்டில் வேட்டையாடியும் கடலில் மீன் பிடித்தும் தன் குடும்பத்தைக் காத்துவந்தான். இவன் மிதமிஞ்சிக் குடிப்பவன்; இவன் நேர்மையான துறையில் வேலை செய்து, பிழைப்புக்குத் தேவையான வருமானத்தைத் தேடிக்கொண்ட மாதங்களை விரல்விட்டுச் சொல்லிவிடலாம். இவன் நீண்ட ஆயுளும் பெற்றிருந்தான். இவனுக்குப் பல மக்கள் பிறந்தனர். இந்த மக்களின் வழியிலே தோன்றிய சந்ததியாரின் கணக்கை 1877-ம் ஆண்டு வரைக்கும் டக்டேல் என்பவரே குறித்திருந்தார்.

பின்பு ஈ. எச். எஸ்டாப்ரூக் என்னும் அம்மையார் 1915-ம் ஆண்டளவும், அந்தவேடனுடைய மரபில், பேரன் கொள்ளுப்பேரன் என்றிப்படியே, மக்களின் வழியிலே தோன்றியவர்களைக் கணக்கிட்டுப்பார்த்து 709 ஆண்கள்தோன்றியுள்ளனர் எனக் குறித்திருக்கிறார். இந்தப் பரம்பரையில் வயிற்றுப் பிழைப்புக்காக உண்மை நெறியில் வேலை செய்து வாழ்ந்தவர் சிலர். எனினும் இவர் மிகச் சிலரேயாவர். மற்றவர்கள் அனைவரும் பழிபாவங்களுக்கு ஆளானவர்கள். இந்தக் குலத்தில் தோன்றிய பெண்கள் பொதுமகளிராகி வயிறு வளர்த்தவர்கள். ஆண்களிலும், பெண்களிலும் பெரும்பாலோர் காலாடிகள். கொடிய வறுமையால் வருந்தியவர் பலர் இக்குலத்தில் உதித்தவர்கள். ஆதிக் குடும்பத்திலிருந்து 1915 வரையில் தோன்றிய இக்குலத்தவரில் ஏதேனும் தொழில் செய்யப் பழகியவர்களாக 20 ஆண்களைக்கூட எண்ண முடியாது. ஏதேனும் ஒரு தொழில் செய்யப் பழகியவர்களில் பத்து ஆண்கள் சிறையில் வாழ்ந்த காலத்தில் அதிகாரிகளின் கொடிய

தண்டனைகளுக்கு அஞ்சியே அத்தொழில்களைக் கற்றனர். இந்தப் பரம்பரையில் தோன்றிய நூற்றெண்பதின்மர் பிச்சையேற்று பிழைத்தவர். இவர்கள் அனைவரும் பிச்சை ஏற்று வாழ்ந்தகாலம் மொத்தமாக 800 ஆண்டுகள் என்பர். இந்தக் குலத்தில் தோன்றிய 709 ஆண் மக்களில், பயங்கரமான கொலைப் பாதகங்கள் செய்தவர்கள் 76 பேர்; ஜூக்ஸ் மரபில் தோன்றிய பெண்களில் சரிபாதிக்கு மேற்பட்டவர்கள் மணந்த புருஷர்களைத் துறந்து, பிற புருஷர்களோடு வாழ்ந்தவர்கள். முறைப்படி இல்லற வாழ்க்கையில் நிலைத்தவர்கள், மொத்தத்தில் 12 பெண்கள்கூட இல்லை. இந்தப் பரம்பரையில் தோன்றிய காலாடிகளுக்கும் சோம்பேறிகளுக்கும் அன்னம் அளித்த வகையிலும், அச்சம் விளைக்கும் கொலை பாதகங்களைச் செய்யாதபடி இவர்களைக் கட்டிக் காக்கப் போலீஸ் அதிகாரிகளை அமர்த்தியதிலும், குற்றம் செய்தவர்களுக்குச் சிறைச்சாலையில் வைத்து அன்னம் ஊட்டிய வகையிலும், இவர்கள் செய்த குற்றங்களை விசாரிப்பதற்காக நீதிபதிகள் வக்கீல்கள் முதலியவர்களை அமர்த்தியதிலும், நியூயார்க் மாகாண சர்க்கார் செலவு செய்த மொத்த தொகை 12,50,000 டாலர்கள்.

ஒரே குலத்தில் தோன்றியவர்கள் நாட்டிற்கு இவ்வளவு நஷ்டத்தை விளைப்பாராயின், நாட்டிலே குலவழியாக வரும் குணக்கேடுகளுக்கு ஆளாகிற பிற குலத்தினரால் வரும் மொத்தச்செலவைக் கணக்கிடுவதாயிருந்தால், நாம் நடுங்கி விடுவோம். பாரம்பரிய நியதியினால் ஆள்தோறும் காணப்படுகிற குணக் கோளாறுகளால் அல்லவா நம்முடைய நாட்டில் உள்ள போலீஸ் இலாகா அதிகாரிகளின் சம்பளத்தின் பெரும் பாகமும், பழிபாவங்களைச் செய்து சாதுக்களைத் துன்பப்படுத்துகிறவர்களுடைய குற்றங்களை விசாரிக்கும் நீதி ஸ்தலங்களுக்காகச் செலவாகும் பணத்தின் பெரும்பாகமும் விரயமாகின்றன? இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்போமானால், எந்தவிதத்திலாவது பாரம்பரிய நியதியால் ஒருவரிடம் தோன்றும் குணக்கோளாறுகளை மாற்றமுடியுமா என்று சிந்தித்து, ஏற்ற வழிமுறைகளைத் தேட நேரிடும். அதே சமயத்தில்

தற்காலிகமாக விளைகிற இன்பம் ஒன்றையே பெற்றோர் கருதலாகாதெனவும், வருங்காலச் சந்ததியைப் பற்றிய சிந்தனை இன்றி, சேர்க்கை தோஷத்தால் விளைகிற குடிக்கும், கொடிய கோபத்தால் நிகழ்கிற கொலைப்பாதகங்களுக்கும், பொருளாசையால் விளைகிற வஞ்சகங்களுக்கும், இன்ப வேட்கையால் ஏற்படுகிற பொல்லாத பழக்க வழக்கங்களுக்கும், காமப்போக்கான வாழ்க்கைக்கும், ஆளாகாதவாறு தம்மைத் தாமே அடக்கி ஆளவேண்டுமெனவும் நன்குணரவேண்டும். பெற்றோர் தமது மக்கள் மீது உண்மையான காதல் உடையவராயின், தம்மை எவ்வகையிலும் திருத்திக்கொள்ள முயலுவர். மனோசக்திக்கு அடங்காத பழக்க வழக்கங்களோ தன்மைகளோ மனிதனிடத்தில் இல்லை. இன்று நம்மை நாமே திருத்திக் கொள்வோமாயின், நம்மிடத்தில் காண்பனவும் குலவழியாக வந்தனவுமாகிய குணக்கோளாறுகள் நம்முடைய பேரப் பிள்ளைகளிடத்திலாவது பெரும்பாலும் குறையும். நாளடைவில் குணக்கோளாறுகள் நமது குலத்தினின்றே மறைந்துவிடும். இதனால் அல்லவா 'குலத்தளவே ஆகுமாம் குணம்' என்ற பழமொழியும் நம் நாட்டில் வந்துற்றது.

2. நீரளவே ஆகுமாம் நீராம்பல்

நீராம்பலின் சூழ்நிலை

அல்லிக் குளங்களைப் பாருங்கள்! அல்லிப் பூண்டிற்குச் சூழ்நிலை அது முளைத்து வளரும் நீர் நிலையே. குளமோ, குட்டையோ, மடுவோ, எதுவாயினும், அதில் மழைக்காலத்தில் எவ்வளவு நீர் நிரம்புமோ அவ்வளவிற்கு நீண்ட தண்டுகளையே இப்பூண்டு பெற்றிருக்கும். மலர்களின் தண்டுகளோ நீர் மட்டத்திற்கு மேலே சற்றுக்கிளர்ந்து நிற்கும். நீர் மட்டம் தாழும்பொழுது கொடிகள் சுருண்டு நீரின் அடியில் கிடக்கும். நீர் மட்டம் உயரும்பொழுது அல்லித் தண்டும் நீண்டு எழும். அல்லிப் பூண்டு, தான் வளரும் நீர்நிலையின் ஆழத்திற்கு ஏற்படும் ஏற்றத் தாழ்ச்சியை வெகு விரைவில் திட்டம் செய்து விடுகிறது.

குழந்தையின் சூழ்நிலைகள்

உலகத்தில், உயிர்களின் வளர்ச்சியைத் திட்டம் செய்வன சூழ் நிலைகளே. இதை விளக்கும் இயற்கைத் திருஷ்டாந்தம் என்றே அல்லிப் பூண்டைக் குறிப்பிட வேண்டும். நாம், நமது பெற்றோரிடமிருந்தும், பாட்டன், பாட்டி முதலிய மூதாதையரிடமிருந்தும், பாரம்பரிய நியதிக்கிரமமாக அமைகிற குணங்களை முன்னோர் தேடித் தந்த குலச் செல்வமாகப் பெறுகிறோம். பிறந்தபிறகு, வாழ்க்கை தொடங்குகிற நாளிலிருந்து சூழ்நிலை-நியதிகள் முக்கியமானவை. கருப்பையிற் கிடக்கிற கரு சீதோஷ்ணங்களுக்கும், அதிர்ச்சி, ஓசை, ஒலிகளுக்கும், பலவகையான ஆட்சிக் கட்டுப்பாடுகளுக்கும் ஆளகாமல், காப்புடனிருக்கிறது. கருப்பையில் உருவாகிற குழந்தை முற்றிலும் பாரம்பரிய நியதிக்கே அடங்கி இருப்பதாக நாம் கருத இடம் உண்டு. ‘சினைப் படுகிற காலத்தில் வர்ண தாதுக்கள் கலக்கிற கலப்பு நம்முடைய கையிலா இருக்கிறது? கடவுளே அந்த வர்ண தாதுக்களைக் கலந்து வைக்கிறார். அவர் அமைக்கிறவாறே குழந்தையும் உருவாகிறது’ எனச் சிலர் கருதலாம். ‘வயிற்றுக்குள் இருக்கிற குழந்தைக்கு சூழ் நிலைகளோடு தொடர்பில்லை’ என்று வேறு சிலர் கூறலாம். ‘கருவில் இருக்கிற குழந்தைக்குச் சூழ் நிலை தாய்தானே? அதற்குப் பிற சூழ்நிலைகளோடு என்ன தொடர்பு?’ என்று மற்றும் சிலர் கருதலாம். குழந்தையின் குணங்களுக்கும், உடலின் நிறத்திற்கும், அங்க அவயவ லக்ஷணங்களுக்கும் பாரம்பரிய நியதிகள் முதற் காரணங்களாக அமைகின்றவாறே, சூழ் நிலைகளும் முதற் காரணங்களாக அமைகின்றன. வளர்ச்சிக்கு உணவு தேவை. உணவைச் சூழ்நிலையிலிருந்து பெறவேண்டும். சூழ் நிலையாகிற தாய்க்குப் போதிய உணவிருக்கவேண்டும். அப்பொழுது தான் குழந்தையின் சினைப்பை - வாழ்க்கை க்ஷேமமாக அமையும்.

சினைப்படுவதற்கு முந்தியே சூழ்நிலைகள் பிறக்கப் போகிற குழந்தைக்குக் காரணமாகின்றன. உடல்

வளர்ச்சிக்கு உதவி செய்கின்ற பல [1] சுரப்பிகள் உள்ளன. சில சுரப்பிகள் இரத்தச் செழிப்பைக் காக்கின்றன. வேறு சில சுரப்பிகள் உடலின் உயரம் பருமன் முதலியவற்றைத் திட்டம் செய்கின்றன. அவ்வாறே, ஆண் பெண் ஆகிய இருபாலாரிடத்திலும் லிங்க தாதுவையும் அண்ட தாதுவையும் போதிய அளவு வளம் பெறச் செய்வதற்கும் சில சுரப்பிகள் காரணமாகின்றன. சுரப்பிகளின் ஆரோக்கியமான இயக்கத்திற்குப் போஷிப்புச் சத்துக்கள் நிரம்பிய உணவுப் பொருள்களும், சுகாதார விதிகளின்படி அமைந்த வீடும், சூழ்நிலைகளும் இன்றியமையாதவை. சரீர இரசாயனத்தை ஆராய்கிற விஞ்ஞானிகள் உடலின் சுகநிலைக்கு இன்றியமையாத வைட்டமின்களையும், அவற்றின் தேவை அளவுகளையும் வரையறுத்துக் கூறுகிறார்கள். இவ்வளவு அரிசி சாப்பிட்டால் இத்தகைய போஷிப்புச் சத்துக் கிடைக்கும் என்றும், இவ்வகையான காய்கனிகளை உண்டால் இன்னின்ன வைட்டமின்கள் கிடைக்கும் என்றும் விளக்கியிருக்கிறார்கள். தாய் சாப்பிடும் உணவில் போஷிப்புச் சத்துக்களும் வைட்டமின்களும் ஏற்றத் தாழ்ச்சியாக இருந்தால், சரீரத்தின் காவலாளிகளான அகச்சுரப்பிகளின் தொழிலிலும் ஏற்றத் தாழ்வுகள் காணப்படும்; சுரப்பிகளின் [2] நடுநிலை இயக்கம் குலையும்; சிசு-உற்பத்திக்குக் காரணமாகிய வர்க்க தாதுக்களும் அவற்றின்கண் அமைகிற வர்ண தாதுக்களும் கோளாறான நிலையில் அமையும். சூழ்நிலைகளாகிற தாய் தந்தையரின் சரீர நிலைமைகள் சிசுவைப் பாதிக்கின்றன. தாயுண்ணும் உணவில் ஏற்படும் போஷிப்புக் குறைவு நிறைவுகளால் சிசுவின் வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

உணவைச் சூழ்நிலையிலிருந்து பெறுவதற்கு வசதிகள் தேவை. கணவன் போதுமான அளவில் சம்பாதித்தால் மனைவி போதுமான அளவில் உணவைத் தேடிக்

---

1. சுரப்பிகள்—*Glands.*
2. நடுநிலை இயக்கம்—*Equilibrium.*

கொள்ள முடியும். கணவன் போதுமானபடி சம்பாதிக்க வேண்டுமானால் அவனுடைய திறமை திராணிகளை மதிப்பிட்டு, தகுந்த வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பைச் சமூகம் ஏற்றுக் கொள்ளவேண்டும். சமூகம் வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமானால், நாட்டின் செல்வ நிலை சரியானபடி அமைய வேண்டும். இப்படியே சூழ்நிலை நியதிகள் பெருகிக் கொண்டே போகும். இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, சினைப்பட்டு உருவாகி, கருப்பையில் வளருகிற குழந்தைக்கு ஏற்படுகிற சூழ்நிலைத் தொடர்பு ஒருவாறு விளங்குகிறதல்லவா ?

இடம் அகப்படாத குறை

'இடம் அகப்படாத குறையால் இந்திர பதவி அகப்படாமல் போச்சு' என்றொரு பழமொழியுண்டு. ஆம்; இது உண்மை. எதற்கும் தகுந்த இடம் அமையவேண்டும். குழந்தைகள் உலகத்தில் பிறக்கிற இடங்களைச் சிந்தனை செய்து பாருங்கள். 'இனம் இனத்தோடே, குலம் குலத்தோடே' என்றபடி, உலகில் மக்கள் பலநிலைகளில் இருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்பவர்கள் யாவரும் ஒன்றாகக்கூடி வாழ்கிறார்கள். துணிகளைச் சலவை செய்பவர்கள் ஒன்றாகக்கூடி ஓர் இடத்தில் வாழ்கிறார்கள். தோலால் பல பொருள்களைச் செய்பவர்கள் ஒன்றாகக்கூடி வேறோர் இடத்தில் வாழ்கிறார்கள். குழந்தையின் வாழ்க்கை, பிறக்கிற இடத்தைச் சார்ந்து தொடங்கிற்று. வண்ணார் வாழ்கிற இடத்தில் பிறக்கிற குழந்தையின் ஆரம்பக்கல்வி துணி மூட்டைகளைச் சார்ந்து வருகிற அனுபவ முத்திரைகளாகவே இருக்கும். துணிகளைச் சலவை செய்கிற விஷயமாக அவர்கள் உபயோகிக்கிற சொற்கள் வண்ணாரக் குழந்தைகளுக்கு நன்றாய்த் தெரியும். பொற்கொல்லரின் பிள்ளைகளுக்குச் சின்னஞ்சிறு வயதிலேயே தட்டாரத் தொழில்களைப் பற்றிய அறிவு ஏற்படுகிறது. வைத்தியர் வீட்டில் பிறந்த சிறுவன் பல மருந்துகளின் பெயர்களைத் தெரிந்து கொள்கிறான். பெற்றோர் செய்யும் தொழிலைப்பற்றிய அனுபவ முத்தி

ரைகள் பிள்ளைகளிடத்தில் இளமையிலேயே தோன்று கின்றன.

சமூக வாழ்க்கை இடந்தோறும் வேற்றுமைப் படுகிறது. நெல் வயல்கள் மிகுதியாக உள்ள இடங்களில் இருப்பவர் நிலத்தைப் பயிரிட்டு உண்டு வாழ்வர். வர்த்தகர் நகரங்களில் வாழ்வர். நமது நாட்டில் கோயில்களைச் சுற்றி ஊர்கள் தோன்றின. நதிக்கரையிலும் கடலோரங் களிலும் திருப்பதிகள் தோன்றின. வாழ்க்கை வசதிகள் அதிகமாக இருக்கும் இடங்களில் ஊர்களும், நகரங்களும் தோன்றின. வசதிகள் மிகுந்த இடத்தில் மக்களின் தொகை பெருகும். வசதிகள் குறைந்த இடத்தில் மக்க ளின் தொகை குறையும். நதிக்கரை நாகரிகம், கடற்கரை நாகரிகம், க்ஷேத்திர நாகரிகம், பட்டண நாகரிகம், பண்ணை நாகரிகம், சேரி நாகரிகம், என்றிப்படியே மனிதர்கள் வாழ்கிற இடத்திற்கு ஏற்றவாறு நாகரிகம் வேற்றுமைப்படுகிறது. குழந்தைகளின் வாழ்க்கைப் போக்குகளைப் பெற்றோர் வாழும் இடங்களே பெரும் பாலும் திட்டம் செய்கின்றன.

காட்டிலே வேட்டையாடித் திரியும் வேடனுடைய நாய்க்கும், செருப்புத் தைப்பவர்கள் வாழும் இடத்தி லுள்ள நாய்க்கும் குணவேற்றுமைகள் இல்லாமற் போகுமா? அக்கிரகாரத்து நாய்க்கும், சந்தைக்கடை நாய்க்கும் உணவு, பழக்க வழக்கங்கள் விஷயமாகப் பல வேற்றுமைகள் தோன்றும். குழந்தைகளின் குணங்களும் தன்மைகளும் அவர்கள் வளரும் இடத்திற்கு ஏற்றவாறு அமைகின்றன. குணகர்ம வேற்றுமைப்பாடுகளை ஆதார மாகக்கொண்டு மானிடச் சமூகம் பற்பல சாதிகளாகவும் இனங்களாகவும் பிரிந்து, தத்தம் பழக்க வழக்கங்களுக் கும், செய்யும் தொழில்களுக்கும் வசதி அளிக்கிற இடங் களிலே தனித்தனிக் குழுக்களாக வாழும். வயிற்றுப் பாதையிலே போகிறது மனப்பாதை. வயிற்றுப் பிழைப்பிற்கு ஒரு தொழில்; அந்தத் தொழிலில் தேர்ச்சி பெற ஒரு கல்வி; அந்தக் கல்வியைப் பெறுவதற்குப் பொருத்தமான மனப்பயிற்சி—என்றிவ்வாறே சூழ்நிலை

நியதிகள் இயங்குகின்றன. குறிப்பிட்ட ஒரு தொழில் செய்பவரோடு போட்டி போட்டு வெற்றிபெற மனிதன் பலவாருகச் சிந்தனை செய்கிருன். மானிட வாழ்வே வயிற்றுப் பாதையில் ஓடுவதுபோலத் தோன்றுகிறது.

குலாசாரம் வயிற்ருசாரம்

மண்பாண்டங்கள் செய்து வயிறு வளர்ப்பவன் ஒருவன் பிறந்த ஊர் வீரவைணவக் குழுவினர் வாழ்ந்த இடம். பாண்டங்கள் செய்பவனே சைவ சமயத்தைச் சார்ந்தவன். ஆகையால், இளமை முதற்கொண்டே வறுமையை எய்தினன். பொதுவாக, தமது கொள்கைகளுக்கு இசையாத சிறு குழுவினரை நெருக்குவதே மானிட உலகத்தின் கீழான மனப்போக்கு. அந்தக் குயவன் தான் கொண்ட சைவ நெறிப்படி திருநீறு பூசிய உடம்போடு கடைத்தெருவில் சட்டிபானைகள் விற்கச் சென்றபோது, அவை விற்பனை ஆகவில்லை. வைணவர்கள் தமது சமயத்தைச் சார்ந்த குயவர்கள் செய்த பாண்டங்களையே வாங்கி வந்தார்கள். சைவக் குயவனே இடந்தவறிப் பிறந்தவன் ; ஆகையால், வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஆளானன். வறுமையால் வருந்திய போதிலும், தொட்டில் பழக்கமாகிய திருநீறு பூசுதலைக் கைவிட விரும்பவில்லை ; முடிவிலே, வயிற்று நெறியைத் தழுவக் கருதி, தன் நெற்றியிலே திருநீறும், வயிற்றிலே திருநாமமும் தீட்டிக்கொண்டானும். இது கதையாயினும், சூழ்நிலையைத் தெளிவாக விளக்குகிறது. குலாசாரங்கள் குழந்தைக்குச் சூழ் நிலையாக அமையலாம்; பிற்காலத்தில் வயிற்ருசாரத்தால் குழந்தை தன்னை மாற்றித் திருத்திக்கொள்ள நேரும்பொழுது ஏற்படும் மனக்கோளாறுகளுக்கு, ஆரம்ப நாட்களில் குழந்தைமீது சுமத்துகிற குலாச்சாரங்கள் காரணமாகலாம்.

பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை

குழந்தை பிறக்கிற இடம் மட்டுமே அதன் சூழ் நிலை அங்கமென்று கொள்ளலாகாது. குழந்தையின் மன வளர்ச்சி சரீர வளர்ச்சிக்குச் சூழ் நிலையில் உள்ள

பொருள்களும் காரணமாகின்றன. உடல் வளர்ச்சிக்குச் சூழ்நிலைகளிலிருந்து உணவுப் பொருள்களைப் பெற வேண்டும். மன வளர்ச்சிக்கு, சூழ்நிலைகளிலுள்ள பொருள்களைப் பற்றிய அறிவும், அவற்றிற்கும் தனக்கும் உள்ள தொடர்புத் தெளிவும் தேவை. பால் வேண்டு மானல் பசு வேண்டும். பசுவேண்டுமானல் பசுவைப் பற்றி எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கவேண்டும். உண்ணச் சோறு வேண்டுமானல் அரிசிவேண்டும். அரிசி வேண்டுமானல் கடைக்குப்போக வழி தெரிய வேண்டும். வழி தெரிந்தால் மட்டும் போதாது. கையிலே அரிசி வாங்கக் காசும் வேண்டும். காசு கொடுத்து அரிசி வாங்கினல் போதாது. அதைச் சமைக்கவும் தெரிய வேண்டும். வானத்திலிருந்து கடைக்குள் அரிசி மழை யாகப் பெய்வதில்லை. நெல்லைப் பயிரிடத் தெரியவேண்டும். இப்படிப் பார்த்துக்கொண்டே போவோமானல், மானிட வாழ்க்கையை எண்ணிறந்த தேவைகள் நெருக்கிக் கொண்டிருக்கின்றன என்பது தெளிவாகும். தேவை களைக் கொடுக்கும் பண்டம் பொருள் முதலியன யாவும் மனிதனுடைய சூழ் நிலைகளாக அமைந்திருக்கின்றன. இங்ஙனம் குழந்தையினது உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும் சூழ் நிலைகளிலிருந்து தமக்குத் தேவையான பொருள்களைப் பெறுவதற்கேற்ற வசதிகளை ஆதாரமாக கொண்டிருக்கின்றன என்று தெரிய வருகிறது.

சூழ்நிலை ஏவல்கள்

பிறந்த நாள் முதல் ஒரு குழந்தையைப் பலவகையான சூழ்நிலை ஏவல்கள் ஏவிக்கொண்டே இருக்கின்றன. சீதோஷ்ண நிலைகள், ஏவுகிற ஏவலிலே குழந்தை உஷ்ணம் வேண்டுமென்று அழுகிறது. உஷ்ணத் துக்காகத் தாயின் அணைப்புத் தேவையாக இருந்தது. கொஞ்சம் வளர்ந்த பிறகு இந்த ஏவல்களினல் குழந்தை உடைகளை நாடுகிறது. பின்பு, மழையிலும் காற்றிலும் இருந்து விலகி ஒதுங்குவதற்காக மச்சிலும் குச்சிலும் தேடுகிறது. பசியும் ஒரு ஏவல்தான்; அது உணவு

தேடுகிற செயலுக்குக் குழந்தையைத் தூண்டுகிறது. பிணிகளும் ஏவல்களே; அவை சுகத்தைக்காக்கும் வழி முறைகளை நாடித் தேடி அவற்றைக் கைக்கொள்ளக் குழந்தையை வற்புறுத்துகின்றன. சூரியனும், சந்திரனும், பிராணி உலகமும் பிறந்த நாள்முதல் குழந்தையை ஏவிக் கொண்டே இருக்கின்றன. கதிரவன் உதித்ததும் உயிர்களைப் பலவகைச் செயல்களுக்கு ஏவிவிடுகிறான். இப்படியே இயற்கையிலிருந்து ஏவல்கள் ஓயாமல் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

உலகில் ஜனித்த நாள் முதல், தாயே பிள்ளையின் ஏவல் நிலையமாக இருக்கிறாள்; "இந்த நேரத்திலேதான் பாலூட்டுவேன்; இன்ன காலத்திலேதான் நீராட்டுவேன்; இன்னபொழுதிலேதான் உன்னைக் கொஞ்சிக் குலாவு வேன்; இன்ன வேளையிலேதான் உன்னை எடுப்பேன். இந்த நேரத்திலேதான் உன்னைத் தூங்க வைப்பேன்" என்று பல கட்டுத் திட்டங்களாகிற ஏவல்களை வகுத்து வைக்கிறாள். குழந்தை வளர வளர ஏவல்களும் வளரு கின்றன. தாயிட்ட ஏவல்களோடு தந்தையிடும் ஏவல் களும் தோன்றுகின்றன. உற்றார் உறவினர் இடுகிற ஏவல்கள், குழந்தை பிறக்க இடம் தந்த குழுவினர்கள் இடுகிற ஏவல்கள், அரசாங்கம் இடுகிற ஏவல்கள்—என் றிப்படியே கோடிக்கணக்கான ஏவல்கள் கூடிவந்து, குழந்தை செய்கிற செயல்களை ஆள்கின்றன; சிந்திக் கும் சிந்தனைகளை ஆட்சி செய்கின்றன; குழந்தையின் மன வளர்ச்சியையும் சரீர வளர்ச்சியையும் கட்டுத் திட்டம் செய்கின்றன. இந்தச் சூழ்நிலை ஏவல்கள் ஒரு குழந்தை யின் இயற்கைத் தன்மயங்கள் உருவாக இடங்கொடா மல், முற்றிலும் செயற்கை முறையிலே குழந்தை உரு வாகும்படி செய்து விடுகின்றன.

கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்

புகழ்பெற்ற வைத்தியரிடத்திலே பல ஆண்டுகளாகக் கம்பவுண்டர் உத்தியோகம் செய்கிறவன் தானே வைத்திய னாகிப் பிணியாளர்களுக்கு மருந்து கொடுக்கத் தொடங்கி

விடுவான். வடமொழி கலந்து பேசுகிற அந்தணர்களோடு நெருங்கி உறவாடும் முஸல்மான் ஒருவன் அந்தணர்களைப் போலவே பேசப் பழகிவிடுகிறான். சேர்க்கை வாசனை என்று ஒன்று உண்டு; மனிதன் தன்னைச் சூழ்ந்திருக்கும் சூழ்நிலைப் பொருள்களோடு சம்பந்தப்படுகிறபொழுது இந்தச் சேர்க்கை வாசனை ஏற்படுகிறது. ஆப்பிரிக்காக் கண்டத்திலே வாழ்ந்த நீக்ரோக்களைக் கரும்புத் தோட்டங்களிலும், பிற தோட்டங்களிலும் வேலை செய்வதற்காக முதலாளிகளுக்கு அடிமைகளாக விற்றார்கள். நாற்றுப் பிடுங்கி நட்ட பயிரின் செழுமை போல, இடம் பெயர்த்துக் குடியேற்றிய இந்தச் சமூகத்தார் சேர்க்கை வாசனையால் தம் முன்னோரிலிருந்து முற்றிலும் வேற்றுமைப்பட்ட பண்பும், நாகரிகமும் பெற்றுவிட்டனர். இன்று அமெரிக்காவில் உள்ள நீக்ரோக்களுடைய திறமை, திராணி, புத்தித்வங்களை ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சார்ந்த நீக்ரோக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சூழ்நிலைகள் ஒரு குழந்தையை எம்மட்டும் மாற்றி அமைக்கும் வல்லமை பெற்றிருக்கின்றன என்பது தெளிவாகும்.

புராதன ஆரியர்கள் தென்னாட்டிலே புகுந்து திராவிடர்களோடு ஒட்டி உறவாடிய பொழுது, திராவிடர்களுடைய நாகரிகம் ஓட்டமும் நடையுமாக முன்னேற்றமடைந்தது; தத்துவ ஞானங்கள் தோன்றின; தமிழ் மொழியிலே கலை நூல்கள் எழுந்தன; சிற்பக்கலைகள் ஓங்கின; சித்திரக்கலைகள் பொலிவுற்றன. பல்லவர்கள் என்னும் வகுப்பினரது முன்னோர் நமது நாட்டவரல்லர். ஆயினும், இவர்கள் நாகரிகத்திலே சிறந்து விளங்கிய தமிழர்களோடு உறவாடிய பொழுது, பல்லவர்கள் புது சிருஷ்டியாகி விட்டனர். இங்ஙனம் சூழ்நிலைகள் குழந்தையை உருவாக்கும் ஆற்றலை அளவின்றிப் பெற்றிருக்கின்றன.

ஆண்டி மகன் ஆண்டி

'ஆண்டி மகன் ஆண்டியானால் நேரமறிந்து சங்கூதத் தெரியாதா?' 'நட்டுவன் பிள்ளையை நடன கலாசாலைக்கு அனுப்பவேண்டுமா?' புகழ்பெற்ற சிற்பி

யின் மகன் குழந்தைப் பருவத்தில் இருந்தே உளியைக் கையாளப் பழகுகிறான். கண் கண்டதைக் கை செய்கிறது. அந்தப் பிள்ளை, தன்னைச் சூழக்கிடக்கிற உருவற்ற கற்கள் தன் தந்தையின் கை வல்லமையால் அழகிய வடிவங்கள் பெறுவதைப் பார்க்கிறான். அந்தக் குழந்தையின் சூழ்நிலை முழுவதும் சிற்பச்சூழ்நிலை. ‘பிறவிக்குணத்திற்கு மட்டை வைத்துக் கட்டமுடியுமா?’ இந்தக் குழந்தைக்குப் பாரம்பரிய நியதியும் சூழ்நிலையும் ஒன்றாக அமைந்துள்ளன. இதனால் அல்லவா குயவர் வகுப்பிலே தோன்றுகிற பிள்ளைகள் அதே தொழிலைப் பரம்பரையாகச் செய்து வருகிறார்கள்? பொற்கொல்லர்களின் பரம்பரையிலே தோன்றுகிற பிள்ளைகள் தலைமுறை தலைமுறையாகப் பொன் வெள்ளி அணிகலன்களைச் செய்கிறார்கள்? இவற்றிற்குக் காரணம் பாரம்பரிய நியதியோடு கூடிய சூழ்நிலை நியதியும் ஆகும்.

ஜெ, மக்கீன் காட்டல் (*J. Mackeen Caltell*)

1860 ஆண்டில் பிறந்தார். அமெரிக்க மானஸ சாஸ்திரி. முதன் முதலில் அமெரிக்காவில் மானஸசாஸ்திர ஆராய்ச்சிக் கூடத்தை ஏற்படுத்தினார். ஜர்மனிக்குச் சென்று தமது கொள்கைகளை அந்நாடு எங்கும் பரவச் செய்தார்.

சூழ்நிலைத் தத்துவ ஆராய்ச்சி

1906-ஆம் ஆண்டில் ஜெ. மக்கீன் காட்டல்[1] என்பவர் முதன் முதலாக அமெரிக்க விஞ்ஞானிகளைப்பற்றி ஓர் ஆராய்ச்சி செய்தார். இவ்வாராய்ச்சி அமெரிக்க விஞ்ஞானிகளது பிறப்பிடம், வாழுமிடம் முதலிய காரியங்களைக் கொண்டு, அவர்களது பரம்பரை, சூழ்நிலை, திறமை திராணிகள் முதலியன, எவ்வளவுதூரம் அவர்கள் விஞ்ஞானிகளாவதற்குச் சாதகமாக இருந்தன என்பதை மதிப்பிடுவதற்காக நடைபெற்றது. இந்த ஆராய்ச்சிகளின் மூலமாக விஞ்ஞான அறிவுநிலையின் முன்னேற்றம் அநேகமாகச் சூழ்நிலைத் தொடர்புகளினால் ஏற்படுகிறது என்பது தெளிவாயிற்று. அதிகமான ஜனத்தொகை, நாட்டின் செல்வநிலை, சமய சந்தர்ப்பங்கள், பள்ளிக்கூடங்கள், சமூகக் கட்டுத்திட்டங்கள், குறிக்கோள்கள் முதலிய காரணங்கள் விஞ்ஞான அறிவுடைய மக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்றன. இவ்விதம் கூறுவதனால், காட்டல் சாஸ்திரியார் பாரம்பரிய நியதி என்று ஒன்று இல்லையென்று கூறவில்லை. பாரம்பரிய நியதிதான் ஒருவனது குணங்களையும், திறமை திராணிகளையும் திட்டம் செய்கிறது. ஆனால், அந்தக் குணங்களும், திறமை திராணிகளும் செல்லுகிற நெறி சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது. நூற்றுமுப்பது புத்தித்வ ஈவு பெற்ற இரண்டு குழந்தைகளில், பெரிய குடும்பத்துக் குழந்தை கைதேர்ந்த வைத்தியனாகவும், கீழ்க் குலத்துக் குழந்தை போலீஸ் இலாகாவை அழவைக்கும் குற்றவாளியாகவும் மாறிவிடலாம்.

காட்டல் சாஸ்திரியார் தமது ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்திவிடவில்லை. ஏனைய நாடுகளைப் போலவே அமெரிக்காவிலும் பெரிய குடும்பங்கள் மிகச் சிலவே. ஆயினும் இந்தக் குடும்பங்களிலிருந்துதான் பல விஞ்ஞானிகள் தோன்றியிருக்கின்றனர். அமெரிக்க விஞ்ஞானிகளின் மொத்தத் தொகையில் ஏறக்குறையக் கால் பங்குதான்

1. *J. Mackeen Cattell.*

சாதாரணக் குடும்பங்களில் தோன்றியவர்கள். இதன் காரணம் என்ன? பாரம்பரிய நியதியா? நமது தேசத்தில் பாரம்பரிய நியதியே காரணமென்று கூறுவது ஒருவேளை உண்மையாக இருக்கலாம். ஏனெனில், கல்வியறிவு செழிக்கிற குடும்பங்கள் நமது தேசத்தில் பொதுவாகக் கீழான நிலையிலிருக்கும் குடும்பங்களோடு கலப்பன அல்ல. நமக்குள் இத்தகைய கொள்வினை கொடுப்பனை கிடையாது. ஆனல், அமெரிக்காவில் மணவினையில் கட்டுத் திட்டங்கள் இல்லை; ஒருவன் எந்தப் பெண்ணையும் மணந்து கொள்ளலாம். அப்படியானல், ஏன் சில குடும்பங்களில் மட்டும் விஞ்ஞானிகள் தோன்றுகிருர்கள்? இதற்குக் காரணம், சில குடும்பங்கள் மட்டும் விஞ்ஞான அறிவைப் பெருக்கி வளர்க்கக்கூடிய சூழ்நிலைகளைப் பெற்றிருக்கின்றன என்பதேயாம். வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிமாலை சூடிய விஞ்ஞானிகளின் மக்கள் குழந்தைப் பருவ முதல், தமக்கமைந்த சூழ்நிலைப் போக்கிற்கிசைந்த துறைகளில் ஈடுபட்டு அறிவில் வளர்ச்சி அடைகிருர்கள். 'விஞ்ஞானம் வீசைக்கு என்ன விலை?' என்று கேட்கும் வீட்டில் வளரும் குழந்தைகளைக் காட்டிலும், மேலே குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வளரும் குழந்தைகள் விஞ்ஞானிகளாவதற்குத் தகுந்த சூழ்நிலையைப் பெற்றிருக்கின்றனர் என்ற காரணம் தெளிவாகக் காணப்படுகிறது.

புத்தித்வம், திறமை, திராணிகளை அளக்கும் அளவு - திட்டங்கள்

குழந்தைகள் மந்த புத்தியாக இருப்பதற்குக் காரணம் சூழ்நிலையா? பாரம்பரிய நியதியா? அல்லது இவ்விரண்டுமா? என்ற கேள்விகள் எழுந்தன. அப்பொழுது திறமை திராணிகளையும், புத்தித்வத்தையும் மதிப்பிடுவதற்கான பரீட்சைத் திட்டங்கள் தோன்றலாயின. பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பரிணுமக்கிரம விஞ்ஞானம் என்ற புதுக்கொள்கையைக் கிளப்பிவிட்டுச் சிந்தனை உலகத்தில் பெரும் புரட்சி செய்த சார்லஸ்

டார்வினை முந்தியே குறிப்பிட்டிருக்கிறோம். இவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் **கால்டன்** என்பவர். இவர் மனிதனுடைய புத்தித்துவத்திலும் ஒரு பரிணாமக்கிரமம் இருக்க வேண்டும் என்று மனத்தில் துணிந்து கொண்டு, சரீர சம்பந்தமாகவும், மானஸீக சம்பந்தமாகவும் ஆள்தோறும் தோன்றுகிற குண வேறுபாடுகளை அளக்கப் பலவகையான முறைகளைக் கையாளத் தொடங்கினர். படங்கள் வரைவதில் கைதேர்ந்த ஓவியக் கலைஞர்கள், சிற்ப சாஸ்திரிகள் என்றவர் போன்ற பலரின் மனவியூகனத்தையும், கணித பண்டிதர்கள், நிர்மாணிகளின் மனப்போக்குகளையும், மனோபாவனைகளையும், மூளைப் போக்குகளையும், ஆற்றலையும், ஆராயத் தொடங்கினர்; மனப்போக்குகளின் தொடர்புகளைத் தெரிந்துகொள்ளப் பல உபாயங்களையும், உபகரணங்களையும் தாமாகவே தயாரித்துக் கொண்டார்; ஆள்தோறுமுள்ள வேறுபாடுகளை அளக்கத் தொடங்கினர்.

[1] **ஆல்ப்ரடு பினே, ஸைமன்** முதலான பண்டிதர்களும் இந்த ஆராய்ச்சி நெறியில் சென்றவர்களே. இவர்களும் பரீட்சைத் திட்டங்களை வகுத்தார்கள். ஆராய்ச்சியாளர் தாம் ஆராயத் தெரிந்துகொண்டவர்களுக்குப் பரீட்சைத் திட்டங்களின்படி ஆயத்தம் செய்த வினாப்பத்திரங்களைக் கொடுத்தனர். பரீட்சை செய்து பார்த்து, ஒவ்வொருவனும் ஒவ்வொரு துறையிலும் அடைந்திருக்கும் மன வளர்ச்சியை மதிப்பிட்டனர். விடைப்பத்திரங்களைப் பார்த்து ஒவ்வொரு விடைக்கும் மார்க்குக் குறித்தனர். வயது வாரியாகப் பரீட்சைத் திட்டங்கள் அமைந்திருந்தன. ஒரு சிறுவனுக்கு எட்டு வயதென்றால் அந்த வயதுக்கும் குறைவான வயதுடைய சிறுவர்களுக்குக் கொடுக்கும் பரீக்ஷைத் திட்டத்தின்படித் தயாரித்த வினாப் பத்திரங்களில் இருந்து தொடங்கி அந்தச் சிறுவன் எம்மட்டும் கடினமான வினாக்களுக்கு விடை எழுத முடியுமோ அம்மட்டும் எழுதச் செய்தனர். இந்தப் பரீட்சைத் திட்டங்களுக்குக் கிடைக்கும் விடைப்பத்திரங்கள் சிறுவனுடைய

1. *Alfred Binet and Simon.*

மனவளர்ச்சி நிலையைக் காட்டின. ஆறு வயதுச் சிறு வனுக்கு அளவுத் திட்டமாகக் குறித்திருந்த பரீட்சைத் திட்டத்திற்கும் அதிகமாக ஒரு சிறுவன் விடை எழுத முடியாவிட்டால், அவனுடைய வயதால், அவன் அடைந் திருக்கிற மனத்தின் வயது வளர்ச்சியை வகுத்து வரும் பலனால் அவனுடைய புத்தித்வத்தைக் குறிப்பிடத் தொடங்கினார்கள். சிறுவனுடைய வயது 8. அவனுடைய மன வளர்ச்சி வயது 6. ஆறை எட்டால் வகுத்து வரும் பலனைத் தசாம்சக் கணக்கில் குறிப்பிட்டார்கள். ஆறை எட்டால் வகுத்து வரும் பலன் $\frac{3}{4}$ இதைத் தசாம்சத்தில் குறிப்பிடுவதானால் ·75 என்று கூறவேண்டும். தசாம்ச மாகக் குறிப்பதில் காணப்படும் புள்ளியை நீக்கி, இந்தச் சிறுவனுடைய புத்தித்வ ஈவு 75 என்றனர். இந்த எண் தான் புத்தித்வ ஈவு[1] எனப்படும். நூற்றுக்கு மேற்பட்ட புத்தித்வ ஈவு, திறமை நிராணி புத்தித்வங்களின் பெருக்க மாகவும், அதற்குக் குறைந்தது, குறைவான புத்தித்வ ஈவு எனவும் மதிப்பிட்டனர். 'புத்தித்வ ஈவு' என்பதில் முதல் எழுத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு பு. ஈ. **75** என்று குறிப்பிடுவது மரபாயிற்று.

காட்டல் சாஸ்திரியாருடைய ஆராய்ச்சிகள் அறிவின் எல்லையைச் சூழ்நிலை வாயிலாக விளக்கின. **கே. கார்டன்**[2] சாஸ்திரியாருடைய ஆராய்ச்சிகள் அதற்கு மாறாகக் கீழான அறிவுடைய குழந்தைகளை ஆராய்ந்து, அவர் களுக்கு அமைந்திருந்த சூழ்நிலைகளினால் விளைந்த தீமை களை விளக்கிக் காட்டின. இவர் கால்வாய்ப் படகுகளில் வாழ்ந்த குழந்தைகளைப் பற்றி விரிவான ஆராய்ச்சிகள் செய்தார். இந்தக் குழந்தைகள் மிகவும் இழிவான எளிய வாழ்க்கைப்போக்கை உடையவர்கள். இவர்களுக்குப் பள்ளிக்கூடங்களும் இல்லை; சமூகத் தொடர்பும் இல்லை. சுருங்கச் சொன்னால், கால்வாய்ப் படகில் வளரும் குழந்தைகள் உலகத்தைப்பற்றி எவ்வித அறிவும் இல்லாத சூழ்நிலையில் வளர்கின்றனர். ஒரு படகு; அதன் நடுவில்

---

1. *Intelligence quotient.*
2. *K. Gordon.*

குளிருக்கும், மழைக்கும் ஒதுங்கச் சிறு கொட்டகை; அதைச் சுற்றிப் படகில் எடுத்துச் செல்லும் விறகு, தேங்காய் முதலிய பண்டங்கள்; இவைகளே இக்குழந்தைகளின் அண்மைச் சூழ்நிலைகள். இக்குழந்தைகள் இத்தகையபடகிலேயே வளர்ந்து வயதில் முதிர்ந்து வளரும்பொழுது தம் பெற்றோரைத் தவிர வேறெவரோடும் பழகவும் வேறெதை தெரிந்துகொள்ளவும் இவர்களுக்கு வழியில்லை. வாழ்க்கைப் போக்கையே திருத்தவும், அமைக்கவும் தகுந்த சூழ்நிலைகள் இவ்வாறாக இருந்தால், குழந்தைகளின் புத்தித்துவம் வளர்வது எப்படி? திறமை திராணிகள் வெளிப்படுதல் எப்படி? கார்டனுடைய ஆராய்ச்சியால் கால்வாய்ப் படகுக் குழந்தைகள் சராசரி 70 புத்தித்வ ஈவு உடையவர்கள் என்பது தெளிவாயிற்று. அதாவது, இக் குழந்தைகளில் பெரும்பாலோர் பொதுவாக வேறு குழந்தைகள் அடைகிற புத்தித்வ நிலைக்கு மிகவும் தாழ்ந்தவர்களாகவே தோன்றினர். இவ்விஷயமாகப் பின்னும் ஆராய்ச்சிகள் செய்தபோது, மற்றொரு உண்மையும் தெரியவந்தது. நான்குவயதுமுதல் ஆறு வயதுவரைக்கும் இக்குழந்தைகள் சராசரி 90 பு. ஈ உடையவர்களாகவும், பன்னிரண்டு வயது முதல் இருபத்திரண்டு வயது வரைக்கும் சராசரி 60 பு. ஈ உடையவர்களாகவும் தோன்றினர். இவ்வாறாகச் சூழ்நிலை நியதி, பாரம்பரிய நியதியைப்பெரிதும் பாதிக்கிறதென்பது தெளிவாயிற்று. நான்கு வயதில் அதிகப் புத்தித்வம்உடைய குழந்தைகள்கூட, வசதியற்ற சூழ்நிலைகளால் தமக்கு இயல்பாக இருக்கும் புத்தித்வத்தைக் குறைத்துக் கொள்கிறார்கள். குருவிக்காரக் குழந்தைகளை [1] ஆராய்ந்த போதும் இதே உண்மை உறுதியாயிற்று.

இரட்டைக் குழந்தைகள், வளர்ப்புப் பிள்ளைகள் விஷயமாக நிகழ்த்திய ஆராய்ச்சிகளிலும் சூழ்நிலையின் ஆற்றலே தெளிவாயிற்று. மூன்று மானஸ சாஸ்திரிகள் 95 பு. ஈ உடைய 74 அநாதைக் குழந்தைகளை எட்டாவது வயதில் வளர்ப்புப் பிள்ளைகளாகப் பெரிய குடும்பங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். இக்குழந்தைகள் நான்கு வரு

1. குருவிக்காரக் குழந்தைகள். *gypsy children.*

ஷம் தமக்குப் புகலிடமான வீடுகளில் வளர்ந்தனர். இதன் முடிவில் திரும்பவும் அவர்களுடைய புத்தித்வத்தைப் பரிசோதித்தபோது பு. ஈ. 102·5க்கு வளர்ந்திருந்தது. திரும்பவும் இதே 74 குழந்தைகளைச் செல்வாக்கும் மதிப்பும் உள்ள குடும்பங்களில் வளர்ந்த பிள்ளைகளாகவும், சாதாரணக் குடும்பங்களில் வளர்ந்த பிள்ளைகளாகவும் தனித் தனியே பிரித்து இரு வகுப்புக்களிலும் உள்ளவர்களுடைய புத்தித்வத்தை மதிப்பிட்டனர். மதிப்பும் செல்வாக்கும் உடைய குடும்பங்களில் வளர்ந்த பிள்ளைகள் சராசரி பு. ஈ. 105 உடையவர்களாகத் தோன்றினார்கள். சாதாரணக் குடும்பங்களில் வளர்ந்த பிள்ளைகள் பு. ஈ. 100 பெற்றிருந்தனர்.

வளர்ப்புப் பிள்ளைகளாக அனுப்புவதற்குமுன் ஒரே அளவான பு. ஈ. பெற்றிருந்த சிறுவர்கள், வளர்ப்புப் பிள்ளைகளாகப் புகலிடம் தந்த மனைகளின் கல்வி, செல்வ நிலைகளுக்கும், பிற சூழ் நிலைகளுக்கும் ஏற்றவாறு புத்தித்வ ஈவில் வளர்ச்சி பெற்றமை தெளிவாயிற்று.

இவற்றை எல்லாம் சிந்திக்கும்பொழுது குழந்தையின் உடல் வளர்ச்சிக்கும் புத்தித்துவ வளர்ச்சிக்கும் சூழ் நிலைகள் தலைமைக் காரணங்களாக அமைகின்றன என்பது தெளிவு.

தலையிலெழுத்து

விதி பெரிதா? மதி பெரிதா? அம்மம்மா! இது மிகப் பெரிய பிரச்னை. இதற்கு யாரால் பதில் அளிக்க முடியும்? குழந்தை பிறக்கும் நேரத்தில் பிரமன் குழந்தையின் தலையில் எழுத ஒரு வீட்டில் நுழைந்தாராம். வாசலில் காத்துக்கொண்டிருந்த சீடன் தன் ஞான திருஷ்டியால் பிரமனை நேர்முகமாகப் பார்த்து, "எங்கே போகிறீர்?" என்றான்; பிரமன் தான் செல்லும் நோக்கத்தைக் கூறியபொழுது, "நீர் என் குருவின் குழந்தை தலையில் எழுதியது என்னவென்று திரும்பி வரும்போது என்னிடம் மறைக்காமல் கூறுவதாயிருந்தால் உள்ளே போக

விடுவேன்'' என்றனும். பிரமன் அதற்கு இசையவே, சீடன் அந்தக் கடவுளை உள்ளே புக வழிவிட்டான். பிரமன் திரும்பிவந்தபோது "குருவின் குழந்தை தலையில் என்ன எழுதினீர்?'' என்று சீடன் கேட்டான். அதற்கு நான்முகனர், 'ஒரு எருமையும் ஒரு மூட்டை நெல்லும் பெற்றுப் பிழைத்திடுக!' என்று எழுதியிருக்கிறேன்' என்றாராம். பிறந்த குழந்தை பெரியவனுகி ஒரு எருமையையும் ஒரு மூட்டை நெல்லையும் வைத்துக்கொண்டு வறுமையால் வாடி வருந்துகையில், காசிக்குச் சென்று திரும்பி வந்த சீடன் குரு மைந்தனைக் கண்டு, அந்த நாளிலேயே அந்த எருமையையும், ஒரு மூட்டை நெல்லையும் விற்றுத் தான தருமங்கள் செய்யச் சொன்னன். அன்று முதல் பிரமனுக்கு நாள்தோறும் ஒரு எருமையும் ஒரு மூட்டை நெல்லும் தேடும் தொழில் ஏற்பட்டதாம். இப்படி ஒரு கதை உண்டு.

" இவன் தலையிலெழுத்து! அன்று எழுதிய எழுத்தை யாரால் கலைத்து எழுத முடியும்?'' என்று அடிக்கடி பெற்ருேர் தமது பிள்ளைகளைப்பற்றி நொந்துரைப்பதைக் கேள்விப்படுகிருேம். இத்தகைய பேச்சுக்களால் விளையும் தீமைகளைப் பின் ஓர் இடத்தில் குறிப்பிடப் போவதால், அதைப் பற்றி இங்கே சிந்திக்கவேண்டாம்; அதனை விடுத்து, விதியை மதியால் வெல்ல முடியுமா என்னும் கேள்விக்கே விடை காண முயலுவோம். உங்களுடைய குழந்தை எந்தப் பாரம்பரிய நியதியைக் கொண்டிருந்தாலும், அவனுடைய சூழ் நிலையைத் தொடக்கத்திலிருந்தே மாற்றி அவனுடைய வளர்ச்சிக்கு ஏற்றவாறு அமைக்கக் கூடுமாளுல், விதியை மதியால் பெரிதளவு வெல்ல முடியும், என்பதே நவீன மானஸ சாஸ்திரத்தின் ஆராய்ச்சித் துணிபு. சிறந்த சூழ் நிலைகளில் உதித்த சிறுவர்கள் உருப்படாமல் போவதற்குக் காரணம் அவர்களுடைய தலையில் எழுதுகிற பிரம்ம தேவர்களான பெற்ருேர்களே. "வீட்டுக்கு ஒரே பிள்ளை! அவன் கேட்டதை எல்லாம் கொடுக்க வேண்டும்'' என்ற மனப்பான்மையும், பிள்ளைகளைக் கவனிக்க நேரமின்றிப் பல விதமான அலுவல்

களில் சிக்கிக்கொண்டு அவதிப்படும் பெற்றோர்களின் சந்தானக் கவலையீனமும், வறுமையால் நேரிடுகிற முட்டுக் கட்டைகளும் மக்களின் வளர்ச்சியைத் தடுக்கிற வசதிக் குறைவுகளும், பிறவுமாகிய பல ஏதுக்கள் குழந்தையின் தலையிலெழுத்துக்கு அமைந்த கருவிகளாகின்றனவே அன்றி எந்தப் பிரம்ம தேவனும் புதிதாக வந்து குழந்தைகளின் தலையில் எழுதுவதில்லை. எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளில் காண்கிற பரம்பரை நியதிக் குணங்களைத் திருத்தி அமைத்திருக்கிறார்கள். மனம் போல மாங்கலியம். விரும்பினால் பெறக் கூடாதது எதுவும் இல்லை. ஆசையே எல்லையற்ற ஆத்ம சக்திகளுக்குக் காரணம். நமது பிள்ளைகள் உலகத்தில் பெரியவர்களாக வேண்டும்—என்ற விருப்பம் இருந்தால், எந்தப் பெற்றோரும் குழந்தையின் தலை-யெழுத்தை மாற்றி எழுத முடியும்; எந்த மனிதனும் தன் நிலைமையைச் சீர்திருத்தி அமைத்துக் கொள்ளவும், உயர்ந்த நிலையை அடையவும் முடியும்.

3. ஐந்திலே வளைத்தல்

I. வாய்வழியே

" அங்காந்திடப் பிள்ளை வாயுள் வையம் ஏழும் கண்டாள் "
—பெரியாழ்வார்.

முதல் பிள்ளை

முதல் குழந்தை பிறந்தது. பாட்டியும் அத்தையும் மாமியும், எடுக்கவும் பிடிக்கவும் ஓடி வருகிறார்கள். ஆதார மற்ற குடுவைபோல் குழந்தையின் தலை சாய்கிறது; உடல் குழைகிறது. பாட்டியும் அத்தையும் மாமியும் வெகு திறமை யாகப் பிள்ளையை எடுப்பதையும் நீராட்டுவதையும் அணைப் பதையும் கொஞ்சுவதையும் தாய் பார்க்கிறாள். அவளுடைய உள்ளத்தில் 'நானும் அப்படி என் பிள்ளையைத் திறமை யாகக் கையாள முடியுமா?' என்று சிந்திக்கிறாள்; அனுப வத்தில் தேர்ந்த உறவினரைக் கவனிக்கிறாள்; பிள்ளை வளர்ப்பு என்னும் விஷயமாகச் சில குணங்கள் இயற்கை யாகவே தாயிடத்தில் அமைந்திருக்கின்றன. ஆகையால் 'நானும் என் பிள்ளையை வளர்க்க முடியும்' என்ற நம்பிக் கையோடு அவள் பிள்ளையை வளர்க்கத் தொடங்குகிறாள்.

பத்திரிகைகள் வாயிலாகவும், புத்தகங்கள் மூலமாக வும் பிள்ளை வளர்ப்பைப் பற்றிய பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியும். மருத்துவத் தொழில் செய்கிற வரிடம் சந்தேகங்களைச் சொல்லித் தீர்த்துக்கொள்ள முடியும். பிள்ளையைப் பெற்ற நாள் முதல், உற்றார், உற வினர், ஊரில் பெரியவர், நண்பர், வைத்தியர், மருத்துவர் என்றிப்படியே பலரிடமிருந்தும் பிள்ளை வளர்ப்பு விஷய மாகப் பல செய்திகளைத் தாய் தெரிந்துகொண்டு ஈன்ற பொழுதிலிருந்து தன் மகவை வளர்க்கத் தொடங்கினாள். நாற்றிசைகளிலிருந்தும் திரட்டிச் சேர்க்கிற பிள்ளை - வளர்ப்பு ஞானத்தில் சரி எது, தப்பு எது என்பதை அனுபவத்தினாலேதான் ஒரு தாய் தெரிந்துகொள்ள முடியும். அனுபவம் வளர வளரத் தவறுகளைத் தவிர்த்துப் புதிய பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

சுவை இன்பம்

பிறந்தவுடனே குழந்தையின் கல்வியும், பயிற்சியும் ஆரம்பமாகின்றன. இயற்கையே பராசக்தி; அவளே எவ்வுயிருக்கும் தாய். இயற்கை, உயிர்களைச் சுகானுபவத்திற்கு நடத்தும் பாதைகள் இரண்டு: ஒன்று மூக்குப் பாதை; மற்றொன்று நாக்குப்பாதை. மனிதனிலும் தாழ்ந்த நிலையில் உள்ள பல மிருகங்கள் மூக்குப் பாதையிற் செல்வன. நாய்க்குட்டி மோப்பத்தால் தாயின் வருகையை உணர்ந்து பால் மடியைக் கண்டுபிடித்துப் பசியைத் தீர்த்துக்கொள்ளும். இப்படியே மூக்குப்பாதை வழியாகச் சென்று வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அடைகிற பிராணிகள் பல உள்ளன. மனிதனே தன் வாழ்வை நாக்குப்பாதையில் ஆரம்பிக்கிறான். மனிதனுடைய வாழ்க்கை - அனுபவங்கள் வாயிலே ஆரம்பமாகின்றன. குழந்தையின் மேலிதழைப் போல் உணர்ச்சி மிக்க உறுப்பு மற்றொன்று இல்லை. மேலுதட்டை மெல்லத் தொட்டால் குழந்தை சிரிக்கும்; வாயைத் திறக்கும்.

இயற்கை - உலகில் சில பிராணிகள் குஞ்சுப் பருவத்திலும், குட்டிப் பருவத்திலும், இருக்கிறபொழுதே உணவைத் தேடிப் பெறும் ஆற்றல் உடையன. பரிணமக் கிரமத்தில் (Evolution of Life) உயிர்கள் உயர்ந்த நிலையை அடையுந்தோறும், பெற்றோரின் பராமரிப்பை ஆரம்ப நாட்களில் பெரிதும் எதிர்பார்க்கும் இயல்பு குட்டி குஞ்சுகளில் வளர்ந்து வருகிறது. பரிணமக் கிரமத்தில் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்த மனிதக் குழந்தையைப் போல் ஆதரவற்ற பிராணி உலகில் மற்றெதுவும் இல்லை. உணவைப் பெறவும், சூழ்நிலைப் பொருள்களில் இருந்து தீமைகள் விளையாமல் காக்கவும், சுகத்தைப் பேணவும் உதவி செய்யத் தாய் இல்லாவிட்டால், குழந்தையின் வளர்ச்சிக்குப் பல தடைகள் ஏற்படும். ஆகையால், குழந்தைக்கும் தாய்க்கும் தொடக்கத்தில் இருந்தே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது. குழந்தை முதலில் தன் வாழ்வுக்கு இன்றியமையாத உணவை வாயின் மூலமாகவே பெற முடியும்.

வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்

பாலை நன்றாய் உறிஞ்சிக் குடிக்கத் தெரிந்த பிள்ளையே நன்றாய் வளரும். சில குழந்தைகளுக்குத் தாய்ப் பாலை நன்றாய் உறிஞ்சிக் குடிக்கத் தெரியாது. இக் குழந்தைகளுக்குத் தாய் உதவி புரியவேண்டும். குழந்தையின் வாழ்வு முழுவதும் வாயிலே ஆரம்பமாகிறது. பசிப்பிணியைத்தீர்க்கும் வாயிலாக இருப்பது வாய்தான். உலகத்தில் வாழ்கிற உயிர்கள் யாவும் இன்பத்தையே தேடுகின்றன. இன்பத்தைத் தருகிற வழிவகைகளைத் திருத்தினுல் உயிர்களின் செயல் போக்கையும் திருத்தி விடலாம். சர்க்கஸிலே மிருகங்களைப் பழக்குகிறவன் அவற்றிற்குத் தின்பண்டங்களைக் கொடுத்து முதலில் தன் வசமாக்கிக் கொண்ட பிறகுதான் அவற்றைப் பழக்குகிறுன். தின்பண்டங்களைக் கொடுத்து மிருகங்களுக்கு விருப்பமானவை எவை என்றும், விருப்பமில்லாதவை எவை என்றும் தெரிந்துகொள்கிறுன். மிகவும் விருப்பமான தின்பண்டத்தைக் காட்டி அவற்றைக் குதித்துக் கூத்தாடச் செய்கிறுன். முதன் முதலிலேயே வாய்ச்சுவையை அடக்கி ஆள்வதனுல் குட்டிகளின் செயல்போக்குகளைத் திருத்தி விடலாம். ஆகையால், தாய், குழந்தைக்குப் பாலூட்டுகிற முறையிலேதான் குழந்தையின் கல்வியும் பயிற்சியும் தொடங்குகின்றன என்று உறுதியாகக் கூறலாம்.

ஆரம்ப உணர்ச்சிகள்

இயற்கை மனிதக் குழந்தையை வழி நடத்துகிற பாதைகளில் வாய்ப் பாதையே முதன்மையானது. முதல் வருஷத்து அனுபவங்கள் யாவும் வாய்ப்பாதை வழியாக வருகிறவை. ஆரம்ப வருஷத்திலே குழந்தைகள் கையில் கிடைத்த பண்டங்களை யெல்லாம் வாயாலே ஆராய்ந்து பார்க்கும். பசி! பசி! பசி! ஓயாப்பசி! தின்னவேண்டும்! தின்னவேண்டும்! தின்னவேண்டும்! என்ற ஆசை. முட்டையில் இருந்துவந்த வண்ணாத்திப் புழுப்போலக் குழந்தையின் வாழ்வும் தொடங்குகிறது. வண்ணாத்திப்புழு தின்று தின்று வளர்கிறது. மனிதக்

குழந்தையின் ஆரம்ப நாட்களில் ஊட்டுவதற்காகக் குறித்த காலங்களின் தொகையையும், பாதி வளர்ச்சியடைந்தபிறகு குறித்த உணவு நேரங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். உணவை அருந்தும் நேரங்கள் ஆரம்பத்தில் அதிகமாகவே இருக்கின்றன. உண்பதனால் உடலில் ஏற்படும் இன்ப உணர்ச்சியே ஆரம்ப உணர்ச்சி. இத்துடன் ஏற்படுகிற பிற உணர்ச்சிகளும் உள்ளன. தண்மை உணர்ச்சி, வெம்மை உணர்ச்சி, உலர்வு உணர்ச்சி, ஏந்தல் உணர்ச்சி, அணைத்தல் உணர்ச்சி முதலிய தொடுகை உணர்ச்சிகளும் ஆரம்ப உணர்ச்சிகளே. இந்த ஆரம்ப உணர்ச்சிகள் ஆரம்ப மனோவிகாரங்களுக்குக் காரணமாகின்றன. உணர்ச்சிகள் பெருகப் பெருக மனோவிகாரங்களும் அதிகமாகின்றன. குழந்தை தாயின் மார்போடு அணைந்து கொண்டு, தாயின் உஷ்ணத்தைப் பெற்று, தன் பசிப்பிணி தீரப் பாலுண்டு இன்பத்தில் மகிழ்ந்து கிடக்கிறது.

பாலூட்டல்

இந்த இன்ப வாழ்க்கையைத் தொடங்கி வைக்கிற பாக்கியத்தைப் பெற்றவள் தாய். தகுந்த காரணங்களால், தாய்ப்பால் ஊட்டுவதற்கு முடியாமற் போனால், அப்பொழுது பசுவின் பாலையாவது, புட்டிப் பால்களையாவது, வாங்கித்தான் கொடுக்கவேண்டியதாக இருக்கும். இத்தகைய நிலைமை ஏற்பட்டாலும், குழந்தைக்குப் பாலருந்தும் நேரத்தில் கிடைக்கவேண்டிய அணைத்தல், ஆதரவுகளுக்குக் குறைவு ஏற்படலாகாது. பழங்கால வழக்கம் பால்சங்கு மூலமாகப் பாலூட்டுதல். இந்த வழக்கத்தில் காணப்படும் பெருங்குறைவு, தாடை எலும்பும், தாடைச் சதை, [1] பேசிகளும் சரியான வளர்ச்சி அடையாமற் போகின்றன என்பதே. தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கும் குழந்தையின் வாய்க்குத் தகுந்த உறுப்புப் பயிற்சி கிடைக்கிறது. பேசிகள் வலு அடைகின்றன. இதைக் கருதித்தான் மேலை நாட்டார் உறுதியான ரப்ப

1. பேசிகள்—*Muscles.*

ரினுல் செய்த சூப்பிக்காம்புகள் செய்து அவற்றைப் பாலூட்டும் புட்டிகளுக்குப் பொருத்தி உபயோகிக்கிறார்கள். பாலை ஊட்டுவதற்காகத் தற்பொழுது நமது தேசத்தில் மூக்குடையகெண்டிகைகளை உபயோகிக்கிறார்கள். இந்தக் கெண்டிகைகளுக்குக்கூட ரப்பரினுல் செய்த சூப்பிக்காம்புகளை உபயோகிக்க முடியும். குழந்தை பார்க்கும்படி அதன் எதிரில் பாலைச் சுடவைத்துப் புட்டியில், அல்லது கெண்டிகையில் ஊற்றவேண்டும். இப்படிப் பால் புட்டியைத் தயாரிக்கும்பொழுது, குழந்தையிடம் பிரியமாகப் பேசவும் வேண்டும். பின்பு, குழந்தையை மடியில் வைத்து அணைத்துக்கொண்டு பால் ஊட்டவேண்டும். இவை யாவும், இயல்பான முறையிலே தாய்ப்பால் அருந்தும்பொழுது குழந்தைக்குக் கிடைக்கக்கூடிய பல இன்ப அனுபவங்களின் குறைவுகளைச் சரிக்கட்டுவதற்காகச் செய்ய வேண்டியவை. புட்டியில் பால் அடைத்து, வேலைக்காரியிடத்திலாவது, குழந்தையைக் கவனிக்கும் செவிலித்தாயிடத்திலாவது ஒப்படைத்துவிடலாகாது. தாய்க்கு வீட்டிலே பல அலுவல்கள் இருக்கலாம். அந்த நேரங்களில் பிள்ளைக்குத் தேவையான தாய்-உறவின் இன்பங்களை அளிக்க முடியாமல் போகலாம். அத்துடன் தாயின் அரவணைப்பினுல் ஏற்படக்கூடிய அரிய மனோவிகாரங்களுக்குக் குறைவு ஏற்படலாம். இத்தகைய சிக்கலான தருணங்களிலும் குழந்தைக்குப் பாலூட்டுதலைத் தாயே கவனிக்கவேண்டும்.

பாலூட்டிப் பண்பூட்டும் தாய்

பால் அருந்தும் பொழுது ஏற்படுகிற இன்பம் தனி இன்பமே. தாய் ஊட்டுவது பால் மட்டுமன்று. பாலோடு குழந்தையின் உள்ளத்தில் அரிய மனோபாவனைகளையும் எழுப்புகிறாள். மேலும், குழந்தையின் உடலின் நன்னிலைக்குத் தாயின் அரவணைப்பும், பிரியத்தை வெளிப்படுத்தும் ஸ்பரிச உணர்ச்சி அருட்டல்களும் தேவை. இதன்பொருட்டே குழந்தைகளுக்கு வைத்தியம் செய்யும் வைத்திய சாலைகளிலும், குழந்தைகளைப் பராமரிக்கும்

இடங்களிலும் வேலை பார்க்கும் மருத்துவப் பெண்களுக்கு, பாலூட்டும் நேரத்தில் குழந்தையைக் கையாளவேண்டிய முறைகளைக் கற்றுக் கொடுக்கிறார்கள். மருத்துவப் பெண்கள் கற்றுக்கொண்டபடியே செய்கிறார்களா என்று வைத்திய சாலை அதிகாரிகளும் அவ்வப்போது மேற்பார்வையிடுகிறார்கள்.

ஆரம்ப நாட்களில் குழந்தைக்குத் தாயின் அமுத கலசங்கள் இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்துப் பால் அருந்தும் திறமை கிடையாது. நாட்கள் செல்லச் செல்ல, குழந்தை அதனை அறிந்துகொள்ளுகிறது. இந்த அறிவினால், தாய் தன் அருகில் வந்து பால் ஊட்டுவதற்கான நிலையில் பொருந்தும்பொழுது, குழந்தை தானாகவே பாலருந்தத் தொடங்குகிறது. புட்டிப்பாலில் வளருகிற குழந்தைகளுக்கு இத்திறமை மெதுவாகவே ஏற்படுகிறது. பாலூட்டுவதற்காகக் குறித்திருக்கும் நேரத்தைக் குழந்தைக்கே உரிமையாக்க வேண்டும். பலவிதமான அலுவல்களின் நெருக்கடிகளினால் அவசர அவசரமாகப் பாலூட்டுதல் நன்மையை விளைக்காது. புட்டிப்பாலை ஊட்டுவதாக இருந்தால், பரபரப்பாகப் புட்டியைக்கழுவிச் சூப்பி ரப்பரை மாட்டிப் பாலை அடைத்துக் குழந்தையின் வாய்க்குள் திணித்துவிட்டுக் கடமை தீர்ந்ததென்று வேறு அலுவல்களைக் கவனிக்கச் செல்வதும் தீமையாகவே முடியும். பால் அருந்தும் இன்பம் தாய்ப்பாலாக இருந்தால், பன்மடங்கு அதிகரிக்கிறது. புட்டிப்பாலாக இருந்தால் ஏற்படுகிற இன்பக்குறைவைச் சரிப்படுத்தக் குழந்தை பால் அருந்துமளவும் தாய் பொறுமையைக் கையாள வேண்டும்; குழந்தை பால் அருந்தும் வேளையில் தாய் நாவல் வாசிப்பதிலாவது, பிற விஷயங்களைச் சிந்திப்பதிலாவது கருத்தைச் செலுத்தலாகாது. பாலூட்டத் தனி இடம் வேண்டும்; வசதியாக அமர்ந்தோ, படுத்தோ, பாலூட்ட வேண்டும். பாலூட்டும் பொழுது, பிறரோடு பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

இந்த விதிகளுக்கும் மனத் தத்துவங்களுக்கும் என்ன தொடர்பு என்று சிலர் கேட்கலாம். குழந்தையின் கல்விப்

பயிற்சியைத் தொடங்குகிறவள் தாய். ஆரம்ப நிகழ்ச்சிகள் யாவும் குழந்தையின் இன்பவாழ்க்கையை உறுதி செய்வன. குழந்தையின் ஆரம்ப இன்பம் முழுவதும் உணவு தேடும் நிலையில் இருக்கிறது. இந்த இன்பத்தை அனுபவிக்கும் உறுப்புக்கள் நாவும் இதழ்களுமேயாம். இந்த இன்பத்தை விளக்கச் சூழ்நிலையிலிருந்து வருகிற ஒரே பொருள்—தாயிடமிருந்து வருவதாயினும் சரி புட்டியிலிருந்து வருவதாயினும் சரி—அது பாலே யாகும் தனக்கு வயிற்றில் இருந்த ஆதாரநிலை குலைவதால் ஏற்பட்ட "விழுந்து விடுவேனே? தாங்குவார் எவரும் இல்லாமற் போகுமோ?" என்னும் அச்சமும், அச்சத்தால் எழும் ஐயமும் பால் அருந்தல் என்னும் தேவையோடு நெருங்கிய தொடர்புடையவை. குழந்தையோடு நெருங்கி உறவாடுவதற்குக் கிடைக்கிற நேரம் மிகவும் குறுகியது. அந்த நேரத்தையும் குழந்தைக்கு அளிப்பதில் லோபம் காட்டினால், குழந்தையின் சந்தேகம் வளருகிறது. உலகத்தில் இன்பம் இல்லை என்ற எண்ணம் குழந்தையின் உள்ளத்தில் எழுந்துவிடலாம்; வாழ்க்கைக்குக் காரணமாக இருந்தவர்களிடம் மனக்கசப்பும் தோன்றலாம். குழந்தைக்கு இடங்கொடுத்த ஜன ஸமூகத்தில் ஆரம்பத்திலே அதற்கு அறிமுகமான முதல் அங்கம் தாய் அன்றோ? பின்புதான் தந்தை குழந்தைக்கு அறிமுகமான அங்கத்தினராவார். அதன்பின்பு பிற உறவினர்கள் குழந்தைக்கு அறிமுகமாகின்றனர். முதல் அங்கத்தைப்பற்றிக் குழந்தையின் உள்ளத்தில் ஆரம்பத்திலேயே சந்தேகம் தோன்றிவிட்டால், வளர்ந்து பெரியவனாகும்பொழுது, ஜன சமூகத்தின் மற்றெல்லா அங்கங்களைப் பற்றியும் சந்தேகம் படிப்படியாகத் தோன்றி வளரும். குழந்தை வளர்ந்தபிறகு மற்றவர்களோடு நட்புறவு கொண்டாடுவதில் கூச்சமும், அச்சமும் அடையும்.

செல்லம் கொடுத்துத் துன்புறல்

பாலூட்டும் நேரத்தில் குழந்தைகளைக் கொஞ்சிக் குலாவிச் சீராட்டுவதைப்பற்றி இவ்வாறு வற்புறுத்திக் கூறியபோதிலும், இதைப்பற்றி எச்சரிக்க வேண்டியதும்

இன்றியமையாததே. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும், பாலூட்டும் பொழுது அளவுக்கு மிஞ்சிக் கொஞ்சிக் குலாவிச் சீராட்டுதலும் தீமையாகிவிடும். தாய் தன் பிரியத்தையெல்லாம் மட்டுமிதமில்லாமல் கொட்டித் தலைகால் தெரியாத சந்தோஷத்தோடு குழந்தையைக் கொஞ்சிக் குலாவினால், நாளடைவில் குழந்தை-வளர்ப்பில் ஏற்படக் கூடிய சிக்கல்கள் பலவாறாகப் பெருகும். தொடுகை இன்பம் நாவால் பெறக் கூடிய இன்பத்திற்கு அடுத்தபடி. கையிட்டு அளாவினால் அமுதமும் காடிப்பானையிலே விழும். அடிக்கடிக் கையில் எடுத்துக் கொஞ்சிக் குலாவிச்சீராட்டி வளர்த்த பிள்ளை ஒரு கணமும் தரையில் தனியே கிடக்க விரும்பாது. தாயுடலின் அனலின்பத்தை அனுபவித்த குழந்தை அதே இன்பத்தை எப்பொழுதும் அனுபவிக்கவிரும்பும். முதலில் இவ்வின்பச் சுவைகாட்டிய பிறகு, அதை அளிக்கமறுத்தால் குழந்தை சும்மாவிடாது. ஆரம்ப நாட்களில் அளவு கடந்து சீராட்டிப் பாராட்டி வளர்த்த குழந்தைக்கு, பிறகு அது கிடைக்காவிட்டால், தாய் முந்திக் காட்டிய அன்பையும் பிந்திக் காட்டிய அன்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும். பிந்திக் காட்டும் அன்பில் பெருங் குறைவுகள் தோன்றும்பொழுது, தாய்க்குத் தன்னிடமிருந்த அன்பு குறைந்து வருவதாகக் கருதும். இந்த எண்ணம் பல மனக் கோளாறுகளுக்குக் காரணமாகும். இல்வாழ்க்கையால் கணவனிடமிருந்து கிடைக்கவேண்டிய இன்பங்கள் போதிய அளவு தனக்குக் கிடைக்கவில்லை என்ற சிந்தனை எந்தத் தாயின் [1] மன அயர்வுப் புலத்தில் பதுங்கிக் கிடக்கின்றதோ அந்தத் தாய்தான் தன் குழந்தையை மிதமிஞ்சிக் கொஞ்சிக் குலாவிச் சீராட்டித் தன் நேரத்தை வீணாக்கிக் குழந்தையையும் பாழாக்கத் தலைப்படுவாள்.

முதல் மாதிரி வேண்டாத பிள்ளை

கனகவல்லியின் கணவர் மரண நிதிக் கம்பெனியில் ஜில்லா ஏஜண்டாக வேலை பார்த்தவர். அவர் மாதத்தில் பத்து நாட்களே வீட்டில் தங்குவார். இருபது

1. *The Field of the Unconscious Mind*

நாட்களை வெளி ஊர்களில் கழிப்பார். வீட்டில் தங்குகிற பத்து நாட்களில் மூன்று மணி நேரங்கூடத் தம் மனைவியிடம் பேசி மகிழ்வதில்லை. மணியன் கனகத்திற்குப்பிறந்த முதல் குழந்தை. அவள் மணியனைக் கொஞ்சிக் குலவியதைப் பார்த்தவர்கள் "இப்படியும் குழந்தையைக் கொஞ்சிக் குலாவுவார் உண்டோ?" என்றனர். கணவரைப் பிரிந்திருக்கும் நாட்களிலும், அவர் வீட்டில் இருக்கும் நாட்களிலுங்கூட, அவளுக்கு மணியனைக் கொஞ்சி அணைக்கும் நேரங்களே இன்பம் விளைப்பவை. மணியனும் தாயின் அளவு கடந்த அன்பை அனுபவித்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். மணியனுக்கு இரண்டு வயது நிரம்புவதற்குமுன் சாரதா பிறந்து விட்டாள். கனகவல்லிக்குச் சாரதா பிறந்தது முதல், மணியனைக் கொஞ்சிக் குலாவிச் சீராட்டப் போதுமான நேரம் அகப்படவில்லை. சாரதாவைக் கவனிப்பதற்கே நேரம் போதாதென்று அவள் கருதினாள். மேலும், ஒன்றிற்கு இரண்டு பிள்ளைகளென்றால் அதற்கேற்ப, வேலைகளும் அதிகமாகிவிடும். அவள் மணியனைக் கொஞ்சிக் குலாவி வளர்த்தவாறு சாரதாவைக் கொஞ்சிக் குலாவி வளர்க்கப் போதுமான நேரமில்லை. கனகவல்லிக்குக் கல்யாணமாகி ஒரு வருஷம் முடிவதற்குள் மணியன் பிறந்து விட்டான். மணியனைக் கருத்தரித்த ஏழாவது மாதத்திலிருந்து அவளுடையகணவருக்கு ஊர் சுற்றித்திரியும் அவாப்பிறந்தது. அவர் வேலை பார்த்த கம்பெனியின் அதிகாரிகளுடைய தயவைப் பெற்று ஜில்லா ஏஜெண்டுப் பதவியைத் தேடிக் கொண்டார். அதுமுதல் கனகவல்லி எதையோ பறிகொடுத்தவள்போல மனச் சோர்வு அடைந்திருந்தாள். அந்த மனச் சோர்வைத் தீர்த்துவைக்கும் மருந்தாக மணியனும் பிறந்தான்.

சாரதா பிறந்தது முதல், கனக வல்லியும் குடும்பத் தொல்லைகளால் அனுபவம் அடைந்து, குழந்தைகளைப் பொறுமையோடு வளர்க்கத் தொடங்கினாள். மணியன் பிறந்தது முதல், அவனோடு கொஞ்சிக் குலாவுவதில்

பொழுது போக்கி இன்பத்தை அனுபவித்த கனக வல்லிக்குக் கணவரிடம் முதலில் இருந்த அன்பு குறைந்தது. அவள் இதை ஒருபொழுதும் ஒப்புக்கொள்வ தில்லை. தந்தைக்கும் மணியனிடம் உண்மை அன்பு பிறக்க வில்லை. அவருக்குச் சாரதாவிடந்தான் பிரியம் அதிகரித்தது. மணியன் தாயிடத்தில் தனக்கிருந்த உரிமையை வற்புறுத்தினன். முந்தியே தந்தையிடம் அவனுக்கு விருப்பமில்லை; தாயும் சாரதாவைச் சுட்டிக் காட்டி மணியனைத் தட்டிக் கழித்து வந்தாள். மணியனுடைய மன அயர்வுப் புலத்தில், தான் வேண்டாத பிள்ளையோ என்ற ஐயமும் எழுந்துவிட்டது. அவன் சாரதாவிடத்தில் பொறாமையும், பகையும் கொண்டான். அவனிடத்தில் தோன்றிய பொறாமையையும், முரண்டை யும் சகிக்கமுடியாமல் பெற்றோர் சிலதருணங்களில் அவனை அடித்தனர். சாரதாவிற்குப்பிறகு மூன்று பிள்ளைகள் பிறந்தனர். குழந்தைகளை வளர்ப்பதில் கனகவல்லியின் அனுபவங்களும் வளர்ந்தன. பிள்ளைகள் யாவரையும் ஒன்றுபோல நேசிக்கும்முறைகளை அறிந்தாள்.

மணியன் மூன்ருவது வயதிலிருந்து மிகவும் நல்ல பிள்ளையாகி விட்டான். தன் வீட்டுக்கு யார் வந்தாலும், தன் திறமைகளை வெளிப்படுத்தத் தொடங்கினன். பாட்டி, தாத்தா, மாமா முதலிய உறவினரது அன்பைப் பெறும் வழிகளைத் தேடினன். பள்ளிக்கூடத்திற்குச் சென்ற ஐந்தாவது வயதுமுதல், அவனே ஆண்டுதோறும் வகுப்பில் முதல்வனுக விளங்கினன். அவன் எந்த வகுப் பிலும் முதல்வனுகத் தேறத் தவறியதில்லை. உபாத்தி யாயர்களின் தயவையும் மதிப்பையும் அன்பையும் அடைவதில் அவன் கண்ணும் கருத்துமாயிருந்தான். கலாசாலை வகுப்புக்களை முடித்து, ஐ. ஸி. எஸ். பரீட்சை யிலும் தேறினன். முடிவில் மிகப்பெரிய சர்க்கார் உத்தியோகமும் பெற்ருன். என்ருலும், தன் தாய் தந்தையரை மதிக்கவில்லை. அவர்களுக்கு ஓர் உதவி யும் செய்யவில்லை. அவர்கள் அவ்வப்போது தன்னைத் தண்டித்ததையும் தனக்குச் செய்த கொடுமை

களையும் சுட்டிக்காட்டி அவர்களைக் குறைகூறினான். பெற்றோர் மணியனுடைய கல் மனத்தைக் கண்டு துயருற்றனர். கனகவல்லி தன் கணவரிடம், "அந்தக் காலத்தில், பிள்ளையை அடிக்கவேண்டாம் என்று நான் சொல்லியும் நீங்கள் கேட்கவில்லை" என்பாள். அதற்கு அவளுடைய கணவர், "போ, போ, பைத்தியமே! பிள்ளையை மித மிஞ்சிக் கொஞ்சிக் கெடுத்துவிட்டு, இன்று என்னிடம் முட்டி அழுகிறாயா?" என்பார்.

பெற்றோர் தாம் செய்த தவறு இன்னதென்று அறிந்திலர். மணியன் பெற்றோரைப் பகைத்ததன் உண்மைக்காரணம் அவனுக்கும் புலப்படவில்லை. இத்தனை மனச்சிக்கல்களுக்கும் முதற் காரணம் என்ன? ஆரம்ப நாட்களில் தாய் மிதமிஞ்சிக்கொஞ்சிக் குலாவிச் சீராட்டி வளர்த்த முதற் குழந்தை, பிந்திப் பிறந்த பிள்ளைகளால், தன் உரிமையை இழக்க நேர்ந்ததென்று கருதுமாறு தாயிடத்தில் கண்ட மாறுதல்களே காரணமாயின. கடைசிக் குழந்தைகள், பலவகையான சிக்கல்களோடு இருந்த காதல் - தொடர்பைக் கனகவல்லி தன் கணவரோடு நேரான நிலையில் அமைத்தபிறகு தோன்றியவர்கள். காதல்-தொடர்பு மறுமலர்ச்சி பெற்ற பிறகு தோன்றிய குழந்தை சாரதா; ஆகையால் தாய்தந்தையரின் அன்பார்ந்த குழந்தையாக நின்றாள். அதன் பிறகு தோன்றியவர்களும் ஏறக்குறையப் பெற்றோரின் பிரியத்தைப் பெற்றனர். கனகவல்லி மணியனிடத்தில் கொண்டிருந்த அன்பை அவனுக்குத் தெரியாமலே படிப்படியாகக் குறைத்துச் சாரதாவைக் காக்கும் பொறுப்பெல்லாம் அவனுடையது என்றும், சாரதா மணியனுக்கே சொந்தமென்றும் காட்டி, பிள்ளை வளர்ப்பில் கையாளவேண்டிய ஞானத்தைப் பயன்படுத்தி யிருந்தால், பின்பு விளைந்த தீமைகளைத் தடுத்திருக்கலாம். கனகவல்லி மணியனுடைய மனத்தைப் படிப்படியாகத் தன்னைவிட்டு திருப்பி யிருக்கவேண்டும்.

ஆரம்ப நாட்களில் குழந்தைகளை மிதமிஞ்சிக் கொஞ்சுவதனால் விளைகிற தீமைகளோடு நியாயமான

அலுவல்களைக் கவனிக்க முடியாதவாறு தாய்க்குப் பல சங்கடங்களும் ஏற்படுகின்றன.

பாலோ பால்! தபால்!

முன்பு, அஞ்சல்காரர்கள் தபால்களை ஓர் ஊரிலிருந்து பக்கத்து இரயிலடிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து வந்தனர். இவர்கள் தபால் மூட்டைகளைச் சுமந்துகொண்டு தபால் ஆபீசினின்று இரயிலடிக்கு ஓடுவார்கள். ஓடும் பொழுது இவர்களுடைய கையில் இருக்கும் கிலுங்குத் தடி, "கலீர்! கலீர்!" என்று ஒலித்துக்கொண்டிருக்கும். இப்படித் தபால் கொண்டு போகும் வழக்கம் நமது நாட்டில் பெரும்பாலும் மறைந்துவிட்டதென்றே கூறலாம். இதற்குக் காரணம் நாகரிகம் வெகு விரைவாகச் செல்வதே யாம். மோட்டார்கார்கள் தோன்றி நமது நாட்டினரை விரைந்து ஓடச் செய்கிறது. மின்சார ரயில் வண்டிகளும் தலை காட்டத் தொடங்கியிருக்கின்றன. ஆகாய விமானங்கள் வெகு வேகமாகப் பறந்து தபால்களைப் பல நகரங்களுக்குக் கொண்டு போகின்றன. விரைவில் இயங்குகிற ஊர்திகள் தோன்றிய நாள் முதல், மானிட வாழ்க்கையும் வெகு விரைவாக ஓடத் தொடங்கியது. முன்பு, ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு அசைந்தாடி நடந்து சென்றவன் இன்று மோட்டார் பஸ்ஸில் ஏறி விரைந்து செல்கிறான். சமையல் பரப்பாக நடைபெறவேண்டும். காரியாலயங்களுக்குச் செல்கிறவர்களுக்குக் காலந் தாழாது செய்திப்பத்திரிகைகள் கிடைக்கும்பொருட்டுப் பத்திரிகைக் காரர்கள் மோட்டார் சைக்கிளிலே விரைந்தோடி வர வேண்டும்; காலையில் காப்பி அருந்துவதற்கு முந்தியே செய்திப் பத்திரிகைகளை வாசகர்களின் வீடுகளில் தள்ளி விடவேண்டும். பாலும் மோட்டார் வண்டிகளில் விரைந்து வரவேண்டும்.

இவ்வாறு நகரந்தோறும் உலவி வருகிற நாகரிக வாழ்க்கை அவசரப்பட்டுக் கொண்டிருக்கிறது. உண்பதும் அவசரம்! உடுப்பதும் அவசரம்! பேச்சும் அவசரம்! மூச்சும் அவசரம்! இத்தகைய அவசரத்திலே

உண்ட சோறும் பெண்களின் உடம்பிலே பற்றுவதில்லை. நாகரிக வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிற பெண் விவாக மாகிக் குழந்தையைப் பெறும்பொழுது தன் குழந் தைக்குத் தாய்ப்பால் ஊட்டத் திறனற்றிருக்கிறாள். இரண்டு மாதத்திற்குள்ளேயே பால் வற்றிப்போகிறது. ஏழைத்தாய் என்ன செய்வாள்? அந்தப் புட்டிப்பாலைத் தபாலில் வரவழைக்கலாமா? இந்தப் புட்டிப்பாலுக்குக் கடிதம் எழுதலாமா என்று சிந்தித்துச் செய்திப் பத்தி ரிகைகளில் விளம்பரம் ஆகிற புட்டிப்பால் கம்பெனி களுக்குக் கடிதம் எழுதுகிறாள். நவீன நாகரிகப்போக்கு குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான பாலைத் தபாலில் எதிர்பார்க்கிற நிலைமைக்கு நம்மை விரைவு படுத்தியிருக்கிறது.

குழந்தைகளுக்குத் தாய்ப் பால் போதிய அளவு அகப் படாமல் போவதற்குக் காரணம் நவீன நாகரிகப் போக்கின் விரைவு மட்டுமன்று; உடலை வளர்ப்பதற்கு இன்றியமையாத உணவுப்பொருள்கள் அகப்படுவதற்கு அரியனவாயின; அகப்படுகிற உணவுப்பொருள்களின் சத்தைக்குறைக்கிற பல ஏதுக்களும் தோன்றியுள்ளன. இவற்றோடு சுகாதாரமற்ற சூழ்நிலைகளில் வாழ்வதனால் நோய்க்கு ஆளாகி வருந்துகிற தாய், நோய் அகன்ற பிறகும், உடலின் முந்திய சுக நிலையைப் பெற முடியா திருக்கிறாள்; குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்ட முடியாமல் தவிக்கிறாள்; பிள்ளையை வளர்க்கப் புட்டிப் பாலை நம்புகிறாள்.

இக் காரணங்கள் அனைத்தையும் அகற்ற வழி வகை கள் உள்ளன. எனினும் ஒரு தாய் நியாயமான காரணங் களால் தன் பாலை ஊட்டிக் குழந்தையை வளர்க்க முடி யாமற் போனால், புட்டிப் பாலை நாடுவதில் தவறில்லை. கறந்தவுடன், நீர் கலவாத பசுவின் பால் புட்டிப்பாலை விடச் சிறந்தது என்பதற்கு ஐயமில்லை. மானஸ சாஸ் திரத்தில் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசக்காரணம் என்ன என்று சிலர் கருதலாம். விரைவில் விளங்கும்.

உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு

குழந்தைக்குப் பால் ஊட்டும் தாயின் காது கேட்க இந்த முதுமொழியைப் பிதற்ற வேண்டாம். அவள் இம்முதுமொழி புகன்றவரை அறிவிலி என்றே கருதுவாள். தாய் தனக்குமட்டும் உண்பது போதாது; தன் குழந்தைக்காகவும் உண்ண வேண்டும். இந்நிலையில், செழுமையான உண்டி பெண்டிர்க்கு அழகு என்றே கூறவேண்டும். ஒருவேளை, உண்டி என்பதனை இடவாகு பெயராகக் கொண்டு, உணவை இடும் வயிறாகக் குறிப்பதாயின், தொந்தி வயிறும், குடை வயிறும், எவருக்கும் அழகு செய்யா. இத்தகைய உண்டி—வயிறு—சுருங்குதல் யாவர்க்கும் அழகேயாம். தாய் தன் பிள்ளைக்குப்பால் ஊட்டுகிற நாட்களில், உண்ணும் உணவைத் தன் உடம்பில் பாலாக மாற்றிச் சமைத்துத் தருகிறாள். பால் ஊட்டும் நாட்களில் தாயின் உடல் இளைக்கிறது; அக்காலத்தில் அவளுடைய உடலின் வலிமை முழுவதும் தளர்ச்சி அடைகிறது. அந்நாட்களில் அவளுடைய கணவன் தனக்கு எதோ குறைவு நேர்ந்ததாக எண்ணிக் 'கடுகடு வெடுவெடு' என்றிருக்கிறான். அறிவுடையவன் குழந்தையின் வளர்ச்சியில் மகிழ்ந்து தன் தேவையை மறந்து பொறுமையாக இருப்பான். தாய் குழந்தைக்குப் பாலூட்டும் காலத்திலேதான் தந்தை தன் உடலின் வேட்கையை அடக்கி ஆளவேண்டும். இதுவே இல்வாழ்க்கையின் சீரிய பண்பு. இதனைப் பெற்றோர் உணர வேண்டும்.

ஆரம்ப நாட்களில் தாய் குழந்தைக்குப் பாலூட்டாமல் இருக்கமுடியாது. தாயின் கருப்பை குழந்தையின் குடியிருப்பால் விரிந்து பருத்திருக்கும். அது தன் இயல்பான வடிவை அடைய வேண்டுமாயின், தாய் குழந்தைக்குப் பால் ஊட்டவேண்டும். குழந்தை பெரியவனாக வளர்ந்த பின் தாயை எதிர்த்துப் பேசினால், அவள் அவனைக் கடிந்து "பெற்ற அன்றைக்கே உன் கழுத்தைத் திருகியிருந்தால் இப்படிப் பேசுவாயா?" என்பாள். இவ்வாறு கூறுகிற தாய் பாலூட்டுதலின் இரகசியத்தை உணராமல்

பிதற்றுகிறாள். தாய் குழந்தையைக் காப்பதோடு தன் உடலின் சுகநிலையைக் காப்பதற்காகவும் பாலூட்டவேண்டும். பாலூட்டுதல் இருவரது க்ஷேமத்தையும் கருதுகிற இயற்கைப் பொது விதியாக அமைந்திருக்கிறது.

பாலூட்டலால் விளையக்கூடிய சிக்கல்கள்

பாலூட்டுகிற நாட்களில் தாயின் உறக்கம் குறைவுபடும். குழந்தை பிறப்பதற்கு முன் கணவனுக்கு மட்டும் பணிவிடைகள் செய்து வந்தவள் இப்பொழுது, தன் குழந்தைக்கும் பணிவிடை செய்யவேண்டிய பொறுப்புடையவளாகிறாள். முன்பு தன் விருப்பப்படி வெளியே சுற்றித் திரிந்துவரச் சுதந்திரம் பெற்றிருந்தவள் குழந்தை பிறந்த பிறகோ பாலூட்டக் குறித்திருக்கும் நேரத்தில் வீடு திரும்ப வேண்டிய நிலைமையில் இருக்கிறாள். அவள் வெளியே தங்கிவிட முடியாது. குறித்த நேரத்தில் ஊட்டாவிட்டால், மார்பில் பால் கட்டிக் கசியத் தொடங்கும். கட்டிய பாலைப் பிள்ளைக்கு ஊட்டிப் பாரத்தைத் தணிக்காவிட்டால் மார்பில் வேதனை தோன்றும். ஆகையால், பால் ஊட்டவேண்டிய கடமை தாயின் சுயேச்சையான வெளி நடமாட்டங்களுக்குத் தடையாக அமைகிறது.

"பாலூட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்த சிலாக்கியம்" என்று எண்ணித் தாய் தன் குழந்தைக்கு மாதக் கணக்கைத் தாண்டி ஆண்டுக் கணக்கிற்குப் பாலூட்டலை நீடித்துக்கொண்டு போனால், கணவன் மனைவியரது உறவில் சச்சரவுகள் ஏற்படும். பல கணவர்கள் அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பவராகத் திரிவர். இவர்கள் புறம்பான காரணங்களைச் சுட்டிக் காட்டித் தம் மனைவியரை அடிக்கவும் தலைப்படுவர். வீட்டில் வளரும் குழந்தை, பெற்றோருக்குள் ஏற்படும் மனவேற்றுமைகளைக் கவனிக்கத் தொடங்குகிறது. பல பெண் குழந்தைகள் தந்தையிடத்தில் அநுதாபம் காட்டுவர்; சில பெண் குழந்தைகள் தாயிடத்தில் அநுதாபம் காட்டுவர். ஆண் குழந்தைகள் சின்னஞ்சிறு பிராயத்திலேயே தாயிடத்தில் காதல் கொண்டு, தாயைக் காக்கும் வீரர்போல் தமது தந்தையை

எதிர்த்துப் போர் புரியச் சினந்து எழுவர். இதனால், பின்பு விளையக்கூடிய தீமைகளைப் பெற்றோர் சிந்திப்ப தில்லை. தற்காலிகமான இன்ப நுகர்ச்சி ஒரு பொழுதும் இல்லற வாழ்க்கையை அழகு செய்யாது.

சில பெண்கள் ஆரம்ப நாட்களில் குழந்தைக்குப் பாலூட்டுவார்கள்; தமது கருப்பை இயல்பான நிலை பெற்றதும் தமது கணவரோடு இன்ப வாழ்க்கையை நாடத் தொடங்குவார்கள்; பாலூட்டுவதைத் தொல்லை யாகக் கருதுவார்கள். இப்படி நினைக்கிற பெண்கள் குழந்தைக்குப் பால் ஊட்டுவதைத் திடீர் என்று நிறுத் தாமல் படிப்படியாக நிறுத்திவிடவேண்டும் புட்டிப்பால் ஊட்டுவது கூடத் தொல்லையாக இருந்தால், அதனையும் ஊட்டாமல் இருப்பதே நலம். பாட்டி, மாமி முதலிய உறவினர்களில் யாரேனும் வீட்டில் துணைக்கிருந்தால், அவர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைப்பதே நலம். வேண்டா விருப்பத்தோடு பாலூட்டுவதால் குழந்தை யிடத்தில் ஏற்படும் கோளாறுகளைப் பெற்றோருக்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பைப் பற்றிக் கூறும் இடத்தில் விரிவாகக் காணலாம். குழந்தைக்குப் பால் ஊட்டுகிற பாக்கியத்தை இழந்து இன்பத்தை நாடுகிற மனப் போக்குடைய அன்னையர் இந்தக் கடமையைச் செய்யாமல் விடுவதே நலம். பிள்ளையை வளர்க்கப் பல வகையிலே ஏற்பாடு செய்யலாம்.

கணவனுக்கு வருமானம் இல்லையே என்று மிதமிஞ்சிக் கவலைப்படுகிறவளும், உறவினரின் மரணத்தால் ஆறாத் துயருற்று இருப்பவளும், காய்ச்சல் முதலிய நோய்களால் வருந்துபவளும், மனமும் உடலும் இயல்பான நிலை அடையும் வரைக்கும் குழந்தைக்குத் தன் பாலை ஊட்டா மல் இருப்பதே சாலச்சிறந்தது. மிதமிஞ்சிய துயரமும், கவலையும் மனத்தைத் தாக்கி உடலையும் தாக்குகின்றன. இத்தகைய தாக்குதலுக்கு ஆளான தாயின் பாலை அருந்தும் குழந்தையின் சரீர நிலையிலும், மன நிலையிலும் பல கோளாறுகள் ஏற்படலாம்; குழந்தை வயிற்று வலியால் வருந்தலாம்; உற்சாகமின்றி நோயுற்றது

போலத் தோன்றலாம். ஆகையால், குழந்தைக்குப் பாலூட்டும் தாய் மிதமிஞ்சிய துயரத்திற்கும், கவலைக்கும் இடங்கொடாதவாறு தன் மன நிலையைக் காக்கவேண்டும். இதற்கு வீட்டில் இருப்பவர்கள் யாவரும் உதவி புரிய வேண்டும். துயரச் செய்தியைக் கேட்டு மனநிலை குலைந்து துயரத்தில் மூழ்கியிருக்கிற நாளிலாவது குழந்தைக்குத் தாய் பால் கொடுப்பதைத் தவிர்க்கவேண்டும். துக்கச் செய்தியைக் கேட்டவுடனேயே தன் குழந்தையை நினைத்துத் துயரத்தை அடக்கித் தன் மன இயல்பைக் காத்துக்கொள்வது அவ்வளவு எளிதன்று. ஆகையால், இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குப் புட்டிப்பாலையே கொடுக்க நேரிடும். இதனால் கேடு ஒன்றும் நேரிடாது.

சில அன்னையரது பாலில் குழந்தைக்கு இன்றியமையாத உணவுச் சத்துக்கள் குறைவு படலாம். இக் காரணத்தால் குழந்தையின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படலாம். இந்த நிலையில் பசுவின் பாலையோ புட்டிப் பாலையோ கொடுக்கத் தொடங்கினால் தடைப்பட்டு நின்ற குழந்தையின் வளர்ச்சி திரும்பவும் ஆரம்பமாகும்; இந் நிலையில் குழந்தையின் வளர்ச்சிப் போக்கைக் கவனிக்காமல், தாய்ப்பாலே சிறந்ததென்று கருதுவதும் தவறாகும்.

ஒரு தாய் தன் குழந்தைக்குப் பால் ஊட்டி வந்தாள். எனினும் குழந்தை வளர வேண்டிய அளவிற்கு வளரவில்லை; அடிக்கடி வயிற்று வலியால் வருந்தலாயிற்று. வைத்தியம் கற்ற மாது ஒருத்தி தாய்ப்பாலின் போஷக சத்துக்கள் சரியான அளவில் அமைந்திருக்கின்றனவா என்றும், குழந்தைக்குத் தேவையான அளவு பால் சுரக்கின்றதா என்றும் சோதித்துப் பார்த்தாள். தாயின் பால் - சுரப்பில் எத்தகைய குறைவும் தோன்றவில்லை. அவ்வாறே தாய்ப்பாலின் உணவுச் சத்துக்களும் தேவையான அளவிலே இருந்தன. இந்தத் தாய் முதல் பிள்ளையை 'கட்டி' என்னும் ஒரு வகையான நோயால் இழந்தாள்; போதிய அளவு முயற்சிகள் செய்தபோதிலும்

இரண்டாவது குழந்தையும் அதே நோயால் இறந்தது. மூன்றாவது குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தையும் தகுந்த வளர்ச்சி பெறவில்லை. அப்பொழுது அந்த வைத்திய மாது தாயின் மனநிலையை ஆராய்ந்தாள்; குழந்தைகள் இறந்ததன் காரணம் தெளிவாயிற்று.

இவளுடைய பெற்றோர் பெருவாரியான வருமானம் உடையவர்கள். இவளுக்கு மணமான மறு மாதத்தி லேயே தந்தையைப் பல வகையான துன்பங்கள் சூழ்ந் தன. கஷ்ட நஷ்டங்கள் ஒன்றின் பின் ஒன்றாகத் தொடரலாயின. தேடி வைத்த செல்வமெல்லாம் சென்ற இடம் தெரியாமல் மறைந்தது. முதல் குழந்தை பிறந்த மாதத்தில் பெற்றோர் தாங்கவொண்ணாத வறுமைக்கு ஆளாயினர். குழந்தை பிறந்த இரண்டாவது மாதத்தில் இவளுடைய கணவனே மாமனாரையும், மாமியாரையும், மைத்துனன் மைத்துனியரையும் அழைத்து வந்து வீட்டோடு வைத்துக்கொண்டான். மனைவிக்குத் தன் கணவனிடம் என்றுமில்லாத ஆர்வமும், மதிப்பும் பிறந் தன. எனினும் தன் பெற்றோர் அடைக்கலம் புகுந்து சில மாதங்கள் செல்லுமுன் இரண்டொரு தருணங்களில் தன் பெற்றோரைக் காப்பாற்றுவது பற்றிக் கணவன் கூறிய கடுஞ்சொற்கள் மனைவியின் நெஞ்சைச் சுட்டன. அந்தப் புண் ஆறவே இல்லை. அது ஓயாமல் இவ ளுடைய உள்ளத்தை வருத்திக் கொண்டே இருந்தது. பெற்றோருடைய வறுமையால் கணவனை எதிர்க்கவும் அவ ளுக்குத் துணிவு ஏற்படவில்லை. இக்காரணத்தால், அவள் ஊட்டிய பால் குழந்தையின் உடம்பில் பற்றவில்லை. தந் தைக்குத் திரும்பவும் நல்லகாலம் வந்தபொழுது, மூன்றா வது குழந்தைக்கு மூன்று மாதமாயிற்று. இவள் தன் மனத்துயரத்தை வெளிப்படையாகக் கூறி ஒரு மாதம் முடிவடைவதற்குள் இவளுடைய தந்தையும் தமதுவறுமை நீங்கி, இழந்த செல்வத்தைப் பெற்றார். ஆறு ஆண்டுக ளாகத் தன் பெற்றோரைக் காக்கத் தன் கணவன் செல வழித்த பணத்தில் ஒரு சல்லிக் காசும் குறைவு படாமல் தன் தந்தையிடமிருந்து வாங்கினாள். கணவனின்

பாதத்தில் வைத்து முன்பு தன்னைச் சுட்ட மொழிகளைச் சுட்டிக்காட்டினாள். அப்பொழுதுதான் அவள் நெஞ்சில் பட்ட புண் ஆறியது. இதன் பின்னரே மூன்றுவது குழந்தைக்கு இயல்பான வளர்ச்சி ஏற்பட்டது. குழந்தையை வளர்க்கும் பெற்றோர் இவ்வுண்மை - வரலாற்றின்கண் புதைந்துள்ள மானஸ சாஸ்திரக் கருத்தை மறவாதிருத்தல் வேண்டும். தாய் தந்தையர் தமது மனநிலையைப் பொன்னேபோல் காவாராயின், அவர்கள் அடையக்கூடிய இன்னல்களுக்கு அளவே இல்லை.

ஊட்டல் பழக்கமே நாட்டை ஆளும்

குழந்தைகள் பொதுவாகத் தமது பசிதீர உண்பதற்குப் பதினைந்து முதல் இருபது நிமிஷங்கள் வரை ஆகும். குழந்தையின் வாயுறுப்புக்களை உறுதியாகவும் தகுந்த வடிவிலும் அமைப்பதற்குத் தேவையான பயிற்சி அளிக்கக்கூடிய முறையிலே தாயின் அமுத கலசங்கள் அமைந்துள்ளன. அமுத கலசங்களின் சூப்பிகள் இந்தப் பயிற்சிக்குப் பொருத்தமான ஆக்கம் பெற்றுள்ளன. பால்-புட்டிக்குப் பொருத்தும் ரப்பரில் ஒரு துவாரம் உண்டு. இந்தச் செயற்கைச் சூப்பிகளின் துவாரம் ஒன்றிரண்டு நாட்களுக்குள் பெரிதாகிவிடும்; அதனல் ரப்பர்ச் சூப்பிகள் அதிகமாகப் பாலைச் சுரக்கத் தொடங்கும். குழந்தைக்கு பால் உண்ணும் அவா பெருகி நின்றால், செயற்கைச் சூப்பியை அழுத்தினல் போதும். ஆனல், இயற்கைச் சூப்பியை அழுத்தினல் மட்டும் போதாது. ஆத்திரத்திற்கு ஏற்றவாறு முயற்சியும் தோன்றவேண்டும். செயற்கைச்சூப்பிகள் குழந்தையின் ஆத்திரக் குணத்தை வளர்க்கும். பரபரப்போடு பாலைக் குடித்து வயிற்றை நிரப்ப வேண்டும் என்ற படபடப்புக் குணம் குழந்தையிடம் தோன்றும். குழந்தைப் பருவத்தில் தோன்றுகிற இந்தத் தன்மை பிற்காலத்தில் அவசர அவசரமாகச் சோற்றை விழுங்கும் பழக்கத்திற்குக் காரணமாகிறது. மென்று தின்பது உணவு ஜீரணமாவதற்கு மிகவும் இன்றியமையாதது. அவ்வாறே குழந்தை சூப்பியைச் சுவைத்துப் பாலை உறிஞ்சுவதும் இன்றியமையாததேயாம்.

புட்டிப் பாலோடு பரபரப்பும், படபடப்பும் ஒட்டி உலாவு கின்றன. செய்கிற காரியத்தின் சிறப்பையும் அழகையும் நோக்கும் குணம் புட்டிப்பால் அருந்தும் குழந்தைக ளிடத்தில் குன்றும். ஒரு காரியத்தைச் செய்து முடிக்க ஆழ்ந்த சிந்தனையும், மனத்தின் வேகமும், செயல் திறமும் தேவை. தாய்ப்பாலை அருந்தும் குழந்தையிடம் இந்தக் குணங்கள் அமைகின்றன. ஆத்திரப்பட்டால் அதற்கு ஏற்றவாறு பொறுமையோடு தன் உறுப்புக்களை உப யோகிக்கவும் வேண்டும் என குழந்தை உணர்கிறது. அவ்வாறு உறுப்புக்களை உபயோகித்தாலும், அளவுக்கு மிஞ்சிப் பால் சுரப்பதில்லை. வயிற்றுப் பசி தணியப் பொறுமை வேண்டும் என்பதனையும் குழந்தை ஆரம்பப் பாடமாகத் தெரிந்து கொள்கிறது. நாட்கள் செல்லச் செல்லக் குழந்தையின் பசியும் அதிகரிக்கிறது; தேவை யும் அதிகரிக்கிறது. பசியும், தேவையும் அதிகரிக்கிற பொழுது, அமுத கலசத்தைக் கையாண்டு பால் அதிக மாகச் சுரப்பதற்கு ஏற்ற உபாயங்களைத் தெரிந்து கொள் கிறது. செயற்கைச் சூப்பியை உபயோகித்தால் குழந்தை அதனை எயிற்றால் கடித்துத் துவாரத்தைப் பெரிதாக்கி விடுகிறது. இயற்கைச் சூப்பியிலே கலைத் திறன் உதயமாகிறது. வருடல், அழுத்தல் முதலிய இணக்க உபாயங்களைக் குழந்தை தெரிந்து கொள்கிறது.

தாயின் அமுத கலசமே ஆரம்பப் பள்ளிக்கூடம் என லாம். செயற்கைப் பள்ளிக்கூடமாகிய புட்டிச் சூப்பியில் இயற்கை அன்னை கற்றுக் கொடுக்க விரும்பும் பல பாடங் களுக்கு வழியில்லை. உறிஞ்சிக் குடிக்கும் ஆற்றலைச் சார்ந்து வரும் பழக்க வழக்கங்களும் உள்ளன. 'வாய் களைத்துவிட்டது' என்ற காரணத்தை முன்னிட்டுக் குழந்தை தன் வயிற்றுப் பசி அடங்குமுன் உறிஞ்சல் பயிற்சியைக் குறைத்தால் உணவு குறைந்து போகும்; போதுமான பால் அகப்படாது. இந்த உணவுக் குறைவைச் சரிக்கட்ட விரலைச் சூப்பும் பழக்கம் ஏற்படு கிறது. செயற்கைச் சூப்பி விஷயத்தில் பாழாக்கும் குணம் ஏற்படுகிறது. குழந்தை தன் தேவைக்கு அதிக

மான பாலை வாய்வழியே சோர விடுகிறது. இந்தப் பழக்கம் பிற்காலத்தில் பொருளைப் பாழாக்கும் குணமாக மாறுகிறது

ஆரோக்கியமான ஒரு குழந்தைக்கு நான்கு மணி இடைக்காலத் திட்டத்தில், நாள் ஒன்றுக்கு ஆறு தடவை பால் ஊட்டினல் போதும். ஆனல் இந்த வரையறையை மீறமுடியாத சட்டமாகக் கொள்ளலாகாது. குழந்தைகள் பிறக்கும்பொழுதே பாரம்பரிய நியதிகளுக்கும், சூழ்நிலை நியதிகளுக்கும் ஆளாகின்றன. ஆகையால், குழந்தை தோறும் வேற்றுமைப்பாடுகள் தோன்றுகின்றன. ஒரு குழந்தைக்கு அதிகப் பால் உண்ணும் திராணி தொடக்கத்திலிருந்தே ஏற்பட்டுவிடுகிறது; ஊட்டல் - திட்டம் செய்திருக்கும் இருபது நிமிஷத்திற்குள் இந்தக் குழந்தை பசியைத் தணித்துக்கொண்டு, எஞ்சிய நேரத்தைத் தாயோடு கொஞ்சி விளையாடுவதிலாயினும், அமுத கலசத்தின் சூப்பியை வாயில் வைத்தபடியே உறங்குவதிலாயினும் இன்பம் தேடப் பழகிவிடுகிறது. சில குழந்தைகளுக்கு உறிஞ்சிக் குடிக்கும் திறம் விரைவில் ஏற்படுவதில்லை. எந்தக் குழந்தையானலும், ஆரம்ப நாட்களில் தாய் அதற்கு உதவி செய்யவேண்டும்; நாட்கள் செல்லச் செல்ல, உதவிசெய்வதைப் படிப்படியாகத் தாய் குறைத்து வருதலும் வேண்டும். சில குழந்தைகள் தாயின் உதவி இல்லாமலே பால் உறிஞ்ச வெகு விரைவில் பழகிவிடுகின்றன. வேறு சில குழந்தைகளோ நெடுநாட்கள் வரைக்கும் தாயின் உதவியைத் தேடுகின்றன.

குழந்தைகளின் அங்க அவயவ அமைப்புக்களில் காண்கிற வேற்றுமைகள் இதற்குக் காரணமாகலாம். இவ்வாறே குழந்தைகளின் தேவை அளவுகளும் வேற்றுமைப்படுகின்றன; ஒரு குழந்தையின் உடல் வளர்ச்சிக்குப் பால் அதிகமாகத் தேவை; மற்றொரு குழந்தைக்கு அவ்வளவு தேவை இல்லை. தேவையில் காண்கிற ஏற்றத் தாழ்ச்சிகளுக்குக் குழந்தையின் வயிற்று முதிர்ச்சி காரணமாக இருக்கலாம். ஆதலால், குழந்தைகளுக்குப் பாலூட்டுவதைப் பற்றிக் கால வரையறைத் திட்டப் பத்திரம்

ஒன்று தயாரிப்பது இயலாத காரியம். ஒரு குழந்தைக்கு நான்கு மணி நேர இடைக்காலம் போதாது; மூன்று மணி நேர இடைக்காலத்திற்கு ஒரு தரம் பால் ஊட்ட வேண்டியதாக இருக்கும். வேறொரு குழந்தைக்கு மூன்றரை மணி நேரத்திற்கு ஒரு தரம் பால் தேவையாக இருக்கலாம். குழந்தை விரலைச் சூப்புகிற பழக்கம் காலத் திட்டப்படி உணவு ஊட்டுவதில் காண்கிற குறைவுகளையே உணர்த்துகிறது. இந்தப் பழக்கம் குழந்தை பால் அருந்துகிற முறையையும் உணர்த்த லாம். இந்தப் பழக்கத்தைக் காண்கிற தாய், பால் ஊட்டு வதற்காகத் திட்டம் செய்திருக்கிற கால அளவில் குறை விருப்பதாக உணர்ந்து, அதனைத் திருத்திப் புதுக் காலத் திட்டம் வகுக்க வேண்டும்; உறிஞ்சிக் குடித்தலைப்பற்றிக் குழந்தையிடத்தில் குறைவு கண்டால், அதனைத் திருத்த வேண்டும்.

இக்குறைகளைத் தவிர்க்காமல், விரல் சூப்பும் பழக் கத்திற்குக் குழந்தைகளை விட்டுவிட்டால், பிற்காலத்தில் உணவு நேரத்தில் தேவையான அளவிற்கு உணவை உண்ணுமல், சிறிதளவு பசி தணிய உண்ட பிறகு, தின் பண்டங்களைத் தேடித்திரியும் பழக்கம் ஏற்படும்; பிற்கா லத்தில் உணவு பற்றிய முறைகளும், ஒழுங்குகளும் தவ றும். இந்தப் பழக்கத்தைச் சார்ந்து வருகிற மற்றொரு தீமையும் உண்டு. குறித்த நேரத்தில் செய்ய வேண்டிய தைச் செய்யாமல் வேறு செயல்களில் புகுந்து மகிழும் இயல்பும் இதனுல் அமைகிறது. பால் அருந்துவதே குழந் தையின் தலைமையான இன்பமாம். இதற்கு அடுத்தது தொடுகை இன்பமாகும். சற்றே பசி தணிந்ததும், தொடுகை இன்பத்தை அனுபவிக்கும்பொருட்டுக் குழந்தை கொஞ்சிவிளையாடிப் பொழுது போக்கலாம். பால் அருந்து வதற்குக் குறித்திருக்கும் நேரத்தில் சுவை இன்பத்தோடு தொடுகை இன்பம் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவை யானதேயாம். இவ்விருவகை இன்பங்களுள் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது சுவை இன்பமே சுவை இன்ப வேட்கையைத் தணித்துத் தொடுகை இன்ப வேட்

கையைப் பெருக்கி வளர்க்கிற குழந்தை, பிற்காலத்தில் 'யாரிடத்தில் கொஞ்சிக் குலாவலாம்? யாரோடு விளையாடலாம்? எந்த வழியிலே மனத்தைத் திருப்பி இன்பம் பெறலாம்?'—என்று அலைந்து திரியத் தொடங்குகிறது. விரல் சூப்பும் பழக்கத்தால் இன்றியமையாத தேவைகளை நாடும் முயற்சி குன்றிவிடுகிறது; போலி வழிகளில் இன்பத்தை நாடுகிற பழக்கங்கள் பிற்கால வாழ்க்கையில் தோன்றுகின்றன. உணவருந்தும் நேரத்தில் சோற்றை உண்ணுமல், அதனை அளைதல், வாரி இறைத்து மகிழ்தல், அங்கும் இங்கும் ஓடித்திரிந்து விளையாடுதல் முதலிய செயல்கள், ஒரு குழந்தையின் வாழ்க்கையில் பிற்காலத்தில் உருக்கொள்வதற்காகக் காத்திருக்கிற பல்வகை மனச் சிக்கல்களின் தொடக்கமேயாம். நான்கு மணி நேரத் திட்டத்தின்படிப் பாலுண்ணப் பழகிய குழந்தைகளிடத்தில் தோன்றுகிற விரல்சூப்பும் பழக்கங்கள் மூன்று மணி நேரத்திட்டத்தின்படிப் பாலுண்டு வளரும் குழந்தைகளிடத்தில் அவ்வளவாகக் காணப்படா.

பிறந்து ஏழு நாட்கள் ஆன குழந்தைக்கு ஏற்படுகிற முதல் விருப்பம் உறிஞ்சுதலும், உணவைப் பெறுதலுமேயாம். தாயின் அமுதகலசச் சூப்பியைத் தன் உடலோடு அமைந்த ஓர் உறுப்பாகவே குழந்தை முதன் முதலில் கருதுகிறது. நாட்கள் செல்லச் செல்ல, தான் வேறு, தாயின் அமுத கலசச் சூப்பி வேறு எனவும், தாய் தனக்கு விருப்பமான நேரத்திலேதான் பால் ஊட்டுவாள் எனவும் குழந்தை அறிந்து கொள்கிறது. தான் வேறு, தாய் வேறு என்ற வேற்றுமைப்பாடு உதயமாகிறது. இந்த அறிவு ஏற்படும்பொழுது, குழந்தை தன் கவனத்தைச் சூப்பியிலிருந்து மாற்றித் தாயிடத்தில் திருப்புகிறது. குழந்தைக்குத் தன் தாயைப் பற்றிய அறிவு நாளடைவில் வளர்ந்து வருகிறது.

முதலில் தாயைத் தன் உடலின் ஒரு பாகமாகக் கருதிய குழந்தை, நாளடைவில் அவளைத் தன் உணவுச் சாலையாக அறிந்துகொள்கிறது; இந்த அறிவும் வெகு விரைவில் மாறுதல் அடைகிறது. தாய் உணவை அளிப்

பவள் என்பதனோடு, காப்பவளும், அரவணைப்பவளும், இதம் செய்பவளும், அன்பு பாராட்டுபவளும், தேவைகள் அனைத்தையும் தருபவளும், மகிழ்ச்சியை விளைவிப்பவளு மாக விளங்குகிறாள் என்பதனைக் குழந்தை படிப்படியாக அறிந்து கொள்கிறது. இந்த அறிவு வளர்ச்சிக்கெல்லாம் ஆதிகாரணமாக இருப்பது அமுதகலசச் சூப்பியே. குழந்தை இந்த அறிவு முழுவதையும் வாய்ப்பாதை வழி யாகவே முதன் முதலில் பெறுகிறது. ஏந்தி எடுக்கிற தன்மையிலே, அணைக்கிற பரிசனையிலே, பார்க்கிற பண் பிலே, நகைக்கிற நயத்திலே, துன்பத்தை ஒழிக்கிற முறையிலே, இன்பத்தை விளைக்கிற இயல்பிலே தாய்க் கும் குழந்தைக்கும் ஏற்படுகிற நம்பிக்கை உருவாகி, நாடோறும் வளர்ந்தோங்குகிறது. குழந்தைக்குத் தாயிடத்தில் நம்பிக்கை வளரும்பொழுது, முதன் முதலில் தோன்றிய "விழுந்து விடுவேனோ?" என்னும் ஐயமும் தாங்கமுடியாத ஓசை ஒலி அதிர்ச்சிகளால் விளைகிற அச்சமும் குறைந்து, நாளடைவில் முற்றிலுமாக மறைந்து போகின்றன. முடிவில் குழந்தையிடத்தில் அச்சம் என் பதே இல்லாமற் போகிறது. குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள முதல் தொடர்புகள் மனத்தின் உணர்வு - தெளி வுப் புலத்தின் இயல்புகளோடு மன - அயர்வுப் புலத்தில் பதுங்கிக் கிடக்கிற இயல்புகளையும் சீரிய முறையிலே உருவாக்கி விடுகின்றன.

மூன்று மாதம் முடியும் வரைக்கும் பாலூட்டக் குறித் திருக்கும் நேரத்திற்கு முந்தியே குழந்தைக்குப் பசி தோன்றலாம். அங்ஙனம் பசி தோன்றும் பொழுது குழந்தை அழுகையால் அதனை உணர்த்தும். குழந்தை யின் நம்பிக்கையை வளர்க்கிற முறையிலே குழந்தையைச் செம்மையாகக் காத்து வரும்பொழுது, பாலுக்காக அழு தலும் நாளடைவில் குறைந்துவிடும். இந்த நம்பிக்கை, குழந்தையின் பிற்காலப் பயிற்சிக்கும், வளர்ச்சிக்கும், புதுப்பாடங்களைக் கற்றுக்கொடுப்பதற்கும் ஆதாரமாக அமைகிறது. இந்த நம்பிக்கை ஏற்பட்ட பிறகு, கடும்பசி தோன்றினாலும், தாய் உணவைத் தயாரிக்கும் வரைக்கும் குழந்தை பொறுமையோடு காத்திருக்கக் கற்றுக்கொள்

கிறது. உணவு விஷயமாகவும், உடை விஷயமாகவும் காலந்தோறும் தாய் கையாள நேரிடுகிற ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது. 'என் தாய் செய்வதெல்லாம் என் நன்மையின் பொருட்டே' என்ற பூரண நம்பிக்கை ஏற்படுகிறது. இத்தகைய ஒரு நம்பிக்கையைத் தன் குழந்தையிடத்தில் உண்டுபண்ணுகிற தாய், அந்தப் பிள்ளையை உயர்த்த முடியாத உயர்நிலைகளே இல்லை. இவை யாவற்றையும் பார்க்கும்பொழுது, கோட்டை கட்டி அரசாளும் கோமகனாக ஒரு குழந்தையை மாற்றிவிடக் கூடிய ஆற்றல் அனைத்தும் தாயின் அமுத கலசத்தோடு தொடர்புற்று இருப்பதை நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம்.

அளவறிந்து ஊட்டல்

கற்பகம் தன் குழந்தைக்குத் தேவையான உணவின் அளவைத்தானே திட்டம் செய்யவேண்டும் என்கிறாள்; வைத்தியர், தமக்குத்தான் குழந்தை-வைத்தியம் தெரியும்; ஆகையால் தமக்கே குழந்தையின் உணவு அளவைத் திட்டம் செய்ய உரிமை உண்டு என்று கூறுகிறார். "சாப்பிடுகிறவன் நான்; என் பசி எனக்கல்லவா தெரியும்? இதைக் கட்டுப்பாடு செய்ய மற்றவர்களுக்கு என்ன உரிமை?" என்று குழந்தையும் வழக்காடப் புறப்படுகிறது. தாயா, வைத்தியரா, குழந்தையா, இம் மூவரில் யார் குழந்தையின் உணவு அளவைத் திட்டம் பண்ணவேண்டும்? தாயைக் கேட்டால் அவளுடைய அனுபவம் ஒருவிதமாக இருக்கிறது. வைத்தியரைக் கேட்டால் அவருடைய அனுபவம் மற்றொரு விதமாக இருக்கிறது. தாயையும் கேட்கவேண்டாம்; வைத்தியரையும் விசாரிக்கவேண்டாம்; குழந்தையின் விருப்பத்திற்கும் விடவேண்டாம்; பலவகையான புட்டிப் பால்களைத் தயாரித்து அனுப்புகிற கம்பெனியார் தாம் அனுப்பும் புட்டிப் பால்களோடு வயதுவாரியாக உணவின் அளவுத் திட்டத்தை வகுத்துக்காட்டும் சீட்டை அனுப்பத் தவறுவதில்லையே! அந்த சீட்டின் முறைப்படியே பாலை அளந்து குழந்தைக்கு ஊட்டலாமா?

குழந்தையோ எந்த அளவுத் திட்டத்திற்கும் இசைவதில்லை. ஒரு நாள் அதிகமாகப் பால் வேண்டும் என்று அழுகிறது; மற்றொரு நாள் திட்டம் போட்டிருக்கும் அளவிற்கும் குறைவாகப் பால் அருந்துகிறது. எப்படியெல்லாம் பராக்குக் காட்டி ஊட்டினாலும், நயத்தையும் பயத்தையும் காட்டினாலும், ஒன்றுமே பலிக்கிறதில்லை. பின்பு, ஒரு நாள் குழந்தை அருந்துகிற பாலின் அளவு மிகவும் மோசமாய் விடுகிறது. ஊரில் புதிதாக ஏற்படுத்தியிருக்கிற சிசு ஸம்ரக்ஷணசாலைக்குச் (Child Welfare Centre) சென்று லேடி டாக்டரை யாவது ஹெல்த் விஸிட்டரை[1] யாவது' விசாரித்தால், அவர்கள் உடனே குழந்தையைத் தராசிலே நிறுக்கிறார்கள். பின்பு, சுவரிலே தொங்கும் ஒரு பலகையைப் பார்க்கிறார்கள். அதில் ஒவ்வொரு குழந்தைக்கும் வயதுக் கிரமப்படி இருக்கவேண்டிய சராசரி எடையைக் குறித்திருக்கும். அதைப் பார்த்து விட்டு, லேடி டாக்டர், அல்லது ஹெல்த் விஸிட்டர், குழந்தையின் வளர்ச்சி போதாது என்று சொல்லி, இன்னின்ன முறைப்படி பால் ஊட்டவேண்டும் என்று உபதேசம் செய்கிறாள். இந்த உபதேசத்தின்படிக் குழந்தைக்குப் பால் ஊட்டலாமா?

பக்கத்து வீட்டுக் கமலத்தின் குழந்தைக்கு மூன்று மாதம் ஆயிற்று. கற்பகத்தின் குழந்தைக்கும் மூன்று மாதந்தான் ஆயிற்று. கமலத்தின் குழந்தை மட்டும் கற்பகத்தின் குழந்தையைவிட எடையில் அதிகமாக இருக்கக் காரணம் என்ன? கற்பகம் கமலத்தை விசாரித்தாள்.

அதற்குக் கமலம், "நான் என் குழந்தைக்கு அந்த புட்டிப்பால் கொடுக்கிறேன்; இந்தப் பழ ரசம் கொடுக்கிறேன்" என்றெல்லாம் அளந்தாள். கற்பகத்தின் குழந்தையோ ஒரு வழிக்கும் சரிப்படவில்லை. பக்கத்து வீட்டுச் சுப்புப் பாட்டி, "குழந்தை சாப்பிட மாட்டேன் என்றால் விட்டு விடலாமா? கட்டாயப்படுத்தியாவது

1. குழந்தை பிறந்திருக்கும் மனைதோறும் தாய் மகவுகளின் சுகத்தைக் கவனிக்கிற சுகாதார அதிகாரி. இத்தொழிலைச் செய்பவர் குழந்தை மருத்துவத்தில் தேர்ந்த மாதரசியாக இருப்பர்.

ஆகாரத்தை உள்ளே செலுத்த வேண்டியதுதான். அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்குமே'' என்றாள்.

கற்பகம் மானஸ சாஸ்திரம் படித்தவள். ஆகையால் மானஸ சாஸ்திரிகள் சொல்லுகிறபடி செய்வதே நலம்; என்றாள். அவள் படித்த புத்தகங்களை எழுதிய மானஸ சாஸ்திரிகளோ, 'தாயைக் கனியாததைத் தடி கொண்டு அடிக்கலாகாது குழந்தைகளைக் கட்டாயப் படுத்திப் பழக்கினால், அவர்களுடைய மூர்த்தி - விசேஷம் வெளிப்படாமல் போகும்'' என்று கூறியிருப்பதைக் கற்பகம் மறந்து விடவில்லை. கற்பகத்தின் தோழி காமாக்ஷி தன் குழந்தை சாப்பாட்டு விஷயத்தில் முரண்டு அடிக்கும் பொழுதெல்லாம், "சுண்டைக்காய்ப் பிள்ளை! என்னை ஆட்டம் காட்டி ஆளவிடுவேனா? நண்டுக்குப் பயப்படுகிறவன் நாடாள முடியுமா?'' என்றெல்லாம் கூறி குழந்தையின் முதுகில் இரண்டு அறைவைத்துச் சோற்றை உருட்டிப் பிள்ளையின் வாயில் திணிப்பதெல்லாம் கற்பகத்திற்குத் தெரியும். கற்பகம் படித்த படிப்பு இந்த முறையைக் கையாள இடந்தரவில்லை. குழந்தைக்குத் தன்னிடம் நம்பிக்கை வர மூன்று மாதங்களாகப் பட்ட பாடுகள் எல்லாம் வீணாகும்படிக் காமாக்ஷியைப் பார்த்துக் குழந்தையை வளர்ப்பதா?

கற்பகத்தைப்போல் குழந்தையின் வளர்ச்சியைப் பற்றிக் கவலைப்படுகிற அன்னையர் பெரும்பாலோர் உள்ளனர். குழந்தை வளர்ப்பில் தாய் தன் அறிவு, திறமைகளைக் கையாளவேண்டும். எல்லாக் குழந்தைகளும் ஒரே அளவான எடை பெற்றிரார். ஒடிசலான குழந்தைகளும் உண்டு; பருத்த உடல் உடைய குழந்தைகளும் உண்டு. குழந்தையின் உடல் பாரம்பரிய நியதிப்படி அமைகிறது. ஒடிசலான உடற் கூறு பெற்றிருக்கும் பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் பெரும்பாலும் ஒடிசலாகத்தான் இருக்கும். உடலின் கனதி எலும்பின் கனதியைப் பொறுத்தது. கனதியான எலும்பு அமைப்பும், ஒடிசலான எலும்பு அமைப்பும் பாரம்பரிய நியதியின்படி அமைவன. ஆகையால், எல்லாக் குழந்தைகளும் ஒரே

அளவான எடைபெற்றிருக்கமாட்டா. ஏதேனும் ஒரு குழந்தை சராசரி அளவுக்குக் குறைந்த எடையில் இருந்தால், கவலைக்கு ஆளாகாமல் தாயும் தந்தையும் குழந்தைப் பருவத்தில் தத்தமக்கு அமைந்திருந்த உடற்கூறு எத்தன்மையதெனக் கவனிக்கவேண்டும். மேலும், பசி என்பது கடிகாரம்போல் இயங்குவதில்லை. சரீர நிலையும், சீதோஷ்ண நிலையும், ஜீரண சக்தியும், மன நிலையும் பசியைத் திட்டம் செய்வன.

பருவமடைந்த நமக்கே ஒரு நாள் இருந்த பசி மறு நாள் இருப்பதில்லை. ஒரு வேளை இருந்த பசி மறுவேளை இல்லையே. ஒரு நாள் இது வேணும் என்கிறோம்; மறு நாள் அது வேணும் என்கிறோமே. பசியும் ருசியும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பன அல்ல. பசி உண்டோ இல்லையோ, கண்ணுக்குக் கவர்ச்சியான தின் பண்டங்கள் கிடைத்தால் சுவை இன்பத்தை அனுபவிக்கக் கருதி, நாமே தின் பண்டங்களைச் சாப்பிடுகிறோம். வளர்ந்தவர்களான நம்முடைய சரீர நிலைமைதான் என்றைக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறதா? ஒரு மாதத்தில் சற்று இளைக்கிறோம்; மறு மாதத்தில் சற்றுப் பருக்கிறோம். நம்முடைய ஆரோக்கியமும் வேற்றுமை நிலைகளை அடைகிறது. உண்மை இவ்வாறாக, வளரும் குழந்தை விஷயத்தில் மட்டும் துலாக்கோல் போன்ற உடல் நிலைகளை எதிர்பார்ப்பது பொருந்துமா? ஆகையால், தனக்குத் தேவையான அளவை மதிப்பிட்டு உண்ணும் உரிமையைக் குழந்தைக்கே அளிப்பதுதான் நலம். தாய் கவலைக்கு இடங்கொடுப்பதால் விளைவது தீமையே; இத்தீமை உண்ணும் ஆகார அளவில் குழந்தை காட்டும் பிடிவாதத்தினால் விளைகிற தீமையிலும் பன்மடங்கு பெரியது. பிள்ளை-வளர்ப்பில் வீண் கவலைக்கு இடங்கொடுக்கலாகாது. விவேகத்திற்கே முதன்மை இடம் அளிக்கவேண்டும்.

குழந்தைகளை நயத்தினாலும், பயத்தினாலும் உணவு விஷயத்தில் கட்டாயப் படுத்துவதனால் விளையும் தீமைகளைச் சிந்தித்துப் பாருங்கள். இன்ன உணவை இன்ன

அளவின்படி குழந்தை சாப்பிடவேண்டும் என்று நாம் ஏன் விரும்புகிறோம்? நாம் தீர்மானித்திருக்கிற உணவும், அளவும் குழந்தைக்கு நன்மைசெய்யும் என்று கருதுவதனால் அன்றோ? எனினும், உண்மை யாதெனில் நாம் எதிர்பார்க்கிற நன்மைக்குப் பதிலாகத் தீமையே விளையும். ஏனெனில், ஒருவன் விரும்பி உண்கிற இயல்பிலே உணவுப் பொருள் சிறந்த சுவை உடையது என்று துணியலாம். உண்பவனுக்கு உண்ணும் உணவில் விருப்பம் பிறக்கவேண்டும். இதற்காக அல்லவா தளிகை செய்கிற கறிவகைகளிலே, தாளிதம் செய்து கறிவேப்பிலையும், பச்சைக் கொத்தமல்லியும் இட்டு நறுமணம் கமழ வைக்கிறோம். நறுமணமும், நாவின் சுவையும் ஆகிய இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புற்றிருப்பவை. உண்ணுகிற உணவு கண்ணுக்கும் கவர்ச்சியாக இருத்தல் வேண்டும். கண், நாவு, மூக்கு ஆகிய மூன்று புலன்களுக்கும் கவர்ச்சியான உணவுகளே சிறந்ததெனக் கருதலாம். மூன்றும் பொருந்திய உணவை ஏற்க வாயும் ஆயத்தமாக இருக்கும். வாயில் நீர் சுரக்கும். வாயின் நீர்ச்சுரப்பு உணவு ஜீரணமாவதற்கு மிகவும் தேவையானது. கட்டாயப்படுத்தி வாய்க்குள் திணிக்கிற உணவுக்கு வாய்ச் சுரப்பு இராது. வாய்ச் சுரப்பில்லாதபோது, உண்ட உணவு உடலில் ஒட்டாமல் வயிற்று வலிக்கே காரணமாகும். உடல் - நூல் கூறுகிற இவ்வுண்மைகளை ஒதுக்கிவிட்டுக் கட்டாயப் படுத்தி ஊட்டுகிற உணவு எவ்வளவு சிறந்த நோக்கங்களைக் கொண்டிருந்தாலும் குழந்தைக்கு நன்மையைச் செய்வதில்லை.

ஒரு தாய் தன் குழந்தையை மிகவும் சிறந்த முறையிலே வளர்க்கவேண்டுமென்று கருதி, குழந்தை பிறந்தது முதல் இம்மியளவும் தவறாமல் பிள்ளை வளர்ப்புத் திட்டங்களைக் கையாளுகிறாள். அன்னை ஒருத்தி உத்தமப் பெண்களுடைய லக்ஷணம் இப்படி இப்படி இருக்கவேண்டும் எனவும், உத்தமபுருஷர்களுடைய லக்ஷணங்கள் இவ்வாறு இருக்கவேண்டும் எனவும் வரையறுத்த அபிப்பிராயங்களை உடையவள்; தன் மனத்திலே சித்திரித்து

வைத்திருக்கும் இலக்ஷணங்களுடையவர்களாகத் தன் குழந்தைகளை வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடு குழந்தையை ஆறுமாதம் வரைக்கும் வளர்த்தாள்.

ஆறுவது மாதத்தில் சங்கடங்கள் ஆரம்பமாயின. வளர்ப்பு விஷயமாகத் தாய் வகுத்திருந்த திட்டங்களை எல்லாம் குழந்தை தகர்த்தெறியத் துணிவதுபோல், உணவு விஷயத்தில் பிடிவாத குணத்தை வெளியிடத் தொடங்கியது. தாய் மிகவும் கவலையோடு தயாரித்த உணவைக் குழந்தை உண்ண மறுத்தது. சாப்பிடும் நேரந்தோறும் தாய் தன் ஆணைச் சக்கரத்தைச் சுழற்றத் தொடங்கினள். குழந்தையும் தன் சுதந்திரச் சங்கை ஊதத்தொடங்கியது. நாள் தோறும் சாப்பாட்டு வேளையிலே போர் நிகழும். ஐந்து வயதிற்குள் குழந்தை ஒரு பிடி சோறுகூட சாப்பிட முடியாத நிலைக்கு வந்துவிட்டது. குழந்தைக்கு இயல்பாகவே மாமிசம், முட்டை முதலியன பிடிக்கவில்லை. பிறவி முதலே குழந்தைக்கு இத்தகைய உணவுப்பொருள்களில் வெறுப்புத் தட்டியது. உடலின் வளர்ச்சிக்கு இன்றியமையாததெனத் தாய் கருதியிருந்த இந்த உணவுப் பொருள்களைக் குழந்தை சாப்பிடாவிட்டால், அதன் உடல் வலிமை குன்றிவிடும் என்பதே தாயின் சிந்தனை. தாய் வற்புறுத்திய இவ்வுணவுப் பொருள்களைக் குழந்தை உண்ண மறுத்தது. கட்டாயப்படுத்தி ஊட்டிய உணவினுல் குழந்தைக்கு அடிக்கடி வயிற்றுவலி கண்டது. அது உண்ணும் உணவும் குறைந்தது. குழந்தை சிற்றுண்டிகளை நாடித் திரிந்தது. தாய் தந்தையரிடமிருந்தும் உறவினரிடமிருந்தும் கிடைக்கும் சில்லறைகளைக் காப்பிக் கடைகளில் செலவு செய்து, நாவுக்கு இனிய பண்டங்களை எவரும் அறியாமல் வாங்கித் தின்னத் தொடங்கியது. தனக்குப் பிரியமான காய்கறிகளைச் சமைக்கும் தன் உறவினர் வீட்டில் வாழ விரும்பியது. தம்பி தங்கையர் இந்தக் குழந்தையோடு உண்ணும் பொழுது, தங்கள் கலன்களிலிருந்து மீனையாவது, எலும்பையாவது எடுத்து இவளுடைய கலத்தில் இட்டு நையாண்டி பண்ணினுல், இவள் சாப்பிடாமலே அழுது

கொண்டு போவது அடிக்கடி நிகழும் சம்பவமாயிற்று. பெற்றோர் இதைக் கண்டு அவனை அடிக்கத் தொடங்கினார்கள்.

தாய் முதலிலே கொண்ட குறிக்கோள் எங்கே? பின்பு விளைந்த தீமையின் நிலைமை எங்கே? வற்புறுத்து தலின் விளைவு பிற்காலத்தில் தோன்றலாயிற்று. பதினொன்கு வயதிலிருந்து இந்தக் குழந்தைக்கு வயிற்று வலி தீராத நோயாயிற்று. ஆறு மாதம் இரத்தக் குறை விற்காகக் குழந்தை வைத்தியசாலையில் இருக்க நேர்ந்தது. இவளுக்கு தம்பியரிடத்திலும், தங்கையரிடத்திலும் வெறுப்பும் பகையுந் தோன்றின. தொடக்கத்தில் உணவுபற்றித் தாய் கையாண்ட கட்டுப்பாடுகள் பல தீமைகளுக்குக் காரணமாயின. ஆரம்ப நாட்களில் கட்டாயப்படுத்துவதனால் விளையும் தீமைகளை இவ்வாறே பல உதாரணங்களால் விளக்கிக் காட்டலாம். உணவு என்னும் விஷயமாகத் தாய் காட்டும் பிடிவாதங்கள் குழந்தையின் சித்தத்தைத் தாய்க்கு எதிராக எழுப்பி விடுகின்றன. குழந்தை தன் உரிமையை விரைவில் அடையும் உபாயங்களை நாடுகிறது. நாளடைவில், குழந்தையின் பார்வையில் பெற்றவள் தாயாகத் தோன்றாமல், பகையின் அவதாரமாகவே தோன்றுகிறாள். பிற்காலத்தில் இந்தக் குழந்தை உயர்ந்த பதவியை அடைந்து தாயைப் பகைத்துத் தனியே சுதந்திரமாக வாழ்வதைப் பார்க்கிறவர்கள் 'இப்படியும் உண்டா உலகத்திலே? தாயைப் பகைக்கலாமா?' என்பார்கள். இவர்கள் ஆதிகாரணங்களை அறியாமல் பேசுபவர்களே. குழந்தைக்குத் தன் பெற்றோரிடத்தில் நம்பிக்கை அற்றுப்போகிற நேரத்திலிருந்து குழந்தை தன்னைப்பற்றிய இரகசியங்களை அவர்களிடமிருந்து மறைக்கத் தலைப்படுகிறது. பெற்றோர் வாழும் உலகம் வேறு; பிள்ளை வாழும் உலகம் வேறு என்னும் நிலைமை ஏற்படுகிறது.

சோற்றுத் தூருத்திகள்

சில அன்னையர் குழந்தைக்குப் பால் ஊட்டுகிற நாட்களில் தமது உடலினின்று விரயமாகும் சக்தியைச் சரிக்

கட்டுவதற்காக, அடிக்கடி அதையும் இதையும் தின்னத் தொடங்குவார்கள். இந்தப் பழக்கம் வரவர அதிகரிக்கும். தாம் உண்ணும் உணவுக்கு ஏற்ற அளவிலே பாலும் அதிகமாகிறபோது, குழந்தைக்கும் வேளை தவறிப் பாலூட்டத் தொடங்குவார்கள். குழந்தையின் பார்வையிலே பல தின்பண்டங்களைத் தின்பார்கள். முதல் மாதங்களில் தாய் தின்னும் பண்டங்களில் பங்கு கேட்கக் குழந்தைக்குத் தெரியாது. பெற்றோர் நாளடைவில் குழந்தைக்கும் பங்கு கொடுக்கத் தொடங்குவார்கள். தின்னும் பண்டம் தனக்கு உருசியாக இருந்தால் தன் குழந்தையும் அந்தச் சுவை இன்பத்தை அனுபவிக்கட்டும் எனக் கருதுவதே தாய்-அன்பின் இயல்பாகும். 'ஐயோ!' குழந்தை பார்த்துக் கொண்டிருக்கையில் அதற்குக் கொடுக்காமல் எப்படித் தின்பது?' என்று இரக்கத்துடன் தாய் கூறுவாள்.

சுவை இன்பம் யாவருக்கும் பொதுவானது எனினும், சில குழந்தைகள் முந்திய பழக்கத்தால் வேளை தவறி உண்ண மறுத்துவிடும். ஆனால், சில குழந்தைகளோ, எதை எப்பொழுது கொடுத்தாலும் தின்னும் குணம் உடையவர்களாக இருப்பார்கள். இந்தக் குணத்தைக் குழந்தைகள் பாரம்பரிய நியதியாகப் பெறுகின்றனர். பழக்கத்தாலும் குழந்தைகளிடத்தில் இந்தக் குணம் அமையலாம். இயல்பாகவே சுவை இன்பத்தில் பேரவா உடைய குழந்தைகள் ஓயாமல் தின்பதனால் ஓடி, ஆடி விளையாடும் குணம் இழந்து, மந்த குணம் உடையவர்களாக மாறுவார்கள். குழந்தைகள் உண்டி தேடும் நிலையிலே நின்றால், அவர்களுடைய பிற தன்மைகள் பிரகாசம் அடைவதற்குரிய வழிவகைகளைத் தேடமாட்டார்கள். சாப்பாட்டு வேளையைத் தவிரப் பிற நேரங்களில் விளையாட்டுக்களிலும் பலவிதமான காட்சிகளிலும் மனத்தைத் திருப்பிப் பொழுது போக்குகிற குழந்தையே அறிவை அடைய முயற்சி செய்கிறது. உண்ணும் நேரமும் உறங்கும் நேரமும் நீங்கலாக எஞ்சிய நேரமெல்லாம் தாயின் காலைச் சுற்றி வட்டமிடுகிற குழந்தை

சோற்றுத் துருத்தியாக மாறிவிடும். இதற்கு ஓரளவு காரணமாகிறவள் தாயே. மற்றொரு காரணம் குழந்தைக்குச் சுவை இன்பத்தில் இயல்பாக அமைகிற பேரவா. இத்தகைய குழந்தைகள் தொடுகை இன்பத்தைப் பெருக்கிச் சிற்றின்பப் பிரியம் உடையவராக மாறி விடுவர். திறமை திராணிகளேயும் புத்தித்வத்தையும் பயன் படுத்துவதில் மனம் அவ்வளவாகச் செல்லாது.

சோற்றுத் துருத்தியாகிற குழந்தையின் உடல் கொழுத்திருக்கும்; ஓடுதல் என்பதே மிகக் குறைவாக இருக்கும்; 'விழுந்துவிடுவேனே?' என்ற பயம் இந்தக் குழந்தையிடத்தில் அதிகமாக விளங்கும். "இடறி விழுவேன்" என்ற அச்சம் தோன்றுகிற இடந்தோறும் தன்னே எடுத்துச் செல்லப் பிறர் உதவியை நாடும். இத்தகைய குழந்தைகள் புத்தித்வம் அதிகமாகவுள்ள குழந்தைகள் நடக்கத் தொடங்குகிற காலத்திற்கு மிகவும் பிந்தித்தான் நடக்கத் தொடங்குவர்.

தாய் நினைத்த வேளேகளில் எல்லாம் தின்பதைக் காண்கிற குழந்தைகள் சிறுவயதிலேயே சோற்றுத் துருத்திகளாக மாறுவதற்கு வழி தேடுவார்கள். ஆகையால், தாய் தன் உணவைக் கட்டுத்திட்டம் செய்ய வேண்டும். அப்படியே தின்பதாயிருந்தாலும், குழந்தையின் பார்வையில் தின்பது நன்றன்று. சமையல் அறையிலேயே முதல் வருஷங்களில் சுற்றிச் சுற்றி வட்டமிடுகிற குழந்தைகள் அடுப்பிலே பக்குவமாகிறவை அனைத்தையும் தமக்கெனக் கருதி, 'ஆக்குகிற தின்பண்டங்கள் அடுப்பைவிட்டு இறங்குமோ? எப்பொழுது ஆறுமோ?' என்று காத்திருப்பார்கள்; சமைத்ததை அடுப்பிலிருந்து இறக்கியவுடனே உண்கலத்தை எடுத்துக்கொண்டு ஓடி வந்து "எனக்கு முதலில் இடு" என்று உட்காருவார்கள். வேளே வருமளவும் எதற்கும் காத்திருக்குமாறு குழந்தைகளேப் பழக்க வேண்டுமானல், உணவு விஷயத்திலேதான் அதைத் தொடங்கவேண்டும். இத்தகைய வளர்ப்புப் பெருத பிள்ளேகள், 'ஊணுக்கு முந்தி, படைக்குப் பிந்தி'

என்பதை வாழ்க்கைச் சித்தாந்தமாகக் கொள்வார்கள். குழந்தை பெரியவளாகும்பொழுது, இளம்பிராயத்தில் தவறான பழக்கங்களாகத் தோன்றுதவை பிறர் அருவருக்கிற குணங்களாக அமைந்துவிடும்.

ஒரு பெண்ணுக்குப் பன்னிரண்டு வயதாயிற்று. ஒரு நாள் பெற்றோர் விருந்துக்குச் சில பிரமுகர்களை அழைத்திருந்தனர். சமையல்காரன் வெகு விமரிசையாகத் தளிகை செய்து வாய்க்கினிய பண்டங்களைத் தயாரித்தான். தாய் பெரிய வாழை இலைகளில் விருந்தினர்களுக்குப் பரிமாறியிருந்தாள். குழந்தையின் குணக்கேடு தாய்க்குத் தெரியும். ஆகையால், தாய் தன் மகளை முன்னரே எச்சரித்திருந்தாள். சிறுமியும் ஒழுக்கங்களைப் பற்றிப் பள்ளிக்கூடத்திலும் தன் உறவினர்களிடத்திலும் பல பாடங்களைக் கற்றிருந்தாள்; எனினும், இலைகளில் பரிமாறிய பண்டங்களைப் பார்த்தபோது அவளால் நாவை அடக்க முடியவில்லை. தனக்கென்று குறித்திருந்த இலைக்குமுன் அமர்ந்து சாப்பிடத் தொடங்கி விட்டாள். விருந்தினர்களை அழைத்துக்கொண்டு தந்தை மாடியினின்று இறங்கி வந்தார்; தன் மகளை ஒருமுறை கோபமாகப் பார்த்தார். பெண்ணுக்கும் கோபம் பொங்கி விட்டது. கையில் எடுத்த சோற்றைத் தன் கலத்தில் கோபத்தோடு எறிந்தாள். எறிந்த சோறு பக்கத்து இலைகளில் சிதறி விழுந்தது. தந்தை அவள் முதுகில் ஓங்கி அடித்தார். விருந்தினர் குறுக்கிட்டனர். தந்தையையும் மகளையும் சமாதானப்படுத்தினர். அந்தச் சிறுமியைக் குழந்தைப் பருவத்தில் சோற்றுத் துருத்தியாக வளர்த்துவிட்ட தாய் தந்தையர் தம் மகளினது தவறான செயலுக்காக மனநோவதிற் பயனில்லை அடிப்பதனால் தொட்டில் பழக்கத்தை மாற்ற முடியுமா? இச்சிறுமி கலியாணமாகிக் கணவன் வீட்டுக்குச் சென்றபிறகு, சமைத்தவற்றை முதலிலேயே சாப்பிடுவதாக மாமியாரும் மாமனாரும் குற்றம் சாட்டத் தொடங்கினார்கள்; கணவனுக்கும் தன் மனைவியின் குணம் சகிக்க முடியாததெனத் தோன்றியது. அடிக்கடி கணவனுக்கும் மனைவிக்கும்

சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன. அந்தோ பரிதாபம்! சிம்பிலேயே வளைத்துத் திருத்தியிருக்க வேண்டிய ஒரு குணம் கொம்பாக முற்றி அருவருக்கத்தகுந்த ஒழுக்கங்களென்னும் கனிகளைத்தரும் பொழுது விளைகிற தீமைகளைப் பெற்றோர் ஆய்தல் வேண்டும். கோணலாக வளருகிற குழந்தைகளின் ஒழுக்கக் கனிகள் பிறர் வாழ்க்கையைக் கசப்பாக்கி விடுகின்றன.

உண்ணக் கட்டாயப்படுத்தினால், சில குழந்தைகள் 'கோ' வென்றழுவார்கள்; தலையணைக்குப் பஞ்சடைப்பது போல் சோற்றையும் பாலையும் தமது வயிற்றுக்குள் அடைப்பதற்கு இசைய மாட்டார்கள். தாய் கட்டாயப் படுத்தினால், போர் ஆரம்பமாகும். குழந்தை விரும்பியதை வேறு வழியில் பெற முயலும். தன் தாயின் சித்தத்திற்கு அடங்கிவிட்டதுபோல் பாசாங்கு செய்யும். பின்பு, அளிக்கிற உணவை அளைந்து சிந்திக் கொட்டிப் பாழாக்கத் தொடங்கும். சோறு சாப்பிடும்பொழுது தன் அளவுக்கு அதிகமானதை அங்கும் இங்கும் சிதறும். சிந்திச் சீரழிக்கப் பழகிய இந்தக் குழந்தை பிற்காலத்தில் தனக்கு இஷ்டமில்லாததைப் பிறர் தன்மீது சுமத்தும் பொழுது அதைப் பாழடிக்க முயலும். குழந்தையாக இருந்தபொழுது இக்குணத்திற்கு ஆளான ஒருத்திக்கு இஷ்டமில்லாத கணவனைப் பெற்றோர் மணம் செய்து வைத்தால், அக்கணவனுடைய குடும்பத்தைப் பாழாக்கக்கூடிய தன்மைகள் அவளிடத்தில் இயல்பாகவே தோன்றும்.

குழந்தையின் வாழ்க்கை தொடங்கும்பொழுது தாய் தன் பழக்க வழக்கங்களைத் திருத்திக் கொள்ளவேண்டும். குழந்தைக்கு வேளை தவறாமல் உணவளிப்பதோடு குழந்தையே தனக்குத் தேவையான உணவின் அளவைத் திட்டம் செய்து கொள்ளும் உரிமையையும் அளிக்கவேண்டும். தாயின் அமுத கலசத்திலே தொடங்குகிற பாடங்கள் பின்பு உணவு விதிகளைச் சார்ந்தே வளருகின்றன. வாய்-வழியைத் திருத்தினால், வாழ்க்கை-வழிகளைத் திருத்தலாம். மனிதனது தேவைகளில் தலையிடத்தில் நிற்பது உணவுத் தேவையே. உணவின் நிறைவும் குறைவும் மனிதரின்

குணங்களை ஆட்சி செய்கின்றன. 'மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை முதலியவனைத்தும் பசி வந்திடப் பறந்து போகும்.' உணவின்மையால் வருந்தும் மனிதன் அதனைப் பெறும் உபாயங்களைச் சிந்திப்பான். சிந்தனைகள் வினை மாட்சியாக வெளிப்படவல்ல ஆற்றலுடையனவாகையால், பெற்றோர் குழந்தையின் வாழ்க்கை தொடங்குகிற நாட்களில் உணவு-நியதிகளைப் பேரறிவோடு கையாண்டு, எவ்விதச் சிக்கல்களுக்கும் இடங் கொடாமல், தம்மையும் தம் மகவையும் காக்கவேண்டும்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

மனிதன் மாறுதல்களுக்கு எளிதில் இசையாத மனப்பான்மை உடையவன். இந்தத் தன்மை எங்கே ஆரம்பமாகிறது? குழந்தை, கருவாகத் தாயின் வயிற்றில் இருந்த காலத்தில் வளர்ச்சிக்குத் தேவையான உணவைக் கொப்பூழ்க்கொடி வழியாகப் பெற்று வந்தது. உணவைப் பெற்று வந்த இப்பழைய முறை, பிறந்த உடனே மாறி விடுகிறது. என்றாலும், பழைய முறையை விட்டுப் புதிய முறையைக் குழந்தை பிறந்தவுடனேயே ஏற்றுக்கொள்வதில்லை. வயிற்றில் இருந்த காலத்தில் உட்கொண்ட உணவு கழிய இரண்டு நாட்கள் செல்கின்றன. பின்பு உணவு அருந்துவதில் புது முறை ஆரம்பமாகிறது.

குழந்தைக்குப் புது முறையைத் தாய்தான் புகுத்த வேண்டும். குழந்தைக்குப் புது முறைப்படி உணவு அருந்துகிற பழக்கம் படிப்படியாக ஏற்படுகிறது. வாழ்க்கை தொடங்குகிற நாட்களில் பாலூட்டுதலும் பாலுண்ணலுமாகிய இருவகைச் செயல்கள் இருதிறத்தாரின் நலத்தை நோக்கமாகக் கொண்டிருந்தபோதிலும், இரண்டாவது மாதத்திலிருந்து குழந்தையைப் புட்டிப் பாலுக்குப் பழக்கி விடமுடியும். எதிர்பாராத காரணங்களால் தாய்ப்பால் ஊட்ட வழியற்றுப் போகிற குழந்தைகளை ஆரம்பத்திலிருந்தே புட்டிப் பாலுக்குப் பழக்கி விடலாம். தாய்ப்பால் அருந்துகிற குழந்தைகளுக்குப் பசுவின் பாலும், புட்டிப்பாலும் புதியவை. பழைய வழக்கத்தை

மாற்றிப் புதிய வழக்கத்திற்குக் குழந்தைகளைப் பழக்கு வதில் பல தொல்லைகள் உள்ளன. பசுவின் பாலும் புட்டிப் பாலும் தாய்ப்பாலிலிருந்து முற்றிலும் வேற்றுமை யான சுவை உடையவை.

பழைய சுவையை விட்டுப் புதிய சுவையை ஏற்றுக் கொள்ளக் குழந்தை வெகு எளிதில் இசைவதில்லை. முத லாவது, இந்தப் பால்களை அடைக்கிற புட்டியும் கெண்டி கைச்-செம்பும் குழந்தைக்குப் புதியவைகளே. இப்பாத் திரங்களில் பொருத்துகிற ரப்பர்ச் சூப்பியும் புதிய பொருளேயாம்.

தாயின் அமுத கலசச் சூப்பிக்கு ஒரு தனித் தொடுகை-இன்பம் உண்டு. அந்த இன்பம் இந்த ரப்பர்ச் சூப்பிக்கு இல்லை. ஆகையால் ஏதோ புதிய உணவு-முறை ஒன்று புகுவதாகக் குழந்தை அறிந்து கொள்கிறது; உதட்டைப் பிதுக்குகிறது; கையால் புட்டியைத் தட்டு கிறது; தனக்கு விருப்பம் இல்லை என்பதைப் பலவாறு வெளிப்படுத்துகிறது.

குழந்தைகளைப் புதுமுறைகளில் புகுத்திப் பழக்குவ தற்குப் பொறுமை வேண்டும். விரைவதால் விளைவன பல்வகை மனச் சிக்கல்களேயாம். கட்டாயப்படுத்துவ தனால் விளையும் கேடுகளை முன்னரே பார்த்துவிட்டோம். இதனால் மன அயர்வுப்புலத்தில் விளைகிற தீமைகளைப் பிறிதோரிடத்தில் பார்க்கப்போகிறோம். முதன் முதலில், குழந்தையின் கையில் சூப்பி ரப்பரைக் கொடுத்துப் பழக்க வேண்டும். குழந்தைக்கு எந்தப் பொருளையும் வாயால் சுவைத்து ஆராய்ந்து பார்க்கும் குணம் உண்டு. குழந்தை தானாகவே சூப்பியை வாயில் வைத்துச் சப்பப் பழகும்; பின்பு, அதே ரப்பர்ச் சூப்பியைப் பால் புட்டிக்குப் பொருத்திக் குழந்தையிடம் கொடுக்கவேண்டும். இவ்வாறு செய்வதால், புதியது ஒன்று தன் வாழ்க்கையில் புகுந்ததாகக் குழந்தைக்குத் தோன்றாது. குழந்தையின் கையில் கரண்டிகளைக் கொடுத்துப் பழக்க வேண்டும். வாயினால் ஆராய்ந்து பழகிய பொருள்கள் குழந்தைக்குப் புதியனவாகத் தோன்றா. அதன் பின்னர் கரண்டியினால்

குழந்தைக்கு மருந்தையோ பாலையோ ஊட்டப் பழக்கினால், புதுமையைப் பற்றிய அச்சம் இன்றியே சுவையுடையதைப் பருகும்.

புதியவைகளைக் குழந்தைக்குப் புகுத்தும் விஷயத்தில் நாம் எச்சரிக்கையாக இராவிட்டால், புகுத்தக் கருதிய பொருளில் குழந்தைக்கு மாருத வெறுப்பு ஏற்பட்டுவிடும். மீன்-எண்ணெயைக் குழந்தைக்குக் கொடுத்துப் பாருங்கள். வெகு எளிதில் குழந்தைகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஒரு முறை மீன் எண்ணெயைப் பகைத்தால், பின்பு வாழ்நாள் எல்லாம் அவ்வெண்ணெயை அருவருக்கத் தொடங்கிவிடுவார்கள். முதலில் மீன் எண்ணெயைக் கொட்டி விளையாடப் பழகிய குழந்தை எண்ணெய் புரண்ட விரலை வாயில் இட்டுத் தானே ஆராய்ந்து பார்க்கிறது.

இரண்டரை வயதான ஒரு குழந்தையின் பெரிய தந்தை ஒரு நாள் விளக்கெண்ணெய் வாங்கி வந்தார். விளக்கெண்ணெய்ப் புட்டியை அந்தப் பெண் குழந்தையிடம் காட்டி, "தேன், தேன்! தித்திப்பான தேன்! நானே குடிக்கப் போகிறேன்" என்றார், புட்டியைத் திறந்தார்; தேனைக் குடிப்பவர்போலக் கொஞ்சம் விளக்கெண்ணெயை எடுத்துச் சுவைத்து இரசித்துக் குடித்தார்; பின்பு, திறந்த புட்டியையும் கரண்டியையும் அந்தப் பெண் குழந்தைக்கு எதிரில் வைத்துவிட்டு வேறு அலுவல்களைக் கவனிக்கச் சென்றார். சிறுமி, பெரிய தந்தை செய்த வண்ணமே புட்டியிலிருந்து எண்ணெயைக் கரண்டியில் ஊற்றி, "தேன்! தேன்! தித்திப்பான தேன்!' என்று சொல்லிக்கொண்டே குடித்தாள். பக்கத்தில் இருந்த தம்பியைப் பார்த்து, "ராமு! தேன்! தித்திப்பான தேன்!" என்று சொல்லிக் கரண்டி நிறைய விளக்கெண்ணெயை எடுத்து, ஒரு வயதும் நான்கு மாதமுமான தம்பி வாயில் திணித்தாள். அவன் கூச்சலிட்டு அழுதான். "தூ! தூ!" என்று துப்பினான். பக்கத்தில் இருந்த ஒரு துணியை எடுத்து வாயைத் துடைத்துக் கொண்டான்.

அன்று முதல் அக்காளுக்கு விளக்கெண்ணெய் தேனாயிற்று; தம்பிக்கு வேம்பாயிற்று.

புதியதை நாம் புகுத்துவதில் குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுப்போமானால் அவர்கள் தாமாகவே புதியவற்றை ஆய்ந்து ஏற்றுக்கொள்வார்கள். புதியன புகுத்தும் முறையில் பொய்யையும் புகுத்துதல் நன்றன்று. விளக்கெண்ணெயைத் தேன் என்று உண்ட சிறுமி இரண்டாவது வகுப்பில் படித்தபொழுது அவளுக்கு வயது ஐந்து. ஒருநாள் விருந்துக்கு அழைத்திருந்த வீட்டில் அச்சிறுமி தேனையே உண்ண நேர்ந்தபொழுது, "இதுவா தேன்? தேன் எனக்குத் தெரியுமே. இது தேன் இல்லை." என்றாள். வீட்டிற்கு வந்ததும் குழந்தை விளக்கெண்ணெய்ப் புட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு பலரிடம் சென்று "இது என்ன? இது என்ன? என்று கேள்வி கேட்கத் தொடங்கினாள். யாவரும் அதனை விளக்கெண்ணெய் என்று சொல்லவே, பெரிய தந்தை மிகப் பெரிய பொய் சொன்னதாக நினைத்து, அவரை நம்பலாகாது என்று கருதினாள். இதன்பிறகு, இவளுக்குத் தன் பெரிய தந்தையிடத்தில் ஏற்பட்ட சந்தேகம் நீங்க வெகுநாட்கள் சென்றன. குழந்தையின் மனத்தில் சந்தேகத்தை ஒரு முறை புகுத்திவிட்டால், பிறகு புதியது ஒன்றையும் வெகு எளிதில் புகுத்த முடியாது. ஆகவே, புதியன புகுத்துவதில் அறிவைக் கையாண்டு உள்ளதை உள்ளபடி உரைத்தலே நன்று.

மானிட வாழ்க்கையில், முதல் ஆண்டுகளில் தேடுகிற உணவு, உடை, உறக்கம் என்னும் முதன்மைத் தேவைகளைப்பற்றி ஆராய்ந்தால், எத்தனைதடவை புதியவைகளைப் புகுத்தநேரிடும் என்று அறியலாம். முதலில், தாய்ப்பால்; பின்பு புட்டிப்பால்; அல்லது, பசுவின்பால்; பாலைப் புகுத்தும் பாத்திரங்களாகிற புட்டி; கெண்டிகை; இவற்றோடு பொருத்துகிற ரப்பர்ச் சூப்பி; கரண்டி என்பவைகளும் புதியவைகளே. ஆறாவது மாதத்தில் பல் முளைக்கத் தொடங்குகிற பொழுது, கடினமான பொருள்களைக் கடிக்கவேண்டுமென்னும் ஆசை பிறக்கிறது.

குழந்தை, முறுக்கு சீடை முதலிய பண்டங்களைக் கடிக்கத் தொடங்குகிறது. இதன் பிறகு குழந்தை சாப்பிடுகிற உணவில் புதியவை புகுகின்றன. சில மாதங்கள் வரைக்கும் பால் - சோறு தின்னப் பழகுகிறது. பின்னும் சில மாதங்கள் செல்லவே, சோற்றோடு காய்கனிகளும் புகுகின்றன. எல்லாம் புதியவை. புதியவைகளைக் குழந் தைகள் தாமே ஆராய்ந்து பழகுவதற்கு முந்தி நாமே கட்டாயப்படுத்திக் கொடுக்க முயன்றால், அவர்கள் அவற்றை எளிதில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகையால், குழந்தைகளைப் படிப்படியாகப் பழக்கிப் புதியவைகளிற் புகுத்துதல் வேண்டும். இதே நியதிதான் நடை உடை பாவனை முதலியவற்றிற்கும் பொருந்தும்.

மானிட வாழ்க்கை சங்கிலிக் கோவைபோலப் புதிய அனுபவங்களுக்குக் காரணமான புதுப்புது சம்பவத் தொடர்புகளால் அமைகிறது. ஒவ்வொரு தொடரும் முந்திய தொடரோடும் பிந்திய தொடரோடும் தொடுக் கப்பெறுகிறபொழுது, பொற்கொல்லன் கையாளுகிற முறைகளைப் போன்ற சில உபாயங்களையே கையாள வேண்டும். முதலாவது, புதியவைகளைப் புகுத்துவதில், நமக்கு இருக்கும் ஆத்திரத்தை வெளியிடலாகாது. முதன்முதலில், மோட்டார் கார் என்னும் வாகனத்தைத் தயாரித்து நமது நாட்டுக்கு அனுப்பிய கம்பெனிக்காரர்கள் அந்த வாகனத்தை மக்களிடையே புகுத்துவதற்குச் சில விநோதமான முறைகளைக் கையாண்டனர். முதலில் சிலரைக் கட்டணத் தொகை இன்றியே ஏற்றிச் சென்றனர். ஜனங்கள் வந்து ஆராய்ந்து பார்ப்பதற்கு வசதியான இடத்திலே அதனை நிறுத்தி வைத்தனர்; மிகவும் குறைந்த பிரயாணக் கட்டணத் தொகை வாங் கினர். அக்காலத்தில் மோட்டார் பிரயாணச் சட்டங்களும் ஏற்படவில்லை. ஜனங்கள் மோட்டார் காரில் ஏறிப் பிரயாணம் பண்ணப் பழகிய பிறகுதான், மோட்டார் பஸ்களுக்குப் பல சட்டங்களும் கட்டுத் திட்டங்களும் ஏற்பட்டன. இங்ஙனமே குழந்தைகளின் வாழ்க்கையில் புதியதைப் புகுத்தும்பொழுது வற்புறுத்தல் பொருந்தாது.

குதிரையைக் குளக்கரை வரைக்கும் 'கற கற' என்று இழுத்துச் செல்லலாம்; முடிவில், குதிரை தானே நீரைப் பருகவேண்டும்?

குழந்தைகளைப் புதியவைகளோடு அறிமுகப்படுத்தப் பல முறைகள் உள்ளன. பழகிய சம வயதுடைய குழந்தையின் உதவியால் புது வழக்கத்திற்கு நமது குழந்தைகளைப் பழக்கிவிடலாம். இது ஒரு வழியாகும். ஒரு தாய் தன் குந்தைக்குப் பருப்பும் சோறும் ஊட்ட வேண்டும் என்று நினைத்தாள். பக்கத்து வீடுகளில் இருந்து குழந்தைகளைத் தன் வீட்டிற்குச் சாப்பிட அழைத்தாள். அந்தக் குழந்தைகளுக்குப் பருப்பும் சோறும் பிசைந்து வைத்தாள். குழந்தைகள் இலைகளுக்கு எதிரே உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள். தன் குழந்தைக்கு அவள் இலையும் போடவில்லை; சோறும் பிசைந்து வைக்கவில்லை. இந்தக் குழந்தை தன்னைப் போன்ற குழந்தைகள் பருப்பும் சோறும் சாப்பிடுவதை ஒரு மூலையில் நின்று பார்த்தது. மெதுவாக ஒரு இலையின் கிட்டச் சென்று கொஞ்சம் பருப்புச் சோற்றை எடுத்து வாயில் இட்டுத் தின்று பார்த்தது. பின்பு தாயைப் பார்த்து "அம்மா, எனக்கு!" என்று மழலைச் சொல்லில் கேட்டது. உடனே தாய் குழந்தைக்கு முன் இலையிட்டுப் பருப்பும் சோறும் பிசைந்து வைத்தாள். அன்றைக்குக் குழந்தை அள்ளி அள்ளித் தின்றதெல்லாம் ஐந்து பருக்கைகளே. பழகிய குழந்தைகள் இலையைத் துடைத்துவிட்டன. புதிதாகப் பருப்புச் சோறு உண்ண விரும்பிய குழந்தையோ, அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்துக்கொண்டே சாப்பிட முயன்றது. தாய் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. சில நாட்களுக்குள் இந்தக் குழந்தையும் தன் இலையில் வைத்த பருப்புச் சோற்றை தின்னப் பழகிவிட்டது. சில நேரங்களில் குழந்தை மிச்சம் வைத்தாலும் தாய் ஒன்றும் சொல்வதில்லை. 'வேண்டாம்' என்று மறுத்தாலும் குழந்தையின் விருப்பத்திற்கே தாய் இசைந்தாள்; விருப்பம் அறிந்து கொடுத்தாள். இந்தக்

குழந்தையிடத்தில் உணவைப் பற்றி எவ்விதச் சிக்கல்களும் ஏற்படவில்லை.

ஒருமுறை பழையதைக் கழித்துப் புதியதில் புகப் பழகிய குழந்தை மேலும் மேலும் தன் வாழ்க்கையில் ஏற்படப் போகிற புதிய வழக்கங்களைக் கண்டு அருவருக்காமல், அவற்றை ஏற்றுக்கொள்ளும்; புதியவைகளையும் புது அனுபவங்களையும் எதிர்பார்க்கும். இவ்வாறு பழையன கழித்துப் புதியதில் புகப் பழகிய குழந்தையின் வாழ்க்கை அனுபவங்கள் நாளுக்கு நாள் விரிவடையும்; அறிவு பெருகும். இவன் பெரியவனாகும் பொழுது வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி வீரனாக விளங்குவதற்கமைந்த ஆற்றலைப் பெறுவான்.

பல்லூறல் கடிக்கத் தீரும்

பல் ஊருகிற நாய் கடிக்கும்; துணியைக் கிழிக்கும். சில மாதங்களாகத் தாய்ப்பால் அருந்தி வந்த குழந்தை ஒருநாள் தன் எயிற்றால் தாயின் அமுத கலசச் சூப்பியைக் கடித்துப் பார்க்கிறது. நோவு பொறுக்க முடியாத தாய் 'பொட்' என்று அடிக்கிறாள். குழந்தையும் வீறிட்டு அழுகிறது. குழந்தையை வளர்ப்பதில் அனுபவமில்லாத தாயின் தலைச்சன் பிள்ளைக்கு ஏற்படுகிற பல்லூறலின் கதை இதுவே. பல் முளைப்பதற்குமுன் குழந்தை எந்தப் பொருளையும் நாவால் நக்கியும், எயிற்றால் கடித்தும் ஆராய்ந்து பார்ப்பது இயல்பே. சப்புவதைப் போலவே எயிற்றால் அழுத்திப் பார்ப்பதிலும் குழந்தைகளுக்குத் தனி இன்ப உணர்ச்சி உண்டு. உண்டி என்பதை, உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது, மெல்லப்படுவது என ஐவகையாக நம் முன்னோர் பாகுபாடு செய்து வைத்தனர். இவற்றிற்கு முறையே, சமைத்த சோறும், காய்கனிகளும், தேன் முதலியனவும், பால் பானகமும், தாம்பூலம் இலவங்கம் முதலியனவும் உதாரணங்களாகும். சுவை இன்பத்தைத் தருகிற பண்டங்கள் யாவும் இவ்வைந்து தலைப்பில் அடங்கும். குழந்தையும் ஆரம்ப நாட்களில் இவ்வுலகத்தைப் பற்றிய அறிவைப் பெறும் பொருட்டுப் பண்டம் பண்ட

மாக ஆராய்கிறது. உயிரோடிருப்பதற்கு இன்றியமை யாத உண்டிகளைத் தெரிந்து கொள்வதே இந்த ஆராய்ச்சி யின் முதல் நோக்கம். நக்குதல், பருகுதல், மெல்லுதல், உண்ணுதல், அல்லது கடித்தல் ஆகிய நுகர்ச்சிப்படிகள் குழந்தையின் தாடை எலும்பின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவை. இவை மிகவும் சிறந்த பயிற்சிகளு மாகும்.

பற்கள் முளைக்கும்பொழுது எயிறு தடித்து ஊரல் எடுக்கிறது. இந்த ஊரலைத் தணிப்பதற்காகக் கையில் அகப்படுகிற கடினமான பொருள்கள் யாவற்றையும் குழந்தை கடிக்கத் தொடங்குகிறது. கடிக்கக் கடிக்க, எயிறு கிழிந்து பல் - முளை கிளம்புகிறது. பல் முளைக்கிற காலத்தில் எயிற்றின் ஊரலைத் தணிப்பதற்காகக் கடிக் கிறதே தவிரத் தனக்கு இன்பநிலையமான தாயின் அமுதகலசத்தைக் கடிக்கவேண்டும் என்ற எண்ணம் குழந்தைக்குச் சற்றும் இல்லை. குழந்தை கடிக்கிறபொழு தெல்லாம், தாய் அமுதகலசத்தின் சூப்பியைக் குழந் தையின் வாயினின்று வாங்கி விடுவாளாகில் தன் செய்கை தாய்க்கு விருப்பம் இல்லை எனவும், மேலும் அப்படிச் செய்தால் தனக்கு இன்றியமையாத பால் கிட்டாமல் போகும் எனவும் குழந்தை வெகு விரைவில் தெரிந்துகொள்ளும். தீட்டிய மரத்திலேயே கூர்பார்ப்பது போல், பாலூட்டிய அமுத கலசத்திலேயே எயிற்றூரலைத் தீர்த்துக்கொள்ளும் வழக்கத்தை வெகு விரைவில் விட்டு விடும். முறுக்கு, சீடை முதலிய கடினமான தின்பண் டங்களைக் கடித்துப் பல் ஊரலைத் தணித்துக்கொள்ளும்.

தாய்போல் நல்லவர் எவருமில்லை என்ற நம்பிக்கை நாளுக்குநாள் குழந்தையின் உள்ளத்தில் உறுதியாகிறது. நன்மையே உருவெடுத்து வந்தவள் போல் தோன்றுகிற தாயே ஒரு நாள் திடீர் என்று குழந்தையை அடிக்கிருள். அதைக் காணும்போது, குழந்தையின் உள்ளத்தில் பெருங் குழப்பங்கள் ஏற்படுகின்றன. பரிபூரண நன்மையைப் பற்றித் தனக்கிருந்த கொள்கை தவறு; நன்மையிலும் தீமை உண்டு என்று நினைப்பதுபோல் குழந்தை துக்கப்

பட்டு அழுகிறது. தாயிடத்தில் கொண்ட நம்பிக்கை குறை கிறது. 'அடிப்பாளோ?' என்ற பயம் மெதுவாகக் கிளம்பு கிறது. தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளப் பின்னும் ஒரு முறை கடித்துப் பரீக்ஷை பார்க்கிறது. திரும்பவும் அடிவிழுந்தால் தன் முந்திய சந்தேகத்தைப் பின்னும் உறுதிப் படுத்திக் கொள்கிறது; திரும்பவும் ஆராய்ச்சிக் குணம் தோன்றவே, திரும்பவும் கடித்துப் பார்க்கிறது. "தாயை நம்பமுடியாது; இவளுக்கும் கோபம் உண்டு; என்னை எப்பொழுதாயினும் கைவிடுவாள்," என்றவை போன்ற அச்சமும், சந்தேகமும் எழவே, தன்னை அடித்த வன்மம் தீரப் பின்னும் ஒரு முறை கடிக்கிறது. அந்தோ! அடிப்பதனால் கடிக்கும் பழக்கம் போகாமல் மேலும் மேலும் பலவகைக் குணச்சிக்கல்கள் வளருகின்றன. இதைப் பார்க்கும்போது, என்ன செய்வதென்று தெரியாமல் தாயும் திகைக்கிறாள். இதற்கு மாறாகத் தாய் முன் சொன்ன முறையைக் கையாண்டால், பின்பு விளையக்கூடிய பல சிக்கல்களைத் தவிர்க்கமுடியும்.

பால் மறந்த பின்னே

குழந்தை வளர வளரத் தாய்ப் பாலில் போஷிப்புச் சத்தும் குறைந்து கொண்டே வருகிறது. குறிப்பிட்ட ஒரு கால வரையறைக்குமேல் தாய்ப்பால் குழந்தையின் வளர்ச்சிக்கு உகந்த உணவாக இருப்பதில்லை. ஒன்பது மாதத்தில் பால் மறக்கக்கூடிய வளர்ச்சியைப் பெறுகிற குழந்தைகள் பலர். சில பிள்ளைகள் எட்டு மாதத்திலேயே பால் மறக்கக்கூடிய நிலையை அடைகிறார்கள். வேறு குழந்தைகள் ஒன்றரை வயது வரைக்கும் பால் மறக்கக் கூடிய நிலைக்கு வருபவர் அல்லர். பால் மறக்கக்கூடிய வளர்ச்சி நிலை குழந்தைக்குக் குழந்தை வேற்றுமைப்படும். எந்த வயதிலே குழந்தையைப் பால் மறக்கப் பண்ணினாலும், திடீர் என்று இதனைச் செய்வது நன்றன்று. நினைத்தவுடனே காரியத்தை நிறைவேற்றுவதனால் விளைகிற தீமைகளை அன்னையர் அறிந்திருத்தலே நலம்.

பால் அருந்துவதே குழந்தையின் தலைமையான இன்பம் என்பதனைப் பன்முறை வற்புறுத்துகிறோம். அதுவே

மிகப்பெரிய திருப்தியைத் தருவது. குழந்தையின் வளர்ச்சிக்கு மூலாதாரப் பொருளும் அதுவே என்பதை விளக்கமாகத் தெரிந்து கொண்டோம். குழந்தையின் வாழ்க்கையில் முதன்மையான இடம் பெற்றிருக்கிற பால், குழந்தைக்கு அகப்படாதபொழுது, அதற்கு ஏற்படுகிற மனத் தத்தளிப்பைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள். தாய்ப்பாலோடு நெருங்கிய தொடர்பில் இருப்பவை அன்பின் புறச்செயல்களாகிய அரவணைத்தல், கொஞ்சுதல், ஏந்துதல் குலாவுதல் முதலியன அனைத்துமாம். அன்பு-விதை முளைத்து மனோவிகாரங்களாகிய பல கிளைகள் பெற்று, வாழ்க்கை லக்ஷியமென்னும் அழகிய மரமாகத் தழைத்து வளருகிற காலம், தாய் தன் பாலை ஊட்டுகிற நாட்களே எனலாம். தாய் விதைத்த அன்பு-விதை முளைத்து மரமாகி நறுமலர்கள் பூக்கிற காலம் வெகு விரைவில் தோன்றும். குழந்தையின் விளையாட்டுக்களில் அம்மலர்களின் நறுமணம் கமழும். வாழ்க்கைப் போக்கையே நிர்ணயிக்கும் சக்திவாய்ந்த இத்தருணத்தில் அன்பின் உயிர் நாடியாகிய தாய்ப்பாலை மறக்கும் நிலையை அடைகிறது குழந்தை. இங்ஙனம் பாலை மறக்க நேர்ந்தாலும், தாயின் அன்பு குறையாது என்ற நம்பிக்கையை குழந்தைக்கு உண்டுபண்ணிக்கொண்டே இருக்கவேண்டும்.

குழந்தையைப் பால் மறக்கப் பண்ணுகிற காலத்தில் அதன் உள்ளத்தில் பதிகிற அனுபவங்கள் ஆயுட்காலமெல்லாம் மனத்தின் அயர்வுப் புலத்தில் அழியாமல் பதுங்கிக்கிடந்து, பிற்காலத்தில் அதன் [1] தன்மயத்தை உருவாக்கும் வல்லமையைப் பெற்றிருக்கின்றன. ஆகையால், தாய்ப்பால் அருந்துகிற பிள்ளைக்கு இடையிடையே புட்டிப் பாலை, அல்லது பசுவின் பாலைப் புட்டிகளில் அடைத்துக் கொடுப்பது நல்லது. புட்டிப்பால் புகட்டும் பழக்கம் நிலைத்தவுடனே பாத்திரத்தில் பருகும் பழக்கத்தைத் தொடங்கலாம். இப்படி ஒரு பழக்கத்திலிருந்து மற்றொரு பழக்கத்திற்குத் தாவும்பொழுது, ஒரு தொடர்பு

1. தன்மயம்—*Personality* முன்னரே விளக்கியுள்ளோம்.

முறை அமையவேண்டும்; அத்துடன் தாயின் அன்பிற்கு ஒரு குறைவும் ஏற்படாது என்னும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்தவேண்டும்; இதற்குப் பொறுமையும் அரவணைப்பும் அன்பும் அதிகமாக வெளிப்படவேண்டும்.

பால் மறக்க இருக்கும் குழந்தை தலைச்சனாக இருந்தால், பால் மறந்த காலத்தில் இக்குழந்தையின் மனத்தில் பதிவாகிற அனுபவ முத்திரைகள் என்றும் அழிவதில்லை; இந்த நினைவுகள் அடுத்துப் பிறக்கிற குழந்தைகளின் வளர்ப்பில் தாய் நடந்துகொள்ளுகிற மாதிரிகளைத் தன்னை நடத்திய மாதிரிகளோடு ஒப்பிட்டுப்பார்க்க முதல் குழந்தையைத் தூண்டிவிடுகின்றன. தன்னிடத்தில் தாய் கடினமாக இருந்ததாகவும், தம்பி, தங்கையரிடத்தில் பாரபக்ஷமாக இருப்பதாகவும் முதற் குழந்தைக்குத் தோன்றும். குழந்தை வளர்ந்த பிறகு, அதன் அன்புக்குப் பலர் பாத்திரமாகப் போகிறார்கள். குழந்தையின் சகோதர சகோதரிகள், தந்தை, மாமன், மாமி, பாட்டன், பாட்டி, சிற்றப்பன், பெரியப்பன் என்றிப்படியே உறவினரின் எண்ணிக்கை வளர்ந்துவிடும். முடிவில், மனைவி—அல்லது கணவன்—தன் மக்கள் என்றிப்படியே உறவு எல்லைகள் விரிந்து கொண்டேபோகும். தன்னிகரில்லாத தாயே இவ்வளவு கொடுமையாக நடந்து கொண்டால், இனி இந்த உலகத்திலே யாரைத் தான் நம்பமுடியும் என்ற மனப்பான்மை பால் மறந்த அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு, குழந்தைமனத்தில் நிலைபெற்றுவிடுகிறது. இந்த ஆரம்ப அனுபவத்தோடு, பெற்றோர் எதிர்பாராத வண்ணமாக வெளியிடுகிற கோபங்களும், தண்டனைகளும், யாவும் தன்னிடத்தில் அவர்களுக்கு அன்பில்லை என்பதனை நிலை நாட்டிவிடுகின்றன.

சுகநிலையில் இருக்கிற உடலும், மகிழ்கிற மனமும், பெற்று வளருகிற குழந்தைகள் நன்றாய் உணவருந்தும் நிலையிலிருப்பார்கள். இவர்கள் உணவில் விருப்பமும், ஜீரண சக்தியும் பெற்றிருப்பதால், சிரமமில்லாமலே பால் மறந்து, புதிய உணவு முறைக்கு ஆயத்தமாகிறார்கள். ஆனால், எல்லாக் குழந்தைகளும் இந்நிலையில் இருப்பவர்

அல்லர். சில குழந்தைகள் சூழ்நிலைகளால் இளம்பருவத்து நோய்களுக்கு ஆளாகின்றனர். வேறு சில குழந்தைகளின் வளர்ச்சி இயல்பே மந்தகதி உடையது. மித மிஞ்சிச் செல்லங் கொடுத்து வளர்க்கிற குழந்தைகளும், நோய்களுக்கு ஆளாகிற குழந்தைகளும் வெகு எளிதில் பால் மறக்கமாட்டார்கள். குந்தைகளை வேனிற் காலத்தில் பால் மறக்கப் பண்ணுதல் சற்றுச் சிரமமாகவே இருக்கும். மிஞ்சிய வெப்பமும் மிஞ்சிய தட்பமும் குழந்தைகளின் சுக நிலையைக் குலைக்கும். சுகநிலை குலை கிற நாட்களில் பால் மறக்கப் பண்ணுதல் சிறிது கஷ்டமே. பல் முளைக்கிற காலத்தில் குழந்தைகளின் சுகநிலை குலைவதால் அந்த நாட்களும் பால் மறப்பதற்குப் பொருத்தமாக இரா.

எப்பொழுது பால் மறக்கப் பண்ணலாம் என்பதை வைத்தியரிடம் விசாரித்துத் திட்டம் பண்ணிக் கொள்ள வேண்டும். பால் மறக்கச் செய்வதுபற்றி பாட்டிமார்களும் உறவினர்களும் குறுக்கிடாமல், அந்தப் பொறுப்பைத் தாய்க்கே விட்டு விடவேண்டும். தாயே நேரில் இந்தக் காரியத்தைக் கவனித்து வந்தாலும், சில பிள்ளைகள் எளிதில் பால் மறக்க இசையமாட்டார்கள்; ஓயாமல் முரண்டு அடிப்பார்கள். குழந்தையின் குணமே தாறு மாறாக மாறுவதுபோலத் தோன்றும். அப்படியானால், குழந்தை பால் மறக்க ஆயத்தமாகவில்லை என்றே கருதவேண்டும். ஒருவேளை அதிகமாகச் செல்லம் கொடுத்ததின் காரணமாகவும், சில குழந்தைகள் பாலை மறக்க ஆயத்தமாய் இருக்கமாட்டார்கள் அங்ஙனமாயின் இந்தத் தவறுகளை உடனே திருத்தத் தாய் முயற்சி செய்யலாகாது. முதலில், படிப்படியாகப் பால் மறக்கப் பண்ணிய பிறகு, குழந்தை புதிய உணவு முறைக்கு முற்றிலும் பொருந்தி விட்டதென அறிந்த பின்னரே, செல்லம் கொடுத்தலாகிய தப்பிதத்தைத் திருத்த முயற்சி செய்ய வேண்டும்.

பால் மறக்கப் பண்ணுவதன் எல்லா இரகசியங்களும் தாய்க்கும் குழந்தைக்கும் ஆதிமுதல் ஏற்பட்டு வருகிற

உறவின் தன்மைகளை ஆதாரமாகக் கொண்டவை. நம்பிக்கை உடைய குழந்தையைப் பழைய வழிகளில் இருந்து புதிய வழிகளில் திருப்பி விடுவது எளிது. புது வழிகளில் இத்தகைய குழந்தைகளைப் பொறுமையோடும், கனிவோடும், படிப்படியாகவும், வெகு பக்குவமாகவும் திருப்பி விடவேண்டும். இங்ஙனம் புது ஆகாரமுறைக்குத் திரும்புகிற குழந்தை விரைவில் புது முறைக்கு இசைந்து உணவு அருந்தி நன்றாய் வளரமுடியும்.

பால்-புட்டி உடைந்து விட்டது எனவும் அது காணாமல் போய்விட்டது எனவும் உரைத்தல் பெருந்தவறாகும். குழந்தையின் பார்வையிலேயே பால் புட்டியை உடைத்துப் பால் மறக்கப் பண்ணுதல் மிகப்பெரிய கேடுவிளைக்கும். குழந்தையின் உள்ளத்தில் இவற்றால் எழுகிற அனுபவ முத்திரைகள் பிற்காலத்தில் அளவிடற்கரிய தீமைக ளுக்குக் காரணமாகலாம். பாலை ஊட்டுகிறவளோடு பால் புட்டியும் குழந்தையின் அனுபவத்தில் ஒன்றாய்க் கலந்து விடுகிறது. பால் ஊட்டுகிற தாய் வேறு, பால்புட்டி வேறு என்ற வேற்றுமை குழந்தைக்கு இல்லை. இந்த நித்திய உண்மைப் பொருள்களே தன் தேவைகளை எல்லாம் அளிக்க வல்லவை என்று குழந்தை கருதி வாழ் கிறது. உண்மை இதுவாக, உயிருக்கு உயிரான பொருள் ஒன்று தன் கண்ணெதிரே சிதறிப் போகிறதைப் பார்க்கும் குழந்தையின் உள்ளக்கிடக்கையை யாரால் விரித்துரைக்க முடியும்? இத்தகைய சோக நாடகம் ஒன்று குழந்தையின் ஆரம்ப நாட்களிலேயே நிகழ்வது முற்றிலும் பொருத்தமற்றது. பெற்றோர் உரைக்கும் பொய் பிற்காலத்தில் வெளிப்படுமாயின் குழந்தை பெற் றோரைச் சற்றேனும் மதிக்காது.

பத்மினிக்கு ஒரு குழந்தை; அதுவும் முப்பத்து எட் டாவது வயதிலே பிறந்த ஒரே பெண் குழந்தை; அழகிய குழந்தை. குழந்தை பிறப்பதற்கு முந்தியே கணவன் யுத்தத்தில் போர்ச் சேவகனாகத் தன் பெயரைப் பதிவு செய்து கொண்டு போருக்குச் சென்றான்; சென்ற நாளிலிருந்து அவனைப்பற்றிய செய்தி ஒன்றும் பத்மி

ணிக்குக் கிடைக்கவில்லை. அவனிடத்திலிருந்து பண உதவியும் கிடைக்கவில்லை. பத்மினி வறுமைச் சிகரத்தில் நின்றாள். அக்காலத்திலேதான் குமுதம் பிறந்தாள். பத்மினிக்குத் தனது என்று சொல்லச் சிறு வீடு ஒன்றிருந்தது அதைச் சுற்றிலும் சிறிது இடமும் இருந்தது. துணை புரிவார் எவரும் இன்றிக் கிராம வைத்தியசாலையில் குழந்தையைப்பெற்று எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தாள். வந்தநாளிலிருந்து இடுப்பிலேயே குழந்தையைச் சுமந்தவண்ணமாக வீட்டுக்காரியங்களைக் கவனித்து வந்தாள். பத்மினியிடம் கடவுள் கிருபையால் பால்-சுரப்பு ஏராளமாக இருந்தது. குழந்தை குமுதம் மூன்று வயது வரைக்கும் பால் மறக்கவில்லை; கைக் குழந்தையாகவே இருந்தாள். மூன்று வஷமாகத் தாய்ப்பால் குடித்தும், குமுதத்திற்கு நிற்கக்கூடத் திராணியில்லாமல் போயிற்று. பத்மினிக்குத் தன் வறுமையைத் தாங்கமுடியவில்லை. தனது வறுமை நிலைமைகளை எல்லாம் விளக்கித் தமயனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். பத்மினியும், குமுதமும் பட்டணத்திற்கு வந்து சேரத் தமயன் பணம் அனுப்பி வைத்தான். வந்தவுடனே, குமுதம் மூன்று வயதாகியும் நிற்கத் திராணியில்லாமலும், பேச்சுவராமலும் இருப்பதைத் தமயன் பார்த்து அதிசயித்தான். தன் குடும்ப வைத்தியரிடம் குமுதத்தைக் காட்டினான். குடும்ப வைத்தியரும் "குழந்தை பால் மறக்கவில்லை. அதனாலே தான் வளர்ச்சி குன்றிப்போயிருக்கிறது" என்றார். அவ்வளவுதான்; அன்றைக்கே பாலை நிறுத்தத் தமயன் ஏற்பாடு செய்துவிட்டான். எட்டிக் கசப்பான ஒரு மருந்தை அமுதகலசச் சூப்பியில் தடவிக் குழந்தைக்குப் பாலூட்டுமாறு அண்ணன் தன் தங்கைக்குக் கட்டளையிட்டான். குமுதம் ஏற்கெனவே சோறும், பலகாரமும் சாப்பிடப் பழகியிருந்தாள். அதோடு பற்களும் முளைத்திருந்தன. பால் என்றால் குமுதம் முகத்தைத் திருப்பிக்கொள்ளுமாறு மாமன் இரண்டு நாட்களுக்குள் செய்து விட்டான். பத்மினிக்குப் பால் கட்டியதனால் நெஞ்சில் நோவு கண்டது. கடுஞ்சுரம் அடித்தது. ஆறு

நாட்கள் வரைக்கும் வருந்தினாள். குமுதத்திற்கும் மூன்றா வது நாள் தாங்கமாட்டாத ஜுரம் அடித்தது.

இத்தகைய அறியாமையால் விளைவதற்கிருந்த கேடுகளினின்றும் தாயையும் குழந்தையையும் கடவுளே காப்பாற்றினார். குமுதம் சில நாட்கள் வரைக்கும் முரண்டடித்து ஓயாமல் அழத்தொடங்கினாள். மாமனைப் பகைக்கத் தொடங்கினாள். அவனைக் கொன்றுவிடவேண்டுமென்ற எண்ணம் உடையவள்போலப் பார்ப்பாள். குமுதத்திற்குள்ளே உருவாகிய தன்மயக் குழந்தை இந்தச் சம்பவத்தை வாழ்நாள் எல்லாம் மறக்கப் போவதில்லை. தாயிடத்தில் அவள் கொண்டிருந்த நம்பிக்கைக் கோட்டை தகர்ந்து விட்டது. குமுதம் வெகு விரைவில் நடக்கத் தொடங்கினாள். மூன்று மாதத்திற்குள் குமுதத்தின் வளர்ச்சி வெகு விரைவாக இருந்தது. அவள் தானே தன் காரியங்களை எல்லாம் செய்யக் கற்றுக் கொண்டாள். அவளுடைய செய்கைகளிலெல்லாம், அவளுக்கு யாரிடத்திலும் நம்பிக்கையில்லாதது போன்ற மன இயல்புகள் வெளிப்பட்டன. தன் காரியம் ஆகவேண்டுமானால் கொஞ்சிச்சிரிப்பாள். காரியம் முடிந்த பிறகு கிட்டக்கூட வரமாட்டாள். அம்மம்மா! விவேகக் குறைவால் குழந்தையுலகத்திற்கு ஏற்படும் கேடுகளையும் நஷ்டங்களையும் பார்க்கும்பொழுது உள்ளம் நடுங்குகிறது.

II. தொட்டில் பழக்கங்கள்

ஓயாத தொல்லை

குழந்தையின் மலஜலக் கழிவுகள் தாய்க்குப் பெருந் தொல்லையாகவே அமைகின்றன. அவள் கந்தல் தேடுவதிலேயே களைத்துப் போகிறாள். பாலூட்டிய சில நிமிஷங்களுக் கெல்லாம், குழந்தை சிறு நீர் பெருக்குகிறது; கிடத்திய துணியை நனைத்து விட்டு, "குய்யோ! முறையோ! என் குடியே முழுகிவிட்டது!" என்பது போல் கத்தி அழுகிறது. அழுகையின் காரணம் என்னவென்று பார்க்கத் தாய் ஓடி வந்தால், குழந்தை கையையும் காலையும் தூக்கி, அழுகையைச் சற்றே நிறுத்தி, "என்னை

விட்டு நீ பிரிந்தால், உன்னை அழைக்கும் மந்திரம் நான் அறிவேன்'' என்று கூறுவது போல், குறுநகையாடு கிறது. தாய் கீழே விரித்த கந்தல் துணியைத் தொட்டுப் பார்க்கிறாள்; துணி சிறுநீரால் நனைந்திருப்பதை அறி கிறாள்; உடனே அந்தத் துணியை மாற்றி, நனைந்த பாயில், மற்றொரு மூலையில், உலர்ந்த கந்தல் ஒன்றை இட்டுக் குழந்தையைக் கிடத்துகிறாள்; பின்பு, தன் அலுவல்களை அமைதியாகக் கவனிக்கச் செல்கிறாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் குழந்தையும், "குய்யோ! முறையோ!'' என்று கத்தி அழுகிறது. தாய் ஓடி வந்து பார்க்கிறாள், இப்பொழுது, சிறு நீர்ப் பெருக்கு மட்டு மன்று; "மும்மலத்தால் இம்மலத்தில் அவதிப் படுகி றேன்'' என்று வேதாந்தம் பேசுவது போலக் குழந்தை குறுநகை யாடுகிறது. தாய் குழந்தையைச் சுத்தம் செய்து புதுப்படுக்கை ஒன்றைத் தயாரித்துப் படுக்க வைக்கிறாள். இதற்கெல்லாம் சில நிமிஷங்கள் செல்கின் றன. குழந்தையைச் சுத்தம்செய்து புதுப் படுக்கை விரித் துக் கிடத்திவிட்டு வருவதற்குள் அடுப்பின் மேல் வைத்த இருப்புச் சட்டியில் பொரிந்து கொண்டிருந்த கத்தரிக் காய்ப் பொரியல் கருகிவரும் வாடை வீசுகிறது. "இது எல்லாம் சரிப்படாது; அவர் வரட்டும்; சொல்லுகிறேன்; குழந்தையைக் கவனித்துக் கொள்ள ஒரு வேலைக் காரியை எப்படியாவது அமர்த்த வேண்டுமென்றும், இல்லாவிட்டால் என்னால் ஒரு வேலையும் ஆகாதென்றும் சொல்லிவிடுகிறேன்'' என்று தாய் உறுதி செய்து கொள் கிறாள்; காரியாலயத்திற்குச் செல்ல விரைந்து கொண் டிருக்கும் கணவருக்காகப் புதுக் கறி ஒன்றை ஆக்கி வைக்கச் சமையல் அறைக்குச் செல்கிறாள்; சமையல் வேலையோடு, கணவரது நாட் கடன்களுக்குத் தேவை யான யாவற்றையும் தயாரித்துக் கொடுக்கிற வேலை, குழந் தையின் மலஜலக் கழிவுகளைக் கவனிக்கும் வேலை, முதலிய பலவற்றையும் ஏதோ ஒருவாறாக முடித்துவிட்டதாகக் கருதும் நேரத்தில் கணவரும் சாப்பிட வந்து மணையை எடுத்துப் போட்டுக்கொண்டு, "என்ன, இன்னும் சமை

யல் ஆகவில்லையா? வெகு நேரமாயிற்றே; நான் இன்றைக்குக் காரியாலயத்திற்குப் பிந்திச் செல்லவேண்டியது தான். மேலதிகாரி காரணம் கேட்டால் என்ன சொல்லுவேன்? அதிகாரிகளும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையாக இருப்பார்கள்?'' என்று கடுகடுத்து, வெடுவெடுத்துப் பேசுகிறார்.

பொறுமையில் தேர்ந்த தாயானால், அந்நேரத்தில் ஒன்றும் உரையாள்; சமைத்ததைப் படைத்துக் கணவரைக் காரியாலயத்திற்கு அனுப்பிவிடுவாள். கணவர் காரியாலயத்திற்குச் செல்லும் பொருட்டு நல்லுடையணிந்து வருகிறார்; வீட்டைவிட்டு வெளியேறுமுன் அருமைக் குழந்தையை ஒருமுறை பார்க்கலாம் என்று எண்ணுகிறார்; குழந்தையை எடுத்துக் கொஞ்சுகிறார்; குழந்தையும் தந்தையைச் சிறு நீரால் அபிஷேகம் செய்து கடாக்ஷிக்கிறது. கணவருக்குக் கோபம் வருகிறது; "என்ன பிள்ளை வளர்ப்பு வளர்க்கிறாளோ, தெரியவில்லை. வேளையும், காலமும் அறிந்து மலஜலம் கழிக்கக் குழந்தையைப் பழக்க வேண்டாமா? மேற்றிசை நாடுகளில் பெண்கள் பெற்று வளர்க்கிற பிள்ளைகள் இப்படித்தானா இடம், பொருள், ஏவல் தெரியாமல் கழிந்துகொண்டிருக்கிறார்கள்? அவர்களுடைய பிள்ளை வளர்ப்புத் திறமையை மெச்சத்தான் வேண்டும்'' என்றெல்லாம் சிந்தனை பண்ணிக்கொண்டு, "கற்பகம்! கற்பகம்!" என்று கத்துகிறார். கற்பகம் ஓடி வருகிறாள்.

கணவர் தமது குழந்தை செய்த அலங்கோலக் காட்சியை மனைவிக்குக் காட்டி, "இப்படித்தானா பிள்ளையை வளர்ப்பது? குழந்தைக்கு ஒழுங்கு கற்றுக் கொடுக்கக் கூடாதா? நீ படித்துப் புண்ணியம் இல்லை; கவைக்காகாத படிப்பு!' என்றெல்லாம் சொல்லி எரிந்து விழுகிறார்; குழந்தையும் தன் தந்தையின் கோபநிலைகண்டு கத்துகிறது; தாயும் துயரக் கண்ணீர் வடிக்கிறாள்.

குழந்தையின் மலஜலக் கழிவுகளால் வேளை தோறும், வீடுதோறும் ஒரு நாடகம் நிகழ்வதைக்காணலாம். சமையல்

அறையிலேயே குழந்தையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, அலுவலைக் கவனிக்கலாம் என்ருலோ, குழந்தை சமையல் அறையை அசுத்தம் செய்து விடுகிறது. ராமு பள்ளிக்கூடத்திற்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிருன். அவனுக்கு இந்தக் காட்சி ஒன்றும் பிடிக்காது; அருவருப்பால் சாப்பிடாமலே போய் விடுவான். "அம்மம்மா ! தொல்லை! குழந்தையைப் பெறுவதும் தொல்லை! அதை வளர்ப்பதும் தொல்லை!" என்று அன்னையர் கூச்சலிடுமாறு குழந்தைகள் செய்து விடுகின்றனர்.

இவை யாவற்றையும் சிந்திக்கும்பொழுது தாய்-உலகம் இந்த இன்றியமையாத தொல்லைகளை மட்டுப் படுத்திக் கொள்வதற்கு, ஆரம்ப நாட்களிலிருந்தே குழந்தையின் மலஜலக் கழிவுப் பழக்கங்களைத் திருத்தி அமைக்க முயற்சி செய்வது அவசியம் என்று தோன்றவில்லையா? சிறிது காலம் பொறுமையாகக் குழந்தையைப் பழக்கினல், வெகு விரைவில் இத்தொல்லைகளிலிருந்து ஒருவாறு விடுதலை அடையலாம். இந்தத் தொல்லையிலிருந்து விடுதலை அடையும் உபாயம் எந்தக் கடையிலாவது விற்பனையாகுமானல், அதற்கு எவ்வளவு விலையிருந்தாலும் அன்னையர் அதனை வாங்கத் தயங்க மாட்டார். ஆனல், இந்த உபாயம் கடைகளில் விற்கிற பண்டமன்று. விவேகத்தாலும், பொறுமையாலுமே இதனைப் பெறவேண்டும். ஆகையால், இதற்குத் தாய் என்ன செய்யவேண்டும் என்பதனைச் சிந்திப்போம்.

தொல்லையை ஒழிக்கக் குறுக்கு வழி

இந்நாட்களில் குழந்தையின் மலஜலக் கழிவுப் பயிற்சியை அளவுக்கு மிஞ்சிச் செய்துவிடுகிருர்கள். குழந்தை வளர்ப்பில் தேர்ந்த செவிலித் தாயும், தமது திறமைகளை விளம்பரம் செய்ய விரும்புகிற அன்னையரும் முதலாவது மாதம் முடிவுறும்பொழுதிருந்தே குறித்த நேரத்தில் மலஜலம் கழிக்குமாறு குழந்தைகளைப் பழக்கியிருப்பதாகப் பெருமை பேசுகிருர்கள். குழந்தைகளை அவ்வளவு விரைவில் ஒரு பழக்கத்திற்கு ஆளாக்குவதனல்

விளைகிற தீமைகளை இவர்கள் சிந்தியாதவர்கள். ஆகையால் இவர்களுடைய முயற்சி வீண் பெருமையாக முடியும்.

முற்றாத இளம்பிறை

மலஜலப் பயிற்சியைப் பற்றி நாம் முதன்முதலில் கவனிக்கவேண்டியது யாதெனில், குழந்தையின் உடற் கூறேயாம். குழந்தையின் எலும்புகள் எளிதில் வளையக் கூடிய [1] **கார்ட்டிலேஜ்** என்னும் நிலையில் இருக்கின்றன. பேசிகள் யாவும் உறுதிப்படாமல் கூழ்ப்பருவத்தில் இருக் கின்றன. சரீரத்தின் செயல்கள் யாவும் பேசிகளின் இயக்கங்களால் நிகழ்வன. நரம்புகளே பேசிகளை இயக்குவன; கூழ்ப்பருவத்தில் இருக்கிற பேசிகள் நரம்பு வலைக்கட்டுமானத்தோடு பரிபூரணத் தொடர்புற்று ஒற்று மையாக இயங்குவதற்கு இன்னும் ஆயத்தமாகவில்லை. இக்காரணங்களாலேயே குழந்தையின் கழுத்து ஒரு நிலை கொள்ளாமல் குழைந்து சாய்கிறது. கால்களுக்கும் நிற்கத் திராணி இல்லை. இருப்பதற்கு இடையிலும் வலிமை இல்லை. பேசிகளே செயல்களை அடக்கி ஆள்வன என்றே மல்லவா? மலக்கழிவும் சிறு நீர்க்கழிவும் மலஜல வாயில் களில் அமைந்த பேசிகளின் இயக்கங்களினாலும், பெருங் குடல் சிறு நீர்ப்பைகளின் பேசி இயக்கங்களினாலும் நிகழ் வன. இந்த இயக்கங்கள் சீரியநிலைக்கு வருமுன், பேசிகள் வலிமை அடைதல் வேண்டும். குழந்தை சில மாதங்கள் வளர்ந்த பின்னரே இவை யாவும் சீரிய நிலை அடை கின்றன.

எதிலே மனிதனின் சுகநிலை?

இக்கேள்வி தெனாலிராமலிங்கத்தின் கதைகளில் ஒன் றினை நினைப்பூட்டுகிறது. இராயர் தமது சபையிலே வித் வான்களுக்கு ஆராய்ச்சி விஷயமாக ஒரு கேள்வியைக் கிளப்பிவிட்டார். "எதிலே மனிதனின் சுகநிலை இருக்கி றது?" என்ற பிரச்னையே ஆராய்ச்சி விஷயம். 'செல்வத் திலே!' என்றார் ஒருவர்; 'சிற்றின்ப நுகர்ச்சியிலே!' என்றார் மற்றொருவர்; 'இசை நடனக் கலையிற் களிப்பதிலே!'

1. *Cartilage*

என்றார் இன்னொருவர். இவ்வாறே பல்கலை விநோதர்கள் தத்தமக்குத் தோன்றியவாறே மனிதனுடைய சுக நிலையைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தனர். விபரீத புத்தியுடைய தெனாலிராமலிங்கத்துக்கோ, மற்றெவருக்கும் புலப்படாத உண்மை தெற்றெனப் புலப்பட்டது. தைரிய மாக எழுந்தான்; "மன்னர்பெரும! இவர்கள் புகன்றவை உளறலும் குளறலுமேயாம். மனிதனுடைய சுகநிலை மலஜலக் கழிச்சலிலேதான்!" என்று உரத்த சத்தமாகக் கத்தினான். இராயருக்குக் கோபம் பிரமாதமாகப் பொங்கி விட்டது. அன்றைக்கே தெனாலிராமலிங்கத்தைத் தேசாந் தரம் அனுப்பக் கட்டளையிட்டார். அப்பொழுது, தெனாலி ராமலிங்கம், "மன்னர் பெரும! இனி நான் தேவரீருடைய மலர் முகத்தை என்று காண்பேனோ? பிரிந்துபோகுமுன், தேவரீர் ஏழையின் அற்பச் சிறு விருப்பத்தை நிறை வேற்றித்தர திருவுளம் இரங்கவேண்டும்," என்று விண்ணப்பம் செய்து கொண்டான். அதற்கு அரசன், "என்ன வேண்டும்? கேள்! உன் விருப்பப்படியே செய் வோம்" என்றான். "தேவரீர் இன்று அடியேன் வீட்டில் அமுதருந்த வேண்டும்." என்று தெனாலிராமலிங்கம் மன்றாடினன். இராயர் இசைந்தார்.

அன்று இரவு தெனாலி ராமலிங்கத்தின் வீட்டில் தளிகை முழுவதும் விளக்கெண்ணெயிலே தயாராயிற்று. தெனாலிராமலிங்கத்தின் வீட்டின் புறக்கடையில் சுகாதார முறைப்படி மலதாரை மறைப்புக்கள் சிலவற்றை அமைத் திருந்தான். அவை ஒவ்வொன்றிலும் யாரோ மல பாதைக்கு இருப்பதுபோல் தோன்றுமாறு சூழ்ச்சியும் செய்திருந்தான். விருந்தினராக வந்த இராயரும், வித்து வான்களும் உண்டபிறகு வயிறு உளைவதைக்கண்டு, பர பரப்போடு புறக்கடைக்குச் செல்வதும், திரும்பி வருவதும், வயிற்றைப் பிசைவதுமாக இருந்தனர். இவர்கள் பட்ட துன்பம் போதிய அளவு வளர்ந்ததென அறிந்தபோது, தெனாலிராமலிங்கம் மலதாரையில் அமைத்திருந்த இடை யூறுகளை நீக்கி, வசதிகள் அமைத்துக் கொடுத்தான். யாவரும் மலபாதை தீர்த்துக்கொண்டு வீட்டுக் கூடத்தில்

வந்து அமர்ந்தபொழுது, இராயர் "இது அன்றோ சுகநிலை!" என்றுசொல்லி வயிற்றைத்தடவிக்கொண்டார். மற்றவர்கள் யாவரும் "அதற்கென்ன சந்தேகம்?" என்று ஒத்து ஊதினார்கள். அப்பொழுது, தெனாலி ராம லிங்கம், "அண்ணலே, அடியேன் மட்டுமன்று தேசாந் தரம் செல்லவேண்டியவன். ஈங்கிருப்பவர் யாவருமே தேசாந்தரம் செல்ல வேண்டியவர்தாம்" என்றான்.

ஒரு வைத்தியர் நோயாளியின் சுகநிலையை விசா ரிக்கும்பொழுது எதைப்பற்றி முதலில் விசாரிக்கிறார்? "மலபாதை சரியாக இருக்கிறதா?" என்பதன்றோ மருத்து வரது முதற் கேள்வி. பெரியவர்களாக வளர்ந்த நாமே சில தருணங்களில் மலபாதையை அடக்கிக்கொள்ள முடியாமல் திக்கு முக்காடுகிறோமே. முற்றாத இளம்பிள்ளை மாத்திரம் வாழ்க்கையின் தொடக்கத்திலேயே இக்கட்டுப் பாடுகளுக்கு அடங்கவேண்டுமா? குழந்தை தன் சுகநிலையைக் கருதி உண்ணுகிற உணவின் அளவுத் திட்டத்தைக் கட்டாயப்படுத்தலாகாது என்று உணர்கிற நாம், தொல்லையாக இருக்கிற மலஜலக் கழிவு பற்றித் தொடக்கத்திலிருந்தே கட்டுப்பாடுகள் ஏற்படுத்த வேண்டுமா? உணவு சுகநிலைக்கு அவசியமானால் மலஜலக் கழிவுகள் அதே சுகநிலைக்கு இன்றியமையாதவை அல் லவா? உண்பதில் இன்பம் இருப்பதுபோலவே, உணவின் எச்சத்தைக் கழிப்பதிலும் குழந்தைக்கு ஓர் இன்ப நுகர்ச்சி உண்டு. இந்த இன்பத்தைப் பெறாமல் குழந் தையைக் கட்டுப்பாடு செய்யவேண்டுமா?

இவை யாவற்றிலும் முதன்மையான சிந்தனை ஒன்று உளது. குழந்தையை வெகுநேரம் ஏந்திப்பிடித்துக் கொண்டிருப்பதால், வலுவற்ற அதன் கழுத்தும் முதுகும் களைத்துவிடுகின்றன. குழந்தை வாழ்க்கையைத் தொடங்குகிற மாதங்களில் உறங்குகிற நேரம் விழிப்பு நேரத்திலும் பன்மடங்கு அதிகமாக இருக்கிறது. குழந் தைக்குத் தூக்கமே கரும்பிலும் இனியது. இரவிலும் பகலிலும் மல ஜலக்கழிவுக்காக ஒரு தாய் அதன் கரும் பன்ன உறக்கத்தைக் கலைத்துக்கொண்டே இருந்தால்

விளைவது என்ன? "இது பெருந்தொல்லையாக இருக்கிறதே? இப்படியும் என்னைக் கட்டாயப்படுத்துகின்றனரே! இவர்கள் பேய்களா? மனிதர்களா? இப்படி என்னைத் தொந்தரவு செய்தால் நான் இனிமேல் இவர்களுக்குக் கீழ்ப்படிய மாட்டேன். இவர்கள் நினைக்கிற பொழுதெல்லாம் நான் மல ஜலம் கழிக்க வேண்டுமா? என் அன்பார்ந்த தாய்க்கு நான் மல ஜலம் கழிப்பது அருவருப்பாக இருந்தால், அதனை நானே அடக்கிக் கொள்கிறேன். அடிக்கடி நான் மல ஜலம் கழிப்பது இஷ்டம் இல்லையென்றால், நான் இனி மேல் அப்படிச் செய்வதில்லை" என்று குழந்தை தன் உள்ளத்தில் உறுதி செய்துகொண்டதுபோல, மலத்தை அடக்கப் பழகுகிறது. இந்த மலபந்தனத்தைத் தான் பிள்ளை வளர்ப்பில் தேர்ந்த அன்னையரும் செவிலித் தாய்மாரும் தமது திறமைகளாகப் பிறருக்கு எடுத்து உரைக்கிறார்கள். வாழ்க்கை தொடங்குகிற மாதங்களிலேயே மலஜல பந்தன முறையைக் குழந்தைக்குப் பயிற்றுவித்தால், தாய், குழந்தையாகிய இரு திறத்தாரின் அன்புறவில் கோளாறுகள் தோன்றுகின்றன.

சாந்தா கண்ட இடங்களில் மலஜலம் கழித்துக் கொண்டிருந்தாள். மூன்று வயதாகியும் தாய் ஒரு கட்டுப்பாடும் செய்யவில்லையே என்று கருதிய மாமன் குறுக்கிட்டான். சாமபேத தான தண்டமாகிய சதுர் உபாயங்களைக் கையாண்டான். குழந்தை சாந்தா புறக்கடையில் மல ஜலம் கழிக்கப் பழகி முடிவிலே வெற்றி பெற்றாள். ஆனால், வெகு விரைவில் புறக்கடையில் மலஜலம் கழிக்க மனமில்லாத சாந்தா மலபந்தன முறையைக் கையாண்டு, நாலு ஐந்து நாட்கள் வரைக்கும் புறக்கடைக்குச் செல்லாமலே சமாளிக்கும் திறமையும் பெற்றாள். சாந்தாவின் மல பந்தனப் பயிற்சி எங்கே முடியுமோ என்ற கவலை மாமாவுக்கு ஏற்பட்டுவிட்டது. கட்டாயப்படுத்துவதனால் ஏற்படுகிற பழக்க வழக்கங்களுக்கெல்லாம் பிற்காலத்தில் தீமையான விளைவுகளும் உள்ளன. முதலில் மலஜலக் கழிவு பற்றிப் புகுத்துகிற பழக்க வழக்கங்களால்

ஒன்பதாவது வயதிலிருந்து பதின்மூன்ருவது வயது வரைக்கும் ஆண், பெண் இரு பாலருக்குள்ளும் இரவில் படுக்கையிலேயே சிறுநீர் கழிவாகிற நோய் தோன்றலாம். அவ்வாருயின் எந்த வயதிலே குழந்தைகளுக்கு இந்த மல ஜலக் கழிவு பற்றிய பயிற்சி ஆரம்பமாக வேண்டும்? நாம் அதற்குமுன் செய்யக் கூடியது ஏதேனும் உண்டா?—என்ற பிரச்னைகள் எழுகின்றன.

கந்தைத் துணிகளைத் தேடுவதிலும், அவற்றைக் கசக்கி உலர்த்துவதிலும் ஏற்படுகிற தொல்லைகளை ஓரளவு தவிர்க்க வழிவகைகள் உள்ளன. குழந்தையைப் படுக்க வைக்கும் பாயில் இடுப்புக்குக் கீழே ரப்பர் துணியை விரிக்கலாம். தற்போது ரப்பர் துணியின் விலை குறைந்து வருகிறது. விரைவில் எளியவரும் வாங்கி உபயோகிக்கக் கூடிய விலைக்கு இந்தத் துணிகள் அகப்படும். வீட்டுத் துணிகளைச் சலவை செய்பவரிடம் குழந்தையின் இடுப்புத் துணிகளை நாள்தோறும் சுத்தம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யலாம். பல வீட்டார் சேர்ந்து, கூட்டுறவு முறையில், இந்த வேலைக்கென்றே துணி சலவை செய்பவர் சிலரை நியமிக்கக் கூடுமானல், அவர்கள் குறைந்த தொகைக்குச் சலவை செய்து கொடுக்க ஒப்புக்கொள்வார்கள். பொது நலத்தை உத்தேசித்து வண்ணுரப் பெண்கள் இந்தக் கைங்கரியத்தை ஒப்புக்கொள்ளும் சிறந்த மனப்பான்மை உடையவர்கள். இந்தத் துணிகளை மொத்தமாகச் சலவை செய்யக்கூடிய மின்சார சக்தி இயந்திரங்களும் உள்ளன. ஊருக்கு ஒரு மின்சாரச் சலவை-ஆலை இருந்தால் போதும். இந்த ஆலையை நிறுவுவதற்கு அதிகப் பணச்செலவு ஒன்றும் ஆகாது. துணிகளுக்குப் பதிலாக 'ஈரந்தாங்கி' என்னும் காகிதங்களை உபயோகிக்கலாம். குழந்தையைப் படுக்க வைக்கும் துணிக்குமேல் இந்தக் காகிதங்களை விரித்து வைத்தால், அவை சிறுநீர்க் கழிவை உறிஞ்சிப் படுக்கையை உலர்ந்தபடியே காக்கும். மலக்கழிவே நிகழ்ந்தாலும், காகிதத்தை எடுத்து மலதாரையில் எறிந்துவிடலாம். குழந்தையின் ஆசன வாயையும், சிறுநீர் உறுப்பையும் சுத்தமாகத்

துடைப்பதற்குக் கந்தை துணிகளை உபயோகிப்பதற்குப் பதிலாகப் பஞ்சை நீரில் நனைத்து உபயோகிக்கலாம். சுகாதாரத்தை உத்தேசித்து 'இட்டியால்' 'டெட்டால்' என்னும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிந்து கொண்டு, ஒரு ஜாடியில் அன்றாடகத் தேவையின் அள விலே நீரோடு கரைத்து வைத்துக் கொள்ளலாம். இக் கலப்பு நீரில் பஞ்சை நனைத்துத் துடைத்தால், மலஜல உறுப்புக்கள் சுத்தமாக இருக்கும். இத்தகைய முறை களை முதல் ஒன்பது மாதங்கள் வரைக்கும் கையாளவேண் டும். இதற்குமுன் குழந்தைக்கு மலஜலப் பாதைப் பயிற்சிகளை ஆரம்பிக்கலாகாது.

இந்தப் பழக்கத்தைத் தொடங்குவதற்கு எல்லாக் குழந்தைகளுக்கும் ஒன்பது மாதம் என்ற வரையறையைக் கையாளலாகாது. சில குழந்தைகளுக்கு இந்த வயதிலே மலஜல பாதைப் பயிற்சியைத் தொடங்கலாம். மற்றும் பல குழந்தைகளுக்கு ஒன்றரை வயதான பிறகுகூட இந்தப் பயிற்சியைத் தொடங்குவது கஷ்டமாக இருக்க லாம். மலஜலபாதைப் பயிற்சிக்காகத் தயாரிக்கப்படும் கழிநீர்ச் சட்டிகள் விற்பனையாகின்றன. இந்தச் சட்டி கள் பீங்கானல் செய்திருக்கும். சட்டியைச் சிறு பிரம்பு நாற்காலியில் பதித்து இருக்கும். குழந்தையை இந்த நாற் காலியில் வசதியாக உட்கார வைக்க முடியும். நமது நாட் டில் இவ்வகையான கழிநீர்ச் சட்டிகள் வழக்கத்திற்கு வர வில்லை; எனினும், இவை மேலை நாடுகளில் வழக்கிலே வந்து விட்டன. நமது தேசத்தில் அன்னையர் தமது குழந்தைகளைப் பாதத்தில் குந்தவைத்து இந்தப் பழக்கத் தைத் தொடங்குவார்கள். குழந்தையைக் காலில் குந்த வைக்கு முன், பாதத்தின் கீழ் ஒரு பழ முறத்தில் சாம்பல் இட்டு வைத்துக்கொள்வது வழக்கம். கழிநீர்ச்சட்டி வாங்கி உபயோகிப்பதற்குப் போதிய வருமானம் உடைய வர்கள் அதை வாங்கி உபயோகிப்பதே நலம்.

வளர்ந்த குழந்தைகள் தமக்கு ஏற்படும் மலக்கழிவு விருப்பத்தைப் பலவாறாக வெளியிடுவார்கள். சில குழந்தைகள் முக்குவார்கள்; வேறு சில குழந்தைகள்

உடலை முறுக்கி நெளிப்பார்கள். பேச்சுவந்த குழந்தைகளுக்கு 'மூச்சி' என்ற பதத்தை, சிறுநீர்ப் பெருக்கை உணர்த்தவும், 'கக்காய்' என்ற மொழியை மலபாதை உணர்ச்சியை வெளியிடவும் கற்றுக்கொடுப்பது வழக்கம். இத்தகைய குழூக்குறிச் சொற்கள் ஜில்லாத்தோறும் ஜாதி வகுப்புத்தோறும் வேற்றுமைப்படும். ஒவ்வொரு குழுவினரும் தத்தமக்கு அமைந்த குழூக்குறியை உபயோகிக்கிறார்கள். குழூக்குறிகளை உபயோகிக்கத் தெரிந்த குழந்தைகளுக்கு மலஜலபாதைப் பயிற்சியைத் தொடங்குவது எளிது. மலஜலம் கழிக்கவேண்டும் என்ற உணர்ச்சியை ஏதேனும் ஒரு வகையில் வெளியிடக்கூடிய அளவு வளர்ச்சி பெற்ற குழந்தைகளுக்கு இந்தப் பழக்கத்தை ஆரம்பிப்பதே எளிது. முதலாவது குறிப்பிட்ட ஒரு குழூக்குறியாலோ, மூக்குதல், நெளிதல் போன்ற செயல்களாலோ, அழுகையாலோ இவ்விருப்பத்தை வெளிப்படுத்துமாறு குழந்தையைப் பழக்கவேண்டும். இந்தப் பழக்கம் ஏற்பட்டபிறகு, இடுகிற மலத்தைக் குழந்தை பார்க்கும்படி மலச்சட்டியிலாவது சாம்பல் இட்ட பழமுறத்திலாவது இடவேண்டும். இப்படிச் செய்வதால், குழந்தை தன் மலத்திற்கு உரியஇடம் எது என்றுதெரிந்து கொள்ளும். நாற்காலியில் பொருத்திய மலச்சட்டி எனில், குழந்தையை அதில் உட்காரப் பழக்கவேண்டும். பாதங்களில் உட்காரச் செய்வதாயின், அதற்கும் குழந்தையைப் பழக்கவேண்டும். உட்கார்ந்தவுடனேயே குழந்தை மலஜலம் கழிக்கும் என்று எதிர்பார்க்கலாகாது. குழந்தை வளர்ப்பில் சிறந்த குணம் பொறுமையே என்பதனை ஒரு பொழுதும் மறக்கலாகாது.

சாப்பாட்டிற்கு முந்தியும் பிந்தியும் குழந்தையை மலஜல பாதைக்குப் பொருந்திய நிலையில் இருத்தலாம். தொடங்கும்பொழுதே காரியம் கைகூடிவிடும் என்று எதிர்பார்க்கலாகாது. சட்டியிலாவது, முறத்திலாவது, முதல்முறை கழிக்கிற மலத்தைக் குழந்தைக்குக் காட்டி, "பாப்பா கெட்டிக்காரன்; புதுப் பாடம் படித்துவிட்டான் என் குழந்தை" என்று அதன் செயல்

திறத்தைப் பாராட்டிப் பேசவேண்டும். அடுத்த முறை மலஜலக் கழிவுக்கு அமைந்த நிலையில் குழந்தையை இருத்தும்பொழுது, மலமும் சிறுநீரும் கழிக்காமல், பின்பு எப்பொழுதாவது கழித்தால், மனந்தளர்ந்து முயற்சியை விட்டுவிடலாகாது. குழந்தையை ஒரு பழக்கத்திற்குக் கொண்டுவருவதில் காலதாமதத்தையும் தவறுதல்களையும் எதிர்பார்க்கவேண்டும். குழந்தையின் தவறுதல்களால் நமது முயற்சி தோற்றதாகவோ, நாம் தளர்வுற்றதாகவோ சிறிதளவும் வெளியிடலாகாது. பழக்கம் ஏற்பட்டு ஒரு நிலைக்கு வருமளவும்முயற்சியை விடுவதும் தகாது.

உணவுக்கு முந்தியும் பிந்தியும் மலஜலக் கழிவுக்கு அமைந்த நிலையிலே குழந்தையைச் சிறிது நேரந்தான் வைத்துக்கொண்டிருக்கலாம். நெடுநேரம் வைத்துக் கொண்டிருந்தால், குழந்தைக்கு ஒரே நிலை களைப்பாக இருக்கும். நாம் ஒரு பழக்கத்தைக் கட்டாயப்படுத்திச் சுமத்துவதாகக் குழந்தைக்குத் தோன்றவே கூடாது. மலஜலக் கழிச்சலுக்கு உட்காரவைக்கும் இடம் நாள்தோறும் மாறிக்கொண்டே இருக்கலாகாது. நாள் தோறும் குறித்த ஓர் இடத்தில் மலஜலம் கழிக்கக் குழந்தையைப் பழக்கவேண்டும். வீட்டைச் சுற்றித் தோட்டம் இருந்தால், அங்கே குறிப்பிட்ட ஓர் இடத்தைத் தெரிந்து கொள்ளலாம். தோட்டம் இல்லை என்றால், சுலபமாகக் கழுவிவிடக்கூடிய நீராடும் அறையிலாயினும், வீட்டு முற்றத்திலாயினும் இந்தப் பயிற்சியைத் தொடங்கலாம். ஓர் இடத்தை இந்தப் பயிற்சிக்காகக் குறித்துக் கொடுப்பதனால், விளையும் நன்மைகள் பல.

ஒரு பொழுதும் தெருக்களிலும், தெருவாசல்களிலும் மலஜலம் கழிக்கும் பழக்கம் குழந்தைகளிடத்தில் ஏற்பட இடந்தரலாகாது. சுகாதாரம் என்பது யாவருக்கும் பொதுவுரிமை; அதைக் காப்பது உலகத்தின் ஜன சமூகத்தில் அங்கமாகப் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அமைந்த கடமை; பொதுவுரிமைக்குப் பங்காளிகளாகவும், கடமைகளைச் செய்து மகிழும் சான்றோராகவும் தமது மக்களை வளர்க்க விரும்புகிற பெற்றோர், தீய

பழக்கங்களினின்று தமது மக்களைக் காக்கவேண்டும். 'பார்ப்பதற்கு இங்கே எவரும் இல்லை; பிறர் பார்க்கிற பொழுதுதான் அசுத்தம் செய்யலாகாது,' என்ற மனப் பான்மைக்கு இடந்தருகிற செயல் போக்கு, சிந்தனைப் போக்குகளுக்குக் காரணமானவைகள் வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்தே குழந்தைகளிடத்தில் தோன்ரு வண்ணம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

பெற்ரேர் தம் இளம்பிராயத்தில் மலஜலக் கழிவு பற் றிச் சீரான பழக்கங்கள் இல்லாமலே வளர்ந்தமையால் தமது குழந்தைகளிடத்திலும் ஒழுங்கின்மையையே எதிர் பார்க்கிருர்கள். இந்தப் பாடங்களைக் கற்றுக் கொடுப்ப தற்குக் கவலைப்படாத பெற்ரேர் நாகரிகம் மிக்க இருப தாம் நூற்ருண்டில் நமது நாட்டிலேதான் அதிகமாக இருக் கிருர்கள். பெற்ரேர் காட்டும் இந்தக் கவலையீனத்தினல், குழந்தைகள் பெரியவர்களாகும் பொழுது, பொது நலத் தைக் கருதாமல் சுயநலத்தை மட்டுமே கருதி எதையும் செய்யத் துணிவார்கள். பிறர் பார்க்கிறபொழுது ஒரு வகையான செய்கையும் பேச்சும் உடையவர்களாகத் தோன்றுவார்கள். பிறர் பாராத பொழுது முற்றி லும் வேற்றுமையான செயல் போக்கும், சிந்தனைப் போக்கும், புரட்டலான மொழிகளும் உடையவர்களாக மாறி விடுகிருர்கள். நாட்டின் சீரிய உரிமையாளனகித் தேசப் பொதுநல நன்மைக்காகத் தன்னையே தியாகம் செய்யவல்ல மனப்பான்மையின் விதைகள் யாவும் குழந்தையின் மனத்தில் சின்னஞ்சிறு பருவத்திலேயே ஊன்றப்படுபவை. தொட்டில் பருவத்தில் ஏற்படுகிற பழக் கங்கள் முதுகாடு செல்லுமளவும் மனிதனை விட்டு அகலாதவை. தேசத்தின் சுகாதார நிலையைக் காக்கும் கடமை சுகாதார அதிகாரிகளைச் சார்ந்ததன்று. இந்தக் கடமை பெற்ரேர்களையே சார்ந்தது. பெற்ரேர் தமது கடமையைச் செம்மையாகச் செய்வதற்கேற்ற வசதிகளைத் தான் சுகாதார அதிகாரிகள் செய்துகொடுக்க முடியும்.

மலஜலக்கழிவு பற்றிக் குழந்தைகளிடத்தில் வயது தோறும் ஏற்படக்கூடிய தவறுதல்களைப் பெற்ரேர்

கவனித்து அவற்றைத் தவிர்க்க முயலவேண்டும். இவை யாவற்றிற்கும் தாயிடத்தில் குழந்தைக்குப் பரிபூர்ண நம்பிக்கை ஏற்படவேண்டும். தந்தையிடத்திலும் அதே நம்பிக்கை பிறக்க வேண்டும். கட்டாயப்படுத்திச் செய்யத் தூண்டுவதனால் நம்பிக்கை தோன்றாது. களங்கமற்ற அன்பினாலேதான் நம்பிக்கை தோன்றும். அன்பு ஒன்றே காரண காரியங்களைக் காட்டும்; உள்ளத்தின் ஆழத்தில் பதிந்த அனுபவ முத்திரைகளிலிருந்து புறப்படுகிற சுதந்திரச் செயல் போக்குடையவர்களாக நமது மக்களை உருவாக்கிவிடும்.

III. நித்திரை

உறங்குகின்ற கும்பகன்ன உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்குகின்றது இன்றுகாண், 'எழுந்திராய்! எழுந்திராய்!
கறங்குபோல வில்பிடித்த கால தூதர் கையிலே
உறங்குவாய்! உறங்குவாய்! இனிக்கிடந்து உறங்குவாய்

கம்பன்—கும்பகர்ணப் படலம்.

தூங்காமல் தூங்கி இருப்பதும் எக்காலம்?

உயிர்களின் வாழ்க்கையில் பெரும் பகுதியும் உறக்கத்திலே கழிந்து போகிறது என்ற உண்மையோடு, உடலின் ஒரு பாதி உருவமே உறக்கத்தில் உருவாகி வருகிறது எனலாம். வண்ணாத்திப் பூச்சியைப் பாருங்கள். பெண் பட்டுப் பூச்சியிட்ட முட்டையினின்றும் வெளிப்படுகிற வண்ணாத்திப் புழு, 'பசி! பசி!' என்று முசுக்கட்டை இலைகளை இரவு பகலாக வெகு பரபரப்போடு அரித்துத் தின்கிறது. ஆரம்பத்தில் எழுந்த பசியால் விளைகிற வயிற்றுப் படபடப்பும், அந்தப் படபடப்பைத் தணிக்க ஓர் உண்டாட்டுமாக அதன் வாழ்க்கை ஆரம்பமாகிறது. வண்ணாத்திப் புழுவின் வாழ்க்கை வரலாற்றில் இந்த உண்டாட்டுப் படலத்தை அடுத்து வருவது நித்திரைப் படலம். வண்ணாத்திப் புழு தன்னைச்சூழப் பட்டிழையால் சிறு தொட்டில் ஒன்றைக் கட்டிக்கொண்டு அதனுள்ளே உறங்கித் தூங்காமல் தூங்கியிருக்கிறது. கூட்டுப்புழு இந்த நிலையில் உயிரற்றதுபோல் தோன்றும்.

செத்தது போன்ற உறக்க நிலையிலே அழகிய பட்டுப்பூச்சி உருவாகிக் குறித்த காலத்தில் கூண்டைக் கிழித்துக் கொண்டு வெளிப்படுகிறது. உலகில் தோன்றுகிற உயிர்கள் யாவும் விழிப்பு நிலையிலே செய்ய வேண்டிய எண்ணிறந்த செயல்களுக்குத் தேவையான ஆற்றல்களை உறக்க நிலையிலே திரட்டிக் கொள்கின்றன.

குழந்தைகளின் உறக்க இயல்புகள்

மனிதன் குழந்தையாக இருக்கிற காலத்தில் இந்த இயற்கை விதிக்கு இசைந்து தன் வாழ்நாட்களில் பெரும் பகுதியையும் நித்திரையில் கழிப்பதனாலேதான், பிற் காலத்தில் அவன் இயற்ற இருக்கிற எண்ணிறந்த செயல்களுக்குத் தேவையான ஆற்றல்களைத் திரட்டிக் கொள்கிறான். ஆகையால், உணவுக்கு அடுத்தபடியாக உறக்கமே குழந்தைகளுக்கு மிகவும் தேவையானது. இதனாலேதான் குழந்தை தன் வாழ்க்கையைத் தொடங்குகிற நாட்களில் பெரும்பொழுதை உறக்கத்தில் செலவிடுகிறது. முதல் மாதங்களில் உறக்கத்தில் செலவிடுகிற கால அளவு குழந்தைக்குக் குழந்தை வேற்றுமைப் படுகிறது. கால அளவு வேற்றுமைப் படுவதோடு தூக்கத்தின் தன்மையும் வேற்றுமைப்படுகிறது. ஒரு குழந்தை நித்திரைக்குப் பங்கம் வராமல் நெடுநேரம் தூங்கலாம். மற்றொரு குழந்தை அவ்வளவு நேரம் தூங்காமல் இருக்கலாம்.

குழந்தைகளின் நித்திரையில் காண்கிற ஏற்றத் தாழ்ச்சிகளால் தாய் கலக்கம் அடையத் தேவை இல்லை. இரட்டைப் பிள்ளைகளாயிருந்தாலும் ஒரு பிள்ளை உறக்க வசதிகளைப் பொருட்படுத்தாமல் உறங்கும். மற்றொரு பிள்ளை திடுக்கிட்டு விழித்துக் கொள்ளும். கிருஷ்ணன் என்னும் குழந்தை அயர்ந்த உறக்கத்தில் இருந்தாலும், இடி ஓசை கேட்டு அலறி எழுந்திருப்பான். இரட்டையருள் மற்றொரு மகவாகிய ராமுவோ அண்டகடாகமெல்லாம் கிடுகிடுவென நடுங்க இடித்தாலும், உடம்பிலே மழை பெய்தாலும், எழுந்திருக்காமல் உறங்குவான். சின்னஞ்சிறு குழவிப் பருவத்தில் கண்ட உறக்க இயல்பு

கள் இந்த இரட்டைப் பிள்ளைகள் பெரியவர்களான பொழுதும் மாருமல் இருந்தன. குழந்தைகளிடத்தில் காண்கிற இத்தகைய தூக்க வேற்றுமைகளினால், செயல் திறமைகளிலாவது, வளர்ச்சியிலாவது, ஏற்றத் தாழ்ச்சிகள் தோன்றும் என்று நினைப்பது தவறு.

குழந்தைகளில் அயர்ந்து உறங்குபவர் எனவும், ஒலி ஓசைகளால் தூக்கம் கலையக்கூடிய இயல்பினர் எனவும் இருவகுப்பினரைப் பார்க்கலாம் தூக்கம் எளிதிற் கலையக் கூடிய இயல்பினரை ஆழ்ந்து உறங்கும் இயல்பினராக மாற்றிவிடமுடியும். இதற்கு ஒரே வழி உண்டு. உடற் பயிற்சி, மலஜலக்கழிவுப்பழக்கங்கள், படுத்து உறங்கும் இடம், உறக்கத்திற்குப் பொருந்திய வசதிகள் யாவும் ஏற்ற வாறு ஒழுங்கு முறைப்படிக் காலத்திட்டம் தவருமல் நாடோறும் அமைவதே வழி. குழந்தையின் வாழ்க்கைத் திட்டங்களும் நாட்கடன்களும் முறை தவருமல் ஒழுங்காக நடைபெற்று வரவேண்டும். அப்படியானால், குழந்தையின் உறக்கம் தனி அழகு பெறும்; எளிதில் உறக்கம் கலைந்து எழும் நிலைமை மாறிவிடும். காலத் திட்டத்தின்படி பால் உண்கிற குழந்தை உணவருந்திய சிலநிமிஷங்களுக்குள் உறங்கிவிடும். எனினும், கவனத்தைக் கவரக்கூடிய அருட்டிகள் சூழ்நிலையில் இருந்தால் குழந்தை விரைவில் உறங்காது.

ஆரோக்கியமான குழந்தை பிறந்த நாளினின்று நான்காவது மாதம் முடிவடையும் வரைக்கும் நாள் ஒன்றிற்கு இருபது மணி நேரம் விழித்திருக்கத் தொடங்கு கிறது. நான்காவது மாதத்திலிருந்துதான் குழந்தையின் உறக்கத்திற்குக் கால அளவுத் திட்டம் தேவையாக இருக்கிறது. காலத் திட்டத்தின்படி உணவு கொடுப்பதே சிரமமாக இருக்கையில் தூக்கத்திற்கும் காலத்திட்டம் வகுத்து அதன்படியே குழந்தையைத் தூங்க வைக்க முடியுமா?—என்று பல அன்னையர் கருதலாம். முதலாவது, "குழந்தை தூங்குவதெல்லாம் அன்னைக்கே இலாபம்," என்பதை மறக்கலாகாது. குழந்தை தூங்குகிற நேரத்தில் தாய் பிற அலுவல்களைக் கவனிக்கப் போதிய காலம்

கிடைக்கிறது. காலத் திட்டத்தின்படி குழந்தையை வளர்ப்பதில் பல நோக்கங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று, தாய் குழந்தையின் தேவைகளைக் கவனிக்கும் பொழுது, தன் அலுவல்களுக்கும் கேடு வராதவாறு பார்த்துக்கொள்வதேயாம். ஆகையால், நான்காவது மாதத்திலிருந்து குழந்தையின் உறக்கத்தையும் காலத் திட்டத்திற்குக் கொண்டுவருவது, தாய்க்கு நன்மையாகவே இருக்கும். உணவுபற்றிக் குழந்தையை வற்புறுத்துவதனால் பல மனச் சிக்கல்கள் விளையும். அன்றியும் இதில் சிரமமும் ஏற்படும். ஆனால் குழந்தையைக் காலத் திட்டத்தின்படி உறங்கப் பழக்குவது எளிது. குழந்தையின் வாழ்க்கைப் போக்கு இதற்கனுகூலமாக அமைந்துள்ளது.

குழந்தையை உறங்க வைக்கும் இடம்

உறக்கத்திற்குச் சூழ்நிலைவசதிகள் ஆள்-சந்தடியின்றி அமைதியாக இருக்கவேண்டும். வீட்டில் உள்ளவர்கள் கூடிக் குழுமிப் பேசும் கூடமாக இருப்பது நன்றன்று. பல்வகையிலும் அமைதியான இடமாக இருத்தலே சாலச் சிறந்தது. நித்திரை செய்யும் அறை துப்புரவாக இருக்க வேண்டும். குழந்தையின் படுக்கை, விரிப்பு, மெத்தைகள் யாவும் நன்றாய் உலர்ந்திருக்கவேண்டும். கொசுகு, பூச்சிகள் மொய்க்காதபடி தொட்டிலுக்கு ஒரு கொசுகு வலை அமைந்திருப்பதும் நலம். தொடக்கத்திலிருந்து குழந்தைக்கு ஒரு கொசுகு வலை தயாரித்துக் கொடுப்பதற்காகப் பொருளை மிதமிஞ்சிச் செலவழிப்பதும் நன்றன்று.

குழந்தையின் உறக்கத்திற்கு வசதிகள் அமைத்துக் கொடுப்பதிலேயே பெரிய மானஸசாஸ்திர உண்மை ஒன்று அடங்கியுள்ளது. அமைதியான இடத்திலேதான் அமைதியான மனநிலை அமையும். நித்திரைக்கு முன் மன அமைதி இன்றியமையாதது. குழந்தைக்கு மன அமைதி பெற்ற உறக்கம் இன்றியமையாதது. குழந்தையின் உடல் தூக்கத்தில் இருந்தாலும், அதன் மனம் செயலற்றுச் சும்மா இருப்பதில்லை. மனம் கனவு நிலையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. உணர்வு தெளிவுப் புலத்தில் ஏற்படுகிற ஆற்றல் மிக்க அனுபவங்கள் முத்திரைகளாக

மன அயர்வுப் புலத்தில் பதிகின்றன. மனது, இந்த அனுபவ முத்திரைகளை மாடு அசை போடுகிற விதமாகக் கனவில் திரும்பத் திரும்பத் தழுவி அனுபவிக்கிறது. நித்திரைக்குமுன், கோபம், அன்பு, பயம் முதலிய மனோ விகாரங்களுக்குக் காரணமான அனுபவங்கள் முத்திரை களாகப் பதியுமானால், குழந்தையின் கனவில் மனமும் இந்த அனுபவ முத்திரைகளைத் திரும்பத் திரும்பத் தழுவி அனுபவிக்க முயலும்.

உறக்கத்திற்கு ஆயத்தம்

அமைதியான சூழ்நிலையிலே தான் குழந்தை அமைதி யாக நித்திரை செய்யும். என்பதனைப் பன்முறையும் வற்புறுத்தவேண்டும். விளையாடிக்கொண்டிருக்கும் குழந் தையை உறங்கும் நேரம் கிட்டி விட்டதென்று வெடுக் கென்று தூக்கிக்கொண்டுபோய்த் தொட்டிலில் கிடத் தினால், ஒருமுகமாக விளையாட்டிலே ஓடிக்கொண்டிருந்த மனத்தை உறக்கத்தில் அமைதியாகச் செலுத்தக் குழந்தையினால் முடியாது. விளையாட்டிலேயே செல்ல விருப்பங்கொண்டு உறங்கமாட்டேன் என்று முரண் டடிக்கும். நமக்கே ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்திற்குத் திடீர் எனக் குதித்துவிட முடியாமற் போகிறது. அப்படி இருக்க, குழந்தைக்கு மட்டும் இது எளிதென்று கருதுவது தவறாகும். தூங்க வைக்குமுன், குழந்தையின் மனம் நித்திரைக்குப் பொருத்தமான [1] **திட்டம்** பெறவேண்டும். ஆறு மாதமானதும் குழந் தைகள் வெகு எளிதில் நித்திரைக்கு உடன்படாது. ஆகையால் குழந்தையைத் திடீர் என்று நித்திரை உலகத்திற்குள் புகுத்துவது சரியன்று. "சீக்கிரம் தூங்கு! கண்ணை மூடிக்கொள்" என்றெல்லாம் சொல்லித் தூங்கத் துரிதப்படுத்துவதும் தகாது. எதுவாயினும் குழந்தைகளிடம் பொறுமையையே கையாளவேண்டும் என்ற விதி குழந்தையின் நித்திரைக்கும் பொருந்தும்.

---

1. **திட்டம்**—ஒரு செயல் வெளிப்படுவதற்குமுன் அச்செயலுக்குப் பொருத்தமான நிலைகள் மனத்திலாயினும் உடலிலாயினும் ஏற்படுவதைக் குறிக்கும்.

நாம் கட்டாயப்படுத்துவதன் கருத்து குழந்தைகளுக்கு விளங்காது. பெரியவர்களான நம்மை யாரேனும் ஒன்றைச் செய்ய வற்புறுத்தினால் நாம் காரணம் புலப்படாமல், "அதென்ன கட்டாயம்? செய்யமாட்டேன்" என்கிறோம். ஏதேனும் ஒன்றை ஒருமுறை எதிர்த்து நிற்கும்படி குழந்தையின் சித்தத்தைத் தாய் எழுப்பி விட்டால், குழந்தை அதனையே முதல் அனுபவமாகக் கொண்டுவிடும். எதிர்த்து நின்று வெற்றிபெற முடியுமா என்று பரீக்ஷை செய்து பார்க்கும்.

உறங்க வைக்குமுன், சிறிது கொஞ்சுதல், குலாவுதல் முதலியன குழந்தைக்குத் தாயிடத்தில் உள்ள அன்பை உறுதிப்படுத்தும். பின்பு உறங்கவைக்கும் பொழுது குழந்தை மனமுவந்து உடன்படும். இப்படி உறங்கச் செய்கிற குழந்தையின் முகத்தில் சுக நிலை பொலிந்து விளங்கும்

முதல் ஆண்டுக்குப் பிறகு குழந்தைகள் அவ்வளவு எளிதில் தூங்க இசைவதில்லை. கொஞ்சிக் குலாவி முத்தமிட்டுத் தொட்டிலில் இட்டு ஆட்டினாலும் குழந்தை உறங்காது. இந்தச் சங்கடங்கள் ஒன்பதாவது மாதத்திலேயே தொடங்கலாம். இதன் காரணங்களைச் சற்றே சிந்திப்போம். முதலாவது, நாம் குழந்தைகளை எப்படி உறங்க வைக்கிறோம்? குழந்தையைத் தட்டித் தடவி உறங்க வைக்கிற பழக்கம் நம்முடைய நாட்டு அன்னையரிடம் மிகுதியாக உண்டு. சிலர் குழந்தையைத் தட்டுவதோடு இனிமையான குரலிலே தாலாட்டுப் பாடியும் உறங்க வைப்பர். இசைக் கலையில் தேர்ச்சி பெற்ற அன்னை தன் குழந்தைக்கும் அத்திறமை ஏற்படவேண்டும் என்னும் விருப்பத்தோடு பலவகையான ராகங்கள் குழந்தையின் செவியில் வாழ்க்கைத் தொடக்கத்திலிருந்தே தொனிக்க வேண்டும் என்னும் கருத்தோடு பாடுவாள். இந்தப் பாட்டுக்கு இசைந்தவாறு தொட்டிலையும் ஆட்டுவாள். மடியிலே படுக்க வைத்துக்கொண்டு, தாலாட்டுப் பாடுகிற தாய் தன் கால்களையும் பாட்டுக்கிசைந்தவாறு ஆட்டி அசைத்துக் கையால் குழந்தையின்மேல் தாளமும் இடுவாள். செல்லப்

பிள்ளைக்குக் கொள்ளை இன்பம்! செவிக்கு ஓர் அருட்டி; தொடுகைப் புலனுக்கு ஓர் அருட்டி; முழு உடலுக்கும் எண்ணிறந்த அருட்டிகள்.

மிஞ்சிய சீராட்டு

இத்தனை வகையான அருட்டிகளின் வாயிலாக இன்பங்களை அனுபவிக்கப் பழக்கிய பிள்ளையைத் தொட்டிலிலே சும்மா கிடத்திவிட்டால் உடனே அது அயர்ந்து உறங்கிவிடுமா? "கொண்டுவா இன்பத்தை" என்று கூச்சலிட்டு அழுமன்றோ? பலவகை அலுவல்களையுடைய அன்னை எப்பொழுதும் பாட முடியுமா? எப்பொழுதும் தொட்டிலை ஆட்டி உறங்கவைக்க முடியுமா? எப்பொழுதும் தட்டித் தாலாட்ட முடியுமா? சுகமிலை குலைந்து தாய் இரண்டு மூன்று நாட்களாகப் படுக்க நேர்ந்துவிட்டால் குழந்தை எளிதில் உறங்குமா? "தாயே வரவேண்டும்; தாயே பாடவேண்டும்; தாயே தொட்டிலையும் ஆட்டவேண்டும்" என்று குழந்தை முரண்டடிப்பதைத் தவிர வேறு எதை எதிர்பார்க்க முடியும்? மனிதனின் பொது இலக்கணம், 'பழம் பற்றுப் பேணுதல்' அன்றோ? ஒரு பழக்கத்திற்கு ஆளான குழந்தை புதிய பழக்கத்திற்கு எளிதில் ஆள் ஆகுமோ? ஆகையால், நாம் குழந்தைக்கு அளிக்கும் சுகபோக வசதிகளை முடிவு மட்டும் கொண்டு செலுத்த முடியுமா என்பதை அன்னையர், வாழ்க்கையைத் தொடங்கும் நாட்களிலேயே சிந்திக்காவிட்டால், பிற்காலத்தில் பிள்ளை வளர்ப்பில் எண்ணிறந்த சிக்கல்களால் வருந்துவார்கள். வழக்கமாக வந்த ஏதோ ஒரு இன்பத்தில் அல்லது வசதியில் குறைவு ஏற்படுவதால் குழந்தை தூங்கமாட்டேன் என்று முரண்டடிக்கிறது.

உறக்கத்தைச் சிதைப்பன

சில தருணங்களில் குழந்தைக்கு அஜீர்ணம் ஏற்படலாம்; ஜீரணசக்தி மந்தப்படுவதற்குக் காரணம் வயிற்றினின்று எழும் புளிப்புக் காற்றேயாகும். இந்தப் புளித்த காற்று குமிழியாக எழுந்து வயிற்றை நிரப்பும். இதனால் சுகமிலை குலையும்; உடலின் இயல்பு மாறும். இக்

காரணத்தைக் குழந்தைக்கு வாய்விட்டுச் சொல்லத் தெரியாது. ஆகையால், முரண்டு அடித்து அழுது அதை வெளிப்படுத்தும். ஒரு வேளை தொட்டிலில் விரித்திருக்கும் படுக்கையில் துணி சுருண்டிருக்கலாம். இப்படியாகப் பல காரணங்கள் இருக்கலாம். ஆகையால் 'முரண்டடித்தால் அடிக்கட்டும்; கொஞ்ச நேரம் அழுத பிறகு, தானே உறங்கும்' என்று விட்டு விடுவதைப் பார்க்கிலும், திரும்பவும் குழந்தையைக் கையில் எடுத்து, மனநிலை, உடல் நிலை, படுக்கை நிலை முதலியவற்றை மாற்றி உறக்கத்திற்கு ஒரு மனத்திட்டத்தை உண்டுபண்ணிய பிறகு திரும்பவும் உறங்க வைக்கவேண்டும். குழந்தை தன் உறக்கத்திற்கு இன்றியமையாதது எனக் கருதுகிற தட்டுதல், பாடுதல் முதலிய பழக்கங்களைத் தொடக்கத்திலேயே தவிர்க்க வேண்டும்.

கதை சொல்ல நல்லநேரம்

ஒரு வயதானதும் குழந்தை உறங்குமுன் பெரியோர் யாரேனும் பக்கத்தில் வந்திருந்து குழந்தைப்பாட்டுக்கள் கற்றுக்கொடுத்தலும், கதை சொல்லுதலும் சிறிது நேரம் பேசிப் பொழுது போக்குதலும் வேண்டும். கதை கேட்டுக் கண்ணயரும் குழந்தை, கனவுலகத்திலே அந்தக் கதையை அனுபவித்து இரசிக்கும். குழந்தைப் பாட்டுக்களும் குழந்தைக் கதைகளும் சிறு வயதிலேயே மொழித்திறமையை வளர்ப்பன. நவீன நாகரிகக் கல்வி நமது நாட்டில் பரவுவதற்கு முந்தியே இன்னின்ன வயதிற்கு இன்னின்ன கதைகள் பொருத்தமானவை, இன்னின்ன பாட்டுக்கள் பொருத்தமானவை என்பதை நமது நாட்டில் பாட்டியும், தாயும் வழிமுறையிலே அறிந்திருக்கின்றனர். நாட்டுப்புறத்தில் வாழ்கிற தாயும், பாட்டியும் தமது குழந்தைகளின் வளர்ச்சிப் பருவம் அறிந்து கதைகள் சொல்லிக் கற்பனை சக்தியையும் மொழித் திறமையையும் இன்றளவும் வளர்த்து வருவதைக் காண்கிறோம். இந்தக் கல்வியில் பெரும்பாகமும் குழந்தையை உறங்கவைப்பதற்குத் துணைக்கருவிகளாக அமைந்தவை.

4. குழந்தையின் மனோவிகாரங்கள்[1]

மனோவிகாரங்கள்

பிறந்த உடனேயே குழந்தை நடப்பதும் இல்லை; பேசுவதுமில்லை எனினும், குழந்தை உணர்ச்சி அற்ற கட்டையன்று. மண்ணில் பிறந்த நாள் முதலாகக் குழந்தை மானிடத் தொகுதியின் அங்கமாகி வாழ்க்கையைத் தொடங்குகிறது; அதன் செயல்களும் தொடங்குகின்றன; மூளையோடு கலந்த செயல்களும் நிகழ்கின்றன; மூளையோடு கலவாத செயல்களும் நிகழ்கின்றன. இவ்விரு வகைச் செயல்களின் கர்த்தாவாக விளங்குவது குழந்தை. மூளையோடு கலந்து ஆற்றுகிற செயல்கள் யாவும் **கிராஹ்ய-இந்திரியங்கள்**[2] மூலமாகவும், **காரிய-இந்திரியங்கள்**[3] மூலமாகவும்[4] **நரம்பு நடுநிலையத்தின்** இயக்கங்களாகி வெளிப்படுவன. மூளையோடு கலந்தியற்றும் இச் செயல்கள் அனைத்தும் தெரிந்து செய்யப்படுவன. சற்றும் தாமதமின்றி நிகழ்கிற செயல்கள் அனைத்தும், மூளையின் ஆட்சியின்றித் தாமாகவே நிகழ்கிறவை; மூளைக்குத் தெரியாமல் விளைகிற செயல்கள் அனைத்தும் முன்னறிவிப்பு இல்லா நிகழ்ச்சிகள் எனலாம்.

குழந்தைக்குப் பசிக்கிறது. இது ஓர் **அருட்டி**[5]. இந்த அருட்டிக்குப் பிரதிச் செயலாக கிராஹ்ய-இந்திரியங்கள் இயங்குகின்றன. உடனே நரம்பு நடுநிலையத்திற்குச் செய்தி எட்டுகிறது. வந்த செய்தியை மூளை பார்வையிட்டு அந்தச் செய்திப் பத்திரத்தின் மூலையில், " இது பசி !

1. **மனோவிகாரங்கள்**—*Emotions*

2. **கிராஹ்ய இந்திரியங்கள்**—உடற்புறத்தே சூழ்நிலைகளினின்று எழுகிற அருட்டிகளைக் கவர்ந்து மூளைக்குக் கொண்டுபோகிற புலன்களும் புலனுறுப்புக்களும் நரம்புகளுமாம். *Receptors.*

3. **காரிய இந்திரியங்கள்**—மூளையினின்று எழுகிற கட்டளைகளைப் பிரதிச் செயல்களாக்குகிற புலன்களும் புலனுறுப்புக்களும் நரம்புகளுமாம். *Effectors.*

4. **நரம்பு நடுநிலையம்**—நரம்புகளின் தலைமைக் காரியாலயம். *Nerve centre.*

5. **அருட்டி**—அருட்டல் - தூண்டுதல். அருட்டி - தூண்டுவதற்குக் காரணமாகிற ஏவல்.

அழுக!'' என்று விடை எழுதி அனுப்புகிறது. இந்தக் கட்டளையைக் காரிய இந்திரியங்கள் மூலமாக அனுப்புகிறது. உடனே, குழந்தை பசிக்குப் பிரதிச் செயலாக அழுகிறது. பசி **அக-அருட்டி**[1]; சீதோஷ்ண நிலைகளோ [2] **புற-அருட்டி**களாக அமைகின்றன.

வேறு சில செயல்கள் மூளையின் விளக்க உரையையும், கட்டளையையும் பெருமலே நிகழ்கின்றன. இந்தச் செயல்களைத் தெரியாமல் நிகழும் [3] **குறுஞ் செயல்கள்** எனலாம். ஏனெனில், தெரிந்து செய்யும் செயல்களுக்குச் **செயல் தெளிவு** [4] வேண்டும். ஒரே நேரத்தில் பல அருட்டிகள் குழந்தையைத் தாக்குகின்றன. குழந்தையின் மூளை, கூட்டமாக எழுகிற அருட்டிகளில் ஒன்றைத் தெரிந்து எடுத்து, அதற்குப் பிரதிச் செயலைத் தீர்மானிக்கிறது. குழந்தை கையையும் காலையும் உதைத்து விளையாடிக் கொண்டிருக்கிறது; ஐம்புலன்களின் வழியாக எத்தனையோ அருட்டிகள் புகுந்த வண்ணமாக இருக்கின்றன. மூளை இந்த அருட்டிக் குவியலிலிருந்து 'பசி' என்னும் அருட்டியை மட்டும் தெரிந்து கொண்டு, அதற்கு உகந்த பிரதிச் செயலைக் கட்டளையிடுகிறது. தெரியாமல் நிகழ்கிற குறுஞ் செயல்களுக்கு முன் கூறிய செயல் தெளிவு தேவையில்லை. குறுஞ்செயலுக்குக் காரணமாக எழுகிற அருட்டியும் ஒன்றே; அதற்குப் பிரதிச் செயலாக நிகழ்கிற குறுஞ்செயலும் ஒன்றே. இவ்விரண்டிற்கும் மாறுதல் என்பதே இல்லை.

குறுஞ்செயல்கள்

குழந்தை விழிப்போடு படுத்திருக்கிறது. அதன் கண்ணின் பக்கத்திலாவது, புருவத்திலாவது வெகு விரை

---

1. **அக-அருட்டி**—பிரதிச் செயலுக்குக் காரணமாக உடலுக்குள்ளேயே எழுகிற ஏவல். *Internal Stimulus.*

2. **புற-அருட்டி**—பிரதிச் செயலுக்குக் காரணமாகச் சூழ்நிலையிலிருந்து எழுகிற ஏவல். *External Stimulus.*

3. **குறுஞ் செயல்**—*Reflex action.*

4. **செயல் தெளிவு**—பல செயல்களுக்குக் காரணமாக இருக்கும் அருட்டிகளில் சிலவற்றைத் தெளிந்து தெரிந்து கொண்டு அவற்றிற்கு மட்டும் பிரதிச் செயலை விளைக்கிற மனநிலையைக் குறிக்கிறது. *Selectivity.*

வில் தொட்டால், உடனே இமைகள் தாமாகவே மூடிக் கொள்கின்றன. மிகவும் பிரகாசமான விளக்சொளி கண்ணிற் பட்டால் விழிகளின் பாப்பா சுருங்கிவிடும். சில தருணங்களில் அக அருட்டிகளினாலும் குறுஞ் செயல்கள் நிகழ்கின்றன. இருமல், தும்மல் முதலிய குறுஞ்செயல் களும், வயிறு, குடல் முதலியவற்றின் இயக்கங்களும் போன்றவை சில உதாரணங்களாம். குறுஞ்செயல்கள் யாவும் மூளையின் ஆட்சியின்றியே நிகழ்வன என்று உடலின் இயக்கங்களை ஆய்ந்த பேரறிவாளர் கூறு கின்றனர்.

அறிந்து செய்தலும் அறியாது செய்தலுமாகிய இவ் விருவகைச் செயல்களில் மனோவிகாரங்கள் யாவும் முந்திய தாகிய அறிந்து செய்கிற செயல்களின் கூட்டத்தைச் சார்ந்தவை. மனோ விகார நிலை உணர்வு தெளிவுப் புலத் தின் ஓர் அம்சமாக அமைந்துள்ளது. ஆகையால், கிராஹ்ய-இந்திரியங்களும் காரிய-இந்திரியங்களும் இயங்கி மூளைக்குச் செய்தியை எட்டுவித்த பிறகுதான் குழந்தை ஏதேனும் ஒரு மனோவிகாரத்திற்கு ஆளாக முடியும்.

ஒரு குழந்தைக்கு ஒரு வயதாயிற்று; நடக்கப் பழகும் பருவத்திலிருக்கிறது; தள்ளாடித் தட்டித் தடுமாறி நடக்கப் பழகுகிறது. விழுந்து, எழுந்து நடக்க முயல்வதிலே குழந்தைக்குத் தனி விருப்பம்; தன்னால் நடக்கமுடியுமா என்று தெரிந்துகொள்ளும் பொருட்டு முன்னும் பின்னும் காலைப் பெயர்த்து வைக்கப் பார்க் கிறது. குழந்தை இப்படி நடந்து பழகிக் கொண் டிருக்கும் வீட்டிற்கு நண்பர் ஒருவர் வந்தார்; ஆர்வத் தோடு குழந்தையைத் தூக்கி எடுத்து முத்தம் இட்டார். குழந்தைக்கு உடனே கோபம் பொங்கிவிட்டது. "நான் மகிழ்ச்சியோடு நடை பழகிக்கொண்டிருக்கிறேன். இது எனக்கு இன்பம் விளைக்கும் செயல். இம்முயற்சியில் களிப்போடு முனைந்து நிற்கிற என்னைத் தூக்கி எடுக்கவும் எனக்கு இன்பம் விளைக்கிற செயலைத் தடைசெய்யவும் இந்த மனிதனுக்கு ஏதேனும் உரிமை உண்டா?" என்பது போன்ற உணர்ச்சி ஒன்று குழந்தையின் மனத்திற்

குள்ளே எழுகிறது உடனே குழந்தை கத்தி அழுகிறது. நண்பரும் குழந்தையின் கருத்து விளங்காமல், குழந்தையைக் கீழே விடுகிறார். குழந்தையும் அழுகை ஓய்ந்து, முன்னே தனக்கு இன்பம் விளைத்த செயலில் ஈடுபடுகிறது.

இதைப் பார்க்கும்பொழுது, மனோவிகாரத்திற்கு ஒரு காரணமும், காரணத்திற்குப் பொருத்தமான ஒரு [1] செயல் போக்கும் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறதல்லவா? மனோவிகாரம் என்பது இன்னதென்று விளக்கிக் காட்ட முடியாத [2] உணர்வு அன்று. குழந்தையாயினும் சிறுவனாயினும் அவரவரது மனோவிகாரங்கள் தத்தமக்கமைந்த [3] போக்குவாய்களைத் தேடிக் கொள்கின்றன. நடந்து பழகிக் கொண்டிருந்த குழந்தையின் செயல்-இன்பத்தைக் குலைத்தபோது எழுந்த கோபம் அழுகையைப் போக்குவாயாகக் கொண்டு வெளிப்படலாயிற்று. இந்த அழுகையின் குறிக்கோளோ எனில், 'விரும்பியதைச் செய்யும் உரிமைவேண்டும்' என்பதே.

மனோவிகாரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளும் அறிந்த உண்மைகளும்

ஜெ. பி. வாட்ஸன் என்பவர் பலவாறு ஆராய்ந்தபின், அன்பு, பயம், கோபம் ஆகிய மூன்றுமே குழந்தைகளிடத்தில் முதன் முதலில் ஏற்படுகிற மனோவிகாரங்கள் என்று குறித்திருக்கிறார். யௌவனம் அடைந்தவர்களிடத்திலும் முதியவர்களிடத்திலும் காண்கிற மனோவிகாரங்களனைத்தும் அன்பு, பயம், கோபமாகிய முதல் மூன்று மனோவிகாரங்களிலிருந்துதான் வளர்கின்றன என்று வாட்ஸன் கூறுகிறார். முதன்மையாக விளங்கும் நிறங்கள் மூன்றே. இம் மூன்று நிறங்களைக் கலப்பதால் பல நிறங்கள் அமைகின்றன. அவ்வாறே இம்மூன்று விகாரங்களையும் பலவாறாகக் கலப்பதனாலே

1. *Activity in Progress.*
2. *Feelings.*
3. *Outlet.*



ஜெ. பி. வாட்ஸன் (*J. B. Watson*)

1878-ம் ஆண்டில் பிறந்தார். சிக்காகோ பல்கலைக் கழகத்தில் மானஸ சாஸ்திரியாக உழைத்தார். பின்பு ஜான்ஸ் ஹாப்கின்ஸில் ஆராய்ச்சி செய்தார். இவர் பிரவர்த்தி விஞ்ஞானத்தை ஆராய்ந்தவர்.

தான் பிற மனோ விகாரங்கள் எழுகின்றன. ஒன்பது [1] **இலக்கியச் சுவைகள்** உள்ளன என்று இலக்கியக் கலைகளில் தேர்ந்தவர்கள் கூறுகின்றனர். இந்த நவரஸங்களில் தலைமையானவை இரண்டு:

இன்பச்சுவை, வீரச்சுவை ஆகிய இரு மனோவிகாரங்களும் பால்மயத்தோடு கலப்புற்ற காதல் ஒன்றிலேயே அடங்கும் என்பது வட நூலார் கொள்கை. மனக் கோளாறுகள் அனைத்தும் ஆண், பெண் ஆகிய பால் வேற்றுமை ஒற்றுமை உறவுகளை ஆதாரமாகக் கொண்டவை என்று **புரொஃபஸர் ஸிக்மண்டு ஃப்ராய்டு** என்னும் மானஸ

1. **இலக்கியச் சுவை**—காவியரசம்.



புரொஃபஸர் ஸிக்மண்டு ஃபிராய்டு (*Professor Sigmund Freud*)
1856-ம் ஆண்டில் செக்கோஸ்லோவாகியா என்னும் பெய ரொடு தோன்றிய நாட்டில் பிறந்தார். மன அயர்வுப் புலத்தைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்தவர்.

சாஸ்திரி கூறுகிறார். பால்மயத்தொடர்பு எனினும் இன்பச் சுவை எனினும் ஒன்றேயாம். வீரச்சுவையும் இன்பச் சுவையோடு கலந்து அமைந்துள்ளது. ஜான் வாட்ஸன் பயம், கோபம் முதலிய இரண்டிற்கும் முந்தியதாக அன்பைக் குறிப்பிடுவதைச் சிந்திக்கும்பொழுது, ஃப்ராய்டு கூறுவது முற்றிலும் சரி என்றே தோன்றுகிறது. இந்த அன்புக்கு இரு கைகள் போல அமைந்திருப்பவை பயமும் கோபமுமாம். கோபம் என்பது வீரத்தின் புறத்தோற்ற மாகும். வீரத்திற்கு எதிராக நிற்பது பயம். பயமும் கோபமும் அன்பும் கலந்து கலந்து பல மனோவிகாரங்க ளாக உருக்கொள்கின்றன.

பயம் என்னும் மனோவிகாரம்

தாயின் வயிற்றிலிருந்து குழந்தை வெளிப்பட்ட வுடனே, ஆதாரமற்றது போன்ற உணர்ச்சியினால், "விழுந்து விடுவேனோ" என்ற எண்ணமும், இந்த எண்

ணத்தினால் பயமும் தோன்றுகின்றன. குழந்தையைப் பாயிலே கிடத்தியிருந்தாலும், நாற்றிசையிலும் தான் உருண்டு விழுவதுபோன்ற உணர்ச்சியும் அச்சமும் அதன் உள்ளத்தில் ஏற்படுகின்றன. இதன் பொருட்டே குழந்தைகளைக் கந்தைத் துணிகளில் சுற்றிப் படுக்க வைக்கும் பழக்கங்கள் தொன்றுதொட்டு ஏற்பட்டுள்ளன. குழந்தையை மேலே தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடும்பொழுது ஏற்படுகிற பயமும், திரும்பவும் ஆதாரநிலை பெறும்பொழுது ஏற்படும் அமைதியும் குழந்தையின் முகத்திலே வெகு தெளிவாகத் தோன்றும். பிறந்த இரண்டொரு மாதங்கள் வரைக்கும் குழந்தையை எடுப்பதில் பரபரப்பும் படபடப்பும் காட்டும்பொழுது, குழந்தையின் உடல் நடுங்குவதைக் காணலாம். பல குழந்தைகள் நாற்காலிகளிலும், மேசை மீதும் பெஞ்சின் மீதும் உட்கார அஞ்சுவார்கள். உட்கார வைக்கும் இருக்கைகள் நடுக்குறுமாயின், குழந்தையும் நடுங்கும்; அவற்றின்மேல் உட்கார அஞ்சும். கிருஷ்ணன் சிறு குழந்தையாக இருந்தபொழுது, அவனுடைய மாமா 'கிடு கிடு' என்று ஆடிய ஒரு மேசைமேல் குழந்தையை உட்காரவைத்தார். அதனால் அவனுக்கு ஏற்பட்ட பயம் வெகு எளிதில் தெளியவில்லை. கிருஷ்ணன் வளர்ந்து பெரியவனான பிறகும், நாற்காலியிலாவது பெஞ்சிலாவது உட்கார நேர்ந்தால், தான் உட்காரும் இருக்கைகளின் உறுதி நிலையை ஆராய்ந்த பிறகுதான் அமருவான்; உயர்ந்த இருக்கைகளில் மன அமைதியோடு உட்கார மாட்டான்; வெகு விரைவில் கீழே இறங்கி உட்காருவான்; உட்காரும்பொழுதே "இந்த ஆஸனங்கள் எல்லாம் நவீன நாகரிகப் போக்கிலே தேர்ந்தவர்களுக்குத்தான் பொருத்தமானவை. நான் கர்நாடகம்; தரையிலே உட்காரும் யோக்யதைதான் எனக்கு உண்டு" என்று சிறுமை உணர்ச்சி தொனிக்கும் குரலிலே கூறுவான்.

கிருஷ்ணனிடத்தில் கண்டது போன்ற நிலை - நடுக்கங்கள் பெரியவர்களிடத்திலும் தோன்றுகின்றன.

சிலருக்கு மேல்மாடி அறைகளில் உறங்குவதில் அச்சம் தோன்றும்; வேறு சிலர் கட்டிலிலும் பெஞ்சிலும் உறங்க அஞ்சுவார்கள்; மற்றும் சிலர் பரபரப்பாக நடக்கவும் அஞ்சுவார்கள்; அடி பெயர்த்து வைக்கும் நிலமும் அதிருமோ என்று அஞ்சியவர்போல் நடப்பார்கள். ராஜம் சிறு குழந்தையாக இருந்த பொழுது, அவனைப் பெற்றோர் அறையில் இட்டுக் கதவைத் தாளிட்டு எங்கோ சென்றனர். அவன் பெரியவனான பொழுது, கதவு அடைத்திருக்கும் அறைகளில் உறங்க அஞ்சினான். இங்ஙனம் பலவகை அச்சங்களுக்கு ஆளாகின்றவர்கள் தங்களிடத்தில் இத்தகைய இயல்பு இருப்பதையும் அறியார். இவர்கள் கிருஷ்ணனைப்போல் ஏதாவது சாக்குப் போக்குகள் சொல்லிவிடுவார்கள்.

பயத்திற்கு இரண்டாவது காரணம், உரத்து ஒலிக்கும் சத்தங்கள். குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் காலத்தில் ஓசை ஒலிகளால் ஏற்படும் அதிர்ச்சிகள் தாக்காதவாறு காப்புப் பெற்றிருக்கிறது. பிறந்தவுடனே உலகத்தின் பல்வகை ஒலிகள் குழந்தைக்கு ஒரே குழப்பமாகத் தோன்றுகின்றன. சென்னை நகரில் டிராம் வண்டிகள் ஓடுகிற தெருக்களில் குழந்தைகள் பிறந்து விட்டால், இந்தக் குழந்தைகளுக்கு முதல் நாளினின்று ஓசைகளினால் ஏற்படக்கூடிய ஒலிக் குழப்பங்களைச் சொல்லவா வேண்டும். எதிர்பாராத நேரத்தில் 'தடார்' என்று ஒரு பொருள் பக்கத்தில் விழுமாயின், வயது முதிர்ந்த நாமே திடுக்கிட்டு விடுகிறோமே. பித்தளைச் சாமான்கள் மேலே இருந்து கீழே 'டணார்' என்று விழுவதால் எழுகிற ஓசைகளும் குழந்தையைத் திடுக்கிடச் செய்யும். குழந்தை விழித்திருக்கிற பொழுது அருகில் யாரேனும் உரத்த சத்தமாய்ப் பேசினாலும், அதன் உடல் நடுங்குகிறது. நித்திரையிலிருக்கிற பொழுது உரத்த ஒலிகள் எழுமாயின் குழந்தை முகத்தைச் சுளிக்கிறது; திடீர் என்று கேட்கும் உரத்த ஒலி முழக்கங்கள் குழந்தையைத் திடுக்கிட்டு எழுப்பி வீறிட்டு அழச்செய்யும். இதனாலே தான் குழந்தைகளை அமைதியான இடங்களில்

உறங்க வைக்கவேண்டும் என அறிஞர் கூறுகின்றனர். இரண்டு வயதான சிறுவனைப் பெற்றோர் திருவிழாக் காட்சிக்கு அழைத்துச் சென்றனர். திடீரென்று அதிர் வெடி ஓசை கேட்டுச் சிறுவன் உடல் நடுங்கி அழுதான். இந்த நடுக்கம் அவனுடைய புத்தித்வத்தின் இயல்பையே மாற்றி விட்டது.

குழந்தைகளிடத்தில் காண்கிற பயத்தை ஆராய்ந்த ஜெ.பி. வாட்ஸன் சாஸ்திரியாருடைய ஆராய்ச்சிகளில் ஒன்றைப் பார்ப்போம். ஓர் ஆண் குழந்தையிடம் உயிருள்ள ஒரு வெள்ளை எலியை விளையாடக் கொடுத்தார். வெள்ளை எலி பார்ப்பதற்கு வெகு அழகாக இருந்தது. அதன் உடல் தொடுகைக்கு மெத்தென்றிருந்தது. குழந்தையும் அதனோடு விளையாடி மகிழ்ந்தது. எலியும் குழந்தையோடு நன்றாய்ப் பழகிவிட்டது. ஒரு நாள் எலியைப் பிடிக்கக் குழந்தை கையை நீட்டியது. அதே நேரத்தில் குழந்தையின் கண்ணுக்கு மறைவாக ஓர் இடத்தில் தொங்கவிட்டிருந்த இருப்புத் தண்டவாளத்தைவாட்ஸன் சாஸ்திரியார் சம்மட்டியால் தட்டினார். உடனே சத்தம் முழங்கியது. எலியைப் பிடிக்கக் குழந்தை கையை நீட்டியதும், சத்தம் கேட்டதும் யாவும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தவை. குழந்தை திடுக்கிட்டுவிட்டது; எலியைப் பிடிக்க நீட்டிய கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டது. பயத்தின் குறிகள் முகத்தில் வெகு தெளிவாகத் தோன்றின. திரும்பவும் குழந்தை பயம் தெளிந்து எலியைப் பிடிக்க முயன்ற பொழுது, முன் நிகழ்ந்தவண்ணமே சத்தம் கேட்டது. குழந்தை தான் கேட்ட சத்தத்திற்கும் எலிக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகக் கருதிவிட்டது. இப்படி எலியும் சத்தமும் ஒன்றாகத் தோன்றிய பிறகு, ஒலி முழக்கம் செய்யாமல், எலியை மட்டும் குழந்தைக்குக் காட்டிய பொழுது, குழந்தை எலியைப் பிடிக்க அஞ்சியது. எலியைக் குழந்தையின் அருகில் கொண்டுபோன பொழுதெல்லாம், குழந்தை வீறிட்டு அழுதது. [1] **நிகழ்ச்சித் தொடர்பு மயக்கில்** காண்கிற ஒரு தத்துவத்தைக் கையாண்டு விளைத்த

1. நிகழ்ச்சித் தொடர்பு மயக்கம்—*association of ideas.*

இந்த அச்சத்திற்கு எலியே காரணம் என்று குழந்தை கருதியது தண்டவாளத்தின் பெருமுழக்கம் எலியினின்று தோன்றுவது போன்ற மயக்கத்திற்கு இடமாயிற்று. குழந்தைகளிடத்தில் தோன்றுகிற பல்வகை அச்சங்களிற் சில, செயற்கையான நிகழ்ச்சித் தொடர்பு-மயக்கத்தால் விளைவன என்பதற்குப் பல ஆராய்ச்சிகளைக் குறிப்பிட முடியும். சில குழந்தைகள் இருட்டைக் கண்டால் அஞ்சுவார்கள். தாய்க்கு இருட்டைக் கண்டால் பயம். குழந்தை உணருமாறு தாய் பயந்தால், குழந்தை, "ஏன் அம்மா பயப்படுகிறாய்?" என்று கேட்கிறது. தாய் எந்தக் காரணத்தைக் குறிப்பிட்டாலும் பயன்படாது. குழந்தையும் இருட்டைக் கண்டு அஞ்சத் தொடங்கிவிடும். அறிவின்மையால் "அங்கே பேய் இருக்கிறது; பூச்சாண்டி இருக்கிறது; அங்கே பூதம் இருக்கிறது; என்று உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடும்," தாய் குழந்தையைப் பயமுறுத்தினால், தன்னைப் பேய் பிசாசுகளினின்று காக்கும் திறமை தாய்க்கு இல்லை என்று குழந்தை கருதுகிறது. எல்லாத் தீமைகளினின்றும் தன்னைக் காக்கவல்லவளே தாய் என்று குழந்தை இதுகாறும் நம்பியிருந்தது. தனக்குத் தாரகமானவள் தாய் என்று குழந்தை கருதியிருந்தது. அத்தகைய தாயே பயப்படுவதைக் காணும்பொழுது, தன் தாரக நிலையைப் பற்றிய சந்தேகம் குழந்தையின் உள்ளத்தில் எழுகிறது. அதுகாறும் தாயிடத்தில் வைத்திருந்த நம்பிக்கையை இழக்கத் தொடங்குகிறது. 'என்னைக் காக்கத் தாயிருக்கிறாள்' என்ற தைரியம் குறைந்துவிடுகிறது. குழந்தையின் முதல் அச்சம் வலிமை கொண்டு வளரத் தொடங்குகிறது.

வேறு பல செயற்கை முறைகளாலும் குழந்தைகளுக்கு அச்சத்தை உண்டுபண்ண முடியும். ஆதாரமற்ற நிலையினால் ஏற்படுகிற பயம், உரத்த சத்தங்களினால் ஏற்படுகிற பயம் ஆகிய இரண்டும் இயற்கையாகத் தோன்றுபவை எனப்படும் பூச்சாண்டி காட்டுதல் போன்றவை செயற்கை முறையாக விளைக்கிற அச்சங்களாம். ஒருதாய் தன் குழந்தையிடம் கண்ணாடிப் பாத்திரத்தை

எடுக்காதே, அது உடைந்துவிடும் என்று பயமுறுத்தினால், குழந்தை பொருள்களை எடுத்துக் கையாள அஞ்சும். இதனால், பொருள்களைக் கீழே போடாமல் எடுக்கும் திறமை ஏற்படக் காலதாமதமாகும். குழந்தை எதையும் அச்சத்தோடு எடுக்கும். பயத்தால் கைநடுக்கம் உண்டாகும்; நடுக்கத்தால் எடுத்த பொருள் தவறி விழும் ஆகையால், குழந்தைகளிடம், ‘அதை எடுக்காதே, இதை எடுக்காதே’ என்றெல்லாம் சொல்வதற்குப் பதிலாக குழந்தைகள் எளிதில் எடுத்துக் கையாளக் கூடியதும், உடையாததுமாகிய பண்டங்களையும் சாமான்களையும் எடுக்க உதவிபுரியவேண்டும். குழந்தையின் சிறு விரல்கள் பொருள்களை எடுத்துப் பழகவேண்டும். பொருள்களைக் கீழே போடாமல் கையாளும் திறமை சிறு விரல்களுக்கு ஏற்படும்பொழுது, குழந்தைகள் கண்ணாடிப் பாத்திரங்களைக் கீழே போடாமல் எடுத்து உபயோகிக்கக் கற்றுக் கொள்வர். ஆகையால், குழந்தைகள் சாமான்களை எடுத்துக் கையாளும்பொழுது, பயமுறுத்தாமல் அன்போடு உதவி புரிதல் வேண்டும்; எதையும் திறமையாகக் கையாளப் பழக்க வேண்டும். [1] **மாண்டிசாரி**, [2] **கிண்டர்கார்ட்டன்** முதலிய நவீனப் போதனா முறைப் பள்ளிக்கூடங்களில் படிக்கிற குழந்தைகள் தாமேஎடுத்து, வைத்துக் கையாண்டு பழகுவதற்காகப் பல பொருள்களைத் தயாரித்துக் கொடுக்கிறார்கள்.

மேலும், குழந்தையிடம் ஒன்றை எடுக்காதே என்று நாம் கட்டளை யிடும்பொழுது, நம்மையறியாமலே நமது குரல் கடுத்துத் தோன்றும். கடுத்த குரலுக்கு அச்சத்தை விளைக்கும் இயல்பு உண்டு. நமது குரலின் கடுப்பும் பெருக்கமும் குழந்தை எடுக்கக் கருதுகிற பொருளோடு தொடர்புற்று நிற்கும். சத்தத்தினால் தோன்றும் பயத்தைப் பொருளோடு தொடுப்பதனால், குழந்தை வளர்ந்து பெரியவனாகும் பொழுது, ஒலி மிகுந்த பொருள்களைக் கையாள அஞ்சுவான். இவ்வாறாகக் குழந்தைக்குப் பொருந்தாத வெறுப்பும் விருப்புமாகிய மனக் கோணல்

1. *Montessori.* 2. *Kindergarten.*

பொருந்தாத வெறுப்பும் விருப்புமாகிய மனக் கோணல்களை வருத்து வைத்து விடுகிறோம். குழந்தைகளைப் பயமுறுத்துவதனால் விளையக்கூடிய தீமைகளைக் கருதாத பெற்றோர், தமக்கு விருப்பமானவைகளைக் குழந்தைகள் செய்யும்பொருட்டு அச்சம் விளைக்கும் பல்வகை முறைகளைக் கையாளுகிறார்கள், ஒருமுறை குழந்தையின் மனத்திற் புகுந்த அச்சம் எளிதில் அகல்வதன்று.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பார்கள். சின்னஞ் சிறு பிராயத்திலே குழந்தைகளின் மனத்திற் பதிவன சிலையில் எழுத்துப்போல் காணும். சங்கரன் ஒரு வயதுக் குழந்தையாக இருந்தபொழுது, நிகழ்ந்த சம்பவத்தின் அனுபவ முத்திரை வாழ்நாளெல்லாம் அவனுக்குச் சங்கடமாயிற்று. ஒருநாள் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் மேல் ஒரு பூனை குதித்து விழுந்தது. அன்றுமுதல் அவன் பூனையைக் கண்டு பயப்படத் தொடங்கினன். பூனை வீட்டுக்குள்ளே வந்தால், சங்கரன் வீறிட்டு அழுவான். சிறுவயதில் ஏற்பட்ட பயத்தைக் குழந்தையின் மனத்திலிருந்து அகற்றி, சூழ்நிலைப் பொருளாகிய பூனையோடு நல்லுறவு தோன்றச் செய்வதற்குப் பெற்றோர் எத்தகைய முறையையும் கையாளவில்லை. இதனால் சங்கரன் பெரியவனாக வளர்ந்து கலியாணம் செய்து கொண்ட பிறகும், குழந்தைகளைப் பெற்ற பிறகும் அவன் படுத்திருக்கும் அறைக்குள் பூனை வந்துவிட்டால், பக்கத்தில் இருக்கும் நாற்காலியின் மேலாவது பெஞ்சின் மீதாவது ஏறி நின்று கொண்டு, தன் மனைவி பெயரைக் கூவி அழைப்பான். அவனுடைய குழந்தைகள் தந்தையின் அச்சத்தைக் கண்டு நகைப்பார்கள். தொட்டில் பழக்கங்கள் மட்டுமல்ல, தொட்டில் அச்சங்களும் ஒருவனைச் சுடுகாடு மட்டும் தொடர்கின்றன.

ஆதாரச் சிதைவுணர்ச்சி, உரத்த சத்தம் முதலியன சூழ்நிலையோடு மயங்குதல்

சினிமாக் காட்சி ஒன்றைப் பார்க்கிறோம். ஒருவன் துப்பாக்கியால் சுடுகிறான். உடனே வெடி ஓசை கேட்

கிறது. துப்பாக்கியை எடுத்துச் சுடுகிற செய்கையை மட்டும் [1]காமராவின் மூலமாகப் படம் பிடிக்கிறார்கள். ஆனால், சத்தத்தைக் காமராவின் மூலமாகப் பிடித்துக் காட்டமுடியாது. கிராமபோன் இசைத் தட்டுக்களில் பாட்டுக்களையும் பிற ஒலிகளையும் அலைகளாகப் பதிவு செய்வது போலத் துப்பாக்கியால் சுடும்பொழுது எழும் சத்தத்தையும் ஒலிப்பதிவு செய்யும் கருவியால் தனியே பதிவு செய்து, அதனைப் படம் பதிந்த சுருளோடு தொடுக்கிறார்கள். துப்பாக்கியைச் சுடுகிற செயல் நிகழும் அதே நேரத்தில் சத்தமும் தோன்றுமாறு இணைத்திருக்கிறார்கள். சுடுதலாகிய செயலும் அதனால் எழுகிற ஒலியுமாகிய இரண்டும் தனித்தனி முறைகளிலே பதிவாகித் தனித்தனியே தோன்றுமாறு செய்திருந்த போதிலும், இண்டும் ஒரே காலத்தில் நிகழ்வதால், படம் பார்க்கிற நமது கண்ணும், காதும் தத்தமக்குரிய அருட்டிகளை ஒரே நேரத்தில் ஏற்றுக்கொள்ளுகின்றன. இரண்டையும் ஒன்றாக மயங்கவைத்து ஒரே நிகழ்ச்சியாகத் தொடுக்கின்றன.

இம்முறைப்படியே அன்பு, கோபம், பயம் ஆகிய மூன்று ஆதி மனோவிகாரங்களும் பலவாறு கலந்து மயங்கி விடுகின்றன. தாய் குழந்தையைத் தன் கைகளால் தடவி, மெத்தெனத் தட்டிக் கொடுக்கிறாள். அதோடு "என் செல்லக்கிளி, என் கட்டிக்கரும்பு," என்றெல்லாம் பேசுகிறாள். தாயின் காரிய-இந்திரியத்தினால் நிகழ்ந்த செயலையும், குரலால் விளைந்த ஒலியையும் ஒன்றாகத் தொடுத்து, இவ்விரண்டும் என் தாயின் அன்பை உணர்த்துவன என்று குழந்தை அறிந்துகொள்கிறது முகத்திலே தோன்றும் புன்னகை, கண்ணிலே தோன்றும் கனிந்த நோக்கு, கரத்திலே தோன்றும் இனிய தொடுகை, குரலிலே தோன்றும் குழைவு முதலிய அனைத்தையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்த்துக் குறிப்பிட்ட ஒரு மனோவிகாரத்தின் அடையாளங்களாகக் குழந்தை தன்மனத்தில்பதிவுசெய்து கொள்கிறது. தாய் கசப்பான பொருளைக் கடிதலோடு

1. காமரா - புகைப்படம் பிடிக்கும் கருவி—*camera*

கொடுத்தால், கசந்த பொருளுக்கும் தாயின் கடிந்த குரலுக்கும் ஒரு தொடர்பைக் குழந்தை உண்டு பண்ணிக் கொள்கிறது. தாய் கோபம் கொள்வதற்கு முந்தியே குழந்தை தனக்கு விருப்பமின்மையை உணர்த்தப் பழகி யிருந்தது. குழந்தை தனக்குக் குளிர்ந்த காற்று விருப்ப மில்லாதபோது, அதை உடல்-நெளிவாலும், நெற்றிச் சுளிப்பாலும் மற்றும்சில முகக் குறிப்பாலும் வெளி யிடுகிற முறைகளை இயற்கைப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்திருக்கிறதல்லவா? ஆகையால், தன் அனுபவத்தை ஆதாரமாக்கித் தாயின் முகபாவனையையும் குரலையும் தனக்கு அளிக்கப்படும் பொருளோடு தொடர்பு செய்து, இதுவும் அதுவும் சேர்ந்தால் கோபமாகும் என்று உணர்கிற அறிவைப் புதிய அனுபவமாகப் பதிவு செய்து கொள்கிறது. தண்டவாளத்திலிருந்து உரத்தெழுந்த ஒலியையும் எலியையும் தொடுத்துப் பயத்தை விளைத்த வாறே பலவகை ஓசைகளையும் செயல்களையும் சேர்த்துப் பலவகை மனோவிகாரங்களை உண்டுபண்ணலாம். பல வகைக்குரல் நயங்களையும் முகக்குறிகளையும் இணைத்துத் தொடுத்து அன்பெனும் மனோவிகாரத்தைத் தோற்றுவிக் கலாம். கோபத்தைத் தோற்றுவிக்கிற குரல்களும் முகக்குறிகளும் உடலுறுப்பு இயக்கங்களும் உள்ளன. குழந்தை, பல்வகை மனோவிகாரங்களுக்குரிய குரல் வேற்றுமைகளையும் முகக்குறிகளின் மாறுதல்களையும் உடலியக்கங்களின் வித்தியாசங்களையும் தனித்தனியே வரிசை இட்டுப் பாகுபாடுசெய்யக் கற்றுக்கொள்கிறது. நாளடைவில் ஆதி மனோவிகாரங்களின் கிளைகளாக மற்றைய மனோவிகாரங்கள் முளைக்கின்றன.

ஸரஸ்வதிக்கு இன்னும் மூன்று வயதாகவில்லை. அவளுக்குக் கரியால் தரையில் கிறுக்குவதிலே தனிப் பிரியம் உண்டு. குழந்தையின் செயல் போக்கைச் சரியான நெறியில் பெற்றோர் திருப்பிவிடவில்லை. ஆகையால், குழந்தையும் தரையிலே கிறுக்கித் தன் செயல் திறமை யைக் கண்டு மகிழ்ந்தது. இந்த வழக்கப்படி ஒரு நாள் அவள் விளையாடிக்கொண்டிருந்தபொழுது, பட்டாளத்

திற்குப் போயிருந்த அவளுடைய மாமா திடீரென்று வீட்டுக்கு வந்தார். அவர் வெகு அழகாக மீசை வளர்த்து வைத்திருந்தார். வந்தவர் குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்டார். மாமாவின் மீசை ஸரஸ்வதியின் முகத்தை உறுத்தியது. அவளுக்குத் தாங்க முடியாத கோபம் பொங்கிவிட்டது. தன்னைப் பலவந்தமாக எடுத்து மீசையால் முகத்தைக் குத்தி, ஆக்கும் திறமையில் மகிழ்ந்திருந்த வளது இன்பத்தை எல்லாம் மாமா குலைத்துப் பாழாக்கி விட்டார். இத்தகைய கொடியவரை என்றுமே மன்னிக்க முடியாது என்று ஸரஸ்வதி நினைத்தாள். மாமன் அவளுடைய பார்வையில் பெரிய குற்றவாளியாக நின்றார். "முதலில், என் இன்பத்தைப் பாழாக்கினர்; நான் திடுக்கிடும்படித் தூக்கி எடுத்தார். என் விருப்பமின்மையை தெரிவித்துக்கொள்வதற்கு முன்னரே என்னை முத்த மிட்டார்; மீசையால் முகத்தைப் புண்ணாக்கிவிட்டார். இங்ஙனம் கை கடந்த செயல்களைச் செய்தவர் எனது மாமாவாக இருப்பாரா?" ஸரஸ்வதி தன் கோபத்தை எல்லாம் மாமாவின் மீசையோடு தொடுத்துவிட்டாள். அன்றுமுதல் மீசை வைத்துக்கொண்டு வீட்டுக்கு யார் வந்தாலும் ஸரஸ்வதி அவர்களுடைய நிழல் அருகிலும் போகமாட்டாள். மாமா ஒரு மாதம் அவளுடைய வீட்டில் இருந்தார். அந்த ஒரு மாதமும் ஸரஸ்வதி அவரை அணுக வில்லை. அவர் இதைத் தங்கையிடம் கூறி முறையிட்டார். தாயும் குழந்தையிடம், "மாமா! உன் செல்ல மாமா, அவர் கூப்பிட்டால் போகக் கூடாதா?" எனப் பல அன்பான வார்த்தைகள் சொல்லிப் பார்த்தாள். ஒன்றும் பலிக்கவில்லை. ஸரஸ்வதிக்கு எட்டு வயதாயிற்று. மாமாவும் யுத்தம் முடிந்து திரும்பி வந்தார். மாமா வந்து ஆறு மாதமாகியும் ஸரஸ்வதி அவர் இருக்கும் அறையையும் அணுகுவதில்லை. ஒருநாள் மாமா மீசையை எடுத்து விட்டு, ஸரஸ்வதியிடம் வந்தார். ஸரஸ்வதி மாமாவைப் பார்த்துச் சிரித்தாள். பதினைந்து நாட்களுக்குள்ளே அவளுக்கு மாமாவிடமிருந்த வெறுப்பு எப்படியோ மாயமாக மறைந்துவிட்டது. ஸரஸ்வதிக்கு மாமாமீதிருந்த

கோபம் மீசையோடு ஒழிந்தது. ஆயினும், மீசையைக் கண்டு அருவருக்கும் குணம் அவளை விட்டு அகலவில்லை.

சினந்துரைத்தேன் ; பிழைகள் எல்லாம் பொறுத்தருளல் வேண்டும்

"கோபம் எனும் புலிப்பயலே, காமவலைப் பயலே, கொடு மோகக் கடைப்பயலே, குறும்பு மதப்பயலே, தாப உலோபப் பயலே, மாற்சரியப் பயலே, தயவுடன் இங்கு இசைக்கின்றேன். தாழ்ந்திருக்காதீர் காண்! தீபம் எலாம் கடந்து இருள் சேர் நிலஞ்சாரப் போவீர்! சிறிது பொழுது இருந்தாலும் திண்ணம் இங்கே அழிவீர்!" என்று வடலூர் இராமலிங்க சுவாமிகள் ஒரு பாட்டிலே மனோவிகாரங்களை எலாம் வெருட்டி ஓட்டுகின்றவாறே குழந்தைகளிடத்தில் காண்கிற மனோவிகாரங்களை எல்லாம் குதலைப் பருவத்திலிருந்தே வெருட்டி ஓட்டி விடுவது நலமா? இது மிகவும் முக்கியமான ப்ரச்னையே. நவீனப் போர் முறைகளில் தன் வீட்டில் புகுந்த திருடனை ஓட்டு வதற்கு அண்டை வீட்டுக்காரனை அழைக்கிற திறமையே வீரம் என்று கருதும் மன இயல்பு தழைத்து வருகிறது. அண்டை வீட்டுக்காரன் வந்து வெற்றி பெற்றால், அவனு டைய வீரத்தில் பங்கு பெற்று வெற்றிக்கொடி உயர்த்தி விழாக் கொண்டாடுகிற ஆண்மை முற்காலத்து வீரர்க ளிடம் தோன்றவில்லை. வீரன் ஒருவன் தன்னைத் தாக் கும் பகைவரைத் தானே தாக்கி வென்று வெற்றி மாலை சூடுவான். அதைத்தான் பழைய உலகம் வீரமாகக் கருதி வந்தது. காமம், குரோதம், ஆகியவற்றை உட்பகை யாகக் கருதினால், குழந்தை தானாகவே தன் ஞான முதிர்ச் சியால் அவற்றை வெல்ல வேண்டுமே அல்லாது, மனோ விகாரங்களுக்கு இடமில்லாத குழந்தையைப் பெற்றோர் மரப்பொம்மை பிடிப்பது போல உருவாக்குதல் நலமன்று. இறைவனுடைய அருளைப் பெறுவதற்குப் பரிபாக நிலை இன்றியமையாதது என ஒரு சாரார் கொள்கை. பரிபாகநிலை தேவையில்லை; ஆத்மா எந்நிலையிலிருந்தா லும் இறைவனை நோக்கி, பூனைக்குட்டியைப் போலக் கதறி னால், அவன் வலுவிலே வந்து அந்த ஆன்மாவுக்கு மாலை

சூட்டுவான் என்று மற்றொரு சாராரது கொள்கை. இவ்விருவகைக் கொள்கையினரும் தத்தம் கொள்கைகளை நெடுங்காலமாகக் கூச்சலிட்டுக் கூறுகின்றனர். முக்தி பெறுவதற்கு இறைவனது 'அருள் தேவை' என்பதும், 'ஆன்ம பரிபாகநிலை அடையவேண்டும்' என்பதுமாகிய இவ்விரண்டும் பழைய முறைகள். வெற்றியை விரும்புகிறவர்கள் 'உதவி வேண்டும், உதவி வேண்டும்' என்று கூச்சலிட்டு உதவியைப் பெற்று வெற்றிமாலை சூடுகிற முறையிலே நவீனப் போர்த்திறமை அமைந்துள்ளது. அருட்பிரகாச வள்ளலார் பரிபாக நிலையை அடைந்தால் இறைவன் வந்து வெற்றி மாலை சூட்டுவான் என்னும் மரபின்படிப் போர் புரியும் வீரர் குழாத்தைச் சார்ந்தவரோ, இன்றேல் பரிபாக நிலைக்கு வராமலே இறைவன் அருளால் முத்தி பெறலாம் என்னும் குழாத்தைச் சார்ந்தவரோ?—என்பதனைத் தெளிந்து உரைக்கும் தேவை இந்நூலுக்கில்லை. எங்ஙனமாயினும், இருசாராருக்கும் பகையின் உபத்திரவம் இருக்கும் பொழுதுதான் விடுதலை அடையவேண்டும் என்ற அவாத் தோன்றுகிறது. மனோவிகாரங்களாகிற பகைகள் குழந்தையின் ஆன்ம வளர்ச்சிக்குஇன்றியமையாதவை. மனோவிகாரப் பகைகளை குழந்தையின் வாழ்க்கைத் தொடக்கத்திலேயே தொலைத்துவிடுவதில் பயனில்லை என்றே தோன்றுகிறது. மிகவும் முக்கியமான இந்தப் பிரச்னையை ஜெ. பி. வாட்சஸன் முதலான மானஸ சாஸ்திரிகள் வெகு தெளிவாக ஆராய்ந்திருக்கிறார்கள்.

குழந்தைப் பருவத்தில் மனோ விகாரங்கள் மிகவும் முக்கியமானவை என்பது வாட்ஸனது ஆராய்ச்சிகளால் தெரிய வருகிறது. இயற்கையாக ஏற்படும் உணர்வுகள் யாவும் செயற்கைத் தொழிலுக்கு வசதிகள் அமைக்கின்றன என்றே வில்லியம் மக்டுகலும் பல உதாரணங்களால் விளக்கியிருக்கிறார். மனோ விகாரங்களுக்குச் சூழ்நிலைப் பொருள்களின் தன்மைகளை கூட்டுறவுத் தொடர்பு முறைப்படி விதந்து அறியும் ஆற்றல் உண்டு. ஆகையால், ஓரினப் பொருளை ஒன்றாய்த்தொகுக்கும் இயல்புடைய

மனோவிகாரங்களின் ஆற்றலினால், குழந்தை சூழ்நிலைகளி லுள்ள பொருள்களின் நன்மை தீமைகளை அறிந்து கொள்ளமுடியும் இக்காரணங்களால், குழந்தைப் பருவத் தில் மனோவிகாரங்கள் தோன்ற இடந்தரவேண்டுமே அன்றி அவற்றை அடக்கலாகாது. குழந்தைப் பருவத் தில் ஏற்படுகிற மனோவிகார அனுபவங்கள் இன்று மலர்ந்து நாளைவாடுகிற மலர்கள் அல்ல. வாழ்க்கை முழுவதிலும் நன்மையை அனுபவிக்கவும் தீமையைத் தவிர்க்கவும் உத

வில்லியம் மக்டுகல் (*Willam McDougall*)

1905-ம் வருஷம் பிறந்தார். இவர் பதினாறு வருஷங்கள் போர்னியோத் தீவில் இருந்து உயிரினங்களை ஆராய்ந்தார். அதன் விளைவாக ஹார்மிக் மானச் சாஸ்திரம் என்னும் புதுக்கிளைக்குக் கர்த்தாவானார்.

வுகிற ஆற்றலை அளிக்கிற இன்றியமையாத அனுபவ முத் திரைகளாகப் பிரிணமிக்கின்றன. இயற்கை உணர்வு களின் நெறியிலே சென்று வாழ்க்கைக்கு அடிப்படை யான கட்டுக்கோப்புக்களை அமைக்கின்றவை மனோவிகா ரங்களே யாம். இவைகளே ஒருவனது தன்மயத்தை உருவாக்குவதற்கு ஆற்றல் பெற்றவை என்று மக்டுகல் சாஸ்திரியார் எண்ணிறந்த சான்றுகளைக் காட்டி விளக்கி

யிருக்கிறார். இந்த மனோவிகாரங்களின் இயக்கம் இல்லாமல் இராமலிங்க ஸ்வாமியின் தன்மயம் உருவாகியிராது. அவருக்கு ஒரு தன்மயம் இல்லை எனில், இறைவனிடம், "என் தன்மயமெல்லாம் நின் தன்மயமாக்கிக் கொண்டு" என்று அவர் எங்ஙனம் வேண்டுதல் செய்யமுடியும்? தன்மயம் ஒன்று அமைந்தால் தானே ஒருவன் தன்னை அறிய முடியும்? தன்னை அறிந்தவனல்லனோ தலைவனை அறிவான்? தன்மயத்தை உருவாக்குகிற மனோ விகாரங்களைக் குழந்தைப் பருவத்திலேயே அறுத்தெறிந்து விட்டால், உலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் நம்மாழ்வார்களாக மரத்தின் அடியிலே அடங்கிக்கிடந்து விடுவார்களே. பிறவிச் சக்கரத்தின் சூழற்சியிலே, பல்லாயிரக் கோடிப் பிறப்பு இறப்புக்களின் முடிவிலே, ஒரு நம்மாழ்வார் தோன்றிச் சடத்தை முனிந்து மரத்தின் அடியில் கிடக்கும் பாக்கியம் இவ்வுலகத்திற்குக் கிடைக்குமானால், இவ்வுலகம் அதனை வேண்டாம் என்று சொல்லப்போகிறதில்லை. எத்தனையோ பிறவிகளிலே மனோவிகாரங்கள் இயங்கி மகா அதிசயமான ஒப்பற்ற தன்மயத்தை உருவாக்கியபிறகு, முடிவிலே தோன்றுகிற கடைசித்தோற்றமாக நம்மாழ்வாரை வெளியிட்டது. அந்தக் குழந்தை சடத்தை முனிந்தது கூட மனோவிகாரங்களின் ஆற்றலையே விளக்குகிறது.

இயற்கை – உணர்வு [1]

இயற்கை - உணர்வு பற்றி ஆராய்ச்சி செய்த மானஸ சாஸ்திரிகளில் வில்லியம் மக்டூகல் சாஸ்திரியார் அழியாப் புகழுடையவர் என்றே குறிப்பிட்டவேண்டும். இவர் கூறுகிற விஷயங்கள் வெகு ரஸமானவை. இயற்கை-உணர்வுகளுக்குத் தலையான நோக்கம் ஒன்று உண்டு. இயற்கை - உணர்வுக்குச் சிகரமாக அமைந்த இலக்குகள் உள்ளன. முதலாவது, இயற்கை - உணர்வுகள் உயிர்களைச் செயலுக்குத் தூண்டிவிடுகின்றன. இயற்கை - உணர்வுகள் யாவும் செயலுக்குத் தூண்டிவிடுவதன் மூலமாக உயிர்

1. இயற்கை உணர்வு—*Instinct.*

களின் வாழ்க்கையை அழகாகச் சித்திரித்துக் காட்டுகிற ஜீவசக்தி பெற்றவை.

இயற்கை - உணர்வுக்கு மூன்று அம்சங்கள் உள்ளன. ஒன்று, ஆய்தல் - உணர்வு; மற்றொன்று ஆக்குதல் - உணர்வு. இவ்விரண்டிற்கும் இடையிலிருப்பது மனோ விகார உணர்வு. குச்சி, வைக்கோல், நார், பஞ்சு முதலிய பொருள்களால் அமைத்த கூண்டில் பிறக்கிற குருவிக் குஞ்சு அக்கூண்டில் தின்பதற்கு ஏதேனும் இரை அகப் படுமா என்று சுற்றுமுற்றும் ஆய்கிறது. பெரிதாக வளர்ந்த பிறகு, கூண்டைத் திறந்து இரைதேட வெளியே பறந்து போகிறது. சினைப்பட்ட குருவியொன்று இடப் போகும் முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரித்துத் தன் சந்தானத்தைப் பாதுகாக்க ஒரு கூண்டைக் கட்டு வதற்காக, வைக்கோலும், நாரும், பஞ்சும், குச்சியும் தேடிக்கொண்டு வருகிறது. ஒரு குருவி வயிற்றுக்கு இரைதேடக் கூண்டை ஆய்ந்தது. மற்றொன்று, தான் ஆக்கப்போகும் கூண்டிற்குத் தேவையான பொருள்களை ஆய்ந்தது. இரை தேடிய குஞ்சுக்குப் பஞ்சும், குச்சியும் கண்ணெதிரே இருந்தும், அவை தேவையாக இருக்க வில்லை; கூண்டு கட்டக் குச்சியும், பஞ்சும் தேடிச் சென்ற குருவிக்கு இரை தேவையாக இருந்தபோதிலும், அதன் நோக்கம் கூண்டுக்குரிய பொருள்களைத் தேடுவதிலே பொருந்தியிருந்தது. ஆகையால், அதற்கு இரையின் மேல் நாட்டம் இல்லை. ஆய்தல் என்னும் இயற்கை - உணர்வில், ஒரு [1] **செயல் தெளிவு** தோன்றுகிறது. வயிற்றுப் பசிக்கு இரை தேடிய குருவியில் ஆய்தல் என்னும் இயற்கை - உணர்வும், கூடுகட்டி முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்க விரும்பிய குருவிபால் ஆக்குதல் என்னும் இயற்கை உணர்வும், இவ்விரண்டிற்கும் இடையே,

1. செயல் தெளிவு - குறிப்புட்ட ஓர் அருட்டிக்குப் பல பிரதிச் செயல்களை விளக்கக்கூடிய நிலையில், மனம் எல்லாப் பிரதிச் செயல் களுக்கும் இடந்தராமல் ஏதோ ஒரு பிரதிச் செயலைத் தெரிந்து கொள் கின்றது. இதனையே மனத்தின் செயல் தெளிவு என்று உளநூல் கூறு கிறது. *Selectivity*.

ஆணும் பெண்ணுமாகிய குருவிகள் கொஞ்சிக் குலாவிக் காதலிக்கிற பண்பிலே அன்பாகிய மனோ விகாரமும் விளங்குவதைப் பார்க்கலாம்.

இதே இயற்கை உணர்வுகள் மனிதனிடத்தில் எவ்வாறு இயங்குகின்றன என்று பாருங்கள். மக்களைப் பெற்றுச் சந்தான உற்பத்தி பண்ணவேண்டும் என்ற இலக்கைக் கொண்டிருக்கும் இயற்கை - உணர்வு, செயற்கை அறிவால் வேற்றுமைப்படலாம். நன்றாகப் படித்த வாலிபன் ஒருவன் தன்னைப்போல் கல்வி கேள்வி களிற் சிறந்த கன்னிகை ஒருத்தியைத் தேடுவான். கல்வி கேள்வி இல்லாத மனிதனாக இருந்தாலோ, தன் காதலி யிடத்தில் வெறும் உடலழகையும் குடும்பத்திற்காகப் பாடு படும் வினைத் திறத்தின் அழகையும் எதிர்பார்ப்பான். கல்வி உடையவன் ஒன்றை எதிர்பார்ப்பான். கல்வி இல்லாத தவன் மற்றொன்றை எதிர்பார்ப்பான். இவ்வாறாக மனிதன் கல்வி கேள்விகளால் தனது ஆயும் திறமைகளையும் ஆக்கும் திறமைகளையும் மாற்றி அமைத்துக்கொள்ள முடியும். ஆயினும், அன்பு என்பதையாவது, கோபம் என்பதையாவது, பயம் என்பதையாவது மாற்றி அமைக்க முடியாது. இயற்கை உணர்வுகளின் வெளிப்படுதல்கள் பலவாறாக மாறுதல்களை அடைந்தாலும், அவற்றின் மூலையாக விளங்குகிற இயற்கை - உணர்வுத் தத்து வங்கள் மாறுதல் அடையாமல் அவற்றைக் காப்பது மனோவிகாரமேயாகும்.

வாழ்க்கையில் தோன்றும் சீலங்கள்[1] அல்லது மனோபாவங்கள்[2]

மனிதனின் உள்ளத்தில் எழுகிற பல இயற்கை உணர்வுகளின் தொகுதிக்கு வாழ்க்கைச் சீலம் அல்லது மனோபாவம் என்று பெயர். மனோபாவங்கள் ஒரு ஆளைச் சூழ்ந்து விளைத்துக்கொண்டிருக்கிற பலஇயற்கை-உணர்வு களைக் குறிப்பிடுவன. உதாரணமாகத் தேச பக்தியைப்

1. சீலங்கள் —*Sentinents.*
2. மனோபாவங்கள் —*Mental conceptions.*

பார்ப்போம். தேச பக்தி எனக்குறிக்கிற மனோபாவத்தில் பெரும் பகுதியும் இயற்கை-உணர்வுகளே. தனி ஆள் தன் குழந்தைகளையும் குடும்பத்தையும் காக்க விரும்புகிறான். இதே தன்மைகளை உடைய தொகுதி இதே இயற்கை-உணர்வை வெளிப்படுத்த முயலும்பொழுது, அதனைப் பரந்த பொருள்தருகிற தேச பக்தி என்னும் சொல்லால் குறிப்பிடுகிறோம். நாடு என்பது மானிடத் தொகுதிகளால் ஆனது ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் க்ஷேமத்தைப்பற்றியே கவலைப்படுகிறார்கள். தமது க்ஷேமத்திற்குக்கேடுவந்து விடுமோ என்று அஞ்சுகிறார்கள். ஒரு நாட்டில் வாழ்பவர் மற்றொரு நாட்டினரது க்ஷேமத்தைச் சிதைக்கத் துணியும்பொழுது, கோபம், தன்னயம், தற்காப்பு முதலிய பல இயற்கை உணர்வுகள் கலந்து தேச பக்திஎன்னும் மனோபாவமாகி வெளிப்படுகின்றன. இதுவே ஒரு தேசத்தாரின் வாழ்க்கைச் சீலமாகிறது.

நவீன நாகரிகப் போக்கே எண்ணிறந்த வாழ்க்கைச் சீலங்களால் ஆனது. தாய், தந்தை மக்கள் சமூகம், தேசம் முதலியவற்றைப் பற்றியும் தனித்தனி மனிதன் செய்கிற தொழில்களைப்பற்றியும் மனோபாவங்களைக்கட்டுத் திட்டம் செய்து, தமக்கே உரிமையாகக்கொண்ட சிறந்த இலக்கணங்களோடும், பொது விதி இலக்கங்களோடும் அமைகிற வாழ்க்கைச் சீலங்களை யாவரும் வகுத்துக் கொள்ளுகின்றனர். வாழ்க்கைச் சீலங்கள் எத்தகைய வெளித்தோற்றம் பெற்றாலும், அவற்றின் மூலையாகிய இயற்கை - உணர்வுகள் மாறுவன அல்ல. ஏனெனில், மனோ பாவங்கள் இயற்கை - உணர்வுகளை ஆதாரமாகக் கொண்டவை. இயற்கை உணர்வுகளைக் கட்டிக் காக்கின்றவை, கோபம் அன்பு, பயம் முதலான மனோவிகாரங்களேயாம். மனோவிகாரங்களோ ஒரு பொழுதும் மாறாதவை. மனோவிகாரங்கள் அனைத்தும் குழந்தைப் பருவத்திலேயே உருவாகின்றன. ஆதலால், குழந்தைப் பருவத்திலேயே மனோவிகாரங்களை வேரோடு பறித்தெறிவது விடுதலைக்குச் சிறந்த மார்க்கமன்று; அவற்றைத் திருத்தி அமைப்பதே சிறந்த மார்க்கமாகும்.

மனோவிகாரங்களைத் திருத்தி அமைப்பதின் மூலமாகவே, பக்தி, தியாகம், ஆன்மசக்தி முதலியவற்றை உண்டு பண்ணுகிற வைராக்கியம், துணிவு, குறிக்கோள்களு மாகிய சிறந்த குணங்களை உருவாக்க வழி ஏற்படுகிறது. குருட்டுத்தனமாக மனோவிகாரங்களைப் பறித்தெறிந்தால் குழந்தைகள் மரப்பொம்மைகள் போல் நிற்பார்கள். நாம் சும்மா இருக்கும் ஒரு கொலுப்பொம்மை உலகத்தைப் படைக்கக் கருதுவோமாயின், குழந்தை வளர்ப்பைப்பற்றி எவ்வித முயற்சியும் கவலையும் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. நமது குறிக்கோள் வெகு மாட்சிமையானது:— தேசத்திலே பிறக்கிற ஒவ்வொரு குழந்தையின் மூர்த்தி-விசேஷமும் சிறந்து விளங்கவேண்டும்; சிறந்து விளங்குகிற எண்ணிறந்த மூர்த்தி - விசேஷங்களும் தன்மயங்களும் திரண்டு தேச மக்களினிடையே உருக்கொள்ளவேண்டும்; சீரிய தன்மயங்களும் மூர்த்தி - விசேஷங்களும் நிறைந்த ஒப்பற்ற வைப்பாக நமது தேசத்தை மாற்றவேண்டும். இத்தகைய உயர்பெரும் குறிக்கோளை யன்றோ கொண்டிருக்கிறோம்? இக்குறிக்கோளை முற்றிலும் கெடுத்து விடுகிற தடியடி முறைகளையும், முறுக்கல் முறைகளையும் அடக்குமுறைகளையும் கையாளுவது மக்களை வளர்க்கும் கலைக்குத் தகுதியாக இராது. 'நெஞ்சில் உரமும் இன்றி, நேர்மைத் திறமும் இன்றி' வஞ்சனை பழுத்த மனமும், கூட்டத்தில் கூடி நின்று பிதற்றுகிற அச்சமும், பேடித்தனமும், அடிமை இயல்பும் குடி கொண்ட உள்ளமும், ஊக்கமும் உள் வலிமையும் உண்மைப் பற்றும் இல்லாத மனநிலையும் பொருந்திய வருங்கால இந்திய சமூகத்தை அமைக்க விரும்பாத பெற்றோர் அனைவரும் குழந்தைகளை அடித்து முறுக்கி வளர்த்தலை அறவே தவிர்க்கவேண்டும்.

மனோவிகாரமும், மன அயர்வுப் புலனும்

இவ்வத்தியாயத்தை முடிக்குமுன், குறிப்பிட வேண்டிய மிகவும் முக்கியமான கருத்து ஒன்று உளது. குழந்தையின் தன்மயத்தையும் மூர்த்தி - விசேஷத்தையும் ஆக்கி அமைக்கவல்ல. ஆதி மனோ விகாரங்கள் எவை

என்று பார்த்தோம். உணர்வுத் தெளிவுப் புலத்தில் தொடங்குகிற இந்த மனோ விகாரங்களுக்கு போக்குவாய் ஒன்று அமையவேண்டும் என்றும் உணர்ந்தோம். அணிலுக்கு ஏற மரமும் வேண்டும். அலப்பு வாயனுக்குப் பேச்சுத் துணைவனாக ஓர் ஆளும் வேண்டும். உணர்வு-தெளிவுப் புலத்தில் உதயமாகிற மனோவிகாரங்களுக்கு அப்புலத்திலேயே போக்குவாய் ஏற்படாவிட்டால், அவை குணச்சிக்கல்களாகி மன அயர்வுப் புலத்தில் அடங்கிவிடும்; அங்கே தமக்குப் போக்கு வாயையும் தேடிக் கொள்ளும். உணர்வு தெளிவுப் புலத்தின் ஆட்சி-எல்லைக்கு அப்பாலிருக்கும் மன அயர்வுப் புலத்தில் பதுங்குகிற மனோவிகாரங்கள் கனவுகளிலும் தெளிவின்றித் தெரியாமல் செய்யும் செயல்களிலும் போக்கு வாய்களைத் தேடிக்கொள்கின்றன. மன அயர்வுப் புலத்தில் ஒடுங்கி வழக்கத்திற்கு மாறான போக்குவாயைத் தேடிக் கொள்ளவேண்டிய நெருக்கடிக்கு ஆளாகிற மனோவிகாரங்கள் மிகவும் ஆற்றல் பெற்றிருந்தால், அவை ஓர் ஆளின் மன நடு நிலைமையைக் குலைத்துவிடும். ஆகவே, சிக்கலான மனோவிகாரத்தை மன அயர்வுப் புலத்தில் அடக்கி மன நடுநிலையை இழந்து தன்மயக் கோளாறுகளால் துன்பப்படுவதைவிட அத்தகைய மனோவிகாரங்கள் ஒருவனிடம் தோன்றாமல் இருக்குமாறு அவனைக் குழந்தைப் பருவமுதலே பழக்குவதுதான் சாலச் சிறந்த முறையாகும்.

5. குழந்தையும் குடும்பமும்

அடைக்கலமென்று வந்தவனுக்கு அபயம் அளிப்பது அன்றோ மானிட இயல்பு? சூரிய குலத்தில் உதித்த சிபி என்னும் மன்னன் ஒருவனே இவ்வியல்பிற்கு உரியவன் எனக் கருதவேண்டாம். இவ்வியல்பு மானிடர் யாவரிடத்திலும் விளங்குவதேயாம். நமக்கு ஏதேனும் வினையொன்று விரைவில் ஆகவேண்டும் என்றிருந்தால், அவ்வினைக்கு உதவி புரியும் ஆற்றல் உடையவன் எத்தகைய கீழ்மகனாயினும், அவனை அடுத்து முறைப்படி வேண்டினால், தன்னாலானதைச் செய்வான். "உம்மையே நம்பி வந்தேன் ஐயா! உம்மை அன்றிப் புகல்வேறில்லை' என்று கூறும்பொழுதே அவனும் அகமகிழ்ந்து நாம் விரும்பியதைச் செய்ய ஆவல் உடையவனாகிறான்.

"உதவி நாடி வந்தேன் ஐயா!" என்று வாயைத் திறந்து கேட்பதனாலேதான் ஒருவனிடத்தில் உதவி செய்யும் மனப்பான்மையைத் தோற்றுவிக்க முடியும் என்றுகருதுவது தவறாகும். வாய்திறந்துகேளாமலே ஒருவனிடத்தில் உதவி புரியும் மனப்பான்மையை எழுப்பிவிட முடியும். நால்வர் கூடிய அவையில் ஒருவனால் நமக்கொரு காரியம் ஆகவேண்டுமாயின் அவனிடத்தில் காண்கிற ஏதோ ஒரு திறமையை மெச்சிப் பேசுங்கள். அப்பொழுது நிகழ்வதைப் பாருங்கள். புகழ்ச்சி - மொழிகள் அவனது செவியில் பட்ட அளவிலே, தன் திறமை திராணிகளை மறந்து, தன்னை உச்சாணிக் கொம்பில் நிற்பவனாகக் கருதுகிறான்; தன்னைப் புகழ்ந்தவரைத் தாழ்ந்த நிலையில் இருப்பவராகக் காண்கிறான்; குழந்தைப் பருவத்திலிருந்து பிறரது உதவியை நாடி நின்ற இவன் புகழ்ச்சிகளைக் கேட்ட அளவிலே, மிகப் பெரிய காரியங்களைச் செய்யும் ஆற்றலுடையவனாகத் தன்னைக் கருதிவிடுகிறான். இவன் அற்பச் சிறு தேவைகளையும் தானே தேடிக்கொள்ள முடியாமல் பிறருதவியை நாடுகிற நிலையில் இருந்தவன்; தன் தேவைகள் அனைத்திற்கும் தாயே தஞ்சமென்று கிடந்தவன்; இன்று தன்னைச் சிபிச் சக்கரவர்த்தி என்று

கருதும் நிலையை அடைந்துவிட்டானே! இதில் அதிசயம் ஒன்றும் இல்லை. தாயின் அருளைப் பெற்று வளர்ந்தவர்களே உலகில் தோன்றிய மகா வீரர்களும், மேதாவிகளும் ஆவர். மனிதனுக்கு வாய்க்கிற முதல் உறவு, தாயுறவேயாம். இத்தாயுறவிலிருந்தே எண்ணிறந்த குணங்கள் தோன்றுகின்றன. தாயோடு ஒட்டிக்கிடக்கிற குழந்தையின் உள்ளத்தில் இந்த உறவால் தோன்றுகிற குணங்களைச் சிந்தித்துப் பார்க்கலாம்.

தாய்க் குரங்கோடு ஒட்டிக்கிடக்கும் குட்டிக் குரங்கு

பிறந்த குட்டிக் குரங்கு சில நாட்கள் வரைக்கும் தாயின் வயிற்றைக் கட்டிக்கொண்டிருக்கும். தாயைப் பற்றிக்கொண்டு கிடக்கிற குட்டி எளிதில் தாயைவிட்டு அகல்வதில்லை. தாய்க் குரங்கும் தன் வயிற்றைக் கட்டிக்கொண்டு கிடக்கிற குட்டியோடு கிளைக்குக் கிளை தாவும்; ஓடும்; நடக்கும்; இருக்கும்; கிடக்கும்; தான் வருந்திப்பெற்ற பிள்ளைச் சுமையை விடாப்பற்றெனத் தாங்கித் திரியும். மனிதக் குழந்தையிடத்திலும் இந்தக் குணமே முதன் முதலில் சிறந்து விளங்குகிறது. வாழ்க்கை தொடங்குகிற முதல் ஆண்டுகளில் தாயோடு ஒட்டிக் கிடந்து தனக்குத் தேவையான நலன்களை எல்லாம் பெறுகிற குழந்தைக்கு நாட்கள் செல்லச் செல்ல தந்தையோடு பற்று ஏற்படுகிறது. பின்பு குழந்தைக்குத் தாயோடும் தந்தையோடும் எங்கும் அலைந்து திரிவதிலே தனி விருப்பம் ஏற்பட்டுவிடுகிறது. இவ்விருப்பத்தால் குழந்தை தாயின் முன்தானையைப் பற்றிக்கொண்டு சமையல் அறையை விட்டு அகலாது திரிகிறது. பெற்றோர்க்கும் குழந்தைக்கும் ஏற்படுகிற இந்த ஆரம்பத் தொடர்ச்சி பிற்காலத்தில் பலவகையான மனோவிகாரங்களுக்குக் காரணமாகிறது. மக்களை வளர்க்கும் கலையில் இந்த முதல்உறவுகள் ஆராய்ச்சிக்குரியவை.

ஈடிப்பஸின் சரிதை

லேயஸ் என்பவன் கிரேக்க நாடுகளில் ஒன்றாகிய தீபெஸுக்கு அரசனாக இருந்தான். இந்த அரசனுக்கு

ஒரு மகன் பிறந்தான். அப்பொழுது கோள்நிலை கண்டு, வருவது உரைக்கும் நிமித்திகர்கள் அரசனிடம், "உன் மைந்தன் உன்னைக் கொல்வான்" என்றனர். உடனே, அரசன் தன் மகனைக் கொல்வதற்கு ஏற்பாடு செய்து அவனைக் கொலையாளிகளிடம் ஒப்படைத்தான். கொலையாளிகள் அவனைக் கானகத்தில் ஒரு மரத்தில் தலை கீழாகக் கட்டித் தொங்க விட்டார்கள். அந்தக் காட்டில் ஆடு மேய்த்துவந்த ஒரு இடையன் மரத்தில் ஒரு குழந்தை தலை கீழாகத் தொங்குவதைக் கண்டு எடுத்துத் தன் வீட்டுக்குக் கொண்டு போய் வளர்த்து வந்தான். அச் சிறுவனுக்கு ஈடிப்பஸ் என்று பெயரிட்டான். அவன் இடையனது மகனாக வளர்ந்து திடகாத்திரமும் பேராற்றலும்உடையவனாக விளங்கினான். அவனுடைய நண்பர்கள் அவனை அநாதை என்று கேலி செய்தபடியால் அவன் ஒரு நாள் டெல்ஃபி தேவாலயத்தில் இருந்த நிமித்திகனிடம் குறி கேட்கச் சென்றான். அந்த நிமித்திகன், "தந்தையைக் கொன்று, தாயை மணப்பாய்" என்று கூறினான். ஈடிப்பஸ் தன்னை வளர்த்த இடையனையே தான் கொல்ல நேரிடும் என்று கருதி, இடையனுடைய வீட்டுக்குத் திரும்பாமல் தீபஸுக்குச் செல்லும் பாதை வழியாகப் போனான். அந்த இடுக்கமான பாதையில் தீபஸ் மன்னனும் அவனுடைய அவையைச் சார்ந்த பிரதானி ஒருவனும் எதிர்ப்பட்டனர். அவர்கள் வழி விலகுமாறு ஈடிப்பஸிடம் கேட்டபொழுது, இளைஞன் முடியாதென்று மறுத்தான்; உடனே சண்டை மூண்டது. ஈடிப்பஸ் இருவரையும் கொன்றான்! பின்பு தீபஸுக்குச் சென்று அங்கே வாழ்ந்தான், அவன் தீபஸில் இருந்தபொழுது, பாதி உடல் பெண்ணுருவும், பாதி உடல் சிங்க உருவமாகத் திரிந்த ஃபின்ஸ் என்னும் மிருகத்தால் நாட்டுக்கு வந்த தீமையைத் தீர்ப்பவர்க்கு முடிசூட்டுவதாக நகரத்தார் தீர்மானித்தனர். அதைக் கேட்ட ஈடிப்பஸ் அந்த ஃபின்ஸ் கூறிய விடுகதையை விடுவித்து, அதைக் கொன்றான். அப்பொழுது நகரத்தார் அவனைத் தீபஸுக்கு அரசனாக்கி முடிசூட்டினர். ஈடிப்பஸ் லேயஸ் மன்னனுடைய மனைவியைத் தன் தாய்

என்று அறியாமல் மணந்தான். அண்டிகோன் என்றொரு மகளும் போலினீஸஸ், இடியோக்ளஸ் என்றிரு ஆண்மக்களும் பிறந்தனர். இந்தக் கதையின் நாயகனாகிய ஈடிப்பஸ் தன் தாயை மணந்தமையைக் காரணமாக்கி, உளநூல் வல்லார், தாய்க்கும் குழந்தைக்கும் ஏற்படுகிற காதலை, [1] ஈடிப்பஸ் மனச் சிக்கல் என்று குறிப்பிடலாயினர்.

குழந்தையின் முதற் காதல்

முதல் தேவைகளால் ஆண் குழந்தைக்கும் பெற்றோருக்கும் ஏற்படுகிற மனோவிகாரத் தொடர்புகள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. "என் குழந்தை என்னை விட்டு ஒரு கணமும் பிரிந்திருக்க மாட்டான்" என்று தாய் பெருமையாகக் கூறித் தனி இன்பம் அடைகிறாள். தாய்க்கு ஆண் குழந்தையை விட்டுப் பிரிய முடியாது. குழந்தைக்கும் தாயை விட்டுப் பிரிய முடியாது. இருவரும் பிரிவாற்றாமையால் துயர் உறுவார்கள். இருவரும் ஒட்டிக் கிடந்து இன்பம் அடைவார்கள். தாய், ஆண்மகவு ஆகிய இருவரிடத்திலும் தொடக்க ஆண்டுகளில் காணப்படுகிற இன்பத் தொடர்பு நாடோறும் ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரோடிவிடும். தாய் தனக்கே சொந்தமாய், தன் அன்பிற்கே உரியவளாய், தன்னோடு எப்பொழுதும் இருக்க வேண்டும் என்பதே ஆண்மகவின் விருப்பமாகிறது. தாய்க்கும் தன் குழந்தை தன்னோடு எப்பொழுதும் இருக்க வேண்டும் என்ற ஆசை வலுத்துவிடுகிறது.

இத்தகைய மனப்பான்மை குழந்தையிடத்தில் தோன்றும்பொழுது, ஒருவன் தந்தை என்று உறவு சொல்லிக்கொண்டு தாயிடத்தில் உரிமை பாராட்டுவதைக் குழந்தை சகிக்கமாட்டான். "என் தாய் எனக்கே சொந்தம்; எனக்கு இன்பம் தரும் பொருள். எனக்கன்றோ தாயிடத்தில் முழு உரிமையும் உண்டு. இதைச் செய், அதைச் செய் என்றெல்லாம் என் தாய்க்குக் கட்டளையிடுகிற இப்புது மனிதன் யார்?"—என்ற சிந்தனைகள் குழந்தையின் உள்ளத்தில் எழுகின்றன. அப்

1. ஈடிபஸ் மனச்சிக்கல்—*Œdipus complex.*

பொழுது, குழந்தை தன் தந்தையிடம் கோபத்தை வெளியிடுகிறான். தாய் தன் கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து தன் காதலை வெளியிடும்பொழுது, குழந்தையின் உள்ளத்தில் தந்தைபால் பொறாமை ஏற்படுகிறது. நான்கு, ஐந்து வயதுக்குள் ஆண் குழந்தைகள் இத்தகைய பொறாமையைத் தமது தந்தையர்மீது காட்டத் தொடங்கி விடுகிறார்கள்.

நான்கு வயதான நாராயணன் ஏராளமான வருமானம் உடைய ஒரு தனிகனின் முதல் குழந்தை. தாய்க்கும் குழந்தைககும் முன்னே குறித்த அன்புத் தொடர்பு ஏற்பட்டு விட்டது. நாராயணனுடைய பாட்டி நெடு நாளாக நோய்வாய்ப்பட்டு இறந்தாள். இறந்தவளை எடுத்துக் கொண்டு போவதை நாராயணன் பார்த்தான். அன்றிரவு அவன் தன் தாயிடம், "பாட்டி எப்பொழுது வருவாள் அம்மா?" என்று கேட்டான். "பாட்டி போய் விட்டாள்; இனிமேல் வரமாட்டாள்" என்றாள் தாய். இந்தச் சம்பாஷணை நிகழ்ந்து சில தினங்கள் சென்றன. ஒரு நாள் தாய் குழந்தைக்குப் படப் புத்தகம் காட்டிக்கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் தந்தை வரவே, தாய் கணவனுக்குப் பணிவிடை செய்ய எழுந்து சென்றாள். அடிக்கடி தந்தையின் பொருட்டுத் தாய் தன்னை விட்டுப் பிரிவதை நாராயணனால் சகிக்க முடியவில்லை. அன்றிரவு நித்திரைக்குச் செல்லுமுன் வழக்கப்படி தாய் குழந்தைக்குக் கதை சொல்லப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். அப்பொழுது நாரயணன் தாயிடம், "அம்மா, பாட்டியைக் கட்டி அனுப்பினமாதிரி அப்பாவையும் கட்டி அனுப்பி விடுவோமே" என்றான். இதைக் கேட்டதும் தாய் கல்லுருவாய் நின்றாள். முதலில் குழந்தையின் முதுகில் ஓர் அடிவைத்தாள். "பைத்தியமே, அப்பா இல்லாவிட்டால் நம் கதி என்ன ஆகும்?" என்றாள்.

குழந்தையின் மனப்பான்மையை அறியாத அன்னையர் செய்கிறவாறே நாராயணனுடைய தாயும் செய்தாள். குழந்தையின் உள்ளக் கிடக்கையைத் தாய் அறியவில்லை. குழந்தைக்குத் தன் அறிவு தோன்றிய நாள்

முதலாக நான்கு அல்லது ஐந்துவயது வரைக்கும் தாயே அதன் உலகம். ஆண் குழந்தைகளுக்குத் தாயே காதலி. பருவம் அடைந்த ஆண் பெண்கள் சந்தான வேட்கை யாகிய இயற்கை உணர்ச்சியால் ஒருவரை ஒருவர் காமுறும் பொழுது வழங்குகிற காதல் என்னும் சொல், குழந்தைக்குத் தாயிடத்தில் உள்ள அன்பிற்குப் பொருந்துமா என்று சிலர் கேட்கலாம்? குழந்தைக்கும் தாய்க்கும்உள்ள காதலில், ஆண்பால் பெண்பால் என்னும் வேற்றுமையால் ஏற்படும் பால்மய - உணர்வு கலந்திருப்பதாக எவருமே கருதலாகாது. "நின்தனை உருகி உள்ளம் உருகும் பெருங் காதல் உடையார் உடையாய்" என்றும், "காலம் உண் டாகவே காதல் செய்து உய்ம்மினே" என்றும் மாணிக்க வாசகர் கூறுவது போல், இறைவன்பால் அடியார்கள் பாராட்டுகிற காதலுக்கே தாய் - குழந்தைத் தொடர்பில் எழுகிற காதலை ஒப்பிடவேண்டும். "காதலர் சொல்லும் கடுஞ்சொல் உவந்து உரைக்கும் ஏதிலார் இன்சொல்லில் தீதாமோ?" என்ற நாலடிப்பாவில் வருகிற காதல் என்னும் சொல்லில் பால்மயக் கலப்புத் தொனிக்கிறதோ? இல்லை. அளவற்ற பிரேமை என்ற பொருளிலேயே காதல் என்ற சொல்லைக் குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள அன்பிற்கு வழங்குகிறோம்.

குழந்தையின் காதலுக்கு உரியவள் தாய். குழந்தையின் இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதவள் தாய். குழந்தை, உலகில் தோன்றிய பொழுது, முதன் முதலில் உணவு - இன்பம் ஒன்றையே அனுபவித்தது. இந்த இன்பத்தைக் குறைவின்றி அளித்தவள் தாய். உணவு இன்பத்திற்கு அடுத்திருப்பது தொடுகை-இன்பம். இந்த இன்பத்தைத் தந்தவளும் தாயே. ஒன்றிய மனநிலை என்பது மற்றொரு வகை இன்பமாம். இதனைத் தாயிடத் திலேதான் குழந்தை பூரணமாக அனுபவித்தான். காதல் என்ற மொழிக்கு அகன்ற பொருள்கள் பல உள்ளன. பால்மயத்தைச் சுட்டுதல், அந்த மொழிக்கு அமைந்த குறுகிய பொருளையே சாரும். நாயக நாயகி பாவத்திலே, சந்தான உற்பத்தி வேட்கை ஏற்படும்

காலத்தில் எழுகிற காமம், காதலின் கடையான அங்கமாக அமைகிறது. பருவம் அடைந்த ஆண் பெண் இரு பாலாருக்குள்ளும் ஆதியில் ஏற்படும் அன்புத் தொடர்பில் சந்தான உற்பத்தி வேட்கைக்காரணமாக எழுகிற காமமே தலையாக இருக்கும். நெடுங்காலம் கணவனும் மனைவியுமாக மனம் ஒன்றி வாழ்ந்து மக்களைப் பெற்று இல்லறம் ஓம்பியவரிடத்திலே தான் உண்மையான காதல் விளக்கமாகிறது. நவீனப்புனைக் கதைகளில் 'காதல் காதல்' என்று சிறப்பிக்கிறவை அனைத்தையும் சங்க காலத்துப் புலவர்கள் 'காமம்' என்ற மொழியாலேதான் சுட்டியிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் நன்றாய் ஆய்ந்து உணர்ந்தவர்கள், கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்படுகிற காதல், தாய்க்கும் குழந்தைக்கும் ஏற்படுகிற காதல் ஆகிய இரண்டிற்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதைக் காண்பார்கள். இங்ஙனம் ஆய்ந்த உளநூல் வல்லார் சந்தான உற்பத்தி - வேட்கையாகிய காமத்தைக் காதலோடு தொடுக்கமாட்டார்கள்.

குழந்தைக்கு இன்பங்களனைத்தையும் தருகிறவள் தாய். தாய்க்கு இன்பங்களை எல்லாம் தருகிறவன் குழந்தையே. பெண் ஒருத்தி விவாகமான நாள் முதலாகத் தன் கணவனையே காதலித்தவள். குழந்தை பிறந்த நாள் முதல் தன்னையும் தன் காதலையும் இரு கூறாக்கிப் பிள்ளைக்கு ஒரு பாதியும் கணவனுக்கு மற்றொரு பாதியுமாகப் பங்கிட்டுக் கொடுக்கத் தொடங்குகிறாள். தாய்க்கும் குழந்தைக்கும் அதிசயமான காதல் உறவு ஏற்படுகிறது. இதை அன்புத்தளை என்று குறிக்கிறோம். தன் இன்பங்களுக்கெல்லாம் வருவாயாக இருப்பவளே தாய் என்று உணருகிற குழந்தை, பால் மறந்த காலத்தில் பிணிவாய்ப் பட்டாலும், துன்புற நேர்ந்தாலும், தாயின் ஆதரவையும், அரவணைப்பையும், பராமரிப்பையும் பெறும்பொழுது, தாயிடத்திலே கொண்ட காதல் ஓங்கி வளருகிறது. இதனை **உத்தமக் காதல்** என்றே கூறவேண்டும்.

அன்பிற்கு உபலட்சணமாக விளங்குவது பொறுமை. இந்தப் பொறுமைக்கு இடந்தரும் செயல்களைக் காதலரில்

எவரேனும் விளைப்பாராயின், இன்னல் தருகிற சிந்தனைகள் எழும். குழந்தையின் பொறாமை தந்தைபால் திரும்புவது இயல்பு. "நானும் என் தாயும் இன்புற்றிருக்கவேண்டும். தந்தை எங்கேயாவது ஒழிந்து போக வேண்டும்." இந்தச் சிந்தனையைக் குழந்தை வாய்விட்டுச் சொல்லாது. இதைச் சொல்லவும் குழந்தைக்குத் தெரியாது. அப்படியே அதை உணர்த்தும் சொற்களோ செயல்களோ வெளிப்பட்டால் குழந்தைக்கு அடிதான் கிடைக்கும். ஒருமுறை அடிபட்டால், அந்த அடி, பின்பு தோன்றும் பொறாமைக் குணத்தை முற்றிலும் மறைத்து வைக்கும் பொருட்டுப் பல உபாயங்களை நாடுவதற்குப் போதிய சக்தியாக மாறுகிறது.

தாய் ஆண் குழந்தைக்கு அன்பின் உறைவிடமாக அமைந்தாலும், தந்தை அவனுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக விளங்குவார். தந்தையின் திட உடலும், கம்பீரமான குரலும், ஆண்மை, வீரம், வலிமை, அதிகார தோரணை முதலியனவும், தாயிடத்தில் அவர் பாராட்டுகிற அன்பும் உரிமையும் பிறவும் குழந்தையின் குறிக்கோளின் சிகரங்களாக விளங்குவனவாம். தந்தைபால் விளங்குகிற இந்தத் தன்மைகளைக் குழந்தை வியந்து கொண்டாடுகிறான். குழந்தை தன் தாயிடம் பேசிப் பொழுது போக்குகிற நேரங்களில், "அப்பாவைப் போல் நான் ஆனால், உனக்கு அதைச் செய்வேன், இதைச் செய்வேன்" என்றெல்லாம் கூறுகிறான். எனினும், பொறாமை எழுங்கால், தாயிடத்தில் முன்னிலும் அதிக அன்பும் தந்தைபால் முன்னிலும் அதிகப் பகையும் வளர்கின்றன.

புறத் தோற்றத்திலே காண்கிற குழந்தைக்குள்ளே பல தன்மயங்கள் உருவாகி வருகின்றன. ஒரு குழந்தைக்குள் பல தன்மயக் குழந்தைகள் வளருகிறார்கள் என்றே கூறலாம். ஒரு தருணம் புறத்தோற்றமான குழந்தைக்குள் இருக்கும் ஒரு தன்மயக் குழந்தை தந்தையிடத்தில் வியப்பையும் அன்பையும் பொழிகிறது. மற்றொரு தருணம் மற்றொரு தன்மயக் குழந்தை வலுக்கொண்டு எழுந்து பொறாமையால் சினந்து எரிகிறது. இவ்வகையான

குணக்கோளாறுகள் ஆண்குழந்தைகளிடத்தில் நான்கா வதுவயதில் வெளிப்படுவன. இத்தகைய மனோவிகாரங்கள் குழந்தைகளிடத்தில் தோன்றுதவாறு அவர்களைக் காக்கும் கடமை உடையவர்கள் பெற்றோர்களே. இந்தக் கோளாறுகளை எந்த உபாத்தியாயரும் திருத்த முடியாது. இவற்றை நீக்கும் பொருட்டுக் குழந்தையைக் கடிந்து கோல் கொண்டு திருத்துதல் கொடிது. கோல் கொண்டு இக்குணக் கோளாறுகளைத் திருத்த முயன்றால், 'பிள்ளை யார் பிடிககக் குரங்காய் முடிந்தது' என்னும் கதையாகி விடும். இதனைத் திருத்தும் பொருட்டுக் குழந்தையைக் கடிவதாலும் அடிப்பதாலும் விளைவதைச் சிந்தித்துப் பாருங்கள்!

மன அயர்வுப் புலத்தில் நிகழும் நாடகம்

மனம் உலவித் திரிந்து வினை ஆற்றும் நிலைகளை இரண்டு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். 1. **உணர்வு தெளிவுப் புலம்.** 2. **மன அயர்வுப் புலம்.** முன்னே குறித்த காதலும், பொறாமையுமாகிய மனோவிகாரங்கள் உணர்வு தெளிவுப்புலத்தில் உதயமாகின்றன. உணர்வு தெளிவுப்புலத்தில் உதயமாகி உணர்வு தெளிவுப் புலத்திலே வெளிப்பட முடியாத மனோவிகாரங்கள், பெற்றோர் குழந்தையை அடித்துத் திருத்த முயலும்பொழுது, மன அயர்வுப் புலத்தில் அடங்கி ஒடுங்கிவிடுகின்றன. இந்த விகாரங்களை மறந்து விடலாம் என்றாலோ மனத்திற்கு இன்பம் தருவனவாகையால் இவற்றை விட்டுவிட விருப்பம் இல்லை. பகைவனைத் தண்டித்தால் அல்லவோ பொறாமையும் கோபமும் தணியும்? உணர்வு தெளிவுப் புலத்தில் வெளிப்பட முடியாமல் தத்தளிக்கிற மனோவிகாரங்களுக்குச் சிறந்த புகலிடமாக இருப்பது மன அயர்வுப் புலந்தான். ஏதேனும் ஒரு மனோவிகாரம் மன அயர்வுப் புலத்தில் புகுந்து விட்டால், மனம், உலகத் தொடர்பு அற்றுச் சுயேச்சையாகச் சுற்றித் திரிகிற உறக்க நிலையில் திருப்தி அடையாத ஆசைகளையும் மனோவிகாரங்களையும் கனவுகளாகத் தோற்றுவித்து, உணர்வு தெளிவுப் புலத்தில் அடைய விரும்பிய இன்பங்களை அனு

பவிக்கும். இதுவே, மனத்தின் மறைவில் நிகழ்கிற இயற்கை-நாடகம். இதனை மனத்தின் அந்தரங்க நாடகம் எனவும் குறிக்கலாம்.

உணர்வு தெளிவுப் புலத்தில் நிறைவேறாத ஆசைகளையும் மனோவிகாரங்களையும் மன அயர்வுப் புலத்தில் அடக்கி வைத்துக்கொண்டிருக்கிற குழந்தைகள் அதிசயமான கனவுகளைக் காண்பார்கள். பேய் பிசாசுகளை விரட்டி அடிப்பது போலவும், பெரிய இராக்ஷசர்களை வெட்டி வீழ்த்துவது போலவும், கனவு காண்பார்கள்; தம்மையே இந்தச் சாகசச் செயல்களின் வீரராகவும் காண்பார்கள்; கனவு உலகத்தில் தந்தைக்குத் தீங்கு செய்வார்கள்; தந்தை படுத்திருக்கும் மெத்தையில் ஊசிகளைத் தைத்து வைப்பதுபோலவும், அவரது அருமையான ஊற்றுப் பேனாவை உடைத்தெறிவதுபோலவும், அவர் அருமையாகப் போற்றி வைத்திருக்கும் உடையில் மையை ஊற்றுவதுபோலவும் கனவு கண்டு மகிழ்வார்கள். இவ்வினைகள் உணர்வு தெளிவுப்புலத்தில் நிகழுமாயின், குழந்தையின் உள்ளம் பச்சாத்தாபப் படுவதுபோல் நடிக்கும். இவ்வாறாக, ஒரே குழந்தைக்குள் இரண்டு தன்மயங்கள் இயங்குவதைக் காணலாம். இவ்விரு தன்மயங்களும் உணர்வு தெளிவுப் புலத்தில் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டிருக்கும். ஒரு குழந்தைத் தன்மயம் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்ய முயன்றால், மற்றொரு குழந்தைத் தன்மயம், “அப்படிச் செய்தால் நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்” என்று பயமுறுத்தும். குழந்தைப் பருவத்தில் ஏற்படுகிற இத்தகைய குணக்கோளாறுகள் பிற்காலத்தில் எளிதில் சமாளிக்க முடியாத குணச் சிக்கல்களாக முடிவுறும். சில பயங்கரமான குணச் சிக்கல்கள் ஒருவனைப் பைத்தியக்காரர்களுக்காக வைத்திருக்கும் வைத்தியசாலைக்கே உரியவனாக்கிவிடலாம். தாய்க்கும் குழந்தைக்கும் ஏற்படுகிற ஆதி உறவின் வளர்ச்சிப் போக்கு, பிற்காலத்தில் பெற்றோருக்கும் குழந்தைக்கும் ஏற்படும் ஒற்றுமை வேற்றுமைகளுக்குக் காரணம் ஆகின்றன. குழந்தைகள் பெரியவர்களாகிற பொழுது,

தமது பெற்றோரைக் கைவிடுவதன் இரகசியம் முழுவதும் தாய்க்கும் குழந்தைக்கும் ஏற்படுகிற தொடக்கத்தொடர் பிலேதான் அடக்கமாக இருக்கிறது.

எலக்டிராவின் சரிதை

மெனிலாஸ் என்பவன் ஸ்பார்ட்டா நாட்டுக்கு அரசனாக இருந்தான். அவனது மனைவியாகிய ஹெலன் என்பாள் அந்நாட்களில் தன்னிகரில்லாப் பேரழகியாக விளங்கினாள். டிராய் நகரத்தை ஆண்டு வந்த ப்ரயம் என்பானது புதல்வனான பாரிஸ் என்னும் இளவரசன் வஞ்சகத்தால் ஹெலனைக் கவர்ந்துகொண்டு, தன் நாட்டுக்குச் சென்றான். கிரேக்க மன்னர்கள் சினந்து எழுந்து டிராய் நகரத்து அரசனையும் பாரிஸையும் தண்டிக்க வேண்டுமெனக் கருதினர். கிரேக்க மன்னர்கள் யாவரும், மிஸெனியை ஆண்டு வந்தவனும், மெனிலாஸின் உடன்பிறந்தவனுமான அகமெம்னனைத் தலைவனாகக் கொண்டு போருக்கு எழுந்தனர்.

அகமெம்னனது மனைவியான கிளெடெம்னெஸ்ட்ரா என்பாளுக்கு இஃபிகெனியா, எலக்டிரா என இரு புதல்வியரும் ஓரெஸ்ட்டெஸ் என்றொரு புதல்வனும் தோன்றினர். போருக்கு எழுந்த அகமெம்னன் கடவுளரின் சினத்தை ஒழிக்கவும், தான் போரில் வெற்றி பெறவும் கருதித் தன் மகளான இஃபிகெனியாவைக் கடவுளுக்குப் பலியிட்டான். இச்செயல் கிளெடெம்னெஸ்ட்ராவுக்கு ஆறாத் துயரத்தை அளித்தது. அகமெம்னன் டிராய் நகரை முற்றுகை இட்டிருந்த காலத்தில் அவனுடைய மனையாள் இகிஸ்தெஸ் என்பானைச் சோர நாயகனாகக் கொண்டு, தன் மகளைக் கொன்ற மன்னனைப் பழி வாங்கவேண்டுமென்று கருதினாள்.

எலக்டிரா என்பவள் சின்னஞ்சிறு பெண்ணாய் மழலை யாடிய பருவத்தினின்றே தன் தந்தைபால் அளவற்ற காதல் கொண்டிருந்தாள். தந்தையின் செயல்களெல்லாம் தகுதி என்றே அவளுடைய அன்பு - நிலைநோக்கில் துலங்கின. தாயின் துயரம் அவளைத் தொடவில்லை. தன் தந்தையாகிய அகமெம்னனை அன்னை மறந்து, இகிஸ்தெஸ்

என்பானுடன் களவொழுக்கத்தில் பொருந்தி வாழ்ந்து வந்தமை மிகப் பெரிய தவறென்றே அவள் கருதினாள்.

அகமெம்னன் வெற்றி வீரனாக நாட்டுக்குத் திரும்பி வந்தான். கிளெடெம்னெஸ்ட்ரா தன் காதலனோடு சேர்ந்து எலக்டிராவின் தந்தையைக் கொன்று விட்டாள். இந்தச் சூழ்ச்சி நிகழுமென்று முன்னரே அறிந்திருந்த எலக்டிரா தன் தம்பியாகிய ஒரெஸ்டஸை வேறொரு நாட்டில் மறைந்திருக்குமாறு செய்தனள். ஒரெஸ்டெஸ் வீரனாக வளரும் வரைக்கும் எலக்டிரா பொறுமையாக இருந்தாள். தம்பி பெரியவனாக வளர்ந்ததும், அவனோடு சூழ்ச்சி செய்து தன் தந்தையைக் கொன்ற தாயையும் அவளுடைய சோரநாயகனையும் கொன்று பழி தீர்த்துக் கொண்டாள்.

இக்கதையின் கதாநாயகியான எலக்டிரா என்பவள் தாயைப் பகைத்துத் தந்தைபால் அளவிறந்த காதல் உடையாளாய் இருந்ததை ஆதாரமாகக் கொண்டு, உள நூல் வல்லார் பெண் குழந்தைக்கும் தந்தைக்கும் ஏற்படுகிற அன்புத் தொடர்பினை [1] **எலக்டிரா மனச் சிக்கல்** என்று பாகுபாடு செய்து காட்டுகின்றனர். ஆண் குழந்தைக்கும் தாய்க்கும் ஏற்படுற உறவு கோணலாக அமையும் பொழுது, ஆண்மக்களின் மனத்தில் பலவகையான சிக்கல்கள் தோன்றுகின்றன. அவ்வாறே பெண் குழந்தைக்கும் தந்தைக்கும் உறவு கோணலாக அமையும் பொழுது, அப்பெண் மகவின் பிற்கால வாழ்க்கையில் பலவகையான மனச் சிக்கல்கள் தோன்றுகின்றன. இவ்விரு வகைச் சிக்கல்களையும் வாழ்க்கை நிகழ்ச்சியில் கண்ட இரண்டு உதாரணங்களால் விளக்கமாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஈடிப்பஸ் மனச்சிக்கலுக்கு ஓர் உதாரணம்

ராமமூர்த்திக்கு இரண்டு வயதாயிற்று, ஒரு நிமிஷம் கூடத் தன் தாயை விட்டுப் பிரிந்திருக்கமாட்டான்.

1. எலக்டிரா மனச்சிக்கல்—*Electra-complex.*

அவன் கட்டைகளை வைத்து வீடு கட்டுவான்; உடனே தாயிடம் ஓடிப்போய், "அம்மா, பாரு! ராமு கட்டின வீடு," என்று கூறித் தாயின் தாடையைப் பிடித்துத் திருப்புவான். தாய் உடனே "என் ராமு, தங்கக் கட்டி! கெட்டிக்காரன்! பெரியவனுகிற போது அம்மாவுக்குப் பெரிய வீடு கட்டித் தருவான்" என்பாள்; ராமுவைக் கட்டித் தழுவி முத்தம் இடுவாள். ராமுவுக்குத் திரும்பவும் தாயின் கொஞ்சுதலையும் மெச்சுதலையும் பெறவேண்டுமென்ற ஆசை கிளம்பிவிடும். உடனே மர யானையின் மேல் மரப் பூனையைத் தூக்கி வைத்துவிட்டு அம்மாவிடம் ஓடிப் போவான். "அம்மா பாரு, யானை மேலே பூனை ஏறிக் கொண்டிருக்கிறது" என்பான். ராமு என்ன செய்தாலும் தாய் மெச்சாமலும் கொஞ்சாமலும் இருக்கமாட்டாள். இப்படி ராமுவுக்கும், தாயாகிய குமுதத்திற்கும் ஏற்பட்ட அன்பு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

சண்பகவல்லி குமுதத்தின் தோழி. இவள் நாள் தோறும் நடுப்பகல் உணவு அருந்திய பிறகு குமுதத்தின் வீட்டுக்கு வருவாள். வரும்பொழுதெல்லாம் அவள் ராமுவினிடத்தில் ஒரு கேள்வி கேட்பாள்; "ராமு, நீ யாரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிருய்?" என்பாள். ராமு, "நான் என் அம்மாவைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்," என்பான். அவ்வாறு உரைத்த வண்ணமே தன் தாயிடம் ஓடிச் சென்று அவளைக் கட்டி அணைத்து முத்தம் இடுவான். தாயும் அவனைத் தழுவி மகிழ்ந்து சிரிப்பாள். சண்பகவல்லியும் விழுந்து விழுந்து சிரிப்பாள். 'கல்யாணம்' என்ற பதத்தில் அடங்கியிருக்கும் பால்மயப் பொருள் ஒன்றும் குழந்தைக்குத் தெரியாது. ஆனல், அவனுக்கு ஒன்று மட்டும் நன்ருகத் தெரியும். 'தன் தாயை அப்பா கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கிருர். அதனலேதான், அவளை அதிகாரம் பண்ணுகிருர். தானே தன் தாயைக் கல்யாணம் பண்ணிக்கொண்டுவிட்டால், தாய் தனக்கே சொந்தமாகிவிடுவாள். அப்பொழுது தந்தைக்குத் தாயிடம் எவ்வித உரிமையும் இல்லாமல் போகும்' என்பதுதான். இந்த அறிவு, பல

அனுமானங்களாலும், இரண்டும் இரண்டும் நான்கு என்பது போலக் குழந்தை நாள்தோறும் வாழ்க்கையில் கவனித்த சில நிகழ்ச்சிகளைக் கூட்டி சேர்த்தமையாலும் ஏற்பட்டதேயாம். குழந்தையின் மனத்தில் ஒரே ஆசை: தன் தாய் தனக்கே சொந்தமாகித் தன் தேவைகளைக் கவனிக்கவேண்டும்; எப்பொழுதும் தன்னோடு இருக்க வேண்டும் என்பதே. இதற்காகவே அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும். இதுவே குழந்தையின் உள்ளக் கிடக்கை. தாய் ராமமூர்த்தியின் உள்ளத்தில் இருந்த இந்தச் சிந்தனையைத் திருத்தவில்லை.

ராமமூர்த்தியின் தந்தை சுப்பிரமணியன். அவர் குழந்தையின் முன் குமுதத்தினிடம் சீறி விழுவார். எப்பொழுதும் 'கடுகடு வெடுவெடு' என்றிருப்பார். அவருக்குத் தமது மனைவியிடம் நெடுநேரம் பேசவும் பொழுது போக்கவும் பொறுமை கிடையாது. அதற்கு நேரமும் இராது. பக்கத்து வீட்டு நண்பரிடம் உலகச் சமாசாரங்களைப் பேசிப் பொழுது போக்கத்தான் அவருக்கு நேரம் உண்டு. காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வந்ததும், நாராயண ஐயர் வீட்டுக்குப் போய்விடுவார். வம்பளக்கும் பொருட்டு சாப்பிடுவதற்கும் நாட்கடன்களை முடிப்பதற்குமே தமது வீட்டுக்கு வருவார். கணவர் தன்னிடமிருந்து விடுபட்டு நின்ற நிலை குமுதத்திற்குச் சற்றுமே பிடிக்கவில்லை. விவாகமான முதல் ஆண்டுகளில் கணவர் தன்னிடமே பொழுது போக்கிய நாட்களைக் குமுதம் அடிக்கடி சிந்திப்பாள். அந்த நாட்களைத் தற்பொழுது தன் கணவனோடு வாழ்கிற நாட்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பாள். தன் கணவருக்குத் தன்னிடம் அன்பு குறைந்து விட்டதாக நினைத்துக் கொள்வாள். இந்தக் குறையைத் தீர்க்கப் பிறந்தவன் ராமு. அவன் உறவிலே அவளுடைய உள்ளம் பூரித்திருந்தது. அவனைச் சிங்காரிப்பதிலும், எங்கே சென்றாலும் அவனைக் கூடவே அழைத்துச் செல்வதிலும் அவளுடைய உள்ளம் மகிழ்ந்திருந்தது.

ராமு வளர்ந்தான். தாய்க்கும் மகனுக்கும் உள்ள அன்பும் வளர்ந்தது. ராமுவுக்கு வேண்டிய துணிமணி

எல்லாம் அவள்தான் வாங்குவாள். அவன் பள்ளிக்கூடத்திற்குக் கட்டிக் கொண்டு போகிறதற்காகத் துணிகளை அவளே சோப்புப் போட்டுத் தோய்த்து உலர்த்திவைப்பாள். கமலம் மூத்த பெண். தாய் அவளுக்காகச் செலவிட்ட நேரம் மிகக் குறைவு தான். கமலத்தின் நெஞ்சில் ராமுவிடம் தாய் பாரபக்ஷமாக இருக்கிறாள் என்ற எண்ணம் நெடு நாட்களுக்கு முந்தியே ஏற்பட்டுவிட்டது. தாய் என்ன வாங்கினாலும் ராமுவுக்குத்தான் வாங்குவாள். கமலம் அவனிடமிருந்து எதையும் தட்டிப் பறிக்கும் வித்தையை நன்றாய்க் கற்றுக் கொண்டாள். ராமுவைப் புகழ்ந்தால் போதும். எதையும் அவனிடமிருந்து வாங்கி விடலாம். இந்தப் பாடத்தைத் தாயே அவனுக்குச் சிறு வயது முதல் கற்றுக்கொடுத்திருந்தாள். ராமுவும் நாள்தோறும் தாயைத் தந்தையிடம் இருந்து பிரித்துக் கொண்டே போனான்.

ராமு பிறருடைய மெச்சுதலை அடைவதில் தனி விருப்பம் உடையவன். அதனாலே வகுப்பில் உபாத்தியாயருடைய மெச்சுதலை வெகுவாக நாடினான்; ஆகையால், வகுப்பில் பாடங்களை நன்றாய்ப் படித்தான்; எல்லா பரீக்ஷைகளிலும் முதல்வனாகத் தேறினான்; தாயின் மடிப் பிள்ளையாக வளர்ந்த ராமு வாலிபனானான். எத்தனையோ முறை தந்தை அவனுடைய கல்யாணத்திற்காகப் பெண் பார்த்தும், அவன் மணப்பதற்கு இசையவில்லை. 'எனக்கு எதற்காகக் கல்யாணம்?' என்பான். தாயும் அதை வற்புறுத்தவில்லை. தனக்கும் தன் மகனுக்கும் ஏற்பட்டிருந்த நெருங்கிய அன்பிற்கு இடையூறாக வேறு ஒருத்தி குறுக்கிடுவது அவளுக்கு இஷ்டம் இல்லை. மனைவியாக வருகிறவள் தன் தாய்க்கு அடங்கி நடப்பாளோ என்ற சந்தேகம் ராமுவுக்கும் பல தருணங்களில் எழுந்தது. அவனுடைய வாழ்க்கைத் தேவைகளுக்குத்தாயே போதுமானவளாக இருந்தாள். வாலிபத்திற்கு உரிய காமவிகாரங்கள் அவனுக்குள் இயல்பாகத் தோன்றினாலும், அவற்றைப் புத்தகம் வாசிப்பதாலும், பந்து முதலிய பொழுது போக்குக்களாலும் அடக்கிவிடுவான். அவன் பெண்களைக்

கண்டால் பேசக் கூசுவான். அவர்களிடம் ஏதாவது உத்தியோக முறையிலே பேச நேர்ந்தாலும் அவனுடைய முகம் நாணத்தால் சிவந்துவிடும். பெண்கள் கூடி இருக்கும் கூட்டத்தில் அவன் தலை காட்டமாட்டான். அப்படியே ஏதாவது ஒரு காரணம் பற்றிப் பெண்கள் இருக்கும் இடத்தில் தங்க நேர்ந்தாலும், பெட்டிப் பாம் பாக அடங்கி இருப்பான். வாயைத் திறக்கமாட்டான்.

உலகப் படைப்பு முறையைக் காக்கிற இயற்கைத் தத்துவங்களில் பால்மய விகாரங்கள் மிகச் சிறந்த நோக் கத்தின்பொருட்டு அமைந்துள்ளன; சந்தான வேட்கைஓர் உயிர்நிலையில் தோன்றுவதே இயற்கையான இயல்பாகும். இயற்கை விதிகளுக்கு மாறாக இதை அடக்கி ஆளுகிற உயிர்நிலையில் பல குணக் கோளாறுகள் தோன்றும். அப்படியே ராமுவிடத்திலும் பல சிக்கல்கள் தோன்றின. ராமு பெரிய உத்தியோகத்திற்கு வந்து விட்டான். அவனுடைய உறவினர்களும் நண்பர்களும் யாவரும், "ஏன் ராமு இன்னும் கல்யாணம்செய்துகொள்ளவில்லை?" என்று ஓயாமல் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார்கள். கேள்விகளுக்கு அவனல் பதில் சொல்லமுடியவில்லை. அவ னுடைய தாய்க்கும் இது பெரும் தொல்லையாக இருந்தது. தாய் தனக்கு விருப்பமான ஒரு பெண்ணைப் பார்த்து அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்தாள்.

சின்னஞ் சிறு வயதிலிருந்தே ராமுவின் காரியங் களைக் குமுதமே கவனித்துவந்தாள். மரகதம் ராமுவின் மனைவியாக வந்தபிறகும் தாய்தான் அவன் காரியங்களை எல்லாம் கவனித்து வந்தாள். ராமு வீட்டுக் கவலைகளை எல்லாம் தன் தாயிடம் ஒப்படைத்துவிட்டு மனவமைதி யாக இருந்தான். அவன் தன் மனைவியை இரவில் சிறிது நேரந்தான் சந்திப்பான். அப்பொழுதுகூட அவளிடம் அவன் வெகு நேரம் பேசமாட்டான். இவ்வாறாக ராமுவும் மரகதமும் இல்லற வாழ்க்கை நடத்தி வந்தார்கள். தாயி னும் சிறந்த காரியதரிசியை அவன் கண்டதே இல்லை. புதுமுறை நாகரிகத்திலே வளர்ந்த மரகதம் பழங்காலத் துக் குமுதத்திற்கு அடங்க உடன்படுவாளா? அடிக்கடி

தாய்க்கும் நாட்டுப் பெண்ணுக்கும் வாக்குவாதங்கள் ஏற்படும். நாட்டுப் பெண்ணின் அடங்காத தன்மையைத் தன் மகனிடம் எப்படிச் சொல்லவேண்டும் என்று குமுதத்திற்குத் தெரியாதா? இருபத்தேழு ஆண்டுகளாகக் குமுதம் ராமுவை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துகொண்டிருக்கிறாளே. அவள் சொல்லுகிறபடி சொன்னால் ராமு கோபம்கொள்ள வேண்டிய முறைப்படி தன் மனைவியிடம் கோபித்துக் கொள்வான். கோபம் மிஞ்சினால் கையையும் நீட்டுவான். புது நாட்டுப் பெண்ணுணர்வோடு தன் மாமியாரின் வாழ் நாள் முடிகிற வரைக்கும் பொறுமையாக இருந்தாள்; முடிவிலே அவள் வெற்றி பெற்றாள்.

குமுதம் இறந்தபோது ராமுவுக்கு வயது முப்பத்தைந்து. இனிமேல் அவனால் இல்லறப் பொறுப்புக்களைக் கவனிக்க முடியாது. அவன் குழந்தைகளின் வளர்ப்பையும் குடும்பப் பொறுப்பையும் மரகதத்தினிடம் விட்டு, அவள் வரைந்தவரையில் ஒழுகத் தொடங்கினான். முதலில் அவளோடு பொருந்தாமல் நின்றவன் இப்பொழுது, தன் தாயோடு மரகதத்தை ஒப்பிட்டுப் பார்த்தான். நாள் தோறும் அவளிடம் பல குறைகளைக் கண்டான். வாய் விட்டு அவற்றைச் சொன்னால், மரகதம் கண்டபடி பேசத் தொடங்கிவிடுவாள். இதற்குப் பயந்து முணுமுணுத்துக் கொண்டே போய்விடுவான். தனக்கு வேண்டிய தேவைகளில் ஒன்றைக்கூட அவன் தானாகவே தேடிக்கொள்ள முடியாது; அவனுக்குத் தன் தேவைகளைத் தேடும் முறையும் தெரியாது; திறமையும் கிடையாது. அவன் காரியங்களை எல்லாம் மரகதம்தான் தாயின் நிலையிலிருந்து கவனிக்கவேண்டும். ஆகையால், அவளுக்குத் தன் பிள்ளைகளின் காரியங்களைக் கவனிக்கப் போதுமான நேரம் இருக்கவில்லை. அவனது குழந்தைகள் சிறு வயது முதற்கொண்டே பெறவேண்டிய பயிற்சிகளைப் பெறாமல் வளர்ந்து வந்தார்கள்.

கணவனது இணைபிரியாத கூட்டுறவைப் பெற முடியாமல் தன் ஆண் குழந்தையின் கூட்டுறவிலே ஓயாமல்

மகிழ்கிற தாயும், ஒரே கைப் பிள்ளையோடு விதந்துவான பெண்ணும் தமது ஆண் குந்தைகளிடம் அளவுகடந்த அன்பு பாராட்டுவார்கள்; வாழ்க்கையில் கூட்டுறவால் பெற வேண்டிய இன்பங்களை எல்லாம் தமது ஆண் மக்களிட மிருந்து பெற முயலுவார்கள். தமக்கும் தமது குழந்தை களுக்கும் இடையில் குறுக்கிடுகிறவர்களை ஒரே அடியில் தொலைத்துவிட முயலுவார்கள். இருகட்சியிலும், அன்பு முழுவதும் எனக்கே வேண்டும் என்ற ஆசை உள்ளத்தின் ஆழத்தில் நிறைந்திருக்கும். குழந்தை பெரியவனுகும் பொழுது, பெரிய கல்விமானுகவும் சீமானுகவும் புகழ் பெற்ற வர்த்தனுகவும் அதிகாரியாகவும் விளங்கலாம். ஆனல், அவனுடைய இல்லற வாழ்க்கை முழுவதும் தாறு மாருக இருக்கும். இங்ஙனம் ஒருவனது வாழ்க்கையைப் பாழாக்குகிறவள் தொடக்கத்திலே தன் ஆண் குழந்தை யின் சிந்தனைப் போக்கைச் சரியான பாதையில் திருப்பிவிடாத தாய் என்றே கூறவேண்டும்.

எலக்டிரா மனச் சிக்கல்லுக்கு ஓர் உதாரணம்

ஸரஸ்வதியின் தந்தை ஆங்கில இலக்கியங்களில் தேர்ந்த பண்டிதர். அவர் ஒரு கலாசாலையில் ஆங்கில மொழி விரிவுரையாளராக வேலை பார்த்து வந்தார். ஸரஸ் வதியின், கல்வி உடை, அலங்காரங்கள், மனவளர்ச்சி யாவற்றையும் குழந்தைப் பருவத்திலின்றே அவர் கவனித்து வந்தார். ஸரஸ்வதி தன் தந்தையிடம் அள வின்றி அன்பு பாரட்டினுள். அவள் அவரை விட்டுப் பிரிந்திருக்கும் நேரங்களில் மனஞ்சோர்ந்திருப்பாள். ராமதிலகத்திற்கு ஐந்து குழந்தைகள். எனினும், அவர் ஸரஸ்வதியின் கல்வி முதலியவற்றைக் கவனித்த விதமாகப் பிற குழந்தைகளின் கல்வியைக் கவனிக்க வில்லை. அவளுக்குத் தாயிடம் நெருங்கிய அன்பு பெருக வில்லை. ஸரஸ்வதி கலாசாலையில் படித்து, எம். ஏ. பட்டம் பெற்ருள். அவள் மேலும் ஆங்கில இலக்கியம் படிப் பதற்காக இங்கிலாந்திற்குச் சென்ருள். அவளோடு அவளுடைய தந்தையும் கூடவே சென்ருர். அவள் டாக்டர் பட்டம் பெற்றுத் திரும்பி வந்தாள். ராமதிலகம்

அவளை ஐ. ஸி. எஸ் பட்டம் பெற்ற ஒருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார். ஸரஸ்வதிக்குத் தன் கணவனிடம் அளவற்ற காதல் உண்டு; என்றாலும், அவளுடைய இல்லற வாழ்க்கையில் ராமதிலகமே முதன்மை இடம் பெற்றிருந்தார்.

ஸரஸ்வதியின் கணவனால் இதைச் சகிக்க முடியவில்லை. ஆரம்ப வருஷங்களில் கணவனுக்கும் மனைவிக்கும் ராமதிலகத்தால் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன. இங்ஙனம் இருக்கையில் ராமதிலகம் நோயால் வருந்தினார். அப்பொழுது, செல்வாக்கு மிக்க ஸரஸ்வதியின் கணவன் சிறந்த வைத்தியர்களை அழைத்துத் தன் மாமனாரைக் கவனிக்க ஏற்பாடு செய்யாமல் தட்டிக்கழித்து வந்தான். ராமதிலகம் இறக்க நேர்ந்தது.

தந்தையின் மரணத்திற்குப் பிறகு, ஸரஸ்வதி தன் முழுக் கவனத்தையும் கணவனிடம் திருப்பினாள். கணவனைவிட்டு ஒரு நாளும் பிரிந்து வாழவில்லை. கணவனுக்கு ஒரு தம்பி. அவனுக்கு ஐந்து வயதானபோது அவனுடைய தந்தை இறந்துபோனார். அதுமுதல் தமையன், தம்பியின் படிப்பு விஷயங்களைக் கவனித்து வந்தான். தம்பியைப் பற்றித் தமையனுக்குக் கவலை அதிகம். தம்பி எம் ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு டைஃபாய்டு சுரம் கண்டது. உத்தியோக அலுவலில் அடிக்கடி வெளியே போக நேர்ந்ததால், தமையன் தம்பியைக் கவனிக்கும் பொறுப்பைத் தன் மனைவியிடம் ஒப்படைத்திருந்தான். மைத்துனன் கணவனின் அன்புக்குப் பங்காளியாக இருந்ததை ஸரஸ்வதி விரும்பவில்லை. தன் தந்தையைத் தானே முழுவதுமாகச் சொந்தமாக்கிக்கொள்ள விரும்பியவாறே கணவனையும் தனக்கே முற்றிலும் சொந்தமாக அனுபவிக்க விரும்பினாள். கணவன் பிறருடைய க்ஷேம லாபங்களில் கவலையாக இருப்பது அவளுக்கு இஷ்டம் இல்லை. ஆகையால், அவளுடைய உள்ளத்தில் மைத்துனனிடம் சிறிது கசப்பிருந்தது. அவன் டைஃபாய்டு சுரத்தால் வருந்தியபோது, அவனைச் சரியானபடி கவனிக்கவில்லை. தம்பி இறந்

தான். அவளுடைய மன அயர்வுப்புலத்தில் மைத்துனன் ஒழிந்து போகவேண்டும் என்ற ஆசை குடிகொண்டிருந்தது. அதற்கேற்றபடி அவளுடைய செயல்கள் இருந்தன. ஆனால், அவள் புறத் தோற்றத்தில் அவனிடம் வெகு அன்புடையவள்போல நடித்துவந்தாள். முடிவிலே அவனைக் கொல்லாமல் கொன்றாள். இந்தக் கொலை போலீஸ் கோர்டில் வர முடியாத கேஸ்!

ஆனால், கணவனுக்கு மட்டும் தன் மனைவியின் கவலையீனத்தாலேதான் தம்பி இறந்தான் என்று எப்படியோ தோன்றியது. அதுமுதல் அவன் அவளிடத்தில் கொண்ட காதல் குறைந்தது. இதை ஸரஸ்வதியால் சகிக்க முடியவில்லை. முடிவிலே தற்கொலை செய்துகொண்டாள்.

இத்தகைய பல கோணல்கள் எலக்டிரா மனச் சிக்கல்களால் விளையும். இன்று இல்லற வாழ்க்கையில் சதிபதிகளாக வாழ்கிற எண்ணிறந்த ஆண் பெண்களின் உறவில் காண்கிற பல கோணல்களுக்குக் காரணம் தாய்க்கும் குழந்தைக்கும் தொடக்க நாட்களில் ஏற்படும் காதலேயாம். பெற்றோர் குழந்தைகளிடத்தில் காட்டும் அன்பு கரை கவியலாகாது. குழந்தைகள் தாமாகவே தமது காரியங்களைக் கவனித்துக் கொள்ளக் கூடிய நிலைக்கு அவர்களைக் கொண்டுவர வேண்டும்.

குழந்தைகளிடத்தில் இத்தகைய மனோ விகாரம் ஆரம்பிக்கிற காலத்தில், அதை வேரறுக்க முயலாமல் சிறிது காலம் விட்டுவிட வேண்டும். குழந்தைகள் வளர வளர, இந்தப் பொறாமைத் தீயை அணைக்கப் பெற்றோர் வழிவகைகளைத் தேட வேண்டும். தாய் தன் ஆண் குழந்தைக்குத் தந்தையை லட்சிய புருஷனாகக் காட்ட வேண்டும். "அப்பாவைப் போல் படிக்க வேணும், அப்பாவைப் போல் உடுக்க வேணும்" என்றெல்லாம் கூறிக் குழந்தையின் உள்ளத்தில் தந்தையன்பை வளர்க்க வேண்டும். தந்தையும் தமக்கு எவ்வளவு அதிகமான அலுவல்கள் இருந்தாலும், சிறிது நேரமாவது ஆண் குழந்தையிடம் செலவிட்டு அன்பை வளர்க்க வேண்டும்.

இவ்வாறே தந்தையும் பெண் குழந்தையின் அன்பைத் தாய் மீது திருப்பிவிட வேண்டும். இரண்டாவது வயது முதல், ஆறு ஏழு வயது வரை, குழந்தையின் அன்பிற்குச் சரியான வாய்க்கால்கள் வகுத்துத் திருப்பி விட்டால், குழந்தைகளுக்கு பெற்றோரிடத்தில் ஏற்படக் கூடிய பாரபக்ஷமான அன்புக்கு இடம் இல்லாமற் போகும். குழந்தைகளும் நாளடைவில் தங்கள் பொறுப்பை உணர்ந்து சரியான வாழ்க்கை நெறியில் நடக்கத் தொடங்குவார்கள்.

அதட்டலும் அடித்தலும்

பொறுமையோடு மக்களின் மனப்பான்மையை ஆராய்ந்து அவர்களை வளர்க்கத் தெரியாத பெற்றோர், "அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் உருப்படா" என்று வாய் கூசாமல் பேசு வார்கள். வளரும் குழந்தையிடம் நாள்தோறும் நல்ல னவும் தீயனவுமாகிய பல குணங்கள் வெளிப்படும்; அவற் றிற்கிசைந்த செயல்களும் வெளிப்படும்; மொழிகளும் பிறக்கும். இவற்றுள் சில மெச்சத்தகுந்தவைகளாகத் தோன்றலாம்; மற்றும் சில நமக்குக் கோபத்தை உண்டு பண்ணலாம். வீட்டு வாசலில் வந்து இரப்பவனுக்குத் தாய் பிச்சை இடுகிறாள். குழந்தை அதைப் பார்க்கிறது; மறு நாள் தானே அரிசிப் பெட்டிக்குள் இருந்து அரிசியை எடுத்துக்கொண்டுபோய்ப் பிச்சைக்காரனுக்கு இடுகிறது. தாய் அதைக் கண்டு மகிழ்கிறாள்.

அதே நாளில் அதே குழந்தை மாலை வேளையில் தன்னோடு விளையாட வந்த மூன்று வயதுச் சிறுவன் தன் கையில் வைத்துத் தின்று கொண்டிருந்த பண்டத்தைத் தட்டிப் பறித்துத் தின்பதைத் தாய் பார்க்கிற பொழுது, குழந்தையை அதட்டுகிறாள்; குழந்தை தட்டிப் பறித்ததை அதற்கு உரியவனிடம் கொடுக்காமல் முரண்டடிக்கிற பொழுது, அதை அடிக்கிறாள். குழந்தையின் இச் செய் கைக்குக் காரணம் என்ன என்று தாய்க்கு விளங்கவில்லை. சில நாட்களுக்கு முன் அதே விளையாட்டுத் தோழன்

இந்தக் குழந்தையின் கையிலிருந்த அப்பளத்தைத் தட்டிப் பறித்துத் தின்ருன். அதை இந்தச் சிறுமி மறக்க வில்லை. ஆகையால், இன்று அவன் செய்ததையே திரும் பச்செய்தாள்; ஆனல், தாய் குறுக்கிட்டு அதட்டி அடித்த போது, குழந்தைக்குத் தன் செய்கை எவ்வாறு தவருகும் என்பது விளங்கவில்லை, தாய் தன்னைத் தண்டித்தது அநி யாயம் என்றே குழந்தை கருதுகிருள்; விடாமல் அழு கிருள். அன்று அந்தச் சிறுவன் தன் கையிலிருந்து அப்பளத்தைத் தட்டிப் பறித்தபோது, தாய் தனக்கு ஆறுதலான மொழிகள் கூறி, முழு அப்பளம் ஒன்றைத் தந்து, தன்னை மகிழ்வித்தது குழந்தையின் ஞாபகத்தில் இருந்தது. அவள் இன்று தன் தோழனிடமிருந்து தின் பண்டத்தைக் கவர்ந்தபோது தாய் அடித்தாளே! குழந்தை எதிர் பார்த்தது ஒன்று; தாய் செய்தது மற் ருென்று. தட்டிப் பறித்த தின்பண்டத்திற்குப் பதிலாகத் தன் தோழனுக்கு வேறு ஏதேனும் தின்பண்டம் கொண்டு வந்து கொடுக்கப் போகிருளா இல்லையா என்பதனைக் குழந்தை அறிய விரும்பினுள். குழந்தை எதிர்பார்த்தபடி தாய் செய்யவில்லை. முதலில், ஆசாபங்கம் தோன்றியது; முந்திய நாள் அந்தச் சிறுவனைத் தாய் அடிக்கவில்லை; பின்பு, தாயின் செயல் போக்கில் வேற்றுமை கண்டாள்.

குழந்தைகளின் மனப்போக்கை அறியாமல் பெற்ருேர் அவர்களை இவ்வாறு தண்டித்து வந்தால், பெற்ருேர் நீதி உடையவர்கள் என்னும் உணர்ச்சி அவர் களிடம் ஏற்படுமா? ஆகையால், பெற்ருேர் குழந்தைகளின் ஒவ்வொரு செய்கைக்கும் தூண்டுதலாக இருக்கும் காரணங்களை ஆராயவேண்டும். ஆராய்ந்த பிறகுதான் அவற்றை விலக்க முயலவேண்டும். இதற்கு மாருக கண் ணெதிரில் காண்பதை மட்டும் திருத்தக் குறுக்கு வழிகளைக் கையாளுதல் நலமன்று. அதட்டுதலும் அடித்தலுமே பெற்ருேர் பலர் கையாளுகிற குறுக்கு வழிகளாக இருக் கின்றன.

பங்கஜத்திற்கு நான்கு பிள்ளைகள்; மூன்ருவது பெண்ணின் பெயர் ஜானகி; நான்காவது சிறுவனின்

பெயர் பட்டாபிராமன். முதல் இரண்டு ஆண்மகவுகள் பிறந்து ஆறு ஆண்டுகள் சென்ற பிறகுதான் ஜானகி பிறந்தாள். ஜானகிக்கு மூன்று வயதானபோது பட்டாபி ராமன் பிறந்தான். தந்தைக்கு ஜானகியிடம் வெகு பிரியம். அவர் காரியாலயத்திலிருந்து வரும்பொழுது ஏதாவது பண்டங்கள் வாங்கிக்கொண்டு வருவார். ஜானகியை மட்டும் மாடிக்கு அழைத்துச் சென்று, தின் பண்டங்களை அவளிடம் கொடுப்பார். யார் எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் கொடுக்கவேண்டும் என்று தாய் தன் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்து வந்தாள். முதல் இரண்டு பிள்ளைகளுக்கும் இந்தப் பாடத்தை வெகு கண்டிப்பாகக் கற்றுக்கொடுத்திருந்தாள். ஜானகிக்கும் இந்த பாடத்தைக் கற்றுக்கொடுக்க முயன்றாள். ஆனால், தந்தையின் பாரபக்ஷமான அன்பு இந்தக் கல்வியைத் தடைசெய்தது. மூத்த பையன்கள் பள்ளிக்கூடத்திற்குச் சென்று திரும்பி வரும்பொழுது, அழகிய படங்கள், வர்ணக் கண்ணாடிகள், கண்ணாடிக் கோலிகள், ஊதல்கள், பம்பரங்கள் என்றிப்படியே பல பொருள்களை நண்பர்கள் வீட்டிலிருந்தும், கடைகளில் இருந்தும் வாங்கி வந்து தத்தம் பெட்டிகளில் திரட்டி வைத்துக் கொள்வார்கள். குழந்தைகளுக்கு இத்தகைய பண்டம்பாடிகளைச் சேகரிக்கும் குணம் இயல்பாகவே அமைவதுண்டு. உடைமைகளைத் தமக்கே சொந்தமாகக் காக்கிற குணம், இன்பம் விளைப்பதை ஏகபோக உரிமையாகப் பெறவேண்டுமென்னும் ஆசையினின்று தொடங்கி வளருகிறது. முதன் முதலில் இப்படிப் பண்டங்கள் திரட்டத் தொடங்கியவன் மூத்தவனான வேங்கடேசன். வேங்கடேசன், தம்பி கலியாண சுந்தரத்தைவிட இரண்டு வயதுக்குப் பெரியவன். சுந்தரம் ஏதாவது ஒன்றைக் கேட்டால் வேங்கடேசன் கொடுக்கமாட்டான். உடனே தாய் வெங்கடேசனிடமிருக்கும் பண்டத்தைப் பறித்துச் சுந்தரேசனிடம் கொடுப்பாள். வேங்கடேசன் அழுதால், “குழந்தை கேட்டால் ‘இல்லை’ என்று சொல்லுவது என்ன குணம்? யார் கேட்டாலும் கொடுக்கவேண்டாமா?” என்று பங்கஜம் அதட்டுவாள். இருவரும் எட்டு

வயதும் ஆறு வயதுமான பையன்களானபோது, தங்கள் உடைமைகளைத் தனித்தனிப் பெட்டிகளில் வைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள்; "ஜானகி பார்த்தால் தரச் சொல்லி முரண்டடிப்பாள்; அம்மா கன்னத்தில் அறைந்து, இவற்றை எல்லாம் வாங்கி ஜானகியிடம் கொடுத்துவிடுவாள்," என்று இருவரும் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்பொழுதே பேசிக்கொண்டு வருவார்கள். கொண்டுவந்த பொருள்களை ஒருவருக்கும் தெரியாமல் பெட்டிக்குள் பத்திரப்படுத்திய பிறகுதான், சிற்றுண்டி அருந்தக் கீழே சமையல் அறைக்கு வருவார்கள். தாய் வற்புறுத்தியதனால், பிறருக்குக் கொடுக்குமாறு பயிற்றுவித்த கல்வி எவ்வாறு பொருந்துகிறது பாருங்கள்! மூத்த பையன்கள் தங்கள் உடைமைகளை மறைத்து வைத்துக் காப்பாற்ற வழி தேடினர். இந்த மனப்பான்மையையே தாய் தன் கண்டிப்பு முறைகளால் உண்டு பண்ணினாள்.

தந்தை ஜானகிக்கு மட்டும் தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்தபொழுது, தாய் "ஜானகி, ஜானகி!" என்று சத்தமாக அழைப்பாள். குழந்தை ஜானகி தின்பண்டப் பொதியுடன் வந்தவுடனே, தாய் காரியக் குறிப்போடு அவளைப் பார்ப்பாள்; "ஜானகி! தனியே அத்தனை தின்பண்டங்களையும் தின்னக்கூடாது; வேங்கடேசன் அண்ணா, சுந்தரம் அண்ணா, பட்டாபிராமன்எல்லாருக்கும் கொடுத்துத்தான் தின்னவேண்டும்" என்பாள். ஜானகியின் மலர்ந்த முகம் இருண்டுவிடும். மிட்டாய்ப் பொதியோடு நிற்கும் ஜானகியை வேங்கடேசனும், சுந்தரமும் சூழ்ந்து கொள்வார்கள்; "ஜானா, எனக்கு!" "ஜானா எனக்கு!" என்று கேட்பார்கள். அதற்கு ஜானகி, "அந்தப் பந்தை எனக்குத் தந்தாயா? நான் தரமாட்டேன், போ," என்று சுந்தரத்தினிடம் கூறுவாள்; வேங்கடேசனிடம், "அந்தப் படத்தைக் கேட்டேனே, எனக்கு நீ தரவில்லையே" என்பாள்; தன் தம்பி பட்டாபிராமனுக்கு ஒரு லட்டுவை எடுத்துக் கொடுப்பாள். தாய் பலவந்தமாக ஜானகியின் கையில் இருக்கும் மிட்டாய்ப் பொதியை

வாங்கி யாவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தால், ஜானகிக்கு வெகு கோபம் வந்துவிடும். அவள் தன் பங்கை வீசி எறிவாள்; மாடியில் இருக்கும் தந்தையின் செவிகள் தகருமாறு கத்தி அழுவாள். உடனே, தந்தை ஓடிவந்து ஜானகியை எடுத்துக்கொண்டு, வெளியே சென்று மிட்டாய்க் கடையிலிருந்து அவளுக்கு விருப்பமான பண்டங்களை வாங்கிக்கொடுப்பார். தாய் தந்தையரின் வளர்ப்பு வேற்றுமையால், ஜானகி தன் விருப்பங்களைத் தன் தாய்க்குத் தெரியாமலே தந்தைமூலமாகச் சாதித்துக் கொள்ளப் பழகினாள். உடன்பிறந்தவருக்குக் கொடுத்துத் தின்ன வேண்டும் என்பது அடியோடு அவளைவிட்டு அகன்றது.

கொடைப் பழக்கத்தைக் குழந்தைகளிடம் வற்புறுத்திய கட்டுத்திட்டமும் கண்டிப்பும் எல்லாம் மலையேறி விட்டன; தாயின் போதனாமுறைகள் மக்களிடையே குணச்சிக்கல்கள் தோன்றக் காரணமாயின. தாயின் போதனை குழந்தைகளிடம் பலிக்காமல் போனதற்குப் பல காரணங்கள் உள்ளன. தாய் கண்டிப்பு முறையில் உறுதியாக நிற்கவில்லை. தாயோடு தந்தை ஒத்துழைக்கவில்லை. தந்தையிடம் பாரபக்ஷமான அன்பு குடிகொண்டிருந்தது. தந்தை தமது பொருள்கள் வைத்திருக்கும் பெட்டியைத் திறக்கும்பொழுது, வேங்கடேசனும், சுந்தரமும், பக்கத்திலே நின்று 'அப்பா, எனக்கு அது வேண்டும், இது வேண்டும்' என்று கேட்டால், தந்தை அவர்களை தட்டிக் கழிப்பார். தாய் தன் பெட்டியைத் திறக்கும்பொழுது, இரு பையன்களும் தாயின் பெட்டியில் காண நேரிடும் பொருள்களில் எதையாவது கேட்டால் தாயும் தரமுடியாதென்று தட்டிக் கழிப்பாள். பிறர் கேட்டதைக் கொடுக்கும் குணம் பெற்றோரிடம் இல்லை எனவும், தம்மிடம் இல்லாத குணத்தைப் பிறரிடம் அவர்கள் எதிர்பார்க்கின்றனர் எனவும் பையன்கள் இருவரும் கருதினார்கள். பிறருக்குக் கொடாமல் பொருள்களைச் சேர்த்துவைக்கும் குணம் முதல் இரண்டு குழந்தைகளிடத்திலும் ஏற்பட்டபொழுது, இரு பையன்களும் அந்தக் குணத்தை ஜானகியிடம் வெளியிட்டார்கள்.

ஆகையால், தாயின் கண்டிப்பு ஜானகிக்கு பிடிக்கவில்லை. மூத்தவர் இருவரும் பிறர் கேட்டதைத் தராமல் இருக்கும் பொழுது, தந்தை தனக்கு வாங்கித் தந்த தின்பண்டத்தைக் கொடுக்கவேண்டும் என்று தாய் வற்புறுத்துவதன் காரணம் ஜானகிக்கு விளங்கவில்லை. இத்தகைய குறைகள் உடைய பெற்றோர் மக்களிடம் கையாளும் கண்டிப்பான முறைகள் வெற்றிபெறா.

குழந்தையின் நீதி உணர்ச்சி

பிறருடைய செயல்களையும், சிந்தனைகளையும் மொழிகளையும் தூக்கிப்பார்க்கும் குணம் குழந்தைகளுக்கு உண்டு. குழந்தைகளைப்போல் நீதிபதிகள் உலகில் இல்லை என்றே சொல்லலாம். அவர்கள் தங்கள் பெற்றோரை எப்பொழுதும் உரைகல்லில் உரைத்துப் பார்க்கிறார்கள். பெற்றோர் தம்மிடத்தில் இல்லாத பழக்க வழக்கங்களைக் குழந்தைகளிடத்தில் பலவந்தமாக உண்டுபண்ண முயன்றால், அவர்கள் எளிதில் அவற்றை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகையால், குழந்தையின் ஒழுக்கத்தைத் திருத்த முயற்சி செய்வதற்கு முன் பெற்றோர், அதே ஒழுக்கம் தம்மிடத்தில் உண்டோ என்று ஆராயவேண்டும். மக்களிடத்தில் அமையவேண்டிய ஒழுக்கம் தம்மிடத்தில் இல்லை எனில், பெற்றோர் தம்மைத் தாமே திருத்திக் கொள்ள வேண்டும். காரணத்தைக் காட்டாமல் குழந்தைகளை ஏதேனும் ஓர் ஒழுக்கத்திற்கு ஆளாக்கினல் அவர்கள் பெற்றோரது கண்ணெதிரில் ஒரு விதமாகவும் கண் மறைவில் மற்றொரு விதமாகவும் ஒழுக முயலுவார்கள்.

சசிக்கு இரண்டரை வயதாயிற்று; நடக்கத் தொடங்கிய நாள் முதலாக அவள் தாயின் காலைச் சுற்றிச் சுற்றி வட்டமிடத் தொடங்கினள். குழந்தை தாயின் காலைச் சுற்றிச்சுற்றி வளைய வருவதையும், தாய் வேலை செய்யும் பொழுது, மேலே விழுந்து கழுத்தைக் கட்டிக்கொண்டிருப்பதையும் பார்த்த சசியின் பெரிய தமக்கை, "சசி! நீ சமையல் அறைக்குள் ஒரு பொழுதும் போகக் கூடாது"

என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டாள். தமக்கை பெரும் பொழுதையும் மாடியிலேயே செலவிடுபவள். இது சசிக்கு வெகு அனுகூலமாக இருந்தது. தமக்கை மாடியிலிருந்து கீழே வரும் காலடி ஓசை கேட்ட உடனே, சசியும் ஓசைப் படாமல் சமையல் அறையை விட்டு வெளியேறிக் கூடத்திற்கு வந்துவிடுவாள். தமக்கை மேலே சென்றதும் சசியும் சமையல் அறைக்குள் பிரவேசிப்பாள். இவ்வாறு தமக்கை இட்ட சட்டம் சில நாட்கள் வரைக்கும் நிறைவேறியது. நிழல்போல் தொடர்ந்த சசியின் உறவிலே மகிழ்ந்த தாயும் அவளைத் திருத்தச் சற்றும் முயலவில்லை. இரண்டு மூன்று தடவைகளில் சசி திருடனைப்போல் சமையல் அறைக்குள்ளிருந்து வெளியேறுவதைத் தமக்கை கவனித்தாள். தமக்கைக்குக் கோபம் வந்தது. அவள் சசியைக் கடிந்தாள். சசிக்குத் தமக்கையிடம் வெறுப்புத் தட்டியது. ஒரு நாள் தமக்கை சசியை அழைத்து, "சசி! இனிமேல் நீ உன் இஷ்டப்படி சமையல் அறைக்குள் போகலாம்; நீ அம்மாவுக்கு உதவி செய்யவேண்டும்; அம்மா எதைக் கேட்டாலும் எடுத்துக்கொடுக்கவேண்டும்" என்றாள். முற்றிலும் மழுங்கிய ஒரு கத்தியை எடுத்துக் குழந்தையிடம் கொடுத்து ஒரு கத்தரிக்காயை நறுக்கக் கற்றுக் கொடுத்தாள். அகத்திக் கீரைக் காம்புகளைத் துடைப்பம் போலக் கட்டிக் கொடுத்துச் சமையல் அறையைப் பெருக்கச் சொன்னாள். குழந்தைக்கு அன்று முதல் தமக்கையிடம் முன்னொரு பொழுதும் ஏற்படாத பிரியம் ஏற்பட்டுவிட்டது. அன்று முதல் சசி தனக்கு ஏதாவது சிறு அலுவல் இருக்கும் பொழுதுதான் சமையல் அறைக்குள் செல்வதென்று தீர்மானித்துவிட்டாள். அவள் பொம்மைகளையும் மரச் செப்புகளையும் வைத்துக்கொண்டு விளையாடிப் பொழுது போக்கத் தொடங்கினாள். தமக்கையும் நாள்தோறும் சற்று நேரம் சசியோடு விளையாடத் தொடங்கியபொழுது, சசி தமக்கையை உற்ற தோழியாகக் கொண்டாள். தங்கைக்குத் தமக்கைபால் நம்பிக்கை ஏற்பட்டது. தமக்கை தன் விருப்பப்படி தங்கையைத் திருப்ப முடிந்தது.

குழந்தைகளின் பழக்க வழக்கங்களைத் திருத்தத் தொடங்குமுன், அவர்களுடைய செயல் போக்குக்குப் பல வாய்க்கால்கள் வகுக்கவேண்டும் குழந்தை சும்மா இருந்தால் உருப்படாது ; எதைச்செய்யலாமோ என்று விரைகிற மனம் குழந்தைக்கு இயல்பாக அமைந்திருக்கிறது. அதன் விருப்பத்திற்கே விட்டு விட்டால், தன் இயல்பிலே மனம் போனவாறெல்லாம் குழந்தை அதையும் இதையும் செய்து கொண்டிருக்கும். இவை திறமை திராணிகளைச் சீராக்குவதற்கு உதவி புரியாவாம். குழந்தைகள் கையாண்டு உபயோகிப்பதற்காகப் பல பண்டங்களும் விளையாட்டுச் சாமான்களும் பொம்மைகளும் இருக்க வேண்டும். குழந்தையின் செயல் திறமைக்கும், மனத்தின் ஆக்கும் ஆற்றலுக்கும் வாய்க்கால் வகுத்துக் கொடுக்காமல், "அதைச் செய்யாதே! இதைச் செய்யாதே! இங்கே போகாதே! அங்கே போகாதே!" என்றெல்லாம் சட்டங்களை நிமிஷத்திற்கு நிமிஷம் பிறப்பித்து நிபந்தனைக் கோட்டைகள் கட்டிவைப்பதால் விளையும் தீமைகள் பல. கண்டிப்பினால் விளையும் மனச்சிக்கல்களை முடிவிலே சிந்திக்கலாம்.

குரங்கு மனப்பான்மை

குரங்குக்கும் குழந்தைக்கும் பொது இயல்பு ஒன்று உண்டு. நாம் ஒரு குரங்கைப் பார்த்து, "குர்!" என்றால் குரங்கும் 'குர்!' என்னும். நாம் கண்ணாடியைப் பார்த்தால், குரங்கும் கண்ணாடி அகப்பட்டவுடனே அதைப்பார்க்கும். சிம்பன்ஸி என்னும் ஒருவகைக் குரங்கு பார்த்ததைச் செய்யும் இயல்புடையது. இந்த இயல்பு குழந்தைகளிடத்திலும் இயற்கை உணர்வாக விளங்குகிறது. வீட்டிலுள்ள பெரியவர்களும் பெற்றோர்களும் செய்கிறவைகளையெல்லாம் குழந்தைகளும் செய்ய விரும்புகின்றனர். குழந்தைகள் ஆரம்ப நாட்களில் பெற்றோரையும் வீட்டில் உள்ள பிறரையும் பார்த்துப் படிக்கிற பாடங்கள் பல. அவர்கள் வீட்டில் இருப்பவரது பேச்சுக்களைக் கற்றுக் கொள்கின்றனர்; பெரியவர்கள் செய்கிற தவறான காரியங்

களைக் குழந்தைகள் செய்யும்பொழுது, பெற்ரோர் குழந்தைகளைக் கண்டித்துத் தண்டிக்கத் தொடங்கு கிருர்கள். குழந்தைகளுக்குத் தங்கள் பெற்ரோர் தண்டிப்பதன் நியாயம் விளங்குவதில்லை. இந்தக் குரங்கு மனப்பான்மை குழந்தைகளின் கல்விக்கும், பழக்கத்திற்கும் மிகவும் இன்றியமையாதது. பெரியவர்கள் செய்கிறவாறே எல்லாவற்றையும் செய்யக்கூடாதென்று பெற்ரோர் குழந்தைகளைக் கண்டிப்பாராயின், கல்வியைப் பெறுவதற்கு உதவுகிற சிறந்த பாதை ஒன்றை அடைத்துப் பல வகைத் திறமைகளை வளர்க்கவல்ல இயற்கைச் சக்தியையும் தடை செய்பவராவர்.

பிறர் செய்வதைப் பார்த்துப் படிக்கிற இந்த ஆற்றலை இனி வரும் இடந்தோறும், '**போலிவினைத்திறம்**'[1] என்னும் சொற்ருடரால் குறிப்பிடுவோம். குழந்தைகள் கல்வி கற்கும் முறையில் இதற்கமைந்த ஏற்றத்தைச் சிந்திக்கப் போகிருேம். இந்தத் தன்மையை ஏற்றவாறு ஆட்சி செய்வதால் குழந்தைகளிடத்தில் அடித்தல் முறையாலும், முறுக்கல் முறையாலும் விளையக் கூடிய தீமைகளை எப்படித் தவிர்க்க முடியும் என்பதனை விளக்கும் பொருட்டே ஈங்கு இதனைச் சுட்டிக்காட்ட நேர்ந்தது. குழந்தை அதிகமாக நம்புகிறவரைப்போல் எதையும் செய்ய விரும்புகிறது. குழந்தையின் அன்பை முதலில் பெறுகிற பெற்ரோர் அந்த அன்பின் மூலமாகவே குழந்தையைத் திருத்தலாம். பெற்ரோர் குறித்த நேரம் தவருமல் சாப்பிடுவதைப் பார்க்கிற குழந்தையும் அவ்வாறே செய்ய விரும்பும்.

வேளை தவருமல் நாட் கடன்களைப் பெற்ரோர் செய்து வருவதைப் பார்க்கும்பொழுது குழந்தையும் அவர்களைப் போலவே குறித்த நேரங்களில் யாவற்றையும் செய்யப் பழகிவிடுகிறது. பெற்ரோர் கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுக்கிறதைப் பார்க்கிற குழந்தையும் அவ்வாறே செய்கிறது. எவரிடத்திலும் முகமலர்ந்து இனிய மொழிகளைப் பேசுகிற பெற்ரோர்

---

1. போலி வினைத்திறம் - *Imitation.*

களின் குழந்தைகளும் அவ்வாறே செய்யாமல் வேறு எவ்வகையில் ஒழுக முடியும்? சுருங்கச் சொன்னால் முதல் ஐந்து ஆண்டுகள் வரைக்கும் ஒரு குழந்தையின் வாழ்க்கையில் பெற்றோர்களே முன் மாதிரியாக இருக்கிறார்கள். தமது பெற்றோர் செய்கிறவைகளை எல்லாம் செய்ய விரும்புகிற குழந்தைகளிடம் அன்பற்ற முறையிலே பெற்றோர் ஒழுகுவாராயின், அவர்களுக்குப் பெற்றோர் பால் உள்ள மதிப்புக் குன்றிவிடும். தம் மனப்போக்கிலே போகத் தொடங்குவார்கள். தமது செயல்களையும் சிந்தனைகளையும் மறைக்கத் தொடங்குவார்கள். பெற்றோருக்கு அறிமுகமில்லாத குழந்தைத் தன்மயம் ஒன்று புறத் தோற்றமான மூர்த்தி-விசேஷத்தின் மறைவிலே உருவாகி வரும். வெளியிலே காண்கிற குழந்தை ஒருவிதமாகவும், உள்ளே இருக்கிற உண்மைக் குழந்தை மற்றொருவித மாகவும் இருக்கும்.

மணியனுக்கு ஒரு வயதும் ஒன்பது மாதமுமாயிற்று. ஒரு நாள் அவனுடைய பாட்டி பணப் பெட்டியைத் திறந்த பொழுது, மணியன் பக்கத்தில் நின்றான். பெட்டிக்குள்ளே பத்துரூபாய் நோட்டுக்கள் அடுக்காய் இருந்தன. அவனுக்கு அந்த ரூபாய் நோட்டுக்கள் அழகிய படங்கள் போலத் தோன்றின. உடனே இமைப்பொழுதில் பத்து ரூபா நோட்டுக் கற்றைகளைக் கையில் எடுத்துக்கொண்டான். பாட்டி தன்னால் இயன்றவரை நயந்து கெஞ்சிக் கேட்டுப் பார்த்தாள். மணியன் நோட்டுக்களைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போடுவான் என்று பாட்டியும், வீட்டில் இருந்த பிறரும் அஞ்சினார்கள். கவலையோடு எல்லாரும் அவனை விடாமல் தொடர்ந்து சென்றார்கள். அந்நேரத்தில், மணியனுடைய தாத்தா உள்ளே வந்தார். வெளியே சென்றிருந்த தாத்தாவுக்கு மணியன் ரூபா நோட்டுக்களை வைத்திருப்பது தெரியாது. பாட்டியார் வந்து தமது கணவரிடம் சொன்னபொழுது, அவர், "நீங்கள் அவனை விட்டுவிடுங்கள்; நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றார். தமது சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டுக் களையும், ஐந்து ரூபாய் நோட்டுக்களையும் எடுத்தார்;

மணியன் பார்க்கும்படி, "போடு ஒரு நோட்டு!" என்று சொல்லிக்கொண்டே ஒரு ஐந்து ரூபாய் நோட்டைத் தரையில் போட்டார். அவருடைய முகத்தில் விளையாட்டு மனப்பான்மை விளங்கியது. தாத்தா விளையாடுகிறார் என்று மணியன் கருதினான்; உடனே, "போடு ஒரு நோட்டு!" என்று தன் கையில் இருந்த பத்து ரூபா நோட்டுக்களில் ஒன்றை எடுத்துத் தரையிலே போட்டான். தாத்தாவும் தமது கையில் இருந்த இன்னொரு நோட்டை எடுத்து, "போடு இன்னொரு நோட்டு!" என்று போட்டார். மணியனும் தன் கையில் இருந்த நோட்டுக்களில் ஒன்றை எடுத்துத் தரையில் போட்டான். இப்படியே இருவரும் ரூபா நோட்டுக்களைத் தரையில் போட்டு விளையாடினார்கள்; பின்பு, அவரவர்கள் போட்ட நோட்டுக்களைப் பொறுக்கிக் கொண்டார்கள். இங்ஙனம் இரண்டு மூன்று முறை நோட்டுக்களைத் தரையில் போட்டு விளையாடிய பிறகு, தாத்தா தம்முடைய நோட்டுக்களை எல்லாம், எடுத்துப் பணப் பெட்டிக்குள் வைக்கப்போனார். மணியனிடம், "மணியா வா; என் நோட்டுக்களை இந்தப் பெட்டிக்குள் வைத்து உன்னால் பூட்ட முடியுமா?" என்றார். மணியன் வந்தான்; பணப் பெட்டியின் திறவுகோலைத் திருப்பினான்; பூட்டைத்திறக்க முடியவில்லை. தாத்தா கொஞ்சம் உதவி செய்தார். பெட்டி திறந்தது. உடனே தாத்தாவின் நோட்டுக்களை ஒரு அறையில் வைத்தான். அதோடு தன் நோட்டுக்களையும் வைத்தான். பெட்டியை மூடினான்; பூட்டப் பார்த்தான்; சற்றே சிரமமாக இருந்தது. தாத்தா உதவிசெய்தார்; மணியன் பெட்டியைப் பூட்டினான்; திறவுகோலை எடுத்தான்; தாத்தாவிடம் கொடுத்தான். தாத்தாவோடு வேறு விளையாட்டுக்கள் விளையாடப் போய் விட்டான். இது உண்மையாக நிகழ்ந்தகதை. தாத்தா, குழந்தையின் போலி வினைத்திறத்தை வெகு அழகாகக் கையாண்டார். இப்படிச் செய்ததனால் பிற பெற்றோர்கள் கையாளுகிற அடி, முறுக்கு, தண்டனை உபாயங்களைத் தவிர்க்க முடிந்தது. குழந்தைக்கும் தாத்தாவுக்கும் இருந்த நட்பு சற்றுமே குறையவில்லை. மணியனும்

பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டும் முறையைத் தெரிந்து கொண்டான். இந்த முறையைக் கையாளுவதற்குச் சிறிது பொறுமையே தேவையாக இருந்தது. குழந்தைகளின் போலி வினைத்திறத்தை நேராகக் கையாண்டால் நாம் விரும்புகிற பல காரியங்களைக் குழந்தைகள் கற்றுக்கொள்ளச் செய்துவிடலாம்

பெரியவர்களும் பெற்றோர்களும் செய்வதை எல்லாம் குழந்தைகள் செய்யக் கூடாதென்று கட்டுத் திட்டங்கள் செய்வதனால் விளைகிற தீமைகளில் முதன்மையானது, தாம் வேறு, பெற்றோர் வேறு; தாம் சிறியவர்கள்; பெற்றோரும் பிறரும் உயர்ந்தவர்கள்; குழந்தைகள் தாழ்ந்தவர்கள்—என்ற **சிறுமை உணர்ச்சிச் சிக்கல்**[1] என்றே குறிப்பிடவேண்டும். "அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் உருப்படா" என்ற விதியைக் குழந்தை வளர்ப்பில் கையாளுகிற பெற்றோர்களே குழந்தைகளிடத்தில் ஆரம்பமாகிற சிறுமை உணர்ச்சிச் சிக்கல்களுக்கு முதற் காரணமாகின்றனர். பெற்றோர் குழந்தைகளுக்கு அடிப்பரிசும், செவிமுறுக்கும் வழங்கி வளர்ப்பதனால், அவர்கள் அஞ்சி உடல் நடுங்கும் கல்வியையே பெறுகின்றனர். அவர்களது மனத்தில் எவ்விடத்திலும் நேர்மையாக ஒழுகி உண்மை பேசமுடியாமல் போகிற அச்சமே விளையும்; வளர்த்த திறமைகளையும், இயல்பாய்ப் பெற்ற திராணிகளையும் பூரண அளவிலே உலகிற்குப் பயனாக்க முடியாமல் போகிற கோழை மனமே தழைக்கும்; வாழ்க்கைப் போராட்டத்தில் தன்னைத் தானே உந்திக்கொண்டு முன்னேற முடியாமல் செய்கிற நாணமே மலரும். முடிவில் பாழான வாழ்வே கனியாகி விடும். மீசையை ஓயாமல் முறுக்குகிறவன் வெகு விரைவில் மீசையையே இழக்க நேரிடும். உரோமக் கால்களில் நோவு தோன்றும், மீசையும் இற்று விழும்; முடிவில் மீசையை எடுத்துவிட்டுப் புது மீசை வளர்க்க நேரிடும்.

1. சிறுமை உணர்ச்சிச் சிக்கல்—*Inferiority complex.*

பெற்றோருக்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பு இரகசியம்

குழந்தைக்குத் தான் வேறு தன் பெற்றோர் வேறு என்ற எண்ணம் வாழ்க்கையின் தொடக்கத்தில் ஏற்படுவதே இல்லை என்று முன்னரே கூறியுள்ளோம் தானும் தன் தாயும் ஒன்று என்ற எண்ணந்தான் முதலில் ஏற்படுகிறது என்று மானஸ சாஸ்திரிகள் பல ஆராய்ச்சிகளால் வெளியிட்டிருக்கிறார்கள். குழந்தைக்கும் பெற்றோர்க்கும் உள்ள அன்புத் தொடர்பு, இரு சாராரின் மன உணர்வு-தெளிவுப் புலத்தின் ஒற்றுமையை மட்டும் ஆதாரமாகக் கொண்டிருப்பதன்று. ஆகையால், பெற்றோர் தமது குழந்தைகளுக்கு வெளித் தோற்றத்தில் மட்டும் முன் மாதிரியாக இருந்தால் போதாது பெற்றோர் குழந்தைகள் ஆகிய இரு சாராரது அன்புத் தொடர்புகளும் மனத்தின் உணர்வுப் புலமாகிய விழிப்பு நிலையைத் தாண்டி மன அயர்வுப் புலத்தோடும் தொடர்புற்று நிற்பவை. தாய் தந்தையர் தமக்குள்ளே ஏற்படுகிற மன வேற்றுமைகளையும் சச்சரவுகளையும் குழந்தைகள் காணுமாறு வெளியிடலாகாதென்று எவ்வளவுதான் முயன்றாலும், தம்மை அறியாமலே மன அயர்வுப் புலங்களில் உலாவிக் கொண்டிருக்கிற மன வேற்றுமைகள் குழந்தைக்கு முன் தோன்றி விடுகின்றன. பெற்றோர் பலர் எல்லா வகையிலும் ஒருமனப்பட்டு வாழ்பவர் போல வெளித் தோற்றத்தில் இருக்கலாம். எனினும், அன்னவரது மன அயர்வுப் புலத்தில் மன வேற்றுமைகள் குடிகொண்டிருக்கும். கணவர். மனைவியருக்குள்ளே மன அயர்வுப் புலத்தில் தோன்றுகிற கோளாறுகள் எத்தன்மையனவாக இருக்கலாம் என்று பார்ப்போம்.

கற்பனைக் காதலனும், காதலியும்

ஒரு பெண்ணுக்கும், ஆணுக்கும் கடிமணம் ஆகப் போகிறது. தன்னறிவு வந்த நாள் முதலாகத் தன் கணவன் இன்னின்ன உடற் கூறுபாடுகளும் தன்மைகளும் பண்பும் பெற்றிருக்கவேண்டும் என்று பெண்

சிந்தனை செய்கிறாள்; தன் கற்பனைத் திறத்தால் மன அயர்வுப் புலத்தில் ஒரு காதலனை உருவாக்கி வைக்கிறாள். முதன் முதலில் மனத்தின் உணர்வு தெளிவுப் புலத்திலே தான் ஒருத்தி கற்பனைத் திறத்தால் தன் காதலனை உருவாக்கி வைக்கிறாள். ஒரு ஆணும் தனக்கு விவாகமாவதற்கு முந்தியே தன் காதலி இன்னின்ன உடற் கூறுபாடுகளும், அழகும், தன்மைகளும், பண்பும் உடையவளாக இருக்கவேண்டும் எனத் தன் மனத்தின் உணர்வு தெளிவுப் புலத்திலே கற்பனைத்திறத்தால் படைத்து வைத்துக்கொள்கிறான். ஆனால், [1] நினைவுலகத்திலே, சமூகக் கட்டுப்பாடுகள், குடும்ப நெருக்கடிகள், சடவுடலின் காம அலைகள், பணக் கஷ்டங்கள், ஆதரிப்பாரற்ற தன்னந் தனிமையான நிலைகள் என்றிப்படியே பல காரணங்கள் திரண்டு வந்து, ஓர் ஆணையும் பெண்ணையும் இல்லற வாழ்க்கையில் பொருத்தி விடுகின்றன. இருவரும் சிறிது காலம் இல்லற வாழ்க்கை நடத்தும் பொழுது, கற்பனை உலகத்திலே கண்டு மகிழ்ந்த காதல் வாழ்க்கையின் இன்ப நிலை வேறு, நினைவுலகத்திலே நடந்திருப்பது வேறு என்னும் உண்மை படிப்படியாக வெளிப்படத் தொடங்குகிறது இருவரும் தத்தம் கற்பனைத் திறத்தால் உணர்வு தெளிவுப் புலங்களில் உருவாக்கிய குறிக்கோள்-நாயகியும், குறிக்கோள்-நாயகனும் அவரவரது மன அயர்வுப் புலத்தில் அடங்கி விடுகிறார்கள். சமூகக் கட்டுப் பாட்டின்படி மணச் சடங்கு முடிந்து இல்லறவாழ்க்கை தொடங்கிய பிறகு பெண், தான் படைத்த ஒப்புயர்வற்ற கற்பனைக் காதலனைப்பற்றி ஒரு பொழுதும் பேச முடியாது. கணவனும் தான் படைத்து வைத்திருக்கும் தன்னிகரில்லாத மாண்புடைய கற்பனைக் காதலியைப் பற்றிப் பேச நாணுவான். இருவரும் படைத்த இரு உத்தம குறிக்கோள்களும் மன அயர்வுப் புலத்தில் பதுங்கிக் கிடக்கின்றன. புறத்தோற்றத்தில் இருவரும் இல்லற விதிகளுக்கு இசைந்து வாழ்பவர்போல் இருப்பார்கள். உலகம் பொருத்தி வைத்த நியதிப்படி மனைவியாக வந்தவள்

1. நினைவுலகம்—*World of Reality*.

தன்னைத் தொட்டுத் தாலிகட்டிய கணவனைத் தெய்வமாகக் கருதி அவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளை எல்லாம் காதல் நாயகியின் நிலையிலே செய்து வருவாள். கணவனும் இல்லற ஒழுக்கத்தில் சற்றும் தவறாதவனாய், பிறனில் விழையா நோன்பு உடையவனாய் வாழ்வான்.

இருவரது இல்லற ஒழுக்கங்கள் முழுவதும் உணர்வு தெளிவுப் புலத்திற்கு இசைந்த முறையிலே நிகழ்வன; எனினும், பெண்ணின் மன அயர்வுப் புலத்தில் திருக்கோயில் கொண்டிருக்கிற கற்பனைக் காதலன் அடிக்கடி தன்னிகரில்லா எழிலுருவைத் தன் காதலிக்குக் காட்டுகிறான். பெண் தன் கற்பனை உலகத்தில் பிறந்த காதலனோடு நினைவுலகத்தில் மணக்க நேர்ந்த நாயகனை ஒப்பிட்டுப் பார்க்கிறாள். நினைவுலகத்தில் தன்னை மணந்து கொண்டவன், மன அயர்வுப் புலத்தில் பதுங்கிக் களிக்கிற கற்பனைக் காதலனுக்கு எதிரே மிகவும் குறைவுள்ளவனாகத் தோன்றுகிறான். மெதுவாக மனைவிக்குள்ளே அதிருப்தி நுழைகிறது. இவ்வாறே கணவனும் தன் கற்பனைக் காதலியை நினைவுலகில் மணந்து கொண்ட மனைவியோடு ஒப்பிட்டுப் பார்க்கிறான். தன் மனைவி கற்பனை உலகத்தில் படைத்து வைத்திருக்கும் காதலியின் அடித் தூசுக்கும் நிகராகமாட்டாள் என்று நினைக்கிறான். அவனுக்கும் தன் நாயகியிடம் மெதுவாக அதிருப்தி ஏற்படுகிறது. இப்படி இருவரும் தத்தம் மன அயர்வுப் புலங்களில் பதுங்கிக்கிடக்கிற கற்பனை நாயக நாயகிகளை ஒப்பிட்டுப்பார்த்து, அதிருப்தியை முழுவதுமாக வளர்ப்பதற்குள்ளே, இயற்கை நியதிகள் குறுக்கிடுகின்றன. உலகப் போக்கிலே இருவருக்கும் நேர்ந்த தொடர்பை இறுகக் கட்டி வைக்க ஒரு குழந்தை பிறக்கிறது. புறம்பாகத் தொடர்பு வலுத்தாலும், அந்தரங்கத்தில் அன்புத்தளைகள் நெகிழ்கின்றன. அந்தரங்கத்திலே நிகழ்வதொன்றையும் மனத்தின் உணர்வு-தெளிவுப் புலம் அறிவதில்லை. ஆகையால், கணவனும் மனைவியும் தமது மன வேற்றுமைகளுக்குக் காரணம் என்ன என்பதை அறியாமலே வாழ்கிறார்கள்.

பெண்களும் ஆண்களும் இவ்வாறே கற்பனைக் காதலர்களைப் படைத்துக்கொள்கிறார்கள், என்பதற்கு எண்ணிறந்த அனுமானங்களும், ஆராய்ச்சித் தெளிவுகளும் உள்ளன. ஆண்டாள் தன் கற்பனை உலகத்தில் கலந்த காதலனையும், அவனுடைய அழகையும், கனவுலகில் அவனை மணந்ததையும் வெகு விரிவாகப் பாடுகிறாள். பாணனுடைய மகளாகிய உஷை என்பாள் அநிருத்தனைக் கனவில் கலந்ததும், வாஸவதத்தை கனவில் கண்ட அழகனை நினைவுலகத்தில் பெற முயன்றதும் யாவும் நொடிப் பொழுதிலே திரட்டிய புராணச் சான்றுகள். கந்தருவன் ஒருவன் வந்து கட்டழகியை எடுத்துச் செல்லுதல், நீரிலும் வானிலும் ஓர் அழகனைக் கண்டு மயங்குதல் போன்ற பல கதைகள் கற்பனைக் காதலரைப் படைக்கும் ஆற்றலுடைய பெண்களின் உள்ளக் கிடக்கையை உணர்த்துவனவாம். இந்த விஷயத்தை நிலைநாட்ட எத்தனையோ நியாயங்களும் ஆராய்ச்சித் துணிபுகளும் குவியலாக இருக்கின்றன. உலகத்திலே மணந்து இல்லற வாழ்க்கையில் இருக்கிற பெண்களும், மணமாகாத பெண்களும், கணவனை இழந்த பெண்களும், கணவரைத் துறந்த பெண்களும் நாள்தோறும் தாம் காணும் கனவுகளை எழுதி வைப்பாராயின் அவையாவும் மலையளவிலே சான்றுகளாகி இவ்வுண்மையை வற்புறுத்தும். ஆண்கள் கனவில் காண்கிற காதலியைப் பற்றி வெளியே சொல்ல வெட்கப்படமாட்டார்கள். 'கனவிலே மோகினி வந்து கலந்தாள்' என்று கூசாமல் கூறுவர். அவர்கள் இவ்வுலகில் நெடுங்காலமாகத் தேடி வைத்திருக்கும் உரிமை இவ்வாறு வாய்விட்டுச் சொல்வதற்கு இடம் தருகிறது.

நிற்க: அந்தரங்கத்தில் நிகழ்கிற நாடகங்கள் பல தருணங்களில் கணவன் மனைவியரது வாக்குத் தர்க்கங்களின் வாயிலாகவும், செயல் போக்கின் வாயிலாகவும் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளுகிற வகை வழிகளின் மூலமாகவும் நாளுக்கு நாள் வெளிப்படுகின்றன. பிறந்த குழந்தையோ மிகத் திறமை வாய்ந்த மானஸ சாஸ்திரி.

அந்தரங்கத்தில் ஏற்பட்டிருக்கும் மன வேற்றுமையைப் பெற்றோர் தாமே உணர்வதற்கு முந்தியே குழந்தை தெரிந்து கொள்கிறது. மன உணர்வு - தெளிவுப் புலமும் மன அயர்வுப் புலமுமாகிய இரண்டும் உருவாகி வரும் பருவத்தில் இருக்கிற குழந்தையின் கண்கள், ஒளி - ஓவியத்தைப் பதிவு செய்யும் காமராவின் கண்ணாடியிலும் வெகு நுட்பமானவை. குழந்தையின் செவிகள் மிகவும் நுண்ணிய ஒலிப் பதிவுக் கருவிகளைவிடப் வெகு நுட்பமானவை. குழந்தையின் ஐம்புலன்களும் வெகு நுட்பமான உணர்வுடையவை. தந்தை ஏந்தி எடுத்து அணைக்கிற தன்மையிலேயே அவருடைய மன அயர்வுப் புலத்தைக் குழந்தை ஆராய்ந்து விடுகிறது; தன் தாயை உள்ளும் புறமுமாக ஆராய்கிறது; இந்த ஆராய்ச்சிக்கு ஐம்புலன்களோடு [1] இயற்கை - உணர்வு என்னும் கல்லூரிக் கூடத்தில் பயின்று வந்த எண்ணிறந்த ஆராய்ச்சி முறைகளையும் கையாளுகிறது. பெற்றோரது மன அயர்வுப் புலத்தில் தோன்றுகிற கோளாறுகளை நாளடைவில் நன்ருய் உணருகிற குழந்தைக்கு, வாழ்க்கைத் தொடக்கத்தில் தானும் தன் பெற்றோரும் ஒன்று என்று உணர்ந்த உணர்வு 'கிடுகிடு' என்று ஆடத் தொடங்குகிறது. பெற்றோர் இருவரில் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் அவா குழந்தையின் உள்ளத்தில் பிறக்கிறது. குற்றவாளி செய்த குற்றம் என்ன? அந்தக் குற்றத்திஞல் வருந்துபவர் யார்?—என்பதைத் தீர்மானிக்கக் குழந்தை முயலுகிறது. தன் மனத்தில் நிகழ்கிறவைகளை வாய் திறந்து சொல்லக் குழந்தைக்குத் தெரியாது. மனத்தால் உணர்கிற ஆற்றல் ஒன்றே குழந்தைகளிடத்தில் அமைந்திருக்கிறது; எனினும், வரைகிற படங்கள் வாயிலாகவும், கூறுகிற கதைகள் மூலமாகவும், கனவுகள் வாயிலாகவும், விளையாட்டுக்கள் வாயிலாகவும் தனக்கும், பெற்றோர்க்கும் உள்ள உறவையும், பெற்றோர் தமக்குள் அமைகிற உறவையும் வெளியிடுகிறது.

மக்கள் பெற்றோரின் கண்ணாடி உருப்போன்றவர்;

---

1. இயற்கை - உணர்வு—*Instinct.*

பெற்ருேரின் குணங்கள் யாவும் குழந்தைகளிடத்தில் அடுத்தது காட்டும் பளிங்குபோலத் துலங்குகின்றன. இத்தகைய மிகப் பெரிய இரகசியங்கள் பெற்ருேருக்கும் குழந்தைகளுக்குமுள்ள உறவுத் தொடர்புகளில் மறைந்திருக்கையில், மக்களைப் பெற்று வளர்க்கிற தாய் தந்தையர் தமது மனமொழி வினைகளில் எம்மட்டும் தூய்மை உடையவர்களாக இருக்கவேண்டும் என்பது புலனுகிறதல்லவா? தாய் தந்தையரிடையே இடையருத அன்பு வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கவேண்டும். வெறும் காமக் கலப்பான அன்புமட்டும் மக்களை வளர்க்கிற முன் மாதிரி இலக்கணங்களாக அமையாவாம்.

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது "

என்ருர் திருவள்ளுவ நாயனுர். இக்குறளடிகளைப் பெற்ருேர் ஆராயவேண்டும். இல்லற வாழ்க்கையின் பண்பும் பயனுமாக விளங்குவன அன்பும் அறமுமேயாம். இவ்விரண்டும் உடைய பெற்ருேரின் மக்கள் குணம் என்னும் குன்றேறி நிற்கிற சான்ருேராவர்; உலகத்திற்கு நிலையான க்ஷேமம் விளைப்பர்.

குழந்தைக்கும் பெற்ருேருக்கும் உள்ள அன்புத் தொடர்பைப் பற்றி மேலைநாட்டு ஆராய்ச்சிகள்

மிலானி-க்ளெயின் * என்னும் மாது சிரோமணி மானஸ சாஸ்திர ஆராய்ச்சியில் புகழ் பெற்றவர். இவர் குழந்தைகளைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்திருக்கிருர். குழந்தைகள் விழிப்பு நிலையில் விளையாடுகிற விளையாட்டுக்கள் அவர்களுடைய மன அயர்வுப்புலத்தின் நிலைமையைக் காட்டுகின்றன என்பதற்குப் பல சான்றுகள் தந்திருக்கிருர். சுமார் மூன்று வயதான ஒரு குழந்தை அடிக்கடி ஒரு விளையாட்டை விளையாடி வந்தாள். அவள் பொம்மையை உறங்க வைத்துவிட்டு, அதன் பக்கத்தில் ஒரு யானைப் பொம்மையைக் காவல் வைத்தாள். அந்த யானையைக் காவல் வைத்ததன் நோக்கம் என்ன என்று

* *Melanie Klein*

மிலானி-க்ளெயின் அம்மையாரே கூறுகிறார் :—"அந்த பொம்மை நித்திரையில் எழுந்து தன் பெற்றோர் உறங்கும் அறைக்குள் சென்று அவர்களுக்குத் தீங்கு இழைக்கலாது. பெற்றோருக்குத் தீங்கிழைக்க வேண்டுமென்னும் எண்ணம் குழந்தைக்கு இரண்டு வயதாவதற்கு முந்தியே ஏற்பட்டிருந்தது. அக்காலத்தில் தாய் தந்தைபால் காதல் உறவு கொண்டாடியதைக் குழந்தை கவனித்திருந்தாள். அப்பொழுது குழந்தையின் உள்ளத்தில் தாய்மீது பொறாமை தோன்றிவிட்டது. தாயின் நிலையில் தான் இருந்துவிட்டால், தந்தை தன்னிடம் பிரியமாக இருப்பார் என்று எண்ணித் தாயின் நிலையை அடைய வழி ஒன்றைச் சிந்தித்தாள். யானையையும் பொம்மையையும் வைத்து விளையாடிக் கொண்டிருந்த காலத்தில், தாயின் வயிற்றில் இருந்த குழந்தையை இச்சிறுமி திருடிக்கொள்ள வேண்டும் என்று விரும்பினாள். அவளுடைய விளையாட்டில், யானை தந்தையின் நிலையிலே இருந்தது. தாய்க்குத் தந்தை காவலாக இருந்து வருவதனால் அன்றோ தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தையைத் தன்னால் திருட முடியவில்லை. குழந்தையின் நிலையிலே பொம்மை இருந்தது. பொம்மை தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தையைத் திருடிவிடும் ; அப்படித் திருடாதபடி யானையாகிய தந்தை காவல் செய்தது." இதைப் போன்ற பல விளையாட்டுக்களைக் குழந்தைகள் விளையாடுகிறார்கள் என்றும், அவற்றின் பொருள் என்ன என்றும் அம்மையார் தமது ஆராய்ச்சி நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

வாழ்க்கைத் தொடக்கத்தில் குழந்தை தனக்கு இஷ்டமான காரியங்களை எல்லாம் செய்கிறது. வரவரப் பெற்றோரின் விருப்பத்திற்கு ஏற்பப் பல காரியங்களைச் செய்யத் தொடங்குகிறது. சமூகத்தின் அங்கத்தினரான பெற்றோருக்கு அடங்குவதன் மூலமாகச் சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு அடங்கப் பழகுகிறது. குழந்தையின் வாழ்க்கை தொடங்கும்பொழுது இரண்டு எல்லைக் கோடிகள் காணப்படுகின்றன. ஒன்று தன் சுய விருப்பத்தின்படிச் செய்ய வேண்டும் என்பது. மற்றொன்று, சமூகக்

கட்டுப்பாட்டிற்கு அடங்கி இருக்க வேண்டும் என்பது. குழந்தை தன் விருப்பப்படி செய்வதற்குச் சுதந்திரம் பெருவிட்டால், அதன் மூர்த்தி - விசேஷம் உருப்படாமல் போகிறது. சமூகத்திற்கு அடங்கி ஒழுகாவிட்டால் தன்மயம் தாறுமாருக உருவாகிறது. வாழ்க்கையின், ஆரம்பத்தில் எல்லைக் கோடிகளாக இருக்கிற இவ்விரு [1]கடையாந்தரங்களையும் ஒன்ருகப் பொருத்துவது எப்படி? மிகவும் முக்கியமான பிரச்னை இது.

வாழ்க்கை தொடங்கும்பொழுது தாயைக் காதலித்து அவளைத் தனக்கே சொந்தமாக வைத்துக்கொள்ள விரும்பித் தன் தந்தையைப் பகைக்கிற ஆண் குழந்தையின் மனத்திலே சிக்கல்கள் தோன்றுகின்றன. அவன் வாலிபப் பருவத்தில் தான் காதலிக்கிற ஒரு பெண்ணை வருமானக் குறைவு, கல்விக் குறைவு, சமூகக் கட்டுப்பாடுகள் முதலிய பல காரணங்களால் மணந்து இன்புற முடியாமல் கட்டுண்டு தவிக்கிற காலத்தில், இந்த ஆரம்ப மனக் கோளாறுகள் அவனது மனத்தின்கண் விடுக்க முடியாத சிக்கல்களாகப் பரிணமிக்கின்றன. ஒருவன் ஒன்றை விரும்பினல், சமூகம் மற்ருென்றை அவனிடம் விரும்புகிறது. சமூகம் விரும்புவது அவனுக்கு விருப்பம் அன்று.

பெற்ருேர் என்பதைச் சமூகத்தின் பிரதிநிதிகள் என்று கொள்ள வேண்டும். தானும் தன் பெற்ருேரும் ஒன்றே என்ற மனப்பான்மையோடன்ருே குழவி-வாழ்க்கை தொடங்கியது? அந்த மனப்பான்மை இருந்த நாட்களில் குழந்தையின் விருப்பமும் பெற்ருேரின் விருப்பமும் வேற்றுமை இன்றியே இருந்தது. எல்லைக் கோடுகளில் இரு கடையாந்தரங்களும் ஒன்ருகக் கட்டுண்டு இருந்தன. தாயைத் தன் இன்பப் பாத்திரமாக எப்பொழுதும் வைத்துக்கொள்ளக் கருதிய நாளினின்று, சமூகம் வேறு, தான் வேறு, தன் விருப்பம் வேறு, சமூகத்தின் விருப்பம் வேறு என்ற மனப்பான்மை குழந்தையின் உள்ளத்தில் உதயமாகிறது. பெண் குழந்தை தனக்குப் பிடிக்காத

---

1. கடையாந்தரங்கள்—*Extremities.*

தாய், தன் தந்தைக்கும் பிடிக்காமல் போகவேண்டும் என்று விரும்புகிறுள். வாழ்க்கையின் ஆரம்பத்தில் இருந்த அழகிய தொடர்பு பிற்காலத்தில் சிதைந்து விடுகிறது; குறிக்கோள் ஒரு புறமாக ஒதுங்கி நிற்கிறது. இயற்கை-விருப்பம் மற்ருெருபுறம் விலகி நிற்கிறது. இரண்டிற்கும் ஏற்படும் போராட்டத்தினுல் குழந்தையின் மற்ருெரு தன்மயம் உருவாகி வருகிறது.

நமது முன்னேர் கட்டிப் புகன்ற கதைகளில் ஒன்று ஆத்ம தத்துவம் அடங்கியது; வெகு இரசமானது. ஆத்மா என்னும் அரசனுக்கு மூன்று அமைச்சர்கள். அம் மூன்று அமைச்சர்களும் முறையே விகாரி, அகங் காரி, மமகாரி என்னும் பெயர்களை உடையவர்கள். விகாரியின் வேலையாட்கள், காமன், குரோதன், லோபன், மோகன், மதன், மாச்சரியன் என்னும் பெயருடைய அறுவராவர். இந்த ஆறு வேலையாட்களும் தத்தம் பெயருக்கு இசைந்த விகாரங்களை உண்டுபண்ணுகிற வர்கள். விகாரிக்கு முற்றிலும் எதிரிடையானவன் அகங் காரி. அகங்காரி விரும்புவதெல்லாம் பெருமை ஒன்றே. இவன் பிறர் கண்டு புகழ்கிறதைச் செய்யும் இயல்புடைய வன். ஆகையால், அகங்காரி தன் சொந்த விருப்பத்தை ஒருபுறம் கட்டிவைத்துவிட்டு, பிறர் மனம் மகிழ எதையும் செய்பவன். மமகாரியோ இருதலைக் கொள்ளி; மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டுகிற இயல் புடையவன். இவனுடைய ஒரே நோக்கம் தன்னயமான இன்பமே தன் சொந்த இன்பத்தை அனுபவிப்பதற் காகச் சமூகக் குறிக்கோள், சமூக நன்மை எனப்பல உடைகளால் தன் மெய்யுருத் தோன்ருமல் வேஷம் புனைந்து இன்பம் தேடித்திரியும் இயல்புடையவன்; இவன் மிகப்பெரிய வேஷதாரி.

உலகப் புகழ்பெற்ற ஸிக்மண்டு ஃப்ராய்டு என்ற மானஸ சாஸ்திரி யூதர் வகுப்பில் உதித்தவர். மனத்தின் இயல்புகளை அறிந்துகொள்ள நெடுங்காலம் பலஆராய்ச்சி கள் செய்து வந்தவர். அவருடைய அகன்ற ஆராய்ச்சி

உ—15

களின் முடிவிலே முன்னே கூறிய **விகாரி,**[1] **அகங்காரி**[2] **மமகாரி**[3] என்னும் மூவரைப்போன்ற பேர் வழிகள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருப்பதை உணர்ந்தார். குழந்தையின் தன்னியல்பான இயற்கை-உணர்ச்சிகள் யாவும் விகாரியின் ஆட்சிக்கு அடங்கிக் கிடக்கின்றன. விகாரி நிலையிலிருந்து எழுகிற உணர்ச்சிகளுக்குப் பரஸ்பரத்தொடர்பும் இல்லை; வெளி உலகத் தொடர்பும் இல்லை. இந்த விகாரி கட்டுத்திட்டங்களுக்கு அடங்காத மிருகத்தைப்போல் தனக்கு இஷ்டமானதைச் செய்ய விரும்புவான். விகாரிக்கு வாழ்கைக் குறிக்கோளும் இல்லை; சொந்த வேதாந்தமும் இல்லை; சித்தாந்தமும் இல்லை. குழந்தைக்குள் இருக்கும் அகங்காரியோ இயற்கை உணர்ச்சிகளின் மூலமாக வெளியுலகத்தோடு உறவாடுகிறவன்; தனக்கு வேண்டியதைத் தெரிந்து கொண்டு வேண்டாததைக் கழித்துத் தள்ளுகிறவன்; அப்படித் தெரிந்து கொண்டவைகளையும் வெளியுலகத்திற்கு ஏற்றமாதிரி மாற்றி அமைக்கிறவன்; சமூகக் கட்டுத்திட்டங்களையும், சமூகப் பழக்க வழக்கங்களையும் நிலை நிறுத்துகிறவன்; மனிதரின் அகங்காரி நிலைகள் நாடுதோறும், சமூகந்தோறும் மாறுபாடு அடைகின்றன. ஒரு சமூகத்தின் அகங்காரி நிலையில் சிறந்ததாகக் கருதப்படுகின்றவை, மற்றொரு சமூகத்தின் அகங்காரி நிலையில் சிறந்ததாகக் கருதப்படுவன அல்ல. ஐரோப்பிய நாடுகளின் அகங்காரி நிலை ஆண் பெண்கள் கலந்து உறவாடுவதை நாகரிகமாகக் கருதும். நம்முடைய நாட்டு அகங்காரி நிலையோ பெண் ஒருத்தி ஆண்களோடு சரிசமனாக எவ்விடத்தும் கலந்து பழகினால், அவளைக் குடும்ப வாழ்க்கைக்குத் தகுதி அற்றவளாகக் கருதி விடும். எஸ்கிமோ சமூகத்தாரின் அகங்காரியோ, வீட்டுக்கு வரும் விருந்தாளியோடு சிற்றின்பம் அனுபவிக்கத் தன் மனைவியை அளிப்பதையே நாகரிகமாகக் கருதும்.

1. **விகாரி**—*Id or Libido.*
2. **அகங்காரி**— *Ego.*
3. **மமகாரி**—*Super Ego.*

நாகரிகம் மிக்க ஐரோப்பிய அகங்காரி நிலைகூட எஸ்கிமோவின் அகங்காரி நிலையை ஒப்புக்கொள்ளாது. இப்படியே சமூகந்தோறும் அகங்காரி வகுக்கிற கட்டுத் திட்டங்கள் வேற்றுமைப்படுவன. அவற்றிற்கு ஏற்ப ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் அகங்காரி உருவாகி வருகிறது. வேஷதாரியாகிய மமகாரியின் நிலையிலிருந்துதான் ஈடிப்பஸ் மனச்சிக்கல்களும், எலக்ட்ரா மனச் சிக்கல்களும் புறப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட விகாரி, அகங்காரி, மமகாரிகளாகிற மூன்று நிலைகளும் ஒரு குழந்தையின் வாழ்க்கையில் கலந்து உருவாகி வெளிப்படுகின்றன. ஒரு தருணம் ஒரு நிலை தலை தூக்கி நிற்கும்; மற்றொரு தருணம் வேறொன்று தலை தூக்கி நிற்கும். இவற்றில் மமகாரிதான் மிகப் பெரியவனாகத் தலைமை இடத்திலே நிற்பவன்; 'மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலும் இடி' என்றபடி, ஒரு பக்கத்தில் கட்டுக்காவலறியாத விகாரியும், மறு பக்கத்தில், கனவையும், நனவையும், கற்பனையையும் கூட சரியா தப்பா என்று ஆராய்ந்து கொண்டு, தனக்குச் சரியானதாகத் தோன்றுகிறவைகளை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்திக் கொண்டிருக்கிற அகங்காரியும் நெருக்குவதனால் துன்பப் படுகிறவன் மமகாரியே. இவன் தன்னை நெருக்கிக் கொண்டிருக்கிற இருவரையும் சமாதானம் பண்ணப்பார்க்கிறான்; முடியாமல் சங்கடப் படுகிறான்.

குழந்தைக்கும் பெற்றோருக்கும் உள்ள உறவு விகாரி, அகங்காரி, மமகாரிகள் குடியிருக்கும் மனத்தின் அயர்வுப் புலத்தையும் தாண்டி ஆத்மாவின் சந்நிதானத்தை அடைகிறது. ஞானசக்தியினாலே இந்த உறவு ஆத்மாவையும் தொட்டுவிடுகிறது. ஃப்ராய்டும் இதைப்பற்றி வெகு விரிவாக எழுதியிருக்கிறார். தற்காலத்தில் எஃரென்வால்ட்,* பீர்போல்ட்,† டாக்டர் ஈ. ஜே. பெண்டிட்‡ முதலானோர்,

* *Ehrenwald*

† *Peerbolt*

‡ *Dr. E. J. Bendit*

பெற்றோரின் ஆத்மீக அனுபவங்களைக் குழந்தை தன் சொந்த அனுபவமாக்கிக் கொள்கிறது என்றும், பெற்றோரின் அனுபவங்களை ஆத்மீக சக்தியால் கவர்ந்து கொள்கிறது என்றும் கூறுகிறார்கள்.

குழந்தைகளின் மனத்தைப் பற்றி இதுகாறும் செய்துள்ள ஆராய்ச்சிகளால் மானஸ சாஸ்திரிகள் தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள மனநிலை ஒற்றுமையைத் தெளிவாக்கியிருக்கிறார்கள். சில தருணங்களில் தாயின் குழந்தைப்பருவ அனுபவங்கள் அவளுக்குப் பிறக்கிற குழந்தைகளின் குழவிப்பருவ அனுபவங்களிலும் தோன்றுகின்றன. குழந்தைக் கனவுகளை ஆராய்ந்த போது குழந்தைக்கு விளங்காத முதியவரின் அனுபவங்கள் குழவிக்கனவுகளின் சாரமாக இருந்தன. ஒரு ஆத்மாவுக்கும் மற்றோர் ஆத்மாவுக்கும் இடையே தடுப்புச் சுவர் ஒன்றும் இல்லை என்பது இந்த ஆராய்சிகளால் தெளிவாயிற்று. பெற்றோரின் உள்ளத்தை வருத்துகிற கவலைகள் குழந்தைகளின் உள்ளத்தையும் தாக்குகின்றன. தாயாகிலும் தந்தையாகிலும் துன்பக் கடலில் மூழ்கியிருந்தால், குழந்தையும் அதே கடலில் குதித்து விடுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம், விரோதிகள் தீமை செய்வார்களோ என்ற அச்சம், தனக்குள்ள ஆற்றலிலே தன்னம்பிக்கையின்மை, எப்பொழுதும் குற்றங்களையே சுட்டிக் காட்டித் துன்புறுத்தும் எஜமான்களைப் பற்றிய பயம், உடனூழியக்காரர்களின் பொறாமை, வீட்டில் மனைவி "அது இல்லை, இது இல்லை" என்று கூறி வறுமையை ஓயாமல் சுட்டி உணர்த்துதல், கணவர் மனைவியருக்கிடையே ஏற்படுகிற பிற மன வேற்றுமைகள் என்பன போன்ற பல காரணங்களால் இல்வாழ்க்கையின் ஐக்கிய நிலைக்கும் சாந்தி நிலைக்கும் சிதைவு ஏற்படும் பொழுது, பெற்றோரின் மன நிலைகள் பலவாறு மாறுதல் அடைகின்றன. இவை குழந்தைகளையும் தாக்குகின்றன என்று மானஸ சாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஆகையால், பெற்றோர் தமது மனத்தின் சாந்திநிலை குலையாதவண்

ணம் காத்து வந்தால், குழந்தைகளின் [1]மனோபாவங்கள் சீரிய பண்பிலே உருவாகும்.

"உரன் என்னும் தோட்டியால் ஓர் ஐந்தும் காத்தல்" குழந்தைகளைப் பெற்று வளர்க்கிற பெற்றோர்க்குப் பொருந்திய கடனேயாம்..

பெற்றோர்க்கும் குழந்தைக்கும் இடையே ஏற்படுகிற ஆத்மீக உறவை எல்லாம் நன்றாய் உணர்ந்த தாய் ஒருத்தி தன் ஆண் குழந்தையிடம் தனக்கு ஏற்பட்டுள்ள ஆன்மீயத் தொடர்பை வாழ்க்கையின் தொடக்க நாட்களி லிருந்தே காத்துங்கொள்வதில் கண்ணும் கருத்துமாயிருந் தாள். குழந்தைக்கு ஒன்பது மாதம் ஆனதும், தாய் எக் காரணம் பற்றியாவது வீட்டைவிட்டு வெளியே போக நேரும்பொழுது, தன் குழந்தையிடம், இன்ன நோக்கத் திற்காகச் செல்வதாகவும், இன்ன நேரத்திற்குள் திரும்பி விடக் கருதியிருப்பதாகவும் வெகு தெளிவாக அவன் பக்கத்தில் உட்கார்ந்து சொல்லுவாள். தாயின் இந்தச் செய்கை பலருக்கும் பெரு நகைப்பை விளைத்தது. எனினும் தாய் தன் வழக்கத்தைக் கைசோர விடவில்லை. குழந்தையின் ஆத்ம சாந்திக்கும், நம்பிக்கைக்கும் இந்த வழக்கம் மிகவும் அவசியம் என்று தாய் கருதினாள். இப்படி வளர்த்த குழந்தையோ ஆத்ம சாந்தியோடு, எவ்விதமான பயத்திற்கும் இடங் கொடாமல், கலங்காத மனம் உடையவ னாக வளர்ந்து வந்தான்.

குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே, உணர்வு-தெளிவுப் புலத்திலும், மன-அயர்வுப் புலத்திலும் ஏற்படுகிற தொடர்போடு ஆன்மீயத் தொடர்பும் நெருங்கிக் கிடக்கிறது என்ற உண்மை, குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பெற்றோரின் பொறுப்பைப் பன்மடங்கு வற் புறுத்திக் காட்டுகிறது. மகனைச் "சான்றோன்" என்று உலகம் கொண்டாடுவதைக் கேட்டு மகிழ்கிறவள் தாய். தாய் இத்துடன் திருப்தி அடைந்துவிட்டால், குழந்தைக்குத் தான் செய்ய வேண்டுவனவற்றை எல்லாம் செய்துவிட்ட

---

1. மனோபாவங்கள்—மனத்தின் நிகழ்ச்சிகள்,

தாகக் கருத இடம் இல்லை. உலகம் புகழ ஒழுகும் குழந்தை தனக்குள்ளே எத்தனையோ இயற்கையான உணர்வுகளை அடக்கிக் கொன்று வீழ்த்தியிருக்கலாம். விகாரிக்கும் அகங்காரிக்கும் ஓயாத சண்டை சச்சரவுகள் ஏற்பட்டிருக்கலாம். இந்தப் போர்க்களத்திலே வெற்றி அடைந்த பிறகுதான் ஒருவன் உலகப்புகழைத் தேடிக்கொள்ள முடியும். குழந்தையின் மன அயர்வுப் புலத்தில் போர் நிகழ்ந்த காலத்தில் குழந்தைக்கும் தாய்க்கும் இருந்த உறவு எத்தகையது என்பதைக்கூட இருவரும் சிந்திக்க இடமில்லாமல் போகிறது. உலகம் எங்கும் புகழ்பெற்ற குழந்தை வெளிப் பார்வைக்கு ஸவரணைத் தோன்றலாம். உரைத்துப் பார்க்கும் பொழுதல்லவோ மாற்றுத்தெரியும்?

தாய், தன் குழந்தையை உலகம் புகழ்வது கேட்டு மகிழ்கிறாள். ஆனால், தந்தையோ, பெற்றோருக்கும் குழந்தைக்கும் உள்ள ஆன்மீயத் தொடர்பை உணர்ந்து, தன் மகன் உலகப் புகழ்ச்சியோடு திருப்தி அடைந்து விடாமல், அதனிலும் ஏற்றமான நிலையை அடைய வேண்டும் என்று தன் கடமையை நிறைவேற்ற முயல வேண்டும். இதைத் தான் திருவள்ளுவர்,

> தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
> முந்தி இருப்பச் செயல்,

என்று வெகு அழகாகக் குறிப்பிடுகிறார். இந்தக் குறளுக்கு உரை எழுதுகிற பரிமேலழகர், 'அவையத்து' என்பதற்கு, "கற்றார் அவையின் கண்" என்று பொருளை விரிக்கிறார். வேறு உரையாசிரியர்கள் "மெய் அறிவு கண்ட மேலவரின் சபையிலே" என்று பொருள் விரிக்கின்றனர். குழந்தைகளை உபசாந்தி அடைந்த ஞானிகளின் கூட்டத்திலே தலைமை இடம் பெறக்கூடியவர்களாகச் செய்கிற வளர்ப்பு முறையிலும் சிறந்த குறிக்கோள் மற்றொன்று இவ்வையகத்தில் உளதோ? காஞ்சிப் புராணத்தின் ஆசிரியர் குழந்தைக்கும் பெற்றோருக்கும் உள்ள உறவையும், அவர்கள் குழந்தைகளை வளர்க்கிற பண்பிலே பிள்ளைகள் உருவாகி வருகிற பொலிவையும் வெகு சிறப்பாகக் கூறுகிறார்:—

ஈன்று எடுத்தோர் குணம் மகவுக்கு இயையும் முறைப்படி வித்தில்
தோன்றும் முளைமுன் விளர்த்துப் பின் பசந்து தொடர்பினால்
ஆன்ற செழுங் கதிர்களும் முன்தூ வெள்ளையாய் எழுந்து
மான்று மரகத மேனி வாய்த்து மடல் கிழிந்து எழுமால்.

கவி இந்தப் பாடலில் நெற்பயிரின் வளர்ச்சியைச் சிறப்பாக வர்ணித்து, குழந்தைக்கும் பெற்றோருக்கும் உள்ள தொடர்பு முழுவதையும் காட்டுகிறார்.

குழந்தையின் அகத்தையும் புறத்தையும் மாண்புறச் செய்வதில் பெற்றோரின் உறவுத் தொடர்புகளோடு பிறத் தொடர்புகளும் உள்ளன. அவற்றையும் சிந்திப்பது இன்றியமையாதது.

6. குழந்தையும் பண்புச் சிக்கல்களும்

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (குறள்)

நிறைகுடம் நீர் தளும்பாது

நெடுநெடு என்று வளர்ந்த நெடியன் ஒருவனும், குறு குறு என்று குறுகி வளர்ந்த குறளன் ஒருவனும் ஓர் ஊரில் வேதாந்த உபந்யாஸம் செய்து வயிற்றுப் பிழைப்புத் தேடச் சென்றார்கள். நெடியன் குறளனிடம் வேதாந்த நூற்களைக் கற்றவன்; நெடுங்காலம் சீடனாக இருந்தவன். குறளனோ, வெகு வாசாலமாகப் பேசுபவன்; ஆழ்ந்து அகன்ற அறிவுடையவன்; உபகதைகளும் நகைச் சுவைக் கதைகளும் இடை இடையே விரவி வரக், காளமேகமாகச் சொற்பொழிவாற்றுவான். நெடியவனோ, கவர்ச்சியான தோற்றம் உடையவன்; கூர்ந்த மூக்கும், பரந்த நெற்றியும், அகன்ற தோளும், பொன்னிற மேனியும் உடையவன்; குறளனோ பருத்துருண்ட மேனியன். நெடியனுக்குப் பேசும் ஆற்றல் இல்லை; எனினும் யோகியர் போல விழிநடு நெற்றி நோக்கோடு அரைக்கண் பார்வையில் ததாகாரமாக நிற்பான். சொற்கள் தடைபடும்பொழுது கண்ணீர் வடிப்பான். மாலைதோறும் குறளன் நெடுநேரம் வேதாந்த விசாரணை பண்ணுவான். முடிவில் நெடியன் சற்று நேரம் பேசுவான். குறளனது சொற்பொழிவால் குதுகலித்து மகிழ்ந்திருந்த அவையினர் அனைவரும் நெடியன் பேசும் பொழுது அப்படியே மெய்ம்மறந்திருந்து கேட்பார்கள். யாவரும் நெடியனை குரு என்றும், குறளனை சீடன் என்றும் கருதினார்கள். குறளன் கீழே அமர்ந்தால் நெடியன் ஆசனத்தில் அமர்வான். இச் சொற்பொழிவு களைக் கேட்டவர்கள் நெடியனது பையை நிரப்பினர்; குறளனுக்கோ அமுதிட்டு வயிற்றை நிரப்பினர். பல வகையிலும் திறமை வாய்ந்திருந்த குறளன் நெடியனுக்குச் சிறியவனாகவே உலகினருக்கு முன் தோன்றினான்.

குறளனும் நெடியோன் முன்னிலையில் தன்னைச் சிறியவனாகவே கருதலாயினன். விந்தை! விந்தை! நிறை குடங்கள் அலங்காதிருப்பதும், குறை குடங்கள் தளும்புவதும் வெகு விந்தையே!

குறை குடமாக நீர்மொண்டு சென்றால், உடை அலங்காரமெல்லாம் நீரும் சேறுமாகும். நிறை குடமாகச் சென்றால் தளும்பாது. இதை அறியாதார் யார்? எனினும், உலகில் முன்னே சொன்ன நெடியன், குறளனாகிய இருவரிடத்திலும் கண்ட சிறுமை உணர்ச்சிச்

ஆல்ஃப்ரெடு ஆட்லர்
(*Alfred Adler*)

சிக்கலும் உயர்வு மனச் சிக்கலும் பலவாறாகப் பலரிடத்தில் தாண்டவமாடுகின்றன. இந்தத் தன்மைகள் எதனால் வருகின்றன? இந்தக் கேள்வியை நன்றாய் ஆராய்ந்த பெருமை ஆல்ஃப்ரெடு ஆட்லர் என்ற மானஸ சாஸ்திர பண்டிதரையே சாரும்.

சிறுமை உணர்ச்சி

ஒருவருக்குத் தம்மைப் பற்றித் தாமே கொண்ட மதிப்பு குறைவாகத் தோன்றுகிறது. இந்த உணர்ச்சி

யால் ஏற்படுகிற சுய மதிப்புப் போதுமான அளவில் இல்லை. அதனாலே அவருடைய உள்ளத்தில் ஏற்படுகிற உணர்ச்சி, சிறுமை - உணர்ச்சியாக மாறுகிறது. இவ்வாறான ஒரு உணர்ச்சியை ஒருவர் சிறு வயதிலேயே தமக்குள் உண்டுபண்ணிக் கொள்ளலாம். ஒருவர் இப்படித் தாமாகவே தமக்குள் சுட்டி உணர்த்திக்கொள்கிற உணர்ச்சியைச் **சுயச்சுட்டு உணர்ச்சி** என்று கூறுவதும் உண்டு. குறித்த ஒரு சூழ்நிலையிலாவது சந்தர்ப்பத்திலாவது தமது அந்தஸ்திற்கு ஏற்ற உரிமைகளைத் தாம் சரியான முறையில் நிலை நாட்டமுடியாதென்றும், அதற்குத் தம்மிடத்தில் திறமை இல்லை என்றும், நம்மிடத்தில் குறைவாக இருக்கிற விஷயத்தில் பிறரோடு போட்டி போட்டு வெற்றிபெற முடியாதென்றும் உணர்கிற உணர்ச்சிகளெல்லாம் சிறுமை உணர்ச்சியிலே தொடங்குகின்றன.

ஒரு ஆளின் மாற்றுருத்தோற்றமும் நேருருத் தோற்றமும்.

புகைப்படம் எடுக்கிறவன் முதலாவது மருந்து பூசிய ஒரு கண்ணாடியில் ஒரு படத்தைப் பிடிக்கிறான். அந்தக் கண்ணாடியில் படிந்த படத்தைப் பல மருந்துகளால் கழுவி உருவத்தை முதலில் தெளிவாக வெளிப்படச்செய்கிறான். இவ்வாறு முதலில் கண்ணாடியில் விழுகிற படத்தில் வெண்மையாகத் தெரியவேண்டிய பாகங்கள் கருமையாகவும், கருமையாகத் தெரியவேண்டிய பாகங்கள் வெண்மையாகவும் தோன்றும். இப்படித் தெரிகிற படத்திற்கு [1] **மாற்றுருப்படம்** என்று பெயர். இந்த மாற்றுருப்படத்தை மருந்துகள் பூசிய ஒரு காகிதத்தில் அச்சிடும் பொழுது மாற்றுருப் படத்தில் கருமையாக இருந்த பாகங்கள் வெண்மையாகவும், வெண்மையாக இருந்த பாகங்கள் கருமையாகவும் பதியும். அப்பொழுது காகிதத்தில் பிடித்த உருவத்தில் [1] **நேர் உருப்படம்** தோன்றும்.

உலகில் எண்ணிறந்த ஆண்களும், பெண்களும் தம்

1. மாற்றுருப்படம்—*Negative Image*
2. நேர் - உருப்படம்—*Positive Image*

மைத் தாமே படம் பிடித்து வைத்துக்கொள்கிறார்கள். இவர்கள் பிடிக்கிற படம் வெளியே தோன்றும் உருவப் படம் அன்று. இவர்கள் உள்ளே இருக்கும் தமது சொந்தத் தன்மயத்தையே படம் பிடித்து வைத்துக்கொள்கிறார்கள். இப்படி ஒருவர் தாமாகவே தமது தன்மயத்தைப் படம் பிடிக்கிறபொழுது அதைப் போதுமான ஒளியில் பிடிப்பதில்லை. புகைப் படங்களைப் பிடிப்பவர் ஒரு உருவத்தைப் போதுமான ஒளியில் பிடிக்காவிட்டால், அந்த மாற்றுருப்படம் உருவத்தைக் குறைவாகக் காட்டும். அப்படியே ஒருவன் தானே தனது தன்மயத்தைக் குறைவான ஒளியில் படம் பிடித்து உருத்தெளிவு பெறச் செய்து வைத்துக்கொள்வானாகில், அந்த மாற்றுருப் படத்திலிருந்து அவனுடைய நேர் - உருப் படத்தை அச்சிட்டு எடுக்கமுடியாது.

பலவகைச் சிறுமை உணர்ச்சிகள்

"நான் இதைச் செய்தால் முட்டாள் பட்டம் கட்டிக் கொள்வேன்"; "வாழ்க்கைப் போராட்டத்தில் நான் இன்னவர் மத்தியில் முன்னுக்கு வரமுடியாது"; "என் அபிப்பிராயங்களை நான் வெட்ட வெளிச்சமாகச் சொன்னால் பிறர் என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள்"; "என் குற்றம் குறைகளைப் பிறர் சொல்லிச் சுட்டுக் காட்டுவது எனக்கு இஷ்டம் இல்லை;" "இந்தக் காரியம் என் ஆற்றலுக்கு மிஞ்சியது;" "எனக்கு அழகும் இல்லை; கம்பீரமான பார்வையும் இல்லை; வசீகரமான உடலுறுப்பு இலக்கணங்களும், கவர்ச்சியாகப் பேசும் திறமையும் இல்லை. ஆகையால், என் அமைப்பே எனக்கு விரோதமாக இருக்கிறது;" "என் உள்ளத்தில் எழுகிற சிந்தனைகளை நான் தெளிவாகப் பிறருக்குச் சொல்ல முடியாது. அதற்குரிய மொழித் திறமையும் எனக்கில்லை; மனத் தெளிவும் எனக்கு இல்லை;" "நான் அவ்வளவாகப் படிக்கவில்லை; நான் ஐந்தாவது வகுப்புவரைக்குந்தான் படித்திருக்கிறேன்;" "இந்த விஷயத்தில் நான் புகுந்தால், இன்ன சபையில் நான் இருந்தால் நிச்சயமாக நாணம் அடைவேன்;" "இன்ன விஷயத்தைப் பற்றி என்னால்

தர்க்கம் செய்யமுடியாது. இத்தகைய ஒரு காட்சி ஏற்பட நான் இடம் கொடுக்கக் கூடாது;" "என் பெற்றோர் தரித்திரர்; குடிகாரர்; ஒழுக்கம் இல்லாமல் வாழ்ந்தவர்கள்; அடிமைத் தொழில் செய்து வாழ்ந்தவர்கள்; அவர்களிடத்தில் இருந்த குறைகள் பலருக்கும் தெரியும்; அவர்களை அறிந்தவர்களுக்கு முன் நான் எப்படி தலைதூக்கி நிற்கமுடியும்?" "என் குடும்பத்தார் மிகவும் கீழான நிலையில் இருப்பவர்கள்;" "நான் எப்பொழுதும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன்; சிறுமைப்பட்ட குலத்தில் பிறந்தவன்; என் குலத்தோர் பெருமை பாராட்டிக் கொள்வதற்கு ஒன்றும் இல்லாத நிலையில் இருந்தவர்கள்;"—என்றிவ்வாறே பலவகையான சிந்தனைகள் மனிதரின் சிறுமை உணர்ச்சிகளாக அமைகின்றன. இவற்றுள் ஒரே சிந்தனையாயினும் பல சிந்தனைகளாயினும் ஒருவனிடத்தில் உள்ளக் கிடக்கையாகப் பதிந்துவிடுமானால், அவனுடைய தன்மயத்தில் சிறுமை உணர்ச்சிச் சிக்கல் உதயமாகி விடுகிறது.

மனத்தத்துவங்களில் மிகப்பெரிய உண்மை ஒன்றை நாம் ஒரு பொழுதும் மறக்கவே கூடாது. "நாம் நம்மைக் காண்கிறபடியே நமது முழுத் தன்மயங்களும் உருக்கொண்டு அமைந்துவிடும்" என்பதே இவ்வுண்மை. எவனுடைய உள்ளத்தில் சிறுமை உணர்ச்சிச் சிக்கல்கள் ஆட்சி செய்கின்றனவோ அவனுடைய உள்ளத்தில் பயம் அரண்மனை கட்டிக்கொண்டு வாழ்கிறது. ஒருவன் தன் மனைவியிடத்தில் உண்மையான காதல் வாழ்க்கையை நடத்த முடியாமல், பல பெண்களோடு காம வாழ்க்கை நடத்துகிறான். அவனுடைய வாழ்க்கை தவறு என்று மனச்சாட்சி தெளிவாக உணர்த்துகிறது. சமூகச் சட்டங்களும், கட்டுப்பாடுகளும் அவனுக்குள் இந்த மனச்சாட்சியைச் சிறு வயதிலேயே உண்டு பண்ணிவிட்டன. அவனுடைய ஒழுக்கத்தை யாராவது சுட்டிப்பேசினால், அவன், "இப்படி நான் வாழ்க்கையை நடத்தாவிட்டால், பைத்தியக்காரர் வாழும் வைத்தியசாலைக்குப் போகவேண்டியதுதான்," என்று நியாயம் கூறுவான்; அல்லது, தன்னிடத்

தில் இருக்கும் அதே குறைவுக்கு ஆளான பிறரைப் பற்றிய செய்திகளைக் கேட்கும்பொழுது மிகவும் கோபம் அடைவான்; தன்னை எப்பொழுதும் நீதிநெறி தவருத வனுகவும், நல்லொழுக்கம் உடையவனுகவும் கருதிப் பிறரைக் கற்பொழுக்கம் இல்லாதவராக நினைப்பான். இவை யாவும் அவனுடைய சிறுமை உணர்ச்சியால் ஏற் படுபவை. அவனுடைய கைப்புண் அவனுக்கே நன்ருய்த் தெரிகிறது, அதை மூடிவைக்கிறதற்காகவே இத்தனை வெளிப் பேச்சுக்களும் புற ஆடம்பரங்களுமாம். கலா சாலையில் கற்றுப் பட்டம் பெறவில்லை என்ற சிறுமை உணர்ச்சி ஒருவனது உள்ளத்தில் வெகு உச்சமாக இருக் கிறது. அவனுடைய சம்பாஷணையில் மற்றவர்களுக்கு முட்டாள் பட்டம் கட்டுகிற பேச்சுக்கள் அதிகமாகத் தோன்றும். இவன் தன் கல்விக்குறைவை மறைக்கும் பொருட்டுத் தன் அனுபவ ஞானத்தை மலையளவாக்கிப் பேசுவான். வீடு நிரம்பப் புத்தகங்கள் வாங்கிக் குவிப் பான்; அவற்றுள் ஒன்றையாகிலும் ஆழ்ந்து கற்றிருக்க மாட்டான்; எனினும் பல புத்தகங்களின் பெயர்களையும், அவற்றில் சில நூற்களின் விஷயங்களையும் நுனிப்புல் மேய்ச்சலாக அறிந்திருப்பான்; இந்த அறிவைப் பலர் முன் அதிகமாக விளம்பரம் செய்வான். இதுவும் சிறுமை உணர்ச்சியால் ஏற்படுகிற பல சிக்கல்களில் ஒன்றேயாம்.

சிறுமை உணர்ச்சியால் உள்ளத்தில் நிலையான அச்சம் தழைக்கிறது. இது பயங்காளித்தனம் அன்று. உலகத்தில் தோன்றிப் பெரும்புகழ் எய்திய வீரருக் குள்ளேயும், சிறுமை உணர்ச்சியால் விளைகிற பயம் பல துறைகளில் வெளிப்பட்டிருப்பதை அன்னவருடைய வாழ்க்கை வரலாறுகளில் காணலாம். நீரிலே, காற்றிலே, தமது வீரதீர பராக்கிரமங்களைக் காட்டிய வீர புருஷர் களும், பெண்களும், கொடிய சித்திரவதைகளுக்கு ஆளாகிப் புன்னகையோடு மரணத்தை ஏற்றுக்கொண்ட ஆண்களும் பெண்களும், பெரிய ஆராய்ச்சித் துறைகளில் அல்லும் பகலும் உழைத்து, அரிய பெரிய உண்மைகளை

விஞ்ஞானப் பொக்கிஷங்களாகத் திரட்டிக் கொடுத்த மேதாவிகளும், தமது கொள்கையை ஓங்கி அறைந்து தம்மை உறுதியாக மற்றவர்களுக்கு எதிரில் நிலை நாட்டுவதற்கு அஞ்சி வாழ்ந்தவர்கள் என்பதைக் காணலாம். நாளடைவில் இவர்களுடைய பெருமையை உலகம் ஒப்புக்கொண்டபோதிலும். இவர்கள் வாழ்ந்த காலத்தில், தம்மைத் தாமே வெளியே காட்டிக்கொள்ள நாணி ஒதுங்கி மறைந்திருந்ததைப் பார்க்கிறோம் இவர்கள் தமது மகிமைப் பிரதாபங்களையாவது, ஆற்றல்களையாவது, ஞான நிறைவையாவது பிறர்முன் விளம்பரம் செய்ய ஆத்திரப்படமாட்டார்கள். தம்மை வெளியே காட்டிக்கொள்வதற்குத்தடையாக இவர்களது மனத்தில் ஒருவகை அச்சம் குடிகொண்டிருக்கும் இவர்கள் பிறருடைய நிந்தைக்கும், அவமதிப்புக்கும், சுட்டிக் குறிக்கும் சம்பாஷணைக்கும், நெருக்கடியான சந்தர்ப்பங்களுக்கும் ஆளாகாமல் தப்பிக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள். இதற்கெல்லாம் காரணம் சிறுமை உணர்ச்சியே.

ஒருவர் மாட்சிமையான ஒரு காரியத்தைச் செய்கிறார். அதற்காக உலகம் அவருக்குச் சேரவேண்டிய புகழ்ச்சியைக் கொடுக்கிறது இந்தப் புகழ்ச்சியைக் கேட்கும் சிலர், " இதென்ன பிரமாதம்? இதைச் செய்வதற்குத் தனித் திறமை ஒன்றும் தேவை இல்லை. வெகு தீரமாகச் செய்து விட்டதாகவும் கூற இடம் இல்லை; மனச் சக்தியினால் அந்தக் காரியம் ஆனதென்றும் சொல்லமுடியாது. ஏதோ குருட்டு அதிர்ஷ்டம் அடித்தது; காலமும் வேளையும் கூடி வந்தது" என்றெல்லாம் பேசுவார்களானால், அந்தக் கூட்டத்தில் இருப்பவர்கள் யாவரும் சிறுமை உணர்ச்சியில் மூழ்கிக் கிடப்பவர்களேயாம்.

ஒருவர்க்கு ஒன்றே திறமையாகும்

உலகத்தில் பிறக்கிற குழந்தைகள் யாவரும் பத்திரிகைகளின் முகப்பிலே மகான்களாக விளங்கமுடியாது; பொதுமக்களின் புகழ்ச்சி நாவிலே குடியிருக்க முடியாது. சிலர்தாம் இப்படி உலகத்தில் புகழ் உடம்பு எடுத்து விடு

கிறார்கள். உலகத்தின் புகழ்ச்சிக்கு ஆளாகிற சிறு கூட்டத்தாருக்கு முன் மிகப் பெரும் திரளான மனிதர்கள் சிறுமை உணர்ச்சிக்கு ஆளாகிப் பற்பல சிக்கல்களில் உழலுகிறார்கள். யார் எவ்வளவு புகழ்பெற்றால் என்ன? இதற்காக ஒருவன் தன்னை ஏன் சிறுமை உணர்சிக்கு ஆளாக்கிக் கொள்ளவேண்டும்?

சிறுமை உணர்ச்சிச் சிக்கல் என்பது மிகப்பெரிய விஷயம். மானஸ சாஸ்திரிகள் இதை வெகு விரிவாக ஆராய்ந்து, இதனால் மனித சமூகத்தில் விளையும் கேடுகளை எல்லாம் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். ஒருவன் ஒன்றிலே தான் மிகவும் தேர்ந்தவனாக இருக்கமுடியும். அவன் அதிலே தான் தன் திறமையைக் காட்டமுடியும். ஒருவனிடத்தில் எண்ணிறந்த திராணிகள் இருக்கலாம். என்றாலும் எந்தத் திராணியைப் பயிற்சியால் திறமையாக மாற்றுகிறானோ அதிலே தான் அவன் பிரகாசிக்க முடியும்; ஒருவன் தனக்குள்ள திறமையைப் புறக்கணித்துத் தன்னிடத்திலே இருக்கும் திராணிகளை ஆதாரமாக்கி, சிறுமை உணர்ச்சிக்கு இடம் கொடுத்துப் பல சிக்கல்களுக்கு ஆளாவானாகில், அவனுடைய நிலைமை மிகப் பரிதாபமானதே.

மனித சமூகமாகிற காட்டிலே காண்கிற இந்தச் சிறுமை உணர்ச்சிச் சிக்கலுக்கு அடிமையாகிற ஒருவன் தன்னிடத்தில் உள்ள திறமை பூரணமாக வெளிப்படாமல் போவதற்குத் தேவையான அத்தனை வழிகளையும் தேடிக் கொள்கிறான். வேகமாக ஓடுகிற மோட்டார் வண்டியை நிறுத்துவதற்கு உபயோகிக்கும் விசையாணியைப் போல் இந்தச் சிறுமை உணர்ச்சி ஒருவனை முன்னேறவிடாமல் தடுத்து நிறுத்துகிறது.

'உலகிலே பல துறைகளில் வெற்றிபெற்றுப் புகழ் அடைந்த பல பெரியோரை உயர்ந்த நிலைக்கு உந்தி விட்டது யாதெனில், அன்னவர் தம்மிடத்தில் இருப்பதாக உணர்ந்த ஏதோ ஒரு சிறுமை உணர்ச்சி தான்'—என்று மானஸ சாஸ்திரம் ஆறுதல் கூறுகிறது. பெரிய மகான்கள் தம்மிடத்தில் இருப்பதென உணர்ந்த சிறுமை

உணர்ச்சியே அவர்களைச் சாட்டைபோல் அடித்து விரட்டிக்கொண்டிருந்தது. இதனாலே தான் அவர்கள் பிறர் பார்த்து பிரமிக்கக்கூடிய காரியங்களைச் செய்ய அவாக் கொண்டார்கள். இந்த ஆசைக்கு அவர்களுடைய சிறுமை உணர்ச்சியே தூண்டுதலாக இருந்தது.

வினைமாட்சித்திறன்

ஒருவர் தம்மிடத்திலே இருக்கும் சிறுமை உணர்ச்சியை மூடுவதற்கு முயல்வது தோல்வியாக முடியும். எந்த விஷயத்தில் சிறுமை உணர்ச்சி ஏற்படுகிறதோ அதனை ஆய்ந்து கண்டு பிடிக்கவேண்டும். அதோடு, தன்னம்பிக்கையை வளர்க்கவேண்டும். 'இன்னது என்னால் ஆகும்; என்ற காரியசித்தித்திறமையில் பரிபூரண நம்பிக்கையை உறுதியாகக் கொள்ளவேண்டும். தன்னால் செய்யக்கூடிய பெரிய காரியத்தைச் செய்வதற்குப் பொருத்தமான காலமும் கருவியும் கூடி வரும்போது, தன்னம்பிக்கை என்னும் உயிர்-வலிமையாலும், காரியசித்தி நம்பிக்கையாகிற புய வலிமையாலும், தெரிந்துகொண்ட காரியத்தைத் தளரா முயற்சியோடு செய்து முடிக்கவேண்டும். உலகத்திலே புகழ் பெற்ற மகான்கள் இப்படித்தான் அரும் பெருங் காரியங்களைச் செய்தார்கள். இதற்கு அதிதான தேவிபோல் இருப்பது ஆசை என்னும் காந்த சக்தியேயாம்.

சிறுமை உணர்ச்சியைத் தொலைக்கவேண்டும். அதற்காக எதிலே தனக்குச் சிறுமை உணர்ச்சி என்று முதலிலே தெளிதல் இன்றியமையாதது. அடுத்தபடியாக தன்னம்பிக்கையை உயிராகப் பேணவேண்டும். காரிய சித்திக்குத் தேவையான கருவிகளைக் கூட்டிச்சேர்த்து வெற்றி-நம்பிக்கையை வல்லமையாக்கவேண்டும். ஆசையாகிற காந்தத்திற்கு வேகம் ஊட்டவேண்டும். இவ்விதம் செய்வதனால் வாழ்க்கை முற்றிலும் வெற்றியாக முடியும்; சிறுமை உணர்ச்சி மாண்டு மடியும்.

சிறுமை உணர்ச்சியால் வருந்தாதவர்கள் உலகில் இல்லை என்றே கூறினோம். ஒருவன் தன்னைப் பிறரோடு

ஒப்பிட்டுப் பார்ப்பதனால் சிறுமை உணர்ச்சி ஏற்படுகிறது. இதை விளக்கும் ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

ரிக்ஷா வண்டி இழுத்துப் பிழைக்கும் ஒருவன் தன் எஜமான் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் ஒரு பொருள் வாங்கி வரச் சென்றான். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் நாற்காலியில் அமர்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்தார். அவர் உலகம் புகழும் தேசபக்தர்; பேரறிவாளர்; அவர் முன் இந்த ரிக்ஷாக்காரன் இமைப்பொழுது நேரத்திற்குத் தன்னை அவரோடு ஒப்பிட்டுப் பார்த்தான். அவருக்கு முன் தன்னை ஒரு புழுவுக்குச் சமானமாக உணர்ந்தான். அவ்வளவுதான். ஐந்து நிமிஷங்களுக்குள் அண்டையில் இருந்த ஒரு பெஞ்சின் மீது சம்மணம் இட்டுக் குந்திவிட்டான். அந்தப் பெரியார் புன்னகைபூத்த முகத்தோடு அவனை ஒரு முறை நோக்கினார். அவன் கொண்டு வந்திருந்த சீட்டைப் படித்தார். அவனுடைய எசமானன் விரும்பியதைக் கொடுத்து விட்டு; முன் போலவே நாற்காலியில் அமர்ந்து படிக்கத் தொடங்கினார். அவர் தன்னைத் தாறுமாறாக வைது துரத்துவார் என்று ரிக்ஷா வண்டிக்காரன் எண்ணியிருந்தான்; அதன் மூலமாகத் தன் ஏற்றத்தை நிலை நாட்டலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். ஆனால், அப்பெரியாருடைய நடத்தையால் அவனுடைய சிறுமை உணர்ச்சிச் சிக்கல் அவனை முன்னிலும் கீழான நிலைக்கே தள்ளி விட்டது. இந்த ரிக்ஷாக்காரன் தன்னைவிட உயர்ந்தவர்கள் யாவருக்கும் தன்னைப்போல் இன்பம் அனுபவிக்க முடியாதென்றும், அவர்கள் பலவகையான சமூகக்கட்டுக் காவல்களுக்கு அடிமைகளென்றும் கருதி வந்தான். ஆயினும், அந்தப் பெரியாருடைய புகழ் ஒன்று தான் அவனுக்கும் அவருக்கும் இடையில் சற்றே இடைஞ்சலாக இருந்தது. ரிக்ஷாக்காரனிடம் இப்படிப்பட்ட மனச்சிக்கல் ஏற்படக்காரணம் என்ன என்று காணவேண்டுமாயின் ஆட்லர் கூறுவதை நாம் நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சிறுமை உணர்ச்சி எப்பொழுது ஆரம்பமாகிறது?

உலகில் பிறக்கிற மனிதக் குழந்தையைப் போல் ஆதரவற்ற உயிர் மற்றெதுவும் இல்லை. அதனாலேதான் மனிதக் குழந்தை வளர்ந்து தன் காரியத்தைத் தானே கவனித்துக் கொள்ளும் நிலைமையை அடையும் வரைக்கும் தாயும், பின்பு தந்தையும் அதைக் காக்கும் கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். பிறரைச் சார்ந்து பிழைக்கும் இயல்போடு வாழ்க்கையை ஆரம்பிக்கிற மனிதன் சாகுமளவும் பிறரது உதவியை நாடித் திரிகிறான். பிறந்தது முதல் இந்த மனப்பான்மைக்கு குழந்தையின் கண்களும் உதவி புரிகின்றன. குழந்தையாகத் தொட்டிலில் படுத்திருந்த நாட்களில் தன்னைப் பேணி வளர்க்கிற தாய் பெரியவளாகவே தோன்றுகிறாள். குழந்தை தன்னைச் சிறிய அளவிலே காண்கிறது. தூக்கி எடுத்துக் கொஞ்சுகிற தந்தையும் பெரியவராகவே குழந்தையின் கண்ணுக்குத் தோற்றம் அளிக்கிறார். சூழ்நிலையில் உள்ளவர்களோடு தன்னை ஒப்பிட்டுப் பார்க்குந்தோறும் "நான் சிறியவன்; என் திறமை சிறியது; என் திராணி சிறியது; என் அறிவும் சிறியது" என்ற எண்ணம் தான் அதிகரிக்கிறது. கொழு கொம்பு பற்றி ஏறுகிற கொடி போலக் குழந்தையும் தன்னை யாவற்றிலும் சிறுமையாகக் கருதிப் பெரியவர்களாகிய பெற்றோரையும் வீட்டில் உள்ள பிறரையும் சார்ந்து வாழத் தொடங்குகிறது. இவ்வாறு சார்ந்து பிழைக்கும் மனப்பான்மையால் சிறுமை உணர்ச்சி இளமை முதற் கொண்டே ஏற்பட்டு விடுகிறது. இதனால், ஆரம்பத்திலிருந்தே குழந்தைக்குத் தனக்குள்ள குறைகளை நினைக்கும் மனப்பான்மை ஏற்பட்டு விடுகிறது. இந்த மனப்பான்மையினால் **சிறுமை உணர்ச்சிச் சிக்கல்** உதயமாகிறது.

இந்தச் சிறுமை உணர்ச்சிக் சிக்கலினின்றுதான் மன அமைதியின்மையும் துறுதுறுப்பும் தோன்றுகின்றன. குழந்தையினால் ஐந்து நிமிஷங்கூடச் சும்மா இருக்க முடியவில்லை. அதை எடுக்க வேண்டும்; இதைப் பார்க்க வேண்டும்; அதை உருட்ட வேண்டும்; இதை

வைக்க வேண்டும் ; அங்கே போக வேண்டும்; எந்த நேரமும் எதையாவது செய்துகொண்டிருக்கவேண்டும்; இப்படி எல்லாம் செய்தால்தான் தன்னைச் சின்னஞ் சிறு பிராணியாக நினைக்கும் பெரியவர்களுடைய கவனத்தைக் கவர முடியும்—என்று குழந்தைக்குத் தோன்றுகிறது. "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" என்ற மெய்யுரையை உணராத என் பெற்றோரும் பிறரும் என்னைப் பச்சைப் பிள்ளை, சின்னப் பிள்ளை! என்றெல்லாம் சொல்லுகிறார்களே. நானும் பெரியவன் என்பதனை இவர்கள் அறிந்து கொள்ளட்டும்" என்று குறிப்பிடுவது போலக் குழந்தைகள் பல காரியங்களைச் செய்கிறார்கள். "**பிறர் நோக்கு விழைதல்**" மனிதர் யாவரிடத்திலும் வெகு வல்லமையாக எழுகிற ஓர் ஆசை யாகும். பருவம் அடைந்த வாலிபன் ஒருவன், கட்டழகியர் தன்னைப் பார்க்கவேண்டும் என சுட்டித்தனமாகப் பேசுகிறான்; உடை அலங்காரங்களால் தன்னை விளம்பரம் செய்கிறான். ஆயிரம் பிள்ளைகளில் தன்னைத் தலை சிறந்தவனாகக் காட்டிக் கொள்வதற்காக நூறு வகையிலே தன் மேம்பாட்டையும் புலமையையும் வெளிப் படுத்துகிறான்.

குழந்தை சுப்பனுக்கு இன்னும் மூன்று வயதாகவில்லை. நளினி அவனுக்கு மூத்தவள். அழகே உருக்கொண்ட சிறுமி. அவனுடைய தம்பி ரங்கன் ஆறுமாதக் குழந்தை ; நளினியையும் ரங்கனையும் கவனிப்பதிலேயே தாயும் தந்தையும் தங்கள் பெரும் பொழுதையும் போக்கி வந்தனர். இது சுப்பனுக்கு வெகு சங்கடமாக இருந்தது. "என்னை மட்டும் ஒருவரும் பொருட்படுத்துவதில்லை. எல்லாரும் என்னிடம் பராமுகமாக இருந்தால், நான் வளர முடியுமா ?" என்று சுப்பன் நினைத்தான். பிறர் நோக்கு விழைதல் என்னும் அவா அவன் சின்னஞ்சிறு நெஞ்சுக்குள்ளே புகுந்தது. அன்று மாலையில் வீட்டுப்புறக்கடையில் கட்டடம் கட்டுவதற்காக அடுக்கி வைத்திருந்த செங்கல் வரிசைக்களின் மறைவிலே அவன் ஒளிந்து கொண்டான். அன்றைக்கு அவன் பெற்றோரும், பாட்டியும், பாட்டனும், உடன் பிறந்தவர்களும். வேலைக்காரர்களும், வேலைக்

காரியும், சமையல்காரனும் யாவரும் "சுப்பா! சுப்பா!" என்று கத்திக்கொண்டே வீடெங்கும், வீட்டுப்புறம் எங்கும், வீதிகளெங்கும், தெரிந்தவர் வீடுகளிலெங்கும் சுப்பனைத் தேடத் தொடங்கினார்கள். சுப்பனுடைய ஆயுள் முழுவதுக்கும் போதுமான பி. நோ. வி (பிறர்நோக்கு விழைதல்) கிடைத்துவிட்டது. இரவு ஒன்பது மணிக்கு தோட்டக்காரக் கருப்பன் கள்ளமாட்டைத் துரத்துவதற்காக மூங்கில் கழிதேடும் பொருட்டுச் செங்கல் வரிசைகளின் இடையிலே புகுந்தான். அயர்ந்த தூக்கத்திலிருந்த சுப்பன் கருப்பனிடம் அகப்பட்டுக் கொண்டான்.

கருப்பன் சுப்பனை பெற்றோரின் முன்னிலையிலே கொண்டுவந்து நிறுத்தி, வெகுசாகசமான காரியத்தைச் செய்தவன் போலச் சுப்பனைத் தேடிப்பிடித்த கதையை வெகு விரிவாக அளந்தான். வீட்டில் இருந்தவர்கள் யாவரும் சுப்பனையே நோக்கினார்கள். அன்றைக்கு வீட்டில் இருந்த யாவருக்கும் சுப்பனின் சிறுமை உணர்ச்சிச் சிக்கலினால் விளைந்த நிகழ்ச்சி அவ்வளவு பிரமாதமாகத் தோன்றிவிட்டது. ஆனால், சுப்பன் ஏன் அப்படிச் செய்தான் என்று அவர்களுக்குத் தெரியாது. உருசிகண்ட பூனை உறியைத் திரும்பத் திரும்பத்தாவுமாம். ஒருமுறை பி.நோ.வி. பெற்ற சுப்பன் இனிச்சும்மா இருப்பானா? திரும்பத் திரும்பக் காணாமல் மறையத் தொடங்கினான். கருப்பனுக்குச் சுப்பன் ஒளிந்துகொள்ளும் இடங்கள் எல்லாம் தெரிந்துவிட்டன. வரவரச் சுப்பனுக்கு பி. நோ. வி. கிட்டாமற் போயிற்று. முடிவிலே சுப்பன் மாயமாய் மறைவதைப் பற்றி எவருமே சிந்தனை செய்யாமல் இருந்து விட்டார்கள். சுப்பனுக்கும் தன் உபாயம் கூர்மழுங்கி விட்டதாகத் தோன்றியது. என்றாலும், சுப்பனுடைய சின்னஞ்சிறு நெஞ்சம் சும்மா இருக்க விரும்பவில்லை; பெற்றோரின் விழிநோக்கைப் பெறுவதற்கு நாள்தோறும் உபாயங்களைச் சிந்தித்து வந்தது. அவன் கையாண்ட சில உபாயங்களுக்குக் கைமாறாக அடிகளே கிடைத்தன. சில உபாயங்களின்பயனாக விளைந்தது தாய் தந்தையரின்கவலையே. அடிபட்டால் என்ன? பெற்றோர் கவலைப்பட்டால் என்ன?

பிறருடைய கவனத்தைக் கவரமுடிகிறது என்பது தொன்றே சுப்பனுக்குத் திருப்தியை அளித்தது.

சுப்பனுடைய மன இயல்புதான் எல்லாக் குழந்தைகளிடத்திலும் அமைகிறது. பெரியவர்களின் பார்வையிலே சிறந்து விளங்கவேண்டும்; பெரியவர்கள் கவனிக்க வேண்டும். இதே நோக்கம் குழந்தை அழுவதிலும், சிரிப்பதிலும், மழலை ஆடுவதிலும் ஒரு சிறிது அடங்கியுள்ளது. குழந்தை மரச் செப்புக்களை ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கிக் கோபுரம்போல நிற்கவைத்தவுடனே, "அம்மா பாரு! அம்மா பாரு!" என்கிறது. தாய் பாராவிட்டால், அவளுடைய தாடையைப் பற்றித் திருப்பித்தான் செய்திருக்கும் காரியத்தைப் பார்த்துத் தன்னை மெச்சும்படிச் செய்கிறது. தன்னைப் பிறர் கவனிக்கவேண்டும் என்ற இந்த ஆசையிலே குழந்தையின் கல்வி வளர்ச்சி முழுவதும் அடங்கி இருக்கிறது என்பதனை நாம் மறக்கலாகாது.

சிறுமை உணர்ச்சிச் சிக்கல் அதிகமாக உள்ள குழந்தை, தன் சிறுமை நிலையைத் தவிர்க்கும் பொருட்டுப் பல விஷயங்களைக் கற்றுக்கொள்கிறது. ஒரு வீட்டில் ஐந்து ஆண் பிள்ளைகள்; மூத்தவர்கள் மூவரும் தாய் இருந்த காலத்திலேயே பெரிய பட்டப் பரீக்ஷைகளில் தேறி மேலான உத்தியோகங்கள் பெற்று உயர்ந்த நிலைமைக்கு வந்துவிட்டார்கள். கடைசிப் பையன்கள் இருவரும் மூத்தவர்களின் பார்வையில் சிறுமையுற்று நின்றனர். இளையவர் இருவரும் பல காரியங்களில் மூத்தவர்களைவிடத் தங்களுக்கு அதிகத் திறமை உண்டு என்பதனை வெளியிடத் தொடங்கினர்கள். இளையவரில் ஒருவன் தன் சொந்த முயற்சியால் அமெரிக்காவில் உள்ள இரண்டொரு கலாசாலைகளிலிருந்து தபால் மூலமாகப் பட்டங்கள் பெற்றுப் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்தான். இவனல் செய்யமுடியாத காரியம் எதுவுமே இல்லை என்று மூத்தவர்கள் ஒப்புக்கொண்டார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்துப் பட்டங்கள் பெறுவிட்டாலும், வெகு திறமையும் மிகுந்த வருமானமும் உள்ள உத்தியோகம்

ஒன்றைப் பெற்றுக்கொண்டான். கடைசிச் சிறுவன் தன் அண்ணன்மார் மெச்சக்கூடிய கல்வி கேள்விகளில் பெருகித் தன் சுய முயற்சியால் பல வகைகளில் பொருள் தேடி நேர்மையாக வாழத் தொடங்கினன். இளம் பிராயத்தில் இவ்விருவருக்கும் சிறுமை உணர்ச்சிச் சிக்கல் அதிகமாக இருந்தது.

சிறுமை உணர்ச்சிச் சிக்கல் அதிகமாக உள்ள குழந்தை தனக்குள் அடங்கிக் கிடக்கும் திறமை திராணிகளை எழுப்பி அவற்றிற்குப் போக்குவாயும் தேடும். திறமை திராணிகளுக்குப் போக்குவாய் தேடிப் பெரும் புகழ் சம்பாதிக்குமளவும் ஓய்ந்திருப்பதில்லை. இத்தகைய குழந்தைகளே, "இன்னவனு?" என்று கேட்பவர் வியக்கும்படி அதிசயமான காரியங்களைச் செய்து விடுகின்றனர். சிறுமை உணர்ச்சிச் சிக்கல் குறைவாக உள்ள குழந்தைகள் தங்கள் திறமை திராணிகளை வெளிப்படுத்த முயலாதிருப்பர்.

குடும்பச் சக்கரம்

நவீன மானஸ சாஸ்திரிகள் சிறுமை உணர்ச்சிச் சிக்கல் என்ற இத்தன்மையை ஆதாரமாக்கிக் குழந்தைகளை அவர்கள் பிறக்கிற குடும்பச் சூழ்நிலைகளோடு பொருத்திப் பலவாருக ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். இந்த ஆராய்ச்சிகளால் ஒவ்வொரு குழந்தையும் தனித் தனி மாதிரி என்று நிலைநாட்டி இருக்கிருர்கள். இந்த சிறுமை உணர்ச்சிச் சிக்கல் இரண்டு குழந்தைகளை ஒரே மாதிரி வாழ்க்கைப் போக்கிலே செல்ல விடுவதில்லை; ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனி மாதிரியான வாழ்க்கைப் பாதையை அமைத்துவிடுகிறது; ஒரே பெற்ருேரின் மக்களாகப் பிறந்து ஒரே குடும்பத்தில் வாழ நேரிடுகிற பிள்ளைகளே ஆயினும், அவர்கள் யாவரும் ஒரே மனப் போக்குடையவர்களாக இராதவாறு செய்துவிடுகிறது. ஐந்து பிள்ளைகளுக்கும் ஒரே பெற்ருேர்; ஒரே குடும்பம்; ஒரே சூழ்நிலை; ஒரே ஜனசமூகம். எனினும், ஒவ்வொரு குழந்தையிடத்திலும் தனித்தனி மூர்த்தி - விசேஷம்

தோன்றுவதற்குக் காரணம் என்ன? முதலாவது, கர்ப்பா தானம்நிகழ்ந்த காலத்திலேயேவர்ணதாதுக்களின் கலப்பு முறையால் குழந்தைகளுடைய அமைப்பில் வேற்றுமை தோன்றியது என்று பார்த்தோம். பிறந்த பிறகு, சூழ் நிலைகள் குழந்தைகளில் பல மாறுதலை விளைக்கின்றன என்றும் தெரிந்து கொண்டோம். முதல் குழந்தை பிறக்கிற குடும்பத்தில் அவனோடு போட்டியிடுவதற்கு மற்றெவரும் இல்லை. இந்தக் குழந்தைதான் நினைத்ததே சட்டம்; தான் விரும்புவதையே தன் பெற்றோர் செய்ய வேண்டும் என்று கருதுகிறது. இப்படி முதல் குழந்தை பிறந்து சர்வாதிகாரியாக ஆட்சி செய்யும் குடும்பத்திலே இரண்டாவது குழந்தை பிறக்கிறது. தாய் தந்தைய ரோடு, தனக்கு முன்னே பிறந்த குழந்தையும் இரண் டாவது குழந்தையின் சூழ்நிலைப் பொருள்களாக அமை கின்றனர். இப்படிச் சூழ்நிலையின் தலைமை அங்கங்கள் பெருகி வருந்தோறும், பிறக்கிற குழந்தைகளின் மூர்த்தி-விசேஷங்களும் வேற்றுமை அடைந்து கொண்டே இருக்கும்.

இவ்வாறு ஒரே குடும்பத்தில் குழந்தைக்குக் குழந்தை மாறி மாறி வருகிற மூர்த்தி விசேஷங்கள் அந்தக் குடும் பத்தில் பிறக்கிற ஒவ்வொரு குழந்தையின் வாழ்க்கைப் போக்கையும் தீர்மானம் செய்துவிடுகின்றன. ஒருவனைப் பார்க்கிறோம்; பார்த்துவிட்டு வந்த பிறகு, "அவன் வீட்டுக்குப் போயிருந்தேன்; ஏதோ எழுதிக்கொண்டிருந் தான்; நான் எதிரில் போய் நின்றதைப் பாராமல் உலகத் தையே புரட்டுவதற்காக ஏதோ எழுதுகிறவன் போல வரைந்து தள்ளிக் கொண்டிருந்தான். ஒவரையும் மதிக் காமல் அப்படி என்ன எழுத்து வேலை செய்கிறானோ தெரியவில்லை! மிகவும் செருக்குடையவன் என்றால் அவனைப்போல் எவரும் இல்லை" என்கிறோம்; நாம் இப்படி- யாரிடத்தில் பேசுகிறோமோ அதே நண்பர்கள், "நீங்கள் ஒரு வேளைதானே அவனைப் பார்த்திருக்கிறீர்கள். நாங்கள் இரண்டு பேரும் ஒருநாள் முழுவதும் அவன் வீட்டிலேயே தங்கினோம். அடடா! என்ன வெடுவெடுப்பு; என்ன கடு

கடுப்பு! வேலைக்காரிமேல் நாய்போல் வெள் என்று குலைக்கிறான்; மனைவி மீது பட்டாசு மாதிரி வெடிக்கிறான்; குழந்தைகளிடம் பாம்பு போலச் சீறி விழுகிறான்; ஆனாலும் என்ன மனுஷன் ஐயா அவன்?'' என்கிறார்கள். இந்தச் சபாஷணையின் மத்தியில் ஒருவர் வருகிறார்; இந்த நண்பர்கள் சுட்டிப் பேசுகின்றவரைப் புதிதாக வந்தவருக்கும் தெரியும். அவர் உடனே, “ஏன் இப்படி எல்லாம் அவரைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? சில நாட்களாக அவருக்கு ஒரு கொடிய வியாதி. அதோடு இருந்த வேலையும் போய்விட்டது. என்ன கஷ்டம் வந்தாலும் தமது அனாதைத் தங்கையையும் தங்கையின் பிள்ளைகளையும் கைவிடலாகாது என்று அந்த மனிதர் கருதி உள்ளார்; அதன் பொருட்டே தம்மால் ஆனமட்டும் பாடுபடுகிறார்'' என்று முற்றிலும் புதிய அபிப்பிராயம் ஒன்றை வெளியிடுகிறார். எங்கேயாவது, எந்த இடத்திலாவது, சிலர் கூடியிருந்து யாரைப்பற்றியாவது தத்தம் அபிப்பிராயங்களை வெளியிடும்பொழுது கவனித்துப் பாருங்கள். ஒரே ஆளைப்பற்றிச் சொல்லுகிற அபிப்பிராயங்கள், அவ்வாறு பேசுகிறவர்களின் கூறு போட்டுப் பேசும் திறமையையே வெளிப்படுத்துகின்றன. ஒருவர் ஒருவனுடைய கழுத்தை வெட்டித் தலையை நம்மிடம் காட்டி, “இவர் தான் ஐயா ராமச்சந்திர அய்யர்!'' என்று காட்டுவார். மற்றொருவர், காலை வெட்டிக்கொண்டு வந்து நம்மிடம் காட்டி, “இவர்தான் ராமச்சந்திர ஐயர்!'' என்பார். மனிதர்கள் ஒருவனைப் பற்றிக் கூறுகிற அபிப்பிராயங்கள் யாவும் கூறு கூறாகப் பிரித்துக் காட்டும் இயல்பையே வெளிவிடுகின்றன. ஒரு எழுத்தாளர் தம் வறுமையால் ஒருவனுடைய சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொண்டு தப்பி ஓட வழி காணாமல் வருந்துகிறார். மற்றொரு எழுத்தாளர் பத்து நண்பர்களோடு கூடி உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, “இன்னவர் செய்தி உங்களுக்குத் தெரியுமோ? இப்பொழுது அவர் இன்ன மனிதனோடு ஒரே வீட்டில் வாழ்கிறார். இவருக்கு இப்பொழுது நண்பராகக் கிடைத்திருக்கிற மனிதர் பெயர்போன குடி-

காரர்! வேசிக் கள்ளர்!" என்று பிரசாரம் செய்கிறார். பிரசாரம் செய்கிறவருக்கு புலவர்-காய்ச்சல் அதிகம். ஆகையால் அந்தக் காய்ச்சலிலே பேசுகிறார். ஒருவன் மற்றொருவனை இகழ்ந்து பேசினால் அவனுக்கு மற்றவனைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்று நாம் உடனே பத்திரம் எழுதிக் கொடுத்துவிடலாம்.

உலகம் பல வகைப்படும்

ஒருவனுடைய குணவிசேஷங்களை ஆக்குகிற தத்துவங்கள் பல. ஒருவனுடைய மூர்த்தி - விசேஷத்தையும் அவனுடைய தன்மயத்தையும் ஆக்கி அமைக்கிற தத்துவங்களின்படியே ஒவ்வொரு மனிதனிடத்திலும் எண்ணிறந்த மன நிலைகளும் செயல் போக்குகளும், சிந்தனை நிலைகளும் அமைவன; இவை ஓயாமல் மாறிக் கொண்டே இருக்கின்றன. ஒரு நிமிஷத்தில் தோன்றுகிற சிந்தனை நிலையிலாவது மனநிலையிலாவது செயல் நிலையிலாவது மறு நிமிஷம் ஒருவன் நிற்பதில்லை. **லோகோ பின்னருசிః** (உலகம் பல்வகைச் சுவை உடைத்து) என்றொரு முதுமொழியை வடநூலார் கூறுவர். அபிப்பிராயங்களும் ஓயாமல் மாறுகின்றன. அபிப்பிராயங்களுக்கு ஆளாகிற மனிதனும் ஓயாமல் மாறிக்கொண்டே இருக்கிறான்.

கணந்தோறும் மாறுதல் அடைதல்

அந்தி வானத்தைப் பாருங்கள். இன்றைக்கு ஒரு காட்சி; நாளைக்கு மற்றொரு காட்சி. இப்படியே நாள் தோறும் இயற்கை - அன்னை காட்சிகளைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறாள். நாள்தோறும் என்றால் போதுமா? ஒரே நாளில் மேற்றிசை ஒன்றிலே அமைக்கிற காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருங்கள். நிமிஷத்திற்கு நிமிஷம் பராசக்தி அந்தி வானத்தின் வர்ணங்களைக் கலைத்துக் கலைத்துப் புதுப் புதுச் சித்திரங்களை எழுதி வைக்கிறாள்; பார்க்கிற நமது உள்ளம் பரவசமாகும்படிச் செய்து விடுகிறாள். கணந்தோறும் புதுப் புதுக் காட்சிகள்! இப்படி இயற்கையில் கணந்தோறும் புதுப்புது அழகுகளை ஆக்கிக்கொண்டே இருக்கிற அன்னை மனிதர்களுக்கு

மட்டும் ஒரேவகையான தன்மைகளை அமைத்து இன்புற இசைவாளோ? ஒரு பொழுதும் பராசக்தி ஒரே இயல்பான மனிதர்களை அமைத்து மகிழ்ச்சி அடையமாட்டாள். அது அவளுடைய இயல்பும் அன்று. இடையருமல் அழகை மாற்றி அமைத்துப் பார்ப்பதே அவளுடைய இயல்பு. அதனுலே தான், உலகத்திலே இரண்டு மனிதர்களை ஒரே தன்மையோடு அவள் தோற்றுவிப்பதில்லை. ஒரே ஆளிடத்தில் ஒரே நிலையான குணத்தையும் அமைப்பதில்லை. ஒரு நேரத்தில் ஒருவனிடம் அமைந்த குணத்தை மறு நேரத்தில் அவனிடத்திலேயே மாற்றி அமைத்துக் காட்டுகிருள். உலகத்தில் ஒவ்வொரு மனிதனும், கணந்தோறும் மாறிமாறித் தோன்றும் வர்ணக் கோலங்களைக் காட்டுகிற கண்ணுடி போன்றிருக்கிருன்.

குழந்தையின் வாழ்க்கைச் சித்திரம்

குழந்தையின் வாழ்க்கைச் சித்திரம் பல ஏதுக்களாலும் துணைக் கருவிகளாலும் அமைகிறது. குழந்தையின் ஆரம்பச் சூழ் நிலையாகிற குடும்பம் ஒன்றினைமட்டும் எடுத்துக்கொண்டு ஆராய்ந்து பாருங்கள். தாய் ஒரு குழந்தையை ஒரு விதமாக நடத்துகிருள்; மற்றொரு குழந்தையை மற்றொரு விதமாக நடத்துகிருள். தந்தைக்கு ஒரு பிள்ளையிடத்திலே ஒரு மாதிரியான நேசம்; மற்றொரு பிள்ளையிடத்திலே இன்னொரு மாதிரியான நேசம். இப்படியே ஒரே சூழ்நிலைக்குள் பல பேதங்கள் தோன்றுகின்றன. வர்ணதாதுக்களின் அடுக்கு ஒருவிதமாக அமைந்து ஒரு குழந்தையை ஆக்குகிறது; மற்றொருவிதமாக அமைந்து வேறொரு குழந்தையை ஆக்குகிறது. குழந்தைக்குக் குழந்தை மனக்கட்டுமானமும் வேற்றுமைப்படுகிறது. குழந்தைக்குக் குழந்தை சிந்தனைப்போக்கும் வேற்றுமைப் படுகிறது. இவை யாவற்றையும் ஆதாரமாகக் கொண்டு அமைகிற மூர்த்திவிசேஷமும் குழந்தைக்குக் குழந்தை வேற்றுமைப்படுகிறது. இவற்றை எல்லாம் சிந்திக்காமல் ஒருவனை ஒருநேரத்தில் பார்க்கிறபொழுதாயினும் அல்லது பல தருணங்களில் பார்த்த பிறகாயினும், அவனைப்பற்றி அபிப்பிராயங்களை வெளியிடுகிறவனே பேதையாவான்.

இத்தகைய பேதைகளே நாடெங்கும் பெருகியிருக்கின்றனர்.

குடும்பம் என்பது விதவிதமான வாழ்க்கைப் போக்குடைய குழந்தைகளையும் பெற்றோரையும் பாட்டன் பாட்டியாரையும் கொண்டு அமைந்திருப்பது. குடும்பத்தின் அங்கங்களை அவர்பால் காண்கிற மூர்த்தி விசேஷங்களின் இயல்புகளோடு சமூகம் ஏற்றுக்கொள்கிறது. இதைத்தவிர வேறு வழியில்லை. ஏனென்றால் ஒரு குடும்பம் சமூகத்தின் தனி அங்கமாக அமைந்துள்ளது. பல அங்கங்கள் சேர்ந்து தான் சமூகமாகிறது. தகைமை என்பதை ஒரு ஆளுக்கும் குறிப்பிடலாம். ஒரு குடும்பத்திற்கும் குறிப்பிடலாம். ஒரு சமூகத்திற்கும் குறிப்பிடலாம். ஒருவனைச் சுட்டிக் காட்டி, "அவன் நல்லவன்" என்கிறோம். அப்படியே ஒரு குடும்பத்தைப் பற்றிப் பேசும்பொழுது, "அந்தக் குடும்பமா? பொல்லாதவர்கள் நிறைந்த குடும்பமல்லவா?" என்கிறோம். அப்படியே ஒரு சமூகத்தைப் பற்றிப் பேசும்பொழுது, "அந்த வகுப்பினரா? அவர்கள் எதனையும் துணிந்து செய்பவர்கள்; பொல்லாதவர்கள்" என்று குறிப்பிடுகிறோம். தகைமை என்பது, பிறரிடம் ஒரு ஆள் நடந்துகொள்ளும் முறையையும், ஒரு குடும்பம் நடந்துகொள்ளும் முறையையும், சமூகம் நடந்துகொள்ளும் முறையையும் குறிப்பிடுகிறது. அப்படியே தகைமையின்மையையும் உபயோகிக்கிறோம். நல்லது என்பதும் பொல்லாதது என்பதும் வரையறை இல்லா அடைமொழிகளாக வழங்குவன.

கல்வி, கலை உணர்ச்சி, காதல், கட்டுத் திட்டம் யாவும் சமூகச் சூரியனைச் சுற்றி வருகின்றன. சமூகத்தையும் அதன் கட்டுத் திட்டங்களையும் கழித்துத் தள்ளிவிட்டால், மனிதனுடைய வாழ்க்கைப் போக்கே முற்றிலும் வேற்றுமையாகிவிடும். சமூகத்தின் அங்கமாக வாழ்கிற மனிதன் அதனைச் சார்ந்தே வாழவேண்டும். குழந்தையின் எல்லாத் தன்மைகளும் சமூகத்திலே தொடங்கிச் சமூகத்திலேயே முடிவடைகின்றன. ஒரு ஆளின் வாழ்க்கைச் சரித்திரம் அவன் வாழும் சமூகத்தின் சரித்திரப்

பகுதியாகவும் அமைகிறது. இக்காரணத்தால், '**தனித்தனி ஆளின் மானஸ சாஸ்திரம்**' என்று ஆட்லர் சாஸ்திரியார் பெயரிட்டு அழைக்கும் இந்தப் பகுதியைச் சமூக மானஸ சாஸ்திரம் எனக் கூறுதலும் மிகையாகாது. இனி, குடும்பத்தின் அங்கத்தினராகப் பிறக்கிற தனித்தனிக் குழந்தைகளின் குண இலக்கணங்கள் எவ்வாறு சமூகத்தின் குண இலக்கணங்களை அமைக்கின்றன என்று ஆராய்வோம். அக் குழந்தைகளின் பிறப்பு வரிசை முறைப்படியே இதனைச் சிந்திப்பது நலம்.

முதல் குழந்தை

சந்தனம் தெளித்த கை, சாணம் தெளிக்க முற்படுமா? காதற் கொடியில் கனிந்த முதற் பயன் முதற் குழந்தை; மண வாழ்வின் இனிய கனியாகையால் பெற்றோர்க்குச் செல்லக் குழந்தையாக விளங்குகிறது. இந்தக் குழந்தைக்குச் சீராட்டும் பாராட்டும் அதிகம். பெற்றோரும் பாட்டன் பாட்டியாரும் குழந்தையைத் தம் கண்ணின் கரு விழியாகக் கருதுகிறார்கள். பொன்னொரு தட்டு, பூ ஒரு தட்டெனப் போற்றி வளர்க்கிறார்கள். இந்தக் குழந்தை கேட்பதை எல்லாம் கொடுக்கிறார்கள்; குழந்தை சொல்வதை எல்லாம் செய்கிறார்கள். குழந்தையும் கலப்பற்ற இன்பத்தை அனுபவிக்கிறது.

இந்த வாழ்வு நெடுங்காலம் நீடித்திருப்பதில்லை. தாய் திரும்பவும் கருக்கொள்கிறாள்; இரண்டாவது குழந்தை பிறக்கிறது தாயை முதற்குழந்தை தனது என்றே உரிமை பாராட்டியது. இப்பொழுதோ, மற்றொரு குழந்தைக்குத் தாய் தொண்டு செய்வதைப் பார்க்கிறது; தனக்கே சொந்தமென்று கருதியிருந்த தாயின் மடியில் புதுக் குழந்தை அமைதியாகப் படுத்து உறங்குவதைக் காண்கிறது; தன்னைப் பாராட்டிச் சீராட்டியவள் புதுக் குழந்தையைப் பாராட்டிச் சீராட்டுவதையும், தன்னைத் தாலாட்டிய அருமைக் கை புதுக் குழந்தையைத் தாலாட்டுவதையும் காண்கிறது. குழந்தைக்கு ஒன்றும் புரியவில்லை. மனம் குழம்பி நிற்கிறது. வீற்றிருந்த உயர்ந்த இடத்தி

விருந்து தன்னை யாரோ பலவந்தமாகக் கீழே தள்ளி விட்டது போல முதற் குழந்தைக்குத் தோன்றுகிறது. இந்தக் குழப்பத்தில், முன் பின் யோசியாமல் பெரியோர் யாராவது, "இந்தக் குழந்தை போதும், இனிமேல் நீ வேண்டாம், நீ வெளியே போய்விடு," என்று விளையாட்டாகக் கூறிவிட்டாலும், குழந்தைக்குக் கோபமும் வருத்தமும் தோன்றுகிறது. தனக்குப் போட்டியாக வந்த குழந்தையை வெறுக்கிறது. முதற் குழந்தை அனுபவித்த இன்பங்களில் பங்கு கேட்கப் பிறந்தது இரண்டாவது குழந்தை. முதற்குழந்தை இரண்டாவது குழந்தைமீது பொறாமை அடைகிறது.

மனத்தில் பொறாமைக்கு இடந்தந்த தலைச்சன் பிள்ளை தன் தம்பி தங்கையர்களை அதிகாரத்தால் ஆட்சி செய்ய முயலுகிறது. பெரியோர் சிறியோரை அடக்கி ஆள்வது உலகத்தின் மனப்போக்கன்றோ? தலைச்சன் பிள்ளையும் தன் வயதிற்குச் சிறிய தம்பி தங்கையரை அடக்கி ஆளலாம் என்று நினைக்கிறது. இவ்விதம் அடக்கி ஆளும் பொருட்டுத் தன்னைச் சிறந்தவனாகக் காட்டிக் கொள்ள விரும்புகிறது. கொள்கைகளிலும் ஒழுக்கத்திலும் பிழையின்றி இருக்க வேண்டும் என்று விரும்புகிறது; ஆகையால், வாழ்க்கைக் கட்டுத் திட்டங்களையும் சமூகக் கட்டுப்பாடுகளையும் வகுக்கிற அகங்காரி நிலைக்குப் பொருத்தமாகப் வாழ்கிறது; பார்ப்பவர் எல்லாரும் புகழ்ந்து கொண்டாடத் தகுந்த முறையிலே வாழ்க்கையைச் சிறந்த முன்மாதிரியாகத் திருத்தி அமைக்க முயல்கிறது: இத்தகைய உயர்ந்த நிலையில் இருந்து கொண்டு, தம்பி தங்கையருக்கு, "இதைச் செய்யுங்கள்; இதைச் செய்ய வேண்டாம்," என்று சட்டங்கள் வகுக்கிறது. இந்தச் சட்டங்களை அவர்கள் மீறினால், நீதிபதிகளாகிற தன் பெற்றோருக்குத் தம்பி தங்கையரின் செயல்களைத் தெரிவிக்கிறது; அல்லது, தானே அவர்களைத் தண்டிக்கத் தலைப்படுகிறது.

பிந்திப் பிறந்த குழந்தைகள் மீது குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட பொறாமைக் காரணமாக முதல் குழந்தை

பிற்கால வாழ்க்கையில் அவர்களை வருத்த நினைக்கிறது. இதற்குச் சிறந்த வழி அதிகாரமேயாம். முதற் குழந்தை மூத்தவன் அல்லனோ? இந்த அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகச் சமூகக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்ட ஒரு வாழ்க்கைப் போக்கை ஒப்புக்கொள்கிறான். குழந்தை வளர்ந்து பெரியவனான பிறகும், இதே மனப் போக்கு அவனிடத்தில் காண்கிறது. அதிகாரப் பிரியமும் சமூகக் கட்டுத் திட்டங்களைப் பற்றித் திட நம்பிக்கையும் முதல் குழந்தையின் தன்மயத்தில் முக்கிய அம்சங்களாகின்றன. இத்தகைய மனப்பண்பு பெற்று வளர்பவன் பழங்காலத்துக் கொள்கைகளை அதிகமாக விரும்புகிறான்; புதியது எதுவும் உதவாதது என்று கழித்துத் தள்ளுகிறான்; தொன்றுதொட்டு வந்த சமூகப் பழக்க வழக்கங்களின் சிறப்பை எடுத்துக் கூறுகிறான். அப்பழைய வழக்கங்களின் வாயிலாகத் தன் அதிகாரத்தை நிலை நிறுத்தி வாழ்வை அனுபவிக்கிறான்.

ஒரு தாலுகா போர்டு ஆபீஸில் ஒரு குமாஸ்தாவுக்கு இரண்டு ஆண்களும், ஒரு பெண்ணும் பிறந்தனர். மூத்த ஆண் குழந்தைக்குச் சுப்பிரமணியன் என்று பெயர். குழந்தையைப் பெற்றோர் செல்வமாக வளர்த்தார்கள்; இரண்டாவதாகச் சுந்தரி பிறந்தபோது, மூத்த குழந்தையின் சீராட்டுக்குச் சிறிது பங்கம் ஏற்பட்டது. ஆனாலும், ஆண்பிள்ளை என்ற உயர்வால், அவன் எல்லா உரிமைகளையும் இழக்கவில்லை. பெற்றோரைப் 'புத்' என்னும் நரகத்திலிருந்து விடுவிப்பவன் புத்திரன்—என்ற மரபுடையவர்கள் இந்துக்கள். இந்த மரபைப் பெற்றோர் அதிகமாகக் கடைப்பிடித்தனர். இந்த மரபுப்படிக் குழந்தை சுப்பிரமணியன் தனக்கிருந்த உயர்ந்த நிலையை உடனே இழக்கவில்லை. மூன்றாவதாகப் பிறந்தவன் ராமு. சுப்பிரமணியனுக்குப் பொறாமையும் பிறந்தது. அதிகாரஞ் செய்து தம்பியை அடக்கி ஆள விரும்பினான். இதற்காக முதன் முதலில் தன்னைச் சிறந்தவனாகக் காட்டிக் கொள்ளவேண்டுமன்றோ? ஆகையால், சந்தியாவந்தனம் முதலிய சடங்காசாரங்களை வெகு சிரத்தையாகக் கைப்

பற்றினன். வைதிக நெறி ஒழுக்கங்களில் தவருதிருந்தான் இதோடு நிற்கவில்லை. கல்வி கேள்விகளிலும் தன் திறமை திராணிகளையெல்லாம் வெளிப்படுத்திச் சிறந்து விளங்கினன். ராமுவும் கெட்டிக்காரனதான். ஆனல், தமையன் எதிரில் பெட்டிப்பாம்பு போல் அடங்குவான். ஒரு தருணம் ராமு வகுப்புப் பரீக்ஷையில் எண்பது மார்க்கு வாங்கிவிட்டுச் சீழ்க்கை அடித்துக்கொண்டு வெகு சந்தோஷமாக வீட்டுக்கு வந்தான். வாசற்படியில் கால் வைத்தவுடனே, தமையன் "என்னடா மார்க்கு வாங்கினய்? என்று அதிகார தோரணையிலே கேட்டான். நூற்றுக்கு எண்பது. " என்று நடுங்கும் குரலிலே பதில் அளித்தான் ராமு. "முதல் மார்க்கு என்னடா?" என்று தமயன், தம்பியைக் குற்றப்படுத்துவதற்காகக் கேட்டான். மெதுவான குரலில் எண்பத்தொன்று என்று பதில் வந்தது. "மற்றொருவன் முதல் மார்க்கு வாங்குமாறு நீ தூங்கிக்கொண்டிருந்தாயா?" என்று தமையன் கூறினன். வாயில் வந்தபடியெல்லாம் வைது உதையும் குத்தும் உதாரமாக வழங்கினன்.

இவ்வாறு இளமைப் பருவத்தில் வளர்ந்த சுப்பிரமணியன் வைத்தியப் பரீக்ஷையில் தேறிச் சிறந்த வைத்தியனனன். தன் வைத்தியத் தொழிலில் கைதேர்ந்தவனென்று பெயர் வாங்கினன்; உயர்ந்த உத்தியோகத்தையும் பெற்ருன். ஆனல், எந்த ஊருக்கு அவனை மாற்றினலும், அங்கே அவன் அதிக நாட்கள் தங்கமாட்டான். செக்காலையில் பூட்டிய மாடுபோல் உழைப்பான். இருப்பவரை எல்லாம் அதிகாரம் பண்ணுவான். யாவரையும் எடுத்தெறிந்து பேசுவான். இன்னவரைத் தான் இன்னது சொல்லலாம், சொல்லலாகாது என்ற வரைமுறை இல்லாமலே பேசுவான். அவனுக்கு எல்லாரும் சமமானவர்களே. தான்மட்டும் மற்றனைவரிலும் மேதாவி என்பதே இவன் அபிப்பிராயம். இவனது வாழ்க்கை - அகராதியில் பணிவு, தாழ்மை என்னும் சொற்களே காணப்படா. வாழ்க்கையின் பிற்காலத்திலும் இளமையில் தொடங்கிய வைதிக அனுஷ்டானங்

களை இவன் கை சோரவிடவில்லை. புதியது எதுவாயினும் அதனைக் கழித்துத்தள்ளும் மனப்பான்மை, இவனது நடத்தையில் வெகு தெளிவாகத் தோன்றியது.

"சாது மிரண்டால் காடு கொள்ளாது". மேலே சொன்ன வரலாறு உண்மைக் கதையேயாம்; இதில் இரண்டாவ வதாக பிறந்த ராமுவுக்குத் தமையன் செய்தி ஒன்றும் பிடிக்கவில்லை. தமையனின் அதிகாரத்தை எதிர்க்க விரும்பினன். ஆனல் எப்படி எதிர்ப்பது? பெற்ருேர் மூத் தவனுக்கு உடந்தையாக இருந்தனர். சமூகமோ தமையனின் செய்கையை ஒப்புக்கொண்டது. இந்தத் தமையனின் அதிகாரத்தை எப்படிக் கவிழ்ப்பது என்தே ராமுவின் சிந்தனை ஆயிற்று. ராமு ஒரு பாதிரிப் பள்ளிக் கூடத்தில் படித்துக்கொண்டிருந்தான். அங்கிருந்த ஒரு பாதிரியின் சுயநலமற்ற வாழ்க்கையும், தூயசிந்தனைகளும் ராமுவின் மனத்தைத் தற்செயலாகக் கவர்ந்தன. அவரிடத்தில் போக்குவரத்து வைத்துக்கொண்டான்; நாளடைவில் அந்தப் பாதிரியாரின் மதக்கோட்பாடுகளைப் பற்றித் தெரிந்து கொண்டான். மகானுடைய வாயிலி ருந்து புறப்படுவது மாட்சிமையானதாகத் தானே இருக் கும். புகுந்து பார்த்து அதன் நன்மை தீமைகளை ஆராயாமலே மதம் விட்டு மதம் மாறிவிட்டான்.

உணர்வு தெளிவுப்புலத்தில் ராமு அறிந்தது புதிய தும், உயர்ந்ததுமாகிய ஒரு சமய நெறிதான். அவனுடைய மன அயர்வுப் புலத்திலோ தமையனை எதிர்க்கவேண்டும் என்ற விருப்பம் பதுங்கிக் கிடந்தது. ராமு புதுச் சமயத் தைத் தழுவியவுடன் தமையன் கொதித்து எழுந்தான். என்னென்ன தீங்கு இழைக்க முடியுமோ அத்தனையும் இழைத்தான். இச்சமயத்தில் தந்தை மனம் இடிந்து இறந்தார். இந்தப் பழியையும் அண்ணன் தம்பிமீது சுமத் தினன். முடிவு மட்டும் ராமுவுக்கும் தனக்கும் எவ்விதத் தொடர்பும் உறவும் இல்லாதபடிச் செய்துவிட்டான். தமயன் மட்டும் பிறந்த சமூகத்திலேயே சீமானுக வாழ்ந்து இறந்தான். ராமுவுக்கு இதைப் பற்றிக் கவலையே இல்லை. தந்தை இறந்தபோது வருந்தினன். தமயன் இறந்த

பிறகு தன் தாய்க்கு உதவி செய்தான். தான் புகுந்த சமூகத்தில் ஒரு பெண்ணைக் காதலித்து மணந்து சீரிய நிலையைப் பெற்றுச் சுகமாக வாழ்க்கையை நடத்தினான்.

இரண்டாவது குழந்தை அல்லது நடுக்குழந்தை

இரண்டாவது குழந்தை பெற்றோருக்கு மட்டுமல்ல, முன் பிறந்த குழந்தைக்கும் அடங்கவேண்டி யிருக்கிறது. தொடக்கத்திலிருந்தே இரண்டாவது குழந்தைக்கு முதல் குழந்தையைவிடத் தன்னை எந்தவகையிலும் தாழ்ந்தவனாகக் காண்கிற சிறுமை உணர்ச்சிச் சிக்கல் ஏற்பட்டு விடுகிறது. இதைச் சரிக்கட்ட இரண்டாவது குழந்தை இழைந்தும் குழைந்தும் மற்றவர்களுடைய பிரியத்தைத் தேடுகிறது. தந்தையும், தாயும் முக்கியமாக முதல் குழந்தையும் அண்ணன் அல்லது அக்காள் இட்ட சட்டங்களை இயன்ற வரைக்கும் தகர்த்து எறிகிறது. வருந்தி ஏதேனும் ஒரு துறையில் தலைசிறந்து விளங்குகிறது. இந்த இரண்டாவது குழந்தையின் வாழ்க்கை என்றைக்கும் ஒரு போராட்டமாகவே இருக்கிறது. பந்தய ஓட்டத்தில் தோன்றுகிற பரபரப்பும் சிறுமை - பெருமையும் இந்தக் குழந்தையின் வாழ்க்கையில் வெளிப்படுகின்றன.

ஆட்லர் சாஸ்திரியார் இரண்டாவது குழந்தையின் மன நிலையை ஏழை மக்களோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். நாகரிக வாழ்க்கைச் சுழலில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் நடுத்தரக் குடும்பத்தினர் ஏழை மக்களுடைய பொறாமைக்கு ஆளாகிறார்கள். சமூகத்தின் நடுவகுப்பைச் சார்ந்த ஒருவர் மாதக் கடைசியில் படக்காட்சிக்குப் போகப் பணமில்லாமல் மனம் சோர்ந்தால், அவருடைய ரிக்ஷாக்காரன் உதவி செய்ய முன் வருகிறான். பெண் பட்டம் பெற்று உத்தியோகம் பார்க்கிறது என்ற பெருமையில் பெற்றோர் இருந்தால், "ஐயோ பாவம்; காலத்தில் கலியாணமாகாமல் இந்தப் பெண்ணின் வாழ்க்கைப் பாழாய்ப் போகிறதே," என்று வீட்டு வேலைக்காரி பரிதாபப்படுகிறாள். இந்த மேம்பாடான இரக்கத்தில் பொறாமையும் சிறுமை உணர்ச்சியும் தொனிக்கின்றன. உயர்

வகுப்பினர் தம்மை அவமதித்து அடிமைப் படுத்தியதை அவர்கள் மறந்துவிடவில்லை என்பதனையே அவர்களுடைய இரங்கல் மொழிகள் வற்புறுத்துகின்றன. உதாரணமாகக் காட்டிய உண்மைக் கதையில் வைதிகத்தின் அவதாரமாய்ப் பெற்றோரும் உற்றார் உறவினரும் பெருமைப் படுத்த வாழ்ந்த தமயனைக் கண்ட இளையவனும், "ஐயோ பாவம்! அண்ணனையார் எப்படிப் புகழ்ந்தாலும், அவனுடைய வாழ்க்கை நாகரீகத்தின் நறுமணமின்றி இன்பச் சுவையுமற்றுக் கழிந்ததே" என்று இரக்கங் கொண்டவனாக அடிக்கடி பேசலானான்.

வாழ்க்கைப் போராட்டத்தில், தன் உரிமைகளை நிலை நாட்டுகிற முயற்சிக்கு வேறு சில கஷ்டங்களும் உள்ளன. இந்தப் போராட்டத்தின் விளைவுகள் என்றுமே சிறந்த நன்மையைப் பயவா. முதல் குழந்தையின் அதிகார தோரணைகளை வெறுத்து நிற்கிற இரண்டாவது குழந்தை சில வேளைகளில் மிகப் பெரிய வாழ்க்கைக் குறிக் கோள்களை அடைய முடியாத காரணத்தால் குழந்தை வாழ்நாளெல்லாம் வருந்தலாம்; புதுமைப் பித்தத்தால் தெரிந்துகொண்ட குறிக்கோள்கள் உண்மையிலேயே சிறப்பின்றி அமையலாம். இந்தக் குழந்தை எடுத்த காரியத்தை விடமுடியாமல் வாழ்க்கையில் சலிப்படையலாம்.

குழந்தைகள் குடும்பத்தைச் சார்ந்த அங்கத்தினரில் தமக்குக் கவர்ச்சியான ஒருவரை முன்மாதிரியாகத் தெரிந்து கொள்வார்கள். பெரியவர்களாகும்பொழுது அவரைப்போலவே இருக்கவேண்டும் என்று கருதிச் சிறு வயதிலிருந்தே முயற்சி செய்வார்கள். முதற் குழந்தை, சிறிது காலத்திற்குத்தான் ஒரே குழந்தைக்கு உரிய தனிச் சீராட்டும் பாராட்டும் பெறுகிறது. இரண்டாவது குழந்தை பிறந்தவுடனே அவை அகப்படாமல் வருந்துகிறது. முதல் குழந்தை, ஒரே குழந்தையின் நிலையை இழந்து வருந்தும் பொழுது, குடும்பத்தில் அதிகச் செல்வாக்கும் அதிகாரமும் உடையவரைத் தனக்கு முன் மாதிரியாக ஏற்றுக்கொள்கிறது. இரண்டாவது குழந்தைக்குப் போராட்டம் அதிகமாக இருப்பதனால், வெகு விரைவில் தனக்கு ஏற்ற முன்

மாதிரியை ஏற்றுக்கொள்ள முடியாது. முதல் குழந்தை பெற்றோரில் ஒருவரை முன்மாதிரியாகத் தெரிந்துகொண்டு விட்டது. முதல் குழந்தை முன் மாதிரியாகத் தெரிந்து கொண்ட ஆள் இரண்டாவது குழந்தைக்கு விருப்பமாக இராது ஆகையால், முதல் குழந்தை தெரிந்துகொண்டது போக எஞ்சிய அங்கத்தினரில் யாரேனும் ஒருவரைத்தான் இரண்டாவது குழந்தை முன் மாதிரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரே குடும்பத்தில் ஐந்து குழந்தைகள் இருந்தால் ஐந்து குழந்தைகளும் தமக்குப் பொருத்தமான தனித்தனி முன்மாதிரிகளைத் தெரிந்து கொள்வார்கள்.

முதல் குழந்தை அமைதியான வாழ்க்கை உடைய வரை முன் மாதிரியாகக் கொண்டால், இரண்டாவது குழந்தை மிகவும் கொந்தளிப்பான வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளும். முந்திய குழந்தை நவநாகரிகப் பித்தம் இல்லாத ஒருவரை முன் மாதிரியாகத் தெரிந்து கொண்டால், இரண்டாவது குழந்தை நவநாகரிகச் சூறாவளிக்கு ஆளான ஒருவரைத் தனக்கு முன் மாதிரியாகத் தெரிந்துகொள்ளும். முதற் குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் முற்றிலும் எதிரிடையான குணங்கள் அமைவதற்கு அவர்கள் தெரிந்துகொள்ளும் முன் மாதிரிகளே காரணமாகின்றன. கமலம் முதலாவது குழந்தை; இராமகிருஷ்ணன் இரண்டாவது குழந்தை. பத்மினி மூன்றாவது குழந்தை. கமலம் தன் தந்தையைப் போல் தத்துவ ஞானியாக இருக்க விரும்பினாள். இராம கிருஷ்ணன் தன் தாயைப்போல் மதவைராக்கிய முடைய வனாக இருக்க விரும்பினான். தகுந்த காரணமில்லாத எந்தக் கொள்கையையும் கமலம் ஏற்றுக்கொள்ள மாட்டாள். இராம கிருஷ்ணனுடைய மத வைராக்கியத் திற்கு ஆராய்ச்சியே தேவை இல்லை தமக்கை இடத்தில் குற்றங் குறைகளைக் கண்டு பிடிப்பதற்கு அவனுடைய மத வைராக்கியம் பேருதவியாக இருந்தது. இது ஒன்றே அவனுக்குப் போதுமானது. முதற் குழந்தைக்கும் இரண் டாவது குழந்தைக்கும் எப்பொழுதும் மன வேற்றுமைகள் தோன்றிக்கொண்டே இருக்கும். பெற்றோரும் இதற்கு

உதவி புரிவார்கள். இதனாலேதான் இரண்டு சகோதரராவது இரண்டு சகோதரிகளாவது மனமொன்றி வாழ்தலைக் காண்பது அரிதாகின்றது.

மூன்றாவது குழந்தை பிறந்தவுடனே இரண்டாவது குழந்தை நடுக் குழந்தையாகிப் பலவாறு துன்புறும். முதற் குழந்தை பெண்ணும், இரண்டாவது குழந்தை ஆணும், மூன்றாவது குழந்தை பெண்ணுமாக இருந்தால் நடுக் குழந்தை தனியாகப் பிரிந்து தன் ஏற்றத்தை நிலைநாட்டத் தொடங்குவான். முதற் பெண் குழந்தைக்கும் மூன்றாவது பெண் குழந்தைக்குந்தான் போர் தொடரும். இளையவள் மூத்தவளுக்கு விரோதமான பல செயல்களில் இறங்குவாள்; பெற்றோரது மனத்தை மூத்தவளுக்கு எதிராகத் திருப்பிப் பகையையும் வெறுப்பையும் விளைக்கச் சூழ்ச்சி செய்வாள். மூத்தவளுக்கு இஷ்டமானதொன்றும் இளையவளுக்குப் பிடிக்காது. ஒரே குடும்பத்தில் இரண்டு ஆண் குழந்தைகளுக்கு இடையிலே மூன்று பெண் குழந்தைகள் இருந்தால், மூன்றாவது பெண்ணின் கண்ணீர் ஆறாய்ப் பெருகும்; அவளுடைய உடலும் பல நோய்களுக்கு ஆளாகும். இதற்குக் காரணம் ஆண் மக்கள் இருவர் ஒரு புறத்திலும், மூத்த பெண் மக்கள் இருவர் மற்றொரு புறத்திலும் இருந்து மூன்றாவது பெண்ணை நெருக்குவதேயாம். இந்தக் குழந்தைக்கு முதற் குழந்தையாய்ப் பிறப்பதற்கு உரிய புண்ணியமாயினும், கடைசிக் குழந்தையாகப் பிறக்கிற பாக்கியமாயினும் இல்லை. பெற்றோர் இதனை உணர்ந்து, இருபுறமும் நெருக்குண்டு வாழ்கிற குழந்தை எது எனத் தெரிந்து, அந்தக் குழந்தைக்குத் தம்மால் இயன்றவரை உதவி புரிய வேண்டும். இங்ஙனம் உதவி புரிதலை மற்றக் குழந்தைகள் தடுக்க முயல்வார்கள். ஆகையால் பெற்றோர் வெகு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

குழந்தைகளின் வயது நிலைகள்

முதற் குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் இடையிலே ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் இருக்குமாயின், முதற் குழந்தைக்கும் இரண்டாவது

குழந்தைக்கும் உள்ள உறவு முற்றிலும் வேற்றுமைப் படும். குழந்தைகள் சவலைகளாகப் பிறக்கும் பொழுது தான் உடன் பிறந்தவருக்குள் பலவகையான சண்டை சச்சரவுகள் தோன்றுகின்றன, மன வேற்றுமைகளும் அமைகின்றன. அடுத்தடுத்துக் குழந்தைகளைப் பெறுகிற தாயின் மனநிலையும் வேற்றுமைப் படுகிறது. பெற்றோர் குழந்தைகளின் குணப் பிணக்குகளைத் தீர்க்க முடியாமல் சங்கடப்படுகின்றனர். ஆதலால், பெற்றோர் குழந்தைப் பேற்றிற்குக் காலம் குறித்துக் கொண்டு வாழ்வதே சாலச் சிறந்தது.

கடைசிக் குழந்தை

தூக்கி வளர்த்த பிள்ளையும் துடையில் வைத்துத் தைத்த இலையும் உருப்படாது. தலைச்சனுக்கு ஒரு தனி மனப் பண்பு; கடைசிக் குழந்தைக்கும் ஒரு தனி மனப் பண்பு. கடைசிக் குழந்தையின் வாழ்க்கை முந்திய குழந்தைகளின் வாழ்க்கையிலும் கடினமானது. முந்திய குழந்தைகள் பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்டவர்களாக இருந்தால், இவர்கள் கடைசிக் குழந்தைக்குச் சிறிய தந்தை, சிறிய தாய் போன்ற உறவு-நிலையில் அமைகின்றனர். அப்பொழுது, கடைசிக் குழந்தை ஒரே குழந்தையின் நிலைமையை அடைந்து குடும்பத்தின் செல்லப் பிள்ளையாகிவிடும்.

முந்திய குழந்தைகளுக்கும் கடைசிக் குழந்தைகளுக்கும் வயதில் அதிகமான ஏற்றத் தாழ்ச்சி இல்லாத பொழுது, கடைசி மகவு முந்தியவரது வளர்ச்சி நெறிக்கு முற்றிலும் எதிரிடையான நெறியிலே செல்லத் தொடங்கும் பழையன அனைத்தையும் கவிழ்த்தெறிந்து புதிய நெறியிலே செல்ல வேண்டும் என்னும் அவாக் கொண்டு வாழத் தொடங்கும்; மற்றக் குழந்தைகளிலிருந்து முற்றிலும் வித்தியாசமான செயல்களும் சிந்தனைப் போக்கும் பெற்றிருக்கும்; 'இம்!' என்னுமுன்னே போருக்கு எழுகிற இயல்போடு, கடுகடுப்பும் வெடுவெடுப்பும் பெற்றிருக்கும்; மற்றவர்களுடைய ஆட்சியையும் கட்டுப்

பாடுகளையும் தகர்த்தெறிய முயலும்; வாழ்க்கைப் போராட்டத்தில் முன்னேற வழியில்லாத பொழுது, எதனைப் பற்றியும் கவலைப்படாமல் உதாசீனமாக வாழத் தொடங்கும். பிறர் நோக்கு விழைதல் என்னும் மனத்தின் இயல்புக்குப் போதிய பாராட்டு அகப்படாத போது, கூத்திலே கோமாளி என நடித்து, அனைவரது கவனத்தையும் கவர முயலும். கடைசிக் குழந்தைகளில் சிலர் திருடு முதலிய அடாத செயல்களால் பிறர் கவனத்தைக் கவர வழி தேடுவார்கள். வாழ்க்கையில் முன்னேற முடியாமல் யாவரும் தடை செய்வது போன்ற உணர்ச்சி கடைசிக் குழந்தையின் மனத்தில் தோன்றுவதால், தன் திறமையில் நம்பிக்கை குன்றிப்போகும்.

கடைசிக் குழந்தை வயதில் சிறியது; ஆகையால் உலக அனுபவத்தில் குறைவுடையது என மூப்படைந்தவர்கள் கருதுவர்; முக்கியமான எந்த வேலையையும் குழந்தைகளுக்குக் கொடுக்கமாட்டார்கள். கடைசிக் குழந்தை வளர்ந்த பிறகும், பெற்றோரும் பிறரும் அதனைக் குழந்தையாகவே கருதிப் புறக்கணிப்பார்கள். கடைசிக் குழந்தையின் வளர்ச்சிக்குப் பல இடையூறுகள் இருப்பதால், அதற்குப் போதுமான தைரியமும் வாழ்க்கையில் உற்சாகமும் தோன்றுமாறு பெற்றோர் உதவி புரிய வேண்டும். குடும்பத்தில் கடைசிக் குழந்தை வயதில் சிறியது; ஆகையால், அதனை யாவரும் ஆட்சி செய்ய விரும்புவர்; பெற்றோர் இதனைத் தடுக்க வேண்டும். கடைசிக் குழந்தையைப் பொம்மையாக வைத்து விளையாடுவதற்குப் பெற்றோர் இசையலாகாது. குடும்பச் சம்பாஷணையிலும் குடும்பப் பொறுப்பிலும் கடைசிக் குழந்தைக்குப் போதுமான உரிமை அளிக்க வேண்டும். இவர்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் பின் வாங்குகிற பேடிகளாக இருப்பார்கள்; காரியாலயத்திலும் பிற இடங்களிலும் தமக்கென்று ஏற்படும் கடமைகளைச் சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிப்பார்கள்; இந்தக் குழந்தைகள் பொறுப்பான வேலைக்கு உதவாதவர்களாக வாழ்க்கையை நடத்துவார்கள்.

ஒரே குழந்தை

செல்லம் சீரழிக்கும். குலக்கொழுந்தாய்ப் பிறந்த ஒரே குழந்தை குடும்பத்திற்கே செல்லப் பிள்ளை. இந்தக் குழந்தை என்றும் பெற்றோரையே பெரிதும் சார்ந்து பிழைக்கும் மனப்பான்மையைப் பெற்றுவிடும். உண்பதற்கும் உறங்குவதற்கும், உடுப்பதற்கும் நீராடுவதற்கும் விளையாடுவதற்கும் தாயேனும் தந்தையேனும் மற்றெவரேனும் இக்குழந்தைக்கு எப்பொழுதும் உதவி புரிய வேண்டும். ஒரு தாய்க்குப் பிறந்த ஒரே மகவு தனது ஆற்றலை உணராமலே வளரும். இக்குழந்தையின் திராணிகள் திறமைகளாக உருப்படுவதற்குப் பெற்றோரும், சூழ்நிலையாக அமைகிற பிறரும் தம்மை அறியாமலே தடைகளாகின்றனர். இக்குழந்தையின் திராணிகள் இயற்கை நிலையிலே நெடுங்காலம் இருந்துவிடும். பொதுவாக எல்லாக் குழந்தைகளும் செய்கிற சாதாரணச் செயல்களையே இக்குழந்தை செய்தாலும், பெற்றோர் அவற்றை விந்தை எனக்கருதிக் குழந்தையின் காது கேட்கப் புகழ்வார்கள். மிக்க செல்வம் உடைய பெற்றோரின் அன்புக்குப் போக்குவாயாகத் தோன்றுகிற ஒரே மகவு, கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனவும், தான் இட்டதெல்லாம் சட்டம் எனவும் கருதி, விரும்புகிறவை அனைத்தையும் பெற்று இன்பமாக வாழத் தொடங்குகிறது. விரும்பியது கிட்டாதபோது, முரண்டு அடிக்கிறது. பெற்றோர் அளிக்கும் பண்டங்களில் பங்கு கேட்பார் இல்லாமையால், பிறருக்கு அளித்து மகிழும் மனப்பண்பில்லாமலே வாழப் பழகி விடுகிறது. தனியாக இன்பம் அனுபவிக்கிற இயல்பும் தன்னயமும் பிடிவாதமும் பிறர் துயரம் உணராத மனப்பான்மையும் இக்குழந்தையிடத்தில் தோன்றுகின்றன.

பெற்றோரின் ஒரு மகவாகப் பிறக்கிற இத்தகைய செல்லப்பிள்ளை வாழ்க்கைப் போராட்டத்தில் தனியனாகப் புகும்பொழுது, இதன் வாழ்க்கை, குணக்கேடுகளின் தொகுதியாக அமைகிறது. பொறுமை இன்மையாலும் கவலையீனத்தாலும் செய்கிற வினைகளைப் பாழாக்கிவிடும்

பழக்கமும் இக்குழந்தையிடத்தில் தோன்றலாம். ஒரே மகவு பெண்ணாயிருந்தால், கணவனது வாழ்க்கையைப் பாழாக்கிவிடுவாள். கொண்ட கணவனுக்குப் பணிவிடை செய்து அவன் வாழ்வை இன்பமாக்கவேண்டும் என்ற எண்ணமே இவளுடைய உள்ளத்தில் தோன்றாது. கணவன் எல்லாப் பணிவிடைகளும் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பாள். ஒரே குழந்தை குடும்பப் பொறுப் அறியாமல் வாழும்; பிறரோடு நட்புத் தொடர்பு இல்லாமல் தனி மரம் போல் நிற்க முயலும்; பிறர் புகழ்ச்சிக்கு ஏங்கி நிற்கும்; ஒரே குழந்தை சமூகத்தோடு இசைந்து ஒத்துழைக்க உடன்படாது. தன்னோடு பழகுகிறவர் அனைவரும் தனக்குப் பணிவிடைகள் புரியவேண்டுமென விரும்பும். தனக்குப் பலவகையிலும் உதவி புரிகிற உலகிற்குத் தான் இயற்றவேண்டிய கடமைகளை உணராமலே வாழ முயலும்.

பிறர் உதவியை நாடிப் பிழைக்கப் பழகிய ஒரே குழந்தை, வாழ்க்கையில் ஏற்படுகிற பல சிக்கல்களைத் தவிர்க்கவும், கஷ்டங்களை மேற்கொள்ளவும் ஆற்றல் இல்லாமல் இருக்கும். ஒரே குழந்தை, ஆகையால் அதற்குச் சிறப்பும் அருமையும் அதிகந்தான் என்ற சிந்தனை பெற்றோரின் உள்ளத்தில் எழலாகாது. இத்தகைய சிந்தனை இருப்பதாகவும் பெற்றோர் காட்டிக் கொள்வதும் தகாது. ஒரே குழந்தையைப் புகழ்கிற விஷயத்தில் யாவரும் வெகு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். புகழ்ச்சி ஓரளவிலே நிற்கவேண்டும். இன்றேல், இக் குழந்தை மற்றவர்க்கில்லாத சிறப்பு தனக்கு உண்டு என்று கருதி வாழத்தொடங்கும். இக்குழந்தை தன்னைப் போன்ற குழந்தைகளோடு பழக வசதி இல்லாமல் இருப்பதனால், குழந்தைகளின் இயல்புகளை உணராமலே வளர இடமுண்டு.

ஒரே குழந்தைக்கு நாணம் அதிகமாக இருக்கும். தன்னைவிடத் திறமையும், அழகும், உரைத் திறமும் பொருந்திய குழந்தைகளைப் பகைத்து வாழும். இதனிடம் பொறாமையும் அதிகமாக இருக்கும். பிறர் வாழ்

வைக்கண்டு மகிழ இதற்கு மனம் வராது. சோம்பலும் ஒரே குழந்தை இடத்தில் பெருகி வளர இடம் உண்டு. ஒரே குழந்தை வகுப்பில் பாடம் நிகழாமல் தடைசெய்ய முயலும்; இடம் பொருள் ஏவல் உணராமல் நகைப்பதும், கோமாளித்தனமாக நடப்பதும் ஒரே குழந்தையிடத்தில் அமையலாம். பலர் நடுவில் பிறர் நோக்கு விழைந்து, பலவாறாக ஒழுக முயலும். பிறர் நோக்கு விழைவிற்குப் பாராட்டு அகப்படாதபோது, முரண்டு அடித்து நிற்கும்.

ஒரே குழந்தையை உடைய பெற்றோருக்குப் பொறுப்பும் அக் குழந்தையை வளர்ப்பதில் சிரமும் அதிகமாகவே இருக்கும். பெற்றோர் ஒரே குழந்தையை வளர்க்கிற விஷயத்தில் தமது மனோவிகாரங்களை முற்றிலும் அடக்கி ஆள வேண்டும். வெகு விழிப்போடு எல்லாவற்றையும் விவேகமாக ஆய்ந்து நிதானமாகச் சிந்திக்கவேண்டும்; இயன்றவரைத் தம் குழந்தைக்குப் பொருத்தமான தோழர்களை அளிக்கவேண்டும்; ஒரே குழந்தை மற்றக் குழந்தைகளோடு பழகும்பொழுது, ஒருதலையான அன்பும், கனிவும், பாராட்டும், சீராட்டும் தோன்ற இடந்தரலாகாது.

குழந்தை மனப்பான்மையின் ஒழிபியல்

முதற் குழந்தை, இரண்டாவது குழந்தை, நடுக் குழந்தை, கடைசிக் குழந்தை, ஒரே குழந்தை எனத் தனித்தனியே பிரித்து உரைத்தவை அனைத்தும் ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் பொதுவானவை. பெண் குழந்தைகளுக்கே உரிய இயல்புகளை ஆங்காங்கு பிரித்துக் கூறியிருக்கக் காணலாம். இரண்டாவது குழந்தைக்கும் நடுக்குழந்தைக்கும் பொது இயல்புகள் பல உள்ளன. இவை இரண்டும் ஒரே வகுப்பில் அடங்கும். ஆதலால், குழந்தைகளை நான்கு பெரும் பிரிவில் அடக்கலாம். எனினும், சூழ்நிலை ஏதுக்கள் பலவாறாக அமைகின்றமையால், இந்நான்கு வகைக் குழந்தைகளில், பல கலப்பு - இயல்புகள் தோன்றுகின்றன. இங்ஙனம் குழந்தைகளைப் பாகுபாடு செய்வதில் ஒரு நோக்கமுண்டு; எல்லாக் குழந்தைகளும் ஒரே

மாதிரியான பண்பும் மனப்பான்மையும் பெற்றிருக்க வேண்டும் என்று பெற்றோர் எதிர்பார்க்கலாகாது என்பதனை வற்புறுத்தலே முதல் நோக்கமாம். குழந்தையின் வாழ்க்கை தொடங்கும்பொழுதே வேற்றுமைக்குத் தான் அடிப்படையான காரணங்கள் அமைந்துள்ளன. இயற்கை அன்னையும் இதனையே விரும்புகிறாள். "நான் எல்லாக் குழந்தைகளையும் ஒன்றுபோல நேசிக்கிறேன்; ஒரு குழந்தையிடத்தில் அதிகமான பிரேமையோ, மற்றொரு குழந்தையிடத்தில் குறைவான பிரேமையோ எனக்கில்லை" என்று பெற்றோர் வழக்காடலாம். பெற்றோர் தம்மையும் தமது மக்களின் மன இயல்புகளையும் நன்றாய் ஆராய்ந்து நோக்குவாராயின், உண்மை புலப்படும். பொது விதிகளுக்குப் புறம்பாகப் பல ஒழிபுகள் தோன்றலாம். பெற்றோரும் சூழ்நிலை ஏவல்களுமே இவ்வொழிபுகளுக்குக் காரணங்களாம்.

பாரம்பரிய நியதியாலும் சூழ்நிலை ஏவல்களாலும் அமைகிற உடற்கூறுகளைச் சிந்தித்தல் இன்றியமையாதது. உடல்வலிமை உடைய குழந்தை அதில்லாத குழைந்தையைப் பார்க்கிலும் வாழ்க்கைப் போராட்டத்திற்குப் பொருந்திய நிலையில் இருக்கிறது. அழகு உடைய அழகில்லாத குழந்தையிலும் ஏற்றமான நிலையில் இருக்கிறது. பல வகையான துணை நலங்களைப் பெற்று விரைவில் முன்னேறிச் செல்கிற குழந்தைகளிடத்தில் ஒருதலையான அன்பு பாராட்டிக் கொண்டாடுவதைப் பெற்றோர் தவிர்க்கவேண்டும். வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் போதுமான துணை நலங்களைப் பெறாமல் இருக்கிற குழந்தைகளுக்கே அதிகமான பராமரிப்பும் கவனிப்பும் தேவையாக இருக்கின்றன. துணை நலங்கள் மிகுதியாக உடைய குழந்தைகளுக்கு உதவி புரிவதை மட்டுப்படுத்தி, குறைவான துணை நலங்களுடைய குழந்தைகளுக்கு அதிகமாக உதவிபுரிவதனால் மட்டுமே, சமநிலை பெற்ற மனப் பண்பும் மனப்பான்மையும் திறமை திராணியும் உடைய புதிய மானிடச் சமூகத்தைத் தோற்றுவிக்க முடியும்.

வேண்டாத பிள்ளை

வேண்டாத குழந்தைகளைப் பற்றிய பிரச்னை மிகப் பெரியது. இந்தப் பிரச்னையில் புகுவதற்கு முன், வேண்டாத பிள்ளைகள் எப்படித் தோன்றுகிறார்கள் என்று பார்ப்போம். ‘ஐந்திலே வளைத்தல்’ என்ற அதிகாரத்தில் ‘வாய் வழியே’ என்னும் முதற் பகுதியில், ‘முதல் மாதிரி வேண்டாத பிள்ளை’ என்ற தலைப்பின் கீழ் ஒரு காரணத்தைத் தெரிந்து கொண்டோம். சிற்றின்பத்தை நெடுங் காலம் முட்டின்றி அனுபவிக்கலாம் என்று கருதும் புது மணமகனும், மணமகளும் இல்லற வாழ்க்கையைத் தொடங்கும் பொழுது, காலநாமதமின்றிப் பிறக்கிற முதல் குழந்தை பெற்றோருக்கு வேண்டாத பிள்ளையாக அமையலாம்.—இதனை அப்பகுதியில் காணலாம்.

வேண்டாத பிள்ளைகள் தோன்றும் காரணங்கள்

மானிடத் தொகுதி-வாழ்க்கையில் பால்மயம் என்னும் இயற்கை உணர்ச்சி பலவகை மறைப்புக்களால் மூடுண்டிருக்கும். பால்மயத்தைப் பற்றிய மயக்கம் ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் பெருகியிருக்கிறது. குழவிப் பருவம் கடந்து, பாலப் பருவம் தொடங்கும்பொழுதே உளவு-ஆய்வு-உணர்வால் ஆண் மக்களும், பெண் மக்களும் பால்மயத்தைப் பற்றி நன்றாய் அறிய அவாவுகின்றனர். இந்த அவாவைத் தீர்ப்பதற்குப் போதுமான வழி இல்லாதவாறு சமூகக் கட்டுப்பாடுகள் பால்மயத்தைப் பலவகை மறைப்புக்கள் இட்டு மூடி வைத்திருக்கின்றன. குமரப் பருவமும், பெதும்பைப் பருவமும் கடந்தவுடனே, இரு பாலாருக்குள்ளும் பால்மய மயக்கம் அதிகரிக்கிறது; பால்மயத்தை ஆய்ந்துணரும் அவா கட்டுக் காவல்களை மீற முயல்கிறது. இம்முயற்சி நெறி தவறிச் செல்லும் பொழுது, சமூகத்தினர் ஒப்புக்கொள்ளாத முறையிலே, ஆண் பெண்ணாகிய இருதிறத்தாரும் களவொழுக்கத்திற்கு உடன்படுகின்றனர். இவ்வொழுக்கத்தால், முறைமை தவறிப் பிறக்கிற குழந்தைகளுக்கு சமூகத்தில் இடம் இல்லை. சமூகம் இத்தகைய மக்களை நெருக்கி ஒழிக்க முயலுகிறது.

பால் மயத்தைப் பற்றிய மயக்கத்தால் களவொழுக்கத்தில் புகுகிற இளைஞரது மக்களாகத் தோன்றுகிற வேண்டாத பிள்ளைகள் சிலர். இனி, மனைவி மக்களைத் துறந்து, நெடுங்காலம் போர்க்களத்தில் வாழ்கிற வீரர்களும், மணமாகாத போர் வீரர்களும், தமது காம வேட்கையைத் தணித்துக் கொள்வதற்காகக் கண்ட பெண்களோடு கலந்து பெறுகிற மக்களும் வேண்டாத பிள்ளைகள் என்ற வகுப்பில் அடங்குவர். இவ்வகுப்பினர் காம ஒழுக்கத்தால் தோன்றிய வேண்டாத பிள்ளைகளாவர். ஆணுக்கும், பெண்ணுக்கும் காமத்தைத் தணித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை வரம்பு கடந்து செல்லும்பொழுது, காமச் சேர்க்கையால் விளைகிற மகவும் வேண்டாததாகிறது. இந்தக் கருவைத் தொலைக்கவேண்டும் என்ற எண்ணந்தான் களவொழுக்கத்திற்கு ஆளான ஆண் பெண்களது உள்ளத்தில் ஓங்கி நிற்கும்.

மணமான சில ஆண்டுகளுக்குள் கணவனை இழந்து கைம்மை - வாழ்க்கைக்கு ஆளாகிற பெண்களின் மனக் கட்டு மானத்திலும், உடற்கட்டுமானத்திலும் சந்தான வேட்கை தணிவதில்லை இந்த வேட்கையை அடக்கிச் சிறைப்படுத்தச் சமூகம் பலவகையான கட்டுக் காவல்களை வகுத்திருந்தபோதிலும், பலர் களவொழுக்கத்திற்கு ஆளாகின்றனர். இதன் விளைவாகவும் குழந்தைகள் தோன்றுகின்றனர். இவர்களும் வேண்டாத பிள்ளைகளாகின்றனர். கைம்பெண் ஈன்ற வேண்டாத பிள்ளைகள் களவொழுக்கத்தின் வேண்டாத பிள்ளைகள் என்ற வகுப்பில் அடங்குவர்.

ஒருத்தி இரண்டு மகவை ஈன்று இறந்து போகிறாள். கணவன் சில மாதங்கள் சென்றதும், இல்வாழ்க்கைக்குத் துணைவியாக வேறொரு பெண்ணை மணக்கிறான். இரண்டாவது மனைவிக்கு மக்கள் பிறக்கிற பொழுது, முந்திய தாரத்தின் இரண்டு மக்களும் வேண்டாத பிள்ளையின் நிலையை அடைகின்றனர். இரண்டாவது, மூன்றாவது மணத்தால் வேண்டாத பிள்ளைகளாகிறவர் தனி வகுப்பில் அடங்குவர். அடுத்தடுத்து மக்களைப் பெறுவதாலும்,

வறுமையால் வருந்துகிற காலத்தில் மக்களைப் பெறுவதாலும் சில குழந்தைகள் வேண்டாத பிள்ளைகளாகின்றனர். "ஏன் பிறந்ததோ இச்சனியன்?" என்ற மனக் கசப்பே பெற்றோரின் மனத்தில் தழைத்தோங்கி நிற்கிறது.

கணவன் திண்ணிய உடலும், சந்தான உற்பத்தி ஆற்றலும் உடையவனாக இருக்கின்றான். மனைவியோ பல காரணங்களால் உடல் வலி குன்றிப் புணர்ச்சி அவா இன்றி இருக்கிறாள். எனினும் கணவனுடைய காம வாழ்வுக்கு உடன்படாவிட்டால், தன் உரிமையைப் பிறிதொரு பெண் கவர்வாள் என்னும் சிந்தனையாலோ, தனக்குத் துன்பம் நேர்ந்தாலும், தன் காதலனது இன்பமே பெரிதென்னும் சீரிய மனப்பண்பாலோ புணர்ச்சிக்கு உடன்படுவதனால் பிறக்கிற மகவுகள் வேண்டாத பிள்ளைகளாகலாம். சில ஆண்களும் பெண்களும் பால்மயப் பொருத்தமின்றியே மணந்து இல்லறத்தில் ஒழுகுவர். இத்தகைய பெற்றோர்க்குப் பிறக்கிற மக்களில் பெரும்பாலோர் வேண்டாத பிள்ளைகளின் வகுப்பைச் சார்ந்திருப்பர். கணவன் மனைவியரிடையே பால்மய ஒற்றுமை இன்மையால், உண்மைக் காதலும் இல்லை. காதலின்றிப் பிறக்கிற மகவுகள் வேண்டாத பிள்ளைகளாகவே வளர்கின்றனர்.

அழகிய மேனிநிறம் பெற்ற மக்களும், உறவினரும், பெற்றோரும் வாழ்கிற குடும்பத்தில் கரிய மேனி நிறம் பெற்றுப் பிறக்கிற குழந்தைகளும், பொது அளவுக்கு மிஞ்சிய திறமை திராணிகள் உடைய குடும்பத்தில் மனக் கோளாறுகளோடு பிறக்கிற குழந்தைகளும் வேண்டாத பிள்ளைகளாகலாம். களவொழுக்கத்தின் விளைவாகவும், காம ஒழுக்கத்தின் விளைவாகவும் பிரசவ வைத்தியசாலைகளிலும் பிற இடங்களிலும் பிறக்கிற மக்களைக் காப்பதற்காக நாடு தோறும் பல அநாதைச்சாலைகளும், வேண்டாத பிள்ளைகளைப் பராமரிக்கும் இடங்களும் ஏற்பட்டுள்ளன. மேலை நாடுகளில் வேண்டாத பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படுகிறவாறு நமது நாட்டினர் கவலைப்படுவதில்லை. வேண்டாத பிள்ளைகளைப் பற்றிக் கவலைகொண்டு

அநாதைச் சாலைகளையும் வேண்டாத பிள்ளைப் பள்ளிக் கூடங்களையும் ஏற்படுத்துவதனால், சமூகத்தார் தமது கடமை தீர்ந்ததென்று சும்மா இருக்க முடியாது. போரின் விளைவாகவும் பால்மயத்தைப் பற்றிச் சமூகத் தாரிடையே தோன்றியுள்ள பழங்காலக் கட்டுத் திட்டங் களின் விளைவாகவும் தோன்றுகிற வேண்டாத பிள்ளைகள் ஒரு நாட்டுக்குப் பெரும் தொல்லையாகின்றனர்.

களவொழுக்கத்தாலும் காம ஒழுக்கத்தாலும் தோன்றுகிற குழந்தைகளின் மனம் சீரிய முறையிலே உருப்பெறாமல் போவதற்குக் காரணம், தாயின் அன்பும் பராமரிப்பும் கிட்டாமல் போவதேயாம். இதனால் குழந்தை யின் மனத்தில் பலவகைச் சிக்கல்கள் தோன்றுகின்றன. களவொழுக்கத்திலும் காம ஒழுக்கத்திலும் பழகிய பெற் றோரின் மனக் கோளாறுகள் மக்களிடத்திலும் தோன்றுவன. இக்காரணத்தால் வேண்டாத பிள்ளை களின் மனச்சிக்கல்கள் பன்மடங்கு அதிகமாகின்றன.

புதுமை-ஆய்வு-உணர்வும், உளவு-ஆய்வு-உணர்வும் விலங்குலகத்திலுங் கூட காண்கிற இயற்கை உணர்வு களாம். இவ்வுணர்வுகள் மானிட நிலையில் மிகவும் ஏற்ற மாக இருக்கின்றன. உயிர்கள் அனைத்தும் இன்பத்தை நாடியே உலகில் வாழ்கின்றன. இயற்கை உணர்வுகள் அனைத்தும் இன்பத்தை நாடுவதற்கு உதவுவன. மானிட நிலையிலோ, இயற்கை உணர்வுகளோடு பகுத்தறிவும் அனு பவ முத்திரைகளும் இன்பத்தை நாட உதவி புரிவன. பிறக்கிற குழந்தைக்குத் தொடக்க இன்பமாக இருப்பது உணவேயாம். இதனை அடுத்து நிற்பது தொடுகை இன்ப மாம். பிற புலன்களின் வாயிலாக வருகிற இன்பங்கள் அனைத்தும் தொடுகை இன்பத்தில் அடங்குவன. குழந் தைக்கு இன்பத்தை விளைப்பவள் அன்னையே. வாழ்க் கைத் தொடக்கத்தில் தந்தைக்கும் மகவுக்கும் பற்றுணர் வுத் தொடர்புகள் தோன்றா. முதல் ஆண்டுகளில் உள்ள தொடர்புகள் அனைத்தும் தாயோடுதான் அமைகின்றன. ஆண்மகவுக்குத் தாயிடத்தில் தோன்றுகிற ஈடிப்பஸ் உறவும், பால் மறந்த பெண் குழந்தைக்குத் தந்தையிடத்

தில் தோன்றுகிற எலக்டிரா உறவும் மக்களின் மன வளர்ச்சிக்குப் பேருதவியாக இருப்பன. இவை சிக்கல் களாகப் பரிணமிக்கின்ற பொழுதுதான் தீமையை விளைக் கும். ஈடிப்பஸ் உறவு சிக்கலாக மாருமல் இருந்தால், இவ்வளவு ஒருவனைக் கற்புடையவனுகவும், சீரிய நெறியில் ஒழுகுபவனுகவும் மாற்றவல்ல ஆற்றல் உடையது; அரிய பெரிய மனப்பண்புகளை வளர்ப்பதற்கு உதவுவது. ஈடிப் பஸ் உறவு ஆண் மகவுக்கு நன்மை செய்வது போலவே, எலக்டிரா உறவு பெண்மகவுக்குப் பல நலங்கள் பயப்ப தாகும்.

அநாதைச் சாலைகளிலும் வேண்டாத பிள்ளைப் பள்ளிக்கூடங்களிலும் வாழ்கிற பிள்ளைகளுக்கு ஈடிப்பஸ் உறவாயினும் எலக்டிரா உறவாயினும் ஏற்பட வழி இல்லை. எனினும், சிறந்த வசதிகளோடு மானஸ சாஸ்திர முறையில் நிறுவிய அநாதைச் சாலைகளையும் வேண்டாத பிள்ளைப் பள்ளிக்கூடங்களையும் தவிர, இத் தகைய குழந்தைகளுக்கு வேறு புகலிடம் அமைக்க முடியாதன்ருே? மக்கள் இல்லாமல் வருந்துகிற குடும்பத் தார் வேண்டாத பிள்ளைகளை ஏற்றுக்கொண்டு தமது சொந்த மக்களாகப் பாராட்டி வளர்க்கலாம். முதலில் எல்லாம் செம்மையாகவே இருக்கும். நாட்கள் செல்லச் செல்ல, குழந்தையின் அனுபவ முத்திரைகள் வளருந் தோறும் வேண்டாத பிள்ளை பலவகை மனச் சிக்கல் களுக்கு ஆளாகலாம். வேண்டாத பிள்ளைகளின் மனக் கோளாறுகள் எத்தகையன என்று பார்க்கலாம்.

களவொழுக்கத்தாலும் காமவொழுக்கத்தாலும் பிறக்கிற வேண்டாத பிள்ளைகள்

இவ்வகுப்பைச் சார்ந்த பிள்ளைகள் உலகில் பிறக்கிற பொழுதே சமூகப் பொது உரிமைகளை இழந்து விடுகின் றனர். சமூகம் இவர்களை வெறுத்துத் தள்ளுகிறது. குலமும் கோத்திரமும், குணமும் நலமும் ஆய்ந்து பெண் கொடுத்துப் பெண் கொள்கிற மரபுடைய சமூகத்தார் இவ்வகுப்பைச் சார்ந்த வேண்டாத பிள்ளைக்குத் தமது

பெண்ணைக் கொடுக்க உடன்படுவரோ? இவ்வகுப்பைச் சார்ந்த ஒரு பெண்ணைத் தமது மகனுக்கு மனையாளாகக் கொள்ள இசைவரோ? இவ்வகுப்பைச் சார்ந்த வேண்டாத பிள்ளைகள் சமூகத்தாரின் மதிப்போடு நேர்மையான முறையிலே மணம் புரியும் உரிமையையும் இழக்கின்றனர். இப்படியே பார்த்துக்கொண்டு போனால், இவர்கள் ஒரு சமூகத்தில் இழக்கிற உரிமைகள் எவை என உணரலாம்.

தாய் வயிற்றில் ஏமமாக இருக்கிற கரு மண்ணில் மகவாகத் தோன்றியவுடனே 'விழுந்து விடுவேனோ?' என்னும் அச்சத்திற்கு ஆளாகிறது என முன்னரே அறிந்து கொண்டோம். குழந்தையின் மனத்தில் இந்த அச்சம் தோன்றாதிருக்கும் பொருட்டும் இதனைத் தடுக்கும் பொருட்டும் பெற்றோர் செய்யவேண்டிய கடமைகளையும் விரிவாக அறிந்து கொண்டோம். களவொழுக்கத்தாலும் காம ஒழுக்கத்தாலும் உலகில் பிறக்கிற குழந்தைகளின் மனத்தில் தோன்றுகிற அச்சம் ஒழிவதற்குப் போதுமான சீராட்டும் பாராட்டும் கிடைப்பது எங்ஙனம்? இவ்வச்சம் ஒழிவதற்கு வழியின்மையால், வேண்டாத பிள்ளைகள் வருந்துகின்றனர். இவர்களுடைய உள்ளத்தில் அச்சம் நிலையாகக் குடி கொள்கிறது. நாளுக்கு நாள் உள்ளத்தில் வளர்ந்தோங்கி வருகிற அச்சத்தால் சமூகத்தைப் பற்றிய சந்தேகமும், தமக்கு ஏமம் செய்யாத சமூகத்தாரிடம் பகையும் ஓங்கி வளர்கின்றன. அச்சம்! சந்தேகம்! பகை! இம்மூன்றும் இவ்வகுப்பைச் சார்ந்த குழந்தைகளைக் கொடிய குற்றவாளிகளாகவும் கற்பொழுக்க மற்றவர்களாகவும் செய்வதற்குப் போதாவோ?

இவ்வகுப்பைச் சார்ந்த குழந்தைகள் பொதுவாக வைத்தியசாலைகளிலே பிறக்கின்றனர்; பின்பு அநாதைச் சாலைகளில் வளர்கின்றனர். வேண்டாத பிள்ளைகள் பலர் கூடி வாழும் பொது இடங்களாக அநாதைச் சாலைகள் அமைகின்றன. எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரேமாதிரி உடை; ஒரேமாதிரி உணவு; ஒரேமாதிரி உறக்கம்; எல்லாருக்கும் ஒரேமாதிரி விதி விலக்குகள். இச்சாலைகளில் வாழ்கிற மக்களுக்குத் தனித்தனிப் பராமரிப்பும்,

தனித்தனி அன்பு பாராட்டுதலும் கிடைக்க வழியில்லை. எல்லாக் குழந்தைகளுக்கும் இச்சாலைகளில் ஒரே மாதிரியான படிப்புத்தான் கிடைக்கிறது. ஆகையால், இந்தச் சாலைகளில் வளருகிற குழந்தைகள் சமூகத்தாரைப்பற்றிய சந்தேகமும் பகையும் உடையவர்களாகவே வளர்கின்றனர். இவர்களுக்கு உலகத்தைப் பற்றிய அனுபவம் போதிய அளவு ஏற்படுவதில்லை. தொடக்கத்தில் தோன்றிய அச்சமும் ஒழியாமலே இருக்கிறது. இக்குழந்தைகள் பெற்றோர் செய்த பாவத்தைத் தம் வாழ்நாளெல்லாம் சுமந்து வருந்துகின்றனர். இவர்களுக்குத் தம் தந்தையின் பெயரும் தெரியாது; தாயின் பெயரும் தெரியாது. சமூகத்தினரிடையே தலை நிமிர்ந்து நடக்க முடியாதவாறு நாணுறுவர். இவரது மனத்தில் சிறுமை மனச்சிக்கல் தலை விரித்தாடும். சில குழந்தைகள் சிறுமை மனச்சிக்கலின் தூண்டுதலினால் துணிச்சலான காரியங்களைச் செய்து சமூகத்தார் அஞ்சுமாறு பெயரெடுப்பர். தொடக்கச் சூழ்நிலைகளும், பிறர்மீது கொண்டுள்ள சந்தேகமும், சமூகத்தார் மீதுள்ள பகையும், சிறுமை மனச்சிக்கல்களும் இவ்வகுப்பைச் சார்ந்த குழந்தைகளை எதற்கும் அஞ்சாமல் பழி பாவங்களுக்குத் துணிந்திறங்கும் வகுப்பினராகப் படைத்து விடுகின்றன.

அநாதைச் சாலைகளில் வாழ்கிற குழந்தைகள் அனைவரும் பெற்றோரின் பழியைச் சுமப்பவர்கள்; சமூகத்தின் புறக்கணிப்புக்கு ஆளானவர்கள்; அச்சம், சந்தேகம், பகை முதலியவற்றிற்கு இடம் கொடுப்பவர்கள்; ஆகையால், இவர்களோடு பொறாமையும், சண்டை சச்சரவும், திருட்டும், பொய்யும் தோழமை கொண்டு உறவாடுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் புத்தித்வமும், திறமை திராணிகளும் சிறந்தோங்கவும், கல்வி கேள்விகள் வளர்ச்சி அடையவும் வழியில்லை. ஆதலால், இக்குழந்தைகளில் சிலர் கொலை களவு செய்யும் குற்றவாளிகளாக மாறுகின்றனர்; வேறு சிலர் மூடர்களாகின்றனர்; மற்றும் சிலர் சோம்பேறிகளாகவும் காலாடிகளாகவும் மாறுகின்றனர்.

இத்தகைய குழந்தைகளைச் சமூகம் பகைப்பதோடு நின்றுவிடுவதில்லை; இவர்களை இழிவாகவும் நடத்துகின்றது. அநாதைச் சாலைகளில் வளர்ந்த ஒரு பெண்ணைச் சமூகத்தைச் சார்ந்த ஒருவன் மணக்க நேர்ந்தால், அன்னவரது இல்லறவாழ்க்கை இன்பமாக முடிவதில்லை. உலக அனுபவம் இல்லாத அநாதைப் பெண் தவறான ஒழுக்கத்தில் புகப் பல ஏதுக்கள் அமையலாம். சென்னை மாகாணத்தில் உள்ள அநாதைச் சாலைகளைச் சீர்திருத்தம் செய்து மானஸசாஸ்திர முறைப்படி அமைத்தால் அன்றி இவற்றால் நன்மை ஏற்படாவாம்.

களவொழுக்கத்திற்கும் காமவொழுக்கத்திற்கும் ஆளாகி மக்களைப் பெறுகிற பெற்றோர் தம்மக்கள் என்று அவரை ஒப்புக்கொள்ள வேண்டும் இவ்வகுப்பைச் சார்ந்த குழந்தைகளைச் சமூகத்தார் அன்போடு ஏற்றுக் கொள்ளவேண்டும்; அவர்களுக்கு மதிப்பும் ஆதரவும் அளிக்கவேண்டும். சமூகத்தைச் சார்ந்த குழந்தைகள் படிக்கிற பள்ளிக்கூடத்திலேயே இவர்களும் சேர்ந்து படிக்க வசதிகள் அளிக்கவேண்டும். வேண்டாத பிள்ளைகளைப் பற்றிய கவலை சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் இன்றியமையாதது.

மனை மாட்சிக்கு நன்கலன்

பெறும் அவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த
மக்கள் பேறு அல்ல பிற.

குறள் : மக்கட்பேறு.

மனையாளுடைய மாட்சிமைக்கு நல்லணிகலமாக விளங்குபவர் நற்குண நல்லறிவுடைய மக்களாவர். பேரறிவாளரான மக்களைப் பெறுவதிலும் சிறந்த பேறு மற்றொன்றும் இல்லை என்கிறார் திருவள்ளுவர். இதனையே மண்ணுலக வாழ்க்கையில் உழல்கிற மானிடத் தொகுதியின் குறிக்கோள் எனலாம். இக்குறிக்கோள் இல்லாத இல்லற வாழ்க்கை காம வாழ்க்கையாகவே முடியும். இவ்வுண்மையினை நன்குணரும் பெற்றோர் வேண்டாத பிள்ளை

களைப் பெற்று மகிழார்; தமது மக்கள் வேண்டாத பிள்ளைகளாகி வாழ்க்கைக் குறிக்கோள்களைப் பாழாக்காமல் வளர்தலையே விரும்புவர். இங்ஙனம் விரும்புகிற பெற்றோர், இல்லற வாழ்க்கையில் மக்கள் வேண்டாத பிள்ளைகளாதலைத் தடுக்க அவா உடையவராய் இருப்பர். இத்தகைய பெற்றோர் மக்களை வேண்டாத பிள்ளைகளாக்குகிற ஏதுக்களை ஒழிக்கும் முறைகளைத் தெரிந்துகொள்ள விரும்புவர். அந்த முறைகள் எவை என்று அறிந்து கொள்வோம்.

இல்வாழ்க்கையில் வேண்டாத பிள்ளைகள்

புகழ்ச்சியையும் பாராட்டுதலையும் விழிநோக்கையும் விரும்பாதவர் இவ்வுலகில் இல்லை என்றே கூறலாம். ஒருவனை நோக்கி, "நீ அறிவிற் சிறந்தவன்; ஆண்மை அழகுடையவன்; சீரிய மனப்பண்புடையவன்; நற்குணங்கள் பொருந்தியவன்" என்று புகழ்ந்துரைத்தால் அவனுடைய முகம் மலர்கிறது; உள்ளம் குளிருகிறது; உற்சாகம் பொங்குகிறது. புகழ்ச்சியையும் பாராட்டுதலையும் விழிநோக்கையும் விரும்புகிற இயல்பு குழந்தைகளிடத்திலே இயற்கையாக அமைவதாகும். இந்த இயல்பு, குழந்தையின் வினைத் திறத்தையும், மனப்பண்பையும், மொழி அழகையும், பல துறைக் கல்வித் தேர்ச்சியையும் போற்றி வளர்ப்பதற்குப் பேருதவியாக இருக்கிறது. புகழ்ந்துரைத்தலும், வியந்து உரைத்தலும், கொண்டாடுதலும், குழந்தையின் மனவளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் மிகவும் தேவையானவை. தாய்க்கும் குழந்தைக்கும் நெருங்கிய உறவு இயல்பாகவே பொருந்தி இருக்கிற தொடக்க நாட்களில், குழந்தைக்குச் சீராட்டும் பாராட்டும் போதுமான அளவில் கிடைக்கின்றன. தொடக்க நாட்களில் பொருந்துகிற இயற்கைத் தொடர்பு குன்றி, பற்றுணர்ச்சித் தொடர்பு தோன்றும்பொழுது, குழந்தையின் சீராட்டும் பாராட்டும் நாளுக்கு நாள் குறைவுபடலாம். பற்றுணர்ச்சித் தொடர்பு ஏற்படும் நாட்களில், பெற்றோர் தமது மகவைப் புகழ்ந்தும், பலவாறு பாராட்டியும்,

அன்பும் கனிவும் நிறைந்த விழி நோக்கு அளித்தும் வரு கின்றனர். இதனால், குழந்தையின் புத்தித்வமும் திறமை திராணிகளும் வினைத் திறமும் நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து வரும். குழந்தையும் புகழ்ச்சியையும் பாராட்டையும் விழிநோக்கையும் விரும் பிப் புதிய பாடங்களைக் கற்று, புதுப் புதுத் திறங்களை வெளியிட்டு மேன்மேலும் புகழைத் தேடுகிறது.

வேண்டாத பிள்ளைக்கு இத்தகைய அனுபவங்கள் ஏற்பட வழி இல்லை. கடமை என்பதனைக் கருதியே மகவுக்குச் செய்ய வேண்டுவன அனைத்தையும் செய்கிற பெற்றோர் மக்களின் வளர்ச்சியில் இன்புற மாட்டார். குழந்தை, தன்னைக் கொண்டாடும் மனப்பான்மை இல்லாதவரிடையே வாழ விருப்பம் இல்லாமல், மனம் புழுங்குகிறது. இத்தகைய பெற்றோரை விட்டு வேறெங் கேனும் போய்விடலாம் என்ற எண்ணம் குழந்தையின் மனத்தில் எழுகிறது. வீட்டில் பாட்டியோ பாட்டனே இருந்தால், பெற்றோரிடத்திலிருந்து எதிர்பார்த்த உறவை அவரிடத்தில் நாடுகிறது. பிறரிடத்தில் தேடும் இவ்வுற வைப் 'பெற்றோர் - இணை - உறவு' என்னும் சொற்றொடரால் குறிப்பிடுகிறோம். வீட்டிலேயே பெற்றோர்-இணை-உறவு நாடுவதற்கு வழி இல்லாதபோது, அண்டை அயலகத்தா ரிடையே பெற்றோர்-இணை-உறவு தேடித் திரிகிறது. பக் கத்து வீட்டில் யாரேனும் அக்குழந்தையிடத்தில் அன்பு பாராட்டினால், குழந்தை அவரோடு அன்பு பாராட்டித் தன் பெற்றோரைத் துறக்க முயல்கிறது. இங்ஙனம் நிகழாத வாறு பெற்றோர் தடை செய்யும்பொழுது, குழந்தைக்குள் பலவகை மனச் சிக்கல்கள் தோன்றத் தொடங்குகின்றன.

இரவு தோறும் நித்திரையில் சிறு நீர் பெருக்குதல், வீறிட்டுக் கதறி அழுதல், எத்தகைய முயற்சியிலும் விருப் பம் இன்றிச் சோர்வுற்றிருத்தல், பெற்றோர்க்கு விருப்ப மில்லாத செயல்களைச் செய்தல் எனப் பல தவறான ஒழுக் கங்கள் வேண்டாத பிள்ளைகளிடத்தில் படிப்படியாகத் தோன்ற ஆரம்பிக்கின்றன. இத்தகைய குணக்கேடுகளை உறுக்கியும் அடித்தும் திருத்தத் தொடங்கினால், பெற்

ரோரின் கவனத்தை எம்முறைகளினால் கவரலாம் என்று குழந்தை கருதுகிறது. தன்னைப் பற்றிப் பெற்றோர் கவலைப்படுவதற்குப் போதிய அளவிலே தாறுமாறான ஒழுக்க நெறிகளில் செல்லத் தொடங்குகிறது. வீட்டிலே காசு திருடுதல், வீட்டுப் பொருளை எடுத்துப் பிறருக்குக் கொடுத்தல், பெற்றோருக்கு அருமையான பண்டங்களைப் பாழாக்குதல், தன்னைப் போன்ற வேண்டாத பிள்ளைகளைத் தேடி நட்பாடுதல் முதலியன தொடக்கக் கல்வியாக அமைகின்றன. நாளுக்கு நாள் பெற்றோரின் கவலை அதிகரிக்கிறது. அவர்களுடைய அடியும் கண்டிப்பும் குழந்தையைத் திருத்தவில்லை. இனி என் செய்வதென்று பெற்றோர் சிந்திக்கின்றனர். தம் உறவினர் யாரிடத்திலேனும் குழந்தையை அனுப்பிவிடலாமா? விடுதிப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பலாமா?—எனப் பலவாறாகச் சிந்திக்கத் தொடங்குவர்.

வேண்டாத பிள்ளைகள் பெற்றோர் வீட்டை விட்டுப் பிறர் வீட்டிலாயினும், விடுதிப் பள்ளிக்கூடத்திலாயினும் வளர நேர்ந்தால், உலகத்தில் எந்த வைத்தியராலும் ஆராய்ந்து அறிய முடியாத பல நோய்களைத் தம் மன வல்லமையால் வருவித்துக்கொண்டுத் துன்புறுவர். தமக்கு இடம் தந்தவர்க்குப் பல வகையிலும் இன்னல் செய்வர்.

வேண்டாத பிள்ளைகள் பெரியவர்களாகும் பொழுது தமது பெற்றோருக்கு ஆகாதவராவர். பெற்றோரது நற்பெயரைப் பலவகையிலும் கெடுக்கிற நெறியிலே ஒழுக முயல்வர். சில வேண்டாத பிள்ளைகளின் தொடக்கச் சூழ்நிலைகள் ஒரு சிறிது துணையாக அமையும் பொழுது, இவர் கல்வி கேள்விகளில் தேர்ந்து மேதாவிகளாகிப் பெரும் புகழ் எய்துவர். திறமை திராணிகளையும் புத்தித்வத்தையும் வெளிப்படுத்தி உபாத்தியாயர் தோழர் முதலானவரது புகழ்ச்சியையும் பாராட்டையும் பெறுகிற முறைகளை இளம் பிராயத்திலேயே இவர்கள் கற்றுக்கொண்டமையே இதற்குக் காரணமாகும்.

குழந்தை பெரியவனாகித் தம்பி தங்கையரையும், தம்மையும் காப்பாற்ற வேண்டுமென்றாயினும், குழந்தை

யால் பிற்கால வாழ்வில் சுகம் பெறலாம் என்றாயினும், நாள் எண்ணிக் கழிக்கிற பெற்றோர்க்கும் அக் குழந்தைக்கும் உள்ள உறவு சரியானதன்று. "நான் என் குழந்தைக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்தேன்; இனிக் குழந்தை எனக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யவேண்டும்" என்று எதிர்பார்க்கிற பெற்றோர் ரூபாய்க்குப் பதினாறு அணா என்று மதிப்பிட்டுப் போற்றுவதுபோலவே தமது குழந்தையைக் காத்து வந்தவராவர். இம்மனப்பான்மை உடைய பெற்றோர் பிற்காலத்தில் இலவு காத்த கிளிபோல் வருந்துவர். இவர்கள் தமது சுயநலம் ஒன்றனையே கருதித் தம் குழந்தையை உபயோகிக்கத் தொடங்குவார்கள். இவர்கள் தமக்கு வேண்டும் என்று போற்றுகிற குழந்தையையும் வேண்டாத பிள்ளையையும் வளர்க்கிற முறையிலே காட்டுகிற பாரபட்சமான ஒழுக்கங்கள் தெற்றெனப் புலப்படும்.

குழந்தைகள் தேர்ந்த மானஸ சாஸ்திரிகள்; பெற்றோரின் மன நிலையைச் சின்னஞ் சிறு பிராயத்திலேயே மதிப்பிடுவர் என்று முன்னரே கூறியுள்ளோம். இங்ஙனம் குழந்தைகள் தமது பெற்றோரைச் சிறு பிராயத்திலேயே ஆராய்ந்து அறிவதனாலேதான் வேண்டாத பிள்ளைக்கு இயல்பான பலவகை மனச்சிக்கல்கள் தோன்றத் தொடங்கிவிடுகின்றன இந்தச் சிக்கல்கள் வளர்ந்து வலுக்கொள்ளுமுன்னரே, பெற்றோர் விழிப்புற்று மக்களிடத்தில் தோன்றும் மனச் சிக்கல்களை வேரோடு பறித்தெறியவேண்டும்.

எல்லாக் குழந்தைகளையும் ஒரே அளவிலே புகழ்தல் வேண்டும். குழந்தைகளின் தேவைகளை அளிப்பதில் பாரபட்சமான அன்பு தோன்ற இடந்தரலாகாது. எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே அளவான சீராட்டும் பாராட்டும் அளிக்கவேண்டும். குழந்தைகளோடு தோழமை உறவு கொண்டாடி, அன்னவரது உள்ளக் கிடக்கைகளை அவ்வப்போது அன்போடு ஆராய்ந்து திருத்தவேண்டும். பெற்றோர் குழந்தைகளிடத்தில் நீதிபதியின் நிலையிலோ, போலீஸ் அதிகாரியின் நிலையிலோ, முற்றத் துறந்த

துறவியின் நிலையிலோ, ஒழுகுவது தவறாகும். இதற்கு மாறாக, அவர்கள் விரும்புவதை எல்லாம் செய்ய உடன் படுவதும் பொருந்தாது. விழிப்பும், அன்பும், மக்களின் வளர்ச்சியில் ஆர்வமும், மகிழ்ச்சியும் உடையவர்களாகப் பெற்றோர் விளங்கவேண்டும். பெற்றோர் தமக்கு விருப்ப மானவை தம் மக்களுக்கும் விருப்பமாக இருக்கவேண்டும் என்று கருதலாகாது. சமய நெறிக் கொள்கைகளைப் பிரம்பு கொண்டு புகுத்துவதும் வேண்டாத பிள்ளையை உருவாக்கப் பெரிதும் உதவி புரியும். பெற்றோர் தமது கொள்கைகளை மக்கள்மீது கட்டாயப் படுத்திச் சுமத்துதல் நலமாகாது.

'தன்னை வேண்டாதான் தன்னைத்தான் வேண்டான்' என்ற மனப்பான்மை வேண்டாத குழந்தைகளிடத்தில் தோன்றுவதாகும். "என் பெற்றோர் என்னை வேண்டிலர்; எனக்கும் என் புதல்வர் வேண்டாதவர்களே. எனக்குச் சிற்றின்பம் ஒன்றே குறிக்கோள்; சுயநலம் ஒன்றே பெரிது. ஆதலால், நான் இன்பமாக வாழ்ந்து என் நாட்களைக் கழிப்பேன்" என்று தம்முறையிலே இல்லறம் நடத்தத் தொடங்குவார்கள். தமது அன்பைத் தமது மக்கள் மீது செல்லவிடாமல் பல நண்பரிடத்தும் தம்மைப் புகழ்கின்றவரிடத்தும் செலுத்தத் தொடங்குவார்கள். குழந்தைகளின் ஊண் உடை முதலியவற்றைப்பற்றிச் சிறிதும் சிந்தனை இன்றித் தம் நாவுக்கு இனிய ஊணும் தம் மேனி மினுக்குக்குப் பொருந்திய உடை அலங்கார மும் தேடிக்கொள்வர்.

வேண்டாத பிள்ளைகளைப் பற்றித் தனி நூலே எழுதலாம். ஏனெனில், சமூகத்தாரின் அறியாமையால் நாடெங்கும் வேண்டாத பிள்ளைகள் மலிந்து எண்ணிறந்த குணச் சிக்கல்களுக்கு ஆளாகித் தமது திறமையும் திராணி யும் புத்தித்வமும் முழு அளவிலே வெளிப்படாதவாறு அடக்கி வைத்து, நாட்டிற்குப் பெரும் நஷ்டத்தை விளைத்து வருகின்றனர்; பல வகையான நரம்புச் சிதை வுக்கு ஆளாகி, உடல் வலி குன்றித் துன்புறுகின்றனர்.

இவ்விஷயம் மிகப் பெரிது. இச்சிறிய நூலில் இதற்குமேல் கூற இடம் இல்லை.

ஆயினும், இப்பகுதியினை முடிக்குமுன் மகாபாரதத்தில் உள்ள வேண்டாத பிள்ளை ஒன்றைத் திருஷ்டாந்தமாகக் காட்டாமல் இருப்பது பொருந்தாது. குந்தியின் மூத்த மகன் கர்ணன். குந்தி சிறு பெண்ணாய் இருந்த காலத்தில் சூர்யபகவானோடு கலந்து இம்மகவைப் பெற்றாள். ஊர் அலருக்கு அஞ்சிக் குழந்தையை ஆற்றோடு போக்கினாள். பெற்றவள் என்ற தொடர்பைத் தவிர குழந்தைக்கும் தாய்க்கும் மற்றெத்தகைய தொடர்பும் இல்லை. ஆயினும், கர்ணன் துரியோதனனைத் துணையாகக்கொண்டு அவனுடைய நட்பால் அங்கதேச மன்னனாகி, முடிவில் பாண்டவராகிய உடன்பிறந்தார் அஞ்சும் வீரனுமானான். இவன் பாரதப் போரில் பாண்டவர்க்கு எதிரியாக நின்றான். கர்ணன் தன் தெய்வ வல்லமையோடு இருக்கும் வரைக்கும் பாண்டவர்க்கு வெற்றி கிடைப்பது அரிதாயிற்று.

இதனை உணர்ந்த குந்தி கர்ணனிடம் முதன் முறையாகத் தன்னைத் தாய் என்று உறவு கொண்டாடிச் செல்கிறாள்; தம்பியருக்கு விரோதமாகப் படையெடுக்கக் கூடாதென்று அவனிடம் மன்றாடுகிறாள்; நன்றி மறவாத கர்ணன் தாயின் தன்னயமான வேண்டுகோளுக்கு உடன்படவில்லை; அப்பொழுது, வருந்திப் பெற்ற நாகாஸ்திரத்தை ஒரு முறைக்குமேல் உபயோகிக்கலாகாதென அவனிடம் வரம் கேட்கிறாள். வேண்டாத பிள்ளையின் பெற்றோர் தமக்கு வேண்டிய பிள்ளைகளுக்காகப் பயன்படுத்தும் இயல்பைக் குந்தியிடத்தில் பார்க்கிறோம். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக உறுதிமொழி கூறிய கர்ணன், "அம்மா, நான் இறந்து கிடக்கும்போது, ஊரறிய, உலகமறிய 'என் மகனே' என்று என் சடலத்தின்மீது விழுந்து புலம்பவேண்டும். நெடுநாட்களாக என் உள்ளத்தை வருத்திய கொடுந்துயர்க்கு இதுவே மாற்று மருந்து" 'என்றான். இதுவன்றோ ஒவ்வொரு வேண்டாத பிள்ளையின் வேண்டுகோளுமாக இருக்கிறது

அக்குழந்தை நெஞ்சத்தின் ஆழத்தில் பதிந்து கிடக்கும் ஏக்கம் இதுவன்றோ? "'என் குழந்தை' என்று என்னை அன்போடும் பெருமையோடும் ஒப்புக் கொள்கின்றவர் உளரோ?" என்றல்லவோ அநாதைக் குழந்தையின் நெஞ்சு தேடுகிறது? ஒவ்வொரு வேண்டாத பிள்ளையும் தாயின் அன்புக்காக ஏங்கித் துடிக்கிறது; தந்தையின் பராமரிப்பை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைகிறது. இம் மனத் துடிப்பையே கர்ணனிடம் காண்கிறோம். ஆதலின், மக்கட்பேறு விஷயத்தில் பெற்றோர் உதாசீன மாக இருத்தல் தகாது; பெற்ற மக்களை வேண்டாத பிள்ளைகளாக்கி உலகிற்கு இன்னல் விளைத்தலும் தகாது. காமத்தை அடக்கி வாழ்தலும், களவொழுக்கத்தைத் தவிர்த்து வாழ்தலும் தாய்-நாட்டுக்குச் செய்யும் உரிய கடமையாகும். இதுவே சான்றோர்க்கு அணிகலமாகும். இக்கடமையை மறந்து வாழ்பவர் நாட்டினுக்கே பதராவர்.

நீராழம் பெரிதா? நெஞ்சாழம் பெரிதா?

இன்று மனிதன் நீராழத்தையும் அளந்துவிட்டான்; ஆனல், நெஞ்சாழமோ இன்றுவரைக்கும் நம்மை ஏமாற்றி வருகிறது. மேற்கூறிய காரியங்கள் யாவும் மனத்தின் ஆழ்ந்த மன நிலைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளின் விளைவாக அறிந்தவை. "மனம்" என்பது பிறர் பார்க்கிறபடி நமக்கிருக்கும் தன்மயத்தைக் கொண்டதன்று; புறத் தோற்றமாக இருக்கிற மனத்தின் மறைவில் புதைந்திருக்கும் மன ஆழத்தில் மற்ருெரு தன்மயம்—அல்லது பல தன்மயங்கள்—அடங்கியிருக்கலாம். குழந்தைப் பருவத்திலே மனத்தின் ஆழத்தில் பல தன்மயங்கள் பிறக்கின்றன. மனத்தின் ஆழ்நிலைகளில் பதுங்கிக் கிடக்கிற தன்மயங்கள் ஒருவனது வாழ்க்கைப் போக்கை விசையாணிபோல் திருப்பிவிடுகின்றன.

இவை அனைத்தும் வெறும் கட்டுக் கதையாகத் தோன்றுகின்றனவே! இவை உண்மையாக இருக்க முடியுமா? பெற்ற குழந்தை எப்படித் தாய்மீது காதல்

கொண்டு தந்தையைப் புறக்கணிக்கும்? அண்ணன் தம்பியரிடையே எவ்வாறு முடிவுறாத பகை ஏற்படக் கூடும்? தான் ஆடாவிட்டாலும், தன் சதை ஆடாதா?" என்று சிலர் நையாண்டி செய்யலாம். மானஸ சாஸ்திரம் மனத்தின் ஆழ்ந்த நிலைகளைப் பற்றி ஆராய்ந்து வெளியிடுகிற உண்மைகள் வியப்பை விளைப்பன. இவற்றை எல்லாம் மனத்தில் வைத்துக் குழந்தைகளை வளர்ப்பதே நலம். மானஸ சாஸ்திர முறைப்படி ஆராய்ந்தால் எந்தக் குழந்தையும் எல்லா வகையிலும் சரியான முறையில் இருப்பதாகத் தோன்றாது. ஆயினும், எதிர்பார்க்கக் கூடிய சிக்கல்களை முன்னதாகவே அறிந்திருப்பதால், அவற்றைத் தவிர்க்கும் உபாயங்களை நாடும் முயற்சிகள் பிறக்கும். எதை ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும், குழந்தையின் இளம் பருவமே அதன் இன்ப வாழ்க்கைக்கு அடிப்படையான காலம் என்பதையும், அதைச் சரியாக அமைப்பதே பெற்றோரின் கடமை என்பதையும் நாம் மறக்கமுடியாது.

7. குழந்தையும் அதன் மனமும்

மனம் என்றால் என்ன

மனிதன் இந்த உலகில் என்றைக்குத் தோன்றினானோ அன்று முதல் இன்றளவும் இந்தக் கேள்விக்கு விடைகூற முடியவில்லை. ஒன்றுமட்டும் திண்ணம்; மனம் என்பது [1]ஸ்தூலப் பொருள் அன்று; எனினும், மனிதனது ஸ்தூல வுடலினுள் இயங்குவது. மூளை என்றொரு பொருள் நமது மண்டை ஓட்டிற்குள்ளே இருக்கிறது. அது சாம்பல் வர்ணமான ஒருவகைப் பொருளாம். மனம் என்னும் பொருள் இந்த மூளையோடு ஏதோ ஒரு வகையில் தொடர்புற்றிருக்கிறது. அது மூளையின் உதவியின்றி இவ்வுலகத்தைப் பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியாது. மூளை மனத்தை எந்தெந்த நிபந்தனையின்படி செயலுக்கு இயக்கிவிடுகிறது என்று யாரேனும் கேள்வி கேட்கலாம். இக்கேள்விக்கு பதில் ஒன்றுமே சொல்ல முடியாது. இவ்விரண்டிற்குமுள்ள உறவுத் தொடர்பு எல்லைக்கோடிட்டு வகுக்க முடியாதவாறு நெருங்கிக் கிடக்கிறது. மூளையில் தகுந்த இடத்தைத் தாக்கினால் ஒருவனை முழுமூடனாகவோ, மிகப்பெரிய மேதாவியாகவோ மாற்றிவிடமுடியும்.

மனம் மூளையாகிய இவ்விரண்டில் மனமே முதன்மை பெற்றது. மூளை மனத்தின் [2] வாகனமாக இருந்த போதிலும், மூளையின் இயக்கம் இல்லாத பொழுது, மனத்திற்கு இயக்கம் இல்லை என்று சொல்லமுடியாது. மூளையின் உதவி இல்லாமல் மனம் இயங்குவதில்லை என்றும் சொல்ல முடியாது. மனம் அழியாத பொருள். மூளை என்பதோ அழியும் பொருள். தற்காலிகமாக மனத்தைச் சூழ்நிலைகளோடு உறவு படுத்தி, நம்முடைய வாழ்விற்கு இன்றியமையாத அறிவைத் தருவதற்காக உதவுகிற உறுப்பு என்றே மூளையைக் கருதவேண்டும். உணர்வு தெளிவுகளோடு ஓயாமல் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிற மனத்தின்

---

1. ஸ்தூலப்பொருள்—*Physical Matter*. ஐம்புலனறிவிற் படுகின்ற பொருள். இதற்கு அளவும் இடமும் உண்டு.

2. வாகனம்—*Vehicle*.

புறத்தோற்றத்திற்கு [1] உணர்வு-தெளிவுப் புலம் என்று பெயர் இதனைப் [2] பிரக்ஞை எனவும் கூறலாம். இந்தப் பிரக்ஞை மூளையைவிட மிகப்பெரியது.

உலகின் பரிணாமக்கிரமத்தில் உயிர்கள் பல படிகளாக அமைந்துள்ளன. மிகவும் கீழான நிலைகளில் உள்ள உயிர்களுக்கு மூளை இல்லாவிடினும் பிரக்ஞை உண்டு. ஆகையால், பிரக்ஞை என்பது மூளையின் உதவியில்லாமலே இயங்கலாம் என்று கருத இடமுண்டு. மனிதனின் மூளையிற் படாத எத்தனையோ விஷயங்கள் மனத்தோடு ஒட்டி உறவாடிக் கிடக்கின்றன. மூளை என்னும் பாத்திரத்திற்குள் மனம் அடங்காமல் கவிந்து நாற்புறமும் வழிந்து பாய்கிறது. மனத்தின் செயல்களில் அற்பச் சிறு பாகத்தையே மூளை அடக்கி ஆளமுடிகிறது. இவை யாவற்றையும் சிந்திக்கும்பொழுது, ஒருவன், "எனக்கு ஒரு மனம் உண்டு; எனக்கு ஒரு மூளை உண்டு" என்று தான் சொல்லமுடியும். இதற்கு மேல் நாம் தெரிந்து கொள்ளத் தேவை இல்லை.

மனம் உலகத்தோடு எங்ஙனம் உறவு பெறுகிறது?

உலகமாகிற சூழ்நிலை மூளையின் மூலமாக மனத்தோடு உறவு பெறுகிறது. மூளையை உலகத்தோடு உறவு படுத்துகிறவை வெகு விசித்திரமான [3] நரம்புகளின் கூட்டு நிலையேயாம். நரம்புக் கூட்டுநிலை மிகவும் அதிசயமான நுண்ணிய வேலைப்பாடுகளோடு விளங்குவது. இந்த [4] நரம்பு வியூகனத்தின் கட்டுமானம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான நுண்ணிழைகள் போன்ற நரம்புக் கால்களால் ஆனவை. இந்த நரம்பு வியூகனத்தை நமது நாட்டின் மின்சாரத் தந்தித் தபாலுக்கு ஒப்பிட்டுக் காட்டலாம். மின்சாரத் தந்தித் தபால்-கம்பிகள் நாடெங்கும் லக்ஷக்கணக்கான ஊர்களோடு தொடுக்கப்பெற்றிருப்பன. இத்தந்தித் தபால்

1. உணர்வு—தெளிவுப்புலம்—*The Field of Consciousness.*
2. பிரக்ஞை—*Consciousness.*
3. நரம்புகளின் கூட்டுநிலை—*The System of Nerves.*
4. நரம்பு வியூகனம்—*Nerve structure.*

கம்பிகளைப் போல் நரம்புகளும் மானிட உடலின் எல்லாப் பாகங்களோடும் தொடுக்கப் பெற்றிருக்கின்றன. இவை, முக்கியமாக ஐம்பொறிகளோடு தொடர்புற்றிருப்பவை.

கண், செவி, நாவு, மூக்கு தொடுகை என்னும் ஐம் பொறிகளை யாவரும் அறிவர். "[1]ஸர்வேந்திரியாணும் நயனம் பிரதானம்," என்றபடி கண்ணை முதன்மையாக வைத்தனர் என்றே கருத வேண்டும். மானிட உடலின் நரம்புகளை அவற்றின் செயல் போக்கு இலக்கணங்களைப் பார்த்து இரண்டுவகுப்பாகப் பிரிக்கலாம். ஒரு வகுப்பு நரம்புகள் ஐம்பொறிகள் வாயிலாக வருகிற செய்திகளை வாங்கி மூளைக்குக் கொண்டு போகின்றன. ஆகையால், இவற்றிற்கு கிராஹ்ய-இந்திரிய நரம்புகள்[2] என்று பெயர். மற்றொரு வகுப்பு நரம்புகள் மூளை அனுப்பும் பதில்-செய்திகளைக் கை, கால் முதலிய வினை உறுப்புக்களுக்குக் கொண்டு போகின்றன. இவற்றைக் காரிய-இந்திரிய நரம்புகள்[3] எனலாம். முதன் முதலில், தந்தித் தபால் வழக்கில் வந்த காலத்தில், செய்தி அனுப்ப ஒரு தந்தியும், பதிலை அனுப்ப ஒரு தந்தியும் இருந்தன. அவ்வாறே நமது உடலில் அமைந்துள்ள நரம்புகளும் இருவகைச் செயல்களுக்குரிய இரண்டு வகையான நரம்பு வலைகளாகக் காண்கின்றன. சென்னை மாகாணத்தின் மின்சாரத் தந்தித் தபால்-காரியாலயங்களுக்கெல்லாம் தலைமையானது சென்னை மாநகரில் உள்ள தலைமைத் தந்தித் தபால் காரியாலயமேயாகும். இந்தியா முழுவதற்கும் தலைமைக் காரியாலயம் டில்லி மாநகரில் அமைந்துள்ளது. இவ்வாறே சரீரத்தின் நரம்புக் கூட்டு நிலைக்கும் ஒரு நடு நிலையமும் தலைமைக் காரியாலயமும் உண்டு. [4]நரம்பு நடு நிலையம் மூளையினின்று புறப்படுகிற

1. ஐம்பொறிகளனைத்திலும் கண்ணிற் சிறந்த உறுப்பு மற்றொன்றில்லை.

2. கிராஹ்ய இந்திரிய நரம்புகள் - ஐம்பொறிகளின் வாயிலாக வருகிற அருட்டிகளை மூளையின் நரம்பு நடு நிலையத்திற்குக் கொண்டு போகிற நரம்புகள். *Receptors.*

3. காரிய இந்திரிய நரம்புகள் - வினை உறுப்புக்களையும் ஐம்பொறிகளையும் வினைக்கு ஆளாக்குகிற நரம்புகள். *Effectors.*

4. நரம்பு - நடுநிலையம் - *Nerve-centre.*

தண்டுவடத்தோடு[1] தொடர்புற்ற ஒரு பாகத்தில் அமைந்துள்ளது. நம்முடைய மூளையே தலைமைக் காரியாலயமாக இருப்பது.

மூளையின் சிப்பந்திகள்[2]

ஐம்பொறிகள் ஓயாமல் உலகத்தோடு உறவாடிப் பல வகையான உணர்வுகளை[3] விளைத்துக்கொண்டே இருக்கின்றன. ஐம்புலன்கள் வாயிலாக எழுகிற புலனுணர்வுகள்[4] இடையறாத பெருவெள்ளப் பெருக்கெனவே கிராஹ்ய-இந்திரியங்கள் வழியாகத் தலைமைக் காரியாலயத்திற்குச் சென்றவண்ணமாகவே இருக்கின்றன. கிராஹ்ய-இந்திரியங்கள் கொண்டுவருகிற **இந்திரியப்பதிவுகளை**[5] எல்லாம் என்ன செய்யவேண்டும் என்று தீர்மானிப்பது மனமேயாம். மனம் தன் காரியாலயமாகிய மூளையை உபயோகித்துப் **பிரதிச் செயல்**[6] களைத் தீர்மானிக்கிறது. ஐம்புலன்களாகிற வாசல்களின் வழியாக நாம் வாழும் உலகத்தைப் பற்றிய அறிவுகள் அனைத்தும் நமக்குள் புகுந்து வருகின்றன. பிறப்பு முதல் இந்த வாயில்கள் திறந்தவாறே இருக்கின்றன. ஐம்புலன்கள் வாயிலாக வராத **ஆர்வுகளும்**[7] உள்ளன. இவை பெருமை குன்றியவை. இந்த உணர்வு - ஆர்வுகளுக்கு **உடலுணர்வுகள்**[8] என்று பெயர். பசி ஓர் உடலுணர்வாகும். நீர் வேட்கை, களைப்பு, மூச்சடைப்பு, உற்சாகம் முதலியனவும் உடலுணர்வுகளேயாம்.

---

1. தண்டுவடம்—*Spinal - cord* கழுத்தின் மேற்பாகத்தில் தலையைத்தாங்கும் இடத்திலிருந்து தொடங்கி மலவாய்க்குச் சற்றுமேலாக முடிவடைகிற முதுகுத்தண்டுகளின் உள்ளே செல்கிற முதுகு நடுநரம்பு. இதனை முள்ளந் தண்டுக்கொடி என்றும் கூறுவர்.
2. மூளையின் சிப்பந்திகள்—*The Auxiliaries of the Mind.*
3 - 4. உணர்வு—*Sensation.* புலன் உணர்வு எனவும் பல இடங்களில் குறித்திருக்கக் காணலாம்.
5. இந்திரியப்பதிவுகள்—*Sense - impressions.* **புலனூர்வுகள்.**
6. பிரதிச் செயல்—*Response.*
7. ஆர்வு—*Impression.*
8. உடலுணர்வு—*Organic sensation.*

மானிட உடலில் அமைந்துள்ள ஐம்பொறிகள் மிகவும் அதிசயமான கருவிகளாக விளங்குவன. இவை செய்ய வேண்டிய வேலை, இந்த உலகத்தில் உள்ளவைகளை எல்லாம் ஆராய்ந்து அறிவைத் திரட்டிக் கொண்டு வருதலும், உலகத்தில் நிகழ்கிற சம்பவங்களை எல்லாம் உடனுக்கு உடனே நமக்கு உணர்த்துவதுந்தான். இந்த வேலைகளைச் சரிவரச் செய்யத்தகுந்த முறையிலே ஐம்புலன்கள் அமைந்துள்ளன. இந்த ஐம்புலன்களில் எது சிறந்தது? எது தாழ்ந்தது? என்று சொல்லமுடியாது. நாவும், மூக்கும் அதிசயக்கருவிகளாக இருப்பினும், இவை கண் காதுகளுக்கு அடுத்தபடி என்றே கருதத் தகுவன. ஏனெனில், கண்ணும் காதும் எக்காலத்திலும் தமக் கமைந்த வேலைகளைச் செய்து கொண்டிருக்கும். நாவோ உண்ணும் பொழுதும் பேசும்பொழுதுமே இயங்கும். முகரும் பொழுதே மூக்கு இயங்கும். பிற நேரங்களில் மூச்சுவிடும் கருவியாகவே இயங்கும். நமக்கு அறிவைத் திரட்டித் தருவதில் மூக்கிற்கும் நாவிற்கும் அவ்வளவு சிறப்பின்மையால், இவற்றை இரண்டாவது ஸ்தானத்தில் வைத்ததாகக் கருதவேண்டும். கண், காது, நாக்கு, மூக்காகிய நான்கு புலன்களையும் தொடுகை[1] என்னும் பொறியின் நான்கு கிளைகளாகவே கருதவேண்டும். ஒளி கண்ணிற் படுகிறது; ஓசை காதிற் படுகிறது; சுவை நாவிற் படுகிறது; மணம் மூக்கிற் படுகிறது; சீதோஷ்ணம் உடலிற் படுகிறது; படுதலும் தொடுதலும் ஒரேவகை யான செயலையே சுட்டுகின்றன.

அறிவைத் திரட்டித் தருவதில் கண்ணும் காதும் முதன்மை ஸ்தானம் பெறும் என்றோம். உறங்கும் பொழுதைத் தவிர பிற நேரங்களிலெல்லாம் இவ்விரு பொறிகளும் தத்தமக்கமைந்த வேலைகளை ஓயாமல் செய்து கொண்டே இருக்கின்றன. உறங்கும்பொழுது கூட இவ்விரு புலன்களும் இயக்கமற்றுச் சும்மா இருப்பன அல்ல; இவ்விரண்டு புலன்களின் அமைப்பு அதிசயங் களை விரிவாகக் கூற இடம் இல்லை. இவை ஐம்புலன்

1. தொடுகை—*Sense of touch.*

களின் வாயிலாக புலனுணர்வுகளை ஓயாமல் மூளைக்குள் பெருக்கிக் கொண்டே இருக்கின்றன. மூளை முழுவதும் ஜீவாணுப் புலன்களால் ஆனது. பாரம்பரிய நியதியை விளக்கிய அதிகாரத்தில் ஜீவாணுக்களைப் பற்றித் தெளிவாகக் கூறினோம். மிகவும் ஆற்றலுடைய அணுதர்சினி மூலமாகப் பார்க்கக்கூடிய [1] ஜீவாணுமண்டலங்கள் கோடிக் கணக்கிலே மூளையில் அமைந்துள்ளன. ஐம்புலன்கள் வாயிலாக வருகிற உணர்வுகளை எல்லாம் ஒவ்வொரு ஜீவாணு மண்டலமும் வாங்கி வைத்துக் கொள்கிறது. ஜீவாணுக்கள் இரட்டைப் பிள்ளைகள் போன்றவை என்று முந்தியே தெரிந்து கொண்டோம். ஒரு ஜீவாணுப் புலம் புலனுணர்வுகளில் ஒன்றை வாங்கி வைத்துக் கொண்டால், அதன் துணையான மற்றொரு ஜீவாணுப்புலம் பிரதிச் செயலுக்குரிய கட்டளையை வாங்கி வைத்துக் கொண்டு, காரிய-இந்திரிய நரம்புகளோடு தொடர்புறுகிறது.

குழந்தையின் மூக்கில் ஒரு ஈ வந்து உட்காருகிறது. உடனே தொடுகைப் புலனுக்குரிய கிராஹ்ய இந்திரிய-நரம்புகள் இயங்குகின்றன; உடனே செய்தி மூளைக்கு எட்டுகிறது; மூளையாகிற தலைமைக் காரியாலயத்தில் நிகழ்கின்றவை, விரிக்கில் பெருகும். பிரதிச் செயலுக்கு உரிய கட்டளை ஆயத்தமானதும், மின்னல் வேகத்தில் அந்தச் செய்தி காரிய-இந்திரியங்களின் வழியாக வினை உறுப்புக்களுக்கு வந்து சேருகின்றன. ஈ வந்து மூக்கில் உட்கார்ந்ததற்கு இத்தனை வகையான இயக்கங்கள், உடலின் தொடுகைப் புலனைச் சார்ந்த அளவிலே தோன்றி, காரிய-இந்திரிய நரம்புகளின் செயலோடு முடிவடைகின்றன. இவ்வாறாக, எந்நேரமும் இயங்கிக் கொண்டே இருக்கிற நரம்பு வியூகனத்தில் எழுகிற அலைகளால் நரம்புக்கூட்டுநிலை முழுவதும் துடித்த வண்ணமாக இருக்கிறது. சுட்டுவிரலை அசைப்பதற்காகப் பிறக்கிற கட்டளை, கட்டை விரலை இயக்குவதில்லை. இப்படிச் சற்றுமே தவறுதல் இல்லாமல் செயல்களும்

1. ஜீவாணு மண்டலம்—*Cell-group*.

பிரதிச் செயல்களும் உடலில் நிகழ்ந்து கொண்டே இருந்தாலும், இந்தச் செயல்களுக்குக் காரணமான இயந்திரவியூகனம் முழுவதும் மிகவும் சிக்கலான அமைப்பு முறையையும் கட்டுக்கோப்பையும் உடையது. மனத்தினின்று பிறக்கிற கட்டளைகளை மூளையும், மூளையின் கட்டளைகளை நரம்புக் கூட்டுநிலைகளும், பொறிகளும், பேசிகளும், கர்மேந்திரியங்களும் அணுவளவும் தவறாது செய்து முடிக்கின்றன. உடல் வியூகனமும் இதன் கட்டுக்கோப்பும் உலகமெங்கும் தேடினாலும் காணமுடியாத அதிசயமாக இருக்கின்றன.

குழந்தை மனத்தின் ஆரம்பம்

எல்லா அறிவுகளுக்கும் வாயிலாக இருப்பவை ஐம்புலன்கள் என்று தெரிந்துகொண்டோம். ஐம்புலன்கள் வழியாக வருகிற உணர்வுகள் யாவும் மனத்தின் முதல் முத்திரைகளாக அமைகின்றன. இவற்றை அனுபவ முத்திரைகள் என்று பலமுறை குறித்திருக்கிறோம். இது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் எலக்ட்ரான்[1] என்னும் பரசூக்ஷ்மாணுக்களால் ஆனவை என்று பூதபௌதிகவிஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அவ்வாறே நம்முடைய உடல் கோடிக்கணக்கான ஜீவாணுக்களால் ஆனதென்று முந்தியே சொல்லிவிட்டோம். குழந்தையின் மனமோ அனுபவ முத்திரைகளால் உருவாகி வருகிறது. அனுபவ முத்திரைகளைச் சேமித்து வைக்கும் இடத்தை மூளையின் ஜீவாணுக்கள் அமைத்துக் கொடுக்கின்றன. மனம் என்றால் என்ன என்பதற்கு இலக்கணம் வகுத்துச் சொல்ல முடியாவிட்டாலும், மனத்தின் சிக்கலான செயல் - போக்குகளை எல்லாம் ஓரளவு நாம் தெரிந்துகொள்ள முடியும்.

மனத்தின் செயலை விளக்கிக் காட்டும் பொருட்டுப் பிறை வடிவமான ஒரு கோட்டினால் (பாதி மதியின் வளைவுக் கோட்டினால்) வரைந்து காட்டுவதாயிருந்தால், இடது கைப்

1. *Electron.*

பகுதியை [1]ஞானசக்தி எனவும், தலைப் பகுதியை [2]வீரசக்தி எனவும், வலக்கைப் பகுதியைச் [3]சித்த சக்தி எனவும் முப் பகுதிகளாக வகுத்துக்கொள்ளலாம். படம் ஒன்றிலும் இரண்டிலும் வட்ட வளையத்தை முழு வட்டமாகக் காட்



படம் 1.



படம் 2.

டாததன் காரணம், மனத்திலும் மறைவான பாகத்தின் செயலை உணர்த்தும் பொருட்டேயாம். காட்டியிருக்கும் பகுதி மனத்தின் வெளிப்படையான உணர்வு - தெளிவுப் புலத்தின் பகுதிகளை விளக்கும் பொருட்டேயாம். தெளி வாக வெளிப்படுகிற மனத்தின் உணர்வு - தெளிவுப்

1. *Power of Knowledge.*
2. *Power of Feeling.*
3. *Power of Willing.*

புலத்தை ஞானசக்தி, விகாரசக்தி, சித்தசக்தி என மூன்று பாகங்களாகப் பிரித்திருப்பதைப் பார்க்கலாம். இம் மூன்றின் முதலாவது பகுதியிலே மனத்தின் செயல் போக்கினது சரிதையில் முதல் அங்கத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, பார்வை இடுவோம். இந்த அங்கத்தின் துணைப் பகுதிகளை ஞான சக்தி மண்டலத்திலேயே குறித்துக்கொள்வோம். படம் போட்டுக் காட்டியதிலிருந்து, மனத்தின் செயல்போக்குச் சரிதையை இப்படி மூன்று பாகங்களாக வகுக்க முடியும் என்று எவருமே கருதலாகாது. மனத்தின் இயக்கங்களும் செயல்களும் கணக்கிட முடியாத வேகத்தோடு நிகழ்வன; ஆகையால், கால அளவுகளால் கட்டுண்ட நமக்கு யாவும் ஒரே நேரத்தில் நிகழ்வன எனத் தோன்றும். எந்தச் செயல் நிகழினும், அந்நேரத்தில் மனத்தின் பிற பாகங்கள் செயலற்று இருக்கின்றன என்றும் கருதலாகாது.

புலப்பாடு [1]

ஐம்புலன்களால் புலனுணர்வு எழுகிறது. இதை முந்தியே குறித்து விட்டோம். இதனோடு நெருங்கிய உறவுடையது புலப்பாடு எனப்படும். அனுபவத்திற்கு உகந்ததாக ஏதேனும் ஒன்று அமையவேண்டுமானால், அதற்கு ஒரு புலப்பாடு அல்லது வடிவம் வேண்டும். உரு அற்றது அரு எனப்படும். அருவை அனுபவிக்க முடியாது; உருவைத்தான் அனுபவிக்க முடியும். ஐம்புலன்கள் வழியாகப் புகுந்த ஏதேனும் ஓர் உணர்வு மனத்தின் புலப்பாடாக மாறவேண்டுமானால், உள்ளே புகுந்த உணர்வை மனமானது ஏற்றுக்கொள்ளவேண்டும். மனம் ஓர் உணர்வை ஏற்றுக்கொள்ளுகிற செயலில் இரண்டு நிலைமைகள் காணப்படுகின்றன. ஒன்று [2] **செயலுரு நிலை.** மற்றொன்று [3] **செயலுறு நிலை.** மனம் செயலுரு நிலையில் இருக்குமாயின்,

1. *Perception.*

2. செயலுரு நிலை—செயலுக்கு இறங்காத நிலைமை. *Passive State.*

3. செயலுறு நிலை—செயலுக்கு இறங்குகிற நிலைமை *Active State.*

ஐம்புலன்களின் வழியாக வருகிற உணர்வுகளை வாங்கி வைத்துக் கொள்கிறது. மனம் செயலுறும் நிலையில் இருக்குமாயின் தனக்குக் கிடைத்த புலப்பாட்டிற்கு ஏற்ற வாறு செயலில் இறங்குகிறது; மனம் புலன் வழியாகப் பெற்ற உணர்வை அனுபவிக்கப் புறப்படுகிறது எனலாம். ஐம்புலன்கள் வாயிலாக வருகிற கோடிக்கணக்கான உணர்வுகள் அனைத்தும் புலப்பாடுகளாகப் பதிந்து உருத் தெளிவுகளாக மாறவேண்டும். குழந்தை ஒரு யானையைப் பார்க்கிறது, அல்லது ஒரு பூனையைப் பார்க்கிறது. புறக் கண்களை இறுகமூடிக் கொண்ட பிறகும், புறக்கண்ணால் பார்த்ததை மனத்தின் உருத்தெளிவாகத் திரும்பவும் பார்க்கமுடியும். செவிகளிற் படுகிற ஓசை ஒலிகளும் மனத்தின் உருத் தெளிவுகளாக அமைகின்றன. மனத் தின் உருத்தெளிவு என்பது மனது அனுபவிக்கக்கூடிய மனப்படம் என்றே பொருள் படும். உருத் தெளிவு திரும்பத் திரும்ப மனத்தில் பதியும்பொழுது அனுபவ முத் திரையாகப் படிகிறது. தந்தித் தபால் காரியாலயத்தின் நிகழ்ச்சிகளைத் திரும்பவும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஓர் ஊரி லிருந்து ஒரு செய்தி வருகிறது. தந்தித் தபாலுக்கு உப யோகிக்கும் ஒலிக்குறிகள் நமக்கு விளங்கவில்லை. ‘கட்டு கடு கட்’ என்ற ஒலிகள் பல வகையான தாள முறைகளில் வருவன போலத் தோன்றுமே யல்லாது, செய்தியை உணர்த்தும் மொழிகளாக நமக்குத் தோன்ரு. ஆனல், அந்த ஒலிக்குறிகளின் பொருளைத் தெரிந்து கொள்ளப் பயின்ற தந்திக்காரனுக்கோ ஒவ்வொரு ஒலியும் பொருள் படும் மொழியாக விளங்குகிறது. அவனுக்குப் பழக்கமான ஒலி வடிவிலே வருவதால் அவன் செய்தியைத் தெரிந்து கொள்கிருன். அவ்வாறே ஐம்புலன்கள் உள்ளே கொண்டு வருகிற உணர்வுகள் யாவும் மனப்படங்களாக அல்லது உருத்தெளிவுகளாக மாறுகிற பொழுது,நான் அவை மனத்தின் அனுபவத்திற்கு அமைந்த உருக் கொள்ளும். மனம் அனுபவித்தவைகளே முத்திரை களாக மூளையின் ஜீவாணுப் புலங்களில் பதியும். படம் பிடிப்பவன் காமராவைக் கொண்டுவந்து படம் பிடிக்

கிறான். பிடித்த ஆளின் முகத்தைப்பற்றி காமராவுக்கு ஒன்றுமே தெரியாது அது ஸ்தூலப் பொருள். விழி ஒரு ஆளைப் பார்க்கிறது. பார்த்த ஆளைப் படம் பிடித்து ஒரு அனுபவ முத்திரையாக மூளையில் எங்கேயோ பதித்து விடுகிறது. மரத்தைப் பார்த்தால் அதுவும் ஒரு படமாக மூளையில் எங்கேயோ பதிந்து விடுகிறது. உயிருள்ள பொருள்களும் உயிரில்லாத பொருள்களும் எவையும் ஐம்புலன்கள் வாயிலாக உள்ளே புகுகின்றன. உடனே மனமாகிய கர்த்தா புகுந்த உணர்வைச் சார்ந்த செயலுக்குத் துணிவானுகில், அக்கணத்திலேயே பார்த்த பொருள் உருத் தெளிவாக மாறிவிடுகிறது. மனத்தின் செயல் - போக்கில் நிகழ்கிற முதலாவது அதிசயம் இதுவே.

குழந்தையின் சிந்தனைப் போக்கு

உருத்தெளிவு என்றால் என்ன?

வாழ்க்கையின் தொடக்கத்தில் குழந்தைக்குத் தன் தாயைப் பற்றி நன்றாய்த் தெரியாவிட்டாலும், தன் பசியைத் தீர்க்கும் பால் அந்தத் தாய்வடிவத்திலே இருப்பதை உணர்ந்து கொள்கிறது. குழந்தையின் மனத்தில் தாயைப் பற்றி முதன் முதலில் பதிகிற உருத்தெளிவு அதன் பசியைத் தீர்க்கும் பால் ஒன்றே. குழந்தை ஒரு மேசையைப் பார்க்கிறது. ஏதோ பரந்த பொருள் நான்கு கால்களின்மேல் இருப்பது போன்ற உருத்தெளிவுதான் முதன் முதலில் அதன் உள்ளத்தில் பதிகிறது. குழந்தை இவ்வுலகத்தில் தோன்றிய நாள் முதல் அதன் உள்ளத்தில் பல உருத்தெளிவுகள் பதிவாகின்றன. முதன் முதலில் குழந்தையின் மனத்தில் பதிவாகிற உருத்தெளிவு அதே நிலையில் இருப்பதில்லை. அது நாள்தோறும் பலவாறு சீர்திருத்தம் அடைந்து வருகிறது.

மனத்தின் உருத்தெளிவுதான் சிந்தனைப் போக்கிற்குச் சிறந்த கருவியாக இருக்கிறது. உலகத்திலுள்ள சூழ்நிலைப் பொருள்களைப் பற்றி ஐம்புலன்கள் மூலமாகக் குழந்தையின் மனத்தில் பதிகிற உருவங்கள் கணக்கிறந்

தவை. உருத்தெளிவு என்பது, ஒன்றினை ஒருமுறை நோக்கி நெஞ்சிலே ஞாபகமாகப் பதிவு செய்துகொள்கிற உருவமும் அன்று; பிரதிச்செயல் இயக்கமும் அன்று. பொருளைப் பற்றி அறிகிற அறிவின் மொத்தத் தொகையான எண்ணந்தான் உருத்தெளிவு எனப்படும். ஏதேனும் ஒருபொருள் எப்படிக் கட்புலனுக்குத் தோன்றுகிறது? அது காதுக்கு எப்படி ஒலிக்கிறது? அது தொடுகைக்கு எப்படி இருக்கிறது? அது என்ன செய்கிறது? அதை என்ன செய்யலாம்? உண்மையில் அதனோடு ஏற்படுகிற வினை என்ன?—என்றவை போன்ற வினாக்களுக்குப் பதிவாகிற விடைகளின் மொத்தத் தொகைதான் உருத்தெளிவாக அமைகிறது. குழந்தைக்கு ஏதேனும் ஒரு பொருள் ஒருவாறு தோன்றுகிறது. இங்ஙனம் தோன்றுதலே குழந்தையின் உருத்தெளிவாகிறது. ஐம்புலன்களினால் அறிகிறவைகளும் சிந்திக்கிறவைகளும் கற்பனைத்திறத்தால் மனத்தில் விளைகிறவைகளுமாகிய மனிதர்கள், பொருள்கள், நிகழ்ச்சிகள், குணங்கள், உறவுகள், முதலியவற்றைப் பற்றிப் பொதுவாகவோ, தனித்தனியாகவோ, ஸ்தூலமாகவோ, சூக்ஷமமாகவோ மனத்தின்கண் பதிவாகிறவை அனைத்தும் குழந்தையின் உருத்தெளிவுகளேயாம்.

உருத்தெளிவின் பிறப்பு

யானையையே பாராத குழந்தையொன்று ஒரு யானையைப் பார்க்கிறது. அது ஏதோ ஒரு மிருகம் என்ற உருத் தெளிவு அதன் உள்ளத்தில் அனுபவ முத்திரையாகப் பதிகிறது. கண் வழியாகப் புகுந்த இந்த யானைக் காட்சி சித்திரக்காரன் சித்திரம் எழுதுமுன் வரைந்து கொள்ளும் எல்லைக் கோடுகள் போலத் தெளிவற்ற நிலையிலே இருக்கிறது. குழந்தை திரும்பத் திரும்ப யானையைப் பார்க்கும்பொழுது, முதலில் அமைந்த அனுபவ முத்திரையோடு யானையைப்பற்றிய பிற கருத்துக்களையும் கூட்டிச் சேர்க்கிறது. முறம் போன்ற காதும், குச்சி போன்ற வாலும், பிறவும் குழந்தையின் உருத்தெளிவை வளர்த்து, மனச் சித்திரத்தைப் பரிபூரணமாக்குகின்றன.

இங்ஙனம் வரையறை அற்று, தெளிந்த உருவில்லாமல், ஒரே குழப்பமாக அமைந்த உருத்தெளிவு படிப்படியாக வளர்ந்தோங்கிப் பூரண வடிவை அடைகிறது.

குழந்தை முதன் முதலில் ஒரு முட்டையைப் பார்க்கிறது. அதைத் தனக்கு அறிமுகமான பந்தோடு ஒப்பிட்டு, பந்தைப் போன்ற ஒரு பொருள் முட்டை என்று மட்டும் தெரிந்து கொள்கிறது. முட்டையைக் கையில் எடுத்துப் பார்க்கும்பொழுது ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு அறிவைத் திருத்திக் கொள்கிறது. பின்னர், நக்கிப் பார்க்கிறது. இந்த ஆராய்ச்சியால் விளைந்த அறிவை ஏற்கெனவே கிடைத்த அறிவோடு கூட்டிச் சேர்த்துக் கொள்கிறது. பிறகு, அதைத் தட்டி உடைத்துப் பார்க்கிறது; ஆராய்ச்சி வளருகிறது. முட்டைக்குள்ளே இருக்கும் பொருள் இன்ன தன்மை உடையது என்று தெரிந்து கொள்கிறது. வெள்ளைக் கருவையும் மஞ்சள் கருவையும் கையால் கிண்டிப் பார்க்கிறது. அதன் அறிவு முன்னினும் அதிகத் தெளிவு அடைகிறது. இவ்வாறாக முதன் முதலில் ஒரு பொருளைப் பற்றி எழுந்த மனோபாவனை படிப்படியாகப் பல ஆராய்ச்சிகளால் திருத்தம் அடைந்து, வளர்ச்சிபெற்று, முடிவில் தெளிவான மனச்சித்திரமாகி, உருத்தெளிவு முடிவடைகிறது.

தொடக்கத்தில் ஒரு விஷயத்தைப் பற்றி ஏற்பட்ட உருத் தெளிவு மாறுதல் அடைந்துகொண்டே வருகிறது. விஷய ஞானம் அதிகரிக்குந்தோறும், அறிவு பெருகி வரும். அறிவு தொடக்கத்தில் நின்ற நிலையிலேயே குழந்தையை நிற்க விடுவதில்லை. உருத் தெளிவுகள் திருந்தித் திருந்தி தெளிவுபடுந்தோறும், குழந்தையின் அபிப்பிராயங்களும் மாறிக்கொண்டே இருக்கின்றன. குழந்தைக்குள் ஓயாமல் அனுபவ முத்திரைகள் பதிந்துகொண்டே இருக்கின்றன. இந்த அனுபவ முத்திரைகள் குழந்தைக்குத் தெரியாமலும் தெரிந்தும் மனத்தில் பதிகின்றன. பிறர் கற்றுக் கொடுக்காத நேரங்களிலும் குழந்தை தானாகவே கற்றுக் கொள்கிறது. உருவாகி வரும் மனத்திற்குள் அனுபவ முத்திரைகள் பதிவுறாத நேரமே இல்லை

எனலாம். குழந்தை தனக்குள் பதிகிற அனுபவ முத்திரைகளைக் காலந்தோறும் தனக்குத் தெரிந்த அளவிலே தன் திறமை திராணிக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கிறது. ஒரு நேரத்தில் இருக்கிறவண்ணமே ஒரு அனுபவ முத்திரை மறு நேரத்தில் இருப்பதில்லை. சூழ்நிலையில் நிகழ்கிற நிகழ்ச்சிகள் யாவும் குழந்தையின் தன்மைகளை மாற்றி அமைத்துக் கொண்டே இருக்கின்றன. அற்பச் சிறு நிகழ்ச்சியும் குழந்தையின் நன்மைக்கோ தீமைக்கோ காரணமாகலாம். ஆகையால், சூழ்நிலையின் அங்கங்களாகிற நாம் குழந்தை பார்க்கும்படிச் செய்கிற செயல்களும், பேசுகின்ற பேச்சுக்களும், நம்முடைய மனத்தைப் படம் பிடித்துக் காட்டுகிற மனப் போக்குகளும், ஓயாமல் குழந்தைக்குள் அனுபவ முத்திரைகளாகப் பதிந்து அதன் மனப்போக்கையும் செயல் போக்கையும் உருவாக்கிக் கொண்டே இருக்கின்றன என்பதைப் பெற்றோர் மறக்கலாகாது.

குழந்தையின் சிந்தனைப் போக்கைத் திட்டம் செய்வன இரு விஷயங்கள் ஆகும். 1. குழந்தையின் ஐம்பொறிகளின் வியூகனத்தில் நாம் பதிக்கின்ற உணர்வு முத்திரைகளின் இலக்கணங்கள். 2. இந்த உணர்வு முத்திரைகள் உள்ளே புகுந்ததும் குழந்தையின் மனம் இவற்றிற்கு அளிக்கும் வரவேற்பின் இலக்கணங்கள். குழந்தையின் உருத் தெளிவுகள் சிறந்தவைகளாக உருவாகவேண்டும். எனினும், சூழ் நிலையிலிருந்து வரும் உணர்வு முத்திரைகள் ஓங்கி விழும்பொழுது வேகமில்லாமல் தளர்ந்திருக்குமாயின், குழந்தையின் மனமும் அந்த உணர்வு முத்திரைகளுக்கு நல் வரவேற்பு அளிக்காது. தெளிவு குன்றித் தளர்ந்து விழுகிற உணர்வு முத்திரைகள் தெளிவற்ற உருப்பதிவுகளாகக் குழந்தையின் மனத்தில் உறைந்து நாளடைவில் பயனற்று மறைந்து போகும்.

குழந்தையின் உருத்தெளிவுகளின் பிறப்பு விஷயமாகச் சிந்திக்கும்பொழுது, முதன்முதலில் புகுகிற பதிவுகளுக்குச் சிறப்பு அதிகமாகவே இருக்கும். முதல் பதிவுகளின் அபிப்பிராயம், சிலதருணங்களில், முடிவான அபிப்

பிராயத்தைத் திட்டம் செய்கிறது. தந்தை ஒரு குழந்தையைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கக் கொண்டு போகிருர். அங்கே உபாத்தியாயர் ஒரு குழந்தையைப் பிரம்பால் அடிக்கிருர். குழந்தை அழுகிறது. புதிதாகப் பள்ளிக்கூடத்தில் சேர வந்த குழந்தைக்குள்ளே அமைகிற முதல் உருத்தெளிவு யாதெனில், பள்ளிக்கூடம் குழந்தைகளுக்கு அடி கொடுக்கும் இடம் என்ற உணர்ச்சிதான். இந்த உருத்தெளிவு வருங்காலத்தில் குழந்தைக்கும் பள்ளிக்கூடத்திற்கும் ஏற்படப்போகிற உறவைத் திட்டம் செய்துவிடுகிறது. குழந்தை வீட்டுக்குத் தகப்பனேடு திரும்பிப் போய்விடவேண்டும் என்று கருதி முரண்டு அடித்து அழும். அப்படியே கட்டாயப்படுத்தி அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாலும், குழந்தைக்கு அடிக்கடி தலைநோய், வயிற்றுவலி முதலிய வியாதிகள் தோன்றும். அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போகாமலிருக்கப் பல வழிகளைத் தேடும். குழந்தையின் கல்வி வளரவேண்டுமானல், அதை அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து விலக்கி, வேருெரு பள்ளிக்கூடத்தில் சேர்க்கவேண்டும் என்ற நிலைமையும் தோன்றிவிடும். வாழ்க்கையிலே மிகப் பெரிய பாடங்கள் யாவும் குழந்தையின் ஆரம்ப நாட்களில் உருவாகி வருகிற உருத்தெளிவுகளை ஆதாரமாகக் கொண்டவை.

குழந்தையின் உருத்தெளிவுகள் பெறுகிற அபிவிருத்தி

குழந்தை பேசத் தொடங்குவதற்கு முந்தியே அதன் மனத்தில் பல உருத்தெளிவுகள் பதிகின்றன. எனினும் பேசப் பழகுமுன் அதன் உருத்தெளிவுகள் எவ்வாறு அபிவிருத்தியாகின்றன என்பதனைத் துணிந்து உரைப்பது அரிது. மூன்ருவது மாதத்திலிருந்து குழந்தை தாயின் முகத்தைப் பார்க்கும்பொழுது, அதன் மனத்தில் பால் நினைவுதான் எழுகிறது. தாயைப் பார்த்தவுடனே, வழக்கமாக அவள் தனக்குச் செய்கிறதை எதிர்பார்த்து அதற்கு ஏற்றவாறு குழந்தை தன்னை ஆயத்தம் செய்துகொள்கிறது. குழந்தையின் கைகால்களின் சலனங்களும் முகபாவனைகளும் எல்லாம் அதன் மனத்தில் ஏற்

படுகிற எதிர்பார்த்தலைத் தெளிவாக்குகின்றன. இங்ஙனம் குழந்தையிடத்தில் தோன்றுகிற பிரதிச் செயல்கள் அதற்குத் தன் தாயைப் பற்றிய அறிவு-மூலைகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறே பொருள்களைப் பற்றிய அறிவும் உருத்தெளிவுகளாகக் குழந்தையின் மனத்தில் பதிகின்றன. பின்னும் சில மாதங்கள் செல்லவே, மருந்து கொடுக்கும் கரண்டியைத் தாயின் கையில் கண்டவுடன் குழந்தையின் முகம் கோணுகிறது. பாலுக்கு இடும் சர்க்கரை டப்பியைத் தரையில் வைத்தவுடன், தன் நாவுக்கு இனிய பொருள் ஏதேனும் வருமென்று எதிர் பார்க்கிறது. இவ்வாறே குழந்தையின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய பொருள்களைப் பற்றிய அறிவு-மூலைகள் அதன் உள்ளத்தில் ஏற்படுகின்றன என்பதனை அதன் பிரதிச் செயல்கள் வெகு தெளிவாகக் குறிப்பிடுகின்றன. குழந்தை பேசத் தொடங்குவதற்கு முந்தியே அதன் செயல்கள் மனத்தின்கண் பதிவாகிக் கிடக்கும் உருத்தெளிவுகளைத் தெளிவாக்குகின்றன. சூழ்நிலைப் பொருள்கள் குழந்தையைத் தாக்குகிற தன்மைகளையும் குழந்தை அந்தத் தாக்குதல்களுக்கு விளைவிக்கிற பிரதிச் செயல்களையும் சார்ந்தவைகளாக அதன் மனத்தில் உருத் தெளிவுகளும் பதிவாகின்றன.

குழந்தை தன் பெற்றோர் பேசும் மொழியின் சொற்களுக்குப் பொருள் உணரும் பொழுதும், அச்சொற்களைத் தானே உபயோகிக்கத் தொடங்கும்பொழுதும், ஜன சமூகமென்னும் சூழ்நிலையில் வழங்கிவருகிற உருத் தெளிவுகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டு மனத்தில் பதிவு செய்யத் தொடங்குகிறது. நாளுக்குநாள் குழந்தையின் சொல்-அகராதி பெருகி வருகிறது. குழந்தைகள் நாளுக்கு நாள் கற்றுவருகிற சொற்களை ஆராய்ந்தால், சமூகச் சூழ்நிலையினின்று எத்தகைய உருத்தெளிவுகளை அவர்கள் வெகு எளிதிலே கவர்ந்துகொள்கிறார்கள் என்பதனைத் துணிந்துரைக்கலாம். குழந்தையின் மனத்தில் பதிவாகிற உருத்தெளிவுகளின் அபிவிருத்தி இரு சாதனங்களை அடிப்படையாகக் கொண்டது. குழந்

தையின் ஐம்புலன்களால் எளிதில் அறியக் கூடியவை மனத்தில் உருத்தெளிவு பெறுவதற்கு அமைந்த வசதிகளைப் பெறுகின்றன. அவ்வாறே வசதி பெற்றிருப்பவை, அனுபவ முறைப்படி குழந்தை கையாளுகின்றவைகளுமாம். ஆகையால், ஐம்புலன்களால் எளிதில் அறியக் கூடியவைகளும், அனுபவ முறைப்படி எளிதில் கையாளக் கூடியவைகளுமாகிய இரு சாதகங்களும் குழந்தையின் மனத்தில் பதிவாகின்ற முதல் உருத்தெளிவுகளுக்குப் பெரிதும் உதவியாக இருப்பனவாம்.

உருத்தெளிவின் வளர்ச்சி முன்னேற்றங்கள்

மூன்ருவது வயதுமுதல் பன்னிரண்டாவது வயது வரைக்கும் குழந்தைகளுக்கு ஸ்தூலலோகத்தைப் பற்றி ஏற்படுகிற உருத் தெளிவுகளை வினுவிடை முறையாகவும், மானஸசாஸ்திர முறையாகவும், வேடிக்கையான சம்பாஷணை முறையாகவும் ஆராய்ந்து பல உண்மைகளை உளநூல்வல்லார் வெளியிட்டிருக்கின்றனர். ராமுவுக்கு வயது எட்டு; அவனுடைய தங்கை கமலத்திற்கு வயது மூன்றே. ராமு ஒரு கோலால் தூணை அடித்தான். அதைக் கண்ட கமலம், "அண்ணு தூணை அடிக்காதே. அதற்கு நோகும்; அது அழும்," என்ருள். குழந்தை தன் வாழ்க்கையில் தானும் பிறரும் அனுபவிக்கும் உணர்ச்சிகள் யாவற்றையும் ஜடப்பொருள்களும் அனுபவிக்கின்றன என்று கருதுகிறது. குழந்தையின் பார்வையில் கல்லும் மனிதனைப் போன்றதுதான்; மரமும் ஒரு ஆன்மாதான். மேகத்திற்கும் ஆன்மா உண்டு; கல்லும் மரமும் மேகமும் எல்லாம் பேசும்; இவை அழும்; சிரிக்கும். இங்ஙனம் உயிரில்லாதனவும் உயிருள்ளனவுமாகிய எல்லாப் பொருள்களையும் ஆத்துமா உடையவைகளாகக் கருதுகின்ற மனநிலையை **ஆன்ம-உலகுப்பாவனை** [1] என்னும் சொற்ருெடரால் குறிப்பிடலாம். இதனை ஆங்கிலத்தில் **அனிமிஸம்** என்பார்கள். மரப்பொம்மை தரையில் விழுந்தால், குழந்தை உடனே அதை எடுத்து அணைத்து, அதன் உடலைத்

1. ஆன்ம உலகுப்பாவனை—அனிமிஸம் (*Animism*) இதனை ஆந்திரப் பொமார்ஃபிஸம் (*Anthropomorphism*) என்றும் கூறுவர்.

தடவிக் கொடுக்கிறது. தான் விழுந்த காலத்தில் தன் தாய் தனக்கு அத்தகைய உபசரணைகள் செய்தபொழுது ஆறுதல் ஏற்பட்டமையால், மரப்பொம்மைக்கும் அதே உபசரணைகள் ஆறுதலை அளிக்கும் என்று குழந்தை கருது கிறது. குழந்தை குளிரால் நடுங்கும் பொழுது தாய் கம்பளிப் போர்வையால் குழந்தையை மூடுகிறாள். குழந்தை தன் மரப் பொம்மைக்கும் குளிரும் என்று கருதி அதைக் கம்பளிப் போர்வையால் மூடி வைக்கிறது. இவை யாவும் குழந்தையின் மனத்தில் ஆன்ம வுலகுப் பாவனை நிலையில் நிகழ்கிற செயல்களேயாம். இதே குழந்தை இயற்கைப் பொருள்களை அவற்றிற்கு அமைந்த இயல்பான குணங்களோடு அறிந்து கொள்ளவும் முயலு கிறது. நீர் தண் என்றிருக்கும்; நெருப்புச் சுடும்; பனிக் கட்டி ஜில்லென்றிருக்கும்; இங்ஙனமே பலவற்றையும் **உண்மைநிலைப் பாவனையில்**[1] அறிந்து கொள்கிறது. உண்மை நிலைப் பாவனை என்பதனை ஆங்கிலத்தில் **ரியலிஸம்** என் பார்கள்.

குழந்தையின் சிந்தனைப் போக்குகள் **ஆன்ம உலகுப் பாவனை நெறி, உண்மைநிலைப் பாவனை நெறி** என்னும் இருவகை நெறிகளில் செல்வதை ஆராய்ச்சியாளர்கள் கண்டிருக் கிறார்கள். மூன்று வயது முதல் பன்னிரண்டு வயது வரைக்கும் குழந்தைகளிடம் எந்தெந்தப் பொருள்களுக்கு உயிர் உண்டு, எந்தெந்தப் பொருள்களுக்கு உயிர் இல்லை என்று கேள்வி கேட்டுப்பாருங்கள். முதலில் மரப் பொம்மைக்கும் உயிர் உண்டு, அதற்கும் நோகும் என்று கூறுகிற அதே குழந்தை, பிற்காலத்தில் அதன் அறிவு வளருகிறபொழுது, அது மரக்கட்டை என்றும், உயிரும் உணர்வும் இல்லாத பொருள் என்றும் பதில் அளிப்பதைப் பாருங்கள். ஆகையால் குழந்தையின் உருத்தெளிவுகள் முதன்முதலில் ஆன்ம உலகுப்பாவனை நெறியிலே தொடங்கிப் படிப்படியாக முன்னேற்ற மடைந்து, முடிவில் உண்மைநிலைப் பாவனையை அடை கிறது என்பதனை அறியலாம். ஆன்ம வுலகுப் பாவ

1. உண்மை நிலைபாவனை—ரியலிஸம் (*Realism*).

னைக்கும் உண்மைநிலைப் பாவனைக்கும் இடையிலே பல வளர்ச்சி நிலைகள் உள்ளன. இவை வயதோடு தொடர்புடையனவாகக் கருத இடம் இல்லை. சில குழந்தைகள் வெகு விரைவில் ஆன்ம உலகுப் பாவனையிலிருந்து உண்மைநிலைப் பாவனைக்குச் செல்கின்றன.

குழந்தைகளின் உருத்தெளிவு மூன்று நிலைகளை உடையன. முதலாவது நிலையில், எல்லாப் பொருள்களும் உயிரும் உணர்ச்சியும் உடையனவாகவே குழந்தைக்குத் தோன்றுகின்றன. இந்த நிலையில் இருந்த ஒரு குழந்தையிடம் ஆராய்ச்சியாளர்கள் கேட்ட வினாக்களும் அதற்கு அக்குழந்தை அளித்த விடைகளும் அதன் சிந்தனைப் போக்கைத் தெளிவாக்குகின்றன.

வினா	விடை
1. கல்லுக்குக் குளிர்ச்சி உணர்வு உண்டா?	இல்லை.
2. கல்லைக்கீழே போட்டால் அதற்கு நோகுமா?	ஆமாம். அது உடைந்து போகிறதே.
3. மேசைக்கு ஏதாவது உணர்ச்சி உண்டா?	இல்லை.
4. மேசையை உடைத்தால் அதற்கு நோகுமா?	ஆமாம்; நோகும்.
5. காற்று வீட்டின்மேல் மோதுகிறது; காற்றுக்கு உணர்ச்சி உண்டா?	ஆமாம்; காற்றுக்கு உணர்ச்சி உண்டு; வீடு அதைத் தடை செய்கிறது. அதற்கு முன்நோக்கிச் செல்லமுடியவில்லை.
6. சுவருக்கு உணர்ச்சி உண்டா?	இல்லை.
7. சுவருக்கு ஏன் உணர்ச்சி இல்லை?	சுவர் அசைய முடியாது.
8. சுவரை இடித்தால் அதற்கு நோகுமா?	ஆமாம்; அதற்கு நோகும்.

இரண்டாவது நிலையில், அசையும் பொருள்களுக்கெல்லாம் உணர்ச்சி உண்டு என்று குழந்தை கருதுகிறது. சில வினாவிடைகள் இதை விளக்குவன.

1. சூரியனுக்கு ஏதாவது தெரியுமா?	ஆமாம்; தெரியும். அது உஷ்ணத்தைத் தருகிறது. வானத்தில் ஓடுகிறது.
2. மாலையில் சூரியன் நம்மை விட்டு ஓடி ஒளித்துக்கொள்கிறதே. இது சூரியனுக்குத் தெரியுமா?	ஆமாம்; தெரியும். எதிரில் மேகங்கள் வந்து தன்னை மூடுகின்றன. என்று தெரியும்............இல்லை; இல்லை. தெரியாது. சூரியன் மறைகிறதில்லை. மேகந்தான் சூரியனை மறைக்கிறது.
3. மோட்டார்கார், சைக்கில்களுக்கு ஓடும்போது ஏதாவது தெரியுமா?	தெரியும். தரையில் தேய்ந்துகொண்டு ஓடுகிறது தெரியாதா? ஒரே இடத்தில் நிற்கவில்லை என்று நன்றாய்த் தெரியும்.

மூன்றாவது நிலையில், தாமாகவே இயங்கும் பொருள்களுக்கெல்லாம் உணர்ச்சி உண்டு என்று குழந்தை கருதுகிறது.

1. ஈ உயிரோடு இருக்கிறதா?	ஆமாம்; உயிர் இல்லாவிட்டால் அது எப்படிப் பறக்க முடியும்?
2. சைக்கிள் உயிரோடு இருக்கிறதா?	இல்லை. நாம் அதை ஓட்டினால்தான் அது ஓடுகிறது?
3. மேகங்கள் உயிரோடு இருக்கின்றனவா?	ஆமாம்........இல்லை, இல்லை. மேகங்களுக்கு உயிர் இல்லை. உயிர் இருந்தால் தமக்கு இஷ்டமான போதெல்லாம் இஷ்ட

மான இடங்களுக்குத் திரிய முடியுமே. காற்றுத் தான் மேகங்களை அங்கு மிங்கும் ஓட்டிக்கொண்டு போகிறது.

4. காற்று உயிரோடு இருக்கிறதா?	ஆமாம். காற்று உயிரோடு இருக்கிறது. அதுதான் மேகத்தை அங்குமிங்கும் ஓட்டிக் கொண்டு போகிறது.
5. நதிகள் உயிரோடு இருக்கின்றனவா?	ஆமாம். நதிகளில் ஓயாமல் நீர் ஓடிக்கொண்டிருக்கிறது.
6. மோட்டார்கார் உயிரோடு இருக்கிறதா?	இல்லை. எஞ்சின் தான் அதை ஓடச்செய்கிறது.
7. எஞ்சின் உயிரோடு இருக்கிறதா?	இல்லை. மனிதன்தான் எஞ்சினைச் செய்கிறான்.
8. சூரியன் உயிரோடு இருக்கிறதா?	ஆமாம். அது வெயிலை உண்டுபண்ணுகிறது. வெளிச்சத்தைத் தருகிறது.

இம் மூன்று நிலைகளுக்குமப்பால் குழந்தைகளின் உருத்தெளிவுகள் பண்புச் சிந்தனை நெறியிலே சென்று இயங்குகின்றன; அசையாத பொருள்கள் அனைத்தையும் அதனதன் இயல்பிலே அறிகிற ஆற்றல் பிறக்கிறது. பொதுவாகக் குழந்தைகளின் சிந்தனைப் போக்கு இந்த நிலையோடு முடிவடைகிறது.

அகங்காரி நிலையில் உருத்தெளிவுகளும், பிரத்தியக்ஷ உருத்தெளிவுகளும்

தாத்தா மணியனுக்குக் கோயிலின் கோபுரத்தைக் காட்டி, "இதை யார் கட்டினான்?" என்று கேட்டார். "மணியன் கட்டினான்" என்று பதில் சொன்னான்

குழந்தை. "சூரியன் வானத்தில் ஓடுகிறதே; அது எப்படி ஓடுகிறது?" என்று கேட்டார் தாத்தா. "நான் ஓட்டு கிறேன்; அது ஓடுகிறது" என்று மணியன் விடை அளித்தான். இரவில் வெண்ணிலவில் மணியன் ஓடி விளையாடிக் கொண்டிருந்தான். அவன் சென்ற திசைக்கெல்லாம் சந்திரனும் செல்வதுபோல் அவனுக்குத் தோன்றியது. அவன் திண்ணையில் இருந்த தாத்தாவைப் பார்த்து, "தாத்தா, பாரும்; சந்திரனை நான் போகிற இடத்துக்கெல்லாம் இழுத்துக்கொண்டு போகிறேன். சந்திரனை நான்தான் அங்கும் இங்கும் ஓடச்செய்கிறேன்" என்றான்.

குழந்தைகளின் உருத்தெளிவுகள் அகங்காரி நிலையை அடையும் பொழுது, குழந்தை தானே யாவற்றையும் இயக்குவதாகவும் செய்வதாகவும் கருதத் தொடங்குகிறது. அகங்காரி நிலையில் குழந்தை தற்புகழ்ச்சியாலும், புகழ்ச்சி மொழிகளாலும் விளையும் இன்பத்தைத் தேடுகிறது. அன்றியும், யாவற்றிற்கும் தன்னையே இயற்றுக் கர்த்தாவாகக் காண்பதுதான் மிகவும் இலேசான வழியாக இருக்கிறது. பூமியைச் சந்திரனும், சூரியனும், நட்சத்திரங்களும் வட்டமிடுகின்றன என்றே மனிதன் நெடுங்காலமாகக் கருதி வந்தான். மனிதன் தான் வாழும் உலகத்திற்குத் தன்னையே தலைவனாகக் கருதினான்; சூரியனும் இதர உலகங்களும் தன்னைச்சுற்றி வட்டமிடுகின்றன என்று நினைத்துத் தன்னைத்தானே புகழ்ந்து கொண்டான். இத்தகைய சிந்தனைகள் கி.பி. 1600-வரைக்கும் உலகெங்கும் பரவி இருந்தது. **கோபெர்நிகஸ்** என்ற வான சாஸ்திரி கி.பி. 1473ல் பிறந்தவன்; இவன் கி.பி. 1543 வரைக்கும் வாழ்ந்தவன்; போலந்து நாட்டைச் சார்ந்தவன். கி.மு. மூன்றாவது நூற்றாண்டில் வாழ்ந்த **அரிஸ்டார்க்கூஸ்** என்பவனது கொள்கையை இவன் தழுவி, பூமி இந்தப் பிரபஞ்சத்தின் நடுநிலையமாக இருக்கவில்லை என்றும், சூரியனைச் சுற்றி வட்டமிடுகிற பல கிரகங்களில் ஒன்றாகவே இருக்கின்றதென்றும் கூறினான், இந்த உண்மை அகங்காரி நிலையிலிருந்த மனித சமூகக் கொள்கைக்கு முரண்பாடாக

இருந்தது. பழைய அகங்காரி நிலைக் கொள்கைகளை வேரோடு பறித்தெறிவதற்கு மிகவும் வல்லமை வாய்ந்த விஞ்ஞானச் சாவணம் தேவையாக இருந்தது. அவ்வாறே, குழந்தையின் சிந்தனைப் போக்கிலும், பிரத்தியக்ஷப் பொருள்களை அகங்காரி நிலையிலிருந்து காண்கிற சிந்தனைப் போக்கு, உண்மையை உணர்கின்ற நிலைக்கு வெகு எளிதில் வருவதில்லை.

அகங்காரி நிலையின் உருத்தெளிவுகள் குழந்தையோடு எல்லாப் பொருள்களையும் தொடுத்து உறவாக்கி விடுகின்றன. பிரத்தியக்ஷ உருத்தெளிவுகளோ ஒரு பொருள் மற்றொரு பொருளைச் சார்ந்திருக்கும் இயல்பையும், அவற்றின் உறவுகளையும் தெளிவாகப் பார்த்து உணரும்படிச் செய்துவிடுகின்றன. ஆகையால், குழந்தை படிப்படியாகப் பிரத்தியக்ஷஞானத்தை அடைகிறது. அகங்காரிநிலைஉருத் தெளிவுகள் ஒருவரது மனவிருப்பங்களுக்கு இசைந்தவாறு அமைகின்றன. பிரத்தியக்ஷ உருத்தெளிவுகளோ அனுபவத்துக்குப் பொருத்தமாக அமைகின்றன; பொருள்களின் உண்மைநிலை இயல்புகளைப் புலப்படுத்துகின்றன; நாளடைவில் சூழ்நிலைகளை அடக்கி ஆளும் ஆற்றலை அளிக்கின்றன.

வினைகள் அனைத்திலும் வெற்றியை அளிக்கிற கருவிகளாகச் சிந்தனைகள் அமைய வேண்டுமாயின், உருத்தெளிவுகள் செயலில் இறங்கவேண்டும்; பொருள்களைக் கையாளுவதில் முனைந்திறங்கவேண்டும்; ஸ்தூல உலகச் சூழ்நிலைப் பொருள்களினால் சிந்தனைப் போக்கையும் செயல் போக்கையும் ஒப்பிட்டுப் பார்த்து, சரி எது, தப்பு எது என்று அடிக்கடி ஆராயவேண்டும்; சூழ்நிலையாக அமைகிறவரோடு பேசி, ஆராய்ந்து, உண்மைகளைத் தெளிதல்வேண்டும்; ஜனசமூகச் சூழ்நிலையோடு கலந்து, சரி எது, தப்பு எது என்று அடிக்கடி ஆராய்ந்து உண்மைகளை உணரவேண்டும்.

ஸ்தூலவுலகச் சூழ்நிலைகள் பிரத்தியக்ஷ உருத்தெளிவுகளையே அடையவேண்டுமென வற்புறுத்து

கின்றன. சமூகச் சூழ்நிலைகளோ, மானிடத் தொகுதி ஏற்றுக்கொண்டிருக்கும் கொள்கைகளுக்கு இசைந்தவாறே சிந்தனைப்போக்கு அமைய வேண்டுமென வற்புறுத்துகின்றன. இவ்வாருக ஸ்தூலவுலகச் சூழ்நிலைகளும், சமூகச் சூழ்நிலைகளும், சுய விருப்பங்களும் ஒரு குழந்தையின் சிந்தனைப் போக்கை அடக்கி ஆள்கின்றன. பின்பு, படிப்படியாகக் குழந்தையின் உருத்தெளிவுகளிற் சில பிரத்தியக்ஷ நிலையை அடைகின்றன. மற்றும் பல உருத்தெளிவுகள் குழந்தைக்கு இடம் தந்த ஜன சமூகத்தாரின் பண்பு நிலைகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் பொருத்தமாக அமைகின்றன. குறிப்பிட்ட ஒரு ஜன சமூகத்தார் ஒப்புக்கொள்கிற உருத்தெளிவுகள் பிரத்தியக்ஷ உருத்தெளிவுகளுக்கு முற்றிலும் முரணுகவே இருக்கும். சில நாட்டினரது பண்பாட்டில் இயற்கைத் தோற்றங்களைச் சார்ந்து தோன்றுகிற ஆன்மவுலகுப்பாவனை ஏற்றமாகவே அமைந்திருக்கும். உலகத்தில், சமயப் போக்கிலும், நீதிநெறிப் போக்கிலும், அரசாங்கப் போக்கிலும் காலந்தோறும் நடைபெற்று வருகிற பிரசாரங்களினுல் குழந்தைகள் தத்தமக்குரிய இயல்பான உருத்தெளிவு பெற்று வளரமுடியாமல் இருக்கிருர்கள். இங்ஙனம் சமூகக் கட்டுப்பாடுகளும், சமயக் கோட்பாடுகளும், அரசாங்க விதி விலக்குகளும், பரம்பரைக் கொள்கைகளும் ஆட்சி செய்யும்பொழுது, குழந்தைகளின் உருத்தெளிவுகளும், அவற்ருல் விளைகிற சிந்தனைப் போக்குகளும் சுதந்தரத்தை இழந்து செயற்கைப் போக்கிலே அமைகின்றன.

நீலகண்டனுடைய தந்தை மேலைநாட்டு வைத்திய முறையில் தேர்ந்தவர்; பெரிய ஆராய்ச்சியாளர்; யாவற்றையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்க்க விரும்புபவர். அவனுடைய தாயின் உருத்தெளிவுகளும் சிந்தனைப் போக்கும் பரம்பரையாக வந்த சமயக் கொள்கைகள், ஆசாரங்கள், பழக்க வழக்கங்களின் ஆட்சிக்கு அடங்கி இருந்தன. நீலகண்டன் சிறு குழந்தையாக இருந்த பொழுது, ஒரு சந்திர கிரகணத்தன்று தன் தாயிடம்

"அம்மா, கிரகணம் என்றால் என்ன?" என்று கேட்டான். தாய் கதை சொல்லத் தொடங்கினாள்: "தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதத்தைப் பெற்றனர்; திருமால் மோகினி அவதாரம் எடுத்து அவ்வமுதத்தைத் தேவருக்கும் அசுரருக்கும் பரிமாறத் தொடங்கினார். அசுரர்களின் வரிசைக்கு அமுதம் வராது என்று இராகு கேது என்னும் இரு அசுர நாகங்கள் அஞ்சினர். அப்பொழுது அவர்கள் இருவரும் சந்திர சூரியருக்கு அருகில் அமுதைப் பருக மறைந்திருந்தனர். இந்தத் திருட்டுத் தொழிலைச் சூரிய சந்திரர்கள் மோகினி வடிவில் இருந்த திருமாலுக்குக் காட்டினர். அப்பொழுது திருமால் அகப்பையால் அவ்வசுரர் தலையைப் புடைத்தனர்; அகப்பையில் இருந்த அமுதத் துளிகள் அசுரர்களின் தலையில் விழுந்தன. அந்த அசுர நாகங்கள் தலையில் துளித்த அமுதத்தை நாவால் நக்கி உட்கொண்டு இறவாமையைப் பெற்றன. உடனே அவை தம்மைக் காட்டிக் கொடுத்த சந்திர சூரியரை ஆண்டுக்கு ஒரு முறை விழுங்கத் தலைப்பட்டன. அதனால்தான் கிரகணம் வருகிறது" என்றாள். நீலகண்டனுக்கு இந்தக் கதை வெகு இரசமாக இருந்தது. அவன் பள்ளிக்கூடம் போகத் தொடங்கியபொழுது, சந்திரக் கிரகணம் எப்படி வருகிறதென்று தந்தையை வினவினான். தந்தை வான சாஸ்திரப்படி அதன் காரணத்தை மகனுக்கு விளக்கிக் காட்டினார். தாய் கூறிய கதையிலும் தந்தை கூறிய விஞ்ஞான விளக்கம் பொருத்தமானதென்று நீலகண்டனுக்குத் தோன்றியது. நீலகண்டனுக்குப் பத்து வயதான பொழுது, கிரகணம் முடிவடைகிறவரைக்கும் எவரும் சாப்பிடக்கூடாதென்றும், நீராடிய பிறகுதான் உண வருந்தலாமென்றும் தாய் வற்புறுத்தினாள். இந்தக் கட்டுப்பாடுகளும், சமயநெறிகளும் இயற்கையாக நிகழ்கிற ஒரு சம்பவத்திற்குப் பொருத்தமற்றவை என்று நீலகண்டன் கருதினான். தாய் கூறியபடி செய்ய அவனுக்கு இஷ்டம் இல்லை; தாய்க்கும் மகனுக்கும் வாக்குவாதம் நேர்ந்தது; தந்தை குறுக்கிட்டார். மகனைத் தனியே அழைத்து,

உலகோடு பொருந்தி வாழவேண்டுமென்றும், சமயக் கொள்கைகளிற் பல விஞ்ஞானக் கொள்கைகளுக்கு முரணாக இருப்பினும், அவற்றைப் புறக்கணிக்காமல் இருப்பதே நலமென்றும், அவ்வாறு செய்வதால் சமூகத்தோடு பொருந்தி வாழமுடியும் என்றும் கூறினர். குழந்தையின் உருத்தெளிவுகளையும், சிந்தனைப் போக்குகளையும் ஆட்சி செய்கிற சூழ்நிலைகளை விளக்க எண்ணிறந்த உதாரணங்கள் உள்ளன. எனினும் இவ்வொரு உதாரணத்தால் பிறவற்றையும் சிந்தித்துணரலாம்.

கருத்துக்களின் புணர்ப்பு

உருத் தெளிவுகள் முத்திரைகளாகப் பதியும்பொழுது ஒவ்வொரு உருத்தெளிவும் குறிப்பிடத் தகுந்த ஒவ்வொரு கருத்தாக நிற்கும் குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றி ஏற்படுகிற ஒரு தனி அபிப்பிராயமே கருத்து எனலாம். உருத் தெளிவுகள் எப்படி மனத்திற்குள் புகுந்து பதிகின்றன என்று பார்த்தோம். இப்பொழுது, குழந்தையின் மனத்திற் புகுகிற கருத்துக்களின் புணர்ப்பைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். வட்டம் வரையும் கருவியால் காகிதத்தில் வட்டம் ஒன்றினை வரையுங்கள். இந்த வட்டத்திற்குள் பென்ஸில் கூரால் அங்கங்கே சிதறிக்கிடக்கும்படி புள்ளிகள் இடுங்கள். வட்டத்திற்குள் இட்ட ஒவ்வொரு புள்ளியும் குழந்தைக்குள் புகுந்து பதிந்த தனித்தனி அனுபவ முத்திரைகளைக் குறிப்பிடுவதாகக் கருதுவோம். சில புள்ளிகள் மிகவும் நுண்ணிய புள்ளிகளாக இருக்கட்டும். நுண்ணிய புள்ளிகள் குழந்தை மனத்தில் நல்வரவேற்புப் பெறாதவை. தடித்த புள்ளிகள் மனத்தின் நல்வரவேற்புப் பெற்றவை. ஒவ்வொரு புள்ளியும் தனித்தனிக் கருத்தைக் குறிப்பிடுவதாகக் கருதுவோம். குழந்தை பிறந்தவுடன் அதன்மீது காற்று அடிக்கிறது. தொடு கைப்புலன் வாயிலாக ஒரு உணர்ச்சி தோன்றுகிறது.



படம் 8

அதை நரம்பு நிலையங்கள் அனுபவ முத்திரையாகப் பதிவு செய்கின்றன. ஒரு புள்ளி இதனை உணர்த்துகிறது. தாய் பால் ஊட்டுகிறாள். அமுத கலசத்தின் சூப்பிக் காம்பு குழந்தையின் வாயில் புகுகிறது. உடனே, மனத்தில் ஒரு அனுபவ முத்திரை பதிகிறது. பால் சுரக்கிறது. இன்னொரு அனுபவ முத்திரை பதிகிறது. குழந்தை ஒரு நாயைப் பார்க்கிறது. உடனே ஒரு அனுபவ முத்திரை பதிகிறது. குழந்தையின் காதில் கடிகாரத்தின் மணி ஓசை விழுகிறது. உடனே ஒரு அனுபவ முத்திரை பதிகிறது. குழந்தையின் தொட்டிலுக்குமேல் பல நிறங்களை உடைய இரஸக்குண்டுகள் தொங்குகின்றன. அவைகளைப் பற்றிய முத்திரைகள் குழந்தையின் மனத்தில் பதிகின்றன. குழந்தை படுத்திருக்கும் இடத்தில் ஒரு காகம் வந்து உட்காருகிறது. உடனே ஒரு அனுபவ முத்திரை பதிகிறது. இப்படியே நிமிஷந்தோறும் ஐம்பொறிகள் வாயிலாகப் புகுகிற அனுபவ முத்திரைகள் மனத்தில் பதிந்துகொண்டே இருக்கின்றன. இங்ஙனம் பதிகின்ற முத்திரைகளைத்தான் வட்டத்தில் குறித்திருக்கும் புள்ளிகள் காட்டுகின்றன என்று கருதுவோம்.

முதல் தடவை பூனையைப் பார்த்தபோது ஏற்பட்ட அனுபவ முத்திரையோடு, பூனை 'மியாவ் மியாவ்' என்று கத்துகின்ற சத்தத்தின் முத்திரையும் மனத்தில் பதிவாகிறது. இந்தச் சத்தத்தைப் பற்றிய முத்திரை மனத்தில் வேறொரு திசையில் பதிந்து கிடக்கிறது. காக்கையைப் பார்த்தபோது புகுந்த அனுபவ முத்திரை மனத்தின் ஒரு மூலையில் பதிந்து கிடக்கிறது. காகம் 'கா கா' என்று கரையும்பொழுது பதிந்த முத்திரை மற்றொரு பக்கத்தில் இருக்கிறது. அமுத கலசத்தைப் பற்றிய அனுபவ முத்திரை ஒரு பக்கத்தில் பதிந்திருக்கிறது. அமுத கலசத்தைத் தரும் தாயின் குரலைப்பற்றிய அனுபவமுத்திரை மற்றொரு பக்கத்தில் கிடக்கிறது. திரும்பவும் பூனையைப் பார்க்கும்பொழுது, அதன் கண், மூக்கு, மீசை முதலிய உறுப்புக்களின் உருவங்களைப் பற்றிய அனுபவ முத்திரைகள் பதிவாகின்றன. தாயின் உயரம், முகத்தின்

உறுப்புக்கள் படிப்படியாகப் பதிவாகின்றன. காகத்தின் நிறம், வடிவம் முதலியவற்றையும் பஞ்சேந்திரியங்கள் பதிவு செய்கின்றன. இப்படியே சூழ் நிலையிலுள்ள ஒவ்வொரு பொருளையும் பற்றிப் பல அனுபவ முத்திரைகள் பல தருணங்களில் பதிவாகின்றன. அமுத கலசச் சூப்பி, அமுதகலசம், அருந்தும் பால், தன் தேவை, இதைத் தரும் தாய், தாயின் உருவம், நடை, குரல், முக ஜாடைகள் யாவும் மனத்தின் ஓரிடத்தில் முத்திரைத் தொகுதியாகக் கூடி விடுகின்றன.

முதலாவது எழுதிய வட்டமும் அதிலுள்ள புள்ளிகளும் முதன் முதலில் வந்து பதிவாகும் ஆரம்ப அனுபவ முத்திரைகளைக் காட்டுவதாகக் கருதி, அதை அப்படியே விட்டு, திரும்பவும் புதிய வட்டம் ஒன்றை வரைந்துகொள்வோம். இந்த வட்டத்தில் தடித்த புள்ளி ஒன்று போடுங்கள். இது அமுத கலசத்தைப் பற்றி மனத்தில் பதிவான முதல் அனுபவ முத்திரை எனக் கருதுவோம். தாயின் அமுத கலசத்தைப்பற்றியும், தாய்ப் பாலைப் பற்றியும், தாயைப்பற்றியும் அடுத்தடுத்து வந்து பதிவான அனுபவ முத்திரைகளையெல்லாம் தடித்த புள்ளியைச் சூழப் பல புள்ளிகள் இட்டுக் காட்டலாம். பல புள்ளிகள் இப்பொழுது வரைந்த வட்டத்தில் கூட்டமாக இருக்கின்றன. இந்தப் புள்ளிக் கூட்டங்கள் ஒரே விஷயத்தை ஒட்டிய பலஅனுபவ முத்திரைகளைக் குறிப்பிடுகின்றன. இந்த வட்டத்தில் பூனையைப் பற்றியும், காகத்தைப் பற்றியும் மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் மனத்தில் பதிவாகிற அனுபவத் தொகுதிகளைக் குறிப்பிட, புள்ளிகளைக் கூட்டங் கூட்டமாக அமைப்போம். இரண்டாவது படம் தயாராகிவிட்டது. இந்தப் படத்தில் கூட்டங் கூட்டமாக அமைந்துள்ள புள்ளிகள்—அதாவது புள்ளிக்



படம் 9

கூட்டங்கள்—ஒவ்வொன்றும், ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் பதிவான அனுபவ முத்திரைத் தொகுதிகளைச் சுட்டிக் காட்டுகின்றன. ஓரினத் தொகுதியான அனுபவ முத்திரைகள் ஒன்றாகி மனத்தின் ஒரு கருத்தை உரு வாக்குகின்றன. இப்படியே, தொகுதி தொகுதியாக அமைகிற அனுபவ முத்திரைகள் பல கருத்துக்களை ஆக்கு கின்றன. இதைத்தான் இரண்டாவது படம் குறிப்பிடு கிறது. ஆரம்ப அனுபவ முத்திரைகள் அகன்ற மனத்தில் சுயேச்சையாகத் தனித்தனி அங்கமாகத் திரியலாயின. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை போலவும் துலங்கின. மேன் மேலும் அனுபவ முத்திரைகள் புகவே, இனம் இனத்தோடே என்ற விதிப்படி, ஒரு விஷயத்தைப்பற்றிய அனுபவ முத்திரைகள் ஒன்றாகக் கூடி ஒரு கூட்டமாயின. இவ்வாறாகக் கருத்துக்கள் உருக்கொண்டன.

குழந்தைக்குத் தாயைப் பற்றிய அறிவு ஏற்படுகிறது. தாயைப் பற்றிப் பல கருத்துக்கள் மனத்தில் உருவாகி விட்டன. பக்கத்து வீட்டுப் பத்மா வருகிறாள். அவளுடைய நடை, உயரம், நிறம், அவளுடைய முகத்தில் காண் கிற கண், மூக்கு, வாய் முதலியவற்றை ஐம்புலன்கள் மனத்தில் பதிவு செய்கின்றன. அப்பொழுது குழந் தையின் மனது, ஏதோ ஒரு நியதிப்படி, அவளைத் தன் தாயோடு ஒப்புமைப்படுத்துகிறது; ஒப்புமையாகப் பொருந்துகிற கருத்துக்களைத் தன் தாயைப் பற்றி அமைந்த கருத்துக்களோடு புணர்த்திவிடுகிறது. பூனையைப் பற்றிய கருத்துக்கள் பதிவாகின்றன. அப்படியே நாயைப் பற்றிய கருத்துக்களும் பதிவா கின்றன. நாய்க்கும் நாலு கால்கள்; பூனைக்கும் நாலு கால்கள்; நாய்க்கும் ஒரு வால்; பூனைக்கும் ஒரு வால்; நாயின் முகத்திலும் மீசை தோன்றுகிறது. பூனையின் முகத்திலும் மீசை காண்கிறது. உடனே, மனம் நாய் பூனைகளைப் பற்றிப் பதிவான கருத்துக்கள் இரண்டிற்கும் ஒருவகைக் கருத்துப் புணர்ப்பை அமைக்கிறது. குழந் தையின் மனம் காக்கை குருவிகளைப் பற்றியும், மற்றும்

பல விஷயங்களைப் பற்றியும் கருத்துப் புணர்ப்புக்களை உண்டுபண்ணுகிறது. இவ்வாறு ஒப்புமை வேற்றுமை நோக்கிக் கருத்துக்களைத் தொடுக்கிற மனத்தின் தன்மையை **கருத்துப் புணர்ப்புத்தன்மை**[1] என்பார்கள்.

ஜோடி சேர்க்க முடியாதவாறு மனத்தில் பதிந்து கிடக்கும் கருத்துக் கூட்டங்கள் நாளடைவில் மறதியாக மறைந்துவிடும். மறைந்துவிடும் என்று சொல்வதைப் பார்க்கிலும் பதுங்கி ஒளிந்து கிடக்கும் என்று சொல்வதே பொருந்தும். புதிது புதிதாகப் புகுகிற அனுபவ முத்திரைகள், இனம் இனத்தோடே என்ற விதிப்படி, ஏற்கெனவே கூடியிருக்கிற கருத்துக் கூட்டங்களில் பொருத்தமானவைகளோடு சேரும்படிப் பதிவாகும். இப்படிப் பதிவாகிற அனுபவ முத்திரையைப்போல் ஒரு அனுபவ முத்திரை வேறு கருத்துக் கூட்டங்களில் எங்கேயாவது பதிவாகியிருந்தால், குழந்தையின் மனம் புதியதையும் பழையதையும் சேர்த்து ஒரு கருத்துப் புணர்ப்பை உண்டுபண்ணிக் கொள்கிறது. ஏக காலத்தில் இரண்டு அனுபவ முத்திரைகள் புகுமானால், இவற்றை நட்புக் கூட்டமாக்கித் தொடுப்பதற்கு ஏற்றவாறு கருத்துப் புணர்ப்பு நிகழும். தட்டாரப் பூச்சியைப் பார்க்கிற குழந்தையின் மனம் ஒரு விமானத்தைப் பார்க்கும் பொழுது, இரண்டு விஷயங்களைப் பற்றியும் ஏற்பட்ட கருத்துக்களில் விளக்கமாகத் தெரிகிற ஒப்புமைக் கூட்டங்களைக் கருத்துப் புணர்ப்பு நியதியின் கீழ் கொண்டுவந்து விடுகிறது. இதனையே படம் 10 காட்டுகிறது.

படம் 10

கருத்துப் புணர்ப்பு நியதிகள் எதற்காக? நாம் ஒரு ஆளிடம் ஒரு மேல்விலாசத்தை விசாரிக்கிறோம். அப்

1. *Association of Ideas.*

பொழுது அந்த ஆள், 'பரிபூரண விநாயகர் கோயில் தெரு' என்கிறான். நமக்கு அவ்வளவு நீண்ட பெயர் ஞாபகம் இருக்குமோ என்ற சந்தேகத்தினால், உடனே பரிபூரணம் என்ற பதத்தை ஏற்கெனவே நமக்குள் பதிவாகியிருக்கும் கருத்துக் கூட்டங்களில் ஏதேனும் ஒன்றோடு கருத்துப் புணர்ப்பில் அமைக்க விரும்புகிறோம். பக்கத்து வீட்டா னுடைய தாயார் பெயர் பரிபூரணம்மாள் என்று ஞாபகம் வருகிறது. உடனே, புதிதாகக் கேட்ட தெருப் பெயரை, அனுபவ முத்திரையாக அமைந்த கருத்துத் தொகுதி களில் ஒருவனுடைய தாயின் பெயரோடு புணர்ப்பு விதிப் படுத்திப் பதிவு செய்துவிட்டுக் கூடவரும் நண்பரோடு பேசிக்கொண்டே போகிறோம். கூட வருபவர் நம்மிடம் 'அந்தப் பெயரை மறந்து விட்டேனே' என்கிறார். உடனே நாம் நமக்குள் பதிவு செய்திருக்கும் கருத்துப் புணர்ப்பை நோக்கி, 'பரிபூரண விநாயகர் கோயில் தெரு' என்கிறோம். இதைச் சிந்திக்குங்கால், கருத்துப் புணர்ப்பைத் திறமையாகக் கையாளத்தெரிந்த குழந்தைக்கு ஞாபக சக்தி அதிகமாகவும், கருத்துப் புணர்ப்பைத் திறமையாக் கையாளத் தெரியாத குழந்தைக்கு ஞாபக சக்தி குறைவாகவும் இருக்கும் என்று நாம் அறியலாம்.

குழந்தை நாள்தோறும் அடைகிற அனுபவ முத்திரை களை மனம் உடனுக்கு உடனே கருத்துப் புணர்ப்பில் தொடுத்து, இனம் இனத்தோடே என்ற நியதிப்படி, கருத்துக் கூட்டங்களாக வகுத்து வைப்பதினால், ஒருமுறை பதிந்த கருத்துக்கள் நெடுங்காலமளவும் மறந்து விடாமல் ஞாபகத்தில் இருக்கின்றன.

மனம் இந்தக் கருத்துப் புணர்ப்பைக் கண்மூடித்தன மாகக் கையாளுவதில்லை. இந்தக் கருத்துப் புணர்ப்புக்கள் யாவும் தவறாத சில விதிகளின்படி ஒப்புமைக் கூட்டமும் நட்புக் கூட்டமும் பெற்று ஒன்றோடு ஒன்று நேர்முகமாக வும் குறுக்கு வெட்டாகவும் தொடுப்புண்டு கிடக்கின்றன. இந்தக் கருத்துப் புணர்ப்பு விதிகளின்படி ஒரு கருத்து, பல கருத்துக்களை நினைப்பூட்டி விடும்.

குழந்தைக்குச் சொல்லுகிற கதைகளில் தலை அங்கமாக அமைவது, விஷயத் தொடர்புக் கட்டுமானமேயாம். மிகவும் நேர்த்தியான விஷயத் தொடர்புக் கட்டுமானத்தோடு அமைகிற கதைகளைக் குழந்தைகள் நன்ருய் ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்கள். கதையின் தொடக்க அங்கமாக அமைகிற விஷயத் தொடர்புக் கட்டுமானம் கருத்துப் புணர்ப்பு விதிப்படி அமைந்திருக்கவேண்டும். கதை சொல்லுகிறவர்கள், கதை முடிவிலே, "இந்தக் கதையிலிருந்து நாம் படிக்கிற பாடம் என்ன? தெரியுமா?" என்று கேட்டால், குழந்தைகள் "படிக்கிற பாடம் எப்படி வேண்டுமானலும் இருக்கட்டும்; இன்னொரு கதை சொல்ல வேணும்" என்றுதான் கேட்பார்கள். கதையின் மூலமாகப் போதிக்கவேண்டிய பாடங்கள் கதையோடு நீரில் உப்பெனக் கரைந்து கலந்து விளங்கவேண்டும். கதையைப் பிழிந்து சாரம் எடுத்தால், அந்தச் சாரம் குழந்தைகளுக்குப் பிடிக்காது. கதையின் சாரத்தை முதல் அங்கமாகிய விஷயத் தொடர்புக் கட்டுமானத்தோடு தெரியாதபடி புகுத்திவிடலாம். கருத்துப் புணர்ப்புக்குப் பெரிதும் உதவியாக இருப்பது திருஷ்டாந்தக் கதைகளும், ஒப்புமைக் கதைகளுமேயாம். பல விஷயங்கள் அடங்கிய புத்தகங்களில் திருஷ்டாந்தக் கதைகளைக் கையாளுவதினல் பல கருத்துக்கள் மனத்தில் அழுந்திப் பதியும்.

8. குழந்தையும் அதன் கற்பனைத் திறமும்

கற்பனை

நமது நாடு முன்னேற்றம் அடையவேண்டுமானல், நமது மக்களில் பலர் விஞ்ஞானிகளாகவும், நிர்மாணிகளாகவும், ஓவியச் சிற்பக் கலைஞர்களாகவும், அரசியல் கலைஞர்களாகவும் விளங்கவேண்டும். இவர்களே தமது தெள்ளத் தெளிந்த சிந்தனைகளாலும், அச்சமற்ற கற்பனை வன்மையாலும் இவ்வுலகைப் பற்றிய அறிவை வளர்த்து, நாட்டு மக்களின் வாழ்க்கையைச் சீரிய நிலைக்கு உயர்த்தும் ஆற்றல் உடையவர்கள். இன்று இவர்களது தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. மக்களின் சிந்தனைத் திறம் பெருகவேண்டும். சமூகநலத்தின் பொருட்டும் செல்வ முன்னேற்றத்தின் பொருட்டும் மனிதனின் ஆக்கும் திறமை வளர்ச்சி அடையவேண்டும். சமூக முன்னேற்றத்திற்கும் தனி ஆளின் முன்னேற்றத்திற்கும் சிந்தனைத் திறன் வளர்ச்சி அடைவது இன்றியமையாதது.

சிந்தனைப் போக்கு என்பதனை இரு பெரும் தலை அங்கங்களின் கீழ் வகுத்து, இரு பெரும் இயல்களாக எழுதலாம். ஒரு அதிகாரத்தில் பகுத்தறிவின் ஆட்சித் திறமையைக் கூறலாம். மற்றொரு அதிகாரத்தில் கற்பனை சக்தியை விரித்துக் கூறலாம். மனிதனின் சிந்தனைப் போக்கிற்குத் தலைசிறந்த இரு குறிக்கோள்கள் உள்ளன. ஒன்று ஆய்ந்து அறிதல்[1]; மற்றொன்று ஆக்கும் ஆற்றல்[2]. முந்தியது, உண்மை நிலையினைத் தேடுவது; பிந்தியது, முந்தி அமைந்திருந்ததைத் திருத்தி முன்னிலும் சிறப்பாகச் செய்வது.

பகுத்தறிவாட்சித்திறன்[3] என்பது [4]மனத்தின் ஆராய்ச்சித் திறமையின்பால் அடங்கும். கற்பனைசக்தி

1. ஆய்ந்து அறிதல்—*discovery* புதுவது ஆய்தல்.
2. ஆக்கும் ஆற்றல்—*invention.* புதுவது புனைதல்.
3. பகுத்தறிவாட்சித்திறன்—*The ability of reasoning*
4. மனத்தின் ஆராய்ச்சித்திறமை—*Mental exploration.*

என்பது [1]மனத்தின் செயல் ஆற்றும் திறமையின்பால் அடங்கும். தற்காலிகமாக அமைகிற சூழ்நிலையோடு நேர்முகமாக தொடர்புறாமலே ஏதேனும் ஒரு பொருளைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் திறமையும் மனச்செயலாற்றும் திறமையும் மனிதனுக்கு உண்டு. இவ்வாறு மனத்தால் ஆராய்ந்து, மனத்திலேயே செயலாக முடித்துக்கொண்டவற்றைப் பின்பு அமைகிற சூழ்நிலைகளோடு வெகு நேர்த்தியாகப் பொருத்தி. கட்புலனாகிற ஆராய்ச்சியையும் வினையையும் முடிக்கவல்ல ஆற்றலும் மனிதனுக்கு அமைந்துளது. பிரத்தியக்ஷ ஆராய்ச்சிக்கும் சூழ்நிலையோடு தொடர்புற்ற வினைக்கும் முந்தியதாக மனத்தின்கண் நிகழ்கிற ஆராய்ச்சியும் செயலும் உருப்பாவனைகள் எனப்படும். உருப்பாவனையைப் பற்றிக் 'குழந்தையும் அதன் மனமும்' என்ற இயலிலே குறிப்பிட்டோம்.

"அந்த மனிதனின் பெயர் என்ன? சற்றே நான் அதை சிந்தித்துப் பார்க்கட்டும்" என்கிறோம். நாம் எவனுடைய பெயரைச் சிந்தனை செய்ய விரும்பினோமோ அவனுடைய பெயர் ஞாபகத்திற்கு வந்து விட்டால், சிந்தனை தேவை இல்லை. இடையூறு ஒன்றை மேற்கொள்வது என்ற கருத்தும் சிந்தனை என்ற சொல்லில் அடங்கியிருக்கிறது. மறதியாக இருப்பதனை நினைவுக்குக் கொண்டுவருவதில் ஒரு தடை ஏற்படுகிறது. உடனே, மறந்த பெயரை ஞாபகத்திற்குக் கொண்டுவருவதற்காக, அந்த ஆளை முதன் முதலில் சந்தித்த இடத்தையோ, அவனோடு தொடர்புற்ற மற்றேதேனும் ஒரு நிகழ்ச்சியையோ சிந்தித்துப் பார்க்கிறோம்; இறந்தகால அனுபவ முத்திரைகளைக் கிளறிப் பார்க்கிறோம். சரியாகச் சொல்வதாயின், [2]இறந்த காலத்து ஞாபகக் குவியல்களைக் கிளறிப் பார்க்கிறோம் என்பதேயாம்.

நம்மோடு தங்க இரண்டு நண்பர்கள் வருகிறார்கள். வீடு நிரம்பச் சாமான்கள் இருக்கின்றன. வருகிற நண்பர்

1. மனத்தின் செயல்ஆற்றும் திறமை—*mental manipulation*.
2. இறந்த காலத்து ஞாபகக் குவியல்—*stock of memory-traces*.

களுக்கு இடம் ஆயத்தம் செய்து கொடுக்கவேண்டும். ஓர் அறையில் உள்ள சாமான்களை வேறொரு அறையில் ஒழுங்காக வைத்தால், இடம் செய்து கொடுக்க முடியும். அதற்காக, "இந்தச் சாமான்களை எப்படி அந்த அறையில் ஒழுங்கு படுத்தலாம்?" என்று சிந்திக்கிறோம். உடனே "இந்த மேசை அங்கே போகவேண்டும்; இந்த நாற்காலிகளை இவ்வாறு அமைக்க வேண்டும்," என்றிப்படியே சாமான்களை அமைக்க வேண்டிய முறைகளை எல்லாம் நமது மனத்திலேயே கற்பனைத் தோற்றமாகச் சிந்தனை செய்து பார்க்கிறோம். இவ்வாறு சிந்திக்கும்பொழுது, அழகுணர்ச்சியைப்[1] பெரிதும் கையாளுகிறோம். நாம் இதை எப்படி மனத்தில் செய்ய முடிகிறது? பல தருணங்களில் பல இடங்களில் சாமான்களை அடுக்கி ஒழுங்குபடுத்திய அனுபவம் நமக்கு இருக்கலாம். பலருடைய வீடுகளில் சாமான்களை ஒழுங்குபடுத்தியிருப்பதை நாம் பார்த்திருக்கலாம். இவ்வாறாக நமக்குள் சாமான்களை ஒழுங்காக அமைப்பதில் ஏதோ ஒரு வகையான அழகுணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. முற்றிலும் புதிய சூழ்நிலையிலே முதல் தடவையாக ஒன்றைச் செய்ய நேரும்பொழுது, இறந்த காலத்து அனுபவங்களை ஏற்றவாறு மாற்றி அமைத்துப் பொருத்திக் கொள்கிறோம். இறந்த காலத்து அனுபவங்களாகிற பின்னணிக்கோப்பு[2] இல்லாவிட்டால், ஒருவன் பொருள்களை அழகுணர்ச்சியோடு அமைக்கமுடியாது. இறந்தகால அனுபவங்களாகிற பின்னணிக்கோப்பில்லாத நிலையிலே, ஒருவன் பொருள்களைப் பிரத்தியக்ஷ ஆராய்ச்சியாகச் செய்து பார்க்கத் தொடங்குவான். முதலில் சாமான்களை ஒரு முறைப்படி வைப்பான். அவை சரிப்படாவிட்டால் மற்றொரு முறையில் ஒழுங்குபடுத்துவான். இப்படிப் பல முறை முயன்று முடிவுக்கு வருவதில் சிந்தனை இன்மையால், முயற்சிச் சிக்கனம்[3] இல்லாமல் போகிறது.

---

1. அழகுணர்ச்சி—*Aesthetic sense*
2. பின்னணிக் கோப்பு—*Back-ground setting.*
3. முயற்சிச் சிக்கனம்—*Economy of effort.*

சிந்தித்தல்[1], ஆராய்தல்[2], வினை ஆற்றல்[3] ஆகிய மூன்றும் ஒரே செயலின்கண் தோன்றலாம். கண்ணெதிரில் இருக்கிற ஒரு [4]உண்மை நிலையோடு தொடர்புறும்பொழுது சிந்தனை ஓய்ந்திருக்கத் தேவை இல்லை. சிந்தனைக்காகக் கண்களைமூடித் தியானத்தில் அமர்ந்திருக்கவும் தேவை இல்லை. அல்லது, கைகளைக் கட்டிக்கொண்டு ஓர் இடத்தில் அமைந்திருக்கவும் தேவை இல்லை. எனினும், சில தருணங்களில் கண்களை மூடிக்கொள்வதும் கைகளைக் கட்டிக் கொள்வதுமாகிய புறத் திட்டங்கள் சிந்தனை செய்பவரிடத்தே தோன்றலாம்.

உருப்பாவனைச் சிந்தனை[5] என்பது [6]பிரத்யக்ஷச் சிந்தனையினின்று தோன்றியதென ஒருவாறு கூறலாம். சிம்பன்ஸி என்னும் குரங்கு இருப்புக் கூண்டிற்கு வெளியே கிடந்த தின்பண்டத்தை எடுப்பதற்காக ஒரு கோலை எடுத்துக் கம்பிகளின் இடையே விட்டுப் பண்டத்தைத் தன்னருகில் தள்ளிக் கொண்டுவர முயன்றது. இந்தச் செயலுக்கு அந்தக் கோல் போதிய அளவு நீளமில்லை என்று கண்டபொழுது, இரண்டு கோல்களை ஒன்றோடு ஒன்று சேர்த்து நீளமாக்கிக் கொண்டது. இந்தக் குரங்கு பிரத்யக்ஷச் சிந்தனையை ஓரளவு கையாண்டதோடு கோல்களைப் பற்றியும் பொருள்களின் தூரத்தைப் பற்றியும் ஏற்கெனவே அதன் உள்ளத்தில் பதிவாயிருந்த அனுபவ ஞானத்தையும் பயன்படுத்தியது. கண்ணெதிரில் ஒரு பொருள்; அதைப் பெறவேண்டும் என்ற ஆசை; அதற்கு ஒரு முயற்சி; இவைதாம் விலங்கு-உலகின் சித்தனைப் போக்குக்குத் தூண்டுதலாக இருக்கின்றன. ஆனால், மனிதனோ, கண்ணெதிரே பொருள்கள்

---

1. சிந்தித்தல்—*Thinking.*
2. ஆராய்தல்—*Observing.*
3. வினை ஆற்றல்—*Aactual manipulation.*
4. உண்மை நிலை—*Reality.*
5. உருப்பாவனைச் சிந்தனை—*Perceptual thinking.*
6. பிரத்யக்ஷச் சிந்தனை—*Ideational thinking.*

இல்லாவிடினும் உருப்பாவனையாகச் சிந்தனை செய்யும் ஆற்றலுடையவனாக இருக்கிறான். எனினும், மனிதனுடைய உருப்பாவனைச் சிந்தனைகளுக்கும் அவனுடைய இறந்த கால அனுபவங்கள் ஆதாரமாக அமைந்துள்ளன.

எட்டு வயதான சிறுவன் தன் புத்தகத்தை வைத்த இடத்தில் பார்க்கிறான். அதைக் காணவில்லை. உடனே, அவன் அங்கும் இங்கும் தேடித் திரிந்து வீடு முழுவதையும் தலைகீழாகத் திருப்பிவிடுவானாகில், இது முற்றிலும் வினைநிலை ஆராய்ச்சியாகவே இருக்கும். ஒன்றைப் பெறுவதற்குப் பல முயற்சிகள்; முயற்சி தோறும் தவறுதல், வினைநிலை ஆராய்ச்சிகளின் இலக்கணம் பயன்படாத முயற்சிகளும் தவறுகளுமேயாம். இதற்கு மாறாக, அந்தச் சிறுவன் ஓர் இடத்தில் அமர்ந்து, "என் புத்தகத்தை எங்கே வைத்தேன்? கடைசியாக அதை எங்கே உபயோகித்தேன்?" என்று சிந்தனை செய்கிறான். கடைசி முறையாக அதனை உபயோகித்த இடம் ஞாபகத்திற்கு வருகிறது. உடனே, அந்த இடத்திற்குச் சென்று பார்க்கிறான்; புத்தகம் அகப்படுகிறது. முன்பு [1]வினை நிலை ஆராய்ச்சி செய்த சிறுவன் பின்பு [2]மன நிலை ஆராய்ச்சி செய்து, காரியசித்தி அடைந்தான். வெறும் வினை நிலை ஆராய்ச்சியில் பொழுது வீணாவதோடு முயற்சியும் விரயமாகிறது. மன நிலை ஆராய்ச்சியிலோ, பொழுதும் முயற்சியும் ஆதாயமாகின்றன. மன நிலை ஆராய்ச்சிக்கு ஞாபக முத்திரைகள் துணைக் கருவிகளாக அமைகின்றன.

கண்ணனும் கமலமும் தமது தந்தையோடு நாள் தோறும் உலாவச் செல்வார்கள். செல்லும் வழியில், ஒற்றடிப் பாதை ஒன்று, சிறிது தொலைவில் தெரிந்த சிறு குன்றுக்குச் செல்வதாக அவர்களுக்குத் தோன்றியது. அந்தக் குன்றின் அடியில் பாழடைந்த கோயில் ஒன்று உலாவச் சென்ற சிறுவருடைய பார்வையைக் கவர்ந்தது. சிறுவர் இருவரது உள்ளத்திலும் அக்கோயிலை ஆய்ந்து

1. வினை நிலை ஆராய்ச்சி—*Motor-exploration.*
2. மன நிலை ஆராய்ச்சி—*Mental exploration.*

பார்க்கவேண்டுமென்னும் அவாக் கிளர்ந்தது. ஒருநாள் தந்தையோடு உலாவச் செல்லாமல், இருவரும் தனியே சென்ருர்கள். பாதையிலிருந்து பிரிந்த ஒற்றடித் தடத்தின் வழியே சென்று குன்றை அணுகினர்கள். குன்றின் மீதேறிப் பாழுங்கோயிலே ஆராய்ந்தார்கள். இங்ஙனம் புதிய இடங்களை ஆய்ந்து பார்க்கவேண்டும் என்னும் அவா சிறு குழந்தைகளிடத்தில் இயல்பாக அமைவதாகும். இதனைப் புதுவது ஆய்தல் எனலாம்.

புதுவது தேடல் என்பதும் மனத்தில் மற்ருெரு வகை யான அவாவாக விளங்குகிறது. புதுவது ஆய்த லுக்கும் புதுவது புனைதலுக்கும் நெருங்கிய உறவு உண்டு. ஆய்ந்து பார்க்கும் அவாவுக்கும், ஆட்சி அவாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குக்கிராமத்தில் இருக்கும் சிறுவன் ஆகாய விமானத்தை அருகில் சென்று பார்த் தறியான். அவனுடைய ஊருக்கு அருகில் ஒரு விமானம் இறங்குமாயின், அவன் அதனைச் சுற்றிச் சுற்றி வந்து நெடுநேரம் பார்ப்பான். பார்த்து ஆய்ந்த சிறுவன் அதனைத் தொட்டு ஆய்ந்து அறிய விரும்புவான். மேலும் ஆய்வதற்குத் தடை இல்லாத பொழுது, அதன் பல உறுப் புக்களையும் யந்திர இயக்கிகளையும் தொட்டு அசைக்க முயல் வான். முடிவிலே, ஆகாய விமானத்தை ஆளவேண்டும் என்னும் அவா அவனது உள்ளத்தில் எழும். வீட்டுக்குச் சென்றதும், காகிதங்களாலும் குச்சிகளாலும் சிறு விமா னம் ஒன்றை விளையாட்டுப் பொருளாகச் செய்ய முயல் வான்.

புதுவது ஆய்தல், சிந்தனைப் போக்கு வரலாற்றின் முதலதிகாரமாக அமைகிறது. புதுவது ஆக்குதலோ அவ்வரலாற்றின் பிந்திய அதிகாரமாக அமைவது. புதுவது ஆய்தல் சிந்தனைப் போக்கு வரலாற்றின் முந்திய அதிகாரம் எனில், புதுவது ஆட்சி அவா அவ்வரலாற் றின் பிந்திய அதிகாரமாக அமையும். கெண்டிகையில் நீர் கொதித்துக் கொண்டிருந்த பொழுது, அதன் மூக்கு வழியாக எழுந்து வந்த நீராவியோடு விளையாடிய சிறுவன்

தான் முடிவில் நீராவி யந்திரத்தை உண்டு பண்ணத் தொடங்கினன். பூச்சிகளை ஓயாமல் ஆய்ந்த சிறுவனே முடிவில் உயிர்களின் பரிணமக்கிரம விஞ்ஞானத்தை வகுத்தான். மானிட வரலாற்றில் இது காறும் தோன்றியுள்ள விஞ்ஞான ஆராய்ச்சிகளும், புதிய யந்திர நிர்மாணங்களும், பிறவும், பார்த்தல் கேட்டல் முதலிய உடல் உளப் பொது இயக்கங்களிலிருந்து தொடங்கி மிகவும் சிக்கலான பல்வகை இயக்கங்களை உடைய நவீன விஞ்ஞான ஆராய்ச்சியிலே முடிவுறுகிற எண்ணிறந்த ஆய்வுத் திறங்களின் விளைவுகளேயாம்.

இன்று ஒரு சிறுவன் கட்டைகளை அடுக்கி வைத்து அழகான வீடுகளைக் கட்டுகிறான்; நெருப்புப் பெட்டிகளால் அழகிய பொருள்களைச் செய்கிறான். ஆணிகளாலும் மரத்துண்டுகளாலும் சுற்றியல் முதலிய கருவிகளாலும் பாலம், ஏணி, வண்டி முதலியன செய்கிறான். இங்ஙனம் பல பொருள்களைச் செய்து ஆக்கும் திறமையில் மகிழ்கிற சிறுவனே, முடிவில் உலகம் புகழும் எஞ்சினியராகிறான். சிறுவயதில் தோன்றுகிற ஆயும் அவா, ஆக்கும் அவா, தேடும் அவா முதலியன வெளிப்படுகிற அளவிற்கு ஏற்பக் குழந்தையின் மன வளர்ச்சியும் அமையும்.

தேடும் அவா உள்ளதை உள்ளவாறே அறிய விரும்பும். ஆட்சி அவா உள்ளதின் உண்மை நிலையை மாற்றி அமைக்கவும் திருத்தவும் முயலும். ஆயும் அவா ஆய்ந்ததை அடிப்படையாக்கிப் புதிதாய் ஒன்றை ஆக்க முயலும். இம் மூன்றுமே ஆக்குதலாகப் பரிணமித்து விஞ்ஞானத்தின் அடிப்படையாக அமைகின்றன.

இப்பொழுது ஒரு பிரச்னை எழுகிறது. கற்பனை என்றால் என்ன? உண்மை நிலையிலே புலப்பாடாகக் கண்டவை மனத்தில் உருவுதெளிவு முத்திரைகளாகப் பதிந்து கிடக்கின்றன. புலநிலையில் இராததை மனத்தால் நுகர்ந்து, அதனைப் புதிய முறையிலே உருப்படுத்தி வைக்கிற திறமையே கற்பனைசக்தி எனலாம். பல தருணங்களில் ஆய்ந்த பொருள்களையும், அப்பொருள்களின்

உறுப்புக்களையும் பற்றிய உருத்தெளிவுப் பதிவுகள் மனத்தில் பதிந்திருக்கின்றன. இங்ஙனம் பதிவாகிய பொருள்களின் உறுப்புக்களை, அவற்றிற்கு உரிய பொருள்களிலிருந்து பிரித்து வேறு பொருள்களோடு கூட்டிச் சேர்த்துக் காட்டுவதையே கற்பனை எனலாம். கற்பனைத் திறத்தைச் சில உதாரணங்களால் விளக்கிக் கொள்வோம்.

மணி சர்க்கஸ் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தான். தாய் அன்றிரவு, சர்க்கஸ் மிருகங்களைப் பற்றிப் பல கதைகள் சொன்னாள். மறுநாள் மணியன், "அம்மா, எனக்கு ஒரு குதிரை வேண்டும்; அந்தக் குதிரைக்குத் தும்பிக்கையும் இருக்கவேண்டும்; பறக்கிறதற்குப் பருந்தின் சிறகும் இருக்கவேண்டும்" என்றான். அதற்குத் தாய், "அந்த மாதிரிக் குதிரையை நீதான் தேடிப் பார்க்க வேண்டும்" என்றாள். மணி சர்க்கஸில் குதிரையைப் பார்த்தான்; யானையைப் பார்த்தான்; பெரிய பருந்து ஒன்றை முன் ஒரு நாள் அவன் பார்த்திருந்தான். அவனுடைய மனத்தில் உருத்தெளிவாகப் பதிந்த மூன்று பிராணிகளின் சிறப்பான உறுப்புக்களைப் பிரித்தான். யானையின் தலையை எடுத்துக் குதிரைக்கு அமைத்தான். கழுகின் சிறகை எடுத்துக் குதிரையின் முதுகில் பொருத்தினான். மணியன், கற்பனைத் திறத்தால் புது மிருகம் ஒன்றைத் தன் மனத்தில் படைத்து விட்டான்.

அழகிய பெண்ணின் முகமும், தலையும், மார்பும் பசுவின் உடலும் உடைய உருவைச் சமைத்துக் காமதேனு என்று காட்டுவது கற்பனைத் திறமையாம். சிங்க உருவில் யானையின் தும்பிக்கையைப் பொருத்தி யாளி உருச் சமைத்தல் கற்பனைத் திறமாகும். கற்பனைக் கதைகளிலே இத்தகைய கதா பாத்திரங்கள் பல தோன்றும்.

முன்னரே மனத்தில் பதிவாகி இருக்கிற உருத்தெளிவு முத்திரைகளையே பகுத்தறிவு கையாளுகிறது. எனினும், உருத்தெளிவு - முத்திரைகளைப் பகுத்தறிவும் கற்பனைத் திறமும், ஆட்சி செய்கின்ற முறைகளில் மிகப்

பெரிய வேற்றுமை தோன்றுகிறது. பகுத்தறிவு, பொருள்களைப் பற்றிய கருத்துக்களை அவற்றிற்குரிய உண்மை நிலை உறவிலே பார்க்கும் அவா உடையது. கற்பனைத் திறமோ, பொருள்களைப் பற்றிய கருத்துக்களை அவற்றிற்குரிய உண்மை நிலையினின்று பிரித்து நீக்கிப் புதிய உறவு முறையிலே அமைத்துக் களிக்கும் அவா உடையது.

கற்பனைத் திறத்திற்கும் புதுவது புனையும் திறத்திற்கும் பெரிய வேற்றுமை இல்லை. ஒன்றினை மனநிலையிலே புதிதாய் ஆக்கும் இயல்புடையது கற்பனை. ஒன்றினைக் கட்புலனாகும்படி, செயல் நிலையிலே படைக்கின்ற ஆற்றல் புதுவது புனையும் திறமையாகும். இத்திறமை **புதுவது தேடல்** முதன்மைப் புனைவு என்னும் இரு இயல்புகளோடு இத்திறமை வெளிப்படும்.

சிந்தனைத் தொடர்புகள் தம் விருப்பப்படியே இயங்கும் சுதந்திரம் உடையவை. கற்பனையும் சில தருணங்களில் அவ்வாறே இயங்கும். எனினும் கற்பனைத் திறத்தை அடக்கி ஆளலாம். குறித்த ஒரு விளைவைக் குறிக்கோளாகக் கொள்ளும்பொழுது கற்பனையை அடக்கி ஆளும் தேவை ஏற்படும். விளைவைக் குறிக்கோளாகக் கொள்ளாதபொழுது, கற்பனைத்திறம் காடு மேடெங்கும் கண்மூடித்தனமாய்த் திரியும். ஒருவன் பெரிய கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காகப் படம் எழுதுகிறான். கட்டடத்தில் அமையவேண்டிய அறைகள், ஜன்னல்கள், கதவுகள் முதலிய சிறியனவும் பெரியனவுமான பற்பல உறுப்புக்களையும் கூறுகளையும், அளவு வடிவு கட்டுமானம் தீர்மானம் அனைத்தும் அடங்கலாக மனத்தில் கற்பனை செய்து, படத்திலே குறித்து விடுகிறான். கண்டபடி திரிகிற கற்பனைத் திறம், உடலும் உள்ளமும் நெகிழ்வுற்ற நேரங்களில் தோன்றும். இந்நேரங்களில் ஆட்சியின்றித் திரிகிற கற்பனைப் போக்கைக், கற்பனை விளையாட்டு என்று குறிப்பிடலாம். குழந்தைப் பருவத்தில் தொடங்குவதும், ஆட்சிக்கு அடங்கிய கற்பனைத் திறமைக்கு அடிப்படையாக இருப்பதும் கற்பனை விளையாட்டேயாம்.

கற்பனை விளையாட்டு

புதுவது ஆய்தலும், ஆய்வதை ஆளும் திறமும் ஆகிய இரண்டும் சிறு குழந்தையின் விளையாட்டில் நெருங்கிய உறவுப் போக்கில் செல்வன. குழந்தை புதிய பொம்மையை எடுக்கிறது; திருப்பித் திருப்பிப் பார்க்கிறது; அதன் எல்லாப் பக்கங்களையும் ஆராய்கிறது; அதனைக் குலுக்கிப் பார்க்கிறது; கீழே போட்டுப் பார்க்கிறது. கீழே எறிந்த பொருளினின்று ஓசை எழுந்தால் மகிழ்கிறது; ஆளும் திறமையைக் கையாண்டு புதுப்பொம்மையை ஆய்ந்து அதன் தன்மைகளை அறிய முயல்கிறது.

குழந்தைக் கற்பனைத்திறத்தின் தொடக்கம்

பொருள்களைப் பற்றுதல், திருப்புதல், குலுக்குதல், கீழே எறிதல் ஆகிய பல செயல்களோடு தொடங்குகிற பொருளாட்சித் திறன் பல வளர்ச்சி - நெறிகளில் திரும்புகிறது. பொருளாட்சித் திறமையின் வளர்ச்சி - நெறிகளில் ஒன்று கைத்திறமை எனப்படும். குறிப்பிட்ட [1] குறுஞ்செயல்களின் கலப்பால் அமையும் உடலசைவுத்

1. குறுஞ்செயல் - அருட்டிகளுக்குப் பிரதிச் செயலாக உடலில் எழுகிற பிரதிச் செயல்களில் ஒரு தொகுதி உடல் இயற்கைப் பிரதிச் செயல் எனப்படும். சூழ் நிலைப் பொருள்களிலிருந்து அருட்டியலைகள் ஓயாமல் எழுந்து வந்து மனிதனைச் செயலுக்குத் தூண்டிக்கொண்டே இருக்கின்றன. ஆகையால், அருட்டிகள் வினைத்தூண்டல்களாக அமைகின்றன. வினைக்குத் தூண்டுகிற அருட்டி - அலைகள் எழுதல் ஒன்றே போதாது. ஐம்புலன்களோடு தொடர்புற்றிருக்கும் உணர்ச்சி-இந்திரியங்கள் பல உடலுக்குள் அமைந்துள்ளன. புலனுணர்ச்சி இந்திரியங்கள் அனைத்திலும் காண்கிற உணர்ச்சி-ஆற்றல் மிகப் பெரியது. புலனுணர்ச்சி இந்திரியங்களே கிராஹ்ய - இந்திரியங்கள் எனப்படும். இவ்வகை உணர்ச்சிப் பொறிகள் தத்தமக்குரிய நரம்புகளைச் செயலுக்கு இயக்கிவிடுகின்றன. புலனுணர்ச்சி நரம்புகளோ மூளையை எழுப்பிவிடுகின்றன. இயக்க நரம்புகள் மூளை வழியாகக் கிராஹ்ய - இந்திரியங்களோடு தொடர்புற்று, முடிவிலே காரிய - இந்திரியங்களோடு சேருகின்றன. ஒருவகைப் பிரதிச் செயல்கள் உடலின் வெளிப்புறத்தே புலப்படுவன. இவற்றைப் புறப் பிரதிச் செயல்கள் எனலாம். மற்றொரு வகுப்பு அகப் பிரதிச் செயல்கள் எனப்படும். தேனைக் கண்டதும் நாவில் நீர் சுரக்கிறது. இது உமிழ்நீர்ச் சுரப்பியின் பிரதிச்செயல். கண்ணின் அருகில் கை திடீரென்று அணுகும்

திறவளர்ச்சி மிகக் குறைவேயாம். விளையாட்டில் தோன்றுகிற பல்வகை அசைவுகளால் அமைகிற உடல் அசைவுத் திறத்தின் வளர்ச்சியே அதிகமானது.

ஆட்சித் திறம் செல்கிற ஒரு நெறி கைத்திறமை வளர்ச்சியாகும். மற்றொரு நெறி, யாப்புத்திறமை. பல நிறங்களை உடைய கோலிக் குண்டுகளும், பாசி மணிகளும், மஞ்சாடியும், குன்றிமணியும் கலந்திருந்தால், குழந்தை கோலிகளை வேறாகவும், பாசிமணிகளை வேறாகவும், மஞ்சாடிகளை வேறாகவும், குன்றிமணிகளை வேறாகவும் பிரிக்க முயல்கிறது; கட்டைகளை அடுக்கி வீடும், கோபுரமும், அரணும், பாலமும் கட்டுகிறது. பொம்மைகளை கட்சிகளாகப் பிரித்துவைத்து விளையாடுகிறது. இத்தகைய ஆட்சித் திறமையில் கைவல்லமையைப் பார்க்கிலும் பொருள்களை நிரல்பட வைக்கவும், மாற்றி அமைக்கவும், வைத்தவைகளில் அழகுணரவும், கற்பிக்கிற யாப்புத் திறமையே அதிகமாகப் புலப்படும்.

ஆட்சித் திறமையின் மூன்றாவது நெறியாக இருப்பது நம்பச் செய்யும் வன்மையாகும். சிறுவர்கள் கட்டைகளை வரிசையாக வைத்து, இது இரயில்வண்டி என்று கூறி மற்றவர்களும் அவ்வாறே நம்பவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். கயிற்றை எடுத்து நம்மீது எறிந்து 'பாம்பு! பாம்பு!' என்று கூறி, நாம் அஞ்சவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். செல்வர் வீட்டில் பணிப்பெண்ணாக இருந்த ஒருத்தியின் மகள் கண்ணம்மா. இவளுக்கு மூன்று

பொழுது விழியைக் காப்பதற்காக இமை அசைகிறது. இது, இமையை அசைக்கும் நரம்புகளின் இயக்கத்தால், புலப்பாடு பெறுமாறு எழுகிற பிரதிச் செயலாகும். அகச்சுரப்பிகளின் பிரதிச்செயல்களும் தசைகளின் பிரதிச் செயல்களும் உடலின் இயற்கைத் தன்மைப்படி அகத்தும் புறத்தும் தானாகவே நிகழ்கிற செயல்களும் குறுஞ்செயல்கள் எனப்படும். ஓர் உயிர்நிலைக்குத் தெரியாமலே இக்குறுஞ்செயல்கள் நிகழ்வன. புலப்பாடு பெறுகிற பிரதிச் செயல்களுக்குத் தேவையான கால அளவிற்கும் மிகக் குறைவான காலத்திலே குறுஞ்செயல்கள் நிகழ்வனவாம்.

வயதாகவில்லை. இக்குழந்தை, யஜமானனது குழந்தைகள் மேலே நாட்டுப் பொம்மைகளை வைத்து விளையாடுவதைப் பார்த்தவுடன், அவ்வாறே விளையாடவேண்டும் என விரும்பியது. உடனே ஒரு நாட்டோட்டை எடுத்து அதனைப் பொம்மையாக நம்பித் தாலாட்டிச் சீராட்டி விளையாடத் தொடங்கியது. கந்தைத் துணிகளினால் அதை மூடியது. தாய் அருகில் வந்தபோது, "என் குழந்தைக்குக் காய்ச்சல்! மருந்து வாங்க வைத்தியரிடம் போகிறேன்" என்றது. குமுதம் மூன்று வயதுச் சிறுமி; பொம்மையின் காலில் சிவப்புக் குங்குமத்தைத் தடவினாள்; "அம்மா, என் பொம்மையை நாய் கடித்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே தாயிடம் சென்றாள். தன் பொம் மையைத் தாயிடம் காட்டினாள். இத்தகைய நம்பச் செய்யும் வன்மையில், யாப்புத் திறமையோடு, பொருள் களை அவற்றிற்குரிய இலக்கணப்படி கருத்தமைக்கும் திறமையும் புலப்படுகிறது.

குழந்தை மேலும் வளர்ச்சி அடையும் பொழுது, ஆட் சித்திறமையின் நான்காவது நெறியிலே முன்னேற்றம் அடைகிறது. கதைகட்டிச் சொல்லும் திறமையே நான்கா வது நெறியாகும். கண்ணெதிரே இருக்கும் பொருளைச் சார்ந்து யாப்புத்திறமை அமைகிறது. நம்பச்செய்யும் வன் மையோ கண்ணெதிரே இருக்கும் பொருள்களுக்குரிய இலக் கணப் படிக் கருத்துத் தொடர்பாகத் தோன்றுகிறது. கதை கட்டிச் சொல்லும் வன்மையோ, பல ஆட்களையும் பொருள்களையும் தழுவி நிற்கும். குழந்தை இந்த வன்மை யால், கதாபாத்திரங்களைத் தன் மனம் போனவா றெல்லாம் ஆட்டிவைக்கிறது. தெருவிலே விளையாடிக் கொண்டிருந்தகுப்பன், வீட்டுக்குள் ஓடிச்சென்று, "அம்மா தெருவிலே பெரிய ஒட்டகம் ஒன்று என்னைக் கடிக்க வந்தது. நான் தடியால் அதை ஓட்டினேன்; அது ஓடமாட் டேன் என்று அங்கேயே நிற்கிறது" என்றான். முந்தின நாள் மிருகக்காட்சி சாலையில் பார்த்த ஒட்டகத்தைப் பற் றிக் குப்பன் ஒரு கதை கட்டிவிட்டான். அந்த ஒட்டகத் தைத் தன் விருப்பப்படி இயங்கவும் செய்து விட்டான்.

பாழ் அடைந்த மனையில் காமாட்சியும் வேணுவும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அந்த மனையின் ஒரு மூலையில் சிறிது ஆழமான கிடங்கு ஒன்று இருந்தது. அதன் அடியில் குறுஞ் செடிகள் சில வளர்ந்திருந்தன. வேணு அந்தப் பள்ளத்தில் இறங்கினான். அங்கிருந்து சில செடிகளை வேரோடு பறித்தான். மண்ணில் ஒரு மண்ணுண்ணிப் புழு தோன்றியது. "பாம்பு! பாம்பு! என்று கத்திக் கொண்டே கரையில் ஏறினான். இருவரும் வீட்டைப் பார்த்து ஓடினார்கள். காமாட்சி தன் தாயைப் பார்த்து, "அம்மா, வேணு இன்றைக்கு என்ன செய்தான் தெரியுமா? அந்த மனையிலே பெரிய கிணறு ஒன்றிலே இறங்கினான். அதிலே பெரிய காடு இருந்தது. அந்தக் காட்டுக்குள் புகுந்தான். மரங்களை எல்லாம் வேரோடு பறித்தான். ஒரு பாம்பு சீறிக்கொண்டு வந்தது. உடனே அடித்துக் கொல்லத் தடியைத் தேடினான். எங்குமே தடி கிடைக்கவில்லை. நான் உடனே ஒரு கயிற்றை எடுத்துக் கிணற்றிற்குள் விட்டேன். அதைப் பிடித்துக்கொண்டு ஏறி வந்தான். நாங்கள் இரண்டு பேரும் ஒரே ஓட்டமாக ஓடி வந்துவிட்டோம்," என்று கதை கட்டிச் சொன்னாள். காமாட்சி சின்னஞ் சிறு புளுகி. புளுகி என்று சொல்லாமல், சற்றே உதாரமாகக் குறிப்பிடுவதனால், உள்ளதை உள்ளபடியே சொல்வதற்கும் கற்பனைத் திறத்தோடு பேசுவதற்கும் உள்ள வேற்றுமை தெரியாதவள் எனல் பொருந்துவதாகும். சமூகத்தார் குற்றமென்று கருதாத நம்பச் செய்யும் வன்மைக்கும் கதைகட்டிச் சொல்லும் வன்மைக்கும் உள்ள வேற்றுமை என்ன என்று காமாட்சிக்குத் தெரியவில்லை. பிந்திய வன்மை பிறரைத் தவறாக வழி நடத்தும் என்பதனை அவள் அறியாள்.

இங்ஙனம் குழந்தைகள் மனத்தின் ஆட்சித் திறமையை, அதாவது கற்பனைத் திறமையைப் புலப்படுத்துகின்றன. கதை கட்டும் வன்மையில் குழந்தை கதாபாத்திரங்களைச் சிந்தனை நிலையிலே ஆட்சி செய்கிறது. நம்பச் செய்யும் வன்மையிலோ எனில், கண்ணெதிரே இருக்கும் பொருள்களை இயக்குவதோடு அவற்றிற்குரிய

இலக்கணங்களுக்கு இசைந்தபடி கருத்துப் புணர்ப்பையும் அமைக்கிறது. யாப்பு வன்மையிலோ எனில், இயக்க உறுப்புகள்வாயிலாகச் செயல் தோன்றுமுன், மனத்திலே பொருள்களை அமைக்க வேண்டிய மனப்படம் ஒன்று உருவாகிறது. இக்காரணங்களால், குழந்தைகளின் விளையாட்டில் கற்பனை ஓரளவு இடம் பெறுகிறது.

குழந்தையின் விளையாட்டுப் பொருள்கள்

குழந்தையின் விளையாட்டுச் சாமான்கள் என்றால் என்ன? குழந்தையின் விளையாட்டுச் சாமான்களுக்கு அமைய வேண்டிய இலக்கணங்கள் எவை? விளையாட்டு மனப்பான்மையைக் குழந்தையின் உள்ளத்தில் எழுப்ப வல்ல விளையாட்டுச் சாமான்கள் எவை? உள நூல் வல்லாரது ஆராய்ச்சிப்படிக் குழந்தைகளுக்கு ஏற்ற விளையாட்டுச் சாமான்களின் அட்டவணை ஒன்றைத் தயாரித்து அவை பயனாகும் முறையிலே பாகுபாடு செய்து காட்டலாம்.

1. அசைத்து இயக்குவதற்குப் பொருத்தமான பொருள்கள்

திறந்து மூடுவதற்கு ஏற்ற பொருள்கள்: புத்தகம், பெட்டி, கதவோடு கூடிய ஜன்னல், மேசையின் டிராயர், அடைத்துத் திறக்கக்கூடிய நீர்க்குழாய், கதவுகள், பல வகையான சாமான்களைப்போட்டு எடுப்பதற்குப் பொருத்தமான பைகள், குழந்தை எளிதில் எடுப்பதற்கும் திறப்பதற்கும் ஏற்ற சிறிதும் பெரிதுமான பெட்டிகள் முதலிய பல பொருள்கள் இத்தலைப்பில் அடங்கும்.

2. ஆக்குதற்கு அமைந்த பொருள்கள்

ஈரமணல், ஈரக் களிமண், கிழிப்பதற்கு ஏற்ற காகிதங்கள், வளைப்பதற்கு ஏற்ற கம்பிகள், கடைசல் வேலைப்பாடுடைய தூண்கள், உத்தரங்கள், வர்ணம் தீட்டிச் செங்கற்கள் வடிவில் அமைந்த மரத்துண்டுகள் நிறைந்த மரக்கட்டைப் பெட்டி, படங்களின் கூறுகளை பக்கந்தோறும் கொண்ட கன சதுரக் கட்டைகள், ஊற்றி விளையாடுவதற்கு நீர் என்றிப்படியே பல பொருள்கள் இந்தத் தலைப்பில் அடங்கும்.

3. ஒலி எழுப்பிகள்

பலவகை ஊதல்கள், விளையாட்டு வாத்தியக் கருவிகள், பித்தளைத் தாம்பாளங்கள், கிண்ணங்கள், கரண்டிகள், தட்டி ஒலி செய்வதற்கு அமைந்த கழிகள், பலவகைக் கொட்டு மேளங்கள் முதலியன இந்தத் தலைப்பில் அடங்கும்.

4. ஊர்திகள்

சிறுவண்டிகள், சிறு தேர்கள், முச்சக்கரவண்டிகள், உந்து வண்டிகள், சறுக்கு வண்டிகள், தாவிக் குதித்தாடுவதற்குப் பயன்படும் கயிறுகள் முதலியன இந்தத் தலைப்பின்கண் அடங்கும்.

5. இடைவெளி நீக்கிகள்

தொலைவிலிருந்தபடியே குழந்தை பிறபொருள்களோடும் ஆட்களோடும் உறவாடி வினையாற்றுவதற்குப் பொருத்தமான பொருள்கள் அனைத்தும் இப்பகுதியில் அடங்கும். எறிந்து விளையாடுவதற்கு ஏற்ற பந்துகள், எழும்பி வரும் ரப்பர்ப் பந்துகள், வில்லும் அம்பும், கவண், உண்டிவில், மின்சாரக் கைவிளக்கு, சிறிது தொலைவில் இருக்கும் ஒருவனது முகத்தில் சூரியனுடைய ஒளியைப் பிரதிபலித்துக் காட்டுவதற்கு உபயோகமாகும் கண்ணாடிகள் முதலியன இத்தலைப்பில் அடங்கும்.

6. பூமியின் ஆகர்ஷண சக்தியை எதிர்க்கும் பொருள்கள்

பலவகை மிதப்பங்கள், நடுநிலை காக்கும் பொருள்கள், ஊஞ்சல்கள், காற்றாடிகள், பலூன்கள், பம்பரம், உருட்டிக்கொண்டு ஓடுவதற்கு ஏற்ற இருப்பு வளையங்கள், இருப்புப் பட்டைகள், பழைய சைக்கில் சக்கரங்கள், ஏற்றி யிறக்கிகள் முதலியன இத்தலைப்பில் அடங்கும்.

7. பெரியவரது தொழிற்போலி விளையாட்டுப் பொருள்கள்

சமையல் முதலிய வீட்டு அலுவல்களைத் தாயைப் போல் செய்து விளையாடுவதற்குத் தேவையான பொருள்கள்: துடைப்பம், அடுப்பு, சட்டி பானைகள்,

அம்மி, குழவி, அரைகல், திரிகல் முதலியன; தச்சர் கருமார்களைப்போல் தொழில் செய்வதற்குத் தேவையான பொருள்கள்: உளி, சுற்றியல், இரம்பம், ஆணிகள் முதலியன; தையல்காரர் செய்யும் தொழிலுக்குத் தேவை யான கத்தரிக்கோல், ஊசி, நூல் முதலியன; தோட்ட வேலைக்காரரைப்போல் செய்வதற்குத் தேவையான மண் வெட்டி, கத்தி, பூந்தொட்டி, நீரூற்றி முதலியன; பொம்மை மிருகங்கள், பொம்மைக் குழந்தைகள், தொட்டில், பால் புட்டி, உந்து வண்டி, விளையாட்டு வீடு முதலியன; பல நாட்டு மக்களைப் போன்ற பொம்மைகள், பல தொழில்கள் செய்பவரைப் போன்ற பொம்மைகள், இயந்திரப் பொம்மைகள், தலை ஆட்டி வாலாட்டிப் பொம் மைகள் முதலியன.

விளையாட்டில் பிரதிச் செயல்கள்

சுவை எழ விளையாட்டுச் சாமான்களைக் கையாண்டு ஆட்சித் திறமையை வெளிப்படுத்துவதே விளையாட்டு. ஒவ்வொரு விளையாட்டுக்கும் தனித்தனிப் பிரதிச் செயல் விளைவுண்டு. இருப்பு வளையத்தை உருட்டிக்கொண்டு ஓடுகிற சிறுவனுடைய உள்ளத்தில் பொருள்களின் சுழற்சி வேகம், யந்திரங்களின் சக்கர இயக்கம் முதலியவற்றை அறியும் அவா பிரதிச்செயலாக எழும். இந்த அவா ஒரு சிறுவனை யந்திர இயக்க அறிவுக்கு நடத்தலாம். காற் றாடியைப் பறக்கவிட்டு விளையாடுதல், காற்றினைச் சமா ளித்தற்கும் காற்றின் இயல்புகளை அறிதற்கும் காரண மாகும். அம்பு எய்தல், உண்டிவில் அடித்தல் முதலியன இடைவெளியை மேற்கொள்ளவும் குறிதவறாத மன இயல்பு பெறவும் உதவலாம். கோபுரம் கட்டி அதனைத் தட்டிக் குலைத்துத் திரும்பவும் அதே கட்டைகளால் வேறொரு கட்டடத்தை ஆக்கி விளையாடுதல் யாப்புத் திறமையை வளர்த்து பெரிய எஞ்சினியராக வேண்டுமென்ற ஆசையை எழுப்பலாம். நமது நாட்டு விளையாட்டுக் களாகிய கண்ணும்பொத்தி, குருட்டுக் கண்ணும்பொத்தி, இராஜா மந்திரி தலையாரி விளையாட்டு, தட்டாமாலை

அல்லது மாவெளி சுற்றல், நான்கு மூலை ஆட்டம் பல்லாங்குழி, கோலாட்டம் முதலிய பலவும் தனித்தனிப் பிரதிச் செயல்களையும் தனித்தனி விளைவுகளையும் கொண்டுள்ளன. குழந்தையின் விளையாட்டில் கற்பனைத் திறமும் கைவல்லமையும் ஆட்சித்திறமும் பிறவும் வளர்ச்சி அடைகின்றன.

விளையாட்டின் அடிப்படை நோக்கு

எல்லா நோக்கங்களும் அடங்கிய விளையாட்டுணர்ச்சியைச் சுட்டிக் காட்டுதல் எளிதன்று. ஒவ்வொரு விளையாட்டிலும் ஒன்றிற்குமேற்பட்ட உணர்ச்சிகளுக்கு இடம் உண்டு. சில விளையாட்டுக்களில் விளைகிற உணர்ச்சிகள் ஏற்றமாகவும், வேறு சில விளையாட்டுக்களில் எழுகிற உணர்ச்சிகள் குறைவாகவும் இருக்கும். விளையாட்டுணர்ச்சிகள் குழந்தையின் உள்ளத்தில் திருப்தியை அளிப்பனவாம். போலிச்சண்டை விளையாட்டு, போரிலும், போராடி வெற்றி பெறுவதிலும் ஒருவன் அடையக்கூடிய உணர்ச்சியையும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

சில சிறுவர்கள் செடிகளும் புதர்களும் நிறைந்த ஒரு தோட்டத்தில் ஒளிந்து ஓடி விளையாடினார்கள். சாட்சியாக இருந்தவன் ஒரு பையனுடைய கண்ணை இறுகப் பொத்தினன். விளையாட்டில் கலந்து கொண்டவர்கள் பல இடங்களுக்கு ஓடி ஒளிந்து கொண்டார்கள். ஒரு சிறுவன் ஒரு பள்ளத்தில் இறங்கி அங்கே அடர்த்தியாக வளர்ந்திருந்த செடிகளுக்குள்ளே புகுந்து கொண்டான். வேறொரு சிறுவன் வெகு பரபரப்போடு மரத்தின்மீதேறி ஒரு கிளையில் மறைந்து கொண்டான். ஒரு பெண் வைக்கோல் போருக்குள் புகுந்து கொண்டாள். இவ்வாறே அவரவர் தத்தம் கற்பனைத்திறம் போனவாறெல்லாம் ஒளிந்து கொண்டார்கள். வைக்கோல் புதருக்குள்ளே பாம்பு இருந்ததை அச்சிறுமி முன்பொரு தருணம் பார்த்திருந்தும், இப்பொழுது அந்த அச்சத்தை மேற்கொண்டு அதற்குள் புகுந்து ஒளிந்திருந்தாள். பள்ளத்தில் இறங்கி

ஒளிந்துகொண்ட சிறுவன் முன்பொரு தருணம் ஒரு கிடங்கில் பல பூச்சிகளைப் பார்த்திருந்தும், இப்பொழுது பூச்சிகளுக்கு அஞ்சாமல் ஒளிந்து கொண்டான். தேட வருகிறவன் கைக்கு அகப்படாமல் தப்ப வேண்டும் என்பதே ஒளிந்து கொண்டவர்களின் நோக்கம். இந்த நோக்கத்தை எவ்வாறாயினும் அடையவேண்டும். இதற்காகச் சிறுவர்கள் தமக்கு இயல்பாக இருந்த அச்சத்தையும் மேற்கொண்டார்கள். இந்த விளையாட்டிலும் இதைப் போன்ற அச்சம் மிகுந்த விளையாட்டுக்களிலும் மனக்கிளர்ச்சியைத் தரும் ஸாகசச் செயல்களும், இடையூறுகளை மேற்கொள்கிற ஆற்றல்களும் அளவில்லாத மகிழ்ச்சியும் தோன்றும். எந்த விளையாட்டாயினும், அதன்கண் ஓரளவு கற்பனைத்திறம் அமைந்திருக்கும். விளையாட்டுக்களை ஒவ்வொன்றாய் எடுத்துக் கொண்டு, அவற்றில் அடங்கியிருக்கும் கற்பனைப் பகுதியை மதிப்பிட்டுப் பாருங்கள்.

ஒளிந்து ஓடித் தேடிப் பிடிக்கிற விளையாட்டைப் பற்றிச் சற்று விரிவாகச் சிந்தித்துப் பார்ப்போம். இந்த விளையாட்டுத் தொகுதியில் 'அச்சம்' என்பது தலைமை பெற்றிருக்கும். ஆதலால், சிலர் அச்சத்தை உண்டு பண்ணும் விளையாட்டைக் குழந்தைகள் விரும்புவார்களா என்று கேட்கலாம். விளையாட்டில் அச்சச் சுவைக்கு இடம் தரக்கூடாது என்று வேறு சிலர் மறுக்கலாம். பலவகையான இராட்டுகளில் ஏறிச் சுற்றி விளையாடுவதில் 'அச்சம்' விளைகிறதே? இதைக் குழந்தைகள் விரும்பவில்லையா? 'கிரிக்கெட்'[1] கால்பந்து[2] 'ஹாக்கி'[3] முதலிய விளையாட்டுக்களில் விழுவதும், காயம் படுவதும் இயல்பன்றோ? இக்காரணத்தால் சிறுவர்கள் இந்த விளையாட்டுக்களைப் பழகலாகாதென்று கூறலாமா? அபாய நிலையை எதிர்பார்ப்பதில் ஒரு மனக்கிளர்ச்சி தோன்றுகிறது. விளையாட்டுகளில் உண்மையாக ஏற்படும் அபாயங்களைப் பார்க்

1. *cricket.*
2. *foot-ball.*
3. *hockey.*

கிலும் போலி அபாயங்களே மிகுதி. அபாயங்களுக்குத் தப்புவதில் தனி மகிழ்ச்சி எழுகிறது. கம்பிகள், தூண்கள், மரக்கிளைகளைப் பற்றிக்கொண்டு மேலேறுதல், நீந்துதல் முதலிய விளையாட்டுக்களிலும், ஸாகஸச் செயல்கள் நிரம்பிய விளையாட்டுக்களிலும், அச்சத்தைப் பயன்படுத்தி மகிழ்ச்சியைத் தேடுதல் சிறந்த பகுதியாக அமைகிறது. விளையாட்டில் தேர்ந்தவன் தவறுதலினால் விழ நேர்ந்தால், தன் திறமையினாலேயே வீழ்ச்சியைத் தவிர்க்கிறான். இங்ஙனம் வீழ்ச்சியைத் தவிர்க்கிற ஆற்றலிலும் தனி மகிழ்ச்சி உண்டு. விளையாட்டில் விழுவதே மனக் கிளர்ச்சியைத் தருவது. ஆகையால் சிறுவர்கள் அச்சத்தைப் பயன்படுத்தி விளையாடுதல் தவறு என்பது பொருந்தாது. வீரத்திற்கும், வெற்றிக்கும் தனிச் சிறப்பு அளிக்கிறவர்கள் அச்சத்திற்கும் தனிச் சிறப்பு அளிக்க வேண்டும். அச்சமும் அபாயமும் விளைக்கிற விளையாட்டுக்களில், அவற்றிற்கு ஆளாகாமல் தப்பி விலகுவதனால் விளைகிற மகிழ்ச்சியும் மனக்கிளர்ச்சியும் பெருகியிருக்கின்றன.

இயற்கை உணர்ச்சிகள் அனைத்திலும் தலையாக விளங்குவது, இனத்தவருள் [1]'முந்தி இருத்தல்' என்னும் உணர்ச்சியே. பலவகையான விளையாட்டுக்களிலும் பந்தய விளையாட்டுக்களிலும் '**போட்டி போடுதல்**'[2] பெருவாரியாகப் பயன்படுகிறது. விளையாட்டில் கலந்துகொள்கிறவர்கள் தனித்தனியாகவேனும், கட்சி பிரிந்தாயினும் போட்டி இடுவார்கள். பந்தய விளையாட்டுக்களிலும், போட்டி இடுகிற விளையாட்டுக்களிலும் ஆட்டத்தில் வெற்றி பெறுவதைப் பார்க்கிலும் மகிழ்ச்சியைத் தருவது மற்றொன்றில்லை. எனினும், ஆட்டத்தில் வெற்றி ஒன்றே விரும்பத் தகுந்தது என்று கருதுதல் பொருந்தாது. தோல்வியே நேர்ந்தாலும், விளையாட்டு, மகிழ்ச்சிக்கென்றே தலைசிறந்தது; வெற்றியோ தோல்வியோ எதுவாயினும் விரும்பத்தக்கதேயாம். வெற்றிபெறுவிட்டா

1. *mastery.*
2. *competition.*

லும், இயன்ற வரை நன்றாய்ச் செய்தலே சாலச் சிறந்தது என்று கருதுவதும், முந்தியிருத்தல் என்ற இயற்கை உணர்ச்சியின் மற்றொரு மனப்போக்காகும். இதுவும் போதிய திருப்தியைத்தருவது; மகிழ்ச்சியை விளைப்பது மாகும்.

கிரிக்கட்டு முதலிய எறிபந்தாட்டங்களிலும், சைக்கில் ஓட்டப்பந்தயம் முதலிய ஆட்டங்களிலும், இடைவெளி நீக்குவதாலும் விரைந்து இயங்குவதாலும் விளைகிற மகிழ்ச்சி தோன்றுகிறது. இந்த விளையாட்டுக்கள், முந்தி இருத்தல் என்னும் இயற்கை உணர்ச்சியைத் திருப்தி செய்கின்றன. பிறரைப் போல் நடித்தல் என்ற தலைப்பில் அடங்கிய விளையாட்டுக்களும் முந்தி இருத்தல் என்ற இயற்கை உணர்ச்சியைப் பெரிதும் திருப்தி செய்கின்றன. இந்த விளையாட்டுக்களில் சிறுவர்கள் பெரியவர்களுடைய எடுப்பான செயல்களை நடித்துக்காட்டுவார்கள். தந்தையின் பெரிய உடைகளை அணிந்து, தந்தையின் தலைப்பாகையை மாட்டிக்கொண்டு, தந்தையைப்போல் நடித்துக் காட்டி மகிழ்வது ஆண் குழந்தைகளுக்கு வெகு இயல்பானது. பெண் குழந்தைகள் தாயைப் போல் நடித்துக் காட்டுவார்கள். தந்தையைப்போல் நடிக்கிற சிறுவன் சுருட்டுப் பிடித்துத் தன் நடிப்பைச் சிறப்பிக்க முயல்வான். இங்ஙனம் நடிக்கிற குழந்தைகள் பெற்றோரைப் போன்றாயினும் தங்களுக்கு நன்றாய்த் தெரிந்தவர்களைப் போன்றாயினும் உடை அணிந்து நடித்துக் காட்டும்பொழுது, நடிப்புக்குத் தெரிந்துகொண்டவரைப் போலவே கை அசைத்து, தலைசாய்த்து, உடற்கூறு இலக்கணங்களைத் தோற்றுவிப்பார்கள். இவ்வாறெல்லாம் நடித்துக் காட்டுகிற சிறுவனுடைய உள்ளத்தில் சிறப்புணர்ச்சி பெருகி இருக்கும். இவ்வுணர்ச்சி தனி இன்பத்தைத் தருகிறது.

இரண்டறு மனநிலை நுகர்ச்சி[1]

அனுதாபம் என்னும் சொல்லின் பொருள் என்ன? தாபம் என்னும்சொல், துன்பம், துயரம் என்றபொருளைத்

1. இரண்டறு மனநிலை நுகர்ச்சி—*empathy*.

தரும். அநுதாபம் என்பது பிறனொருவனோடு உடந்தையாகத் துயரத்தையாவது துக்கத்தையாவது நுகர்தலை உணர்த்துகிறது. மிகவும் இன்பமாகவும், சுகமாகவும் வாழ்கிற ஒருவனை நோக்கி, "நண்பா, நான் உன் இன்பத்திற்காக மிகவும் அனுதாபப்படுகிறேன்" என்று பிறனொருவன் கூறுவானாயின், இக்கூற்றில் தொனிக்கிற பொருளையும் அதனால் விளையும் நகைச் சுவையையும் சிந்தித்துப்பாருங்கள். நாம் பிறரோடு இன்பத்திலும் துன்பத்திலும் கோபத்திலும் வீரத்திலும் உடந்தையாக அனுபவிக்கிற மனநிலையை எந்த மொழியால் சுட்டுவது? இதற்கு, **உடனுறு நுகர்ச்சி நிலை**[1] என்ற சொற்றொடரை வழங்கலாம். அழுகிறவரோடு சேர்ந்து அழுவதும், சிரிப்பவரோடு சேர்ந்து சிரிப்பதும், வெகுண்டு எழுபவரோடு சேர்ந்து வெகுண்டு எழுவதும், மனத்தின் உடனுறு நுகர்ச்சி நிலையாகும். இந்த இயல்பு மனத்திற்கே உரியதன்று. உடலின் உறுப்புக்களிலும் உடனுறு நுகர்ச்சி இயக்கங்களும் வேதனைகளும் தோன்றுகின்றன. கையில் உள்ள சிறு விரல் ஒன்றனையே மடக்கிப் பாருங்கள். அதனை மடக்கும் பொழுது அதற்கு அடுத்திருக்கும் மோதிர விரலும் அசையும். ஒரு கண்ணில்காயம் பட்டால் மறு கண்ணும் கலங்குகிறது. உடலின் ஒரு பாகத்தில் வேதனை தோன்றினால், மற்றேனைய பாகங்களும் துன்புறுகின்றன. இவை யாவும் உடலின் உடனுறு நுகர்ச்சிகளாகும். இதனை ஆங்கில உள நூலின்கண் **ஸிம்பதி** என்பார்கள்.

உடனுறு நுகர்ச்சிக்கு முற்றிலும் வேற்றுமையான நுகர்ச்சி நிலை ஒன்று உண்டு. அதனையும் அறிந்துகொள்வோம். வானத்தில் விமானமோ காற்றாடியோ பெரிய பருந்தோ வாயுக்கூண்டோ பறந்தால் பார்க்க விரும்புகிறோம். நாம் வானத்தில் பறக்கிறவைகளைப் பார்க்கக் காரணம் என்ன ?

நாம் பூமியின் ஆகர்ஷண சக்தியால் இந்நிலவுலகத்தோடு கட்டுண்டு கிடக்கிறோம். இந்தச் சக்தியை மேற்கொண்டு

1. உடனுறு நுகர்ச்சி நிலை—*sympathetic state*.

மேலே எழும் ஆற்றல் நமக்கு இயல்பாக அமையவில்லை. நாம் இந்நில வுலகத்தோடு கட்டுண்டு கிடக்கிற இயல்பைப் பெற்றிருந்தாலும், கட்டுக்களை அறுத்தெறிந்து மேலெழ விரும்புகிறோம். இந்த அவா ஆன்மாவுக்கு உரியது; மனத்திற்கும் உரியது. விடுதலை அடைதலையே முக்தி - இன்பமாக நாம் கருதுகிறோம். மேலே பறப்பது எதுவாயினும் அது, பூமியின் ஆகர்ஷண சக்தியை எதிர்த்துக்கொண்டு செல்லுகிறது. ஆகையால், நமது மனம் அதனோடு இரண்டறக் கலந்து தனக்கு எளிதிற் கிட்டாத விடுதலை இன்பத்தை அனுபவிக்கிறது. மனம் நுகர்கிற இந்த நுகர்ச்சி நிலையை **இரண்டறு மனநிலை நுகர்ச்சி** என்ற சொற்றொடரால் உணர்த்தலாம். இதனை ஆங்கில உளநூல் வல்லார் **எம்பதி** என்பார்கள். உடனுறு நுகர்ச்சி பெரிதளவிலே புறப் புலப்பாடாகத் தோன்றுவது. இரண்டறு மனநிலை நுகர்ச்சியோவெனில், அகத்தும் புறத்தும் ஒரே அளவில் தோன்றுவது.

உடனுறு நுகர்ச்சியைப் பிரத்யக்ஷப் பிரமாணத்தால் நிலைநாட்ட முடியும். ஆனால், இரண்டறு மனநிலை நுகர்ச்சியையோ அனுமானப் பிரமாணங்களினாலேதான் நிலைநாட்டமுடியும். சர்க்கஸ் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சிறு பெண் ஒருத்தி நீண்ட கழையில் நின்று மிகவும் ஸாகசமான செயல்களைச் செய்துகாட்டுகிறாள். பார்த்துக் கொண்டிருக்கும் நமது கண் அசையவில்லை. நாமும் அதனையே ததாகாரமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த ஸாகஸச் செயலின் கர்த்தாவாக நம்மை நாமே பாவனை செய்துகொள்கிறோம். ஒருவன் ஊஞ்சலில் தலை கீழாகத் தொங்கிய வண்ணமே ஆடுகிறான். எதிர் ஊஞ்சலில் கட்டழகி ஒருத்தியும் தலைகீழாக ஆடுகிறாள். இருஊஞ்சல்களும் ஆடுகிற நிலைகளுக்கு மத்தியில் ஒருவரை ஒருவர் எட்டமுடியாத இடைவெளி இருக்கிறது. ஊஞ்சலில் ஆடுகிற பெண் இந்த இடைவெளியினூடு பாய்ந்து எதிர் ஊஞ்சலில் தொங்குகிறவனுடைய கைகளை நோக்கிப் பாய்கிறாள். மின்னல் வேகத்திலே அந்த இடைவெளியைக் கடந்து வருகிறாள். ஊஞ்சலில் தலை கீழாகத்

தொங்குகிறவன் அப்பெண்ணின் கையைப் பற்றிக் கொள்கிறான். இக்காட்சியைப் பார்க்கிற நாம் இந்த ஸாகஸச் செயல் செய்கிறவரோடு இரண்டறக் கலந்து அனுபவிக்கிறோம். நாமே இந்தச் செயல்களின் கர்த்தாக்களாக நிற்கிறோம். மிகவும் உயரத்தில் இருக்கும் ஒரு வேலியை அல்லது ஒரு மதிலைத் தாண்டுவதற்காக ஒருவன் நீண்ட கழியோடு ஓடிவருகிறான். இவன் அந்தக் கழியை நிலத்தில் ஊன்றி மேலே எழுகிறான். கையில் இருந்த கழியை இப்பால் எறிந்து விட்டு மேலே இருக்கும் வேலியைத் தாண்டி அப்பால் குதிக்கிறான். இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறவர்களுடைய உடல்களைக் கவனித்துப் பாருங்கள். தாவிக்குதிக்கிறவனுடைய உடல் நெளிவுகளுக்கு ஏற்றவாறு பார்க்கிறவர்களிடம் உடல் அசைவுகள் தோன்றுகின்றன. ஏன்? பார்க்கிறவர்கள் யாவரும் தாவுகிறவனோடு இரண்டறக் கலந்துவிடுகிறார்கள். நாம் கால்பந்து விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கிற பந்தினை, விளையாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒருவன் உதைக்கும்பொழுது, நமது காலும் உதைக்கிறது. நமது பக்கத்திலாயினும் எதிரிலாயினும் நிற்பவரை அறியாமலே உதைத்துவிடுவோம். ஏன்? விளையாட்டில் கலந்து கொண்டவர்களோடு நாம் இரண்டறக்கலந்து நிற்பதனாலே தான். விளையாடுகிறவன் செய்வதைப் பார்த்து நாம் செய்யவில்லை; விளையாடுகிறவன் செய்வதற்கு முந்தியே நமது கால் உதைத்துவிடுகிறது. விளையாடுகிறவன் என்ன செய்யப்போகிறான் என்பதை நாம் முன்னரே எதிர்பார்த்து அவன் செய்யப்போவதாக நமக்குள் தோன்றுவதையே செய்கிறோம். இங்ஙனம் விளையாட்டில் இரண்டறக் கலக்கின்ற உணர்ச்சிநிலை தோன்றுகிறது. விளையாட்டைப் பார்த்துக்கொண்டு நிற்பவன் தன் கற்பனை வன்மையைப் பெரிதும் கையாளுகிறான். இரண்டறுமன நிலை நுகர்ச்சி 'முந்தியிருத்தல்' என்னும் இயற்கை உணர்ச்சியைப் பெரிதும் திருப்திசெய்கிறது. இந்தத் திருப்தி விளையாட்டில் அதிகமாகத் தோன்றுவதாகும்.

நிமித்த காரணச் செயல்களும் விளையாட்டும்

ஒரு செயலுக்கு மூன்று வகையான காரணங்கள் கூறப்படும். அவை, முறையே, முதற்காரணம், துணைக் காரணம், நிமித்தகாரணம் என மூன்றும். குயவன் குடத்தை வனைந்தான்: இந்த வாக்கியத்தில் வனைதலாகிய செயலுக்கு முதற்காரணமாக இருப்பது களிமண். துணைக் காரணமாக இருப்பது, தண்டசக்கரம்; நிமித்தகாரண மாக இருப்பவன் குயவன். நிமித்தகாரணமாக இருக்கிற குயவன் துணைக்காரணமான தண்ட சக்கரங்களைக் கொண்டு முதற் காரணமாகிய களிமண்ணால் குடத்தை வனைந்தான். ஒரு செயல் மற்றொரு செயலுக்குக் காரண மாகும் பொழுது, முந்தியது நிமித்தமாகவும் பிந்தியது விளைவாகவும் அமையும். நிமித்தங்கள் பல சங்கிலித் தொடர்போல் நின்று ஒரு செயலினின்று மற்றொரு செய லுக்குத் தூண்டிக்கொண்டே இருக்கும். இவ்வாறு செய லுக்குத் தூண்டுகிற நிமித்தகாரணத்தை உளநூல் வல்லார் மோட்டிவ்[1] என்பர். விளையாட்டுக்குத் தூண்டிவிடுகிற விளை யாட்டே நிமித்த காரணமாக அமையும். முந்திய நிமித்த காரணச் செயல்களே பிந்திய செயல் விளைவுகளுக்கு உந்தி விடுகின்றன.

சில தருணங்களில் நமது மனம் ஒன்றிலும் செல்லா மல், செயலற்று மந்தம் அடைகிறது. அப்பொழுது, ஒரு புத்தகம் நமது கண்ணைக் கவருகிறது. நாம் சில பக்கங் கள் வாசித்தவுடன் அப் புத்தகத்தில் கருத்து இறங்கிவிடு கிறது. செல்லச் செல்ல, புத்தகத்தில் சுவைகொண்டு அதனைத் தொடர்ந்து படிக்கிறோம். முடிவு என்ன என்று அறியும் அவா பிறக்கிறது. கருத்தூன்றி விரைந்து படித்துக்கொண்டு போகிறோம். இந்தச் செயலில், படிக் கிற ஒவ்வொரு பக்கமும், அடுத்துவரும் பக்கத்தைப் படிப் பதற்கு நிமித்த காரணமாக அமைகிறது. இவ்வாறே விளையாட்டிலும், ஒரு செயல் நிமித்தகாரணமாகிப் பிறி தொரு செயலில் தொடர்வதைக் காணலாம். விளையாட

1. Motive.

வேண்டு மென்னும் விருப்பம் குழந்தையின் இயற்கை உணர்வாகும். இந்த இயற்கை உணர்வாலோ தோழர்களின் தூண்டுதலினாலோ ஒரு குழந்தை விளையாட்டில் புகுந்து ஆடத் தொடங்கும்பொழுது, அந்த ஆட்டத்தில் கருத்து இறங்குகிறது. விளையாட்டின் சுவைப்பாடு பெருகுந்தோறும், முந்திய ஆட்டமே பிந்திய ஆட்டத்திற்கு நிமித்த காரணமாகிக் குழந்தையை அந்த விளையாட்டில் மூழ்ந்து நின்று முன்னேறச் செய்கிறது. [1] இனத்தொகுதியுணர்ச்சியைத் திருப்தி செய்தற் பொருட்டே குழந்தைகள் விளையாடுகின்றனர் எனவும், போட்டி போடும் இயல்பால் முந்தியிருத்தலை விரும்பியே விளையாடுகின்றனர் எனவும் காரணங்கள் காட்டுதல் முற்றிலும் பொருந்தாது. விளையாட்டுச்சூழ்நிலையினின்று விளையாட்டுச் சுவை பிறக்கிறது. ஆரம்பித்த ஒரு விளையாட்டு, அதனை நிறுத்தாமல் தொடர்ந்து விளையாடக் குழந்தையை மேன்மேலும் தூண்டிவிடும் நிமித்த காரணமாகிறது.

சில குழந்தைகள் நடனம் ஆடுகிறார்கள். இதில் ஒரு குழந்தை மற்றவர்களிலும் சிறந்துவிளங்கவேண்டும் என்று விரும்புமாயின், தொகுதியோடு மனமொன்றி வினை ஆற்றும் [2] கூட்டுறவுமனப்பான்மை கெடும்; அப்பொழுது நடனமும் கெடும். கால்-பந்தாட்டத்தில் ஒருவன் தன் திறமையை எடுத்துக்காட்டவேண்டும் என்று விரும்பினால், அவன் தானே பந்தை இலக்கிற்குக் கொண்டுபோக முயல்வான். அவன் ஆட்டத்தில் கலந்து கொண்டவரோடு பொருந்தி ஆடமாட்டான். தன்னைத் தேற்றமாகக் காட்ட வேண்டும் என்ற மன இயல்பு எந்தக் கூட்டுறவு முயற்சியையும் கெடுத்துவிடும். மனோவிகாரங்களும் இயற்கை உணர்வுகளும் விளையாட்டுக்கு நிமித்த காரணமானபோதிலும், அளவுக்கு மீறி இயங்க ஆரம்பித்தால் விளையாட்டின் சுவையைக் கெடுத்துவிடும்.

1. Herd-instinct.
2. Mental sociability.

9. குழந்தையும் விளையாட்டும்

திருவிளையாடல்

ஆக்குதல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் இயற்றுகின்ற கடவுளை "அலகிலா விளையாட்டு உடையார்" என்கிறார் கம்பர். மஸ்தான் ஸாகிப் என்ற பக்தர் அல்லாவின் திறங்களைப் பாடும்பொழுது,

"அண்ட கோடிகளும் ஓர்
பந்து எனக் கைக்குள்
அடக்கி விளையாட வல்லார்;
அகிலம் ஓர் ஏழினையும்
ஆடும் கறங்கு போல்
ஆட்டி விளையாட வல்லார்;
மண்டலத்(து) அண்டரை
அழைத்து அருகி இருத்தியே
வைத்து விளையாட வல்லார்;
மண்ணகமும் விண்ணகமும்
அணுவைத் துளைத்து அதில்
மாட்டி விளையாட வல்லார்,........"

என்று பாடுகிறார். சிவபெருமான் மதுரையிலே செய்த அறுபத்துநான்கு லீலைகளையும் திருவிளையாடல்களாகவே பாடி வைத்தனர் பரஞ்சோதி முனிவரும் பிற தொண்டர்களும். ஒரு குழந்தையின் விளையாட்டு பெற்றோர்க்கு மகிழ்ச்சி அளிக்கின்றவாறே, கடவுளின் செயல்கள் யாவும் அவர்பால் அன்புத் தொடர்புற்ற பக்தர்களுக்குத் திருவிளையாடல்களாகவே தோன்றுகின்றன. கடவுளுடைய ஒவ்வொரு விளையாட்டிலும்—செய்கையிலும்— அவனுடைய குணச் சிறப்புக்கள் தெளிவாக விளங்குவதைக் காண்கிறார்கள். அங்ஙனமே குழந்தையின் விளையாட்டும்.

பிள்ளை என்றால் எல்லார்க்கும் பிள்ளை

பாரத தேசத்தார் கடவுளைக் குழந்தையாகப் பாவனை செய்து அநுபவிக்கும் மனப்பான்மை உடையவர்கள். மற்றெந்த உறவிலும் குழந்தை-உறவு மிகச் சிறந்தது. குழந்தை யாவருக்கும் பொது. ஒரு வீட்டில் ஒரு குழந்தையின் விளையாட்டுக்களை அண்டை அயலாரும் உற்றாரும் பிறரும் கூடிவந்து பார்த்து அநுபவிப்பார்கள். "என் பிள்ளை அல்லன்; மற்றொருத்தியின் பிள்ளை" என்ற வேற்றுமையான எண்ணம் குழந்தை-உறவில் உதிப்பதில்லை. அன்றியும், யார் வேண்டுமானாலும் குழந்தையைக் கரத்தில் எடுக்கலாம்; மார்போடு அணைக்கலாம்; உச்சி மோந்து மகிழலாம்; கொஞ்சிக் குலாவலாம். தெருவிலே செல்லும் மலைக்குறத்தியும், சீமான் வீட்டு வாசலிலே விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தையின் தாடையைத் தடவித் தன் கன்னத்தில் அழுத்தி நிலத்தில், விரல்களை நெட்டி உடைத்து மகிழ்வுற்றுச் செல்லுகிறாள். குழந்தை-உறவு பொது உறவு; யாவருக்கும் நெருங்கிய உறவு; தொடுகை இன்பம் தரும் உறவு; பால்-வேற்றுமைக் கலப்பற்ற உறவு; அச்சத்திற்கு இடம் இல்லாத உறவு.

குழந்தை - குமரன் - கண்ணன்

தமிழகத்தின் ஆத்மாவாக விளங்குகிறான் குமரன்; பாரத தேசம் முழுவதற்கும் ஒரே ஆத்மா கண்ணன்; என்றென்றும் 'இளமை' வாய்ந்தது எனத்தகுவது ஆத்மா ஒன்றே; முருகன் என்னும் சொல்லுக்கும் பொருள் அதுவே. இளமை ஒன்றே கண்ணுக்கு இனியது; ஆகையால், 'கண்ணன்' என்ற சொல்லிலும் இளமை பொங்கி வழிந்து பாய்கிறது. வழிபடும் கடவுள் என்றுங் குன்றா இளமை வடிவினன்.

இந்தக் குழந்தைக் கடவுளை, இளமை வடிவத்தை, அழகு ஒழுகும் உருவை, கண்ணிற்கு இனிய காட்சியைப் பக்தர்கள் தாயின் நிலையிலே நின்று, மனக் கண்ணால்

கண்டார்கள்; கற்பனைக் கரத்தால் வாரி எடுத்து அணைத்தார்கள்; குழந்தையின் திருவிளையாடல்களைக் காண்பதிலே தம்மை மறந்தார்கள். கட்டுக்கடங்காத உணர்ச்சி வெள்ளம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தீஞ்சுவைப் பாடல்களாகப் பீறிட்டு எழுந்து வந்து, செத்துக் கிடந்த தாயுள்ளங்களை உயிர்ப்பித்தது; தந்தையுள்ளங்களைத் தழைத்து ஓங்கச் செய்தது; குழந்தைத் திருவிளையாட்டில் மகிழும் மனப்பான்மையை வளர்த்துவிட்டது.

குழந்தை - உறவிலே பக்தர்கள் கண்ட கற்பனைக் கனவுகளைப் பாரத தேசத்துப் பெற்றோரும், கவிஞரும், அழகுக் கலைஞரும், இசை வல்லாரும், வேதாந்திகளும் நமது நாட்டின் அழியாப் பண்பாக உருவாக்கி வைத்து விட்டனர். கடவுள்மீது பாடிய பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தகளிலே, தம் மக்களின் குழந்தைப் பருவங்களைப் பாடிக் களிக்கலாயினர். பாவலர்களும், பாட்டிமார்களும் குழந்தைக்காக அமைத்த விளையாட்டுக்களைப் பாட்டும் ஆட்டமுமாக வகுத்து வைத்தனர். அம்மானை என்று ஒரு விளையாட்டு; அதற்குத் தனி இசையோடு கூடிய ஒரு பாட்டு. கோலாட்டம் ஒரு விளையாட்டு; அதற்கு ஏற்ற இசை உடைய ஒரு பாட்டு. நிற்கப் பழகும் குழந்தையின் முயற்சிக்கு ஒரு பாட்டு; தவழ முயலும் குழந்தையின் முயற்சிக்கும் ஒரு பாட்டு; நடக்கும் குழந்தையின் முயற்சிக்கும் ஒரு பாட்டு; கையை வீசுவதற்கும், விரலை அசைப்பதற்கும், நிலவை அழைப்பதற்கும், அன்னம் உண்பதற்கும், ஆடை அணிகள் பூண்பதற்கும் தனித் தனிப் பாடல்கள்; இவ்வாறு பாட்டோடு கலந்துவிட்டன குழந்தையின் எல்லாச் செயல்களும் விளையாட்டுக்களும். பந்து விளையாட்டும், கழலாட்டமும், கல்லாட்டமும், பல்லாங்குழியும், சோகி யாட்டமும், தாயமும், மற்றும் எண்ணிறந்த விளையாட்டுகளும், குழந்தைகளின் மனத்தைப் பலவகைகளிலே உருவாக்கும் முறையில் அமைந்து விட்டன. குழந்தைக் கடவுளின் அடியார்கள் இவ்வாறெல்லாம் அன்புடன் குழந்தைகளுக்காகத் தயாரித்த பாடல்களையுடைய பழைய விளையாட்டுக்கள் மறைந்து ஒடுங்கு

மாறு புதுமுறைக் கல்வியும், அதோடு குழந்தைக்குப் புது விளையாட்டுக்களும் புதுத் தத்துவங்களைப் பெற்றுத் தோன்றலாயின.

நவீன நாகரிகமும் குழந்தை விளையாட்டும்

நகரந்தோறும் நாகரிகவேகம், வாயு வேகத்தையும் மனோவேகத்தையும் வெல்லும் விரைவுடன் ஓடுகிறது. நகரங்களின் வீதிகளில் குழந்தைகள் ஐந்து வயது மட்டும் விளையாட்டிற்காக வெளியேற முடியாதவாறு மோட்டார் கார், பஸ் முதலிய வாகனங்கள் யமதூதர்கள்போலச் சுற்றித் திரிகின்றன. குழந்தைகள் ஐந்து வயதுவரைக்கும் தத்தம் வீட்டுக்குள்ளேயே விளையாட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. வீட்டுக்குள்ளே விளையாடுவதென்றாலோ, சீமான் வீட்டுப் பிள்ளைக்குத்தான் போதுமான இடம் அகப்படும். நடுத்தரமான வருமானம் உடையவர்கள் வாழும் இடங்களிலே குழந்தைகளுக்கு ஓடி ஆடி விளையாடப் போதுமான இடம் கிடையாது. நகரங்களில் வாழ்கிற குழந்தைகளுக்கு விளையாடத் தகுந்த இடம் இல்லை. இதை உணர்ந்த நகர சபையார் அங்கங்கே பொதுத் தோட்டங்களையும் விளையாட்டு நிலங்களையும் தயாரித்து வைத்திருக்கிறார்கள்.

நகரச் சபையார் விளையாட்டிற்காக வசதிகள் அமைத்திருந்தபோதிலும், வாழ்க்கை நெருக்கடிகளால், பெற்றோர் தம் குழந்தைகளை விளையாடும் இடங்களுக்கு அழைத்துச் செல்ல நேரம் இல்லாமல் வருந்துகிறார்கள். குழந்தைகள் மூன்று வயதுவரைக்கும் பொம்மைகளையும், மரச் செப்புக்களையும், வீடு அமைக்க உதவும் கட்டைகளையும், சிறு சகடங்களையும் வைத்துக்கொண்டு விளையாடலாம். ஆனால், மூன்றாவது வயது ஆரம்பமாவதற்கு முந்தியே குழந்தைகளுக்கு வெளியே திரிந்து விளையாடும் அவா ஏற்படுகிறது. பெற்றோர் எவ்வளவு பொருள் செலவிட்டு விளையாட்டுச் சாமான்களை வாங்கி வீட்டிலே குவித்தாலும், ஆடித்திரியும் கால்களுக்குக் குந்தியிருந்து விளையாட விருப்பம் இல்லை.

குழந்தைகளின் விளையாட்டுக்கள், வயதிற்கு வயது மாறுதல் அடைகின்றன. இரண்டாவது வயதில் பொம்மையை வைத்துத் தனியே விளையாடிப் பொழுது போக்கிய பெண் குழந்தைக்கு ஐந்தாவது வயதில் தனக்குச் சம வயதுடைய குழந்தைகளோடு சேர்ந்து விளையாடும் அவா எழுகிறது. ஐந்து வயதுச் சிறுமி தன் தோழிகளோடு சேர்ந்து, பொம்மைக் கலியாணம், பொம்மைப் பள்ளிக்கூடம் நடத்தித் தன் சமூக மனப்பான்மையை வெளியிட விரும்புகிருள். இப்படியே குழந்தைகளின் அனுபவ ஞானம் வளருந்தோறும், வயது ஏறுந்தோறும், விளையாட்டுககள் மாறி மாறி வருகின்றன; விளையாட்டுக்கள் மாறுதல் அடையவே, அந்தந்த விளையாட்டுக்கு அமைந்த தோழரும் தோழியரும் தேவை என்று விரும்புகிருர்கள். சீட்டாட்டத்தில் சற்று நேரம் பொழுது போக்கி, விஷய மாற்றத்தினுல் மனத்திற்கு ஓய்வு அளிக்கலாம் என்று கருதுகிற இளைஞன் ஒருவனிடம் சீட்டுக் கட்டு இருந்தாலும் ஆடுவதற்கு ஆள் இல்லாவிட்டால், அவன் மனங்குன்றி அவஸ்தைப் படுவான். பெரியவர்களின் கதி இவ்வாருக, குழந்தைகள் மட்டும் விளையாட்டுச் சாமான்களை வைத்துக்கொண்டு, உடனுடுவார் இல்லாமல் எப்படி விளையாட முடியும்? நவநாகரிகப் போக்கிலே நகர வாசிகள் அவரவர் பாடு அவரவருக்கு என்று வாழ்பவர்கள். பெற்ருேர் தங்களுடைய பிள்ளைகளோடு அண்டை அயலகத்தாரின் பிள்ளைகள் கூடிவந்து விளையாடத் தகுந்த வசதிகள் அளிப்பது எங்ஙனம்? அப்படியே அண்டை அயலகத்தாரின் சிறுவர் சிறுமியரைத் தம் வீட்டுக்கு வந்து விளையாட ஏற்பாடு செய்தாலும், செம்மையான வளர்ப்பு முறைபெருத பல்வகைக் குழந்தைகளோடு உறவாடுவதால் தமது குழந்தைகளுக்கு ஏற்படும் பழக்கக் கேடுகளைத் தடுப்பது எப்படி? இத்தகைய எத்தனையோ சிக்கல்களும் தொல்லைகளும் நவீன நாகரிகச் சுழலிலே சிக்குண்ட நகரவாசிகளின் குழந்தைகளது விளையாட்டைப் பெரும்பாலும் தடை செய்கின்றன. விளையாட

வாய்ப்பு இல்லாமையால், குழந்தைகளிடத்தில் குணக்கேடுகளும் தீமைகளும் ஏற்படுகின்றன.

குழந்தை விளையாட்டைப் பற்றிய நவீன ஆராய்ச்சிகள்

ஒருமுகமாக ஓடித்திரியும் மனத்தையும், அங்க அவயவங்களையும் கட்டித் திருப்பி விடுகிற ஆற்றல் பெற்ற செயல்களே விளையாட்டு என்பார் ஒரு மானஸ சாஸ்திரி. மனத்தையும், உள்ளத்தையும் தளர்த்திவிடுகிற செயல்கள் எல்லாம் விளையாட்டுக்கள் என்பார் அறிஞர் லாஸரஸ் (Lazarus). இவர்கள் கூறுகின்றவை விளையாட்டின் பூரண லக்ஷணமாக அமையவில்லை.

கமலத்திற்கு வயது மூன்றாகப் போகிறது. தூங்கி எழுந்தாள் கமலம்; தாயும் அவளுக்குப் பால்-சோறு ஊட்டினாள். கமலம் உண்டபிறகு கூடத்திற்குச் சென்றாள்; பொம்மையையும், சட்டி, பானைகளையும் வைத்துக்கொண்டு விளையாடத் தொடங்கினாள்; பொம்மைக்கு எண்ணெய் தேய்ப்பது போல் கையால் தேய்த்தாள்; பின்பு நீராட்டுவது போல் குளிப்பாட்டினாள்; நீராட்டிய பிறகு, பொம்மைகளைச் சுவரோடு சார்த்தி உட்கார வைத்தாள்; அடுப்பை எடுத்தாள்; துடைப்பக் குச்சிகளை விறகாக அடுப்பிற்குள்ளே செருகினாள்; சட்டியை அடுப்பின் மேல் வைத்தாள்; பாத்திரத்தில் இருப்பதாக எண்ணிய பாலைச் சிறு அகப்பையால் துழாவிக் காய்ச்சினாள்; இமைப்பொழுதிலே பால் காய்ந்து பொங்கிவிட்டது. அதை இரண்டு பாத்திரங்களில் திரும்பத் திரும்ப ஊற்றி ஆற்றினாள்; சர்க்கரையும் இட்டாள்; கரண்டியால் சிறிது எடுத்துத் தானே சுவை பார்க்கும் பாவனையாக வாயில் சிறிது ஊற்றிக்கொண்டாள்; தலையை அசைத்தாள்; "முதல் தரம்!" என்றாள். பின்பு கமலம் பொம்மையை எடுத்தாள்; மடியில் வைத்து அணைத்துக்கொண்டு, "பாப்பா! நல்ல பால், தித்திப்புப் பால், கண்ணே, குடி" என்று சொல்லித் தன் பொம்மைக்குச் சிறிது சிறியதாக ஊட்டினாள். இது முதல் விளையாட்டு.

ஒன்றிலிருந்து ஒன்றாகப் பல விளையாட்டுக்கள் தொடர்ந்து சென்றன. இந்த விளையாட்டுக்கள் யாவும் குழந்தை கமலாவின் மனத்தில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த அனுபவங்களை வெளியிடும் போக்குவாய்களாக அமைந்திருந்தன. அன்றியும், ஒரு விளையாட்டிலிருந்து மற்றொரு புது விளையாட்டிற்குத் தாவிச் செல்வது, ஒரே பொருளில் ஈடுபட்டிருந்த மனத்தின் போக்கை மாற்றியமைக்கின்ற பொழுதுபோக்காகவும் உதவுகிறது. இவற்றையெல்லாம் சிந்திக்கும்பொழுது, முதலில் குறிப்பிட்ட அறிஞர் கூறிய இலக்கணம் விளையாட்டிற்கு முற்றிலும் பொருந்தவில்லை என்பது தெளிவாகிறதல்லவா? இதில் புறக்கணிக்க முடியாத வேறொரு விஷயமும் உண்டு. குழந்தையின் மனத்திற்கும், உடலுக்கும் ஓய்வு மிகவும் தேவையாக இருக்கலாம். அந்நேரத்தில் குழந்தை ஒரு விளையாட்டில் கலந்து கொள்கிறது; அந்த விளையாட்டில் தன் திறமையைப் பூரணமாக வெளிப்படுத்தினால்தான் தனக்குப் பெருமையும், மதிப்பும், மானமும் உண்டு என நினைத்து உடலும் மனமும் களைத்துப் போகும்படி விளையாடலாம். குழந்தை இவ்வாறு ஒரு விளையாட்டில் ஈடுபட்டால் விளையாட்டை ஓய்வு என்று சொல்லுவது எங்ஙனம்? இவ்வாறு நேருமாகில், அதிகப்படியான சக்தியைத் தளர்ச்சியுற்ற நேரத்தில் பாழாக்கியதேயாகும்.

ஐந்து வயதுக் குழந்தை கலாவதி; பள்ளிக்கூடத்திற்குப் போய்விட்டு வருகிறாள்; பள்ளிக்கூடத்திலே படித்த பாடங்களிலும், விளையாடிய விளையாட்டுக்களிலும் அவளுடைய முழுச்சக்தியும் செலவாகவில்லை; வீட்டுக்கு வந்ததும் பந்து விளையாடுகிறாள்; தட்டாமாலை சுற்றுகிறாள்; ஆடுகிறாள்; பாடுகிறாள். இதைப் பார்க்கும் பொழுது எழுகிற சிந்தனையை ஷில்லர் (Schiller) ஸ்பென்ஸர் (Spencer) முதலான அறிஞர்கள் வெளியிடுகிறார்கள்; "அதிகப்படியான சக்தியை வெளிப்படுத்தலே விளையாட்டு" என்கின்றனர். இதிலும் குறைவு இருப்பதாகத் தோன்றுகிறது. அதிகப்படியான சக்தி இல்லாத போதிலும் விளையாட்டுக்களில் குழந்தைகள் ஈடுபடுவார்

களே. ஒருவன் மிகவும் களைத்திருந்தாலும் சீட்டு விளையாடிப் பொழுது போக்குவானே. குழந்தை மிகவும் ஆடி, ஓடிக் களைத்திருந்தாலும் கோலம் போட்டு விளையாடி மகிழுமே; இன்றேல், மற்றேதேனும் ஒரு விளையாட்டில் ஈடுபட்டு மகிழுமே.

ஜி. ஸ்டான்லி ஹால்

(*G. Stanley Hall*)

இவர் கிளார்க் பல்கலைக் கழகத்தின் மானஸ சாஸ்திரியாக இருந்தவர். பாரம்பரிய உணர்ச்சிகள் குழந்தைகளிடத்தில் தோன்றுவதைப்பற்றி ஆராய்ந்தவர். இவர் மானஸ சாஸ்திரக் குழுவினருள் பிரவர்த்தி விஞ்ஞானக் குழுவைச் சார்ந்தவர்.

ஸ்டான்லி ஹால் (Stanley Hall) என்பவர் விநோதமான கருத்தொன்றை வெளியிடுகிறார். நம்முடைய ஆதி முன்னோர்கள், முன் எந்தக் காலத்திலேயோ செய்த செயல்களின் சிறந்த நினைவுகள் நமது குழந்தைகளின் விளையாட்டு வடிவத்திலே தோன்றுகின்றன என்று கூறுகிறார். வள்ளியும் நாகம்மாளும் ஒரே வயதுக் குழந்தைகள். இருவருக்கும் நாலு வயது நிரம்ப இன்னும் இரண்டொரு மாதங்களே இருந்தன. இருவரும் தத்தம் தோழிகளோடு

மரப்பதுமை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். நாகம்மாள் தன் மரப் பதுமைக்கு ஆண் உடை உடுத்தி யிருந்தாள். வள்ளி தன் மரப்பதுமைக்குப் பெண் உடை உடுத்தியிருந்தாள். நாகம்மாள் வள்ளியின் பெண் மரப் பதுமையைத் திருடித்தன் மரப்பதுமையோடு ஒருவருக்கும் தெரியாத இடத்திலே ஒளித்து வைத்தாள். மணவறையில் இருக்கும் ஸதிபதிகளைப்போல் இரண்டு மரப்பாவை களையும் பக்கத்திற்குப் பக்கமாகப் படுக்கவைத்தாள். வள்ளியும் அவளுடைய தோழிகளும் தங்கள் பெண் மரப்பாவையைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தார்கள். பெண் மரப்பாவை தன்னைக் கேளாமல் நாகம்மாளுடைய மரப்பாவையோடு ஓடிப்போன குற்றத் திற்காக அதை அடிக்கப் போனாள் வள்ளி. அப்பொழுது, நாகம்மாள் குறுக்கிட்டு, "எதற்காக அடிக்கிறாய் உன் பெண்ணை? அவளை என் பிள்ளைக்கே கலியாணம் பண்ணிக்கொள்கிறேன்" என்றாள். உடனே குழந் தைகள் சீதன வரிசைகளைப்பற்றிப் பேசத் தொடங்கி னார்கள்; கலியாணத்தை வெகு சிறப்பாக முடித்து வைத்தார்கள். இந்த விளையாட்டில் கலந்துகொண்ட குழந்தைகளின் செயலில் இக்கால ஜனசமூக வழக்கங்கள் பல காணப்பட்டன. ஆயினும், ஆண் மரப்பதுமை பெண் மரப்பாவையைத் தூக்கிக்கொண்டு போனதாக நாகம்மாள் விளையாடிய பாகம் இந்தக் குழந்தைகளின் காலத்தில், அவர்களுடைய சாதியாரிடையே வழக்கில் இல்லாமற் போயிற்று. எனினும், இந்த அறிவு இந்தக் குழந்தைகளுக்கு எப்படி வந்தது? இத்தகைய பல விஷயங்கள் குழந்தைகளின் விளையாட்டுக்களில் காணப் படுகின்றனவே. இவற்றை ஆதாரமாக்கி வெளியிட்ட கருத்துத்தான் ஸ்டான்லி ஹாலுடையது. இந்தக் கருத்தில் காணப்படும் ஒரே தவறு என்னவெனில், நாகம்மாளும் வள்ளியும் எந்தச் சமூகத்தினரோ அந்தச் சமூகத்தைச் சார்ந்த பிற குழந்தைகள் விளையாடும் பொம்மைக் கலியாணங்களில், நாகம்மாளும் வள்ளியும் விளையாடிய விளையாட்டில் கண்ட அரிய நிகழ்ச்சி

காணப்படவில்லை; ஆகையால் ஸ்டான்லி ஹால் கூறுகிற விளக்கம் பொருந்தவில்லை. மேலும், நாகம்மாள் வள்ளி என்ற இருவரின் குடும்பங்களிலும் நிகழ்ந்த ஒரு சம்பவத்தையே இவர்களுடைய விளையாட்டின் அரிய நிகழ்ச்சி பிரதிபலித்துக் காட்டுகிறது. ஸ்டான்லி ஹால் குறிப்பிடுகிற குழந்தை விளையாட்டுக்கள் விஷயமாக அவர் எம்மட்டும் சூழ்நிலைச் சம்பவங்களைத் தொடர்புபடுத்தி ஆராய்ந்தார் என்பது கேள்விக்கு இடமானது. சூழ்நிலைக் காரணங்களை ஆராயாமல், குழந்தைகளின் விளையாட்டுக்களைப் பற்றி ஒரு விளக்கம் எழுதுவது அவ்வளவு பொருத்தமானது அன்று. குழந்தைகள் விளையாடுகிற விளையாட்டுக்களில் சூழ்நிலைக் காரணங்கள் வெகுவாகத் தோன்றுகின்றன. பின்வரும் உதாரணத்தைப் பாருங்கள் :

ஜயராமன் நாட்டுப்புறத்திலிருந்து வந்த ரிக்ஷாவண்டிக்காரன். அவனுடைய பையன் முருகனுக்கு நாலு வயதாயிற்று. இந்தச் சிறுவன் எஜமானனுடைய வீட்டுத் திண்ணையில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, மாட்டுவண்டி ஓட்டுகிற பாவனையாக விளையாடிக் கொண்டிருந்தான். வீட்டு எஜமானனுடைய குழந்தைக்கும் நாலு வயதுதான். அவன் மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மோட்டார்கார் ஓட்டுகிற பாவனையாக விளையாடிக் கொண்டிருந்தான். முருகனுடைய விளையாட்டிற்குப் பாரம்பரிய நியதியைக் காரணமாகக காட்டுவதைவிட சூழ்நிலையையே காரணமாகக் குறிப்பிடவேண்டும்; அதே காரணம் எஜமானனுடைய குழந்தைக்கும் பொருந்தும்.

பெரும்பாலும் குழந்தைகளின் விளையாட்டுக்கள் பெரியவர்களின் செயல் மாதிரியிலே அமைவன என்கிறார் குரூஸ் அறிஞர் (Groos). வைத்தியருடைய குழந்தை வைத்தியரைப் போல் பாவனை செய்து விளையாடுகிறது. தச்சனுடைய பையன் தச்சு வேலை செய்வதுபோல் பாவனை செய்து விளையாடுகிறான். சாந்தா மாமாவின் வீட்டுக்கு வந்தது முதல், சில நாட்களாக, மாமா சுத்தி

யலையும், உளியையும் எடுத்துக்கொண்டு அதையும் இதையும் தட்டிக் கொட்டிக்கொண்டு இருந்தார். சந்தா அவர் செய்வதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தாள். மாமா எப்பொழுதாவது அந்தக் கருவிகளை வைத்துவிட்டு வேறு அலுவல்களைக் கவனிக்கச் சென்றால், அவள் உடனே சுத்தியலை எடுத்து அதையும் இதையும் அடிக்கத் தொடங்கி விடுவாள். மாமா சில நாட்களுக்குப் பிறகு படிப்பிலும், எழுத்து வேலையிலும் மனத்தைத் திருப்பவே,

புரொஃபஸர் எட்வர்டு கிளப்பரிடு

(*Proffessor Edward Claparede*)

இவர் ஜினேவா நகரத்தைச் சார்ந்தவர். 1873-ம் ஆண்டில் பிறந்தார். ஸ்விட்ஸர்லண்டில் குழந்தைகளின் ஆராய்ச்சிக்காக ரூஸோ இன்ஸ்டிடூய்ட்டை ஏற்படுத்தியவர். குழந்தைகளைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்தவர்.

அவளும் சுத்தியலை எடுத்து விளையாடும் வழக்கத்தை விட்டு, மாமாவைப் போலப் புத்தகத்தை எடுத்து வாசிப்பதும், எழுதுவதுமாகப் பாவனை செய்து விளையாடத் தொடங்கினாள். குழந்தைகள் என்றைக்காவது பருவம் அடைந்த ஆண் பெண்களாக மாறவேண்டியவர்கள் ;

ஆகையால் பெரியவர்கள் செய்யும் செய்கைகள் அவர்களுடைய விளையாட்டுக்களில் பிரதிபலிக்காமல் இருக்க முடியுமா?

குழந்தைகள் தங்கள் தங்கள் பெற்றோருடைய செயல் மாதிரிகளையும், வீட்டில் உள்ள பெரியவர்களின் செயல் மாதிரிகளையும் தங்கள் விளையாட்டுக்களில் தோற்றுவித்தாலும், குழந்தையளவிலே பார்க்கும்பொழுது, அவை யாவும் விளையாட்டுச் செயல் போக்காகவே காணப்படுகின்றன என்கிறார் கிளப்பரீடு (Claparede). குழந்தை

(R. S. Woodworth)

களுக்கு நிகழ்காலத்தின் செயல்களில் நாட்டமே தவிர, எதிர்காலத்தைப் பற்றிய எண்ணமில்லை என்றும் கூறுகிறார்.

குழந்தைகள் விளையாடும் விளையாட்டுக்களில் பல இயற்கை - உணர்வுகள் வெளிப்படுகின்றன என்றும், ஆயினும், குறிப்பிட்ட ஒரு இயற்கை - உணர்வை வெளிப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு குழந்தைகள் விளையாடுவதில்லை என்றும் உட்வொர்த்தும் மக்டுகலும் கூறு

கின்றனர். விளையாட்டோடு பல இயற்கை-உணர்வுகள் தொடர்புற்று வெளிப்படலாம். புதுமை—ஆய்வு, சுய சித்தப்பாடு, பயம், [1] பால்-மய-உணர்ச்சி, தொகுதி-உணர்ச்சி முதலியன குழந்தைகளின் விளையாட்டுக்கள் மூலமாக வெளிப்படுகின்றன. இவை குழந்தை விளையாட்டுக்களில் காணப்படும் சிறந்த லக்ஷணங்கள். தமிழ்ப் பாடம் படித்தல், கணக்குப் போடுதல், தைத்தல், வீட்டைப் பெருக்குதல், கோலமிடுதல் என்றிவைபோன்ற முக்கியமான தொழில்களுக்கும் பொழுது போக்கான வேறு விளையாட்டுக்களுக்கும் இடையிலே, உடற்பயிற்சிக்கான விளையாட்டுக்களும், மனப்பயிற்சிக்கான விளையாட்டுக்களும் அமைகின்றன என்று கூறுகிறார் அறிஞர் மக்டுகல். குழந்தைகளின் விளையாட்டுக்கள் மனஅயர்வுப் புலத்தில் உறங்கிக்கிடக்கும் விகாரங்களையும், விருப்பு வெறுப்புக்களையும், ஆசைகளையும் வெளியிடப் போக்குவாய்களாக அமைகின்றன என்கிறாள் மிஸஸ் கிளேன் அம்மையார்.

குழந்தைகள் விளையாடும் விளையாட்டுக்களில் அவர்களுடைய கற்பனை சக்தி வெகுவாக விளங்குகின்றன. நாற்காலிகளை அடுக்கி ரெயில் வண்டித் தொடர் என்று சொல்லி விளையாடுகின்ற குழந்தையின் உள்ளத்தில், அந்த நாற்காலிகள் ரயில் வண்டிகளாகவே பாவனைரூபம் அடைந்து நிற்கின்றன. மண் பொம்மைக் கலியாணம் செய்து விளையாடும் குழந்தைக்கு அந்தப் பொம்மை அதன் சொந்தக் குழந்தையாகவே பாவனைரூபத்தில் அமைந்து விடுகின்றது. கற்பனைத் திறத்தால் எத்தனையோ மனோபாவங்களைக் குழந்தைகள் விளையாட்டுக்களிலே வெளியிடுகிறார்கள்.

குழந்தைகளுக்கு விளையாட்டு என்பது உயிர்நாடி. சில வேலைகளில் விளையாட்டிலே முனைந்து நிற்கின்ற குழந்தைகள் தின்பண்டங்களையும் பொருட்படுத்தமாட்டார்கள். ஆகையால், குழந்தைக் கல்விக்குத் தோழிபோலவும் துணைவிபோலவும் விளங்குவது விளையாட்டு. விளையாட்டாகக் கற்றுக்கொடுக்கும் பாடங்களையெல்லாம் குழந்தைகள்

1. பால்-மய-உணர்ச்சி—Sex instinct.

இயல்பாகவும் விருப்பத்தோடும் கற்றுக் கொள்கிறார்கள். விளையாட்டின் மூலமாகக் குழந்தைகள் முயன்று பார்க்கவும், தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் முடிகிறது. இதன் மூலமாகக் குழந்தையின் புத்தித்துவம் திறமை நிராணிகள் சீர்திருத்தம் பெறுகின்றன. குழந்தைகளுக்கு ஆராய்ச்சிக் குணம் மிகுதியாக உண்டு. இந்தக் குணத்திற்குப் போதுமான வசதிகளும் பொருள்களும் தேவை. விளையாட்டுக்களிலே நேரிடும் தவறுதல்களைத் திருத்தி, வெற்றிபெறக் குழந்தை முயல்கின்றது. குழந்தைகளுக்கு விளையாடப் பலவிதமான பொருள்கள் தேவை. மணலும், களிமண்ணும், நீரும், மரக்கட்டைச் செங்கல்களும், வர்ணப் பென்சில்களும், வர்ணங்களும், சாயம்பூசும் குச்சு மட்டைகளும், அட்டைப் பெட்டிகளும், காலியான நெருப்புப் பெட்டிகளும், தங்க ரேக்குக் காகிதங்களும் மற்றும் பல பொருள்களும் தேவை. குழந்தை பல பொருள்களைக் கையாண்டு தன் உள்ளக்கிடக்கையை வெளியிட முயலுகிறது. தனக்குக் கிடைத்த பொருள்களைப் பலவாறாகப் பல கருத்துக்களுக்கு ஏற்றவாறு பொருத்திப் பார்க்க முயலுகிறது.

குழந்தைகளின் விளையாட்டுக்களையும், உடல் பயிற்சி, மனப்பயிற்சிகளையும் பற்றிப் பல துறைகளில் ஆராய்ந்திருக்கிறார்கள். இந்த ஆராய்ச்சிகள் யாவும் பல புதிய உண்மைகளைக் கண்டறிய நிகழ்த்தியவைகளாகும். குழந்தைகளின் மனத்தோற்றங்களை ஒவ்வொன்றாகத் திருத்தி அமைக்கக்கூடிய தனித்தனி விளையாட்டுத் தொகுதிகளை உளநூலில் தேர்ந்தவர்கள் பாகுபாடுசெய்து வைத்திருக்கிறார்கள்; உடலின் ஒவ்வொரு உறுப்பையும் பழக்கக்கூடிய விளையாட்டுக்களையும் வகுத்திருக்கிறார்கள்; பழங்காலத்திலிருந்து தலைமுறை தலைமுறையாக வந்த விளையாட்டுக்களில், மானஸ சாஸ்திர முறையைத் தழுவிய விளையாட்டுக்களைப் பாகுபாடு செய்திருக்கிறார்கள்; பழையவைகளில் திருத்தவேண்டியவற்

றைத் திருத்தி அமைத்திருக்கிறார்கள்; குழந்தைகள் சுயேச்சையாக விளையாடுவதற்கு ஏற்ற வசதிகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டிலும், தலைமுறை தலைமுறையாக வருகிற குழந்தை விளையாட்டுக்களை மானஸ சாஸ்திர முறைப்படி பாகுபாடு செய்வதும், ஏற்றதென்று தோன்றும் விளையாட்டுக்களைக் குழந்தைகள் விளையாடிப் பார்க்க வசதிகள் அமைத்துக் கொடுப்பதும், உள நூல் கற்றுத் தேர்ந்தவரது கடமையாகும். இன்று பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் விளையாடுகிற விளையாட்டுக்கள் ஒரு விதமாகவும், வீட்டில் விளையாடுகிற விளையாட்டுக்கள் மற்றொரு விதமாகவும் இருக்கின்றன. இவ்விரு தலங்களிலும் விளையாடும் விளையாட்டுக்களை எம்மட்டும் ஒருமைத் தொடர்பு படுத்தி இசைந்த முறையில் அமைக்கலாம் என்பதையும் மானஸ சாஸ்திரிகள் ஆராய வேண்டும். இவை யாவற்றிற்கும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் விளையாட்டு விஷயத்தில் மிகவும் அக்கறையாக இருப்பதுதான் முதல் படி. ஆகையால், பெற்றோர்கள் தமது குழந்தைகளின் விளையாட்டுக்களைப் பற்றி அசட்டையாகவே இருக்கலாகாது.

10. கனவு

கனவு என்னும் இப்பகுதி கற்பனை என்ற தலைப்பி லேயே அடங்குவதாகும். கனவைப் பகற்கனவு, நித்தி ரைக் கனவு என இரு பெரும் இயல்களாக வகுக்கலாம். மனிதன் உலகத்தில் தோன்றிய நாள் முதல் இறக்கும் வரைக்கும் ஒரு நிமிஷமாவது சும்மா இருப்பதில்லை. அவனிடமிருந்து ஓயாமல் தோன்றிக்கொண்டே இருக்கிற செயல்களுக்கு அளவே இல்லை. மனத்தின் விழிப்பு நிலை யாகிய உணர்வு தெளிவுப் புலத்திலும், மனத்தின் அயர்வுப் புலத்திலுமிருந்து செயல்கள் ஓயாமல் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. விழிப்பு நிலையில் இருக்கும் மனத்திற்கு மறதியான ஆசைகளும், விழிப்பு நிலை மனம் நெருக்கி அழிக்க முயலும் துன்ப நினைவுகளும் திரும்பவும் அனுபவிப்பதற்குகந்த இன்பச் சுவை மிக்க ஆசைகளும் அனுபவ முத்திரைகளாகி மன, அயர்வுப் புலத்தில் பதிந்து கிடக்கின்றன. இந்த அனுபவ முத்திரைகள் மனத்தின் விழிப்பு நிலையில் எழுந்து வந்து விளையாட விரும்புகின்றன.

கனவு என்றால் என்ன? உணர்வு தெளிவுப் புலத்தில் ஒருவன் வாழவிரும்புகிற ஆசைகளின் நாடகமே கனவு எனப்படும். கனவுகாணாதவனைப் பொல்லாதவன் என்றே யூதர்களின் பழைய நூல்கள் கூறுகின்றன. மனமும் உடலும் அயர்ந்திருக்கையில் தன்னை வெளிப் படுத்துகின்ற முயற்சி அற்ற ஆன்மா தாறுமாறாக இயங் குவதேயாம். கடவுள் மனிதனோடு கனவிலே பேசுவதாக யூதர்கள் கருதினர். கனவை ஆராயும் முறையை வகுத்த ஸிக்மண்டு ஃப்ராய்டு சாஸ்திரியார் இத்துறையில் பல அதிசய மான உண்மைகளை நமக்கு விளக்கிக் காட்டியிருக்கிறார். கனவு காணாதவர்கள் உலகில் இல்லை என்று நவீன ஆராய்ச்சிகள் துணிந்துரைக்கின்றன. நித்திரையில் காண்கிற கனவுகளை எல்லாம் ஒருவன் விழிப்பு நிலையில் ஞாபகப்படுத்தி வெளியிடமுடியாது. பெரும்பாலும் கனவு கள் மனத்தின் விழிப்பு நிலைக்குப் புலப்படாமலே

மறைவில் நிகழும் இயல்புடையன. கண்ட கனவை உணராத ஒருவனுக்கு யோகுதுயில் விளைத்து அவனுடைய மனத்தை ஆராய்ந்தால், அவன் அக்கனவை வெளியிடுவான்.

I. பகற்கனவு

குழந்தையின் நித்திரைக் கனவைப்பற்றிச் சிந்திக்கு முன் பகற்கனவைப் பற்றிச் சிறிது அறிந்து கொள்வோம். ஆகாயக் கோட்டை, மனக் கோட்டை, முதலிய சொற்றொடர்கள் பகற் கனவையே சுட்டுவனவாம். பகற் கனவு என்பது மனத்தின் ஒரு வகையான விளையாட்டேயாம். இவ்வுலகில் பகற்கனவு காணாதவர் எவரும் இலர். பகற்கனவு யாவருக்கும் பொதுவான ஒரு பொழுது போக்காக அமைவது; இது மனத்தின் செயலுக்கும் உடலின் செயலுக்கும் நிமித்த காரணமாக அமைவதாகும். ஒரு பகற் கனவே பிறிதொரு பகற்கனவுக்கு நிமித்தகாரணமாக அமையும். மேலும் செய்யக்கூடிய ஒரு வினைக்கு அமைப்பு-முறை வகுப்பது போல், பகற் கனவும் எதிரது தழுவிய வினைகளுக்கு அமைப்பு முறை வகுத்து வைக்கும். வினையைச் செய்வதற்கு முன் அதற்குரிய அமைப்பு முறையைச் சிந்திக்கிறோம். ஆட்சியுற்ற கற்பனைத் திறந்தான் இந்தச் சிந்தனைக்குப் பயனாகும். வாழ்க்கையில் நிகழ்வதற்கு அரிய செயல்களுக்கு அமைப்பு முறை வகுப்பதுபோல் பகற்கனவுகள் அமைகின்றன.

வெற்றி உணர்ச்சியில் முடிவுறும் பகற்கனவுகள்

பகற் கனவுக்கு ஒரு கதாநாயகன் உண்டு. இந்தக் கதாநாயகன் கனவு காண்கிறவனாகவே இருப்பான். இவனே வெற்றி வீரனாக விளங்குவான். இன்றேல் பிறரால் துன்பம் அடைகிற வீரனாகத் தோன்றுவான். கனவு காண்பவன் தன்னிடத்தில் இருப்பதாக உணர்கிறவைகளும் உணராதவைகளுமாகிய தகைமையே பகற் கனவு நாடகத்தின் பொருளாக அமையும். 'முந்தி இருத்

தல்' என்னும் இயற்கை உணர்ச்சி குழந்தையின் விளையாட்டிற்குச் சிறந்த நிமித்தகாரணமாக அமைவதுபோல் பகற் கனவிற்கும் அமைகிறது. வெற்றிவீர உணர்ச்சியே பகற் கனவில் பொதுவாக அமைவது. இதுவே ஆரோக்கியமான நிலையில் இருக்கிற மனத்தின் இயல்பு எனலாம்.

பிரம்மசாரி ஒருவன் தானம் வாங்கப் போன பொழுது, அவன் தலையில் இட்ட எள்ளு விதைகளில் ஒன்று கீழே விழாமல் உறுத்திக்கொண்டிருந்தது. வயிறு புடைக்க விருந்து உண்டு, கிடைத்த தானங்களை மூட்டையாகக் கட்டித் தலையிலே சுமந்து கடும் வெயிலில் நடந்து சென்ற இவ்வந்தணன் ஓர் ஆலமரத்தின் அடியில் நிழலுக்கு ஒதுங்கி இளைப்பாறினான். தலையில் இருந்த எள்ளு உறுத்தியது. உடனே, அதனைச் சொறிந்து எடுத்தான். அதனைக் கையில் வைத்துக்கொண்டு எண்ணமிட்டான். ஓர் எள் விதை முளைத்துச் செடியாகி ஒரு பிடி விதை அளித்தது. பிடி விதை முளைத்துப் படிக்கணக்கில் பலன் அளித்தது. ஆலமரத்தின் அடியில் இருந்த அந்தணன் பெரிய எள்ளு வியாபாரியும் எண்ணெய் வியாபாரியுமானான். முடிவிலே மாடமாளிகையில் வாழ்பவனாகத் தன்னைக் காணலுற்றான். தன் காதல் மனையாளுக்குப் பிறந்தகுழந்தையையும் கண்டான். மனைவி அருமந்தன்ன குழந்தையை அடிப்பதாகக் கனவு கண்டான்; அந்தணனுக்குக் கோபம் பொங்கி விட்டது. உடனே தன் மனையாளை "இப்படி உதைப்பேன்" என்று கூறி, அண்மையில் இருந்த தான மூட்டையைப் பலமுறை ஓங்கி உதைத்தான். மூட்டையில் இருந்த காயும் கனியும் தானியமும் மிதியுண்டு பாழாயின. இத்தகைய பகற்கனவுக் கதைகள் பல உள்ளன. அல்நாஷ்கரின் கனவும், தயிர் விற்றவள் கண்ட கனவும் பிறவும் நகைச் சுவை விளைப்பனவாம்.

பகற்கனவு படிப்படியாக முதிர்ச்சி அடைந்து தீவிர நிலையை அடைந்து முடிவில் காரிய-இந்திரியங்களை இயக்கித் தெளிவான செயலில் இறக்கிவிடும். பார்ப்பனன் கண்ட பகற்கனவு தானம் கிடைத்த பொருள்களை மிதிக்கின்ற செயலிலே முடிவுற்றது. சிலர் பகற்கனவின் விளை

வாக வாய்விட்டுத் தம்முடனே பேசிக்கொள்வார்கள். கோபத்தின் உச்சநிலை அடைகிற பகற்கனவு அண்மையில் இருக்கும் பொருளை ஓங்கிக் குத்துவதில் முடிவுறும். இத் தகைய புறத்தோற்றமான ஏதேனும் ஒரு செயலில் பகற் கனவுகளிற் சில முடிவடையும். தணியாத ஒரு ஆசை பகற்கனவினால் தணிவு அடைகிறது. உண்மை உலகில் நிறைவேறாத விருப்பத்தைத் தணித்துக்கொள்ளப் பகற் கனவுகள் பெரிதும் உதவுகின்றன. பெரும்பாலும் பகற் கனவுகள் ஒருவரது தற்சுட்டுப் பெருமையை நிலைநாட்டு வதில் முடிவுறும். தானம்வாங்கின அந்தணன் தன் அதி காரத்தைக் காட்டினான். தன்னை மணக்க வந்தவர்களுக்கு உடன்படாமையைத் தலை அசைப்பால் உணர்த்திய ஆய மங்கை தற்சுட்டுப் பெருமையைக் குறிப்பிட்டாள். அல் நாஷ்கரும் தற்சுட்டுப் பெருமையை நாடிக் கண்ணாடிச் சாமான்களை உடைத்தான். சில தருணங்களில் பகற்கன வின் கதாநாயகர் கனவு காண்போராக இரார்; கதாநாய கரது நிலையில் மற்றொருவரை நெருங்கிய உறவாக்கிப் பகற் கனவு காண்பர். தாய் தன் மகனைப் பகற்கனவின் கதாநாயகனாக்கித் தற்சுட்டுப் பெருமையைத் தணித்துக் கொள்வாள்.

ஒருவனுடைய உற்ற நண்பர்கள் அவனைத் தவறாக நினைத்துப் பலவாறு பேசுகிறார்கள். மற்றொருவனுடைய குடும்பத்தினர் அவனைப் பலவாறு துன்புறுத்துகின்றனர். வேறொருவனுடையகாதலி அவனைப் புறக்கணித்துப் புதியன் ஒருவனைத் தேடுகிறாள். இன்னொருவன் உயிருக்கு உயிராகப் போற்றிவந்த நோக்கங்களை அடைய முடியாமல் வருந்துகிறான். பலரும் பலவாறான நிமித்தங்களால் பல வகையில் துயர் அடைகின்றனர். 'இவர்கள் தங்களுக்கு இயல்பாக அமைந்திருக்கின்ற நிலைக்கும் அதிகமாகத் துன்பங்களும் துயரங்களும் சேர்ந்துவிட்டன என்று கருதி வீணே வருந்துதல் எதன்பொருட்டு? இங்ஙனம் வருந்துதல் விரும்பத் தக்கதோ? இல்லையே. வீணே வருந்துவதனால் ஒருவன் அடையக்கூடிய நன்மை என்ன?' என்று சிலர் கேட்கலாம். 'குழுவினருக்குள் முந்தி நிற்றல்'

என்ற இயற்கை உணர்ச்சியை நிமித்த காரணமாகச் சுட்டுதல் ஏற்றதன்று.

சுப்பனும் கிட்டுவும் ஐந்து வயதுச் சிறுவர்கள். இருவரும் ஓடி விளையாடிக் கொண்டிருக்கையில், கிட்டு கீழே விழுந்தான். காலில் காயம் பட்டுச் சிறிது மீந்தோல் பெயர்ந்தது. உடனே அவன் அழத் தொடங்கினான். அழுகைச் சத்தம் கேட்டுத் தாய் ஓடி வந்தாள். கிட்டுவின் காயத்தைப் பார்த்தாள். "அழாதே, சின்னக் காயம் தான். வா, மருந்து போடுகிறேன்," என்றாள். உடனே சுப்பன், "ஆமாம் மாமி, இவன் இந்தக் காயத்திற்கு அழுகிறானே. என் காலில் இந்த இடத்திலே நிரம்பப் பெரிய காயம் பட்டது. டாக்டர் அதைத் தைத்தார். இவனுக்கு அந்தமாதிரிக் காயம் பட்டால், இவன் சகிக்கவே மாட்டான்" என்றான். சுப்பனைப் போல் எத்தனையோ சிறுவர்கள் தங்களுக்கு நேர்ந்த துன்பத்தையும் துயரத்தையும் பெருமைப்படுத்திப் பேசுகிறார்களே. ஏன்? "தற்போது உனக்கு நேர்ந்திருக்கும் சிறு கீற்றுக் காயத்தைவிட என்னுடைய பழைய வெட்டுக் காயம் பெரியது. ஆகையால், நான் துன்பத்தைச் சகிப்பதில் உன்னிலும் ஆற்றல் உடையவன். என் காயம் உன்னை விட என்னை ஏற்றமாகக் காட்டிக் கொள்வதற்குச் சான்றாக அமைந்துள்ளது," என்பதன்றோ சுப்பனது மொழியின் கருத்து. அங்ஙனமாயின், சுப்பனும் முந்தி நிற்றல் என்ற இயற்கை உணர்ச்சிப்படி தற்சுட்டுப் பெருமையை நாடியவன் அன்றோ?

பள்ளிக்கூடம் கலைந்ததும் சிறுவர்கள் வீட்டுக்குச் சென்றார்கள். தாய் குழந்தைகளுக்குச் சிற்றுண்டியும் காப்பியும் கொடுத்தாள். எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். பிந்தி வந்த கமலம் தாய் தனக்கு அளித்த சிற்றுண்டியின் அளவைத் தன் உடன் பிறந்தவரது சிற்றுண்டியின் அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தாள். அவளுக்குத் தன் பங்கு மிகவும் குறைவாகத் தோன்றியது. அன்று முதல் அவள் நாள்தோறும் தனக்குக் கிடைத்த உணவுப் பங்கை மற்றவர்களுடைய உணவுப் பங்கோடு

ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கினாள். தாய் தன்னைப் புறக்கணித்ததாக அவளுக்குத் தோன்றியது. சில தினங்கள் சென்றபோது, கமலம் பகற்கனவு காணத் தொடங்கினாள். "நாளைக்குத் தலைவலி என்று சொல்லி வகுப்பிலிருந்து முந்தியே வீடு திரும்புகிறேன். அப்பொழுது அம்மா தூங்கிக்கொண்டிருப்பாள். நான் மற்றவர்களுக்காக வைத்திருக்கும் சிற்றுண்டியை எல்லாம் எடுத்துத் தின்றுவிடுகிறேன். மற்றவர்கள் எல்லாரும் மாலையில் வீட்டுக்கு வந்ததும் கூச்சல் இடுவார்கள். அப்பொழுது அம்மா என்னை அடிப்பாள். நான் எங்கேயாவது ஓடிப்போய்விடுவேன். யார் வீட்டுக்குப் போகலாம்? குப்புப் பாட்டி வீட்டுக்குப் போவேன். அந்தப் பாட்டிக்கு என்னிடம் ரொம்ப இஷ்டம் உண்டு. நான் கேட்பதை எல்லாம் தருவாள். என்னை எல்லாரும் தேடுவார்கள். நன்றாய்த் தேடட்டும். அவர்களை அழவைக்கிறேன். இந்த உலகத்திலே என்னைப் போல் சிறுமைப் படுகிற குழந்தைகளையே பார்க்கமுடியாது," என்றெல்லாம் பகற்கனவு கண்டுகொண்டிருந்தாள். கமலத்தின் மனம் தனக்கு நேர்ந்த குறைவை இந்தப் பகற்கனவிலே நிறைவாக்கி மகிழ்ந்துகொண்டிருந்தது.

வயது முதிர்ந்தவர்கள்கூடத் தங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களையும் துன்பங்களையும் சொல்லும்பொழுது, ஒன்றுக்குப் பத்தாகப் பாரித்துச் சொல்வார்கள். ஒன்றை நூறாக்கிச் சொல்லுகிறவர்களும் உண்டு. இவர்கள் ஏன் இப்படிப் பேசுகிறார்கள்? 'முந்தி யிருத்தல்' என்னும் இயற்கை உணர்ச்சியின் ஏவுதலால் தற்சுட்டுப் பெருமையை நாடியே இப்படிப் பேசுகிறார்கள். சிறுவர்கள் கூடி இருந்து பேசிக் கொண்டிருக்கும்பொழுது, ஒரு சிறுவன், "என் அப்பா கடிக்க வந்த ஒரு பாம்பைத் தடியால் அடித்துக்கொன்றார்," என்று சொன்னான். உடனே மற்றொரு சிறுவன், ஒருநாள் "என் அப்பா, கொல்வதற்கு வந்த பெரிய புலியை அடித்துக் கொன்றுவிட்டாரே. அந்தப் புலித்தோல் இப்பொழுதுகூட எங்கள் வீட்டில் இருக்கிறதே" என்றான். இந்தச் சம்பாஷணையில் கலந்து

கொண்ட எந்தச் சிறுவனுக்கும் தாழ்ந்துபோக விருப்பம் இல்லை. ஆகையால், சிறுவர்களின் பெற்றோர் செய்த சாகசச் செயல்கள் படிப்படியாகப் பெருகி வளர்ந்தன. எல்லோரிடத்திலும் தற்சுட்டுப் பெருமை குடிகொண்டிருந்தது. ஆகையால், அவர்களுடைய சம்பாஷணை பெரிய போராகவே முடிந்தது.

கமலம் முதல் நாள் பள்ளிக்கூடத்தில் இருந்து பிந்தி வந்தபொழுது, தாய் அளித்த சிற்றுண்டி மற்றவர்களின் அளவில் சற்றே குறைந்திருக்கலாம். எனினும், ஒருமுறை குறைவைச் சிந்திக்கத் தொடங்கிய கமலத்திற்குத் தன் தாய் ஒருதலை-அன்பு பாராட்டுவதாகத் தோன்றிற்று. வர வர, அவளுக்கு உலகமே இருண்டு வருவதுபோலிருந்தது. சின்னஞ் சிறு குறை மிகப் பெரிய குறையாகி வளர்ந்தது; முடிவிலே, அவளுடைய தாய் கொடுமை செய்பவளாகவே தோன்றினள். இங்ஙனம் துன்புறுகின்ற மனம், தனக்கு இயல்பான நிலைக்கு வந்து பிற அலுவல்களில் புகவேண்டுமாயின், திருப்தி செய்யவல்ல பகற்கனவு ஒன்று இடையிலே தோன்றவேண்டும்.

பகற்கனவின் இருவகைக் கதா நாயகர்களுள், துயர் அடையும் வீரன் தன்னை உண்மை தவருத அரிச்சந்திரனுகவும், அறம் தவருத தரும புத்திரனுகவும், சிறந்த ஒருறிக்கோளுக்காகத் துன்புறும் தியாகியாகவும் கருதுவான். தன் மன நிலையைப் பிறர் அறியவில்லை என்று எண்ணுவான். இந்த வகுப்பைச் சார்ந்த வேறு சிலர் தங்களைப் போன்ற கொடியவர் உலகில் இல்லை எனவும் தாம் எதற்கும் துணிந்தவர்கள் எனவும் கனவு காண்பார்கள். ஒருவனிடத்தில் உள்ள குற்றத்தையாவது குறையையாவது பிறர் சுட்டிக் காட்டினல், உடனே அவன் பெரிய பச்சாத்தாபத்தோடு ஏதோ கொடிய பாவத்தைச் செய்து துயர் அடைபவன் போலக் கனவு காண்பான். இங்ஙனம் பகற்கனவு காண்பவன் தன்னைத் தலைசிறந்த பாவி என்று உணர்ந்து துயருறுகிருன். இந்த உணர்வு 'முந்தி இருத்தல்' என்ற உணர்வைச் சார்ந்ததேயாம். பிரதான

மான பாவி என்று உணர்வதனல் ஒருவனுடைய தற்சுட்டுப் பெருமைக்குத் திருப்தி ஏற்படுகிறது.

பருவம் அடைகிற ஆண்களும் பெண்களும் சுதந்திர தாகம் உடையவர்கள். தங்கள் பெற்ருேரின் ஆட்சியிலிருந்து விடுதலே அடைய விரும்புகிருர்கள். இங்ஙனம் சுதந்திரம் அடைய விரும்புகிறவர்களே அடக்கி ஆள விரும்புகிற பெரியவர்கள் இடையூறு செய்பவர்களாகவே இந்த இளேஞருக்குத் தோன்றுவார்கள். ஆகையால், இளேஞர்கள் தமக்குப் பிடித்த நெறியை வகுத்துக் கொண்டு அதில் செல்ல விரும்புவார்கள். "நான் இவர்களுக்குச் சரியான பாடம் கற்றுக் கொடுக்கிறேன். என்னேப் பொல்லாதவனுகச் செய்தவர்கள் இவர்களே என்று உலகம் அறியச் செய்கிறேன். இவர்களேப் படாத பாடெல்லாம் படுத்தி ஒரு ஆட்டம் காட்டுகிறேன்," என்று இந்த வகுப்பைச் சார்ந்த குமரனும் குமரியும் கருதுவார்கள்.

ஒருவனுடைய மனப்புண்ணே முகக் குறியால் நன்ருய் அறிந்துகொள்ள முடியும். புண்பட்ட நெஞ்சுடையவன், அப்புண்ணுக்குக் காரணமானவர்களுக்கு விரோதமாக எண்ணுகிருன் என்பதையும் அவனுடைய முகக்குறிகளால் நன்ருய் அறிய முடியும். துன்புறும் வீரக் கனவுகள் ஒருவனே நியாயத்துக்காகப் பாடுபடும் தியாகியின் நிலேயிலோ, எதற்கும் துணிந்த வீரனின் நிலேயிலோ அளவற்ற துன்பத்தைச் சகிக்கும் ஆற்றலுடைய வீரனின் நிலேயிலோ உயர்த்திவைத்து அவனுக்கு இன்பம் அளிக்கின்றன.

பகற்கனவில் தோன்றுகிற கதாநாயகர்களே, படை எடுத்துச் சென்று வெற்றிமாலே சூடுகிற வீரனுக்கும், படை எடுத்துவந்த பகைவனேத் தாக்கிப் போராடி வெற்றி பெறுகின்ற வீரனுக்கும் ஒப்பிடலாம். எள்ளுக் கணக்குப் போட்ட பார்ப்பனனும், அழுக்குப் படிந்த கந்தைச் சேலே கட்டிக்கொண்டு தயிர் விற்கச் சென்ற ஆயமங்கையும், பிரபுக்களின் மறுகிலே கந்தல் துணி கட்டிக்கொண்டு கண்ணுடிச் சாமான் விற்றவனும் தத்தமக்கு அமைந்த

சிறுமை உணர்ச்சியை வென்றடக்கப் படை எடுத்துச் சென்றார்கள். இந்த வீரர்கள் தற்சுட்டுப் பெருமையை நாடினார்கள். மனம் பகற்கனவில் சிறுமை உணர்ச்சி நீங்கி மகிழ்ச்சி அடைந்தது. வெற்றி வீரராக நின்றார்கள். நினைவுலகத்தின் உண்மை நிலையில் தானம் கிடைத்த பொருள் நஷ்டமானால் என்ன? தயிர்க்குடம் உடைந்தால் என்ன? கண்ணாடிச் சாமான்கள் உடைந்தால் என்ன? பகற்கனவில் அனுபவித்த இன்பத்திற்கு நினைவுலகின் உண்மையில் நேர்ந்த நஷ்டம் ஒரு பொருட்டாமா? அவ்வாறே படை எடுத்து வரும் சூழ்நிலைகளால் சிறுமை உணர்ச்சிக்கு ஆளாகாமல் வெற்றி வீரனாக விளங்க விரும்பும் துயரக் கதாநாயகனும் பகற்கனவில் இன்பம் அடைகிறான்.

பகற் கனவுக்குரிய பிற நிமித்தங்கள்

கற்பனைத் திறத்தின் விளையாட்டால் திருப்தி அடைகிற ஆசைகளிற் பெரும்பான்மையும் 'தன்னிலை அறைதல்' என்ற தலைப்பில் அடங்கும். இந்தத் தலைப்பில் காதலைச் சார்ந்த பகற்கனவுகள் யாவும் அடங்குவன. காதற் சுவையான பகற்கனவுகளே மானிடத் தொகுதியின் பெரும் பொழுதையும் போக்குவன. காதற் கனவுகளைத் தனியாகப் பிரித்து விட்டால், எஞ்சிய கனவுகளை வெகு எளிதில் தனித் தனித் தலைப்புக்களில் வகுக்கலாம். நகைச் சுவைப் பகற்கனவு என்னும் தலைப்பு ஒன்று வகுத்து, இதன்கீழ் சில கனவுகளைப் பாகுபாடு செய்யலாம்.

நகைச்சுவைப் பகற்கனவு

தட்டில் புத்தகங்களை அடுக்கிக் கொண்டிருந்த மரகதம் 'கொல்' என்று சிரித்தாள். "ஏன் சிரிக்கிறாய்?" என்று தாய் கேட்டாள். "எதையோ நினைத்துக் கொண்டேன்; சிரிப்பை அடக்க முடியவில்லை; சிரித்து விட்டேன்." என்று சொல்லிக்கொண்டே மரகதம் மேலும் சிரித்தாள். "அதென்ன? அப்படிச் சிரிக்கிறாயே; என்னிடம் சொல்லிச் சிரிக்கக்கூடாதா?"

என்று தாய் கேட்டாள். கற்பகத்தின் தமையன் மாம் பழத்தின் தோலுக்குச் சற்றுமே பழுது வராமல் அதற்குள் இருந்த தசைகளையும் ரசத்தையும் உண்டு விட்டான்; அதற்குள் இருந்த மெல்லிய கொட்டையையும் வெகு திறமையாக நீக்கிவிட்டான். இந்தத் தோல் வாசலில் கிடந்தது. மரகதம் இந்தத் தோலை எடுத்து அதற்குள் கந்தைத் துணிகளைத் திணித்து நேர்த்தியான பழுதற்ற மாம்பழம்போல் செய்து தன் தோழி கமலத்தை ஏமாற்றுவதற்காக மாடியில் மேசைமீது வைத்திருந்தாள். மாலையில் தந்தை வரும் நேரம் ஆயிற்று. மரகதத்தின் தந்தைக்கு மாம்பழம் என்றால் வெகு ஆசை. அவர் முன் பின் விளைவுகளைச் சிந்தியாமல் மாம்பழத்தைக் கண்டதும் எடுத்துக் கடித்துத் தின்றுவிடுவார். மாலையில் காரி யாலயத்திலிருந்து திரும்பிவரும் தந்தை அதை எடுத்துக் கடித்தால், அது நகைப்புக்குரிய செயலாக இருக்கும். கடித்தவுடனே உணரும் ஏமாற்றத்தை மறைக்க அவர் என்ன செய்வார் என்று மரகதம் நினைத்தாள். அடுத்த நிமிஷம்,அந்தச் செய்கையை மறைக்க முயலும் பொழுதே அவரைக் கண்டு பிடித்துவிட்டால் அவருக்கு உண்டாகும் மனோவிகாரங்களையும் சிந்தித்தாள். அவளால் அடிக்கமுடி யாத நகைப்புக்கிளர்ந்தது. இதை அவள் தாய்க்கு விளக்கினாள். பகற்கனவை வெளியிட்டால் அதன் நகைச் சுவை பழுதுறும். மரகதத்திற்குச் சிரித்துப் பொழுது போக்க ஒன்றும் அகப் படவில்லை. புத்தகங்களை எல்லாம் சீராக அடுக்கி வைக்கலாம் என்றுநினைத்து அந்த வேலை யில் புகுந்தாள். காலையில் தோழியை ஏமாற்றுவதற்காக ஆயத்தம் செய்த மாம்பழத்தோல் நினைவிற்கு வந்தது. அதனைச் சார்ந்து பகற்கனவு எழுந்தது. சிரித்துப் பொழுதுபோக்க ஒன்றும் அகப்படாமல் வருந்திய மரக தத்தின் ஆசையைப் பகற்கனவு திருப்தி செய்தது.

இசைக் கலையில் தேர்ந்தவன் ஒருவன் ஒன்றும் செய்வதற்கு இல்லாத நேரத்தில் தன் மனத்திலேயே புதிய இசை ஒன்றை யாத்து, அதனைப் பலர்முன் பாடிக் காட்டுவது போலப் பகற்கனவு காண்பான். சித்திரம்

எழுதுவதில் தேர்ந்த சித்திரக்காரன் பொழுது போகாத நேரத்தில் உலகம் வியக்கத் தகுந்த சித்திரம் ஒன்றை எழுத விரும்பியவன் போல் காகிதத்தில் பல வகையான வளை கோடுகளை கிறுக்கிவைப்பான். பரீட்சைகள் எல்லாம் முடிவுற்றன. விடுமுறை நாட்கள் நெருங்கிவிட்டன. அப்பொழுது மாணாக்கன் பகற்கனவு காணத் தொடங்குவான். விடுமுறை நாட்களில் தான் அடையக் கூடிய சுற்றுப் பிரயாண இன்பங்களையும், செய்யக் கூடிய காரியங்களையும் முன்னரே பகற்கனவாகக் கண்டு இன்பம் அடைய முயலுவான். தந்தை மாலையில் வாங்கிவருவதாகச் சொல்லிய பொம்மையைப் பற்றிக் குழந்தையும் பகற்கனவு காண்பாள். இவ்வாறே மானிடர் யாவரும் சிறு குழந்தைப் பருவத்திலிருந்து இறக்கும் வரைக்கும் வாழ்க்கையில் திருப்தி அடையாத ஆசைகளைப் பகற்கனவுகளால் திருப்தி செய்துகொள்கின்றனர்.

II. நித்திரைக் கனவு

மானிடப் பொது வாழ்க்கையில் எத்தகைய பொருளும் இன்றிக் கனவுகள் தோன்றி மறைவன என்று சிலர் கருதுகின்றனர். தமக்குத் தெரியாத மறைபொருள்கள் கனவில் அடங்கி இருக்கின்றன என்று வேறு சிலர் கருதுகின்றனர். பெரும்பாலோர் கனவைப்பற்றி நினைப்பதே இல்லை. உறக்கத்தின் இயல்பாகிய ஒரு நிகழ்ச்சியே கனவு எனவும், இதனைப்பற்றி விழிப்பு நிலையில் சிந்தித்துப் பொழுதை வீணாக்குவது தகுதியன்று எனவும் மற்றும் சிலர் கருதுகின்றனர்.

கனவின் தன்மை

நாம் கனவைப்பற்றி ஆராயாமல் வாழ்வதற்குக் காரணம் என்ன? விழிப்பு நிலையில் இருக்கிற நமது மனம் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் கனவு நிகழ்ச்சிகள் அமைவன அல்ல என்பது முதற் காரணம். தெருவில் நின்றுகொண்டிருப்பவன் திடீரென்று மூன்றாவது மாடிக்குக் குதித்து விடுவான். கனவில் காண்கிற ஒருவன் திடீ

றென்று வேறொரு மனிதனாக மாறி விடுவான். மண வினைக் காட்சி இமைப் பொழுதில் பிணவினைக் காட்சி யாகத் தோற்றமளிக்கும். விழிப்பு நிலையில் இருக்கிற மனம் இதனை எங்ஙனம் ஒப்புக்கொள்ளும்? கனவு நிலை யில் நிகழ்ச்சிகள் தொடர்பற்று இருப்பன என்பதோடு, விழிப்பு நிலையில் நினைப்பதற்கும் அரிய இயல்போடு தோன்றும். விழிப்பு நிலையிலே தந்தையிடத்தில் அளவற்ற மதிப்பும் வணக்கமும் கொண்டுள்ள சிறுவன், கனவு நிலை யில் அத் தந்தையைக் கொல்வதுபோல் கண்டு மகிழ் கிறான். பிள்ளையைப் பெற முடியாத நிலையில் இருக்கிற மலடி கனவில் ஒரு பிள்ளையைப் பெற்று, அதனோடு கொஞ்சிக் குலாவி மகிழ்வாள். ஒருவன் தன்னுடல் ஈமத் தின்மேல் எரிவதையும், கைகால்கள் வெட்டுண்டு கிடப் பதையும் காண்பான்.

கனவில் காண்கிற செயல்களின் முரண்பாடுகள் கனவு காண்பவனுக்குப் புலப்படா. நினைப்பதற்கும் அரிய கனவு நிகழ்ச்சிகள் விழிப்பு நிலையில் நகைப்பை விளைக் கும். தத்துவ நூல் வல்லானும், இத்தகைய நிகழ்ச்சிகளைக் கனவில் கண்டு மகிழ்கிறான். இவை தத்துவ ஞானிக்கும் இன்பத்தை விளைப்பன. ஒருவனது தத்துவ நூல் புலமையும், விழிப்பு நிலையிலேதான் அவனுக்குப் பெரு மையை அளிக்கும். கயிறு, ஏணி, பாலம் படிக்கட்டு முதலிய துணைக்கருவிகள் இன்றியே, கீழுக்கும் மேலுக் கும், இக்கரைக்கும் அக்கரைக்கும், மலைக்கும் மடுவுக்கும் ஏறியிறங்கி ஓடித் திரிகிற வித்தைகளை நியாய வாதமும் ஒப்புக்கொள்ளாது; தத்துவ ஞானமும் ஒப்புக்கொள் ளாது. ஆகையால், கனவு கனவேயாகி நினைவுலகிற்குப் பயன்படாமற் போவது என முடிவுகட்டி விடுகிறோம்.

கனவு எங்கே உதயமாகிறது?

உணர்வு தெளிவுப் புலத்தையும், மன அயர்வுப் புலத் தையும் பற்றி முன்னரே பல தருணங்களில் குறித்துள் ளோம். நினைவுகள் உணர்வு தெளிவுப் புலத்திற்கு உரியன. கனவுகள் மன அயர்வுப் புலத்திற்கு உரியன.

மனத்தின் மேற்பரப்பிலே காண்பது உணர்வு தெளிவுப் புலம். ஒருவனுடைய உணர்வு தெளிவுப் புலத்திற்கு அமைந்திருக்கிற மூர்த்தி விசேஷத்திற்கு ஏற்றவாறு பேசுதல், நடத்தல், சிரித்தல், இருத்தல், உழைத்தல் முதலிய பல செயல்கள் அமைகின்றன. இப் புலத்தைக் கடந்த ஆழ்ந்த நிலையிலே மன அயர்வுப் புலம் இருக்கிறது.

உலகில் விரும்புவன அனைத்தும் கிடைப்பன அல்ல; நினைப்பன அனைத்தும் நிகழ்வன அல்ல. உணர்வு தெளிவுப் புலத்தில் நிகழாததும், நிகழக்கூடாததும் ஆகிய வினைகள், விருப்பங்கள் யாவும் மன அயர்வுப் புலத்தில் அடங்கி, மறைந்து கிடக்கின்றன. உணர்வு தெளிவுப் புலத்தின் செயல்களுக்குப் போக்குவாயும் செயல் திட்டமும் அமைந்திருத்தல் போலவே மன அயர்வுப் புலத்தின் செயல்களுக்கும் உண்டு. மன அயர்வுப் புலம் விரும்பியதைக் கனவிலே பெற்றுத் திருப்தியடைகிறது. குழந்தை வேண்டும் என்று தவம் செய்கின்றவள் கருப்பைக் கோளாறுகளால் குழந்தை பெறாத நிலைமையை அடையும்பொழுது, திருப்தி பெறாத இந்த ஆசை மன அயர்வுப் புலத்தில் ஒடுங்கிப் பதுங்குகிறது. ஆசை அழிவற்றது. ஆசை என்றைக்கேனும் செயலில் முடிவடைய வேண்டும். நமது தத்துவ ஞானங்கள் ஆசையை அறுத்தெறிய வற்புறுத்துகின்றன; திரும்பத் திரும்பப் பிறப்பதற்குக் காரணமாவதனாலே 'ஆசையை அறுமின்கள்' என்று ஆத்துமீய நூல்கள் ஓலமிடுகின்றன. விரும்பியதைப் பெறும் பொருட்டே மறு பிறப்பு இன்றியமையாதது என்று நமது பழைய நூல்கள் கூறுகின்றன. மறுபிறப்பு இன்றி இப்பிறப்பில் தானே விரும்பியதைப் பெறுகிற ஆற்றல் மன அயர்வுப் புலத்திற்கு உண்டு.

உணர்வு தெளிவுப் புலத்தில் நிறைவேறாத ஆசைகள் ஒன்றன் பின் ஒன்றாய் எழுந்து மன அயர்வுப் புலத்தில் படிந்து மனத்தின் மறு உலகமாகிறது. 'இம்மை' எனத் தகும் மன உணர்வு தெளிவுப் புலத்தினின்று 'மறுமை' எனத்தகும் மன அயர்வுப் புலம் தோன்றுகிறது. வெகு விளக்கமாய் வரையறுத்துச் சொல்லக்கூடிய நிலையில்

அமைந்த உணர்வு தெளிவுப் புலத்திநின்றுதான், விளங் காததாய், விதந்து உரைப்பதற்கு அரியதாய், மறை பொருளாய் அமைகிற மன அயர்வுப் புலத்தின் செயல்கள் யாவும் தோன்றுகின்றன. வாழ்க்கை அனுபவ முத்தி ரைகள் எல்லாம் மன அயர்வுப் புலத்தை உருவாக்கி ஊட்டிவளர்க்கின்றன. மன அயர்வுப் புலத்தின் நாயகன் வாழ்க்கை அனுபவம் என்னும் தாய்க்குத் தெரியாமலே பிறந்து, அவள் மடியில் வளர்ந்து மறைவிலே வாழ்கிறான். இந்தப் புலத்தின் தலைவனுக்கு இன்பத்தைத் தருகிற கனவுகளுக்குத் தேவையான கதைகளை ஆக்கிக் கொடுப் பது மனத்தின் உணர்வு தெளிவுப் புலமேயாம். கனவில் காண்கிற காட்சிகள் அனைத்தும் ஒருவனது விருப்பத் திற்கு ஏற்ப மாறியும் திருத்தியும் அமைகிற வாழ்க்கைச் சித்திரங்களேயாம்.

கனவைப்பற்றிய அபிப்பிராயங்கள்

உணர்வு தெளிவுப் புலத்தில் எழுகிற சிந்தனைகளைத் தான் நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். மன அயர்வுப் புலத்தின் இயக்கங்களைப்பற்றிய அறிவனைத்தும் அனுமானங்களால் தோன்றியவை. மன அயர்வுப் புலத் திற்குப் பிறப்பிடமாகிய உணர்வு தெளிவுப் புலத்தை விஞ்ஞான ரீதியாக ஆராயப் பலவழிகள் உள்ளன. ஆனால், மன அயர்வுப் புலத்தை ஆராய்வதற்குக் கனவு, மறதி, நாப் பிறழ்தல், எழுத்துப் பிறழ்தல், தன்னுணர்வின்றி ஆற்றும் செயல்கள் முதலிய சில கருவிகளே உதவு கின்றன; இவையனைத்திலும் கனவே தலைமை பெற்றது. கனவு எதிர்கால நிகழ்ச்சிகளை அறிவிப்பது என்று சிலர் கருதுவர்; கால, இட எல்லைகளைக் கடந்து செல்லும் தன்மை வாய்ந்தது என்று வேறு சிலர் கருதுவர்; ஆன்மா கனவின் வாயிலாகத் தன்னை வெளிப்படுத்துகிறது என மற்றும் சிலர் கருதுவர். இக் கொள்கைகளை ஒவ்வொன் ருய் ஆராய்ந்து பார்ப்போம்.

ஸிக்மண்ட்டுஃப்ராய்டு, ஆல்ஃப்ரெட்டு ஆட்லர், ஸி.ஜி. யுங் ஆகிய மூன்று அறிஞரும் செயலாற்றுவதற்கு வழி

யின்றி அடங்கிக் கிடக்கின்ற மனத்தின் ஆசைகளே கனவாய் எழுகின்றன என்னும் பொதுக்கருத்தை உடைய வர்கள்; எனினும் எந்த அவா, மன அயர்வுப்புலத்தில் கனவாய் எழுகிறது என்பதைப் பற்றி இம்மூவரிடையே அபிப்பிராயபேதங்கள் தோன்றுகின்றன. பால்மயச்சார் பான ஆசைகளுக்கு உணர்வுதெளிவுப்புலத்தில் போதிய அளவு வரவேற்பும் ஆதரவும் கிட்டாதபோது, அந்த ஆசைகள் மன அயர்வுப்புலத்தில் பதுங்கியிருந்து, கனவு நிலையில் வெளிப்பட்டுத், தமக்கு விருப்பமான முறையிலே நாடகமாடித் திருப்தி அடைகின்றன என்று ஃப்ராய்டு கூறுகிறார்.

ஃப்ராய்டு சாஸ்திரியாரது கருத்து ஆல்ஃப்ரெடு சாஸ்திரியாருக்கு ஏற்புடையதாக இல்லை. உலகில் கனவு காணுதவர்களே இல்லை எல்லாக் கனவுகளையும் பால்மயத் தோடு தொடுத்துவிட்டால், உலகில் உள்ளவர்கள் அனை வரும் காமநோயால் வருந்துபவர் என்றல்லவோ பொருள் படும். ஆகையால் ஃப்ராயிடின் கூற்றை மறுப்பதற்காக ஆட்லர் ஆராய்ச்சியில் புகுந்தார். சந்தான வேட்கை என்பது எவ்வுயிரிடத்தும் இயல்பாக அமைந்த இயற்கை உணர்வாகும். ஃப்ராய்டு இந்த இயற்கை உணர்வைக் கனவுக்கு அடிப்படையாக்கினர். உயிர்களிடத்தில் காண் கிற மற்ருெரு இயற்கை உணர்வு முந்தி இருத்தல்.' ஆட்லர் இத்த இயற்கை உணர்வைக் கனவுகளுக்கு அடிப்படையாக்கினர். இத்த விருப்பம் கலப்பற்ற தனி நிலையில் இருக்கிறது. முதலாளிக்கு அடங்கி நாடோறும் மாடாய் உழைக்கிற தொழிலாளி உறக்கத்தில் தன்னை வருத்தித் தொழில் செய்விக்கிற முதலாளி அஞ்சும் வீரனுகக் கனவு கண்டு மகிழ்கிருன். உடலின்கண் ஏதேனும் உறுப்பு ஒன்றை இழந்த காரணத்தால் தன் தோழரிடையே சிறுமை உற்று வருந்துகிற சிறுவன் கனவில் தன் தோழர் கண்டு அஞ்சும் அதிசயச் செயல் களைக் காட்டித் தன் சிறுமை உணர்ச்சியைத் தவிர்த்து, முந்தி இருத்தல் என்னும் இயற்கை அவாவைத் திருப்தி செய்கிருன். கனவு திருப்தி அடையாத ஆசைகளைத்

திருப்தி செய்வது. புதிய ஆசைகள், எதிர்காலத்தில் அவற்றை நிறைவேற்றித் திருப்தி அடைய வேண்டிய முறைகளைக் கனவாக அமைக்கின்றன.

ஸி. ஜி. யுங் சாஸ்திரியாருக்கு ஃப்ராய்டு கூறியதும் பிடிக்கவில்லை; ஆட்லர் கூறியதும் பிடிக்கவில்லை. கனவில் இருக்கிற ஆசையே நினைவிலும் தோன்றுவதாகவும், நினைவில் இருக்கிற ஆசையே கனவிலும் தோன்றுவதாகவும் கூறுவது எப்படி? அப்படியானால், கனவே நினைவாகி விடலாமே. மன அயர்வுப் புலத்திற்கும் உணர்வு தெளிவுப் புலத்திற்கும் நேரிடுகிற சண்டை சச்சரவுகளும் போட்டிகளும் தேவை இல்லையே? கனவு ஒன்றைத் தனியாகக் கூறிப் பயன் இல்லையே? உணர்வு தெளிவுப் புலத்தில் இயங்குகிற கர்த்தாவே கனவிலும் தோன்றுகிறான் என்று கூறலாமே? இவ்விரு நிலைகளுக்கும் வேற்றுமையோ பூசலோ தேவை இல்லையே? இங்ஙனம் வழக்குரைத்த ஸி. ஜி. யுங் சாஸ்திரியார், 'ஒருவன் நிகழ்வில் தனக்கு அமைந்த வாழ்க்கையில் பல குறைவுகளைக் காண்கிறான். இந்த வாழ்க்கையைத் தனக்கு விருப்பமான முறையிலே கனவில் திருத்தி அமைத்துக் கண்டு களிக்கிறான்' என்று கூறலாயினர். ஒருவன் தன் தாயோடும் சகோதரியோடும் படிக்கட்டுகள் வழியாக மாடிக்கு ஏறிச் செல்வதாகக் கனவுகண்டான். மாடியை அடைந்ததும்,கனவுநிலையிலேவேறொருவன் ஓடிவந்து சகோதரிக்குக் குழந்தை பிறக்கப் போவதாகக்கூறினான். இந்தக் கனவைப்பற்றி யுங் சாஸ்திரியார் கூறுவதாவது: இவன் தாயை நெடு நாட்களாகப் புறக்கணித்திருந்தான். இந்தக் கனவு இதனை அவனுக்கு நினைப்பூட்டியது, இவன் ஒரு பெண்மீது காதல் கொண்டிருந்தான். அதனையும் இந்தக் கனவு நினைப்பூட்டியது. இவற்றோடு, இவன் படிக்கட்டுக்கள் வழியாக ஏறிச் சென்றது இவன் வாழ்க்கையில் அடைய விரும்பிய வெற்றியையும் சுட்டியது. சகோதரிக்குக் குழந்தை பிறந்ததாக எட்டிய செய்தி வடிவத்திலே இவன்தானே தன் காதலிக்குப் பிறக்கும் மகவாய் மறுபிறப்படைவதுபோல் உணர்ந்து இன்புறுகிறான். இதே

கனவை ஃப்ராய்டு இறந்தகாலத்தில் தணியாத ஒரு பால்மய விருப்போடு பொருத்திக் காட்டுவார். ஆட்லர் எதிர்காலத்தில் இவன் விரும்புவதைச் சுட்டுகின்ற கனவு என்பார். யுங் சாஸ்திரியார் இதனை நிகழ்காலத்திற்கு உரியதென்பார்.

இம்மூவரது கொள்கைக்கும் மாறாக, எதிர்காலத்தில் நடப்பதற்காக இருக்கிற ஏதோ ஒரு நிகழ்ச்சியைச் சுட்டும்பொருட்டே கனவுகள் தோன்றுகின்றன என்று கூறுவாரும் உளர். இக்கருத்துடையவர்கள் அண்மையிலோ சேய்மையிலோ எதிர்காலத்தில் நிகழ இருக்கிறவைகளின் தெளிவற்ற சித்திரங்களே கனவுகள் அனைத்துமாம் என்று கூறிப் பல காரணங்களும் காட்டுவார்கள். ஜெ. டப்ளியு. டன் என்பாரும் இக்கருத்தினை ஒப்புக்கொள்கின்றனர். மானிட வாழ்க்கை, இறப்பு நிகழ்வு எதிர்வு ஆகிய முக்கால எல்லைகளை உடையது. மானிட வாழ்க்கையில் ஒருவன் அடைகின்ற அநுபவங்கள் அனைத்தும் இம்மூன்று காலவரம்புக்குள் அடங்கும். விழிப்பு நிலையில் திரிகிற உலகத்திற்கு முற்றிலும் வேற்றுமையான ஓர் உலகத்திலே மனம் திரிகின்றது. விழிப்பு நிலையில் தொடர்புறுகின்ற உலகத்திற்கு உரிய முக்காலங்களும் கனவு நிலையில் இறந்த காலமாகத் தோன்றும். ஆகையால், விழிப்பு நிலையிலே மனத்தோடு தொடர்புறுகிற உண்மை உலகில் எதிர்காலத்தில் நிகழ்வதற்கிருக்கிறவைகள் அனைத்தும் கனவு நிலையில் இறந்தகாலத்து நிகழ்ச்சிகளாகத் தோன்றும் என, இக்கருத்திற்கு உடன்படுவோர் கூறுவர்.

டப்ளியு. எச். ஆர். ரிவர்ஸ் என்னும் சாஸ்திரியார் முற்றிலும் புதிய கொள்கை ஒன்றை விளக்குகிறார். மனத்தின்கண் இருவகையான ஆசைகள் தோன்றுகின்றன; இருவகையான செயல்களும் தோன்றுகின்றன. இவ்விருவகையான ஆசைகளும் செயல்களும் ஓயாமல் ஒன்றோடு ஒன்று போராடி மேற்கொள்ள முயல்கின்றன. இங்ஙனம் போராடுகிற ஆசைகளுக்குள் வெற்றி பெறுகின்றவை மனத்தின் உணர்வு தெளிவுப் புலத்திலேயே

திருப்தி அடைந்து விடுகின்றன. தோல்வியுற்றுத் திருப்தி அடையாத ஆசைகளோ மன அயர்வுப்புலத்தில் பதுங்கிக் கிடந்து திருப்தி அடைய முயல்கின்றன. ஆசை ஒரு முறை தோன்றிவிட்டால், அது எவ்வாருயினும் திருப்தி அடைதல் வேண்டும். ஆசைகளிற் சில உணர்வு தெளிவுப் புலத்திலிருந்து செயலாக வெளிப்பட்டுத் திருப்தி அடைகின்றன. இவ்வாறு திருப்தி அடையாத ஆசைகள் அனைத்தும் கனவு நிலையில் திருப்தி அடைகின்றன. இதுவே ரிவர்ஸ் சாஸ்திரியரது கொள்கையின் கருத்தாகும்.

புதிய ஆராய்ச்சி நெறிகள்

இன்று ஆன்மாவைப் பற்றிய பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த ஆராய்ச்சிகளில் தேர்ந்தவர்கள் புதிய கொள்கை உடையவர்கள். இவர்கள் கனவைப் பற்றிக் கூறுவதையும் அறிதல் நலமே. ஒருவனைச் சமூகச் சட்டங்களும் கட்டுத்திட்டங்களும், இடம்பொருள் ஏவல்களும் அடக்கி ஆள்கின்றன. ஆனல், ஒருவருக்கொருவர் பாராட்டுகிற அன்பு எத்தகைய கட்டுக் காவல்களையும், சட்ட திட்டங்களையும் இடம்பொருள் ஏவல்களையும் மீறிச் செல்ல முயல்கிறது. ஏன் எனில், அன்பு என்பது ஆன்மாவின் இலக்கணம். "அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்; அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்" என்ற திருமூலரது பொன்மொழிகள் ஈண்டுச் சிந்திக்கத் தக்கவை. அன்புநிலையே ஆன்மநிலை. ஆன்மா தன் உண்மை இயல்பை வெளிப்படுத்துவதற்குக் கனவைக் கருவியாகப் பயன்படுத்துகிறது. நெடுந்தொலைக்கப்பால் இருக்கிற அன்பரது க்ஷேமத்தையும் சுக நிலையையும் அறிந்துகொள்ளும்பொருட்டு ஆன்மா கனவைப் பயன்படுத்திக் கொள்கிறது. இக்காரணம் பற்றியே, ஒருவன் நெடுந்தூரத்திற்கப்பால் இருந்தாலும், தன் மனைவியைக் கனவிலே காண்கிருன். அவள் இறக்கும் நிலையில் இருந்தால், அவளைக் கனவிலாயினும் விழிப்பு நிலையிலேயே கண்ணெதிரிலாயினும் காண்கிருன். இத்தகைய கொள்கைகள் ஆன்ம ஆராய்ச்சியாளர் கூறுவனவாம்.

நித்திரைக் கனவைப்பற்றி நாடோறும் பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதுகாறும் உளநூல் வல்லார் கூறியவைகளை எல்லாம் முடிவான துணிபுகளாகக் கொள்ள இடம் இல்லை. கனவு நிலையைப்பற்றிய உண்மைகள் ஆராய்ச்சியாளருக்குப் புலப்படாமல் இருப்பதற்குக் காரணம் யாதெனில், இடம்பொருள் ஏவல்களும், கால எல்லை இட எல்லைகளும், சமூகக் கட்டுத்திட்ட ஆட்சிகளும் மிகுந்த சூழ்நிலையில் அடங்கி உழல்கிற உணர்வு தெளிவுப்புலத்தினால், எல்லா அளவுகளையும் எல்லாச் சட்டங்களையும் எல்லாப் பண்புகளையும் மீறி இயங்குகிற மன அயர்வுப் புலத்தை அறிதல் எளிதன்றாம். இத்தகைய மன அயர்வுப் புலத்தைப்பற்றிய ஆராய்ச்சிகள் அனைத்தும் யானையை ஆராய்ந்த குருடர்கள் ஆராய்ந்துரைத்தவை போன்றன. எனினும் இவை முழுவதும் பயனற்றுப் போகுமென்று கூற இடம் இல்லை. ஒருவனது உண்மைத் தன்மயம் எவ்வளவு ஆழமானது என்பதனையே இவ்வாராய்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன. குழந்தையின் ஜீவியத்தில் இவை எங்ஙனம் தொடர்புற்று இருக்கின்றன என்பது மிகப் பெரிய ஆராய்ச்சி விஷயமாகும்.

11 திறமை, திராணி, புத்தித்வம்

இரண்டு குழந்தைகள் ஒரே கதையை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கதை கேட்டு முடிந்ததும், ஒரு குழந்தை, "மாமா வெகு நன்றாய்க் கதை சொல்லுகிறார். நாயைப் போல் குரைக்கிறார்; கிளியைப் போல் கத்து கிறார்," என்று சொல்லுகிறது. "கேட்ட கதையைச் சொல்லு" என்றாலோ, அக்குழந்தைக்குச் சொல்லத் தெரியவில்லை. மற்றொரு குழந்தையோ, கதையைத் திரும்பச் சொல்லுகிறது. மாமா நாயைப்போல் குரைத்த தும், கிளியைப்போல் கத்தியதும் எல்லாம் கதையில் வந்த கதா பாத்திரங்களின் செயல்களாகவே இக்குழந்தைக்குத் தோன்றி விட்டன. இரண்டு குழந்தைகள் ஒரே மூகமாய் ஒரு காட்சியைப் பார்ப்பதும் இல்லை; ஒரு கதையைக் கேட்பதும் இல்லை. குழந்தைக்குக் குழந்தை வேற்றுமை கள் காணப்படுகின்றன என்பதையும் அதற்குக் காரணம் என்ன என்பதனையும் தெரிந்து கொண்டோம். குழந்தை களிடத்தில் காண்கிற வேற்றுமைகளுக்கு ஏற்கெனவே சொன்ன காரணங்களோடு புதிய காரணங்களும் தோன்றுகின்றன. ஒரு குழந்தையினிடம் படம் எழுதும் திறமை ஏற்றமாக உண்டென்பது தெளிவாகிறது. மற் றொரு குழந்தையிடம் அவ்வளவு திறமை இல்லை. ஒரு குழந்தைக்குக் கணக்கு எளிதில் வருகிறது. மற்றொரு குழந்தைக்குக் கணக்குப் பாடம் வெகு கஷ்டமாக இருக் கிறது.

'திறமை', 'திராணி' என்ற மொழிகளின் பொருள் விளக்கம்

ஒரு குழந்தைக்குப் பாடும் திறமை உண்டு என்று சொல்லுகிறோம், மற்றொரு குழந்தையைச் சுட்டிக் காட்டி, 'இந்தக் குழந்தைக்குப் பாடத் திராணி உண்டு' என்கி றோம். திறமை என்று சொல்லுகிற பொழுது, மேலும் பயிற்சி பெற்றால் நன்றாய்ப் பாடமுடியும் என்பதும் தொனிக்கின்றது. திராணி என்பது, குழந்தைகளிடம்

காண்கிற இயற்கையான ஆற்றல்கள். திறமை என்பது பயிற்சியால் வளருவது. உலகத்திலே தோன்றுகிற குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிதில் வருகிறது. எளிதில் வருகிறவை அனைத்தும் குழந்தைகளுக்கு அமைந்த திராணிகள். குழந்தைகளுக்கு எவற்றில் திராணிகள் உண்டோ அவற்றைப் பயிற்சி மூலமாகத் திறமைகளாகச் செய்துவிடலாம். பாடும் திராணி உள்ள குழந்தைக்குப் பயிற்சியால் பாடும் திறமை ஏற்பட்டுவிடுகிறது. கணக்குப் போடுவதில் திராணி உள்ள குழந்தைக்கு மேலும் பயிற்சி அளிப்பதால் கணக்குத் திறமை வந்து விடுகிறது.

குழந்தைகள் படிக்கிற விஷயங்கள் பல. செய்யப் பழகும் செயல்களும் பல. குழந்தைகள் தாம் செய்கிற எல்லாக் காரியங்களிலும் முற்றும் தேர்ந்தவர்களாக இருக்க முடியாது. ஒரு குழந்தை பல விஷயங்களில் திராணி உடையவனாக இருப்பான். என்றாலும், பயிற்சியால் சிலவற்றிலேதான் திறமை அடைய முடியும். ஆகையால், ஒரு குழந்தையிடம் திராணிகள் பல அமைந்திருப்பினும் திராணிகளுக்கேற்ற திறமைகளோ மிகச் சில. எந்தக் குழந்தையும் தன் இடத்தில் அமைந்துள்ள எல்லாத் திராணிகளையும் திறமைகளாக மாற்றிக் கொள்ள முடியாது. குழந்தைகளிடத்தில் காண்கிற திராணிகளுக்கு அளவுத் திட்டம் உண்டு. குழந்தைகளிடத்தில் பல திராணிகள் தாற்காலிகமாக அடங்கிக் கிடக்கலாம். எனினும், பழக்கத்தாலும் பயிற்சியாலும் திராணிகள் வளர்ந்து கொண்டே வரும்.

திராணியின் எல்லைத் திட்டங்கள் குழந்தைக்குக் குழந்தை வேற்றுமைப் படுவனவாம். அப்படியே திராணிகளைப் பயிற்சியாலும் பழக்கத்தாலும் திறமையாக மாற்றிக் கொள்வதில் காண்கிற எல்லைத் திட்டங்களும் குழந்தைக்குக் குழந்தை வேற்றுமைப்படுவனவாம். இரண்டு வயதான ஒரு குழந்தை ஒரு அகல் விளக்கை ஊதி அணைக்கிறாள் என்றால், இந்தத் திராணி அதே வயதுடைய பல குழந்தைகளிடத்தில் தோன்றுவதாகும். குறிப்பிட்ட ஒரு வயதில் பல குழந்தைகளிடத்தில் பொதுவாகக் காண்கிற

ஒரு திராணியை அந்த வயதுக்குரிய திராணியாக நாம் ஏற்றுக்கொள்ளலாமல்லவா?

ஒரு பையனைச் சுட்டிக் காட்டி இந்தப் பையனுக்கு இங்கிலீஷ் படிக்கத் திராணி உண்டா என்று நம்மிடம் எந்தப் பெற்றோராவது கேட்டால் "உண்டு" என்று நாம் துணிந்து சொல்லிவிடலாம். எத்தனையோ குழந்தைகள் இங்கிலீஷ் படிப்பதை நாம் பார்க்கிறோமே. ஆனால், அதே பெற்றோர் நம்மிடம், "இந்தப் பையனுக்கு இங்கிலீஷ் கற்றுக்கொள்ள எவ்வளவு திராணி உண்டு?" என்று கேட்டால் அவ்வளவு விரைவாகப் பதில் சொல்லிவிட முடியாது.

திராணி திறமையாவது எங்ஙனம்

குறிப்பிட்ட ஒரு திராணி திறமையாக மாறுவதற்கு உகந்த இடம் பொருள் ஏவல்கள் அமைய வேண்டும். முதன்மையான போதனை முறையும் அமைய வேண்டும். குழந்தைக்குக் குழந்தை பாடம் கற்கும் இயல்புகள் வேற்றுமைப் படுகின்றன. மேலும், ஒரு குழந்தைக்கு மொழி பயில்வதற்குள்ள திராணியைவிடத் தொழில் கற்பதற்குள்ள திராணி அதிகமாக இருக்கலாம். எப்படியானாலும், எந்தத் திராணியும் பயிற்சியால் ஓரளவு திறமையாகவும், சில திராணிகள் பெரிதளவு திறமையாகவும் மாறிவிடும். "சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்; வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்."

குழந்தைப் பருவத்திலிருந்தே வெகு தீவிரமான பயிற்சிக்கு ஆளாகிற குழந்தைகள் எந்த எந்தத் திராணிகளிலே பயிற்சி பெறுகிறார்களோ அவற்றில் பெரிதளவு திறமை உடையவர்களாகவும் விளங்குகிறார்கள். உலகத்திலே பல விஷயங்களில் திறமை உடையவர்களை நாம் பார்க்கும் பொழுது இவர்கள் யாவரும் ஒரே அளவான திராணி உடையவர்களாகப் பயிற்சியைத் தொடங்கினார்கள் என்று நாம் கருதலாகாது. குழந்தைகளுக்குக் குறிப்பிட்ட திராணிகள் விஷயமாகப் பயிற்சி ஆரம்பமாகும்பொழுது, அந்தத் திராணிகளை நாம் அளந்து மதிப்பிட்டு, இந்தக்

குழந்தைக்கு இன்னின்ன விஷயங்களிலே திராணி குறைவு என்று மதிப்பிட வேண்டும். இப்படிக் குழந்தைகளுடைய திறமை திராணிகளை மதிப்பிட்டுக் கல்வி அளிக்காவிட்டால், குழந்தைகளைப் பயனற்ற முயற்சிகளுக்கும், ஆற்றல் விரயத்திற்கும் கால நஷ்டத்திற்கும் பொருள் நஷ்டத்திற்கும் ஆளாக்கிவிடுவோம்.

திறமை திராணிகளை மதிப்பிடுதல்

குழந்தைக்குக் குழந்தை திறமை திராணிகள் விஷயமாகக் காண்கிற ஏற்றத் தாழ்ச்சிகளை அளந்து மதிப்பிட நவீன மானஸ சாஸ்திரிகள் பல அளவு திட்டப் பரீக்ஷைகளைக் கையாளுகிறார்கள். இந்த ஆராய்ச்சி முறைப்படி நாம் நம்முடைய குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கத் தொடங்கு முன்னரே அவர்களுடைய திறமை திராணிகளை மதிப்பிட்டு, அதிகத் திராணிகள் உடைய விஷயங்களில் அதிகமாகப் பயிற்சி அளித்து, குறிப்பிட்ட சில விஷயங்களில் மேதாவிகளாகும்படி செய்யலாம். ஆகையால், பெற்றோர் தமது குழந்தைகளின் திறமை திராணிகளை மதிப்பிடாமல் கல்வி புகட்டுவது நலமன்று. குழந்தைகளின் திறமை திராணிகளை மதிப்பிடாமல் கல்வி போதிக்க ஆரம்பித்தால், குழந்தைகளுக்குக் கல்வியில் ஆர்வம் குன்றிவிடும்.

பால்-மய வேற்றுமைகளால் திறமை திராணிகளில் தோன்றும் வேற்றுமைகள்

பெண் குழந்தைகளின் திறமை திராணிகள் ஒருவிதமாக இருக்கும்; ஆண் குழந்தைகளுடைய திறமை திராணிகள் மற்றொருவிதமாக இருக்கும். பொதுவாகப் பெண்களுக்கு ஆண்களைவிடப் பல விஷயங்களில் திராணி அதிகமாக இருக்கும். இயற்கை அன்னை சந்தானப் பாதுகாப்பின் பொருட்டு ஒருதலைச் சார்பாகப் பெண்களுக்கே ஏற்றதை அளித்திருக்கிறாள். பெண்களின் வளர்ச்சி ஆண்களைவிட வெகு விரைவானது. ஆகையால், வாழ்க்கையில் மிகப் பெரிய பொறுப்பை வெகு

விரைவில் ஏற்றுக்கொள்ள வேண்டிய பெண் குழந்தைகளுக்கு ஆண் குழந்தைகளைவிடத் திறமை திராணிகள் அதிகமாகவே அமைந்துள்ளன.

பிற காரணங்கள்

குலத்தொழிலுக்கு ஏற்றவாறு திறமை திராணிகள் வேற்றுமைப் படுகின்றன. சிற்பியின் பிள்ளைகள் சிற்பக் கலையிலே ஏற்றமான திறமை திராணிகள் பெற்றிருப்பார்கள். யந்திர ஆலைத் தொழில் நிலையங்களில் குடியிருக்கும் குழந்தைகளுக்கு யந்திர வியூகனத் திறமை திராணிகள் அதிகமாக இருக்கும். இயற்கை வாசனை எனவும், செயற்கை வாசனை எனவும் இருவகையான திறமை திராணிகள் குழந்தைகளிடத்தில் தோன்றுவன. நட்டுவன் பிள்ளைக்கு நடனம் கற்றுக் கொடுப்பாருண்டோ? பரம்பரை நியதிகளும் திறமை திராணிகளுக்குக் காரணமாகின்றன. சூழ் நிலைகளும் திறமை திராணிகளைத் திட்டம் செய்கின்றன. உடலின் சுக நிலையும் குழந்தைகளின் திறமை திராணிகளைத் திட்டம் செய்கின்றது.

திறமை திராணிகளை மதிப்பிடப் புது முறைகள்

திறமை திராணிகளை மதிப்பிடுவதற்குக் கையாளுகின்ற பரீக்ஷைத் திட்டங்கள் குழந்தைகளின் மிகவும் நுண்ணிய திராணிகளையும் திறமைகளையும் மதிப்பிடக் கூடியவாறு அமைந்துள்ளன. நமது நாட்டில் இவ்வாறு மானஸ சாஸ்திர முறைப்படி குழந்தைகளின் திறமை திராணிகளையாவது புத்தித்துவத்தையாவது மதிப்பிடுவதற்கான பரீக்ஷைத் திட்டங்கள் இன்னும் ஆயத்தமாகவில்லை. வகுப்புவாரியாகவும், ஜாதிவாரியாகவும், தொழில்வாரியாகவும், ஜில்லாவாரியாகவும் குழந்தைகளின் திறமை திராணிகளை மதிப்பிட்டுப் பார்க்கத் தகுந்த பரீக்ஷைத் திட்டங்களை மானஸ சாஸ்திரிகள் ஏற்படுத்தி, குழந்தைகளின் திறமை திராணிகளுக்கு ஏற்றவாறு கல்வியை அமைத்துக் கொடுப்பார்களானால், இன்று பலவகையிலும் பயன்படாமற்போகிற திறமை திராணிகளைச் சரியான வழிகளிலே திருப்பிப் பெரும் பயனடையச் செய்ய முடியும்.

மானஸ சாஸ்திரப் பரீக்ஷைத் திட்டங்களும் திறமை திராணிகளை மதிப்பிடுகிற பரீக்ஷைத் திட்டங்களும் எந்தெந்தக் குழந்தைகள் எதிலே திறமை பெற்றவர்கள் என்று தெரிந்துகொள்வதற்கு உபயோகமாகின்றன. பிற்போக்காளர்களான குழந்தைகளில் எவரெவர்க்கு எந்தெந்த விஷயங்களில் சரியான சூழ்நிலையையும் வசதிகளையும் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்பதற்கும் இப்படிச் செய்தால் இவர்களும் குழந்தைகளைப் போலவே திறமை திராணிகள் பொருந்தியவர்களாக்குவதற்கும் மானஸ சாஸ்திரப் பரீக்ஷைத் திட்டங்கள் பேருதவியாக இருக்கும். மேலும், பல விஷயங்களில் கோணலான செயல் போக்குகள் குழந்தைகளிடத்தில் இருக்கலாம். குறிப்பிட்ட ஒரு காரியத்தில் திராணி இருந்தாலும் அந்தத் திராணியைத் தப்பான காரியங்களில் குழந்தைகள் உபயோகிக்கலாம். இத்தகைய கோணல்களைச் செம்மைப் படுத்துவதற்கும் இந்தப் பரீக்ஷைத் திட்டங்கள் உதவுவன.

திறமை திராணிகளைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது, இவற்றிற்கு ஆதாரமானது புத்தித்துவம் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

குழந்தையின் புத்தித்வம்

ஒரு நேரத்தில் குழந்தை ஆலோசனைத் திறனை உபயோகித்து ஒரு வினையைச் செய்து முடிக்கிறது; 'மகா புத்திசாலி!' என்று குழந்தையைக் கொண்டாடிப் பாராட்டுகிறோம். வேறொரு குழந்தை அதே வினையில் உடல் வலிமையை உபயோகித்துச் செய்து முடிக்க முயன்று தோற்றுப் போகிறது. இதனைப் பார்த்தவுடன் "இந்தக் குழந்தைக்கு மூளை என்பது இல்லையா?" என்று கேட்கிறோம். பூட்டிய பெட்டியைத் திறப்பதற்குச் சாவியைக் காணவில்லை. ஒரு சிறுவன் ஒரு கம்பியை வளைத்துப் பூட்டைத் திறந்தால் அவனை வியந்து கொண்டாடுகிறோம். இதற்கு மாறாகக் கையால் திறக்க முயன்றும் முடியாமல் அழுகிறான் மற்றொரு சிறுவன். பின்பு, பெட்டியை உடைத்துத் திறக்க முயலுகிறான். முதலில் சொன்ன சிறுவனது

செயல் புத்தித்வத்தையும், புத்தி சக்தியையும், பின்னர் குறித்த சிறுவனது செயல் மிருகத்தன்மையையும், மிருக சக்தியையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

புத்தித்வம் என்றால் என்ன ?

ஒரு வீட்டு முற்றத்தில் விலை உயர்ந்த கடப்பைக் கற்கள் அடுக்கியிருந்தன. எங்கிருந்தோ ஓடிவந்த நாகப் பாம்பொன்று அக்கற்குவியலுக்குள் ஓடிப் பதுங்கி விட்டது. நடு வீட்டில் பாம்பு இருப்பது அபாயத்தை விளைவிக்கலாம் என நினைத்த வீட்டார் யாவரும் முற்றத்தில் கழிகளுடன் ஒன்று கூடித் திகைத்து நின்றனர். பாம்போ கற்களுக்குள் அடைக்கலம் புகுந்துவிட்டது. கிடைத்தற் கரிய விலையுயர்ந்த கற்களை உடைத்தாலன்றிப் பாம்பை வெளியேற்ற வழியில்லை என நினைத்தான் தோட்டக் காரன். இந்தச்சங்கடமான சமயத்தில் ஆறு வயதுச் சிறு வன் ஒருவன் ஓடிவந்தான்; தன் தந்தை தனக்களித்திருந்த ஊதும் குழலை எடுத்து தனக்குத் தோன்றிய வகையில் ஊத ஆரம்பித்தான். பாம்பின் உடற்கட்டுக்கோப்பு விநோதமானது. ஓசை ஒலிகள் மின்சார சக்திபோல் அதன் உடலெங்கும் பாய்ந்து உணர்ச்சியை உண்டாக்கும் தன்மையை உடையன. இக்காரணத்தாலேயே பாம்புகள் பாம்பாட்டியின் மகுடிக்குக் கட்டுப்பட்டு நிற்கின்றன. இவ்வுண்மையை ஏதோ ஒரு பாட புத்தகத்தில் படித் திருந்தான் சிறுவன். அவன் குழலை ஊத ஆரம்பித்த வுடன் நிலை கொள்ளாமல் தவித்த பாம்பு மெதுவாகக் கற்குவியலை விட்டு வெளியேறியது. உடனே தயாராகக் காத்திருந்த தோட்டக்காரன் கழியால் பாம்பைக் கொன்று விட்டான். இவ்வுண்மைக் கதையில் தோட்டக்காரனது எண்ணம் மிருக சக்தியையும், சிறுவனது எண்ணம் புத்தி சக்தியையும் தெளிவாகத் தெரிவிக்கின்றன. சுருங்கச் சொன்னால், புத்தித்வம் வினைப் போக்குகளை மனத்தில் ஆராய்ந்து அலசியெடுத்து உண்மை நிலைகளை உணர்ந்து பொருத்தமான முறையில் முயற்சி செய்யப் பார்க்கிறது. மிருக சக்தியோ, ஆய்ந்து, தெளிந்து பாராமல், குருட்டுத் தனமாக வினைகளைச் செய்கிறது.

குழந்தைகளிடத்தில் தோன்றும் ஒற்றுமை வேற்றுமைகளின் உண்மைக் காரணம் வெகுநாட்கள்வரை புலப்படாமலிருந்தது ; திறமை திராணிகளின் எல்லைத் திட்டம் தெளிவாகவில்லை. இச் சமயத்தில் பிரான்ஸ் நகரத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் படிக்கமுடியாத குழந்தைகளின் மந்த புத்திக்குக் காரணம் என்ன என்று சில உளநூல் வல்லார் ஆராய முற்பட்டனர். இதற்குக் காரணம் சோம்பலா, அன்றி உண்மையாக ஏற்பட்ட புத்திக் குறைவா என்பதே இந்த ஆராய்ச்சியாளரின் பிரச்னை. ஆல்பிரட் பினே இப்பிரச்னையைத் தீர்க்க வழி கண்டு பிடித்தார். இவர் தமது நண்பரான ஸைமன் என்பவருடன் சேர்ந்து பல பரீக்ஷைத் திட்டங்களை வகுத்தார். இப் பரீக்ஷைத் திட்டங்களைக் கையாண்டு, புத்தியுள்ள சோம்பேறிச் சிறுவர்களைப் புத்தியில்லாத சிறுவர்களிலிருந்து வேறாகப் பிரித்து வைத்தார். அந்தப் பரீக்ஷைகளே இன்று **பினே - ஸைமன் பரீக்ஷைத் திட்டம்** என்ற பெயருடன் வழங்குகின்றன.

பினே - ஸைமன் பரீக்ஷைத் திட்டங்கள்

பினே சாஸ்திரியார் இரண்டு பிரமாணங்களை அடிப்படையாக்கிப் பல பரீக்ஷைகளை வகுத்தார். முதலாவது: புத்தித்வத்தை வரையறுத்துச் சரியானபடி நிலையில் மதிப்பிடுவதற்கு ஒரே ஒரு பரீக்ஷைமட்டும் போதாது. இரண்டாவது: சிறுவர்கள் புத்தித்வவளர்ச்சி அவர்களுடைய வயது வளர்ச்சிக்கேற்ப அமைந்திருக்கும். இவ்விரு பிரமாணங்களை அடிப்படையாக்கி மூன்று வயது முதல் பதினான்கு வயது வரைக்கும் ஆண், பெண், இருபாலார்க்கும் அந்தந்த வயது வளர்ச்சி, பால் வேற்றுமைகளுக்கு ஏற்றவாறு பரீக்ஷைக்கு எடுத்துக்கொண்ட அறிவுத் துறைகளுக் கமைந்த முறையிலே வினாப் பத்திரங்களைக் கொத்துக் கொத்தாக வகுத்து வைத்தார். ஒரு பரீக்ஷைக் கொத்தில் பல கேள்விகள் இருக்கும். சிறுவர்கள் அந்தக் கேள்விகளுக்கு விடை தர வேண்டும். மானஸ சாஸ்திரிகள் பரிசோதனைக்காகவும், ஆராய்ச்சிக்

காகவும் ஓயாமல் பரீக்ஷைகள் நடத்தி வினாப் பத்திரங்களைப் பல பிரிவுகளாக வகுத்துப் பாகுபாடு செய்து, வரிசையிட்டு வைத்திருக்கிறார்கள். இன்று குழந்தைகளின் எல்லா வயதுக்கும் பொருத்தமான பரீக்ஷைத் திட்டங்கள் உண்டு.

புத்தித்வ ஈவு அல்லது பு. ஈ.

வயது வாரியாக வினாப்பத்திரங்களைக் கொடுக்கலாம். குறிப்பிட்ட ஒரு வயதிற்கு ஏதேனும் ஒரு பரீக்ஷைத் தொகுதி பொருந்துவதையும் பொருந்தாததையும் மதிப்பிடுவதற்குப் பல விதிகளையும் ஆராய்ச்சியாளர் குறித்திருக்கின்றனர். எட்டு வயதுள்ள கமலத்திற்கு ஆராய்ச்சியாளன் ஆறு வயது குழந்தைக்குக் கொடுக்க வேண்டிய கேள்விகளையோ, கணக்குகளையோ, படம் வரைதலையோ புதிர் அழித்தலையோ கொடுக்கிறான். படிப் படியாகக் கடினமான வினாக்களைக் கொடுக்கிறான். கமலத்தால் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்படும் வரைக்கும் வினாப் பத்திரங்களைக் கொடுத்து விடை எழுதச் செய்கிறான். இவ்வாறு பல பரீக்ஷைகள் நடைபெறுகின்றன. வெகு உற்சாகமாகப் பரீக்ஷைகளில் ஈடுபட்டிருந்த கமலம் திகைத்து மயங்குகிறாள். அவள் அதை உணருவதற்கு முன் ஆராய்ச்சியாளன் வினாப் பத்திரத்தின் பொருளை மாற்றி விடுகிறான்; வினாக்களுக்கு எழுதுகிற விடைகளுக்குகந்த விதமாக மார்க்கும் குறித்துக் கொண்டே வருகிறான். விடைக்குக் கொடுக்கிற மார்க்கு கமலத்தின் மனவளர்ச்சி நிலையைக் காட்டுகிறது. கமலத்திற்கு எட்டு வயது ஆயிற்று. எனினும் அவளுடையமனத்தின் வளர்ச்சி ஆறு வயதான சிறுமியிடம் தோன்றுகிற மன வளர்ச்சியின் அளவைத்தான் அடைந்திருக்கிறது. ஆராய்ச்சியாளன் அவளுடைய மனத்தின் வளர்ச்சி வயதை அவளுடைய வயதால் வகுக்கிறான். ஆறு வயதை எட்டு வயதால் வகுப்பதால் வரும் பயனை தசாம்ச சங்கியையில் ·75 என்று குறிக்கிறான்; பின்பு, பலனைக் கூறும்பொழுது தசாம்சத்தைக் குறிக்கின்ற புள்ளியை நீக்கி, இந்தச்

சிறுமியின் புத்தித்வ ஈவு அல்லது பு. ஈ. 75 என்று கூறு கிருன். பரீக்ஷைக்கு ஆளான குழந்தையின் வயது ஆருகவும், அவளுடைய மன வளர்ச்சியின் வயது எட்டாக வும் இருந்தால், பு. ஈ. 1·33 அல்லது 133 என்று குறிப் பிடுகிருன்.

முறைப்படி ஒவ்வொரு குழந்தைக்கும் அமைய வேண்டிய பு. ஈ. 100. இதனைச் சரீர வளர்ச்சிக்கு ஏற்ற மனவளர்ச்சி என்று திட்டம் செய்கின்றனர். ஏழு வயதுக் குழந்தையிடம் ஏழு வயதுக்குரிய பரீக்ஷைத் திட்டத்தைத் தவறின்றிச் செய்து முடிக்கும் திறமை இருக்குமாயின் அக்குழந்தையின் பு. ஈ. நூறு என மதிப்பிடுதல் மரபா யிற்று. பு. ஈ. நூற்றுக்கு மிஞ்சியதைத் திறமையின் ஏற்ற மாகவும் பு. ஈ. நூற்றுக்குக் குறைந்ததைத் திறமைக் குறை வாகவும் மதிப்பிடுகின்றனர். நூறுக்கும் குறைவான பு. ஈ. உடையவர்களை மூன்று பெரும் வகுப்பினர்களாகப் பிரிக் கலாம்.

பு. ஈ. குறைந்த வகுப்பினரது வரலாறு

1. முழு மூடர்

இருபத்துநான்கிற்கும் குறைவான பு. ஈ. உடைய வர்களை முழு மூடர் என்று மதிப்பிடுவர். இவர்களுக்குச் சாப்பிடவும் தெரியாது; தூங்கவும் தெரியாது; குளிக் கவும் தெரியாது; துணி துவைக்கவும் தெரியாது; கைக்கும் காலுக்குங்கூட வேற்றுமை தெரியாது; வாழ்க்கையில் நாள்தோறும் நேரிடக்கூடிய பற்பல விபத்துக்களுக்குக் காரணமாகின்றவைகளிலிருந்து தப்பிப் பிழைக்கவும் தெரியாது. இவர்கள் நெருப்பிலே கையை விடுவார்கள். மோட்டார் வண்டி குறுக்கும் நெடுக்குமாக வெகு விரை வாய் ஓடுகிற நாற்சந்திப் பாதைகளில் அலக்ஷியமாய்க் கை வீசி நடந்து செல்வார்கள். இவர்களில் சிலருடைய தலை பெரிய மாங்காய்க்கு மூக்கும் கண்ணும் வைத்தது போல் இருக்கும். வேறு சிலருக்குச் சிறு தேங்காய்த் தலைபோல் இருக்கும். ஒருவன் இத்தகைய மாங்காய்த்

தலையர்களையும் தேய்காய்த் தலையர்களையும் பிடித்து இழுத்துக்கொண்டு வீடு வீடாய்ச் சென்று பிச்சையெடுப்பதைப் பார்த்திருப்பீர்கள். இவர்களை முழுமூடர்கள் என்றே வகுக்க வேண்டும். இந்த மூடருக்குத் தம்மோடு வருகிறவன் தம்மை வைத்துக் கொண்டு வயிறு வளர்க்கிறான் என்பதும் தெரியாது.

படம் 11. மாங்காய்த் தலையன் தேங்காய்த் தலையன்

2. முட்டாள்

மாங்காய்த் தலையர்கள் தேங்காய்த் தலையர்களைவிடச் சற்று அதிகமான பு. ஈ. உடையவர்கள்; 24-49-வரைக்கும் பு. ஈ. பெற்றிருப்பார்கள். இவர்களுடைய தலைகளும் முதிர்ச்சி பெறுதவை. எனினும், வாழ்க்கையில் நேரிடக்கூடிய விபத்துக்களிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்வதற்குப் போதுமான புத்தி இவர்களுக்கு உண்டு. இவர்களுக்குப் பசிதாகமறிந்து உண்ணவும் அருந்தவும், உடுக்கவும், வஸ்திரங்களைத் தோய்க்கவும், நீராடவும் தெரியும். சிறிது பேசவும் முடியும். இவர்களுக்குச் சுட்டுப் போட்டாலும் படிப்பு வராது. எனினும், இடையருத மேற்பார்வை இருந்தால், ஏதேனும் யந்திரத்தை ஒரே பக்கமாகச் சுற்றிக்கொண்டே இருப்பதற்கு இவர்களைப் பழக்கி

விடலாம். ஓர் இடத்தில் இருக்கும் சாமான்களை மற்றோர் இடத்திற்குக் கொண்டுபோய் இடுவதற்கும் கற்றுக் கொடுத்தால், அந்த வேலையைச் செய்துகொண்டே இருப்பார்கள்; மேற்பார்வை செய்கிறவன் கொஞ்சம் பராக்காய்ப் பொருளை இடுகிற இடத்தில் நின்றால், சுமந்து வரும் பொருளை அவன் தலையிலும் போட்டு விடுவார்கள். நகைப்பிற்கிடமான பல காரியங்களை நிமிஷத்துக்கு நிமிஷம் செய்து விடுவார்கள்; செய்ய வேண்டியவைகளை மறந்து, வேண்டாதவைகளைச் செய்வார்கள்; இவர்களை முட்டாள் என்று பாகுபாடு செய்யலாம்.

3. அசமஞ்சர்

அசமஞ்சருடைய பு. ஈ. 50 முதல் 69 மட்டும் இருக்கும். எளிதில் செய்து முடிக்கக் கூடிய சில வினைகளை வழக்கமாகப் புரிவதற்கு இவர்களைப் பழக்கி விடலாம்; விரைவில் இவர்கள் கற்றுக் கொள்வார்கள். 6-மணிக்குப் பல் தேய்க்கவேண்டும் என்றால், எது எப்படிப் போனலும், 6-மணிக்குப்பல் தேய்ப்பார்கள். ஒரு காரியத்தைக் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் செய்யக் கற்றுக் கொடுத்து விட்டால் அந்த வழக்கத்தை விடவேமாட்டார்கள். இந்த அசமஞ்சர்களைக் குற்றேவல் புரியவும், ஆடு மாடு கோழி புறாக்களைப் பராமரிக்கவும், குழந்தைகளைத் தூக்கிச் சுமக்கவும் உபயோகிக்கலாம். இவர்களில் ஏற்றமான புத்தித்துவம் உடையவர்களுக்குத் தச்சுவேலை, தையல் வேலை முதலியவற்றை ஓரளவு கற்றுக் கொடுக்கலாம்.

புத்தித்வ ஈவில் குறைவுபட்ட இம்மூன்று வகுப்பினரிடத்திலும் யாவரும் அன்பு பாராட்டவேண்டும். இவர்களுடைய புத்திக் கோளாறுகளை யெல்லாம் நன்றாய் ஆராய்ந்து கொள்ளவேண்டும். இவர்களது திறமையின் எல்லைத்திட்டங்களை அறியாமல், ஆற்றலுக்கு மிஞ்சிய செயல் திறங்களை எதிர்பார்த்தால் ஏமாந்து விடுவோம். இவர்களை இகழலாகாது; இவர்களுக்கு அநுதாபமே காட்டவேண்டும். ஏனென்றால், முழு மூடர்களும் முட்டாள்களும் தாயின் வயிற்றில் இருந்த காலத்திலேயே சினைக் கோளாறுகளாலும் ஜனன காலத்தில் நிகழ்ந்த விபத்துக்

களாலும், பிள்ளைப் பருவத்தில் தோன்றிய வியாதிகளாலும் இந்நிலையை அடைகின்றனர். இத்தகைய விபத்துக்கள் நேர்ந்திராவிட்டால், இவர்களும் பொது அளவு புத்தித்வத்தோடு விளங்கி இருப்பார்கள். ஆனால், அசமஞ்சர்களோ பிறப்பிலேயே அசமஞ்சர்களாகப் பிறக்கிறார்கள். அவர்களின் இயற்கையை மாற்ற முடியாது.

ஓர் அசமஞ்சனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் வெகு ரஸமானவை. இவனுடைய தந்தை புகழ்பெற்ற டாக்டராக இருந்தவர்; பெருவாரியான வருமானம் உடையவர்; இசைக்கலை, ஓவியக்கலை, இலக்கியம் முதலியவற்றில் மிகவும் திறமையுடையவர். நியமங்களில் தவறாதவர்; தெய்வ பக்தியும், தியான சிந்தனையும் உடையவர். இவருடைய மனைவியார் தமிழறிவுடையவர். தாய்வழிப் பாட்டியும் கற்பொழுக்கம் குன்றியவர். எனினும் டாக்டரின் மனைவியர் இல்லறத்தை நடத்துவதில் திறமை வாய்ந்தவர். கணவனும் மனையும் எவ்விதச் சண்டை சச்சரவும் இன்றி மனம் ஒன்றி வாழ்ந்தனர். இவர்களுக்குப் பிறந்த இரண்டாவது மகவு ஆண்பிள்ளை. இவன் பிறந்தது முதல் அசமஞ்சன். ஒரு வகையான முரட்டுக் குணம் இவனிடத்தில் உண்டு. குழந்தையிலிருந்தே இவனுடைய அசமஞ்சத்தை உணர்ந்த தாயார் "அம்பி அசடு, அவனுக்கு ஒன்றும் தெரியாது. வெளியில் போனால் யாராவது கூடவே போக வேண்டும்" என்று கவலைப்பட்டு, எப்பொழுதும் மடிப் பிள்ளையாக வளர்த்து வந்தார். இவன் நாலாவது வயதில், குளிப்பாட்டக்கொண்டுபோன ஒருநாய்க்குட்டியைத் துணி ஊறப்போடுகிறதுபோல் ஒருதண்ணீர்ப் பாத்திரத்திலிட்டு ஒரு தட்டால் மூடி வைத்துவிட்டான். அந்த நாய்க் குட்டி இறந்துவிட்டது. நாள்தோறும் இவனுக்குக் காலையில் இடுகிற சட்டை, கழற்றத் தெரியாமல், மாலையில் இரண்டு சட்டையாகிவிடும். இத்தகைய நகைச் சுவை நிகழ்ச்சிகள் பல ஐந்து வயது வரைக்கும் நிகழ்ந்தன. ஐந்து வயதுக்கு மேல் நிகழ்ந்த சம்பவம் ஒன்று குறிப்பிடத் தகுவது. கல்யாணத்தில் வரிசையிடுவதற்காக உருட்டி வைத்திருந்த லட்டு உருண்டைகள் எல்லாவற்றையும் இவன் ஒரு

தடியால் அடித்து நொறுக்கித் தூளாக்கிக் கீழே கொட்டி அப்பண்டத்தின்மேல் படுத்து உருண்டு தின்னத் தொடங்கினன். இதற்குக் காரணம், அவன் கூடையில் இருந்து எடுத்த முதல் லட்டு சூடாக இருந்தமையே. கை சுட்டது என்ற கோபத்தால் லட்டு உருண்டைகளுக்கு அடி!

இவன் முதல் வகுப்புப் பாலசிக்ஷை முடிக்குமுன் மூன்று ஆண்டுகள் சென்றன. 100-வரைக்கும் எண்ணவும், கூட்டவும் கழிக்கவும் படிப்பதற்கு அதேகாலம் ஆயிற்று. வகுப்பில் சேர்ந்தபிறகு, ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு ஆண்டுகள் கற்று வந்தான். சில வகுப்புக்களில் மூன்று ஆண்டுகள் கற்றதுமுண்டு. வகுப்புத்தோறும் பரீக்ஷைக்குத் தயாரிப்பதற்காக இருவர் அல்லது மூவர் வீட்டு உபாத்தியாயர்களாக இருந்தனர். தகப்பனும் தமக்கு ஒழிந்த நேரங்களில் இவனுடைய படிப்பில் சிரத்தை எடுத்துக் கொண்டார். மலையைக்கல்லி எலி பிடிக்கிற விந்தை முறையிலே இவனுடைய கல்வியும் முடிவுற்றது. இவன் முப்பதாவது வயதிற்குள் மிக வருந்திக் கற்றுப் பன்னிரு தடவைகள் தொடர்ச்சியாக ஆறுவது பாரம் பரீக்ஷை எழுதி முடிவிலே முடியாதென்னும் முயற்சித் துறையில் வெற்றி பெற்றான்.

தூக்கமென்றால், இவன் ஒரேஅடியாக 10, 12 நாட்கள் தூங்குவான். படங்கள் எழுதுவதற்காக வர்ணங்களும், ப்ரஷ்களும் வாங்குவான். ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகாநந்தர் முதலிய மகான்களின் படங்களுக்கு நகல் எடுப்பான். இந்த நகல்களில் மாறுபாடுகள் சில தோன்றும். ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு,நிமிர்ந்து நீண்ட கழுதைக் காது வைத்துவிடுவான்; சுவாமி விவேகாநந்தருக்கு, கழுதையின் மூக்குப்போல் வளைத்துக் கட்டி வைப்பான். "ஏன் இப்படி வைத்தாய்?" என்று யாரேனும் கேட்டால், "சும்மா வைத்துப் பார்த்தேன்; நன்றாய் இருக்க வில்லையா?" என்பான். இவனுடைய பேச்சே மற்றவர்களுக்கு விளங்காது. எல்லாம் வெறும் உளறலும் குளறலுமாகத்தான் இருக்கும். கருத்துக்களை வெளியிடும் சொற்கள் ஒழுங்காக அமையா. "தம்பீ, எங்கே போய்

வந்தாய்? என்று மதனி கேட்டதற்கு, "அத்திம்பேர் ஆபீஸுக்கு, நான் வீட்டுக்குப் போய் இல்லை வந்தேன்" என்றான். இவனுடைய மொழியில் உங்களுக்கு ஏதாவது புரிந்ததா? இவன் சொல்ல வந்தது: "அத்திம்பேர் ஆபீ



படம் 12. சிக்கல் வழிப்புதிர்

ஸுக்குப் போய்விட்டார். நான் அவர் வீட்டுக்குப் போன போது, அவர் அங்கே இல்லை," என்பதுதான். முப்பது ஆண்டுகளாகத் தந்தையும் தாயும், சுற்றத்தாரும், உற

வினரும் கண்ணிமையாமல் இவனுடைய கல்வி விஷயமாக அக்கறை எடுத்துக்கொண்டபோதிலும், அவர்கள் சாதித்தது இவ்வளவுதான். அசமஞ்சரது வாழ்க்கையைக் கவனித்தால், நாள்தோறும் வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களும் அவர்களுடைய பேச்சுக்களும் பெரு நகைப்புக்குக் காரணமாக இருக்கும்.

பு. அ. பரீக்ஷைகளின் இயல்பு

குழந்தைகளுக்குக் கொடுக்கிற புத்தித்வப் பரீக்ஷைகள் கடினமாக இரா. நேர்மாறான இரண்டு



படம் 13. மைக்கறை

சொற்களைக் கொடுத்து, அவைகளில் சரியானதைத் தேர்ந்தெடுத்து வாக்கியத்தில் கோடு இட்ட இடத்தில் அமைக்குமாறு கேட்பார்கள். மையை ஒரு காகிதத்தில் ஊற்றி, அதை இரண்டாக மடித்து, ஒரு சித்திரத்தை அமைத்துக் கொடுப்பார்கள். அதைப் பார்க்கும்பொழுது, மனத்தில் தோன்றுகிறவைகளையெல்லாம் எழுதச் சொல்வார்கள். பெரிய படங்களைக் கொடுத்து, அதில் உள்ள பொருள்களைக் குறிப்பிடச் செய்வார்கள். புதிர்களையும் விடுகதைகளையும், கொடுத்து, அவற்றை விடுவிக்கச் சொல்வார்கள்.

இத்தகைய பரீக்ஷைகளில் புத்தித்வம் அதிகமாக உடைய குழந்தைகள் சிறந்து விளங்கும். மற்றக் குழந்தைகள் தம் புத்திக் குறைவை வெளியிடும். உதாரணமாகப் புத்திக் குறைவு உடைய குழந்தைகள் பல நிறமான மைக்கறைப் படங்களைக் (Ink-blots) கண்டு பயங்கரமான காரியங்களை வர்ணிப்பார்கள். சிலருக்கு இந்த மைக்கறைப் படங்கள் அத்தகைய தோற்றம் ஒன்றையுமே நினைப்பூட்டா! புத்தித்வம் உடைய குழந்தையோ சிவப்பு மையில் அந்தி வானத்தின் அழகைக் காணும்; நீல மையில் கடலின் நிற அழகு தோன்றுவதாகக் குறிப்பிடும். இவை அனைத்தும் உதாரணங்களாகக் குறித்தவை என்பதை மறக்கலாகாது.

புத்தித்வத்தின் தன்மை

புத்தித்வத்தைப் பற்றிய பகுதியை முடிக்குமுன், இது எத்தன்மை வாய்ந்தது என்று சொல்லவேண்டும். புத்தித்வம் பெரும்பாலும் பரம்பரை நியதியினால் வருவது. புத்தி மிகுந்த பெற்றோருக்குத்தான் புத்தியுடைய குழந்தைகள் பிறப்பார்கள். இதனைச் சூழ் நிலையினாலும் ஒரு சிறிது திருத்தியமைக்கலாம். ஏற்றமான புத்தித்வம் ஒருவனை நேர்மையான வாழ்க்கையில் என்றும் நடத்தும் ஆற்றல் பெற்றது. ஏனெனில், அதுவே இறுதியில் நன்மை பயக்கும். குறைந்த புத்தித்வம், குற்றங்களுக்கும், மனக் கோளாறுகளுக்கும் காரணமாகலாம்.

பு. ஈ. என்பதன் அளவு ஒருவனது வாழ்க்கையில் மாறுவதில்லை. வாழ்க்கை முழுவதும் அது ஒரே நிலையில் தான் இருக்கும். பதினைந்து பதினாறு வயதிற்குள் ஒருவனது மூளையின் வளர்ச்சி மன இயல்பினாலும் உடல் இயல்பினாலும் முழுவளர்ச்சி யடைந்து விடுகிறது. இதன் பிறகு ஒருவன் அடைவன அனைத்தும் அநுபவ முத்திரைகளே என்று தோன்றுகின்றன. இந்த வயதுக்குப் பிறகு, குழந்தை காரியசித்தி பெறுவதற்கு அநுபவ முத்திரைகள் பேருதவியாக இருக்கின்றன. காரியசித்தி பெறுவதற்கு ஆவல் தேவை. ஆவல் பெருகுமாறு குழந்தைப் பருவத்திலேயே மனத்தைத் திருப்பி விட்டால் பிற்காலத்தில் வெற்றி வெகு எளிதில் அமையும்.

12 காயமே கோயில்

கோயில் இல்லாத ஊர்

தமிழ் உலகு போற்றும் ஔவைப் பாட்டி "கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்," என்றாள். ஊருக்கு அழகு செய்வது கோயில் என்றே நம் முன்னோர் கருதி வந்தனர். பாரத தேசத்துச் சிற்பிகளும் தமது திறமையைக் காட்டுவதற்குக் கோயிலையே தகுந்த இடமாகத் தெரிந்து கொண்டனர். புலவர் பெருமக்களும் தம்மூர்க் கோயிலில் உறையும் இறைவனுக்கே பாமாலை சூட்டி மகிழ்ந்தனர். எழுத்தாளரும் தம்மூரின் வரலாற்றை எழுதி மகிழ்ந்தனர். செல்வரும், தொண்டரும் தம் பொருளாலும் உடலாலும் கோயிலுக்கே பணியாற்றி மகிழ்ந்தனர். தமிழரது நாகரிகமே கோயிலைச் சுற்றி வட்டமிட்டு வளர்ந்தது எனலாம்.

'கோயில்' என்ற மொழி 'கடவுளின் வீடு' எனப் பொருள் படுகிறது. உலகைக் காப்பவனும் உயிரைக் காப்பவனும், உயிர்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் உவந்தளிப்பவனுமாகிய இறைவனது கோயிலை அலங்கரித்து, அழகுபடுத்தித் திருவிழா எடுத்து மகிழ்ந்து வரும் தமிழரது பண்பனைத்தும், கோயிலைச் சூழ்ந்து வளர்ந்ததெனலாம். தமிழர் கோயிலைப் பதிவாழ்கிற இடம், பரமாத்மாவின் உறைவிடம், திருவாழ்கின்ற மனை, பராசக்தி வதிகின்ற இல்லம், என்று பாராட்டிக் கொண்டாடிக் கோயிலின் அழகை வளர்க்கத் தம் உடல் பொருள் ஆவி எல்லாம் உவந்தளித்தனர். எள்ளில் எண்ணெய் போலவும், பாலிற் பிறை போலவும், மணியில் ஒளி போலவும், மலரின் மணம் போலவும் அண்ட சராசரங்களில் பரவி விளங்குகிற இறைவனை ஒரு தனி இடத்தில் தொழும் மரபு மிகத் தொன்மை வாய்ந்தது. மனிதன் தலைவனை அறிந்த பிறகுதான் தன்னை அறிந்தானா? அன்றித் தன்னை அறிந்த பின்புதான் தலைவனை அறிந்தானா? என்ற வினைக்

களுக்கு விடை பகர்தல் எளிதன்று. இயற்கையின் அதிசயக் காட்சிகளில் இறைவனைக் கண்ட மனிதன் தன்னிலும் அதே இறைவன் உறைவதாக உணரலானான். கடவுளுக்குக் கோயிலமைத்தவன் தன்னையும் கடவுளின் கோயிலாகக் கருதத் தொடங்கினான்.

கோயில் இல்லாத மக்கள் தொகுதி உயிரற்றது என்று நம்மவர் கருதி வருகின்றனர். உயிரற்ற உடல் பிணம் எனப்படுவது போல் கோயிலில்லாத ஊரும் உயிரற்ற விடமாகக் கருதப்படும் என்பதே நம்மவர் கருத்து. கடவுளே உயிர். அவரே உடல் தோறும் உறைகின்றார்.

"உயிர், உடல் எல்லாம் ஈசன் கோயில்"

உலகத்தில் நொடிக்கு நொடி வளர்ச்சி பெற்று இயங்குவது குழந்தையின் உடலும் மனமுந்தான். குழந்தையின் உடலிலே, 'இம்' என்னும் முன்னே இருநூறும் முன்னூறுமாக ஜீவாணுக்கள் தோன்றுகின்றன. இமைப் பொழுதிலே நூற்றுக்கணக்கான அநுபவ முத்திரைகள் குழந்தைகளின் மனத்தில் பதிவாகின்றன. குழந்தையின் உடலையே இறைவனது கோயில் எனக் கருதவேண்டும். நம்முன்னோரும் குழந்தையையும் தெய்வத்தையும் ஒன்றாகவே கருதலாயினர். உலகத்தில் ஜன சமூகங்களை நடத்திய மகாத்மாக்களுள் ஒருவராகிய கிறிஸ்துப் பெருமானும் குழந்தையை உலகோருக்குக் காட்டி, ஆனந்த நிலையமான பேரின்ப வீடு, குழந்தையைப் போன்றவருக்கே உரியது என்றார்.

சைவ சமய குரவர்கள் அடியாரை நடமாடும் கோயிலாகக் கருதி, அடியார்க்குத் தொண்டாற்றுகிறவன் கடவுளுக்கே தொண்டாற்றுவதாகப் போதித்து வரலாயினர். உலகத்தில் மெய்யாக நடமாடும் கோயில்கள் சிறு குழந்தைகளே. கல்லாலும், மண்ணாலும், கட்டி எழுப்பிய கோவில்களுக்குத் திருப்பணி ஆற்றி,வாழ்நாளைப் போக்கி முத்திக்கு வழி தேடுவதிலும், நடமாடும் கோயிலாகிய குழந்தைக்குத் தொண்டாற்றுதலே சாலச் சிறந்தது.

பகீரதன் என்னும் ஒரு பிள்ளையால் சகரபுத்திரர் வீடு பெற்றதோடு கங்கையின் வருகையால் பாரத தேசமே புனிதமாயிற்று. ஒரு பிரகலாதனால் உலகெங்கும் அன்பு மணம் கமழலாயிற்று. அவன் பிறந்தநாள் முதல் "உயிரும் உடம்பும் யாவும் கண்ணனே என்று காண வல்ல மனக்கண் பெறுவதற்குக் காரணமாயிருந்தவர். நாரதர் என்ற மாமுனிவரே, அவன் தாயின் வயிற்றில் கருவாக இருந்த காலத்தில் திருமாலின் தன்னிகரிலாத சீரிய குண நலன்களைக் கூறி, அவனுடைய மனக்கண்ணைத் திறந்து வைத்தார்.

நடமாடும் கோயில்களாகிய குழந்தைகளின் தேகத்தையும் மனத்தையும் அறிவையும் வளர்ப்பதற்காக நமது நாட்டில் உள்ளவர்கள் அனைவரும் தங்கள் செல்வத்தையும் கல்வித்திறமையையும் காலத்தையும் செலவிட்டுக் குழந்தைகளின் உடல் வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும் அழகு படுத்துவதிலேயே ஆர்வம் உடையவர்களாக இருந்தால், நமது தமிழ் உலகம் விண்ணவர் உலகுபோல் விளங்கும் என்பதில் ஐயமும் உண்டோ?

ஊன் உடம்பு ஆலயம்

காயமாகிய கோயில்தான் உலகத்திலே காண்பதற்கரிய மாயமான அதிசயம்! இவ்வதிசயத்திற்கு மற்றெந்த அதிசயமும் ஈடாகாது. ஸர்வஞ்ஞனாகிய ஜீவாத்துமா வாழும் ஆலயம் இதுவே. இந்த ஆலயத்தின் சுற்றுப் பிராகாரங்களில் விகாரி, அகங்காரி, மமகாரி, தன்மயன், சின்மயன் என்பவர்கள் ஆட்சிபுரிகின்ற கொலு மண்டபங்கள் விளங்குகின்றன. இந்தத் திருச்சுற்றிற்கு வெளியே கனவுமண்டலம் சொல்லவொண்ணாத அதிசயங்களோடு விளங்குகிறது. இந்த மண்டலத்திற்குப் புறம்பே உணர்வோடு இருக்கிற விஷயகாரியாகிய மனம் கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் முதலிய துணைவர்களோடு ஆட்சி செலுத்தி வருகிறது. இத்தகைய அதிசயக் கோயிலாகிய குழந்தையை அவமதித்து, "அழுக்கிலே பிறந்தது, அழுக்கிலே கிடக்கட்டும்" என்று புறக்கணித்தால்,

ஊரெங்கும் உள்ள் நடமாடுங் கோயில்கள் பாழாகி, மானிடச் சமூகமே சீரழிந்து போகும்.

"உள்ளம் பெருங் கோயில்.
ஊன் உடம்பு ஆலயம்;
வள்ளல் பிரானுற்கு
வாய் கோபுர வாயில்" (திருமந்திரம்)

என்று திருமூலர் முதலான ஞானிகள் சிறப்பித்துக் காட்டுகிற இந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்தை அறிந்தவனே, கல்லாலும், மரத்தாலும், பொன்னலும், மணியாலும் ஆக்கிய கோயில்களில் எழுந்தருளியிருக்கிற சகுண வடிவங்களையும், அந்தச் சகுண வடிவங்களுக்கும் அப்பால் சச்சிதானந்தமாக விளங்கும் பரம் பொருள்களையும் அறியவல்லவன். நடமாடும் கோயில்களை அவமதிக்கின்றவர்கள் கடவுளின் தொண்டரென்று சொல்லி என்னென்ன செய்தபோதிலும், இறைவனைக் காணும் திறம் இல்லாதவராவர். சுவரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் எழுத வேண்டும். உயிர் உடலில் இருக்கின்ற பொழுதுதான் இறைவனை அறியவேண்டும். உடலை அவமதித்து எவனும் முத்தி பெறுதல் அரிது. உடல் தூய்மை, உள்ளத் தூய்மை என்பன கடவுளைக் காண விழைவார் அனைவர்க்கும் இன்றியமையாதவை.

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பை வளர்த்தேன்; உயிரை வளர்த்தேன்"

என்கின்றார் திருமூலர்.

உண்மை, வாய்மை, நேர்மை, தூய்மை முதலிய சிற்ப நுணுக்கங்களோடு, மனவலிமை முதலிய மூர்த்திவிசேஷங்கள் வாய்ந்த அழகிய கோவில்களாகக் குழந்தைகளை அமைப்பதற்குப் பெற்றோர் அல்லும் பகலும் முயல வேண்டும். இதற்காகத் தம்மிடத்திலே காணும் குறைகளைத் தவிர்க்க வேண்டும். தம்மையே இந்த நடமாடும் கோயில்களின் தொண்டர்களாக அமைத்துக்கொள்ள வேண்டும்; சிறந்த முறையிலே கல்வி அளிக்கும் இடங்களை

அமைக்க வேண்டும்; 'குழந்தைக்குப் பணி செய்து கிடப்பதே என் கடன்' என்ற நோன்பு உடையவர்களாக வாழ வேண்டும். என்றைக்குத் தமிழர் உள்ளத்தில் குழந்தையின் அன்பு வெள்ளம் கரைபுரண்டு பாயுமோ, அன்றைக்கே நமது நாடு, தன்னிகரற்ற நாகரிகப் பண்பு மிக்க நாடாக விளங்கும். ஆகையால், நாம் நமது குழந்தைகளிடத்தில்,

> "மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
> மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி,
> ஆர்வம் என்பதோர் பூ இட்டு" வாழ்வோம்.